THAIVEEDU MAY 2024 மே www.thaiveedu.com

# தாய்வீடு



## மா.க. ஈழவேந்தன் ஈழக்கொள்கையின் ஆழப்பற்றாளர்

– பொன்னையா விவேகானந்தன்

## விக்கிலீக்ஸ் நிறுவுநரின் சட்டப்போராட்டம் : அமெரிக்கா வழக்கினை மீளப்பெறுமா?


– ரூபன் சிவராஜா



## கண்டிச் சீமையில் இருந்து தமிழ்ச் சீமைக்கு

– வசந்தி தயாபரன்

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law



Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying Selling Leasing Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir. 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc.


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment


Tamil Genocide Remembrance Day
On the 15th anniversary of Mullivaikkal,
Let us honour and remember lives lost, and
Commit to justice, accountability, and peace.
தமிழ் இனப்படுகொலை நினைவு தினம்
முள்ளிவாய்க்கால் 15ஆம் ஆண்டு நினைவு தினத்தில்,நாம் இழந்த உயிர்களுக்கு மதிப்பளித்து அவர்களை நினைவு கூர்வோம்!
நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் அமைதிக்காக எம்மை அர்ப்பணிப்போம்!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
shaunchenmp
Shaun_Chen
www.shaunchen.com


காஞ்சி சேரன் கவிதைகள் நூல் வெளியீடு
உரைகளும் அளிக்கைகளும்
தலைமை:
காலம் செல்வம்
உரைகள்:
க.நவம்
பேராசிரியர் அனுஷியா இராமசாமி
யுவன் சந்திரசேகர்
பொன்னையா விவேகானந்தன்
காஞ்சி
சேரன் கவிதைகள்
அனைவரையும் தோழமையோடு அழைக்கிறோம்!
ஞாயிறு May 26, 2024 3:30 - 5:30 P.M
அண்ணாமலை பல்கலைக்கழக வளாகம்
1240 Ellesmere Road Unit 101 Scarborough, ON.
Tamil Resources Centre of Toronto
Centre de ressources tamoules de Toronto
காலம்


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 24 மே வெள்ளிக்கிழமை 2024
நேரம் : இரவு 8:00 -10:00 மணி (கனடா ரொறன்ரோ)
நாள் : 25 மே சனிக்கிழமை 2024
நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்தியா)
காலை 10:00 - 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)
“தமிழியல் ஆய்வும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும்”
உரை நிகழ்த்துபவர் : இலக்கிய முதுமுனைவர் அ.சண்முகதாஸ்
(தகைசால் வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.)
Join Zoom Meeting
Meeting ID: 847 7725 7162
Passcode: 554268

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## புத்தகங்களைக் கொண்டாடுவோம்!

'வாசிக்கும் உரிமையை இழந்துவிடுவேனோ என அச்சப்படும்வரை நான் வாசிப்பதை நேசிக்கவில்லை. சுவாசிப்பதை யாரும் நேசிப்பதில்லையே!' எனக்கூறிய அமெரிக்க நாவலாசிரியரும் கறுப்பின உரிமை இயக்கத்துக்குப் பெரும்பங்காற்றியவருமான ஹாப்பர் லீ, 'சுவாசித்தல் போலவே வாசித்தலும் மனித உயிர் வாழ்வுக்கு இன்றியமையாதது' என்று உணர்த்தியதோடு, புத்தகங்களைப் பெறுவதற்கும் வாசிப்ப தற்குமான உரிமை அவ்வப்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவந்துள்ளதையும் அடிக்கோடிட்டுக் காட்டு கிறார். இந்த உணர்வின் ஆழத்தைத் தமிழர்கள் நாம் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பானது தமிழர்களின் அடையாளங்களைச் சிதைப்பதற்கும் வரலாறுகளை அழிப்பதற்கும் ஆவணங்களை இல்லாமல் ஆக்குவதற்கும் தொடரப்படும் ஆக்கிரமிப்புப் போரின் சின்னமாக ஆகிப்போனாலும், அது ஒற்றை நிகழ்வல்ல. ஹாட்லிக் கல்லூரி நூலக எரிப்பு, இந்திய இரா ணுவத்தின், யாழ். பல்கலைக்கழக நூலகச் சிதைப்பு, எண்ணிலடங்காத ஊர்களிலும் பாடசாலைகளிலும் இருந்த நூலகங்களின் அழிப்பு என நாம் எதிர்கொண்ட அழிப்புகள் ஏராளம்.

இந்தச் சாம்பரிலிருந்து எழுந்து, மீண்டும் புத்தகங்களை நேசிக்கும், புத்தகங்களைச் சுவாசிக்கும் ஒரு சமூகமாக தமிழ்ச் சமூகம் தன்னைப் பறைசாற்றத் தலைப்பட்டிருப்பது மிகுந்த உவகையளிக்கிறது.

தேசிய கலை, இலக்கியப் பேரவையால் மாதாந்தம் வெவ்வேறு பிரதேசங்களில் நடத்தப்படுகின்ற, 'புத்தக அரங்க விழா', வட மாகாணத்தில் ஈழத்து நூல்களை மட்டுமே சிறப்பாக உள்ளடக்கிய வகையிலான 'எங்கட புத்தகங்கள்' - கண்காட்சியும் விற்பனையும், 'ஜீவநதி வெளியீட்டகம் நடத்துகின்ற புத்தகக் கண்காட்சி', கிழக்கிலே 'பாடும் மீன் புத்தகக் கண்காட்சி, பாத்திமா புத்தக நிலையத்தால் நடத்தப்படுகின்ற 'ஏறாவூர் புத்தகக் கொண்டாட்டம்', அக்கரைப்பற்று - பேஜஸ் புக் ஹவுஸ் அமைப்பால் நடத்தப்படுகின்ற 'அக்க-ரைப்பற்று புத்தகக் கண்காட்சி', 'மறுகா'-வின் புத்தகக் கண்காட்சி ஆகியனவும் இலங்கை புத்தக வெளி யீட்டாளர்கள் சங்கத்தால் நடத்தப்படுகின்ற 'கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி', யாழ்ப்பாணத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலையால் ஆண்டுதோறும் நல்லூர்க் கந்தன் திருவிழாவின்போது நடத்தப்படுகின்ற புத்தக விழா, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற புத்தகக் கண்-காட்சி, 'தேசிய வாசிப்பு மாதத்தில்' பொது நூலகங்கள் நடத்துகின்ற புத்தகக் கண்காட்சி ஆகிய முக்கிய கவனம்பெற்ற நிகழ்வுகளோடு மேலும் பல நிகழ்வுகள் தற்பொழுது இலங்கையிலே முன்னெடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழகத்திலே, சென்னைப் புத்தகக் கண்காட்சி இப்பொழுது உலகப்புகழ் பெற்று உலகெங்கணும் இருந்து ஆர்வலர்களைத் தன்பால் ஈர்க்கின்ற ஒரு முக்கிய வருடாந்த நிகழ்வாக மாறியுள்ளது. இவ்வாண்டு 900 சாவடிகளைக் கொண்டு பத்தொன்பது நாட்களாக நடைபெற்ற இந்தத் திருவிழா புத்தகங்களின்மேல் தமிழர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கும் அக்கறைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அதன் தொடர்ச்சியாக இப்போது கோவை, மதுரை, திருப்பூர், காஞ்சிபுரம், திருச்சி முதலாக இன்னும் பல ஊர் களிலும் இந்தப் புத்தகக் கொண்டாட்டம் விரவிப் பரந்து வருவதைக் காணப் பரவசமாயுள்ளது.

புலம்பெயர் நாடுகளிலும் தற்போது தனிநபர்களின் முயற்சியாலும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களின் முனைப்பாலும் புத்தகங்களைக் கொண்டாடும் பண்பு மக்கள்மயப்படுத்தப்பட்டு வருவதென்பது உலகளாவிய தமிழர்களிடையே ஒரு பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான அத்திவாரம் இடப்பட்டு வருவதற்குக் கட்டியம் கூறு-கிறது. இலண்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நகரங்களில் இத்தகைய நிகழ்வுகளை நடத்திவரும் எம். பௌசரும், கனடாவிலே 'வாழும் தமிழ்' புத்தகக் கண்காட்சியை இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்து நடத்திவரும் 'காலம்' செல்வம் அருளானந்தமும், இலண்டனில் 'நூல் தேட்டம்' நடத்திவரும் என். செல்வராஜாவும், ஜேர்மனியின் மியூனிக் நகரைத் தளமாகக்கொண்டு இயங்கி வரும் அன்ரன் இக்னேஷியஸ் ஜோசப்பும், மேலும் ஐரோப்பாவிலே இத்தகைய முயற்சிகளுக்கு முன்னோடிகளாக விளங்கிய இலக்-கியச் சந்திப்புகளும், ந. சுசீந்திரன், முல்லை அமுதன், மு. நித்தியானந்தன் போன்றவர்களும் பாராட்டுக் குரியவர்கள்.

இந்த வரிசையிலே இலண்டன், ஒஸ்லோ, பாரீஸ் ஆகிய ஐரோப்பிய நகரங்களிலும், அவுஸ்திரேலியா விலும் நடைபெற்ற கொண்டாட்டங்களைத் தொடர்ந்து கடந்த மாதம் ரொறன்ரோவிலே கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய 'நூல்களின் சங்கமம்' நிகழ்வு இடம்பெற்றிருக்கிறது. அரச ஆதரவின்றி, தனிநபர்களினதும், தன்னார்வத் தொண்டர்களினதும் முனைப்பாலும் அர்ப்பணிப்பாலும் சாத்தியமாகும் இத்தகைய நிகழ்வுகளின் ஒருங்கிணைவிலேயுள்ள நிறை குறைகளுக்கு அப்பால், இந்த நிகழ்வுகளின் நோக்கம் பாராட்டப்படவேண்டியது. அவற்றின் வருகை ஊக்கப்படுத்தப்படவேண்டியது. அவற்றின் தொடர்ச்சி உறுதி செய்யப்படவேண்டியது.

'எங்களிடம் இருக்கும் புத்தகங்கள் போதுமானவை என்று கூறும் காலம் ஒருபோதும் வராது' என்று கூறினார் இலக்கியத்துக்காக நோபல் பரிசுபெற்ற எழுத்தாளர் ஜோன் ஸ்ரைன்பெக். புத்தகத் திருவிழாக் களுக்கும் இது பொருந்தும்.

**புத்தகங்களைக் கொண்டாடுவோம்!** 5

**இலங்கை அரசியலில் மக்கள் விடுதலை முன்னணி** 7
- நெல்லை ஜெயசிங்

**வீக்கிலீக்ஸ் நிறுவுநரின் சட்டப்போராட்டம்: அமெரிக்கா வழக்கினை மீளப்பெறுமா?** 12
- ரூபன் சிவராஜா

**கல்வியும் சமூக மாற்றமும்** 16
- அகமட் பிஸ்தாமி

**பேச்சு, வாசிப்பு ஆற்றலை வளர்க்கும் வழிமுறைகள்** 19
- த. சிவபாலு

**தொற்றுநோயும் வரட்சியும் மாரியும்** 24
- பால. சிவகடாட்சம்

**முதியவர்களும் விபத்துகளும்** 27
- குமார் புனிதவேல்

**வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி?** 28
- வேலா சுப்ரமணியம்

**வாழும்போதே சொத்துரிமை மாற்றம்** 32
- செந்தூரன் புனிதவேல்

**பறக்கும் தட்டுகள் உண்மையா?** 34
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**ஊடக சுதந்திர நாள்** 36
- சி. நற்குணலிங்கம்

**வெயிலும் மின்சக்தியும்...** 38
- வேதநாயகம் தபேந்திரன்

**அட்டாளைச்சேனையின் மீன்களும் நுகர்வும்** 40
- இனியவன் இசாறுதீன்

**அமெரிக்கக் கண்டத்தின் முதற்குடிகள்** 43
- குரு அரவிந்தன்

**பந்தயப் புறாக்கள்** 46
- ஓவியர் ஜீவா

**மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி கூடைக்குள் தேசம்** 49
- மல்லியப்புசந்தி திலகர்

**தமிழறிஞர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை** 52
- வே. விவேகானந்தன்

**கனடாவின் கவின் தமிழ்த்தூது கவிநாயகர் வி. கந்தவனம்** 55
- இளவாலையூர் செ. இராசநாயகம்

**கவிஞர் கந்தவனத்தின் பாவாரம்** 56
- மைதிலி தயாநிதி

**ஈழக்கொள்கையின் ஆழப்பற்றாளன் மா.க. ஈழவேந்தன்** 60
- பொன்னையா விவேகானந்தன்

**சட்டநாதன்: தனித்துவமான படைப்பாளி** 62
- அருண்மொழிவர்மன்

**மலையகப் பெண்களின் கதைகளைப் பிரதிபலிக்கிறதா ‘மலையகா’?** 66
- மல்லியப்புசந்தி திலகர்

**பன்னூலாசிரியர் சித்தி ஜுனைதா பேகம்** 70
- பொ. திராவிடமணி

**மாஜிதாவின் ‘சுவை’ பெண் வெற்றியின் கொண்டாட்டம்** 74
- கருணாகரன்

**‘கண்டிச் சீமையில் இருந்து தமிழ்ச் சீமைக்கு’ தெளிவத்தை ஜோசப்பின் ‘மாறுதல்கள்’ நாவலை முன்வைத்து...** 77
- வசந்தி தயாபரன்

**சமனற்ற நீதி: அமெரிக்க நீதித்துறை பற்றிய காட்டமான எதிர்ப்புக் குரல்!** 80
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

**உள்நாட்டுப் போரின் உராய்வு நீக்கி** 86
- பிரியதர்சன்

**அறிவு உற்பத்தியும் மெய்யியலும்** 89
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: க. சண்முகலிங்கம்

**ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 94
- என். செல்வராஜா

**தமிழ்ப் பின்-நவீனத்துவத்தின் விரிதளம்** 97
- ஜிஃப்ரி ஹாசன்

**பப்புவா நியூ கினியக் காடழிப்பு அறிக்கை** 100
- சதீஸ் செல்வராஜ்

**மாதவர்** 105
- த. ஜீவராஜ்

**சோழ இலங்கேசுவரர்கள் ஈழமும் சோழமும்** 108
- வி. துலாஞ்சனன்

**இனப்படுகொலையின் அரசியல் கிழக்காசிய சமூகங்களில் இனப்படுகொலையின் வேர்கள்** 110
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**நற்றிணையைப் பதிப்பித்த பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்** 116
- சு. வேணுகோபால்

**திருக்குறளும் ஆசீவகமும்** 122
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**பன்னிரு கை கோலப்பா!** 128
- நாஞ்சில் நாடன்

**ஒப்பியல் நோக்கில் திருக்குறளும் நாலடியாரும்** 130
- கௌசல்யா சுப்பிரமணியன்

**‘வாடா மல்லிகை’ ஆகிய பாரதி** 137
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து....** 141
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**கௌதமி காத்திருந்தாள்** 146
- சந்திரவதனா

**வேணாம்ப்பா...** 150
- உஷாதீபன்

**வாழ்வுரிமை !** 156
- மா. சித்திவினாயகம்

**அழகியடி நீ எனக்கு** 160
- அ. கந்தசாமி

**பாண் கெற்றூட் திருப்பிக் கதைக்கிறாள்** 167
- மார்கரெட் அற்வூட்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்


**தாய்வீடு இதழ்! அறிமுகமும் கருத்துப் பகிர்வும்** 171
வி. மைக்கல் கொலின்

**‘மாறுதல்கள்’ நூல் வெளியீடும் எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் நினைவேந்தலும்** 176
கே. பொன்னுத்துரை

# இலங்கை அரசியலில் மக்கள் விடுதலை முன்னணி

- நெல்லை ஜெயசிங்

இலங்கை நாடு தமிழகத்திற்கு மிக அருகில் இருக்கும் கடலால் சூழப்பட்ட சிறிய தீவாகும். இந்தியாவிற்கு பின்னதாக 1948-ல் சுதந்திரம் பெற்று, இன்று வரை மக்களாட்சி முறையை பின்பற்றி வரும் நாடு. இன்று மக்களால் நேரடியாக தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபரையும் பாராளுமன்ற ஆட்சியையும் கொண்டிருக்கிறது. சுதந்திரம் பெற்றது முதல் ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) ஆகிய இரண்டு கட்சிகளும் இந்நாட்டினை மாறி மாறி ஆட்சி செய்து வந்துள்ளன. ஆரம்பத்தில் அரசியல் முக்கியத்துவம் பெற்று வந்த இடதுசாரி கட்சிகள் இன, மத சுழியில் சிக்குண்டு ஆட்சி அதிகாரம் பெறும் வாய்ப்பை முழுமையாக இழந்து விட்ட நிலையில், சோஷலிச கொள்கை கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (JVP) என்று சிங்களத்தில் அழைக்கப்படும் 'மக்கள் விடுதலை முன்னணி' அவ்வெற்றிடத்தை நிரப்பும் வகையில் இன்று இலங்கையில் மூன்றாவது பெரிய கட்சியாக மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறத் தொடங்கி இருப்பதைக் காணலாம். அது அரசியல் கட்சிகளின் வரிசையில் மார்க்ஸிய லெனினிஸ பொதுவுடமைக் கட்சி (Marxist - Leninist Communist party in Srilanka) எனப் பதிவிடப்பட்டுள்ளது.



சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விலகிச் சென்ற ரோகண விஜயவீர, 1965 மே 14 அன்று இக்கட்சியை நிறுவினார். சோஷலிச சமத்துவத்திற்கு பாடுபடப்போவதாக ரோகண விஜயவீர அறிவிக்க, அதில் ஈர்க்கப்பட்ட படித்த கிராமப்புற இளைஞர்கள், மாணவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் இக்கட்சியில் பெருமளவு இணைந்தனர். ஆரம்பத்தில் ஆயுதப் புரட்சியில் அதிக நம்பிக்கை கொண்டு 1971-இல் கிளர்ச்சியில் ஈடுபட்டு பல்லாயிரம் இளைஞர்களை பலிகொடுத்து பெரும்தோல்வியை தழுவியது. பின்னர் பல தடைகளை கடந்து 1977-ல் சனநாயக முறைக்கு திரும்பி 1982-ல் நடைபெற்ற அதிபர் தேர்தலிலும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தேர்தலில் 4.16% வாக்குகளை பெற்று மூன்றாவது கட்சியாக உருவெடுக்கத் தொடங்கியது. எனினும் 1983 காலப் பகுதியில் இக்கட்சியானது மீண்டும் தடை செய்யப்பட்டு சில வருடங்களில் மேம்பட்ட கொள்கை மாற்றங்களுடன் அரசியல் களத்தில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்தது.

JVP தங்களை இடதுசாரி கட்சி என அழுத்தமாக கூறி வந்த நிலையில், தேசிய சிறுபான்மையினர் விடயத்தில் தங்களின் நிலைப்பாட்டை தெளிவாக கூறாது இருந்ததை அப்போது பலரும் விமர்சனம் செய்து வந்துள்ளனர். அவர்களது கொள்கை கோட்பாடுகளை விளக்கும் ஐந்து வகுப்புகளில் ஒன்றில் மட்டும் இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதல் இன்று வரை 1987 இலங்கை இந்திய உடன்படிக்கையை முழுமையாக ஆதரிக்க முன்வரவில்லை. அது இலங்கை மக்களின் குறிப்பாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்க்காது என்பது அவர்களின் கருத்தாகும். இந்திய அமைதிப் படை இலங்கையில் நிலை கொள்வது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்பதால் அதனை கடுமையாக எதிர்த்தனர். அது இலங்கையின் சுதந்திரமான இறையாண்மைக்கு எதிரானது என பிரச்சாரம் செய்தனர். இந்திய அமைதிப் படையை வெளி



யேற்ற, அப்போதைய பிரேமதாச அரசும் விடுதலைப் புலிக ளும் முயற்சி மேற்கொண்டதை JVP வரவேற்றது. இறுதி யுத் தத்தின் போது பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற கருத்தை முன்வைத்ததை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அப் போது இக்கருத்து கடுமையான விமர்சனத்துக்கும் உள் ளாகியது. இது போன்ற கடந்த கால தவறுகளை உணர்ந்து, சிறுபான்மையினரின் உரிமைகள் சார்ந்த விடயங்களில் தெளிவான நிலைப்பாட்டை மேற்கொள்ள தேசிய மக்கள் சக்தி முன் வருவதன் மூலம், சிறுபான்மை மக்களின் நம்பிக் கையை பெறமுடியும்.

இக்காலப்பகுதியில் தீவிரமான இடதுசாரி நிலைப்பாட்டை தீவிரப்படுத்தாத அதே நேரம், வலதுசாரி கொள்கைகளை யும் உள் வாங்காத நிலையில் 2004 தேர்தலில் இடதுசாரி அமைப்புகளை ஒருங்கிணைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி யுடன் இணைந்து போட்டியிட்டு கூட்டாட்சியில் பங்குகொண் டமை குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் விடுதலை இயக்கங்களு டன் முரண்பட்ட கொள்கை நிலையைக் கொண்டிருந்த மக் கள் விடுதலை முன்னணி, தேசிய அரசியலை முன்னெடுப்ப தில் அதிக முனைப்பு காட்டத் தொடங்கியது. வலதுசாரி கட்சி களில் இருந்து தன்னை வேறுபடுத்தி, இடதுசாரி நிலைப் பாட்டை நிலைநிறுத்த முயலும் மக்கள் விடுதலை முன்னணி இயக்கமானது, தேசிய மக்கள் சக்தி (National People's Power) என்ற கூட்டமைப்பை உருவாக்கி, சிறு சிறு இடதுசாரி இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ், தேசிய அரசியலை எதிர்கொண்டு இயங்கத் தொடங்கலாயிற்று. இன் றைய காலம் வரை இவ்வழி முறையிலேயே தன் அரசியல் பய ணத்தை தொடர்கிறது. இவர்களின் செயற்பாடு காரணமாக JVP-யின் செல்வாக்கு, மக்கள் மத்தியில் உயர்ந்து வருகிற தைக் காண முடிகிறது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இக்கட்சி இன் றைய இலங்கையின் முதலாளித்துவ வலதுசாரி கட்சிகளுக்கு மாற்று JVP என்ற கருத்தை அழுத்தமாக பதிவிட்டும் வருகி றது. 'இன்றைய ஆட்சியாளர்கள் பழைய பாதையில் செல் கின்றவர்கள். அவர்களால் இலங்கை தேசத்தை கட்டி எழுப்ப முடியாது' என்று கூறும் இதன் தலைவர் புதியதொரு தேசிய எழுச்சியை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்கிறார். அதா வது நாடு அனைத்து துறைகளிலும் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ள நிலையில் புதிய அரசியல் கலாசா ரத்தை கொண்டு வரவேண்டும் என்பது அவரது கூற்றாகும். திஸாநாயக்க அவர்களின் அறைகூவல் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்தி வருகிறது. மக்களும் தாங்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நாடொன்றை கட்டி எழுப்ப வேண் டும் என்று எதிர்பார்க்கின்றனர். வெறுமனே தலைவர்களை மாற்றுகின்ற, அரசாங்கத்தை மாற்றுகின்ற நிலைக்கு பதிலாக ஒட்டு மொத்த சமூக முறையையுமே மீளக் கட்டியெழுப்பு கின்ற புதிய தேசிய எழுச்சி தேவை என்றும் அதனை முழு மையாக நிறைவேற்ற தேசிய ஒருமைப்பாடு அவசியம் என்ப தும் JVP-ன் கருத்தாகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் கருத்துக்கள் சிங்கள மக் கள் மத்தியில் பரவிய அளவிற்கு தமிழ்ச் சிறுபான்மையினர் மத்தியில் பரவவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு அவர்களின் கடந்தகால கொள்கை திட்டங்களும் செயற்பாடுகளும் காரணம் என கூறப்படுகிறது. தங்கள் கட்சி யின் கொள்கை, கோட்பாடு சிறுபான்மை மக்கள் மத்தியில் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதுடன் சில சமூக முரண்பாட்டா ளர்கள் அதனை திரித்து, சிறுபான்மை மக்கள் மத்தியில் பரப் பியதாகவும் தங்கள் அமைப்பு சிறுபான்மை மக்களை உள்ள டக்கிய இலங்கை தேசத்தை கட்டி எழுப்ப சபதம் பூண்டிருப்ப தாகவும் அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின ரும் தற்போது யாழ்ப்பாண பகுதி ஒருங்கிணைப்பாளருமான சந்திரசேகர் கடந்த மாதம் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள் ளமை கவனிக்கத்தக்கதாகும்.

## இலங்கைத் தமிழர்கள் மீதான JVP–இன் பார்வை:

சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கு இடையே, தேசிய ஒற் றுமையை ஏற்படுத்த வேண்டும் என்பதே தங்களின் நிலைப் பாடு என, மக்கள் விடுதலை முன்னணி அமைப்பினர் கூறி வருகின்றனர். தங்களது அமைப்பு குறிப்பிட்ட ஒரு சமூகத் துக்கு மட்டும் உரித்தானது அல்ல. அது முழு தேசத்திற்குமா னது என்ற கருத்தை மிக அழுத்தமாக வலியுறுத்தி வருகின்ற னர். குழுக்களாகப் பிரிந்து செயற்படும் தமிழ் கட்சிகள் தமிழ் தேசியம் என்ற கருவியை கையில் வைத்துள்ளனர். ஆனால் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் தமிழ் குழுக்கள் கவனம் செலுத்துவது இல்லை என JVP விமர்சனம் செய்து வருகிறது. தமிழ் மக்களை கொதி நிலை யில் வைத்திருப்பதே தமிழ்தேசிய குழுவினரின் நோக்கம் என வும் குற்றஞ்சாட்டுகின்றனர். பாரம்பரியக் கட்சியான தமிழர சுக் கட்சியும்கூட இதிலிருந்து விடுபடுவதாக தெரியவில்லை என்கின்றனர்.




JVP போன்ற இடதுசாரி அமைப்புகளுடன் தமிழ் மக்களின் தலைவர்கள் இதுவரை இணைந்து பயணிக்கவில்லை. தொழிலாளர் வர்க்க நலனை விட மேட்டுக் குடி மக்களின் நலனை சார்ந்தே, வட கிழக்கு தமிழ் அமைப்புக்கள் இயங்கு வதாக குற்றம் சாட்டும் JVP இத் தமிழ் குழுக்கள் கீழ் மட்டத் தில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு அரசியல் மாற்றம் பெற்று தர முயன்றால், அதுவே தமிழ் மக்களுக்கு விமோசனத்தை அளிக்கும் என்கிறது. ஒன்றுபட்ட இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இணைவதன் மூலம், இலங்கை தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பது JVP-யின் நம்பிக்கையாகும். மிகச் சிறிய நிலப் பரப்பை உடைய இலங்கை துண்டாடப்படுவதை JVP விரும்பாத போதும், இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண் டும் என்பதில் உறுதியாக இருப்பதாக கூறப்படுகிறது.

வரும் அதிபர் தேர்தலில் இலங்கைத் தமிழர்கள் தங்களது சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டி இடுவது அல் லது அதனை ஆதரிக்கும் தென்னிலங்கை வேட்பாளருக்கு தமது ஆதரவை வழங்க ஆலோசிப்பதாக கூறப்படுவது மிக வும் ஆபத்தான பாதை என JVP கூறி வருகிறது. அப்படி ஒரு நிலை ஏற்படுமாயின் சிங்களப் பேரினவாதிகள் அதனை திசை திருப்பி பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுவர். இப் போது இருப்பது சிங்கள பௌத்த மேட்டுக்குடி வர்க்க முத லாளித்துவ அமைப்புக்கள் என கூறும் JVP, உடனடியாக எந் தக் கட்சியும் அதிபர் தேர்தலில் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தை வெளியிடாது எனவும் உறுதியாக கூறுவதைக் காணலாம். கடந்த 76 வருடங்களாக வலதுசாரி முதலாளித் துவ கட்சிகளின் பின்னால் சென்று எந்தப் பயனும் கிடைக்க வில்லை என்பதை தமிழ் மக்கள் உணரத் தொடங்கி விட்ட னர். இந்நிலையில் தேசிய அளவில் நடைபெறும் தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பதோ அல்லது தனித்து வேட்பாளரை நிறுத்துவதோ அரசியல் தற்கொலைக்கு சமமாகிவிடும். இன வாத முதலாளித்துவ வலதுசாரி சக்திகளுக்கு இரையாகாமல் தமிழ் மக்கள் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இலங்கையில் மாகாண சபை உருவாக்கத்தை முன்மொ ழிந்து உருவான, 1987-ம் ஆண்டு இலங்கை இந்திய உடன்ப டிக்கைக்கு உடன்படாத போதும், JVP தமிழ் பிரதேச நில அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் போன்றவற்றுடன் பல்வேறு வட கிழக்கு மக்க ளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக் கையை தமிழ் மக்கள் மத்தியில் விதைத்து வருகிறது. மேலும் இடதுசாரித்துவ நெறிமுறையுடன் கூடிய அரசியல் செயற்பாட் டில் தமிழ் மக்கள் இணைந்து கொள்வதே இன்றைய அவசி யம் என கூறுவதுடன் தங்களை சிங்களக் கட்சியென்று வசை பாடுவதை நிறுத்தி வர்க்கம் சார்ந்த கட்சி என்பதை புரிந்து கொண்டு, தங்களுடன் இணைந்து பணியாற்ற வருமாறு அநு-ரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளமை கவனிக்கத் தக்கதாகும்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாரம் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற ஆசிரியர்கள் மாநாட்டில் விசேட அழைப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றிய JVP தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இலங்கை தமிழ் மக்கள் போரினால் கடந்த 30 வருடங்களாக பெரும் பாதிப்புக்கு உள்ளாகி பிரச்சினை களை சந்தித்து வருவதை தாம் உளமார உணர்வதாக குறிப் பிட்டார். இன மத மொழி பாகுபாடு இல்லாத ஒரு அரசை உருவாக்குவதன் மூலம் அம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க தாம் உத்தரவாதம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். வரும் அதிபர் தேர்தல் என்பது தென்னிலங்கைக்கானதல்ல. யாழ்ப்பாணம் உட்பட முழு இலங்கைக்குமானது என்பதை மனதில் கொண்டு தங்களுடன் இணைந்து பணியாற்ற வரு மாறு அழைப்பு விடுத்தார்.

### மலையகத்தில் JVP:

மக்கள் விடுதலை முன்னணியான JVP ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் மலையக மக்கள் தொடர்பாக எதிர்மறை எண் ணங்களையே கொண்டிருந்ததாக அறியப்படுகிறது. மலை யக மக்கள் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட கார ணத்தை முன்வைத்து இவர்களையும் இந்திய எதிர்ப்பு என்ற கண்ணோட்டத்துடனேயே பார்த்து வரலாயினர். இதனால் JVP கட்சியின் வகுப்புகளில் இந்திய விஸ்தரிப்புவாதம் பெரு மளவு பேசப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சி யாக சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை JVP வரவேற்றதை மலை யக மக்கள் விரும்பவில்லை எனவும் கூறப்படுகிறது.

மலையக மக்களின் வேலை வாய்ப்பு, குடியிருப்பு, காணி

உரிமை என பலவற்றையும் மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் பேசி வருகின்றனர். குறிப்பாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த வருடம் ஒக்டோபர் 15 அன்று ஆட்டனில் மலையக மக்கள் மத்தியில் உரையாற்றும் போது 'மலையக மக்களுக்கான அரசியல் பிரகடனம்' என்ற பெயரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காணி தொடர் பான பிரகடனத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இன்று மலையக மக்களின் பல்வேறு பிரச்சினைகளின் மத்தி யில் அவர்களுக்கான நில உரிமை என்பது பெரும் பிரச்சி னையாக பேசப்பட்டு வருகிறது. இந்நிலையில் மலையக மக் கள் காணி உரிமை பெற உரித்துடையவர்கள் என JVP பிரக



டனம் செய்தமை மலையக மக்களின் வரலாற்றில் முக்கிய விடயமாக கருதப்படுகிறது. இவ்வாறு மலையக மக்களின் பிரச்சினைகளை பரிசீலிக்க தேசிய கட்சி ஒன்று முன் வந்துள் ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். தொழிலாளர் வர்க்கத்து டன் தாங்கள் இணைந்து செயற்படவே விரும்புவதாக JVP கூறி வருவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அதன் கார ணமாகவே அவர்கள் தொழிலாளர்கள் நலன் பேண தொழிற் சங்கம் ஒன்றையும் நிறுவி உள்ளனர்.

வர்க்க ஆட்சியை இலங்கையில் கொண்டு வர முயலும் JVP மலையக தோட்டத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து இன் னும் சற்று கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். மத்திய தர வர்க்கத்தின் உருவாக்கத்துடன் முதலாளித்துவ சக்திகளுக்கு இரையாகாத புதியதொரு எழுச்சி மலையகத்தில் உருவாகி வருகிறது. முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் திலகர், பிரபல மலையக எழுத்தாளர் மு. சிவலிங்கம் போன்றவர்கள் கூறுவதைப் போன்று நவீன கங்காணித்துவ கட்டுக்குள் மலையக தொழிலாளர்கள் அடைபட்டு வாக்கு வங்கிக்காக மட்டும் பயன்படுத்தப்படும் அவலநிலை உடைக்கப்பட வேண்டும். பணத்தில் மிதக்கும் ஆதிக்க சக்திகளின் தடைகளை, முள் வேலிகளை அறுத்தெ றிய இளைய சமுதாயம் ஒன்று மலையகத்தில் உருவாகி வரு கிறது. நாட்டையும் காட்டையும் திருடும் சக்திகளில் இருந்து விடுபட்டு புதிய தலைமையை தேடும் இவர்களை அரவ ணைக்க தேசிய மக்கள் சக்தி முன்வர வேண்டும். தொழிற்சங் கம் என்ற வலைக்குள் சில முதலாளித்துவ சக்திகள் தொழி லாளர்களை அடைத்து வைத்து அரசியல் இலாபம் அடையும் நிலை தகர்க்கப்பட வேண்டுமானால் JVP அமைப்பு மலை யக முற்போக்கு சக்திகளை அடையாளம் கண்டு தம்முடன் இணைத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

## இந்திய அரசுடன் உறவு:

இலங்கை அரசியலில் தற்போது தவிர்க்க முடியாத சக்தி யாக மக்கள் விடுதலை முன்னணி வளர்ந்து வருவதால், இந் தியாவின் பார்வை அக்கட்சியின் மீது படியத் தொடங்கி இருப்பதைக் காணலாம். குறிப்பாக எதிர்வரும் இலங்கை அதிபர் தேர்தலில் அதன் தலைவர் அநுரகுமார திஸாநா யக்க வெற்றி பெற அதிகளவு வாய்ப்பு இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். இலங்கையில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்க டியை எதிர்கொள்வதில் பெரும் தோல்வியை ஆளும் அரசு பெற்ற நிலையில், JVP மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அதி கரித்துள்ளது. இந்நிலையில் வழக்கமாக ராஜபக்சே வகைய றாக்கள் அல்லது ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து பேசும் இந்திய அரசு, இம்முறை இதுவரை ஆட்சிபீடம் கண்டிராத அநுரகுமார திஸாநாயக்க அவர்களை டில்லிக்கு அழைத்து உயர்மட்ட அரசியல் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி உள் ளமை குறிப்பிடத்தக்கதாகும். JVP-யை இந்திய அரசு அழைத்து பேசியதை இலங்கையின் ஆளும்கட்சி மட்டுமல் லாமல் உலக நாடுகளும் பார்த்தமை கவனிக்கத்தக்கதாகும்.

அண்டை நாடாகவும் வளர்ந்து வரும் பலம் மிக்க நாடாகவும் இந்தியா இருப்பதால் இரு நாடுகளுக்கிடையே உறவுகளை கட்டி எழுப்புவது அவசியம் என்ற வகையில் இந்திய அரசாங் கத்தின் அழைப்பை ஏற்று பேச்சு வார்த்தை நடத்தியதாக JVP-யின் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் விஜித ஹேரத் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசின் வெளியு றவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருடன் அநுரகுமார திஸாநா யக்க பேச்சுவார்த்தை நடத்தியதுடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தொவால், வெளியுறவு செயலாளர் திரு. வினய் மோகன் ஆகியோரையும் சந்தித்து பேசி உள் ளார். அத்துடன் இந்திய மார்க்ஸிய கட்சி செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்களையும் சந்தித்து உரையாடியுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும். உயர்மட்ட பேச்சுவார்தையின் போது, பொருளாதார கலாசார விடயங்கள் பேசப்பட்டதாக கூறப்படுகிறது. இலங்கை மக்களின் நலனை மையமாகக் கொண்டு அமெரிக்கா, ரஷ்யா, சீனா என அனைத்து நாடுக ளுடனும் நட்புடன் இருப்பதே தங்களின் நோக்கம் எனக் கூறும் JVP, அணிசேரா கொள்கையுடன் இருப்பதையே விரும்புவதாக கூறி வருகிறது. ஆரம்ப காலங்களில் இந்திய விஸ்தரிப்புவாதத்தை கடுமையாக எதிர்த்து வந்த JVP, இன்று அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப இந்திய நட்புறவை வர வேற்று அதனை மேம்படுத்த உடன்பட்டிருப்பது ஆரோக்கிய மான அரசியலாகும்.

## இன்றைய இலங்கை அரசியலில் JVP:

மத, சாதி அடையாளத்தை பெறுவதில் கவனம் செலுத்தாமல் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் பெரும் பான்மை மக்கள் மத்தியிலும் இதன் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரம் மற்றும் தங்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது. எனவே மாற்றத்தை விரும்பும் மக்களின் ஆதரவை பெறுவதிலும் JVP முன்னிலையில் இருப்பதாக அறியப்படுகிறது. 76 வருட மேட்டுக்குடி ஆட்சியையும் குடும்ப ஆட்சியையும் முடிவிற்கு கொண்டு வருவதே மக்கள் விடுதலை முன்னணியின் நோக்க

மாகும் என கூறப்படுகிறது. இவர்களுடன் பல இடதுசாரித் துவ நோக்கம் கொண்ட 27 அணிகள் இணைந்து பயணிக்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

எதிர்வரும் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வென்று, பொதுத் தேர்தலில் பலமான அரசாங்கம் ஒன்றை அமைத்து அதன் ஊடாக புதிய அரசியல் அமைப்பை அறிமுகப்படுத்தி சனநா யகத்தை உறுதி செய்த பிறகு, இன்று வரம்பற்ற அதிகாரம் பொருந்திய அதிபர் முறையை இல்லாமல் செய்வோம் என வும் JVP மக்களிடம் வாக்குறுதி அளித்துள்ளது. ஊழலும் மோசடியும் அதிபர் ஆட்சியில் அதிகரித்துவிட்டன. ஒரு குடும் பம் நாட்டை சூறையாடி வருகிறது. பொருளாதார நெருக்கடி யில் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க அனைத்து வேறுபாடுகளையும் புறந்தள்ளி அனைத்து தரப்பட்ட சமூக மும் ஒன்றிணைந்து தங்களை ஆதரிக்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

இது சிங்கள கட்சி என்று வசைபாடுவதை நிறுத்தி வர்க்கம் சார்ந்த கட்சி என்பதை ஏற்க வேண்டும் என்பது தேசிய மக் கள் சக்தியின் வேண்டுகோளாகும். அதற்கு முன்னதாக பெரும்பான்மை மக்களிடம் மட்டுமல்லாமல் சிறுபான்மையின ரான இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், இஸ்லாமியர்கள் என இன மத மொழி வேறுபாடின்றி அனைவரதும் நம்பிக் கையை தேசிய மக்கள் சக்தி பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும். இவர்கள் அனைவரும் தேசிய இனங்களாக அங்கீ கரிக்கப்பட வேண்டும். இவர்களில் குறிப்பாக மலையக மக்க ளின் அரசியலையும் சமூக நிலைமைகளையும் திஸாநாயக்க புரிந்து கொண்டுள்ள அளவிற்கு அவ் அமைப்பின் ஏனைய உயர் மட்ட தலைவர்கள் தெரிந்து கொள்ளவில்லை என்ற விமர்சனமும் இருந்து வருகிறது. அனைத்து சமூக மக்களும் அனைத்துவிதமான சொல்லொணாத் துயரங்களை அனுப வித்து வரும் நிலையில் அதிகார மாற்றத்திற்கான மௌனப் புரட்சி ஒன்று தேர்தல் வாக்கு ஊடாக இலங்கையில் நடை பெறும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் அதிகார மாற்றம் என்பது சுலபமாக நடந்து விடாது. ஆழமாக வேரூன்றி உள்ள முதலாளித்துவ சக்திக ளின் கடுமையான எதிர்ப்பை மீறி வர்க்க அதிகாரத்தை நிலை நிறுத்துவது பெரும் சவாலான ஒன்று. 76 வருடங்களாக நாட்டை ஆண்டு அனுபவித்து வந்த வலதுசாரி முதலாளித்து வவாதிகளை தோற்கடிக்க வேண்டுமாயின், இன மத மொழி கடந்து அனைத்து உழைக்கும் மக்களையும் ஒன்று திரட்டி, ஒரு குடையின் கீழ் கொண்டு வர வேண்டும். அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் JVP உட்பட தேசிய மக்கள் சக்தி கூட்டமைப்பை சார்ந்த அனைத்து அரசியல்வாதிகளும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட்டால் புதியதோர் இலங்கை உருவாகும்.



jeyasingh@thaiveedu.com





# விக்கிலீக்ஸ் நிறுவுநரின் சட்டப்போராட்டம்: அமெரிக்கா வழக்கினை மீளப்பெறுமா?

– ரூபன் சிவராஜா

**ஜூலியன் அசாஞ் முன்னெடுத்த வீக்கிலீக்ஸ் கசிவுகள், அம்பலப்படுத்தல்கள் பிரசுர உரிமைக்குள் வருகின்றன. பத்திரிக்கைச் சுதந்திரம் என்பது, எந்தவொரு அரசாங்க மற்றும் அதிகாரத்துவ பீடங்களின் தணிக்கை மற்றும் முன்கட்டுப்பாடுகள் இன்றி ஒருவரின் எண்ணங்களை அச்சிற் சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமையைக் குறிக்கின்றது.**

வீக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் (Julian Assange) மீதான வழக்கினைத் தள்ளுபடி செய்வது தொடர்பாகத் தாம் பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இது அசாஞ் விவகாரத்தில் புதிய திருப்பங்களை ஏற்படுத்துமென்ற எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது. அமெரிக்க நீதியமைச்சு இதனை ஆராய்ந்து வருவதாக ஏப்பிரல் 10, 2024 Wall Street Journal செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் வோஷிங்டன் இது விடயத்தில் தனது அணுகுமுறை மாற்றம் குறித்த எந்தவித சமிக்ஞைகளையும் தமக்கு வழங்கவில்லை என அசாஞ்சின் வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர்.

அசாஞ் விவகாரத்தில் இன்னொரு நிகழ்வும் அண்மைய நாட்களில் இடம்பெற்றுவருகின்றது. அது மேன்முறையீட்டுக்கான பிரித்தானிய நீதிமன்ற அறிவிப்பாகும். 14 ஆண்டுகளுக்கு முன்னர் ஈராக், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்காவின் போர்கள் தொடர்பான இரகசிய இராணுவ மற்றும் இராஜதந்திர ஆவணங்களை Hacking மூலம் கையகப்படுத்தி வீக்கிலீக்ஸ் தளத்தின் ஊடாக வெளியிட்டமையே அசாஞ்ச் மீதான குற்றச்சாட்டு. கைது அச்சுறுத்தல் காரணமாக 2012-ல் பிரித்தானியாவிலுள்ள எக்குவாடோர் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். ஏழு ஆண்டுகள் தூதரக தஞ்சத்தின் பின்னர் 2019-இல் பிரித்தானியக் காவல்துறையினராற் கைதுசெய்யப்பட்டு, தென் கிழக்கு இலண்டனில் உள்ள பெல்மார்ஸ் (Belmarsh) உயர்பாதுகாப்புச் சிறையில் வைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ச்சியான சட்டப் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார் அசாஞ். அமெரிக்காவிடம் கையளிப்பதற்கு எதிரான வழக்கு மேன்முறையீடுகள், தீர்ப்புகள், காத்திருப்புகள் அவருடைய ஐந்தாண்டு கால சட்ட நடவடிக்கைகள் அதில் முதன்மையானவை.

அமெரிக்க ஜனாதிபதியின் சமிக்ஞை அசாஞ்சின் குடும்பத்தினர், ஆதரவாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால், பைடனிடமிருந்து வந்திருப்பது ஒரு சமிக்ஞை என்பதற்கு அப்பாலான நிச்சயமான உறுதிப்படுத்தலாகக் கொள்ள முடியாது. வோஷிங்டன் நிர்வாகம் அதனை ஓர் அறிக்கையாகவோ, தீர்மானமாகவோ இதுவரை வெளியிடவில்லை.

ஏப்பிரல் 10, 2024 ஜப்பானியப் பிரதமர் Fumio Kishida இனை வரவேற்றுப் பேசும் போது ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பரிசீலித்துவருவதாக பைடன் கூறினார். கடந்த பல வருடங்களாக அவுஸ்ரேலிய அரசாங்கம் அசாஞ் கையளிப்புத் தொடர்பாக அமெரிக்க அழுத்தத்தினையும் வழக்கினையும் கைவிட்டு, அவரைத் தாயகம் திரும்ப அனுமதிக்குமாறு அமெரிக்காவிடம் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளது. அவ்வேண்டுகோள் குறித்த கேள்விக்குத் தான் அமெரிக்க ஜனாதிபதி பரிசீலிப்பதாகப் பதில் கூறியிருந்தார். எனவே இது தீர்மானமாக அறிவிக்கப்படவில்லை என்பது கவனம்கொள்ளவேண்டியது.

## அசாஞ் விவகாரத்தில் நடந்தது என்ன? ஓர் மீள் பார்வை:

அசாஞ் வழக்கின் சமகால நிலைமை இப்படியிருக்க, சற்றுப் பின்னோக்கிச் சில தகவல்களைச் சொல்லிச் செல்வது பொருத்தமாகும். ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணங்களையும், ஈராக்கில் அமெரிக்க ஹெலிகாப்டர் தாக்குதலில் இரண்டு ஊடகவியலாளர்கள் உட்பட்ட பலர் கொல்லப்பட்டதைக் காட்டும் காணொளியையும் 2010-ல் விக்கிலீக்ஸ் வெளியிட்டது. அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம், அசாஞ் சுவீடனுக்கு பயணமானார். இரண்டு பெண்களுக்கு எதிராக பாலியல் வன்கொடுமை செய்ததாக சந்தேகத்தின் பேரில் நவம்பரில் அவர் சுவீடன் காவல்துறையினரால் தேடப்பட்டார். 2010 டிசம்பர் பிரித்தானியாவில் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2012-ல் பிரித்தானிய உயர் நீதிமன்றம் அவரைச் சுவீடனுக்கு நாடு கடத்த உத்தரவிட்டது. சுவீடன் தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் என்று அஞ்சிய அசாஞ் இலண்டனில் உள்ள எக்குவடோர் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். 2016-ம் ஆண்டில், அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஹிலரி கிளிண்டனின் பரப்புரை மேலாளரிடமிருந்து களவாடப்பட்ட பெருமெண்ணிக்கையிலான மின்னஞ்சல்கள் விக்கிலீக்ஸ் இணையத்தில் வெளியிடப்பட்டன. இம்மின்னஞ்சல் வெளியீடுகள் ஹிலரியின் தேர்தற் பரப்புரைகளைப் பாதித்தன. அத்தோடு ரஷ்ய புலனாய்வுத்துறையிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களும் அசாஞ்சினால் வீக்கிலீக்ஸில் வெளியிடப்பட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

2019-ல், எக்குவாடோர் அசாஞ்சிற்கான பாதுகாப்பை விலக்கிக் கொண்டது. பிரித்தானியக் காவல்துறை இலண்டனில் உள்ள எக்குவாடோர் தூதரகத்திற்குள் நுழைந்து அவரைக் கைது செய்தது. அதே நாளில், கணினித் தகவல் மற்றும் தரவு மீறல்களுக்கு அவர் உடந்தையாக இருந்ததற்கான குற்றச்சாட்டை அமெரிக்கா வெளியிட்டது. அப்போதிருந்து, அசாஞ் இலண்டனில் உள்ள உயர் பாதுகாப்பு பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டார். 2012-ம் ஆண்டு பிணை நிபந்தனைகளை மீறியதற்காக அவருக்கு 2019 மே மாதம் 50 வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 2019 மே மாத இறுதியில் 18 வழக்குகளில் அவர் மீது ஒரு விரிவான குற்றச்சாட்டை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டது. அமெரிக்க புலனாய்வுச் சட்டத்தை மீறியதாக அவ்வழக்கில் அசாஞ் குற்றம் சாட்டப்பட்டார்.

நவம்பர் 2019-ல் சுவீடன் வழக்கறிஞர்கள் அசாஞ் மீதான பாலியல் வன்புணர்வு வழக்கினைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்தனர். பாலியல் குற்றச்சாட்டுகளை அவர் எப்போதும் மறுத்து வந்துள்ளார். அவரைப் பழிவாங்குவதற்காக அமெரிக்கத் தூண்டுதலில் சோடிக்கப்பட்ட வழக்கு அதுவென்ற கருத்துகளும் நிலவின. 2022-ல், அசாஞ்சை நாடு கடத்துவதற்கான அமெரிக்க கோரிக்கைக்கு பிரித்தானிய அரசாங்கம் ஒப்புதல் அளித்தது. அப்போதிருந்து, நாடு கடத்தல் தொடர்பான முடிவை மாற்றுவதற்கான சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

2020-ல் அன்றைய பிரித்தானிய கொன்சர்வேற்றிவ் அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் ப்ரிதி பட்டேல் கையளிப்புத் தீர்ப்பில் கையொப்பமிட்டார். இலண்டன் உயர்நீதிமன்றம் வழங்கிய கையளிப்புத் தீர்ப்பு மேன்முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டினைத் தொடர்ந்து இழுபறிகள் நீடித்து வந்துள்ளது. இன்றைய நிலையில் இரண்டு விடயங்கள் முக்கியமாகப் பேசப்படுகின்றன. ஒன்று அமெரிக்க ஜனாதிபதியின் வழக்குத் தள்ளுபடி குறித்த சமிக்ஞை. மற்றையது மேன்முறையீட்டின் விளைவாக பிரித்தானிய நீதி மன்றம் அசாஞ்சின் உயிர்ப் பாதுகாப்பு மற்றும் கருத்துரிமை சார்ந்து அமெரிக்காவிடம் சில உத்தரவாதங்களைக் கோரியுள்ள விவகாரமாகும்.

## அமெரிக்காவின் இடையறாத அழுத்தமும் நோக்கமும்:

கையளிப்புத் தொடர்பான அமெரிக்காவின் பல்லாண்டு காலம் நீடித்துவரும் அழுத்தமானது அவரைத் தமது நாட்டில் உளவு மற்றும் ஆவணத் திருட்டுக் குற்றச்சாட்டில் அவர் மீது சட்ட நடவடிக்கையைத் தமது நாட்டில் முன்னெடுக்கும் நோக்கத்தினை உடையது. அது பழிவாங்கலுடன் மரண தண்டனைக்கு இட்டுச் செல்லும் ஆபத்துகளைக் கொண்ட இலக்காகும்.

வழக்கு பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் நீடிக்கின்ற சூழலில், வழக்கறிஞர்களான தாம் கருத்து தெரிவிப்பது பொருத்தமற்றது, ஆனால் வழக்குத் தள்ளுபடி தொடர்பாக நீதித்துறை உத்தேசித்துள்ளதற்கான எந்த அறிகுறியும் தமக்கு



வழங்கப்படவில்லை. வழக்கின் மூலம் அசாஞ் மீது சுமத்தப்பட்ட 18 குற்றச்சாட்டுகளிலும் 175 ஆண்டுகள் சிறைத்தண்டனையை உறுதிப்படுத்தி, அவரை நாடு கடத்துவதில் அமெரிக்கா எப்போதும் இல்லாத உறுதியுடன் தொடர்கிறது என அசாஞ் தரப்பு வழக்கறிஞர்களில் ஒருவரான பேரி பல்லாக் (Barry Pallack) வெளியிட்டுள்ள அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை அமெரிக்கா இந்த ஆண்டு சந்திக்கவுள்ளது. அதன் காரணமாக அசாஞ் வழக்கும் கையளிப்புக் கோரிக்கையும் அரசியல் ரீதியாக பைடனுக்கு சவாலையும் நெருக்கடியையும் கொடுக்கக்கூடியது. பராக் ஒபாமா ஆட்சியில் (ஜனநாயகக் கட்சி) அசாஞ் மீது சட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது. ஆனால்




2019-ல் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் (குடியரசுக் கட்சி) அமெரிக்க 1917-ன் அமெரிக்க (Espionage Act) உளவுச் சட்டத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வழக்குத் தொடுத்தது.

இந்த ஆண்டு பெப்ரவரியில் அசாஞ்சின் மேல்முறையீட்டு அனுமதி மீதான விசாரணையில், அவர் நாடு கடத்தப்பட்டால், குறிப்பாக 'டிரம்ப் நிர்வாகம் மீண்டும் பதவிக்கு வருவதற்கான சாத்தியக்கூறு நிகழுமாயின் சட்டத்திற்கு புறம்பான தாக்குதல்கள் மூலம் அசாஞ் அமெரிக்க இராணுவ மற்றும் உளவு நிறுவனங்களால் குறிவைக்கப்படுவார் என்று அவர் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

## அசாஞ் விவகாரத்தின் சட்ட ரீதியான தற்போதைய நிலை என்ன?

அமெரிக்காவிடம் கையளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட தீர்ப்பு மீதான மேன்முறையீட்டில் சில அம்சங்கள் மட்டுமே நீதிபதிகளாற் கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. ஒன்பது அம்சங்களில் ஆறு நிராகரிக்கப்பட்டுள்ளன. அசாஞ் மீதான அமெரிக்கக் குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கொண்டது என்பதை நீதிபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனுடன் தொடர்புடையதாக அமெரிக்கா - பிரித்தானியாவிற்கிடையிலான நாடுகடத்தல் உடன்படிக்கையானது அரசியற் கைதிகளை நாடு கடத்துவதைத் தடை செய்கின்றது என்ற வாதத்தையும் நிராகரித்துள்ளனர். ஏனெனில் அசாஞ் மீதான வழக்கு அரசியல் நோக்கம் கொண்டதல்ல என்பதும், அவர் அரசியற் கைதி அல்ல என்பதும் நிராகரிப்பிற்கான அடிப்படையாக முன்வைக்கப்படுகின்றது. பிரித்தானியாவின் 2003-ம் ஆண்டு அமுலுக்கு வந்த ஒப்படைப்புச் சட்டத்தினையே துணையாகக் கொண்டு தீர்ப்பு வழங்கியுள்ளதோடு, மேன்முறையீடு கையாளப்படுகின்றது. ஒப்படைப்புச் சட்டம் 2003 (Extradiction act 2003) பிரித்தானியப் பாராளுமன்றத்தால் 2003-ல் நிறைவேற்றப்பட்டது. இது பிரித்தானியாவிலிருந்தும் பிரித்தானியாவுக்குமான குற்றவாளிகள் ஒப்படைப்பு-நாடு கடத்தல் கோரிக்கைகளை ஒழுங்குபடுத்தும் சட்டமாகும். 2004 ஜனவரி முதலாம் திகதி முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது.

புதிய சாட்சியங்கள், ஆதாரங்களையும் மேன்முறையீட்டு விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் மறுத்துள்ளது. அதாவது அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனமான (Central Intelligence Agency) CIA, எக்குவாடோர் தூதரகத்தில் அசாஞ் அடைக்கலம் புகுந்திருந்த காலத்தில் அவரைக் கண்காணித்தது, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரொனால்ட் டிரம்பின் பணிப்பின் பேரில் அவரைக் கடத்துவது அல்லது படுகொலை செய்யத் திட்டமிட்டமை சார்ந்த ஆதாரங்களையும் மேன்முறையீட்டு விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

## மேன்முறையீட்டின் வாய்ப்பு வெளிகள்:

பின்வரும் மூன்று அம்சங்களின் அடிப்படையில் அசாஞ்சின் மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக ஊடகச் செய்திகள் வெளிவந்துள்ளன:

- ஐரோப்பிய மனித உரிமைச் சட்டத்தின், பத்தாம் அலகிற்கு அமைய அவரது கருத்துரிமை மீறப்பட்டுள்ளது. பத்தாம்

அலகு, அனைவருக்குமான கருத்துச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துகிறது. அந்த உரிமை 'பொது அதிகாரத்தின் குறுக்கீடு இல்லாமல் மற்றும் எல்லைகளைப் பொருட்படுத்தாமல் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும், தகவல்கள் மற்றும் எண்ணங்களைப் பகிர்வதற்கும் பெறுவதற்குமான சுதந்திரத்தினை வலியுறுத்துகின்றது. ஊடகச் சுதந்திரம் என்பதுவும் இக்கருத்துச் சுதந்திரத்தின் உள்ளிணைந்த பகுதியாகும்.

- அவுஸ்திரேலியக் குடிமகனான அசாஞ் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட நேர்ந்தால் அங்கு அவர் அமெரிக்கப் பிரஜையை ஒத்த உரிமைகளோடு நடத்தப்படாமல், பாரபட்சங்களை எதிர்நோக்கும் அபாயம் இருப்பதாக அஞ்சப்படுகின்றது. அமெரிக்க அரசியல் சாசன முதலாம் திருத்தச்சட்டம் அமெரிக்கப் பிரஜைகளின் பேச்சுரிமை, பத்திரிகை (பிரசுர) உரிமை, ஒன்றுகூடும் உரிமை மற்றும் குறைகளைச் சுட்டிக்காட்டி அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமைகளைப் பாதுகாக்கின்றது. இந்தச் சட்டத்திருத்தத்தில் பத்திரிகைச் சுதந்திரமும் முக்கிய அங்கம். அதாவது, அசாஞ் முன்னெடுத்த வீக்கிலீக்ஸ் கசிவுகள், அம்பலப்படுத்தல்கள் பிரசுர உரிமைக்குள் வருகின்றன. பத்திரிக்கைச் சுதந்திரம் என்பது, எந்தவொரு அரசாங்க மற்றும் அதிகாரத்துவ பீடங்களின் தணிக்கை மற்றும் முன்கட்டுப்பாடுகள் இன்றி ஒருவரின் எண்ணங்களை அச்சிற் சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமையைக் குறிக்கின்றது.

  பத்திரிக்கை சுதந்திரமானது கருத்துரிமைச் சுதந்திரத்தின் முக்கிய அம்சம். அனைத்து ஜனநாயக நாடுகளிலும், பத்திரிகை சுதந்திரம் ஓர் அடிப்படை மனித உரிமையாகக் கருதப்படுகிறது. அவை பொதுவாக நாடுகளின் அரசியலமைப்புகளாற் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் நடைமுறை யதார்த்தத்தில் முற்றுமுழுதாக அவை எல்லா நாடுகளாலும் பாதுகாக்கப்படுகின்றன என்று சொல்லிவிட முடியாது. ஒப்பீட்டளவில் ஐரோப்பிய நாடுகளில் பத்திரிகைச் சுதந்திரம் உரிய வெளியைக் கொண்டியங்குகின்றது. அசாஞ் விடயத்தில் அமெரிக்கப் பிரஜைக்கு இருக்கக்கூடிய அதே கருத்துரிமைச் சுதந்திரத்தினை அமெரிக்கா உறுதிப்படுத்த வேண்டுமென (கையளிப்பு நிகழ்ந்தால்) மேன்முறையீட்டில் வலியுறுத்த முடியும்.

- அமெரிக்காவில் அவர் மீதான சட்ட நடவடிக்கை தொடருமானால், மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படும் ஆபத்து உள்ளது. எனவே கையளிப்பிற்கு முன்னர் அமெரிக்காவிடமிருந்து மேற்குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பான சில உத்தரவாதங்களை பிரித்தானிய நீதிமன்றம் கோரியுள்ளது. ஏப்ரல் 16-ம் திகதிக்கு முன்னர் அவற்றுக்கு அமெரிக்கா பதிலளிக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மே மாதம் 20-ம் திகதி புதிய விசாரணைகள் இடம்பெறுமென அறியமுடிகிறது.

## உத்தரவாதங்களை விட வழக்குத் தள்ளுபடியே அவசியம்:

அமெரிக்கா எத்தகைய உத்தரவாதங்களை வழங்க முன்வரும், எந்த அம்சங்கள் நீதிபதிகளால் மதிப்பாய்வு செய்து தீர்ப்பு வழங்கப்படும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். உத்தரவாதங்களை விட வழக்கினை முற்றாகத் தள்ளுபடி செய்வதே அவசியமானது என வழக்கறிஞரும் அசாஞ்சின் துணைவியுமான ஸ்டெல்லா அசாஞ் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழல், அதாவது அடுத்த மேன்முறையீடு, அமெரிக்காவிடம் உத்தரவாதக் கோரல் மற்றும் வழக்குத் தள்ளுபடி தொடர்பான அமெரிக்க ஜனாதிபதியின் பரீசீலனைச் சமிக்ஞை ஆகியன துல்லியமான வெற்றியாகக் கருதமுடியாது என வீக்கிலீக்ஸ்-இன் பொறுப்பாசிரியர் கிறிஸ்டின் ஹ்ராஃப்ன்சன் (Kristinn Hrafnsson) தெரிவித்துள்ளார். நீதிபதிகளின் தீர்ப்பு முரண்பாடுகளைக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஒருபக்கம் அசாஞ் மீதான அமெரிக்க வழக்கு அரசியற் தூண்டுதல் கொண்டதல்ல எனக்கூறும் அவர்கள் மறுபக்கம் அமெரிக்காவிடமிருந்து அரசியல் உத்தரவாதங்களைப் பெற உத்தரவிட்டுள்ளனர். இந்த இரட்டை நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்வது சுலபமல்ல என்பதாகவும் வீக்கிலீக்ஸ் பொறுப்பாசிரியர் கருத்துரைத்துள்ளார்.

## மேன்முறையீடு – அமெரிக்க உத்தரவாதம் – வழக்குத் தள்ளுபடி?

மேன்முறையீட்டில் முக்கியமான அம்சங்களை நிராகரிப்பது ஏமாற்றத்திற்குரியது. அதிலும் சி.ஐ.ஏ மேற்கொண்ட நடவடிக்கைகள் அசாஞ் மீதான சட்டத்திற்குப் புறம்பான படுகொலையை இலக்காகக் கொண்டவை. அவை முக்கிய சாட்சியங்களாகவும் ஆதாரங்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டியவை. இது பிரித்தானிய நீதிமன்றத்தின் நடுநிலமையைக் கேள்விக்கு உட்படுத்துகின்றன. இந்த நிராகரிப்பு ஒரு வகைப் பிற்போடல் தந்திரத்தோடு, அரசியல் நோக்கம் (அமெரிக்கச் சார்பு) கொண்டதாகவும் பார்க்கப்படுகின்றது.

அமெரிக்கா உத்தரவாதங்களை வழங்கினாலும் நடைமுறையில் அவற்றின் பிரதிபலிப்பும் நம்பகத்தன்மையும் எப்படி அமையுமென்ற கேள்விகளும் உள்ளன.

தற்போதைய சூழலில் ஜூலியன் அசாஞ்சின் உயிருக்கு உத்தரவாதம் மற்றும் அவருடைய கருத்துச் சுதந்திரத்திற்கான ஓரளவு பாதுகாப்பினை வழங்கக்கூடிய வாய்ப்புகளாக மூன்று வெவ்வேறு சூழமைவுகளை நோக்க முடியும். ஒன்று மேன்முறையீடும் அதிலுள்ள சாத்தியமான தீர்ப்புகளும், இரண்டாவது அமெரிக்கா வழங்க முன்வரக்கூடிய உத்தரவாதங்கள், மூன்றாவது வழக்குத் தள்ளுபடிக்கான வாய்ப்புகள். முதலிரண்டும் ஒப்பீட்டளவில் உயிர்ப்பாதுகாப்பு மற்றும் கருத்துரிமைச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்தக்கூடியவை. வழக்குத் தள்ளுபடி என்பதே அவரின் விடுதலையை முழுமையாகச் சாத்தியப்படுத்துவதோடு உலகளாவிய ஊடக, கருத்துரிமை, விமர்சனச் சுதந்திரத்தினைக் குழிதோண்டிப் புதைப்பதிலிருந்து மீட்கின்ற செயலுக்கு பங்களிக்கக்கூடியது.



rooban.s@thaiveedu.com




கல்வி அல்லது கல்வித்துறை இன்று சகலரதும் கவனயீர்ப்பைப் பெற்ற ஒரு தனிப்பெரும் விசேட துறையாக மாறியுள்ளது. உலகில் நிகழும் அத்தனை மாற்றங்களுக்கும் கல்வியே தளமமைக்கின்றது. தரமான கல்வியைப் பெற்றவர்கள் தரமான மாற்றங்களைக் காண்கின்றனர். கல்வி மீதான பார்வைகளும் பதிவுகளும் விமர்சனங்களும் அன்றாடம் புதுப் புது மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. மேற்கிலும் கிழக்கிலுமாகக் கல்வி முன்னரைவிடவும் கூர்மையான தளமாற்றத்தை உற்பத்தி செய்து வருவது நோக்கத்தக்கது. கல்வி மரபார்ந்த ஒற்றைப் பரிமாணப் பார்வையைத் தாண்டியுள்ளது. பன்முகப்பட்ட பரிமாணத்தின்பால் நகர்ந்து எல்லாத் தளங்களிலும் ஊடுருவி அனைத்தையும் ஆக்கிரமித்துள்ளது. அது கல்வியியல் எனும் பெரும் துறையாக வளர்ந்து வியாபித்துள்ளது. கல்வியுடன் உளவியல், தத்துவம், பொருளியல், சமூகவியல், பண்பாடு என்று பல துறைகளும் ஒன்றிணைந்துள்ளன. அதிலும் குறிப்பாகக் கல்வியில் அரசியல் பெருத்த செல்வாக்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இன்றைய நாட்களில் அதன் தொழில்நுட்பப் பரிமாணம் முன்னெப்போதும் உயராதளவு மேலோங்கியுள்ளது. கல்வி எனும் பரந்த பொருள் கோடலுக்கு உட்படும் மேற்படி ஆழமான சொல் கல்வியும் அரசியலும், கல்வியும் சமூக மாற்றமும் என்று பல்வேறு கோணங்களில் ஆழமாக அலசப்படுகின்றன. சமூக மாற்றம் கல்விக்கூடாகவே நிகழ முடியும், பாடசாலைகளும் ஆசிரியர்களுமே அதன் பிரதான பங்காளர்கள், மாற்ற முகவர்கள் என்றால் அதனை யாரும் மறுக்க முடியாது. அடிக்கடி மாற்றமுறும் உலகில் கல்விச் சிந்தனைத் தளத்தில் சடுதியான மாற்றங்களை உருவாக்கிய மக்களாட்சி, புதிய இடதுசாரி, மாக்ஸியம், போலோ பிரேரி, மிஷல் பூக்கோ, சிவில் சமூகம், தேசியவாதம், பின்நவீனம், பூகோள அரசியல், தேசிய இனக்குழுமம், தாராண்மைவாதம், நவ தாராண்மைவாதம், சமகாலக் கல்வி, மொழிக் காலனியம், அறிவு அதிகாரம் என ஏகப்பட்ட சிந்தனை மரபுகளை, போக்குகளைக் கல்விப் புலத்துடன் இணைத்து ஒப்பிட்டு நோக்குவதன் காரணம் அது சமூக மாற்றத்துடன் கட்டிறுக்கமான பிணைப்பைக் கொண்டிருப்பதால் தான். கல்விக்கும் இதர சமூகவியல், உளவியல், மற்றும் மானிடக் கற்கைகளுக்கும் இடையிலுள்ள கட்டிறுக்கமான உறவை நோக்கினால் இவற்றுக்கும் கல்விக்கும் இடையிலான ஊடாட்டங்களைத் தெளிவுபடுத்தலாம். காலமாற்றத்துக்கும் புதிய இளந்தலைமுறையினரின் நோக்கு, போக்கு, இயல்பு என்பவற்றுக்கு இசைவான புதிய அர்த்தப்பாடுகளை, தரிசனங்களைச் சிந்தனை மரபுகளைத் தோற்றுவிக்கின்றமையையும் உன்னிப்பாக அவதானிக்கலாம். சமகாலக் கல்வியும் உலகமயமாதலும் அரசியல் நுண்ணாய்வுகளும் எமக்கு அருகிலேயே வந்துவிட்டன. கல்வியைக் கைவிட்டோ புறக்கணித்தோ மாற்றம் குறித்து எதுவும் சொல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

சமகாலக் கல்வியின் எழுவினாக்களும் எழுகோலங்களும் கல்வி குறித்தான மீள்வாசிப்பையும் கவனயீர்ப்பையும் பொதுத்தளத்தில் ஏற்படுத்திவிடும். அதுபோலவே சமூக மாற்றத்தில் கல்வி ஏற்படுத்தும் தாக்கங்களும் விசேசமானவை. ஒடுக்குமுறை, சுரண்டல், அதிகாரம் போன்றன, எந்தளவு நவீன முறைமைகளுக்கூடாக எம்மில் ஊடுருவி எமது வாழ்வியல் கோலத்தைச் சிதைத்துச் சீரழித்துள்ளன எனும் மர்மமும் இதன்போது தெளிவாக புலனாகும். அதே போலக் கல்வியானது எப்படிச் சமூக மாற்றத்தைத் துரிதப்படுத்துகிறது என்பதும் ஆய்வுக்குரிய ஒன்று.

நவயுகத்தில் கல்வியும் அதன் செல்நெறியும் எனும் பரப்பில் எமது அவதானத்தைச் செலுத்தினால் மாற்றத்துக்கும் கல்விக்குமுள்ள உறவைப் புரியலாம். கற்றலின் பிரதான தளமான உயர்கல்வியும் மிகப்பெரும் மாற்றம் கண்டு வருவதைக் கல்விப் பின்புலம் கொண்ட யாவரும் அறிவர். 21-ம் நூற்றாண்டின் கல்வி துரித கதியில் மாற்றமுற்று வருகின்றது. இதே கதியில் சமூகமும் மாற்றமும் முன்னேற்றமும் கண்டு வருகிறது. அறிவுத்தொகுதியில் ஏற்பட்டு வரும் மிகத் துரிதமான இமாலய மாற்றம் நிமிடத்துக்கு நிமிடம் மாற்றம் கண்டு புது வடிவமும் பொலிவும் பெற்று வருகிறது. அவற்றுக்கேற்ப நாம் எமது அறிவுக் மேம்படுத்தலை (upadation) இற்றைப்படுத்தாமல் இந்த நூற்றாண்டின் புலமையாளர்களாக (intelectuals) இருக்க முடியாது. மாற்றத்தை நுகர்வோராக இருக்க முடியாது. அறிவுப் பிரவாகத்துக்கு முன்னால் கையாலாகாதவர்களாக, செல்லாக் காசுகளாக ஆக்கப்படுவோம். பெறுமதியற்றவர்களாகக் கருதப்படுவோம்.



மாற்றமுறும் நவீன உலகக் கட்டமைப்பில் புதிய கல்விச் சிந்தனைகளை உள்வாங்குவதும் மேலைப்புலத்துடன் அவற்றை ஒப்பிட்டு எமது கல்வி நிலையை மேம்படுத்தி உயர்த்துவதும் மாணவர்களின் கற்றலை உயர்த்துவதற்கு வழியமைக்கும் சிறப்பான அம்சமாகும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இதனடியாகவே சமூக மாற்றத்துக்கும் போக்குக்கும் ஈடுகொடுக்கும் தன்மையை உருவாக்கலாம். எதிர்காலம் எம்மை நோக்கி வேகமாக மாற்றமுற்று வருகின்றதை உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல எம்மை நாம் முற்கூட்டியே தயார்படுத்த வேண்டும், காலங்கடந்த கல்வியைக் கைவிட்டு நவ யுகத்துக்கும் வேலை உலகிற்கும் உகந்த பொருத்தமான கல்வியைத் தெரிவு செய்து கற்க வேண்டும். கல்விக் கூடான சமூக மாற்றம் பற்றிய புரிதலை அகலிக்க வேண்டும். மாற்றம் என்பது தவிர்க்க முடியாத அம்சம். அது பாரம்பரியமாகவும் நவீன முறைகளுக்கூடாகவும் படிப்படியாகவும் துரிதமாகவும் நீண்ட காலத்தின் பின்னரும் நிகழும் அம்சமாகும். இதற்குப் பல்வேறு அகப் புறக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. துறை சார்ந்த நிபுணர்கள் மாற்றத்தைத் தமது துறையுடன் நோக்கி விளக்கமளிக்கின்றனர். சமூக மாற்றம் குறித்த கருத்துகளை மிக ஆரம்பத்தில் பேசிய அறிஞர்கள் கல்வி மூலமான சமூக மாற்றம் குறித்துப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பின்னாட்களில் கல்வித்துறை சார்ந்த சமூகவியலாளர்களின் கருத்தின்படி கலாசாரத்தின் கோலம், சமூகக் கட்டமைப்பு, சமூக நடத்தைகள் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றமே சமூக மாற்றமாகும் என்பது மேலோங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

சமூகச் செயன்முறை, சமூக அமைப்பு, சமூக இடைவினை போன்றவற்றில் ஏற்படும் மாற்றமே சமூக மாற்றமாகும்.' (A.E. ஜோன்ஸ், 1962). சமூகத்தில் திட்டமிடப்பட்ட அடிப்படையிலும் அதன் பாட்டிலும் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. சமூகவியலாளர் ஒகஸ்ட் கொம்ட் சமூக மாற்றம் பரிணாம ரீதியாக நிகழும் என வாதிட்டார். ஸ்பென்ஸர் சமூகம் பரிணாமம் அடைய அடைய சிக்கலான நிலைக்கே செல்லும் என்றார். எமில் துர்கைமின் பார்வை இன்னும் சற்று வேறுபட்டு மூத்த தலைமுறை அடுத்த தலைமுறைக்குப் பண்பாடுகளை நியமங்களைக் கடத்தும் செயற்பாடே சமூக மாற்றத்தை உருவாக்கும் என்றார். எனினும் எமில் துர்கைம் கல்வியிலும் கவனஞ் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. மெக்ஸ் வெபர் போன்றவர்களின் கருத்தின் பின்புலத்தில் நின்று இதனை அவதானித்தால் கலாசார மாற்றத்துக்கான காரணிகள் சமூகத்தில் உள்ளன. கலாசாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமூக மாற்றத்தைத் துரிதமாக்கி விடுகின்றன. கால் மாக்ஸின் கருத்துப்படி நோக்கின் பொருளாதாரக் காரணிகளே சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. மாக்ஸும் ஹெகலும் முரண்பாடுகள் வழியாகவே சமூக மாற்றம் நிகழும் என வரையறுக்க முயன்றனர். காலத்துக்குக் காலம் பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்ந்து வந்தாலும் அண்மைய மாற்றங்கள் பலதும் தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியாலும் வேகத்தாலும் உருவான மாற்றங்களாகவே கருத வேண்டும். அந்த வகையில் கல்விப் புலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக மாற்றம் நிகழும் வீதம் முன்னெப்போதுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றது.

சமூக மாற்றத்தை நிகழ்த்தும் பிரதான கூறுகள் (elements) பல உள்ளன. அவ்வாறே சமூக மாற்றத்தைத் துரிதமாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் கூறுகளும் உள்ளன. அவற்றுள் பிரதானமானதாகக் கல்வியைக் குறிப்பிடலாம். கல்வியானது சமூக மாற்றத்தை ஏற்படுத்தி விடப்போவதில்லை. கல்வி முறையானது வர்த்தகப் பாகுபாடுள்ள சமூகத்தை மீள உற்பத்தி செய்யும் என்ற எதிர்நிலைக் கருத்துகளும் தோன்றியமை குறிப்பிடத்தக்கது. இதற்கு அமெரிக்காவின் கல்வி முறைமை தொடர்பான கொள்கை சிறந்த உதாரணம் எனலாம். கல்வியின் வாயிலாக சமூகம் மிகத்துரிதமாக மாறியும் முன்னேறியும் வருகின்றது. சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் சூழலமைவிலும் கல்விகற்ற தனிமனிதர்கள், குடும்பங்கள் பெருகியதன் காரணமாக வாழ்க்கை முறை, தொழில், இதர வாழ்வியல் வசதிகள் பெருகியதுடன் சமூகம் பற்றிய பார்வையும் மாறியுள்ளமையைக் காணலாம்.

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், கல்வியைப் பெறும் மொழி, கல்விக்கான செலவுகள், கல்வி கற்கச் செல்லும் வெளிநாட்டுப் பயணங்கள், புத்தாக்கங்கள், கல்வி குறித்தான பார்வை, அதன்பால் உருவாகியுள்ள ஆர்வம், ஈடுபாடு போன்றன சமூக மாற்றத்தைக் கல்வியுடன் பின்னிப் பிணைத்துவிட்டுள்ளது. கல்வித்துறையில் நிகழும் சர்வதேச அளவிலான மாற்றங்கள் அடுத்த வினாடி தேசியளவில் உட்புகுத்தப்படுகின்றன. இது தொடர்ச்சியானதும் திரட்சியானதுமான மாற்றத்தை உருவாக்கிவிடும். 21-ம் நூற்றாண்டின் கல்விசார் மாற்றங்களும் தொழில்நுட்பமும் மனித வாழ்வையும் போக்கையும் புரட்டிப்போட்டுள்ளன. இத்தகைய பரந்த சூழலமைவில் கல்வி சமூக மாற்றத்தில் எத்தகைய தாக்கம் செலுத்துகின்றது என்று கூர்ந்து நோக்கவேண்டும். இலங்கையிலும் கூட காலத்துக்கு காலம் மேற்குலகின் கல்வித் துறை மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் சந்தை வாய்ப்புகளுக்கும் ஏற்ப கலைத்திட்ட மறுசீரமைப்புகள் இடம்பெறுகின்றமையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று.

சமூக மாற்றத்தில் கல்வி அதீத தாக்கம் செலுத்துகிறது என்பதைவிடவும் சமூகக் காரணிகளால் கல்வியும் கல்வி முறையும் எத்தகைய பாதிப்பையும் தாக்கத்தையும் பெறுகிறது என்று பார்த்தல், இந்த அடிப்படை உண்மையைப் புரிய இன்னும் சுலபமாக அமையும். கல்விப்புலத்தில் கூடுதல் கவனஞ்செலுத்துமிடத்து மாற்றத்தைத் துரிதமாக்கலாம் என்ற உண்மையை உணர்ந்து அதிலே கவனக்குவிப்பு செய்ய அரசுகள் முனைந்தன. சோவியத் யூனியன், சீனா, கியூபா போன்ற நாடுகள் இதனால் தத்தமது கல்வித்துறையில் கூடிய ஆய்வுகளை அவதானத்தைச் செலுத்தி, அதிலே தேவையான மாற்றங்களைப் புகுத்தின. அபிவிருத்திக்கும் எழுச்சிக்கும் தேவையான மனித வலுவைத் தக்கவைக்கும் வகையிலான கல்வியை வழங்க முன்வந்தன. இலங்கை அரசும் 2023-ம் ஆண்டில் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பை அமுலாக்கக் கடுமையாக முயன்றும் கொவிட் பெருந்தொற்று பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் கொந்தளிப்புகள் நிலைமையைப் புரட்டிப்போட்டுவிட்டன.

இந்தப் பின்புலத்தில் கல்விமுறையில் சமூக மாற்றத்தை உருவாக்கச் சில வரையறைகள் உள்ளன என்பது நோக்கத்தக்கது. இலங்கையிலும் இந்தியாவிலும் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், செயற்றிட்டங்கள் இதற்குச் சிறந்த சான்று. சகல வகையிலும் கல்வியை இலவசமாக்கி, முதல் மொழியில் கல்வி பெறுவதற்கான சமவாய்ப்புக் கிடைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டது முதல் இலங்கையில் கற்றோர் வீதம் துரிதமாகப் பெருகியது எனலாம். கட்டாயக் கல்வி இதனை இன்னும் உறுதி செய்தது. தெற்காசியாவில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கல்வித்தரம் இன்றளவும் உயர்ந்தேயுள்ளது. இங்கு கல்வித்தரம் என்பது எழுதவும் வாசிக்கவும் முடியுமான ஆற்றல் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது. கற்ற கல்வியை உற்பத்தித்துறையில் அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் மாற்ற முகாமைக்கு உதவும் அம்சமாக மாற்ற வேண்டிய கடப்பாடு உரிய தரப்பினருக்குண்டு. இருந்தபோதிலும் இலங்கை மக்களிடம் பெருவாரியான ஒரு மாற்றம் சுதந்திரத்தின் பின் அவதானிக்கப்படுகிறது. இது அரசியல், சமயம், பொருளாதாரம் என அனைத்தையும் தழுவிப் பயணிக்கின்றது. கல்வித்துறை வழியாகவே இந்த மாற்றத்துக்கான அடிப்படைகள் இடப்பட்டன என்றால் அது பிழையாகாது.


எழுத்தறிவில் ஏற்பட்ட மாற்றமும் பாய்ச்சலும், ஆயுள் எதிர்பார்ப்பு வீதம், தனியாள் வருமானம், சிசுமரண வீதத்தில் வீழ்ச்சி, பிரசவ மரண வீதத்தில் வீழ்ச்சி, பெண்கள் சம அந்தஸ்துப் பெறல், மக்களின் அரசியல் பங்கேற்பும் ஈடுபாடும் விமர்சனமும் கல்வித்துறை சார்ந்து ஏற்பட்ட மாற்றங்களே.

கல்விப் புலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்குச் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களே உந்துவிசையாக அமையும். அவை தவிர்ந்த அரசியல், பொருளாதார, கலாசாரக் காரணிகளும் ஏதோ ஒருவகையில் கல்வியில் பாதிப்பையும் தாக்கத்தையும் செலுத்தியே வந்துள்ளன. இங்கிலாந்தை அடிப்படையாகக்கொண்டு உருவான கைத்தொழில் புரட்சியின் பிறகே, கல்வி குறித்த கவனம் குவியத்தொடங்கி, அது மனிதவுரிமையுடன் இணைத்துப் பேசப்பட்டது. இதுவும் கல்விச் சமூகத்தில் மாற்றத்தைத் தோற்றுவிக்க வழியமைத்த காரணி எனலாம். அதே நேரம் சாதியமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவில் கல்வி புறக்கணிக்கப்பட்ட சமூகத்தில் அல்லது கல்விக்கான வாய்ப்புகள் தடுக்கப்பட்ட சமூகத்தில் வாழ்க்கைத்தரம் பின்னடைந்தும் கல்வியைப்பெற்ற சமூகங்கள் கல்வியில் மேம்பட்டும் உள்ளதைக் காணலாம்.

கற்கும் ஆற்றல்களோ, ஆற்றல் இருந்தும் இனங்கண்டு வெளிக்கொணரும் நிலையோ இல்லை என்பதால் வாழ்க்கை நிலையும் கோலமும் மிகவும் பின்னடைந்துள்ளதைக் காணலாம். உலக யுத்தங்களின் பின்னரான உலகளாவிய ஏற்பாடுகளும் சர்வதேச நாடுகளில் கல்வி மீதான உன்னிப்பான அவதானத்தை உண்டுபண்ணின. இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்கள் இதர நெருக்கடிகள் அனைத்தையும் தாண்டி கல்வி வழியாக மட்டுமே நிலைபேறான சமூக மாற்றத்தை உருவாக்கலாம் என்பதில் அனைவரும் உடன்பட்டே பயணிக்கின்றனர். SDG போன்ற பிரமாண்டமான உலகளாவிய ஏற்பாடுகள் கல்வியைச் சமூக நிலைமாறல்களோடு இணைத்தே திட்டங்களை வகுத்து வருவதும் கண்கூடு.

கல்வி முன்னேற்றத்தின் வழியாக உருவாகியுள்ள தொழில்களும் மனித வாழ்க்கைக் கோலங்களை மாற்றியுள்ளன. சமகாலத்தில் கொவிட் பெருந்தொற்றின் பின்னரான கல்விப் போதனைகள் விரிவாக்கம் பெற்று நிகழ்நிலை வழியாக தொடர்வதையும் காணலாம். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நிகழ்நிலையைத் தனிப்பெரும் துறையாகவே மாற்றிவிட்டுள்ளது.

இந்தவகையில் கல்வியைச் சமூக மாற்றத்தின் பிரதான உந்துவிசையென்று கருத வேண்டியுள்ளது. சமூகத்தின் சிந்தனையை போக்கை எதிர்காலத்தைத் தலைகீழாகப் புரட்டிவிடும் ஆற்றல் கல்விக்கு மட்டுமே உண்டு. 'கல்விதான் சமூகத்தை மாற்றும் கூரான ஆயுதம்' என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா சொன்ன கூற்றில் எவ்வளவு யதார்த்தம் உள்ளது.



bisthamy.ahamed@thaiveedu.com

# பேச்சு, வாசிப்பு ஆற்றலை வளர்க்கும் வழிமுறைகள்

- த. சிவபாலு



## அறிமுகம்:

மனிதர் வாழ்க்கை முழுமையும் கற்கவேண்டும், கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்' என்பது பரமஹம்சரது வாக்கியம். வாழ்க்கை முழுமையும் கற்றுக்கொண்டே இருத்தல் இயலுமா? அது சாத்தியமானதா? என்ற கேள்விகள் மனக் கண் முன்னே எழுகின்றன. 'ஆயிரம் புத்தகங்களை வாசித்தவர் ஒருவர் இருந்தால் அவரைக் காட்டுங்கள் அவரே எனது வழிகாட்டி' என்றார் யூலிய சீஸர். வாசிப்பு வாழ்வின் வழிகாட்டி என்பது அவரின் கருதுகோள். 'உண்மையான வாசகர், வாசிப்பதை முடிப்பதே இல்லை' என்றார் ஆஸ்கார் வைலட் என்னும் அறிஞர். 'பழங்காலத்திய மகா மேதைகளை நேரில் கண்டு, அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்திற்குப் போ...' என்று அறிவுரை வழங்கினார் என்றால் வாசிப்பின் முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது. 'கல்வி வாழ்க்கைக்கு தாயார் படுத்துவதல்ல கல்விதான் வாழ்கை' என்றார் கல்வியியலாளரான யோன் டூயி.

பாடசாலை, பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக்கொண்டதும் பேச்சு, எழுத்து, வாசிப்பு என்பன நின்றுவிடுவதில்லை. அந்தக் கல்வி வாழ்கை முழுமையுமே தொடர்கின்றது என்பதே யாதார்த்தம். வாசித்து விளங்கிக்கொள்ளுதல் என்பது அறிவைப் பெறுவதற்கான முக்கியமான வழிகளில் ஒன்று. இலக்கியக் கல்வியின் முக்கிய பணிகளில் வாசித்து விளங்கிக் கொள்ளுதல் என்பது முதன்மை பெறுகின்றது. இன்று தொழில்நுட்பம், கல்வி மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. வாசித்து விளங்கிக்கொள்ளவதை அதிகரிக்க பல்வேறு தொழில்நுட்பக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கணினித் தொழில்நுட்பம் என்பது மாணவர்களின் படிப்பறிவை மேம்படுத்துவதற்கு பரவலாகப் பயன்படுத்துப்படும் ஒரு வாகனமாகும். ஆரம்ப வகுப்புகளில் உள்ள குழந்தைகளுக்கான பயிற்சி முறைகள் பற்றிப் பல்வேறு வகைப்பட்ட ஆய்வுகள் பல்வேறு அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவுக் கூர்மைசார் படிப்பித்தல் முறை (intelligent tutoring system-ITS) பரவலாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சில பயிற்று முறைகள் ஒருவருக்கு ஒருவரான முறையில் பயிற்றுவதைக் கொண்டுள்ளது.

## வாசிப்பு என்றால் என்ன?

வாசிப்பு என்பது எழுதப்பட்டவற்றைப் புரிந்துகொள்வதாகும். வாசிப்பு என்பது ஒரு சிக்கலான செயற்பாடாகும், வாசித்தல் என்பது பொருள் புரியாமல் வாசிப்பதற்கு மாறாக வாசித்தவற்றை விளங்கிக்கொள்ளுதல் என்னும் கருத்தைப் பிரதிபலிப்பதாகும். வாசிப்பு எப்பொழுதும் சிந்தனையோடு தொடர்புடையதாகவே உள்ளது. வாசிப்பதை விளங்கிக் கொள்ளுதல் என்பது கருத்து மற்றும் சிந்தனை இரண்டையும் உள்ளடக்கியது. வாசிப்பு என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய செயல்முறைகளைக் கொண்டுள்ளது:

- சொல்லை இனங்காணல்.
- பொருளைப் புரிந்துகொள்ளல்.

சொல்லை அறிந்துகொள்ளுதல் என்பது எழுதப்பட்ட குறியீடுகள் அல்லது எழுத்துக்களை வாசித்து, தான் பேசும் மொழியுடன் எவ்வாறு ஒத்துப்போகிறது என்பதை உணரும் செயல்முறையைக் குறிக்கிறது. புரிதல் அல்லது விளங்கிக்கொள்ளுதல் என்பது சொற்கள், வாக்கியங்கள் மற்றும் தொகுத்து எழுதப்பட்டவற்றைப் புரிந்துகொள்ளும் செயல்முறையாகும். வாசகர்கள் பொதுவாக பின்னணி அறிவு, வாக்கியங்கள், பந்திகள் மற்றும் பட்டியல்கள், இலக்கண அறிவு, பேச்சு அனுபவம் மற்றும் எழுதப்பட்ட வாக்கியங்களையோ அன்றி உரையையோ புரிந்துகொள்ள உதவும் பிற உத்திகளை, வாசிக்கப் பயன்படுத்துகின்றனர். ஆங்கிலம் மற்றும் பிற அகரவரிசை மொழிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் வாசிப்பு பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது என ஒரு கருத்துக் கணிப்பு சுட்டிக்காட்டியுள்ளது. வாசித்து விளங்கிக் கொள்ளுதல் என்பது மனிதர் அறிவைப் பெற்றுக்கொள்ளும் ஆரம்பப் படிமுறை எனப்படுகின்றது.

## வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல்:

வாசிக்கக் கற்றுக்கொள்வது ஒரு முக்கியமான கல்வி இலக்கு. குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் ஆகிய எல்லோருக்கும், படிக்கும் திறன் புதிய விடயங்களை அறியும் வாய்ப்புகளையும் தருகின்றது. தெரிந்தவற்றில் இருந்து தெரியாதவற்றை அறிதல் என்பதன் மூலம் புதிய அறிவைப் பெறவும்,



இலக்கியத்தை சுவைக்கவும், நாளிதழ்களைப் படிப்பது, வேலைப் பட்டியல்கள், அறிவுறுத்தல் கையேடுகள், வரைப டங்கள் போன்ற நவீன வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக் கும் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகி றது. பெரும்பாலான மக்கள் தங்கள் சொந்த மொழியில் சிரம மின்றி வாசிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். பெரியவர்கள், குழந்தைகளைப் போல வாசிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். சில குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு வாசிப்பதற்கு மேலதிக உதவி தேவைப்படுகின்றது. இன்னும் சிலர் தங்கள் முதல் மொழியில் வாசிக்கக் கற்றுக் கொண்டோ அல்லது இல்லாமலோ இரண்டாவது, மூன்றாவது அல்லது கூடுதல் மொழியைப் படிக்கக் கற்றுக்கொள்கிறார்கள் என ஆராய்சி கள் வெளிக்காட்டுகின்றன. வாசிப்புத்திறன்கள் பண்பாட்டின் படி, மாணவர்கள் இலக்கியத்திலிருந்து வடிகட்டி எடுக்கப்ப டும் அறிவு உள்ளத்தில் தங்கிவிடவைப்பதே வாசிப்பின் நோக்கமாகும். இதனை ஆரிரியர்கள் அல்லது பயிற்சியாளர் கள் மேற்கொள்ளுகின்றனர். இதனை இன்றைய கணினித் தொழில்நுட்பம் வழியான வாசித்தல் பயிற்சிகளும் தருகின் றன. இவை அதிக தாக்கத்தை உடையனவாக உள்ளன.

கற்றல் செயற்பாடு வாய்மொழித் தொடர்பாடல், வாசிப்பும் கிரகித்தலும், எழுத்து என்பன கற்றலின் முக்கிய அடிப்படை யாகக் கொள்ளப்படுகின்றன. இவை பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. வாசிப்பு முறைக் கான வழிகாட்டல்கள், பல்வேறு வகையாகக் கற்பவர்கள் மற் றும் அவர்களின் தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கல்வித் தத்துவதின் அடிப்படையாகும். ஒரு மொழியில் படிக்கக் கற்றுக்கொள்வதில் இருந்து இரண் டாவது மொழியில் படிக்கக் கற்றுக்கொள்வதற்கு பெரும் பரி மாற்றம் இருப்பதாக ஆய்வுகள் காட்டுகிறன.

குழந்தைகள் மற்றும் பெரியவர்கள், தாய்மொழி பேசுபவர்கள் மற்றும் இரண்டாவது மொழியில் படிக்கக் கற்றுக்கொள்பவர் கள் ஆகியோரின் கற்றல்முறைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள் வாசிப்பின் பல்வேறு படிமுறைகளைக் கையாள்கின்றனர், அவை திட்டமிடல், அறிவுறுத்தல்கள், கருத்தியல் வடிவமைப்பு என்பனவற்றில் முக்கிய இடத்தினை வகிக்கினறன. நடைமுறைப் பயன்பாடுகள் பொதுவான கற் றல் கொள்கைகள் மற்றும் ஆராய்ச்சியை அடிப்படையைக் கொண்டவை. பொதுவாக கற்றல் கோட்பாடுகள் கற்பவரை மனதில் கொண்டு தொடங்குகின்றன. கற்பவரின் வகை, பயன் படுத்தப்படும் முறைகள், கற்கும் விடயங்கள், கற்கும் சூழல் என்பனவற்றின் தாக்கத்தைக் கொண்டிருக்கும். உதாரண மாக, தங்கள் தாய்மொழியிலிருந்து வேறுபட்ட மொழியில் படிக்கக் கற்றுக் கொள்ளும் குழந்தைகள் மற்றும் பெரியவர்க ளுக்கும் கற்றல் கோட்பாடுகள் மாறுபட்டவையாகவும் அமை யலாம். எனவே கற்றல் என்பது அவர்கள் வாழும் சூழல் மட்டு மல்ல அவர்களது குடும்பப்பின்னணி, கலாசாரம் என்பனவும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் கருத்திற்கொள்ள வேண் டும்.

கற்றல் நடத்தை தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படும் இலக்கு, அம்மொழியின் கலாசாரத்தைப் பற்றிய அறிவு, கற்றல் நடத்தை பற்றித் திட்டமிடுவதற்கோ அன்றி ஆய்வுசெய்வ தற்கோ முக்கியமானது. தமிழ் மொழியை எடுத்துக்கொண் டால் தமிழ் பேசுபவர்களின் பண்பாடு கலாசாரப் பின்னணி பிரதேச அடிப்படையில் மாறுபட்டதாக அமையலாம். இலங் கையில் தமிழ் பேசும் சமூகத்தினரிடையே பிரதேச மற்றும் கலாசார வேறுபாடுகள் உள்ளன. அதனடிப்படையில் பேச்சு வழக்கு வாசிப்பில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைய லாம். இதனால் கற்பிப்போர் மாணவர்களது கலாசாரப் பின்ன ணியை அறிந்துகொள்ளவேண்டியது கல்வியின் முன்னேற் றத்திற்கு முக்கியமானது. கனடாவில் தமிழ் மொழியைக் கற்

பிப்பதில் இந்தியத் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் இலங்கைத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இடையேயான பேச்சு வழக்கில் சில வேறுபாடுகளை அவதானித்தல் மிக அவசியமாகும். எடுத்துக்காட்டாக: ஆரம்ப வகுப்பில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், மாணவர்களை 'இருங்கள்' என்று கூறியதை சில மாணர்களால் 'சற்றுப் பொறுங்கள்' என்ற அர்த்தத்திலேயே புரிந்து கொள்ளப்பட்டது. மாறாக உட்காருங்கள் என்றவுடனேயே அவர்கள் இருக்கையில் அமர்ந்துகொண்டார்கள். இவ்வித பேச்சுத்தமிழில் உள்ள வேறுபாடுகளை ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் செல்ல முன்னரே தெரிந்திருத்தல் வேண்டும். இவ்வித சொற்களின் பாவனை தமிழகத்தில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றது. அது இலங்கைத் தமிழில் வேறுபடுவதையும் அதவானிக்க முடிகின்றது. கதைத்தல், பறைதல் என்பன பேசுதுல் என்னும் பொருளையும் கொண்டுள்ளது. ஆனால், தமிழகத்தில் சில பிரதேசங்களில் கதை சொல்லுதல் என்னும் பொருளையும் பறைதல் என்பது பறையறிவித்தல் என்னும் பொருளையும் தருவதாகப் பயன்படுகின்றது.

மொழி கற்பிக்கும் ஒவ்வொருவரும் தங்களிடம் பயில வரும் மாணவர்களின் தனித்தன்மை, ஆளுமை, கலாசாரப் பண்பாட்டு, குடும்பப் பின்னணி, மொழி ஆற்றல் பற்றி அறிந்திருப்பது மிக முக்கியமானது. வகுப்புத் தொடங்குவதற்கு முன்னர் ஒவ்வொரு மாணவர்களைப் பற்றிய ஆய்வினையும் மேற்கொள்ள வேண்டும் என்பது கல்வி உளவியல் கோட்பாடாகும். எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்பதே ஆசிரியர் பயிற்சி சொல்லித்தரும் கற்பிதம் ஆகும். 'ஆறஞ்சு' என்னும் சொல் இலங்கையில் 'தோடம்பழம்' என்பதே வழக்கமாக உள்ளது. சாத்துக்குடி, ஆறஞ்சு என்பது தமிழ்நாட்டின் வழக்கத்தில் உள்ள பதங்களாகும். இவ்விதம் ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் 'கிறிகிட்டுவா' என்பது திரும்பிவா என்பது ஆகும். மறுகா, வாவ்பா, உம்மா, றாத்தா, காக்கா, நானா போன்ற சொற்கள் அவர்களின் தனித்துவமான சொல்லாடல்கள். இவ்விதமாக பேச்சுவழக்கில் உள்ள பெருந்தொகை சொற்களின் புரிதல் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கு அவசியமாகின்றது. கல்வியியல் உளவியலாளர்களின் கூற்றுப்படி ஒரு குழந்தை வீட்டில் பாவிக்கும் சொற்களையே அவர்களின் கற்கை நெறிகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை, பல ஆரம்பு வகுப்பு ஆசிரியர்கள் உள்வாங்கிக் கொள்வதாகவோ அன்றி அதனைப் பின்பற்றுவதாகவோ இல்லை என்று குறிப்பிடுவது பொருத்தமாகும்.

கல்வி மொழிக்கும் தாய் மொழிக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. புலம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு முதலாவது கல்வி மொழி அவர்கள் வழமையாகப் பாடசாலையில் கற்பிக்கப்படும் மொழியைக் குறிப்பதாக அமைந்துவிடும். வீட்டு மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பிக்கும்போது, இரண்டாவது அல்லது வெளிநாட்டு மொழியின் கலாசாரத்தைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டியது முக்கியமானது.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மொழி கற்பித்தலுக்காகத் தயாரிக்கப்படும் நூல்கள் அந்தந்த நாட்டுக் கலாசாரப் பாரம்பரியத்தின் தாக்கத்தையும் அங்கு வழக்கத்தில் உள்ள உயிரினங்கள், வாழ்விடங்கள், பாவனைப் பொருட்கள் என்பனவற்றின் தாக்கத்தையும் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததே. மலேசியாவில் தயாரிக்கப்பட்ட தமிழ் நூலில் அங்கு பாவனையில் உள்ள சொற்களைக் காணமுடிகின்றது. அவ்விதமே தமிழ் நாட்டில் பயன்பாட்டில் உள்ள வழமையான சொற்களின் தாக்கத்தைக் காணமுடிகின்றது. கனடாவில் தயாரிக்கப்படும் பயிற்சி நூல்களில் கனடாவில் மற்றும் சுவிச்சலாந்து, ஜேர்மனி, பெரிய பிரித்தானியா போன்ற நாடுகளில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களிலும் பாடநூல்களிலும் அங்குள்ள விலங்குகள், பறவைகள், பொருட்கள், இடங்களின் பெயர்கள் உள்ளடக்கப்படுவது இயல்பே. இவை தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப மாணவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் மொழிப் பயன்பாடு அமைவது தவிர்க்க முடியாததாகும்.

வாசிப்பு பற்றிய வழிகாட்டல்களில் சமநிலையான அணுகுமுறை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வாசிப்பு என்பது திறமைமிக்க சொல்லாடல் அங்கீகாரம் மற்றும் புரிந்து கொள்ளுதலைச் சார்ந்திருப்பதால், வழிகாட்டல்கள் வாசிப்புத் திறன் மற்றும் உத்திகளை எவ்விதம் வளர்க்க வேண்டும் என்பதை பொருத்தமான நூல்களைப் பயன்படுத்துவதன் மூலம் கற்பவர்களின் வாசிப்புத் திறனையும் சொல்வளப் பயன்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாய்மொழி:
## பேச்சுப்பயிற்சியும் பொருண்மையும்:

வாசிப்பின் ஆரம்ப முன்னேற்றம் வாய்மொழியைப் பொறுத்தது. குழந்தை முதலில் கற்றுக்கொள்வது சைகை மொழியாகும். சிரிப்பு, அழுகை என்பனவற்றால் தங்கள் உணர்வுகளை வெளிக்காட்டுவார்கள். பேச்சு மொழியை அவர்கள் பெற்றோர், உடன்பிறப்புக்கள் மற்றும் தம்மைச் சூழ உள்ளவர்களின் மொழிப் பாவனையில் இருந்து கிரகித்துக் கற்றுக்கொள்கின்றார்கள். குழந்தைகள் கற்றுக்கொள்ளவதன் வழியாக மொழி வளர்ச்சி அவர்களிடம் ஏற்படுவதையும் அது பயன்பாட்டு முறையில் ஏற்படுவதனையும் அவதானிக்க முடியும்.

பொதுவாக அக்கறையுள்ள பெரியவர்களால் வளர்க்கப்படும், வளரும் குழந்தைகள் பேச்சு மற்றும் மொழித் திறன்களை இயல்பாகவும் முயற்சியின்றியும் வளர்க்கிறார்கள். படிக்கக் கற்றுக்கொள்வது என்பது ஒரு வித்தியாசமான செயல்முறையாகும், ஏனெனில் இது பேச்சைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு குறியீட்டு அமைப்பு (எழுத்து) பற்றி அறிந்துகொள்வதை உள்ளடக்கியது. குழந்தைகள் எழுத்து வடிவத்தை பேச்சுடன் இணைக்கக் கற்றுக்கொள்வதற்கு முன், அவர்கள் வாய்மொழியின் சொல்லகராதி, இலக்கணம் மற்றும் ஒலி அமைப்பு ஆகியவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். இவற்றை அவர்கள் பெரியவர்களிடம் இருந்து கற்றுக் கொள்கின்றார்கள். சொற்களின் பொருளை விளங்கிக்கொள்வது சொல்லகராதியாகும். ஒரு குழந்தைக்கு எத்தனை சொற்கள் தெரிந்திருப்பது என்பதே அக்குழந்தையின் சொல் அகராதியாகும். சொற்களைச் சரிவரப் பயன்படுத்துவது இலக்கணத்தின் பாற்படும். இவை இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. சொல்வளம், மொழி இலக்கணம் இரண்டும் இயல்பாக முயன்று, தவறிக் கற்றுக்கொள்ளும் வழியில் பிள்ளை பெரியவர்களால் மீள மீளச் சொல்லிக்கொடுக்கப்பட்டு கற்றுக்கொள்கின்றது.

எனவே இங்கு முதலில் பிள்ளையின் செவிகளில் கேட்கும் ஒலிகளின் தாக்கம் முக்கியம் பெறுகின்றது. ஒலிக்கும் வாய் மொழிக்கும் உள்ள தொடர்பு போன்றே வாசிப்புக்கும் எழுத் துக்கும் உள்ள தொடர்பாகும். ஒலியின் வேறுபாட்டின் அடிப் படையிலேயே எழுத்துகளின் வேறுபாடுகளை குழந்தை அறிந்துகொள்கின்றது.

வாய்வழி சொல்லகராதி மற்றும் ஆரம்ப வாசிப்பு திறன் ஆகி யவற்றுக்கு இடையே, வார்த்தைகளில் உள்ள தனிப்பட்ட ஒலி களைக் கவனிக்கும் திறன் வாசிப்புத் திறனுடன் நெருக்கமாக தொடர்புடைய வாய்மொழித் திறனாகும். ஒலி அலைகள் செவிகளில் படுவதால்தான் பேச்சு ஆற்றல் பிறக்கின்றது. செவிப்புலனற்றவர்களால் பேச முடியாமைக்குக் காரணம் ஒலியை உள்வாங்கிக்கொள்ள முடியாமையேயாகும். மொழி என்பது பேச்சோடு நின்றுவிடாது கேட்டல் என்னும் இன் னொரு கருவியோடும் தொடர்புடையது. செவிவழி உள்வாங் கப்படுபவை வாய்வழியாக தொண்டை, அண்ணம், நாக்கு, மூக்கு என்பனவற்றின் வழியாக வெளியேறும்போது உண்டா கும் ஒலிகளே பேச்சாகப் பரிணமிக்கின்றன. 'குரல் ஒலி' என் பது ஒவ்வொருவரதும் தொண்டைக் குளியில் இருந்து பிரவா கித்து வருகின்றது. ஆனால் இதற்கு முக்கியமானது மூச்சு எனப்படும் காற்றலை. அது உந்தியில் தொடங்குகின்றது என் பது 'தொல்காப்பியப் பாயிரத்தால்' வெளிப்படுகின்றது. மொழியியல் விற்பன்னராக தொல்காப்பியர் இருந்துள்ளார் என்பதனைப் பின்வரும் நூற்பாவால் அறியமுடிகின்றது.

***உந்தி முதலா முந்துவளி தோன்றித்***
***தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்***
***பல்லு மிதழு நாவு மூக்கு***
***மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா***
***னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி***
***யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்***
***பிறப்பி னாக்கம் வேறுவே றியல***
***திறப்படத் தெரியுங் காட்சி யான.***

- தொல். 83

தொப்பிழில் தொடங்கும் பேச்சொலி எங்கெங்கெலாம் தொட் டுச் செல்கின்றது என்பதனை தொல்காப்பியர் 2700 ஆண்டுக ளுக்கு முன்னரே எடுத்தியம்பியிருப்பது வியப்பைத் தருகின் றது. காற்றின் வழியாக ஒலி பிறக்கின்றது. இந்த ஒலியானது தலை, மிடறு, நெஞ்சு, பல்லு, உதடு, நாக்கு, மூக்கு, அண் ணம் ஆகியவற்றின் வழி ஒவ்வொரு எழுத்துக்கும் ஏற்ற ஒலி அலைகளாக வெளிப்படுகின்றன எனப்படுகின்றது. இது நவீன கல்வியியல் ஆய்வாளர்களின் ஒலியியல் பற்றிய கருத் தைக் கொண்டுள்ளமையை அறியமுடிகின்றது.

## பேசப்பழகுதலில் உள்ள நடைமுறை பயன்பாடுகள்: வீட்டில் தொடங்கும் பேச்சுப் பயிற்சி:

பேசத் தொடங்கும் இளம் குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் பிறருடனான தொடர்புகளில் மொழித் திறனை வளர்த்துக் கொள்ளும் சிறந்த இடமாக வீடு உள்ளது. மழலைகளின் மொழி வளர்ச்சியின் தொட்டில் வீடுதான். 'செந்தமிழும் நாப்ப ழக்கம்' என்பது எடுத்த எடுப்பில் பேசுவதாக அமையாது. திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதால் மட்டுமே நாவிற்குப் பயிற்சியைக் கொடுக்க முடியும். இதனால் குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்கின்றார்கள், இங்கு 'முயன்று தவறிக் கற் றல்' என்னும் கொள்கை முக்கியம் பெறுகின்றது. நாம் இள மைக் காலத்தில் கேர்க்கிலிஸ் மன்னன் ஐந்து தடவை முயன்று தோல்வியுற்று ஆறாவது தடவை வெற்றிபெற்று நாட் டைக் கைப்பற்றிய கதையை கற்றிருப்போம். இக்கதை, முயற்சி திருவினையாக்கும் என்பதனை எடுத்துக்காட்டி, விடா முயற்சியே வெற்றிக்கு அடிப்படை என்பதை கற்போரை ஊக்குவிப்பதற்கான காரணியாக முன்வைக்கப்படுகின்றது. தாலாட்டு, சொற்கட்டு என்பனவற்றை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு பெற்றோருக்கு உரியதே.

தாய் தந்தையரோடு உரையாடும் போது குழந்தைகள் மிக உன்னிப்பாகச் செவிமடுப்பதன் வழியாக சொல்வளத்தைப் பெருக்கிக் கெள்கின்றார்கள். முதலில் படங்களைக் காட்டி கதை சொல்லும் பாங்கு, படத்தை வாசித்தல் என்பதாக அமைகின்றது. காட்சிப்படுத்தி வாசித்தல் உள்ளத்தில் பதிந் துவிடுகின்றது. படத்தோடு எழுத்தை அறிந்துகொள்ளும் நிலையையும் படிப்படியாகப் பெற்றுக்கொள்கின்றார்கள். இன்று பெரும்பாலான தாய்மார் பிள்ளைகளைத் தொலைக் காட்சிகளுக்கு முன்னால் விடுத்து தங்கள் பணிகளை செய் கின்றார்கள். இதனால் தாய்மொழிக்குப் பதிலாக தொலைக் காட்சி மொழியை மிக விரைவாக பிள்ளை கற்றுக்கொள்வ தையும் காணமுடிகின்றது. வீட்டில் பெற்றோர் தமிழில் பேசி னாலும் பிள்ளைகள் தொலைக்காட்சியையும் உடன்பிறப்புக் கள் பேசும் மொழி ஆற்றலையும் தமதாக்கிக் கொள்கின்ற னர். இதுபோன்று ரபிலட்ஸ், விளையாட்டுப் புத்தகம், செல்லி டபேசி என்பனவும் பிள்ளைகளின் வாசிப்பைத் தூண்டும் தொழில்நுட்பச் சாதனங்களாகப் பயன்படுகின்றன. 1-3 வய துப் பிள்ளைகள் தாங்களாகவே இவற்றை இயக்கக் கற்றுக் கொண்டு அதில் உள்ளவற்றை பார்த்து கிரகித்துக்கொண்டு அதில் எழுப்பப்படும் ஒலிகளை உள்வாங்குகின்றார்கள். இத னால் பல்வித திறன்களைப் பிள்ளைகள் பெறுகின்றார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

தொழில் நுட்பச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் மொழி யும் வீட்டில் உரையாடப்படும் மொழியும் பிள்ளைகளின் செவிகளில் படுகின்றது. இதனால் அவர்களின் இருமொழிப் பேச்சு வழக்கு வளர்ச்சியடைகின்றது. தாய்மொழியோடு இரண்டாவது மொழியாக தாம் வாழும் நாட்டின் கல்வி மொழி யில் புலமையும் பெறுகின்றார்கள். கதை-சொல்லல் மற்றும் நிகழ்ச்சி-சொல்லுதல் செயற்பாடுகள் மூலம் குழந்தைகள் தங்கள் வாய்மொழியை வளர்த்துக்கொள்ள ஆசிரியர்கள் வாய்ப்புகளை வழங்கலாம். சிறு குழந்தைகள் வாய்வழி மொழியைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்பட வேண்டும். குழந் தைகள் தமக்குக் கிடைக்கும் புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு வாசிப்பதாகப் பாசாங்கு செய்வதை அவதானிக்க முடியும். இவை பேச்சு மொழியின் அடிப்படைகள். பெற்றோர், பிள்ளைகள் விடும் தவறுகளைத் தம்மை அறியாமலே திருத் திக்கொள்ளும் நிலைமையால் மொழி வளம்பெற உதவுகின் றார்கள்.

## வீட்டிலும் பள்ளியிலும்:

பிக் புக்ஸைப் பயன்படுத்தும் மாணவர்களின் குழுக்களுக் குப் பகிரப்பட்ட புத்தக வாசிப்பு என்பது புத்தகங்கள் மற்றும் புத்தகங்களை அறிமுகப்படுத்தும் பயனுள்ள அறிவுறுத்தல் உத்தியாகும். குழந்தைகளுக்கு வாசிப்பது, அதே சமயம் படிக்கப்படுவதைப் பற்றி பேச அவர்களை ஊக்குவிக்கிறது.

வகுப்பின் கட்டளையிடப்பட்ட கதைகள், குழந்தைகளின் வாய்மொழியைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட வாசிப்பு மற்றும் எழுதும் நடவடிக்கைகளில் உதவி செய்கின்றன. உதாரணமாக: குழந்தைகள் தங்கள் சொந்த வார்த்தைகளில் ஒரு கதையைச் சொல்கிறார்கள். ஆசிரியர் இதை குழந்தைக ளுக்காக கரும்பலகையில் எழுதுகிறார். பின்னர் அவர்களின் கதையை அவர்களிடம் மீண்டும் வாசிக்கிறார். மாணவர்கள் மாறி, மாறி கதையைப் படிக்கவும் பயிற்சி செய்கிறார்கள். பழைய மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் இரண்டாவது அல் லது வெளிநாட்டு மொழியில் படிக்க கற்றுக்கொள்வது, இலக்கு மொழியில் திறமையை வளர்ப்பது மிகவும் முக்கிய மானது. இதன் பொருள் மொழியைப் பேசுவதற்கும் பயன்ப டுத்துவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

## வாசிப்புத் திறனும் ஒலியியலும்:

ஒலிப்புப்பற்றிய விழிப்புணர்வு என்பது பேச்சாற்றல் பற்றிய கருத்துப் பரிமாறும் திறனைக் குறிக்கிறது. மொழியின் ஒலி கள் அதன் அர்த்தத்தில் இருந்து வேறுபட்டவை. இருவரின் ஆய்வுகள் அகரவரிசை மற்றும் அகரவரிசை அல்லாத மொழி கள் அந்த ஒலியியலைக் காட்டுகின்றன. விழிப்புணர்வு, வாசிப்பு திறனுடன் மிகவும் தொடர்புடையது. இதற்கு அகரவ ரிசை மொழிகள், ஒலிப்பு விழிப்புணர்வு மிகவும் முக்கியமா னது. ஏனெனில் எழுத்துகள் தனித்தனியாக இருக்கும். ஒலி அலகுகள் கலந்து கொள்ளக்கூடிய அகரவரிசை குழந்தை மொழிகளில் அதிகம்.

பள்ளிப்படிப்பின் ஆரம்ப மற்றும் பிந்தைய ஆண்டுகள் மேலும், வாசிப்பு வழிமுறை மற்றும் ஒலிப்பு விழிப்புணர்வு, பரஸ்பரம் ஒன்றையொன்று வலுப்படுத்துகிறது. ஒலிப்பு விழிப் புணர்வு குழந்தைகளுக்கு அகரவரிசையைக் கண்டறிய உத வுகிறது. அதே நேரத்தில், அகரவரிசை 'ஸ்கிரிப்'டைப் படிக்க கற்றுக்கொள்வதுடன் ஒலிப்பு மற்றும் ஒலிப்பு விழிப்புணர்வை யும் உருவாக்குகிறது. சீனம் போன்ற அகர வரிசையற்ற மொழிகளுக்கு, ஆராய்ச்சி ஒலிப்பு விழிப்புணர்வும் தொடர்பு டையது என்பதைக் காட்டுகிறது. வாசிக்கும் திறன், எழுத்து முறையைப் பொருட்படுத்தாமல், அங்கு தோன்றுகிறது. வாசிப்பதில் உலகளாவிய ஒலியியல் கொள்கை இருக்க வேண்டும். நடைமுறை பயன்பாடு ஒலிப்பு முறையானது ஒலி யின் முறையான கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டது.

முறையான பள்ளிப்படிப்புக்குமுன் வாசிக்கக் கற்றுக்கொண்ட குழந்தைகளுக்கு அத்தகைய அறிவுறுத்தல் தேவையற்றது என்பது உண்மை. ஒலியியல் அறிவுறுத்தலில் இருந்து அதி கம் பயனடைய முடியும். கேட்டமாத்திரத்திலேயே அல்லது கேட்காமலோ ஒலிப்புகளை அடையாளம் காண மாணவர்க ளுக்கு கற்பித்தல் பயனுள்ளதாக இருக்கும். ஆசிரியர்கள் மூலம் மாணவர்களின் ஒலிப்பு திறன்களை வளர்க்க முடியும் என்று கருதப்படுகின்றது.

ஒலியியலைப் பல்வேறு வகையான செயற்பாடுகள், நேரத் தோடு தொடர்புபடுத்தி, வசனம் மற்றும் கவிதை வரைவதற்கு பயன்படுத்தலாம். மொழியில் தனிப்பட்ட ஒலிகளுக்கு குழந் தைகள் கவனம் செலுத்துவார்கள். ஆசிரியர்கள் தனிப்பட்ட எழுத்துகள் மற்றும் ஒலிகளில் கவனம் செலுத்தவேண்டும் என எதிர்பாரக்கப்படுகின்றது.

## புத்தக வாசிப்பு சூழலில் மொழி:

பிள்ளைகளின் இயலுமைக்கு ஏற்ப பொருத்தமான நூல்களை தேர்ந்தெடுத்து கற்பிக்கவேண்டியது கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானது. குழந்தைகளின் தகமை, முன்னறிவு, விருப்பு என்பனவற்றை அறிந்து வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பொருத்தமான நூல்களை வழங்கவேண்டியது கல்வியியலா ளர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். படங்கள் அடங்கிய நூல்களா அல்லது எழுத்துமட்டும் உள்ள நூல்களா அல்லது இரண்டும் கலந்த நூல்களா என்பதை தெரிந்தெடுத்துப் பயன்படுத்தவேண்டும். நூல் நிலையத்தில் பல்வேறு நூல்கள் காணப்படும். அவற்றை பிள்ளைகளே தேர்ந்தெடுக்க வாய்ப் பளிக்க வேண்டும். இன்று கணினி வழியாக வாசிப்பை ஊக் கப்படுத்தும் தொழில்நுட்ப முறைகளை பாடசாலைகள் அதி களவு பயன்படுத்துகின்றன. அவ்விதமே வீடுகளிலும் பாடா லைக்கு முன்னரான காலத்தில் குழந்தைகள் சில தொழில் நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்கின்றார் கள். அவற்றின் வழி வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல் அறிவு விருத்திக்கு தூண்டுகோலாக அமையும்.

## சரளமாக வாசித்தல்:

சரளமான வாசிப்பு துல்லியமாகவும் எளிதாகவும் படிக்கவும் புரிந்துகொள்ளவும் வழிவகுப்பதாகும். சரளமான வாசிப்பு முக்கியமானது, ஏனெனில் அது நெருங்கிய தொடர்புடையது. வாசிப்பதில் சரளமாக இருப்பது என்பது படிக்கக் கூடியது. துல்லியமாக, விரைவாக மற்றும் வெளிப்பாட்டுடன் உரையாட சரளமான வாசகர்களால் முடியும். எனவே வாசிப்பு சொல்லில் தெளிவாக இருப்பதற்கு சொல்வளப் பயன்பாடும் அதற்கான வாசிப்பும் அவசியமாகின்றது.

## சரளமாகப் பேசும் நடைமுறை பயன்பாடுகள்:

வார்த்தை அங்கீகார திறன்களை கற்பிப்பது ஒரு முக்கிய மான முதல் படியாகும். இரண்டாவது படி, மாணவர்கள் வேகத்தை வளர்க்க முடியும் என்பதை உறுதி செய்வது. வார்த்தைகளை அடையாளம் கண்டுகொள்வது மற்றும் இணைக்கப்பட்ட உரையைப் படிப்பது, சரளமாக வாசிப்பதை மதிப்பிட, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களைக் கேட்க வேண்டும்.

சத்தமாக வாசிப்பது. அவர்களின் வாசிப்பு பற்றி, மாணவர்க ளுக்கு கருத்து தெரிவிக்க வேண்டும். அதிக அதிர்வெண் வார்த்தைகளைக் கொண்ட நூல்களைப் படிப்பது, நூல்கள் சுவாரசியமாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தால் சரளமாக பேசுவதை ஊக்குவிக்கும். வாசிப்பை ஊக்குவித்தல், மொழி அறிவை மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் பிள்ளை யைப் பிரகாசிக்கவைக்கும் என்பதைப் பல ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன.

வாசிப்பதாலேயே மனிதர் வாழ்வைப் பெறுகின்றார்கள்.



sivapalu@thaiveedu.com



# தொற்றுநோயும் வரட்சியும் மாரியும்

## பால. சிவகடாட்சம்

'பூத வித்யா' என்பது ஆயுர்வேதத்தின் கிளைகளில் ஒன்று. ஒரு நோய் ஏற்பட்டதற்கான காரணத்தை அறிந்துகொள்ள முடியாத போதும், நோய் ஊரிலே பலருக்கும் தொற்றும் போதும் அந்த நோய் தோன்றியதற்கான பழியைத் தெய்வத்தின் மீதும் கண்ணுக்குத் தெரியாத தீயசக்திகளின் மீதும் சுமத்திவிடும் வழக்கம் முற்காலத்தில் பல்வேறு சமூகங்களிலும் காணப்பட்ட ஒன்றாகும். பண்டைய மருத்துவ நூல்களின் உரையாசிரியர்கள் சிலர் 'பூத வித்யா' என்பது மனநலம் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய கல்வி என்று கருதினார்கள். மற்றும் சிலர் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களால் தோற்றுவிக்கப்படும் நோய்கள் பற்றியது என்றார்கள்.

இத்தகைய நோய்களுக்கான சிகிச்சையில் ஒரு குறிப்பிட்ட தெய்வத்தைச் சமாதானப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சடங்குகளைச் செய்வதும் அடங்கும். இந்தத் தெய்வம் பொதுவாக ஒரு பெண்ணாக இருக்கும் அல்லது இறந்து போன ஒருவரின் ஆவியாகவும் இருக்கலாம். சடங்குகளுக்கு மேலதிகமாகச், சில தேர்ந்தெடுக்கப்பட்ட மூலிகைகள் நோய் மோசமடைவதைத் தடுக்க அல்லது மற்றவர்களுக்குப் பரவாமல் கட்டுப்படுத்தப் பரிந்துரைக்கப்பட்டன. தமிழில் மாரி என்றால் கனமழை என்றும் பொருள். வறட்சி மற்றும் தொற்று நோய்கள் கூடிய வெப்பமான காலங்களில், கிராமவாசிகள் மழைக்காகவும் நோய் தவிர்ப்புக்காகவும் மாரியிடம் பிரார்த்தனை செய்வர்.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பெரியம்மை நோய் பழங்காலத்திலிருந்தே தாய்த் தெய்வத்துடன் தொடர்புடையதாக நம்பப்பட்டது. இந்தப் பெண் தெய்வம் 'மாரி அம்மன்' அல்லது 'மாரியாத்தா' என்று மரியாதையுடன் குறிப்பிடப்படுவதுண்டு. வைசூரி நோய் 'பெரியம்மை' என்றும் பொக்குளிப்பான் 'சின்னம்மை' என்றும் மீசில்ஸ் (measles) 'சின்னமுத்து' என்றும் குறிப்பிடப்படுகிறது. பல்வேறு வகையான ஹெப்படைடிஸ் (Hepatitis) நோய்களுக்கான தமிழ்ப் பெயர்களும் 'மாரி' என்ற பெயரைக் கொண்டுள்ளன. 'செங்கமாரி' (சிவப்புக் கண்கள் கொண்ட செங்கண்மாரி) மற்றும் 'மங்கமாரி' (மஞ்சட்கண் மாரி) என்ற பெயர்கள் ஹெப்படைடிஸின் லேசான மற்றும் கடுமையான வடிவங்களைக் குறிக்கின்றன. கடுமையான வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் காலரா (cholera) நோய்க்கு 'வயிற்றுமாரி' என்று பெயர். கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்றுநோய் 'கோமாரி' என்று பெயர் பெற்றது.

கிராமத்தின் பாதுகாவலராக மாரி கருதப்படுவதால், இந்த அம்மனுக்குக் கோயிலில்லாத கிராமம் தமிழகத்தில் இல்லை எனலாம். மாரி பயபக்தியுடன் மகா மாரி (பெரிய மாரி), கரு மாரி (கருப்பு மாரி) அல்லது முத்து மாரி (தட்டம்மை தெய்வம்) என்று அழைக்கப்படுகிறாள்.

மாரி அம்மன் வழிபாடு, தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் குடிபெயர்ந்து வாழும் பல நாடுகளில் பரவியுள்ளது. இவற்றுள் மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகியவை அடங்கும். சமீபகாலமாக ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் குடிபெயர்ந்து வாழும் வட அமெரிக்காவிலும், மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலும் மாரியம்மன் கோயில்கள் தோன்றியுள்ளன.

ஈழத்தில், குறிப்பாக மட்டக்களப்பில், மாரியின் இடத்தைக் கண்ணகி அம்மன் பிடித்துவிட்டாள். கண்ணகியின் கோபத்தினாலேயே பொக்குளிப்பான், சின்னமுத்து, வயிற்றுக்கடுப்பு, மங்கமாரி, கண் நோய், குக்கல், வெப்பு, பெருஞ்சுரம் போன்ற சூட்டு நோய்கள் பரவுகின்றன என்று மக்கள் நம்புகின்றனர். காளி அம்மனின் அம்சமான கண்ணகியின் பரிவாரப் பேய்கள் எட்டுப்பேர் உள்ளனர் என்றும், அவர்களே இந்த நோய்களுக்குப் பொறுப்பனவர்கள் என்றும் கூறப்படுகிறது.

வெப்பநிலை அதிகமாகும் காலப்பகுதியில் பெண் தெய்வங்களின் கோபத்தைத் தணித்து அவர்களைக் குளிரச் செய்வதற்காகவும் வெப்பத்தினைத் தணிப்பதற்காகவும் 'குளிர்த்தி' என்னும் சடங்குகள் செய்யப்படுகின்றன. குளிர்த்தி பாடி முடிந்தால் வெப்பம் தணிந்துவிடும், மழைபெய்யும் என்னும் நம்பிக்கை மக்களிடையே காணப்படுகின்றது. சடங்குகள் செய்யப்படாதவிடத்து மாரி அம்மன் முத்துக்களை அள்ளியெறிந்து வெப்பு நோய்களைத் தோற்றுவிப்பாள் என்று பாமர மக்கள் நம்புகின்றனர். குளிர்த்திச் சடங்குக் காலங்களில் மக்களுக்கு முக்கனிகளால் தயாரிக்கப்பட்ட 'பாணக்கம்' என்னும் தீர்த்தம் வழங்கப்படுகின்றது. இத்தீர்த்தம் உடற்சூட்டைத் தணித்து உடல் வெப்ப சமநிலையைப் பேணுவதாயுள்ளது. அத்துடன் வேம்பு, கமுகு, தாளை, வாகை, போன்றவற்றால் அலங்கரிக்கப்படும் கோயில் சுற்றாடல் மக்களை வெப்பத்தினால் ஏற்படும் நோய்களிலிருந்து காப்பதற்கான வழிவகையாக உள்ளது.



தென்னிந்தியா மற்றும் இலங்கையின் பல கிராமக் கோயில்களில் மாரியை மகிழ்விக்க சேவல் அல்லது ஆடு பலியிடப்படுகிறது. நகர்ப்புறக் கோயில்களில், அம்மனைச் சாந்தப்படுத்தப் பிரார்த்தனைகள் மற்றும் யாகங்கள் நடத்தப்படுகின்றன.

வேப்பிலை, மஞ்சள் மற்றும் கற்பூரம் ஆகியவை மாரியம்மன் சடங்குகளுடன் தொடர்புடைய மிக முக்கியமான பொருட்கள். இந்தப் பொருட்களையும், சிறப்பு மேளங்களிலிருந்து வெளிப்படும் சிறப்பியல்பு ஒலிகளையும் வைத்து மாரியம்மன் கோயில்களை எளிதில் அடையாளம் காணலாம். பூசாரி தேவியின் சிலையை இளநீர், பால், தயிர் மற்றும் தண்ணீர் போன்ற பொருட்களால் குளிப்பாட்டித் தினசரிச் சடங்கைத் தொடங்குகிறார். வேப்பிலை அல்லது எலுமிச்சைப் பழங்களின் மாலைகளால் மாரியம்மன் அலங்கரிக்கப்படுகின்றாள். வேப்பிலை, மஞ்சள், கர்ப்பூரம் என்பன பீடையழிப்பு மற்றும் கிருமிநாசினிக் குணங்கள் கொண்டவை என்பதை இவ்விடத்தில் நினைவுகூரலாம்.

தலையில் கற்பூரச்சட்டியேந்தி ஊர்வலத்தில் பெண் பக்தர்கள் கலந்துகொள்வதும், ஆண் பக்தர்கள் சுவாமியின் பின்னால் தரையில் உருளுவதும் சாதாரணமாகக் காணக்கூடிய ஒரு காட்சி. குறைந்தது ஒன்று அல்லது இரண்டு பக்தர்கள் தெய்வத்தால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கலையாடுவதும் அருள்வாக்குக் கூறுவதும் இங்கு காணக்கூடிய ஒரு பொதுவான நிகழ்வாகும்.

ஆண் பக்தர்கள் உடலைத் துளைத்தல், காவடி சுமத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். சில சமயங்களில் காவடி சுமப்போர் ஆணிக் கொக்கிகளால் பின்புறத் தோலில் துளையிட்டுத் துலா போன்ற ஒன்றில் தொங்கவிடும் துலாக்குக் காவடியும் காணப்படலாம். தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளும் இத்தகைய செயல் பொதுவாக நேர்த்திக் கடனை நிறைவேற்றும் வண்ணம் செய்யப்படுகின்றன.

தமிழகத்தின் மாரியம்மனைச் சுற்றியுள்ள நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் வட இந்தியாவின் பெரியம்மைத் தெய்வமான சீதளாதேவியுடன் வியக்கத்தக்க வகையில் ஒத்திருக்கின்றன. சீதளாவும் ஒரு கிராமத் தெய்வமாகும். சீதளம் என்பது குளிர்ச்சியைக் குறிக்கும் ஒரு சொல் என்பது கவனத்தில் கொள்ளவேண்டியது. சீதளாதேவி பாவிகளைப் பெரியம்மை நோயால் தண்டிப்பதாகவும், அத்தகைய நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதாகவும் வணங்கப்படுகிறாள் (பாபாகிரகி மிஸ்ரா, 1969). சீதளாவின் கோயில்களின் அர்ச்சகர்கள் பிராமணர்கள் அல்லர்.

பண்டைய நாட்களில் சீதளதேவி கோயில்களில் பெரியம்மை வைரஸுக்கெதிராக ஒரு வகையான தடுப்பூசி போடப்பட்டது என்பதை நிரூபிக்கப் போதுமான சான்றுகள் உள்ளன. பெரும்பாலும் கோயில் பூசாரியே தடுப்பூசி போட்டுக் கொள்வார்.

பதினேழாம் நூற்றாண்டில் ‘திக்கா’ எனப்படும் ஒருவகை அம்மைப்பால் குத்தும் நோய்த்தடுப்பு முறை (variolation) வங்காள தேசத்தில் நடைமுறையிலிருந்ததாக ஆங்கிலேயரின் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. பிராமணர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் நெடுங்காலமாக இந்த அம்மைப் பால் குத்தும் முறையைச் செய்துவந்துள்ளனர். பெரியம்மை முதிர்ச்சியடைந்திருக்கும் ஒருவரது கொப்பளத்திலிருந்து சிறிதளவு சீழ் எடுத்து அதில் இரும்பு ஊசி ஒன்றின் முனையை நனைப்பார்கள். இவ்வாறு நனைக்கப்பட்ட ஊசியைத் தோள்மூட்டுத் தசையின் கீழ் அல்லது நெற்றியில் கீறியபின் வேகவைத்த அரிசியால் செய்யப்பட்ட ஒரு சிறிய பசையால் அப்பகுதியை மூடுவார்கள். இதுவே பெரியம்மைக்கான இந்தியரின் பாரம்பரியத் தடுப்பூசியாகும்.

1798-ம் ஆண்டில், பிரான்ஸ் நாட்டவரான மருத்துவர் எட்வர்ட் ஜென்னர் என்பார் மாட்டம்மையில் (cowpox) இருந்து பெறப்

பட்ட தடுப்பூசி பெரியம்மையிலிருந்து பாதுகாக்கிறது என்ப தைக் கண்டுபிடித்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தியாவில் ஜென்னரின் மாட்டம்மைத் தடுப்பூசி அறிமுகப் படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1802-03-ஆம் ஆண்டில் இந்தியரின் பாரம்பரிய தடுப்பூசி நடைமுறையை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்தது. பாரம்பரிய தடுப்பூசி முறையைப் பயன்படுத்திவந்த பிராமண வகுப்பினரின் கடுமையான எதிர்ப்பைச் சமாளிக்க அவர்களையே ஐரோப்பிய தடுப்பூசி யைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் முயற்சிகளில் பிரித்தானிய மருத்துவரான டாக்டர் ஷூல்பிரெட் (Dr.shoolbred) என்பார் வெற்றி பெற்றார்

சீதளா என்ற பெயர் தென்னிந்தியாவில் அறியப்படவில்லை. பண்டைய தமிழகத்தில் சில பழங்குடியினர் கொற்றவை மற் றும் அவரது மகன் முருகன் பெயரில் போர்த்தெய்வத்தை வழி பட்டனர். கொற்றவையைப் பேய்கள் சூழ்ந்து நிற்பதாகவும் அவர்கள் கற்பித்தனர். சங்ககாலத்தில் திருவாலங்காட்டில் பிரசித்தி பெற்ற கொற்றவைக் கோயிலொன்று இருந்தது. பேய்களே கண்டு நடுங்கும் சர்வவல்லமை படைத்த தெய்வ மாகத் திருவாலங்காட்டுக் காளி திகழ்ந்தாள்.




*'எல்லம் வல் எல்லா*
*பெரும் காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'*

என்று, எல்லாம் வல்ல பெரும் காட்டுக் காளியையே நொடி சொல்லி மடக்க நினைக்கும் ஒரு பேயின் மடத்தனம் பற்றிப் பேசுகின்றது சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை (பாடல் 89).

பிற்காலத்தில் கொற்றவை பிராமண தெய்வமான உமாவின் அம்சமாகவும் முருகன் சிவபெருமானின் மகனான கார்த்தி-கேயன் ஆகவும் அடையாளம் காணப்பட்டனர். கொற்றவை யின் பிற்கால வடிவமே மாரியம்மன் என்பது அறிஞர்கள் சில ரின் கருத்தாகவுள்ளது. தமிழகம் மற்றும் இலங்கையிலுள்ள பொது மக்கள் பொதுவாக மாரியம்மனை சிவபெருமானின் மனைவியும், கார்த்திகேயரின் தாயுமான உமாதேவியுடன் அடையாளம் காண்கின்றனர்.

தமிழ் மக்களின் கிராம தெய்வமான 'மாரி'யைக் கிறிஸ்தவக் 'கன்னி மேரி'யுடன் அடையாளம் காண உறுதியான ஆதாரங் கள் எதுவுமில்லை என்றாலும், பெயர்களின் ஒற்றுமை ஒரு தற் செயல் நிகழ்வு என்று நிராகரிக்க முடியாது. தென்னிந்தியா வில் மாரியின் பொதுவான பெயர்களிலொன்று கன்னியம்மன் அல்லது கண்ணி அம்மன். ஆச்சரியப்படும் விதமாக, இந்தப் பெயரை நேரடியாகக் கன்னித்தாய் அல்லது பெரிய கண்கள் கொண்ட தாய் என்று மொழிபெயர்க்கலாம்.

பண்டைய தமிழர்களின் போர்க் கடவுளான கொற்றவை வழி பாடு, வட இந்தியாவின் பெரியம்மைத் தெய்வமான சீதளா-தேவி வழிபாடு, பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்க ளால் அறிமுகப்படுத்தப்பட்ட கன்னி மேரி வழிபாடு ஆகி யவை, கிராமத்தின் கொடியவர்களைத் தொற்று நோய்களால் தண்டித்தும் பக்தர்களை அந்நோய்களிலிருந்து காத்தும் நிற் கும் தாய்த்தெய்வமான மாரியம்மன் வழிபாட்டுடன் இலகுவில் இணைந்திருக்கலாம்.

தாய்த்தெய்வ வழிபாடு அல்லது 'சாக்தம்' என்பது இந்து மதத்தின் ஆறு பண்டைய மதப் பிரிவுகளிலொன்றாகும். தத் துரீதியாக அவள் ஆதிசக்தி அல்லது பராசக்தி என்று அழைக்கப்படுகிறாள். தென்னிந்தியாவில் உள்ளூர்மயமாக் கப்பட்ட மாரிவழிபாட்டைப் போலல்லாமல், சக்தி வழிபாடு சமீபத்தில் உலகம் முழுவதும் ஒரு பிரபலமான வழிபாட்டு முறையாகப் பரவியுள்ளது. இருப்பினும், மாரியம்மனின் சின் னங்களான வேப்பிலை, மஞ்சள் மற்றும் சிவப்பு ஆடைகள் இந்த வழிபாட்டின் ஒரு பகுதியாக மாறிவிட்டன.

மற்ற மாரியம்மன் கோயில்களில் இல்லாத வகையில் மேல்ம ருவத்தூரிலுள்ள கோயிலில் பெண்கள் பூஜை செய்ய அனும திக்கப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் சடங்குக ளில் பங்கேற்கும்போது சிவப்பு ஆடைகளை அணியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேல்மருவத்தூரின் மறைந்த பூசாரி இந்த வழிபாட்டைப் பின்பற்றுபவர்களால் அன்னை யின் அவதாரம் என்று நம்பப்படுகிறார்.



Sivakadadcham@thaiveedu.com



# முதியவர்களும் விபத்துகளும்

– குமார் புனிதவேல்

இன்று கனடாவில் பல முதியவர்கள் சிறு விபத்துகளில் அகப்பட்டுப், பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். இதனால் பலர் இறப்பதும் உண்டு. தப்பியவர்களும் பல வருடங்களுக்கு நடமாட முடியாத துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இந்த நிலையில், இது போன்ற விபத்துகளைத் தவிர்ப்பது எப்படியெனச் சிந்துப்பது முக்கியமாகிறது. இக்கட்டுரையின் கருத்துகள் அனைவருக்கும் பொருந்தும் என்றாலும் அறுபது வயதைத் தாண்டியவர்கள் இதனைச் சிரத்தையுடன் வாசிக்க வேண்டும்.

- ஒரு போதும் கதிரை அல்லது வாங்கு போன்றவற்றில் ஏறி, உயரத்திலுள்ள பொருளை எடுக்க முயலாதீர்கள். அதைத் தவிர்ப்பது தான் உசிதம்.
- பனி பெய்யும் நாட்கள் அல்லது மழை பெய்யும் நாட்களில் வெளியே செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். எக்காரணம் கொண்டும் பொருட்களைச் சுமந்துகொண்டு, வெளியே செல்ல வேண்டாம். வேண்டுமானால், தவிர்க்க முடியாத வேளையில் ஒரு கைத்தடியுடன் வெளியே செல்லுங்கள்.
- குளியலறை அல்லது மலசலகூடங்களில் குறிப்பாகக் கவனமாய் இருங்கள். பலரும் தாம் குளிக்கும் போது முதலில் தலையை நனைப்பதுண்டு. அது மிகத்தவறான விடயம். காலடியிலிருந்து மெதுவாகக் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பு முழுவதையும் நனைத்த பின்னரே, தலையை நனையுங்கள். அல்லாவிடின் தலைசுற்றி விழுத்திவிடும் சந்தர்ப்பம் அதிகம்.
- குளித்தபின், குளியலறைத் தரை நனைந்துள்ள வேளையில், குளியலறையிலிருந்த வண்ணம் உடைமாற்ற முயற்சிக்க வேண்டாம். குறிப்பாக உள்ளாடை அணிவதற்குச் சுவரைப் பிடித்துக்கொண்டு முயற்சிக்க வேண்டாம். அறைக்குத் திரும்பி வந்து கட்டிலில் அமர்ந்து, ஆடை மாற்றுவதைச் செய்யுங்கள்.
- படுக்கைக்கு செல்லும் முன், தரையிலுள்ள உதிரிப் பொருட்களை விலக்கித் துப்பரவாக வைத்திருங்கள். மேலும் தரை ஈரமாயில்லாதிருப்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். இதன்மூலம் அர்த்த இராத்திரியில் அரை நித்திரையில் தடக்கி விழுவதைப் போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.
- இரவில் விழித்தால் அல்லது காலையில் விழித்தெழுந்தால் திடீரென்று எழுந்து நிற்காதீர்கள். மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் அமர்ந்திருந்துவிட்டு, வெளிச்சமாய் இல்லாவிட்டால் மின்விளக்கை ஏற்றிவிட்டு எழுந்து நடவுங்கள்.
- இரவில் மலசல கூடம், குளியலறை முதலானவற்றுக்குச் செல்கையில் இயன்றவரை உள்ளே பூட்டிக்கொள்ள வேண்டாம். முடியுமானால் ஓர் அவசர அழைப்பு மணியை உள்ளே வைத்திருங்கள். தடக்கி விழுந்தாலும் எடுத்து அழுத்தக்கூடிய இடத்தில் மணியிருப்பது அவசியம்.
- முதியவர்கள் ஆடை மாற்றும் வேளைகளில், கட்டிலிலோ அல்லது நல்ல கதிரையிலிருந்து ஆடை மாற்றுவதற்குப் பழகிக் கொள்ளுங்கள்.
- தவறி விழ நேரிட்டால், முயன்று கையை நிலத்தில் அழுத்திக்கொண்டு விழ முயற்சியுங்கள். நிச்சயமாகக் கழுத்து முறிவு அல்லது இடுப்பு முறிவினை விடவும் கை முறிவினைக் குணப்படுத்துவது எளிதாகும். மேலும் கழுத்து அல்லது தலை அடிபடுதல் மரணத்திலும் முடியலாம்.
- தேகப்பியாசம் செய்யப் பழகிக் கொள்ளுங்கள். குறைந்தது நாளாந்தம் அரைமணி நேரமாவது நடவுங்கள். அது உங்கள் உடலைத் தொடர்ந்து வலுவுடன் இருக்க உதவும்.
- எடை ஒரு முக்கியபங்கை உங்கள் வாழ்க்கையில் கொண்டுள்ளது. உங்கள் உடலுக்கு இரத்தத்தைச் செலுத்தும் இதயமும், தேவையான பிராணவாயுவைப் பெற்றுத்தரும் சுவாசப்பையும் பழையனவாகிக்கொண்டு போகிறதை அறிவீர்கள். எனவே, அவற்றின் வேலையைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். அளவோடு உணவு உண்டு, போதிய தேகப் பயிற்சியும் செய்து வந்தால் உடல் எடை கூடாமல் கட்டுப் பாட்டுடன் வைப்பதுடன், விழுவதையும் தவிர்க்கலாம். மேலும் அந்நிலையில், விழுந்தாலும் இழப்புக் குறைவாயிருக்கும்.



kumar.punithavel@thaiveedu.com

# வீட்டை உயர்ந்த விலைக்கு விற்பது எப்படி?

– வேலா. சுப்ரமணியம்

நீங்கள் விற்கும் வீட்டிற்கு மிக உச்சமான விலை கிடைக்க வேண்டுமானால் அதற்கான தயார்படுத்தலில் நீங்கள் நிச்சயம் கவனம் எடுத்தேயாகவேண்டும். உங்கள் வெற்றி எவ்வாறு வீட்டைத் தயாரிக்கிறீர்கள்? என்பதில் தான் தங்கியுள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில் இக்கட்டுரையில் முக்கியமான சில உபாயங்களை அடையாளப்படுத்த விரும்புகிறேன்.

### சரியான விற்பனை முகவரைத் தெரிதல்:

நீங்கள் அதிஷ்டசாலியாகவும் விவேகமானவராயும் இருந்தால் ஓர் அனுபவமுள்ள திறமைமிக்க வீடு விற்பனை முகவரைத் தெரிவு செய்வதில் கவனம் எடுப்பீர்கள். இதன் மூலம் பல பயன்பாடுகளை அடைய முடியும். உங்கள் வீட்டைத் தனது விடாகவே நினைத்துச் செயற்படக்கூடிய அக்கறைமிக்க விற்பனை முகவர்கள் வீடு விற்பனைக்குரிய எல்லா விதப் படிமுறைகளிலும் உதவமுடியும். அந்தவகையில் அத்தகைய ஒருவர் தரக்கூடிய பட்டியல் ஒன்றைப் பெற்றுக் கொண்டு செயற்படுவது இலகுவானது. அல்லது நீங்கள் ஒரு வீடுவாங்குபவராக மாறி அத்தகையோர் எதிர்பாற்பவற்றை இனங்கண்டு செயற்பட வேண்டியிருக்கும். இதனை விடுத்துத் தொலைபேசியில் அழைத்தால் 'Mailbox Full' அல்லது 'Mailbox' தயார் நிலையில் இல்லை என்ற தகவலைத் தரக்கூடிய வீடு விற்பனை முகவர்களையும் எந்தவிதத் துறைசார் அனுபவமுமற்ற வீடு விற்பனை முகவர்களையும் உங்களது நண்பர்கள் அல்லது உறவினர்கள் என்ற பந்தத்தில் அமர்த்திக் கொள்வதால் கஷ்டம் உங்களுக்கே என்பதை உணர்ந்து கொள்வீர்களானால் அதுவே உங்களது வெற்றியின் முதற்படி.

### அடைசல்களை அகற்றுதல் (De–cluttering):

வீட்டைத் தேவையற்ற பொருட்களால் நிரப்பி வைத்திருப்பது தவிர்க்கப்படவேண்டும். வாசல் நிறைய சப்பாத்துகளும். சமையலறையில் பல இடங்களில் காகிதக் கட்டுகளும் கால் வைக்கும் இடங்களெல்லாம் அலங்காரப் பொருட்களும் பாவனையிலில்லாத கழிவுப் பொருட்கள் பரவியிருப்பதும் வீடு வாங்குபவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயத்தைக் கொடுக்க மாட்டாது.

### பாரிய தளபாடங்கள்:

நீங்கள் நல்ல விலைக்கு விற்கமுற்படுவது உங்களது வீட்டையும் அதன் இடங்களையுமே (Space) தவிர, உங்கள் தளபாடங்களையல்ல. வடிவானவை அல்லது உண்மையான மரத்திலானவை என்ற எண்ணத்தில் வீடு முழுவதையும் தளபாடங்களினால் நிரப்பி வைப்பது தவறானது. உங்கள் வீட்டிலுள்ள இடங்களுக்கும் அறைகளுக்கும் ஏற்றவகையில் அளவான, சிறிய தளபாடங்களை வைத்துக்கொண்டு மிகுதியை எங்காவது களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

### சுத்தம் செய்தல்:

வீடுகளில் இயல்பாகவே எல்லா இடங்களிலும் தூசு படிந்திருக்கும். குறிப்பாகத் தீயறை (Fire Place) யன்னல்கள், Baseboard, மின்விசிறிகளுக்குரிய Net, Heating Register, Air Intake Nets இவையெல்லா இடமும் தூசு படிமானங்கள் இருக்கும். அவற்றை ஒரு தடவை நன்றாகச் சுத்தம் செய்தல் அவசியமானது.

அத்துடன் கறைபடிந்த அடுப்புகள் அழுக்காக இருக்கக்கூடிய குளியலறைகள். மேலும் கண்ணுக்குத் தெரியக்கூடிய அழுக்குகள் யாவும் சுத்தம் செய்யப்பட வேண்டும். வீடு வாங்க வருபவரின் மனநிலையில் எவ்வகையிலும் சுத்தமின்மை காரணமாக அதிருப்தி ஏற்படாதவகையில் பார்த்துக் கொள்ளல் வேண்டும். ஒரு தடவை சுத்தம் செய்பவர்களை வேலைக்கமர்த்திச் சுத்தம் செய்வது சாலச்சிறந்தது.

### துர்நாற்றத்தில் கவனம் எடுத்தல்:

வீட்டில் எந்த இடத்திலாவது இயற்கைக்கு மாறான மணமிருப்பதை உணர்ந்து கொண்டால் அதில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும். குளியலறைகள், நிலக்கீழ் அறைகள் சிலவேளை வித்தியாசமான மணத்தைத் தருமானால் அவற்றை நீக்க நட

வடிக்கை எடுக்க வேண்டும். சில வீடுகளின் உள்ளே இலே சான GAS மணம் இருப்பதைக் கூடப் பல இடங்களில் அவ தானிக்கக் கூடியதாக இருந்தது.

முக்கியமாக எம்மவர்களது சமையல் மணம் பலருக்கும் இடைஞ்சல் தரக்கூடியது. வீடு விற்பதற்காகக் காட்சிப்படுத் தல் தொடங்கும் காலத்திலிருந்து வீடு விற்கும் வரை பொது வாகச் சமையலை, பொரித்தலைத் தவிர்ப்பது மிகவும் நல் லது.

### வர்ணப் பூச்சுகள் (Painting):

உங்களைப் பொறுத்தவரை, கடும் நிறங்களில் நீங்களோ உங்கள் குடும்ப அங்கத்தவரோ விருப்புடையவராக இருந்தி ருக்கலாம். ஆனால், அத்தகைய கடும் நிறங்களை விரும்பக் கூடிய வீடு வாங்குபவர்களின் தொகை மிக அரிதாகவே காணப்படுகின்றது. பொதுவாக எல்லோரையும் கவரக்கூடிய மெல்லிய நிறங்களில் (Neutral Colour) சுவர்களுக்குப் பூச்சு செய்தல் மிக நன்மை பயக்கும்.

### தனிப்பட்ட பிரத்தியேகப் பொருட்கள்: (Personal Items)

உங்கள் சொந்தப் படங்களும் வெற்றிச் சின்னங்களும், கேட யங்களும், உங்கள் வீட்டில் உங்களுக்குப் புத்துணர்வையும் மகிழ்வையும் தந்திருக்கலாம். ஆனால் கொள்வனவாளர்கள் வீட்டைப் பார்வையிடுகின்ற போது தங்கள் படங்களையும் பிறபொருட்களையும் குறிப்பிட்ட இடங்களில் வைத்தால் எப்ப டியிருக்கும் எனக் கற்பனை செய்து பார்ப்பதற்கு இவை இடையூறாக அமையும். எனவே பிரத்தியேகமான பொருட்கள் யாவும் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.

### வெளிச்சம் ஊட்டல்:

யன்னல்களை முற்றாகத் திறந்து விட்டு எவ்வளவு இயற்கை வெளிச்சத்தை உள்வாங்க முடியுமோ அவ்வளவிற்கு உட் கொண்டு வருதல் நல்லது. கடும் நிறங்களில் பாரியளவிலி ருக்கும் திரைச் சேலைகளை அகற்றி விடுதல் நல்லது.

சேமிப்பிற்காக மங்கலான Watts குறைந்த மின் விளக்குக ளைப் பொருத்தியிருப்பீர்கள். ஆனால் இப்போது வீட்டை விற்பனை செய்கின்றபோது அவற்றைமாற்றி மிக்க வெளிச் சம் தரவல்ல மின் விளக்குகளைப் போட வேண்டியது அவசி யமானது. பிரகாசமான வீட்டுக் கொள்வனவாளர்களின் மனதி லும் பிரகாசத்தை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

### Organize your Closet:

ஒரு வீட்டில் எத்தனை Closet இருந்தாலும் அத்தனையும் உடுப்புகளால் நிரம்பி வழிவது இயல்பானது. போதாதற்கு பெட்டிகளிலும் பைகளிலும்கூட மூட்டை மூட்டையாக உடுப்பு கள் இருக்கும். அவற்றை வீடு வாங்குபவர்கள் கண்டால் தங் களுக்கும் இதே கதிதான் என்று எதிர்மறையான எண்ணங் கொள்ள நேரிடும். எனவே ஒவ்வொருவருக்கும் அவசியமாகத் தேவைப்படக்கூடிய 5 தொகுதிகளை மட்டும் வைத்துக் கொண்டு Closety மேலதிக இடம் இருப்பதைக் காட்சிப்படுத்



தல் வேண்டும். அத்துடன் மேலதிக உடுப்புகளைப் பெட்டிக ளில் போட்டு வீடு விற்கும் வரை களஞ்சியப்படுத்தலாம்.

### சிறு சிறு திருத்தங்கள்:

நீங்கள் பலகாலமாகச் செய்ய வேண்டும் என்று நினைத்து நினைத்து மறந்து போன பல சிறு வேலைகள் நிலுவையாக இருக்கும். அவற்றைப் பட்டியலிட்டு இம்முறையாவது செய்து முடியுங்கள். உதாரணமாகக் குளியலறையிலும் சமையலறை யிலும் குழாய்களிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருக் கும் கதவுக் குமிழ்கள் கைபிடிகள் ஆடிய வண்ணம் இருக் கும். சுட்ட மின்குமிழை மாற்ற மறந்திருப்பீர்கள். தளபாடம் சமப்படுத்தப்படாததால் ஆடிக்கொண்டிருக்கும், ஒரு சிறிய இடத்தில் நிறப்பூச்சுச் செய்ய வேண்டியிருக்கும். இவ்வாறு நீங்களே செய்யக்கூடிய சில வேலைகளைச் செய்து முடித் தல் நல்ல பலனைத் தரும்.

### திருத்த வேலைகள், தரமுயர்த்தல்:

பழைய வீடுகளைச் சந்தைப்படுத்தும் போது சில திருத்த வேலைகளைச் செய்தல் சாலச் சிறந்தது. ஒரு வீட்டின் விற்ப னையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியில் ஒன்று சமைய லறை. இரண்டாவது காரணி சிலருக்குக் குளியலறை, வேறு சிலருக்கு Family Room. எனவே இத்தகைய இடங்களில் கவ னஞ் செலுத்துவது நன்மை தரும். சமையலறையில் மேற் தட்டு (counter வழி) Faucet, அலுமாரிகளுக்குரிய கதவுகள், கை பிடிகள், மின்விளக்குகள் காலாவதி ஆகியிருக்கும் வாய்ப்புள்ளது. எனவே அவற்றுக்குச் சிறுதொகைப் பணத் தைச் செலவு செய்வதன் மூலம் அதிக பணத்தை ஈட்ட வாய்ப் புள்ளது.

திருத்த வேலையென இறங்கி அதிக அளவிலான பணத் தைக் கொட்டினால் செலவழித்த பணம் முழுவதையும் விற்ப



னையின் மூலம் மீட்டெடுக்க முடியுமா? என்ற கேள்வியும் உள்ளது. எனவே எது பயன்தரவல்லது, எதைத் தவிர்க்கலாம் என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். இந்த இடத்தில் ஒரு அனுபவமுள்ளவரை நாடுதல் மிகப் பொருத்த மானதாக இருக்கும்.

## ஒவ்வொரு அறைக்கும் உரிய பயன்பாட்டை உறுதி செய்தல்:

பொதுவாக வீடுகள் கட்டப்படும்போது ஒவ்வொரு அறையும் ஒவ்வொரு பயன்பாட்டிற்கு ஏற்றவாறே கட்டப்பட்டிருக்கும். ஆனால் எங்கள் வசதிக்கேற்ப அல்லது எங்களிடமுள்ள தள பாடத்திற்கேற்பச் சாப்பாட்டறையை Family Room-ஆக மாற்றியிருப்போம் அல்லது அலுவலகத்திற்காக அமைக்கப்பட்ட அறையைப் படுக்கையறையாக மாற்றியிருப்போம். ஆனால், ஒரு வீட்டை விற்கும்போது எந்த அறை எந்தத் தேவைக்குப் பொருத்தமானதோ அதற்கேற்பவே காட்சிப்படுத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் குழப்பமடையும் கொள்வனவாளர்களினால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும்.

## குளியலறைகள்:

வீடு வாங்குபவர்கள் குளியலறையைப் பார்க்கின்றபோது அவை இதமான சௌகரியத்தைக் கொடுக்கக் கூடிய விதத்தில் ஆடம்பரமாக இருப்பது போல் காட்சிப்படுத்தப்படுவது நல்ல பலனைத் தரக்கூடியது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் சிலவேளைகளில் குளியலறைகூட விற்பனையைத் தீர்மானிக்கும் காரணியாக அமையலாம். எனவே சிறு சிறு தரமுயர்த்தல் செய்வது பொருத்தமான அலங்காரப் பொருட்களை வைப்பது, 'நறுமணம்' ஊட்ட வழிசெய்வது என்பன சிபாரிசு செய்யக்கூடியவை. குறிப்பாக உள்ளே செல்லும் போது ஒரு 'SPA'-க்குள் நுழைவது போன்ற உணர்வு ஏற்படும் விதத்தில் சில யுக்திகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

## வரவேற்பறை:

வரவேற்பறையைக் குடும்ப அங்கத்தவர்களும் விருந்தாளியாக வருபவர்களும் கூடியிருந்து குலாவக்கூடிய மைய இடமாக அமையும் விதத்தில் ஏற்ற தளபாடங்களையும் அலங்காரப் பொருட்களையும் போட்டுத் தயார் செய்தல் வேண்டும். விருந்தாளிகள் போல உங்கள் வீட்டுக்குள் பிரவேசிக்கும் கொள்வனவாளர்களுக்கு இது ஒரு நல்ல மனநிலையை ஏற்படுத்த வழிவகுக்கும்.

## இயற்கைச் செடிகள், மரங்கள்:

மிகச் சிறியளவில் இடத்திற்குப் பொருத்தமான விதத்தில் சாடிகளில் வைக்கக்கூடிய சில தாவரங்களைக் காட்சிப்படுத்தல் நல்லது. வீட்டிற்குள் இயற்கை வளங்களை உள்வாங்க முற்படுகிறீர்கள் என்பதுடன் அத்தகைய அழகான இயற்கைச் செடிகளிலும், பூமரங்களிலும் தமது மனதைப் பறி கொடுக்காத மனிதர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். அந்த வகையில் உங்கள் வீட்டைப் பார்வையிடவரும் கொள்வனவாளர்களும் விதிவிலக்கல்ல.

## உணர்வூட்டும் வாசனை:

வீட்டிற்குள் நுழையும்போது வாங்கோ வாங்கோ என்று கூறாமல் கூறுவது போல மெல்லிய இதமான நறுமணம் உண்டாகும் விதத்தில் வரவேற்பறை இருத்தல் வேண்டும். பலவிதப்

பொருட்கள் சந்தையில் இதற்காக உண்டு. குறிப்பாக வீட்டின் நடுப்பகுதியில் 'Baked Cookies'-ஐ வைத்தால் அது எல்லோரையும் சமையலறையுடன் தானாகவே இணைத்துவிடும். சில வீட்டுரிமையாளர்கள் வீடு விற்கும் காலத்தில் இதன் பொருட்டு தினமும் Cookies Bake செய்வதும் உண்டு.

### கழிப்பறை இருக்கை:

வீட்டைக் காட்சிப்படுத்தும் போதும் படங்கள் எடுக்கின்ற போதும் Toilet Seat மூடப்பட்டிருத்தல் வேண்டும். இது ஒரு சிறிய யுத்தி என்றாலும், அளப்பெரிய அனுகூலம் இருப்பதாகக் கணிப்பிடப்படுகிறது.

### முக்கிய இடங்களை முதன்மைப்படுத்தல்: (Highlight Focal Points)

ஒவ்வொரு வீட்டின் அமைப்பிலும் சில சிறப்பம்சங்கள் இருக்கும். அவற்றை முதன்மைப்படுத்தும் வகையிலும் துல்லியமாக வருவோரின் கவனத்தை உள்வாங்கும் விதத்திலும் சில ஒழுங்குகளையோ அழகுபடுத்தலையோ செய்வது மிக அவசியம். வீடுகளில் இயல்பான சிறப்பம்சங்கள் இல்லாவிட்டாலும் சில இடங்களைச் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்வதன் மூலம் பார்ப்போர் கவனம் திசைதிருப்பப்படுதல், சில வீடுகளுக்கும் சந்தைப்படுத்தலுக்கும் மிக அவசியமாகின்றது.

### வீட்டை அலங்காரப்படுத்தல் (Staging):

ஒரு வீட்டைச் சந்தைப்படுத்தலிலும், உச்சளவிலான விலையைப் பெறவைத்தலிலும், குறுகிய காலத்தில் விற்க வைத்தலிலும் வீட்டின் அலங்காரம் முதலிடம் பெறுகின்றது. திறமையும் விவேகமும் உள்ள வீட்டுரிமையாளர்கள் தாமாகவே வீட்டை அலங்கரிக்கலாம். ஆனால் அதே துறையில் அனுபவம் உள்ளவர்கள் அதனைச் செய்வதில் அதிக பயன் பெற வாய்ப்புண்டு. வீட்டலங்காரத்திற்காக ஒரு கம்பனியையோ, தனியாரையோ அமர்த்துகின்றபோது, அவர்கள் வீட்டிற்கு ஏற்ற விதத்தில் தளபாடங்களைக் கொண்டுவந்து அத்துடன் வீட்டிற்குப் பொருத்தமான அலாங்காரப் பொருட்களையும் போட்டுத் தொழில்ரீதியாக அலங்கரிக்கின்றபோது, அதில் பாரிய வேறுபாடிருக்கின்றது. இதற்கெனச் சில ஆயிரங்களைச் செலவிட நேர்ந்தாலும் கூட, இதன் மூலம் பல ஆயிரங்களை மேலதிகமாகப் பெறலாம் என்பது எனது எண்ணம். குறிப்பாகக் கடந்த ஆண்டு நான் சந்தைப்படுத்திய வீடுகளில் 95%-க்கு மேற்பட்டவை குறிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு விற்கப்பட்டமைக்கும் 0-2 வாரத்திற்குள் விலைப்பட்டமைக்கும் வீட்டின் அலங்காரமும் ஒரு காரணம் என்பது நான் அனுபவத்தில் கண்ட உண்மை. அழகுபடுத்தல் என்பது ஒருகலை அதனை உரியவர்கள் செய்தால் தான் அழகாகவும் இருக்கும். அதிகபலனும் கிடைக்கும்.

### படங்கள், Virtual Tour:

காலத்திற்கேற்றபடி செயற்படுதல் என்பது இங்கும் மிகத் தேவையான ஒன்று. முன்பிருந்த காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய சந்தைப்படுத்தலில் கணினியின் பங்கு மிக முக்கியமாக உள்ளது. வீடு வங்குபவர்கள் சகல விபரங்களையும் கணினியின் ஊடாகப் பார்த்து, பின்னரே தங்கள் தெரிவுகளைச் செய்தபின் நிச்சயப்படுத்திக் கொள்ள நேரில் வீட்டைப் பார்க்க செல்கிறார்கள். வார்த்தைகளைவிடப் படங்கள் ஆயிரம் கதைகள் சொல்லவல்லவை. அந்த வகையில் ஒரு வீட்டைச் சந்தைப்படுத்துகின்றபோது எடுக்கப்படும் நேர்த்தியான படங்களும், மாய வலமும் (Virtual tour) மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. நேரே பார்ப்பதைவிட முறையாக எடுக்கப்பட்ட Virtual tour-கள் மிக அழகாகவும், அதே வேளை ஒரு வீட்டை நேரில் பார்ப்பதற்கு உந்து சக்தியைக் கொடுப்பனவாகவும் இருப்பதை நான் எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

### சந்தைப்படுத்தல்:

பொதுவாக ஒருபொருளின் விலை என்பது அது காட்சிப்படுத்தப்படும் விதத்திலும், சந்தைப்படுத்தப்படும் விதத்திலுமே தங்கியுள்ளது. வீடு விற்பனையில் தனியாக MLS Listing-ஐ மட்டும் நம்பியிருப்பது பழைய முறைமை. அது எல்லா வேளையிலும் உயரிய பலனைத்தராது. தற்போது சந்தைப்படுத்தலில் சமூக வலைத்தளங்களும், ஊடகங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. எனது அனுபவத்தில் கடந்த வருடம் மிசிசாகாவிலிருந்த ஒரு குடும்பம் Ajax-ல் நான் போட்ட வீட்டை வாங்குவதற்கு Face Book-உம், Youtube-உம் காரணமாக இருந்தது என்பது மறக்கமுடியாத உண்மை.

நிறைவாகப் பார்க்கின்றபோது சுமார் 21 முக்கிய பொது அம்சங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். மேலும் மேலும் இதனை விரித்துக் கூறிக்கொண்டே போகலாம். இவற்றுள் பலதும் பலருக்கும் பொருந்தலாம். உங்களுக்குப் பொருத்தமற்றதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாகக் கூறுவதனால் வீடுகள் விற்கும் போது வீட்டுரிமையாளர்களின் வெற்றி என்பது சரியானதைச் சரியான நேரத்தில் செய்வது என்பதிலேயே தங்கியுள்ளது. அதிலும் குறிப்பாகக் கூறுவதானால் நீங்கள் சரியான விற்பனை முகவரைத் தெரிவு செய்வதன் மூலம் உங்களுக்குரிய வெற்றியை நிச்சயப்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில், உங்கள் பொறுப்புகளில் பெரும்பாலானவை அவரிடம் கையளிக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட 21 அம்சங்களில் பெரும்பாலானவற்றை ஒரு சரியான விற்பனை முகவர் தானே பார்த்துக்கொள்வார். நண்பர், உறவினர் என்ற நிலை கடந்து விவேகமாக நடந்து கொள்ளும் வீட்டுரிமையாளர்கள் இத்தெரிவில் பாரிய வெற்றி பெறுவார்கள்.

குறைந்த கொமிசனுக்கு போவது சரியானதா என்று கேள்வி எழலாம்? விற்பனை முகவரினால், உங்கள் வீடு சரியான வழிமுறைகளைக் கையாண்டு உச்சவிலைக்கு விற்கப்படுகின்ற போது, உண்மையில் விற்பனைக் கொமிசன் முழுவதும் வீடு வாங்குபவரிடம் மறைமுகமாகத் தள்ளப்படுவது மட்டுமன்றி, மேலதிக இலாபமும் உங்களுக்குக் கிடைக்கின்றது. நீங்கள் குறைந்த கமிசன் மூலம் சேமிப்பதைவிட, உங்கள் இழப்பு அதிகமானது என்பது ஆழமாகச் சிந்தித்தால் புரியும்.



velasubramaniam@thaiveedu.com




ஒருவர் தாம் வாழும் காலத்திலேயே, இன்னொருவருக்கு குறிப்பாக பிள்ளைகளுக்கு, நெருங்கிய உறவுகளுக்குச் சொத்தைக் கொடுப்பதை குடும்பச் சொத்துரிமை மாற்றம் என்று கூறுவார்கள். இச்செயலால் கொடுப்பவருக்கும் வரிச்ச லுகைகள் கிடைக்கும். எந்த அளவு சொத்துகளை உரிமை மாற்றம் செய்வது, எவ்வாறு அதனைச் செய்வது என்பன ஒவ் வொரு செயற்பாட்டுக்கும் வேறுபடும். பல வழிகளில் இச்செ யற்பாடு முன்னெடுக்கப்படும். உதாரணத்திற்கு, நீங்கள் ஒவ் வொரு மாதமும் அல்லது ஆண்டுக்கு ஒரு முறை குறிப்பிட்ட தொகையை கொடுக்கக்கூடிய வசதி உள்ளதைக் குறிப்பிட லாம். இப்படியாக பல திட்டங்களை நீங்கள் இச்செயற்பாட் டின் கீழ் முன்னெடுக்கலாம்.

வாழும்போதே சொத்துரிமையை மாற்றம் செய்து வழங்குவது தற்போது கனடாவில் பெரிதும் விரும்பப்பட்டு செயற்படுத்தப் படுகிறது. இதன்மூலம் கிடைக்கும் செல்வமானது, வீடு வாங் குவதற்கான முதல் நிலைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு பிள்ளைகளுக்கு பெரிதும் பயன்படுகிறது. கனடாவில் வீடு வாங்கும் 40 சதவீதத்துக்கும் அதிகமான 18 முதல் 38 வய துக்கு இடைப்பட்டோர் இத்தகைய உதவியை பெற்றுள்ளார் கள். இப்படியான வளங்கள் $40,000-இற்கும் கூடிய பெறுமதி உடையனவாக உள்ளன.

உதாரணமாக: இன்றைய சராசரி வீட்டு விலை $800,000 ஆக உள்ளது. இதனுடன் சில இலட்சங்களைக் கூட்டினால் பெருந கரங்களின் வீட்டு விலையை எட்டலாம். நீங்கள் வீடு வாங்கிய காலத்தையும் விட, உங்கள் பிள்ளைகளுக்கு வீடு வாங்கு வது கடினமாயுள்ளது. தம் பிள்ளைகள் துன்புறுவதை எந்தப் பெற்றோராலும் பார்த்துக் கொண்டிருப்பது கடினமாகும். முன்பெல்லாம் தம்மைவிட தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என, பணத்தை மீதம் செய்து பிள்ளைகளுக்கு விட்டுச் செல்வதில் உறுதியாக இருந்தனர். தாம் இறந்தபின் அப்பிள்ளைகள் தம்மை நினைத்து நன்றியுடன் எண்ணி மகிழ் வதை விரும்பினார்கள்.

எனினும் ஒருவர், தாம் வாழும் காலத்திலேயே பிள்ளைகள் மகிழ்வுடன் இருப்பதைக் கண்டு ஏன் இன்புறக் கூடாது? குறிப்பாக உங்கள் குழந்தைகள் தமக்கு என்று ஒரு வீட்டை வாங்கி பெருமையுடன் வாழ்வதைப் பார்த்துக்கொண்டு, அந்த மகிழ்சியுடன் கண்மூடுவது சிறப்பு அல்லவா? உங்கள் நிதி உதவி இல்லாமல் அவர்களால் சொந்தமாக வாங்க முடி யாமல் அப்பிள்ளைகள் தவிக்கவும் கூடும். ஒரு திடமான ஒய் வூதியத் திட்டத்துடன் வாழ்கின்ற முதியோர்கள், தாம் வாழும் போதே தம் குழந்தைகள் சொத்துரிமை பெற்று மகிழ்வதை காண விரும்புகிறார்கள். ஆனால், இன்னும் பல பெற்றோர் அறியாமையால் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை என்பதும் உண்மையே.

இன்னும் ஒரு போக்கு என்னவென்றால், பல முதியவர்கள் Reverse Mortage எனும் மாறுபட்ட அடமானத்தைப் பெற்று, ஆரோக்கியமாய் இருக்கும் போதே, வாழ்க்கையை அனுப விக்கத் தலைப்படுகிறார்கள். அப்படிப் பெறக்கூடிய தொகை யில் தாமும் அனுபவித்துக் கொண்டு தங்கள் பிள்ளைகளுக் கும் கொடுப்பதனால் வீட்டையும் அனுபவித்துக் கொண்டு அனைவரும் மகிழ்ச்சியாய் இருக்கலாம்.

வாழும்பொழுது தரப்படும் சொத்துரிமைப் பணத்துக்கு வரி வசூலிக்கப்படுமா? என்ற கேள்வியும் எழுவதுண்டு. கனடிய சட்டத்தின்படி குடும்பச் சொத்துரிமையில் பெறும் செல்வம் ஆனது, பரிசு அல்லது கொடையாக கணிக்கப்படும். கனடிய சட்டத்தின்படி பரிசுப் பொருட்களுக்கும் நன்கொடைப் பொருள்களுக்கும் வரி வசூலிப்பதில்லை. எனவே, வாழும் பொழுது பெறப்பட்ட குடும்பச் சொத்துரிமைச் செல்வத்திற்கு வரி வசூலிக்கப்பட மாட்டாது. இன்னும் தெளிவாக கூறுவதா னால், உங்கள் வரிப்பத்திரங்களைத் தாக்கல் செய்கையில் குடும்பச் சொத்துரிமை வரவுகளை அதில் உள்ளடக்கத் தேவை இல்லை.

எனினும் பின்வரும் ஒரு சில சந்தர்ப்பங்களில், வாழும்போது பெற்ற குடும்பச் சொத்துரிமைக்கு வரி விதிக்கப்படலாம்:

- வருவாய் தரும் செல்வம்: நீங்கள் குடும்பச் சொத்துரிமை யால் பெற்ற செல்வமானது, வருவாய் (வாடகை போன்றன)



அல்லது ஆதாயம் தருமானால் அந்த வருவாயை வரிப்பத் திரத்தில் அறிவிக்க வேண்டும். குடும்பச் சொத்துரிமை யாக பெற்ற செல்வத்தை அறிவிக்கத் தேவை இல்லை. இது வாழும்போது பெற்ற குடும்பச் சொத்துரிமைச் செல் வத்திற்கும் இறந்த பின் பெற்ற குடும்பச் சொத்துரிமைக் கும் ஆதாயம் தாராதவிடத்தில் பொருந்தும்.

- வீடு அல்லது காணி போன்றவை கைமாறுவதை மூலதன கைமாற்றம் என்பார்கள். இது அடுத்த தலைமுறைக்கு கொடுக்கும் முன் வரி வருவாய் ஏதும் இருப்பின் கடைசி யாக கையளிக்க முன் ஈடு செய்ய வேண்டும். இதனால் பெறுபவர் பெறும்தொகையில் கணிசமான தொகை மீளப் பெறப்படலாம். வாழும்போதே பலரும் அந்த கையளிப்பு செய்வதால் கழிப்பு இடம்பெறாது. இதில் ஒரு குறைபாடு உள்ளது. பெற்றுக் கொண்டவர் அதை விற்க முற்படும் வேளையில், பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்கான வரியை கொடுக்க வேண்டும்.

பாரம்பரிய வழக்கத்தினைப் பின்பற்றும் பெற்றோர், தம் மர ணத்தின் பின்னர் சொத்துகளை பிள்ளைகள் பெற்றுக்கொள் ளட்டும் எனும் கொள்கை உடையவராய் இருப்பர். மேலும், எல்லாவற்றையும் பிள்ளைகளுக்கு கொடுத்துவிட்டு பொருள் இல்லாது மற்றவர் தயவில் வாழ்வது எப்படி என்று கூறுபவ ரும் உண்டு. அதை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை, வாழும் போது வாரிசுவிற்கு கொடுப்பதன் பலனையும் சற்று கவனிப்போம்.

- சிறு தொகையை முன்னரே பிள்ளைகளுக்கு கொடுப்ப தால், அதை அவர்கள் கையாண்டு சொத்து சார் அனுப வத்தைப் பெறுவார்கள். மரபுவழியாகக் கொடுக்கும் பெருந்தொகைச் செல்வத்தை கொடுப்பதற்கு முன்னரே, ஒரு அளவான தொகையைக் கொடுத்து அவர்களை தக்க வழியில் நடக்கச் செய்வதால், நீங்கள் இல்லாத வேளையி லும் அப்பிள்ளைகள் சிறப்பாக செயற்படுவர். அனுபவத் தைப் போல் சிறந்த குரு யாருமே இல்லை.
- இவ்வாறு செய்வதால் வாரிசுகள் இடையே வாக்குவாதமும் பிளவுகளும் ஏற்படுவதை தவிர்க்கலாம். உங்களது முடி வுக்கான காரண விளக்கங்களை வாரிசுகளுக்கு விளங்கப் படுத்தி, அவர்களுக்கிடையில் மனஸ்தாபமும் வெறுப்பும் வராது பார்த்துக் கொள்ளலாம்.
- வாழும்பொழுது பகிரப்படும் குடும்பச் சொத்துகள் நன் கொடையாக கருதப்படும். அவற்றிற்கு கனடிய சட்டப்படி வரி அறவிடப்படாது. இதில் கவனிக்கவேண்டியது மரபுவழி வரும் சொத்திற்கு வரி அறவிடப்படாவிடினும், சொத்தின் பெறுமதி கூடுமிடத்து, முன் அறவிடப்படும் வரியிலும் குறைந்த வருவாயில் உள்ள வாரிசுகள் குறைந்த அளவு வரி மட்டும் செலுத்துவார்கள்.

அதேவேளை, இந்த வழியில் கிடைக்கும் செல்வத்தை அடுத்த தலைமுறையினர் எவ்வளவு பொறுப்புடன் அனுப விப்பார்கள் என்பதும் கவனிக்க வேண்டிய விடயமேயாகும். செல்வமே சிலரைக் கெடுத்து தவறான வழியில் செல்லத் தூண்டலாம். எனவே எடுக்கும் முடிவு சிறப்பாக அமைவ தற்கு, ஒரு நல்ல நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசித்து சிறப்பான முடிவை எடுக்க வேண்டும்.



senthuran.p@thaiveedu.com




வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில் அவ்வப்போது செய்திகள் எழுந்த வண்ணமே காணப்படுகின்றன. அநேகமான சந்தர்ப்பங்களில் வேற்றுக்கிரகவாசிகள், பறக்கும் தட்டுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அமெரிக்காவை மையமாகக் கொண்ட தகவல்களே வெளியாகின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் 'உண்மையில் பறக்கும் தட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ?அவை தென்பட்டனவா ?' என்பது தொடர்பில் உண்மையை அம்பலப்படுத்தக்கூடிய அதிகாரபூர்வ நிறுவனமாக அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் காணப்படுகின்றது. உலகின் பலம் பொருந்திய நாடுகளில் முன்னணி வகிக்கும் அமெரிக்கா, பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் அதியுச்ச முக்கியத்துவம் வழங்கி வருகின்றது. எனவே, வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் பறக்கும் தட்டுகள் தொடர்பில் பென்டகனின் கருத்து அல்லது நிலைப்பாடு, முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், பறக்கும் தட்டுகள் பற்றியோ அல்லது வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பிலோ இதுவரையில் ஆதார பூர்வமான தகவல்கள் எவையும் கிடையாது எனப் பென்டகன் தகவல் வெளியிட்டுள்ளது. உண்மையில் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான தகவல்களை அமெரிக்கா மூடி மறைப்பதாக நீண்டகாலமாகவே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. எனினும், எவ்வித ஆதாரங்களையும் மறைக்கவில்லையென அமெரிக்கா அதிகாரபூர்வமாக அண்மையில் அறிவித்திருந்தது.

1945-ம் ஆண்டு முதல் அடையாளம் காணப்படா வான்பொருட்கள் மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. எனினும், இந்தத் தகவல்களின் உண்மைத்தன்மை தொடர்பில் எவ்வித சாட்சியங்களும் கிடையாவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட அனேக பறக்கும் பொருட்கள் சாதாரண பொருட்கள் எனவும் இது ஒரு தோற்ற நிகழ்வு எனவும் பிழையாக இவை அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் பென்டகன் ஊடகச் செயலாளர் மேஜர் ஜெனரல் பெட் ரைடர் (Maj. Gen. Pat Ryder) தெரிவித்துள்ளார்.

1940-ம் ஆண்டு முதல் 1960-ம் ஆண்டு வரையில் குறிப்பாகத் தொழில்நுட்பம் சார் துறையில் அமெரிக்கா அதிக வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. இரண்டாம் உலகப்போர், பனிப்போர் ஆகியன இடம்பெற்ற காலப்பகுதிகளில் பரீட்சார்த்தத் தொழில்நுட்ப முயற்சிகள் அதிகளவில் காணப்பட்டன. 1945-ம் ஆண்டு முதல் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் வகைப்படுத்தப்பட்ட, வகைப்படுத்தப்படாத பல்வேறு தகவல்களை ஆய்வுக்குட்படுத்தி 63 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் புலனாய்வுப் பிரிவு என்பனவற்றின் பங்களிப்புடன் 30-க்கும் மேற்பட்ட நேர்காணல்களுடன் அடையாளம் காணப்படாத பறக்கும் பொருட்கள் தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, அது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

காலத்திற்கு காலம் அடையாளம் காணப்பட்ட வான் பொருட்கள் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்ற போதிலும் இவை எதுவுமே இதுவரையில் மெய்யான சாட்சியங்கள் அடிப்படையிலானவை அல்லவென, அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். குறிப்பாக வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பில், மெய்யான ஆதாரங்கள் எதுவும் இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2021-ம் ஆண்டு அமெரிக்க அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் விமானங்கள் அல்லது சாதனங்கள் வானில் மர்மமான முறையில் மர்மமான வேகத்தில் பறக்கும் சந்தர்ப்பங்கள் பற்றிப் பதிவாகியிருந்தன. பொதுவாக, இவை வேற்றுக்கிரகவாசிகளுடன் தொடர்புடையவையென ஊகங்கள் வெளியிடப்பட்டிருந்தன. எனினும் இவ்வாறு அடையாளம் காணப்பட்ட வான் பொருட்கள் தொடர்பிலான இறுதி முடிவாக எதனையும் தீர்க்கமான அடிப்படையில் வெளிப்படுத்த முடியாதென, அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் விரிவான தகவல்களைத் திரட்டி அதன் அடிப்படையிலேயே தீர்க்கமான முடிவுகளை வெளியிட முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் ஓய்வுபெற்ற விமானப்படைப் புலனாய்வு அதிகாரி டேவிட் கிரிஷ் அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் சாட்சியமளித்திருந்தார். அடையாளம் காணப்படா

வான் பொருட்கள் அல்லது அடையாளம் தெரியா, பறக்கும் உருவங்கள் தொடர்பில் அவர் சில விபரங்களை வெளியிட்டிருந்தமை இந்த வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான பேச்சு மீண்டும் எழுவதற்கு ஏதுவாக அமைந்தது. அமெரிக்க அரசாங்கம் வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் பறக்கும் தட்டுகள் தொடர்பான பல்வேறு தகவல்களை இரகசியமாகப் பேணி வருவதாகவும் வெளியுலகிற்கு இவற்றை அம்பலப்படுத்துவதனைத் தவிர்த்து வருவதாகவும் குறித்த முன்னாள் அதிகாரி தெரிவித்திருந்தார். எனினும் இந்தத் தகவலை அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் முற்றுமுழுதாக நிராகரித்திருந்தது. கடந்த 2022-ம் ஆண்டு வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் பறக்கும் தட்டுகள் தொடர்பில் கண்டறிவதற்கான விசேட பிரிவொன்றைப் பென்டகன் நிறுவியிருந்தது. இது தொடர்பிலான நூற்றுக்கணக்கான விபரங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை எதுவும் வேற்றுக்கிரகவாசிகளின் இருப்பு தொடர்பிலான ஆதாரபூர்வச் சாட்சியங்களாகப் பதிவாகவில்லை எனப் பென்டகன் தெரிவித்துள்ளது. அமெரிக்க அரசாங்கம் அல்லது அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவுகள் பறக்கும் தட்டுகளையும், வேற்றுகிரகவாசிகளின் உடலங்களையும் மீட்டுள்ளதாகவும் அவை இரகசிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுவான கருத்து நீடித்து வருகின்றது எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த இரகசிய முயற்சிகளை அமெரிக்கப் பொதுமக்களிடமிருந்தும், காங்கிரஸ் சபையிடமிருந்தும் மூடி மறைப்பதற்கு 1940-களில் இருந்தே நடவடிக்கை எடுக்கப்படுவதாக வதந்திகள் நிலவியபோதும், இந்தக் கருத்துகளில் எவ்வித உண்மையும் கிடையாது எனப், பென்டகன் நிராகரித்துள்ளது.

1940 மற்றும் 1950-களில் பறக்கும் தட்டுகள் தோற்ற நிகழ்வாகக் காணப்பட்டதாக அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் நூலகத்தில் குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும், 1950 மற்றும் 1960-களில் அமெரிக்காவின் நவீன இராணுவப் பரிசோதனைகள், விண்வெளி ஆய்வு முனைப்புகளே, அடையாளம் காணப்படாத வான்பொருட்களாகக் கருதப்பட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அடையாளம் தெரியா வான்பொருட்கள் தென்பட்டதாகக் கூறப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில், இரகசிய இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது.

1946-ம் ஆண்டில் நியூ மெக்ஸிக்கோவின் ரோஸ்வெல் பகுதியில் வேற்றுக்கிரகவாசிகளின் விண்கலமொன்று தென்பட்டதாகக் கூறப்பட்டது. எனினும், இது உண்மையில் அமெரிக்காவின் இரகசிய ஆய்வு பலூன் எனவும் இதற்கு 'ப்ரோஜெக்ட் மோகுல்' எனப் பெயரிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பல்வேறு திரைப்படங்களில் இந்தப் பறக்கும் தட்டுகள், வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய கதைக் கருக்களைக் கொண்ட திரைக்கதைகள் உருவாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 1956-ம் ஆண்டில் வெளியான Earth vs. the Flying Saucers என்ற திரைப்படத்தின் சுவரொட்டிகளில் இந்தப் பறக்கும் தட்டுகள் பற்றிய பீதியைக் கிளப்பும் வகையிலான படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஸ்டார் வோர்ஸ், ஏலியன், பிளைட் ஒப் தி நெவிகேட்டர் மற்றும் பிரெடெட்டர் போன்ற திரைப்படங்களிலும் வேற்றுக்கிரகவாசிகள், பறக்கும் தட்டுகள் குறித்த காட்சிகள் காணப்படுகின்றன.

வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் அடையாளங் காணப்படாத வான் பொருட்கள் தொடர்பில் அநேகமான மக்களின் நிலைப்பாடானது கடந்த கால அனுபவங்கள், அவர்களினால் நம்பப்படும் மற்றவர்களின் அனுபவங்கள், நம்பகமான ஊடகங்கள் என மக்கள் கருதும் ஊடகங்களின் தகவல்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. அதாவது ஊகங்களின் அடிப்படையிலான கருதுகோள்களாகவே



இந்த வேற்றுக்கிரகவாசிகள் குறித்த விடயங்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றதே தவிர, அடிப்படை ஆதாரங்களைக் கொண்டமைந்தவையல்ல. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நூல்கள், இணைய மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றின் தகவல்களே வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் அடையாளங் காணப்படாத வான் பொருட்கள் பற்றிய மக்களின் நம்பிக்கையில் வலுவான தாக்கத்தைச் செலுத்துகின்றன.

உலகின் ஏனைய நாடுகளில் இல்லாதளவிற்கு வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பிலான ஆர்வமும் அதுசார் புனைவுகளும் அமெரிக்காவில் வேரூன்றிப் போயுள்ளது. இவ்வாறான ஒரு பின்புலத்திலேயே, இவ்விடயம் தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்கள் எவையும் கிடையாதெனப் 'பென்டன்' அறிவித்திருக்கின்றது. இந்த அண்டவெளியில் பூமியைத் தவிர்ந்த வேறு கிரகங்களில் உயிரினங்கள் காணப்படுகின்றதா? அவ்வாறான உயிரினங்கள் பூமிக்கு வந்து செல்கின்றனவா? முதலான விடயங்கள் குறித்துக் கண்டறிவதற்கான ஆய்வு முனைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இவை தொடர்பிலான தீர்க்கமான விஞ்ஞான ரீதியான முடிவுகள் வெளியிடப்படும் வரையில்
காத்திருப்போம்.



jeyaseelan.s@thaiveedu.com




ஊடகசுதந்திர சாசனம் (declaration of windhoek) என்ற ஒன்றைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? அது ஆபிரிக்க பத்திரிகையாளர்களால் கூட்டாக 1991-ம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதியில் முன்வைக்கப்பட்டது. அதே ஆண்டில் யுனெஸ்கோ (UNESCO) பொதுக்கூட்டத்தின் 26-ம் அமர்வில் இதுகுறித்த தொனிப்பொருள் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 'உலகின் சகல பிராந்தியங்களிற்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கானதும் ஊடக சுதந்திரத்திற்கானதும் பாதுகாப்பிற்கும் மேம்படுத்தலுக்குமான ஆணை' என்பதே அந்த தொனிப்பொருள். இதனடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாகவே, இந்த பத்திரிகைச் சுதந்திர சாசனம் ஏற்படுத்தப்பட்டது.

இது நடந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்தன. 1993-ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கியநாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் மே மாதம் மூன்றாம் திகதி 'உலக ஊடக சுதந்திர நாள் (world press freedom day)' என அறிவிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரத்தை பரப்பும் நோக்கில் மனித உரிமைகள் சாசனப் பகுதி 19-ல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை அனைத்து நாடுகளின் அரசுகளுக்கும் நினைவூட்டுவதற்காகவே இந்த அறிவிப்பு நிகழ்ந்தது.

உலக பத்திரிகைச் சுதந்திர நாளானது ஊடக சுதந்திரம், பத்திரிகையாளர் பாதுகாப்பு, நம்பகத்தன்மை உள்ளிட்ட பல்வேறு நலன்களை வலியுறுத்தும் தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது வழங்கப்பட்டுள்ள பத்திரிகை சுதந்திரம் எத்தகையது, உண்மைகளை வெளியிடுவதில் பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை போன்றவற்றை இந்தத் தினம் விளக்குகின்றது. தங்கள் கடமைகளை செய்யும்போது உயிரிழக்கும் ஊடகவியலாளர்களை கௌரவிக்கவும் பொதுமக்களுக்கு தகவல்களை பரப்பும் பணியில் ஈடுபடும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரம் குறித்த உரையாடல்களை நிகழ்த்தவும் இந்தத் தினம் பயன்படுகின்றது.

பிற்காலத்தில், பல நாடுகளிலும் தனியார் நிறுவனங்கள் பத்திரிகைகளைப் பிரசுரித்து வாசகர்களை திருப்திப்படுத்தின. இதன் காரணமாக அரசாங்கங்கள் பத்திரிகைச் சுதந்திரம் அளிக்கவேண்டிய நிலைமை உருவாகியது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலானவை வளர்ச்சி அடையாத அந்த காலத்தில் பத்திரிகையை அச்சுக்கோத்து வெளியிட இயலவில்லை. அச்சுஇயந்திரக்கூடத்தில் (printing press) எழுத்துகள் செதுக்கிய மரத்துண்டுகள் மூலம் அச்சடித்து வெளியிட்டனர். இவ்வழிமுறையே சில நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்து இடம்பெற்றதாக அறியமுடிகிறது. ஐரோப்பாவைப் பொறுத்தவரை கிறிஸ்தவ மக்களின் புனித நகரங்களில் ஒன்றான ரோமாபுரியை (ROME) வதிவிடமாகக்கொண்ட எழுத்தாளர்கள், நிருபர்கள், கவிஞர்கள் போன்றவர்கள் தமது ஆக்கங்களை பத்திரிகையில்தான் பிரசுரித்து வந்தனர். தொடர் கதைகள், கேலிச்சித்திரங்கள்கூட (cartoons) வெகு ரம்மியமான முறையில் வெளிவந்தன. வர்த்தகர்களின் நலன்கருதி விளம்பரப் பக்கமும் பிரத்தியேகமாக வெளிவந்தது என்றும் சொல்கின்றனர்.

பத்திரிகையின் விலை அதிகமாக இருந்ததால் கணிசமானவர்களால் வாங்கிப் படிக்க முடியவில்லை. 1833-ல் மிகவும் குறைந்த விலைக்கு பத்திரிகை பிரசுரமாகி வெளிவரத்தொடங்கியது. இதற்கு 'சன்' (SUN) என பெயர் சூட்டப்பட்டது. அதன் பின்னரே, வாசகர்களின் எண்ணிக்கை பல மடங்கானது. ஐக்கிய இராச்சியத்தில் ஒருவரே பல பத்திரிகைகளை அனேகமான ஊர்களில் வெளியிட்டுவந்த பழக்கம் இருந்தது. அவற்றை சங்கிலிப் பத்திரிகைகள் என்பர். அதேவேளை ஒரு ஊரில் பிரசுரமாகும் பத்திரிகையை, வேறு நகரங்களுக்கும் அதே செய்திகளோடு அச்சிடும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பொ.ஆ.பி.1476-ல் இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவர் அச்சு இயந்திரத்தைக் கண்டறிந்தார். கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப முனைந்த மேலை நாட்டினர் இந்தியாவில் அதை பொ.ஆ.பி. 1550-ல் அறிமுகம் செய்து வைத்தனர். அதன்பின், 1622-ம் ஆண்டில் முதல் செய்தி இதழாக The Weekly News வெளியிடப்பட்டது. பின், London Gazetteer என்ற இதழ் முறையாக 1666-ல் வெளிவந்தது.

இவ்வாறு உலகம் முழுவதும் இதழியல் வளர்ச்சி அடையத் தொடங்கியது. உத்தியோகபூர்வப் பதிவுகளின்படி இந்தியாவில் முதன்முதலில் கல்கத்தாவிலேயே பத்திரிகை அச்சிடும் முறை தொடக்கிவைக்கப்பட்டது. 1780-ல் Bengal Gazetteer, 1789-ல் Indian Gazetteer போன்ற இதழ்கள் வெளியிடப்

பெற்றன. தமிழ்நாட்டில் 1831-ல் முதல் தமிழ் இதழாக 'கிறித்தவ சமயம்' இதழ் வெளிவந்தது. பிறகு, 1853-ம் ஆண்டில் தின வர்த்தமானி என்னும் தமிழ் வார இதழ் வெளியானது. 1870-க்குப் பின்னர், சென்னை மாகாணத்தில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பல்வேறு நாள், வார, மாத இதழ்கள் வெளிவரத் தொடங்கின

இலங்கையின் இதழியல் வரலாறு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தை தொடக்கமாய்க் கொண்டது. 1802-ம் ஆண்டில் 'த கவர்மெண்ட் கெசற்' என்ற ஆங்கில வார இதழ் வெளியிட்டது. அரச அறிவித்தல்கள், அரசு விளம்பரங்களைக் கொண்ட வர்த்தமானிப் பத்திரிகையாகவே இது அமைந்தது.

உதயதாரகை (Morning Star) ஈழத்தின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையும், யாழ்ப்பாணத்தின் முதலாவது செய்திப் பத்திரிகையும் ஆகும். இது அமெரிக்க இலங்கை மிசன் மூலம் வெளியிடப்பட்டது. இதன் முதலாவது இதழ் 1841 சனவரி 7-ல் வெளிவந்தது. இப்பத்திரிகை மானிப்பாயைச் சேர்ந்த நேத்-தன் ஸ்ட்ரோங் என்ற அம்பலவாணர் சிற்றம்பலம் என்பவரால் வெளியிடப்பட்டது. இதன் முதல் ஆசிரியர்களாக இருந்தவர்கள் ஹென்றி மார்ட்டின், சேத் பேசன் ஆகிய இரு தமிழர் ஆவர்.

பத்திரிகையாளர் வழங்கும் செய்தி என்பதை ஆங்கிலத்தில் NEWS என்கிறோம். நான்கு திசைகளிலிருந்தும் செய்தி கிடைக்கிறது. வடக்கு (NORTH), கிழக்கு (EAST), மேற்கு (WEST), தெற்கு (SOUTH) முதலான சொற்களின் முதல் எழுத்துக்கள் இணைந்ததுதான் NEWS என்ற கருத்தும் பொருத்தமாகவே அமைகின்றது. இன்றைய பத்திரிகைகள் பல சோதனைகளை தாண்டித்தான் இப்போதய சுதந்திர நிலையை எட்டியுள்ளன. இந்தியாவில் முதன்முதலில் பத்திரிகைகளை ஒடுக்கும் பணியை ஆரம்பித்துவைத்தவர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ். இவர் 1781-ல் வங்காள்கெஜட் என்ற பத்திரிகைக்கு தொல்லை கொடுத்து, அதன் ஆசிரியரை கைது செய்து சிறையில் அடைத்தார். 1799-ல் வெஸ்லி பிரபு பத்திரிகைகளுக்கான புதிய சட்டதிட்டங்களை உருவாக்கினர் என்பதும் பழைய வரலாறு. கடந்த 2016 முதல் 2021 வரை யுனெஸ்கோ அறிக்கையின்படி 455 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதை கடந்து 2022-ல் 86 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த அறிக்கையின்படி 04 நாட்களுக்கு ஒரு பத்திரிகையாளர் கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. 2022-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி உலகம் முழுவதும் 363 பத்திரிகையாளர்கள் தமது கடமையை செய்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

மிகுந்த ஆபத்துக் காலத்தில் உலகில் எங்காவது பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டால், அதற்கு எதிராக போராடும் தனிநபர், பத்திரிகை, தொண்டு நிறுவனங்களுக்கு யுனெஸ்கோ சார்பில் 1997-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் விருது வழங்கப்படுகிறது. 'கிலெர்மோ கானோ இசாஷா (guillermo cano isaza)' என்ற கொலம்பிய நாட்டு பத்திரிகையாளரின் பெயரால் இவ்விருது வழங்கப்படுகிறது. 'எல்எஸ்பெக்டேட்டர்' என்ற பத்திரிகையில் பணிபுரிந்த இவர் போதைப் பொருள் மாபியா கும்பலின் சட்டவிரோத கடத்தலை அம்பலப்படுத்தியதால், பத்திரிகை அலுவலகத்தின் வாயிலில் 1986-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அப்பத்திரிகையாளரின் சேவையை பாராட்டி, விருதுக்கு அவரது பெயர் வைக்கப்பட்டு அவர் நினைவாக அவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. அவரின் கொலையின் பின்னரே, பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.

'எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள்' என்ற சர்வதேச ஊடகக் கண்காணிப்பு அமைப்பு ஒவ்வோர் ஆண்டும் 180 நாடுகளுக்கான உலக பத்திரிகை சுதந்திரக் குறியீடு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2022-ல் உலக பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டை மே மாதம் மூன்றாம் திகதி அன்று Reporters Without Borders - RSF உலக பத்திரிகையாளர்கள் அமைப்பு வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகையாளர்கள் செய்தி நிறுவனங்கள் கொண்டிருக்கும் சுதந்திரத்தின் அளவையும் அத்தகைய சுதந்திரத்தை மதிக்க அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளையும் உலக பத்திரிகை சுதந்திரக் குறியீடு குறிப்பிடுகிறது. 2021-ல் பத்திரிகைச் சுதந்திரம்பற்றி வெளியிட்ட 180 நாடுகள் கொண்ட பட்டியலில் நோர்வே முதலிடத்தில், பின்லாந்து, டென்மார்க் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பிடித்துள்ளது. கிழக்கு ஆபிரிக்க நாடான எரித்திரியா பட்டியலில் கடைசி இடத்தில் இருந்தது.

ஒரு நாட்டின் அபிவிருத்தி, முன்னேற்றம், சுபீட்சம் என்பவற்றிற்கு உறுதுணை புரிவது பத்திரிகையே என்று கூறினாலும் மிகையாகாது. எப்போதுமே பத்திரிகையாளர்கள்தான் பெரும்பாலான நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத மக்கள் பிரதிநிதிகளாக செயலாற்றி வருகின்றனர். நாடாளுமன்றம், நீதித்துறை, நிர்வாகம், பத்திரிகைத்துறைதான் மக்களாட்சியைத் தாங்கும் தூண்களாக உள்ளன. மக்களின் கல்வி அறிவு வளர்ச்சி பெற்றதன் அடையாளமாகவே பத்திரிகைகள் உருவாகின. பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரம் என்பது மக்களின் நலனுக்கு தேவையான முன்னெடுப்புகளை சுட்டிக்காட்டவும் அரசின் நன்மை, தீமை தரும் திட்டங்களை பகுப்பாய்வு செய்யவும் மிக முக்கியமான ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. உலக மக்களை இணைக்கின்ற மிகப் பெரிய பாலமாக பத்திரிகை விளங்குகிறது.

பத்திரிகைச் சுதந்திரத்தை பாதுகாப்பது தனிமனிதன், அரசு உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கடமை என்பதைத்தான் 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங்கெடும்' என்ற வள்ளுவன் வாக்கு உணர்த்துகிறது. உலகில் நடக்கும் நிகழ்வுகளை அதன் உண்மை நிலையிலிருந்து தவறாமல் யாருக்கும் அஞ்சாமல் மக்களுக்கு வழங்குவதே பத்திரிகைகள். இவை சுதந்திரமாக செயற்பட்டாற்தான் உண்மை நீடிக்கும். உலகில் எத்தனையோ பத்திரிகைகள் உள்ளன. அவற்றின் பெயர் மற்றும் மொழிகளில் மட்டுமே வேறுபாடு இருக்கிறதே தவிர செயற்பாட்டில் அல்ல.



natkunalingam@thaiveedu.com



# வெயிலும் மின்சக்தியும்...

– வேதநாயகம் தபேந்திரன்

வெயிலை ஒரு முதலீடாகக் கருதி முதலீடு செய்யும் முயற்சியாளர்கள் பலர் இலங்கையில் உருவாகி வருகின்றனர். அதாவது சூரியசக்தி மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்கும் முயற்சியாளர்களை அரசாங்கம் நாடெங்கும் ஊக்குவித்து வருகின்றது. யார் என்ன சொன்னாலும் இலங்கைத் திருநாடு ஏதோ ஒரு வகையில் முன்னேறிக் கொண்டு தான் இருக்கின்றது.

மலிவான விலையில் போதுமான அளவு மின்சாரம் கிடைக்கும் போது தான் நாடு முன்னேற்றமடையும்.

இலங்கையில் மின்சார உற்பத்தியானது தற்போது பின்வரும் வழிகளில் இடம் பெறுகின்றது.

- மழை மூலமாகப் பெறப்படும் நீரைப் பயன்படுத்தி மின்சாரம்,
- எரிபொருளை உபயோகித்துப் பெறப்படும் மின்சாரம்,
- காற்றைப் பயன்படுத்திக் காற்றாலை மூலமாக உருவாகும் மின்சாரம்,
- புத்தளம் நுரைச்சோலையில் உற்பத்தியாகும் அனல் மின்சாரம்,
- சூரியசக்தி மூலமாகப் பெறப்படும் மின்சாரம்.

ஒரு காலத்தில் லக்சபான மின்சாரமென நீர் மின்சாரத்தில் பெருமளவில் தங்கியிருந்த முறைமை இருந்தது. மின்சாரத்தின் அதிகரித்த தேவை, காலத்திற்குக் காலம் குறைவடைந்து வந்த மழைவீழ்ச்சி போன்ற காரணங்களால் நீர் மின்சாரத்துடன், அனல் மின்சாரத்தின் மூலமாகவும் மின்சாரம் பெறப்பட்டது. அதேவேளை, மரபுசாராச் சக்தி வளங்களான காற்று, சூரியசக்தி போன்றவற்றின் மூலமாகவும் தற்போது மின்சாரம் பெறும் நிலையும் உருவாகியுள்ளது.

இலங்கையில் மின்சாரக் கட்டணம் குடும்பங்களதும் நிறுவனங்களதும் செலவினக் கட்டமைப்பில் பாரிய சுமையாக இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் நிலையை அண்மைய வருடங்களாக அரசாங்கம் செய்து வருகின்றது.

நடப்பு 2024-ம் ஆண்டில் சூரியசக்தி மூலமாக மின்சாரத்தை உற்பத்தியாக்கும் திட்டத்தை வெயில் அதிகமாகக் கிடைக்கும் வடக்கு மாகாணத்தில் அரசாங்கம் கூடியளவுக்கு ஊக்குவிக்கின்றது. அதுபோல கிழக்கு, வடமத்திய, தென், மேல் மாகாணங்களிலும் அரசாங்கம் ஊக்குவித்து வருகின்றது.

வடமாகாணத்தில் நிலப்பரப்பின் விகிதாசாரத்தை விட சனத்தொகை விகிதாசாரம் குறைவாக இருக்கின்றது. அதைவிட வெற்று நிலங்கள், தரிசு நிலங்கள் பல இருப்பதனால் சூரிய சக்தி மின்கலங்களைப் பொருத்துவது இலகுவானதாக உள்ளது.

நாட்டின் வடக்கு மாகாணம் தான் ஏனைய 08 மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வெயிலை அதிகமாகப் பெறுகின்ற மாகாணமாக உள்ளது. இதனால் சூரியசக்தி மூலமான மின்சார உற்பத்தி இங்கு அதிகமாக இடம் பெறுகின்றது.

வடக்கில் தற்போது அரச தனியார் கூட்டுறவு நிறுவனங்களும் தனி ஆள்களும் சூரியசக்தி மூலமான மின்சார உற்பத்தியைச் செய்யும் முயற்சிகளில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னொரு வகையில் சொல்லப் போனால் அரசாங்கத்திற்குச் சூரியசக்தி மூலமான மின்சாரத்தை விற்று அதன் மூலமாக இலாபம் உழைக்கும் புதியவகை வியாபாரமொன்று உருவாகி வளர்ந்து வருகின்றது.

2015 ஜனவரியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரி-பால சிறிசேன சூரியசக்தி மூலமாக மின்சாரம் பெறும் முயற்சியாளர்களை ஊக்குவித்தார். அதன் நீட்சியாகத் தற்போதைய அரசாங்கமும் சூரியசக்தி மின் உற்பத்தி முயற்சியாளர்களை அதிகம் ஊக்குவிக்கின்றது.

சூரியசக்தி மூலமான மின் உற்பத்தி உபகரணங்களைப் பொருத்திக் கொடுக்கும் வியாபார நிறுவனங்கள் பல இயங்கி வருகின்றன. இந்த நிறுவனங்கள் வீடுகளின் அல்லது கட்டடங்களது கூரைகளில் சூரியசக்தி மின்கலங்களைப் பொருத்திக் கொடுக்கும் தொழில்களை போட்டி போட்டுக்கொண்டு செய்து வருகின்றன.

இதற்கெனச் சலுகை வட்டியில் கடன்களை வழங்கும் அரச துறை வங்கியாக இலங்கை வங்கியும், தனியார் துறையில் வர்த்தக வங்கியும் செயற்பட்டு வருகின்றன. தற்போது இதற்குரிய கடன் 15.5 வீத வட்டியில் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த வங்கிகள் சூரியசக்தி மின்கலங்களைப் பொருத்தும் சில நிறுவனங்களுடன் விசேட ஒப்பந்தத்தைச் செய்து 10 வீத வட்டியில் கடனை வழங்கி வருகின்றன.

இலங்கையில் நாட்டைத் தூரநோக்குடன் நேசிக்கும் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் தொகை மிக மிகக் குறைவாக உள்ளமையால் அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் நாடு உள்ளது.

மின்சாரத்திற்கான கட்டணம் அதிக தொகையாக உள்ளமையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. சூழல் பாதிப்பு, பக்கவிளைவு எதுவுமின்றிய சூரியசக்தி மூலமான மின் உற்பத்தி தொடர்பாக அரசாங்கம் முற்போக்கான பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ரூபா 30 இலட்சம் பெறுமதியான 25,000 வீடுகளை நன்கொடையாகக் கட்டிக்கொடுக்கவுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்தில் வீடுகளைப் பெறுவோர் 20 வருடங்களுக்குத் தமது வீட்டை விற்கவோ நன்கொடையாக வழங்கவோ முடியாது.

வீடுகளைக் கட்டி நன்கொடையாக வழங்கவுள்ள அதானி நிறுவனம் தலா 20 கிலோவாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய 25,000 சோலர் பனல்களை நிறுவவுள்ளது. அதன் மூலமாகக் கிடைக்கும் மின்சாரத்தை 20 வருடங்களுக்கு இலங்கை மின்சார சபைக்கு வழங்கி அதன் வருமானத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

சூரியசக்தி மூலமான மின்சாரத்தின் விற்பனைப் பெறுமதி ஒரு வீட்டை அன்பளிப்பாகக் கட்டிக் கொடுக்குமளவுக்கு இலாபகரமானதாக உள்ளது.

அவுஸ்திரேலியத் தனியார் நிறுவனமொன்று 1200 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில் சூரியசக்தி மின்கலங்களை கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் அமைக்கவுள்ளது. அதன் மூலமாகப் பெறும் மின்சாரத்தை இலங்கை அரசாங்கத்துக்கு விற்பனை செய்யவுள்ளது.

இதே போல இந்திய நிறுவனமொன்று யாழ்ப்பாணத்தின் அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு போன்ற பிரதேசங்களில் சூரியசக்தி மின்கலங்களைப் பொருத்தி அதனால் பெறப்படும் மின்சாரத்தை இலங்கை அரசாங்கத்துக்கு விற்பனை செய்யவுள்ளது.

காற்றாலை மூலமான மின்சக்தி பெறும் பொறிமுறை மன்னார், யாழ்ப்பாணத்தின் கேரதீவு அறுகுவெளி, புலோப்பளை போன்ற பிரதேசங்களில் ஏற்கனவே உள்ளது.

இலங்கையின் அபிவிருத்திப் பொறிமுறையில் மலிவு விலையிலான மின்சக்தி உற்பத்திக்கு வடக்கு மாகாணம் ஒரு களமாக அமைவது இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னோக்கி நகர்த்தும். போரால் பாதிக்கப்பட்ட ஒரு மாகாணம் முன்னேறுவது மகிழ்ச்சிக்கு உரியதே.

அதேவேளை, இதனைப் பசுமை மின்னுற்பத்தி என்று பெதுவாக நாங்கள் கூறினாலும், குறிப்பிடத்தக்க அளவு சுற்றுச்சூழலை காற்றாலை மின்சாரம் பாதிக்கிறது.

காற்றாலைகளால் ஒலி மாசுபாடு, உயிரினங்களின் வாழ்விடச் சிதைவு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. குறிப்பாக காற்றாலைகள் இருக்கும் இடங்களில் பூச்சி இனங்கள் குறைந்துகொண்டு வருகின்றன. பறவைகள் காற்றாலைகளில் மோதி இறக்கின்றன. ஆண்டென்றிற்கு அண்ணளவாக ஒரு காற்றாலையில் 90 பறவைகள் அளவில் மேதி இறக்கின்றன என்ற கணிப்பொன்றும் இருக்கின்றது. அத்துடன், பல உயிரினங்களின் வாழிடமும் காற்றாலைகளால் மோசமாக பாதிக்கப்படுகிறது.

புதிதாக அமைக்கும் காற்றாலைகளால் நில அமைப்பில் மாற்றம் ஏற்படும், அந்த இடங்களில் புதிதாக உருவாக்கப்படும் சாலைகள், அதிக மக்கள் நடமாட்டம், அதிகரிக்கும் வாகனப் போக்குவரத்து, காற்றாலைகளால் ஏற்படும் ஒலி



போன்றவற்றால் பறவைகளின் வாழிடங்கள் பாதிக்கப்படுகின்றன. இது தவிர, தூர தேசங்களில் இருந்து இங்கு வரும் கூழைக்கிடா, டால்மில்டன் போன்ற அரிய பறவை இனங்களின் முட்டையிட்டு குஞ்சு பெரிக்கும் காலங்கள் குழப்பப்படுவதால் அப்பறவையினங்களின் இனப்பெருக்கம் குறைவடைவதுடன் அவை அழிந்து பேகும் நிலையும் உருவாகலாம்.

பெரும்பாலான ஆய்வுகளின் கனிப்புப்படி பருந்துகள், கழுகுகள், வல்லூறுகள் உள்ளிட்ட இரைகொல்லிப் பறவைகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. உணவுச்சங்கிலியில் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் இதுபேன்ற இரைகொல்லிப் பறவைகளின் ஆயுட்காலம் அதிகம். அதேநேரம், இவற்றின் பிறப்பு விகிதமும் எண்ணிக்கையும் மிகக் குறைவு. எனவே காற்றாலைகளால் இப்பறவைகளின் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும்பேது இயற்கை சமநிலையை பெரிதாக பாதிக் கும்.



thabendran.v@thaiveedu.com

# அட்டாளைச்சேனையின்

# மீன்களும் நுகர்வும்

## இனியவன் இசாறுதீன்



அட்டாளைச்சேனை அமைதியான ஊர். அது கொழும்பிலிருந்து 375 கி.மீ. தொலைவில் கிழக்குப் பக்கமாக இருக்கிறது. மட்டக்களப்பிலிருந்து தெற்கே பொத்துவிலுக்குச் செல்லும் சாலையில் அக்கரைப்பற்று ஆரம்பமாகும். தைக்காவடி எல்லையில் கிழக்கில் கடலும் மேற்கில் வயலும் வடக்கில் பாலமுனைக் கிராமத்திற்குப் பக்கத்திலும் அது அமைந்திருக்கிறது. அறபிக் கல்லூரி, கல்விக்கல்லூரி, ஆசிரியர் கலாசாலை, தேசிய பாடசாலை, பல்கலைக்கழகம் என அவ்வூர் தன் கல்வி விலாசத்தை விசாலமாக்கிக் கொண்டது. அதுமட்டுமன்றி, இஸ்லாமிய இலக்கியக் கவிதைக் கருவூலங்களையும் கருத்தரித்த பெருமையும் அட்டாளைச்சேனைக்கு இருக்கின்றது.

இந்த மண்ணுக்குள் நீர் நிறைந்திருப்பது மாதிரி, அன்பும் பரஸ்பரமும் அதீத உணர்ச்சியும், சுயமரியாதையும் அந்த மக்களுக்குள் மறைந்திருந்தது. அந்த மூதாதையரின் குருதியும் வியர்வையும் கலந்திருப்பது போல இன்றைய தலைமுறையிலும் கலையோடு கவிதையும் புலமையும் கலந்திருக்கிறது. இந்த ஊர்மக்கள் தமிழ்ச் சொல்லுக்குள் பொதிந்திருக்கும் சூட்சுமங்களை ரசித்து ரசித்து அனுபவிக்கிறார்கள்.

மேட்டுநிலப் பரப்பில் அமைந்த அட்டாளைச்சேனையின் நீள அகலத்திற்கேற்பக் கிழக்குக் கடலிற்கும் மேற்கு வயலுக்கும் இடையே, மத்தியில் ஓடுகின்றது கோணாவத்தை எனும் ஒரு சிற்றாறு. அதன் நீரோட்டத்தில் மாசற்ற காற்றும் தூசற்ற நன்னீரும் நிறைந்துள்ளது. கயல், சள்ளல், கெழுத்தி, திலாப்பியா, விலாங்கு, வெள்ளிறால் போன்ற அரிய மீனினமும் ஆமைகளும் நண்டுகளும் இந்த ஆற்றுச் சூழலில் வசிக்கின்றன. கயல், சள்ளல் போன்ற மீன்கள் அதி ருசியானவை, ஆரோக்கியமானவை. அது மட்டுமல்ல உண்ண உண்ணத் திகட்டாதவை. கயல்மீனை கைமீனென்றும் செங்கண்ணனென்றும் அங்கே அழைக்கிறார்கள். அப்படியான அற்புத மீன்களைத்தான் பக்கத்து ஊர் மக்களும் அட்டாளைச்சேனைக்குத் தேடிவந்து வாங்கிச் சுவைக்கிறார்கள். அட்டாளைச்சேனையில் குளத்துநீரில் மீனோடைக்கட்டு எனும் நீரோடைக் குழாயூடாக உவர்நீரோடு ஓடிவரும் வரால், கணையான், பனையான், சுங்கான், கொக்குச்சான், குறட்டை, உழுவை, விலாங்கு போன்ற மீன்களையும் அல்லி, தாமரை, சல்பீனியா, ஆற்றுவாழை போன்ற கொடித் தாவரங்களையும் வரவேற்று, அவற்றை முகத்துவாரத்தினூடு கடலுக்குள் வழியனுப்பி வைக்கின்றது இந்த ஆறு.

2004-ல் சுனாமி எனும் சமுத்திரப் பேரலை அட்டாளைச்சேனையிலும் கரைதாண்டிக் கரையோரக் கிராமத்தைக் காவு கொள்ளத் தாவியபோது, அதனைத் தடுத்துநிறுத்தி தனக்குள் உள்வாங்கி மக்கள் உயிரைக் காப்பாற்றியது இந்தக் கோணவத்தை ஆறு. வாத்துகளும் வெண்கொக்குகளும் கடற்காகங்களும் பெயர் தெரியாத பிற பறவைகளும்கூட கரையோரமாய்ப் பொடிநடை போட்டுக்கொண்டிருந்த அந்தக் காலம் பழங்காலம். கரையோரத்தில் குடியிருக்கும் மக்கள் தெருத்தாண்டி மண்ணிட்டு மூடி தென்னைமரமும் வாழைமரமும் நட்டு, கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைகளை ஆக்கிரமித்து ஆற்றையே சொந்தச் சொத்தென அபகரித்துக் கொண்டார்கள். இப்படித்தான் ஊர்ப் பற்றற்ற சில ஊழல்வாதிகளும் கூட வயலும் வரப்பும் கொண்ட விவசாய நிலங்களை மண்ணிட்டு நிரப்பி விற்றே தங்கள் வயிற்றையும் நிரப்பிக் கொண்டார்கள். அட்டாளைச்சேனையின் உடலில் இந்தக் கோணாவத்தை ஆறு இரத்தமாய் ஓடுகிறது. இந்த ஆறு அட்டாளைச்சேனையின் ஆன்மா. அது வெறும் ஆறல்ல. பெரும் பேறு. இந்த ஆற்றின் நட்பையும் பற்றையும் தோழமையையும் மறந்து நாலு காசுக்கு மூடி விற்கும் மூடர்களை மனிதம் எப்படி மன்னிக்கும்?


அட்டாளைச்சேனையின் 75% மக்களது உயிர்த்தொழில் விவசாயம்தான். கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியம் கொண்ட அந்த ஊர் மக்கள் மிஸ்கீன்குடி, மூத்தநாச்சிகுடி, இலவைக்குடி, ராசாம்பிள்ளைகுடி, வண்டியான்குடி, உதுமான்பிள்ளைகுடி என்னும் பல்வேறு குடும்பப் பெயரோடு உறவுமுறையின் உயிர்ச்சங்கிலி அறுந்துவிடாமல் காலங்காலமாய் காத்து வைத்திருக்கிறார்கள்.

அவர்களது உணவுமுறை இயற்கையானது. ஆரோக்கியத் திற்கேற்ற உணவை சமைத்துண்ணும் வழக்கம் சமுதாயம் சார்ந்தது. அரிசியும் சோறும், பாலும் தேனும், பாகும் பருப்பும், தயிரும் மோரும், முட்டையும் மீனும், கூனியும் இறாலும், மாட்டிறைச்சியும் கோழியிறைச்சியும், தேங்காயும் மாங்காயும், முருங்கைக்காயும் முருங்கையிலையும், பொன்னாங்கணி திராய்க்கீரை போன்று கங்கூன் இலையோடு இன்னும் பிற இலைக்கறி வகைகளும், வரால், கணையான், சுங்கான் போன்ற புகைக் கருவாடும் சூரை, கட்டாப்பாரை போன்ற கடலுப்புக் கருவாடுகளும் அட்டாளைச்சேனை மக்கள் அன்றாடம் உண்ணும் புத்துணவுகளாகும்.

சில தசாப்தங்களுக்கு முன்னர் அட்டாளைச்சேனையில் 'அல்ஹாஜ் முகைதீன் பிச்சைப் பரிசாரி' என்ற ஆயுர்வேத வைத்தியர் இயற்கை மூலிகை மருத்துவம் செய்தார். அவர் மூத்த அரசியல்வாதிகளுக்கும் கூட. வைத்தியம் செய்து பேரும் புக

மும் பெற்றார். அட்டாளைச்சேனையில் வாழ்ந்த அவர் செல்வாக்குள்ள ஒரு செல்வந்தர். மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். தாம் வாழ்ந்த காலத்தில் தானதர்மம் செய்தவர். ஆயுர்வேத வைத்தியத்திற்கு இலங்கையில் அரச அங்கீகாரம் கிடைத்தபோது, மறைந்த பிச்சைப் பரிசாரி அவர்கள் பாமக் கோப்பியா யூனானி வைத்திய பீடத்தின் அங்கத்தவரானார்.

ஆற்றங்கரையிலிருந்து கடற்கரை வரையுள்ள நூறு ஏக்கர்



நிலப்பரப்பிற்குச் சொந்தக்காரர். கோணாவத்தையின் கரையில் அவருக்குத் தோணியும் தோணித்துறையும் இருந்தன. எப்போது அவருக்கு மீன் பிடிக்கத்தோன்றுமோ, அப்போதெல்லாம் அவர் ஆற்றில் வலைவீசி மீன் பிடிப்பார். நான் சிறுவனாக இருக்கும்போது பிச்சைப் பரிசாரிக்கு எண்பது வயதிருக்கலாம். அவர் ஊன்றுகோலுடன் ஊருக்குள் நடக்கும்போது நான் அவரைப் பின்தொடர்வேன். அவர் என் மீது அபார அன்பு செலுத்தியவர். அடிக்கடி எனக்கு அறிவுரை சொல்வார். 'இறைச்சியை விட மீன் ஆரோக்கியமானது' என்பார். கெண்டை, குறவை, கயல், சள்ளல், வரால், விலாங்கு, கெழுத்தி, திலாப்பியா போன்றவை நல்லவை என்று என்னையும் அவர் ஆற்றுமீன்களைச் சாப்பிடச் சொல்வார்.

உண்ணும் மீன்களின் உன்னதம் சொன்ன வைத்தியர் முகைதீன் பிச்சைப் பரிசாரி அவர்கள் 'ஆயுர்வேதத்திலும் சித்த வைத்தியத் துறையிலும் அமிலமீன்களே அருமருந்து' என்றார். அவர் வாகடம் படித்தவர். மூலிகை மூலம் மருத்துவம் செய்தவர். பிள்ளைப்பேற்றுத் தாய்மாரின் பிரசவவலிக்குப் பத்திய உணவும் மூலிகை மருந்தும் கொடுத்துத் தீர்த்தவர். ஆங்கில மருத்துவமில்லாத அக்காலத்தில் மீன் உணவு மூலம் வைத்தியம் செய்து நோய் தீர்த்தார்.

'கர்ப்பிணிப் பெண்கள் மீன் சாப்பிடுவது மிகவும் நல்லது. குறிப்பாக சாளை, நெத்தலி, சங்கரா, வஞ்சரம், வவ்வால்மீன், கோலாமீன், காரப்பொடிமீன் என்பன ஓமேகா-3 சத்துக் கொண்டன. இவற்றைச் சாப்பிட்டால் அது அவர்களது கர்ப்பத்திலுள்ள குழந்தைகள் ஆரோக்கியமாக வளர உதவும். ஓமேகா-3 அதிகமுள்ள மீன்களில் முரல் மீனும் முக்கியமானது. உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் முரல் மீனை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதயச் செயற்பாட்டை முரல் மீன்கள் சீராக்குகிறது. சர்க்கரை நோயாளிகளின் இரத்தத்திலிருக்கும் சர்க்கரை அளவையும் குறைக்கின்றன. பற்களையும் எலும்புகளையும் உறுதியாக்குகின்றன' என்பதெல்லாம் பிச்சைப் பரிசாரியினது அன்பு தோய்ந்த அறிவுரை.

'எருமை நக்கி' என்கிற கடல்மீனை அனேகர் உண்பதில்லை. ஏனெனில் அது திருக்கையின் முகவமைப்பிலுள்ள மீன். ஆனால் அது உடல்நோய்க்கு அருமருந்து. தூக்கத்திலும் விழிப்பிலும் தன்னையறியாமல் மலசலம் கழித்துவிடும் பழக்கமுள்ள சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் எருமை நக்கி என்கிற மீனைப் பிச்சைப் பரிசாரி நெருப்பிலிட்டுச் சுட்டுக் கொடுத்தார். அந்த சுட்ட மீனைத் தின்ற நோயாளிகள் சுகதேகியாகினர்.

விலாங்கு மீன்கள் வியப்பளிப்பவை. பலர் இதை உண்பதில்லை. இதை உண்டவர்கள் அதன் சுவையை மறப்பதில்லை. அதன் தோற்றம் கண்டு பலர் உண்ண விரும்புவதில்லை. விலாங்குமீன் வழுவழுப்பான தோலுடையது. தலை பாம்மைப் போன்றது. வால் மீனைப் போன்றது. உடம்பு நீளமானது. சேற்றுநீரிலும் ஆற்றுநீரிலும் வாழ்கின்றது. பிச்சைப் பரிசாரி இந்த விலாங்குமீனை 'மருந்துமீன்' என்கிறார். 'அது பிற மீன்களைப் போலல்லாமல் வித்தியாசமான தோற்றத்தில் இருந்தாலும் அது அபார சத்துக்கள் நிறைந்தது. அந்த மீனைச் சமைத்து அடுத்த நாள் சாப்பிட்டால், அது அவ்வளவு சுவையானது மட்டுமல்ல சுகாதாரமானது என்பதை அதைச் சாப்பிட்டவர்களால்தான் உணரமுடியும்' என்றார்.

தன் வீட்டில் மீனெண்ணெய், மீன்குளிசை என மீன்களின் அமிலக் கொழுப்பில் மருந்து தயாரித்து, கண், காது சம்பந்தமான நோயாளர்களின் உடல்நோய் தீர்த்த பிச்சைப் பரிசாரி 'மீன்தலையில்தான் அதிக தாதுக்களும் சத்துகளும் ஆரோக்கிய கொழுப்புகளும் உள்ளன' என்று மீன்தலையைச் சாப்பிடச் சொன்னார்.

'மீன்தலை சாப்பிட்டால் மூட்டுவலி, பக்கவாதம், வீக்கம், மாரடைப்பு, இதயநோய்கள் எல்லாம் இல்லாமல் போகும். பெண்களது மாதவிடாய்க் கால வயிற்றுவலியையும் அது போக்கும். குருதியுறையா நோயைக் குணப்படுத்தும். கண் பார்வையைப் பிரகாசமாக்கும். உடல்நோய் எதிர்ப்புச் சக்தியையும் கூட்டிவிடும். ஆக, வாரத்தில் ஒரு முறையோ இரண்டு முறையோ மீன்தலை சாப்பிட்டால் மொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்தத் தேவையான ஊட்டச்சத்துகள் நம் உடலில் சேர்ந்துவிடும்' என்று அறிவுரைத்தார்.

'கொதிநீரில் மஞ்சள்தூள், ஊப்புத்தூள், கொறக்காய் சேர்த்து மீன்தலைகளை சமைக்குமுன் 30 நிமிடம் மூடி ஊற வைக்க வேண்டும். கடுகு, வெந்தயம், நசுக்கிய இஞ்சியும் பூண்டும் நறுக்கிய வெங்காயமும் ஒன்றாய்ச் சேர்த்து வதக்கிய பின்னரே, மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், மல்லித்தூள் சேர்த்து குறைந்த நெருப்பில் கறி கொதிக்கும்போது, மீன் தலைகளைச் சேர்த்து சட்டியை மூடிவிட வேண்டும். 10 நிமிடத்தின் பின்னரே கறிவேப்பிலையும் தேங்காய்ப்பாலும் சட்டிக்குள் இடவேண்டும்' என்று சமையல் முறையையும் கற்றுக்

கொடுப்பார். இப்படி ஒவ்வொரு நோய்க்கும் ஒவ்வொரு மீனும் மருந்தென்று, அவர் தகவல்கள் சொன்னபோது அவரது ஆற்றல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அட்டாளைச்சேனை ஆழ்கடற்பரப்பில் சூடை முதல் திமிங்கிலம் வரை ஆயிரக்கணக்கான மீனினங்கள் பிடிக்கப்படுகின்றன. அவற்றினது சுவை அபாரமானவை. பாறை, கொடுவா, சூரை, சுறா, அறக்குளா, கணவா, முரல், தளப்பத்து, தோறா, சீலா, திரளி என ஏராளமான மீன்கள் ஏற்றமுடையவை. இப்படி 1000-க்கு மேற்பட்ட மீனினங்கள் உள்ள ஆழ்கடலுக்குத் தினம் நடுநிசியில் நீண்ட தூரம் படகுகளிலும் தோணிகளிலும் சென்று மீனவர்கள் மீன்பிடித்துக் கொணர்ந்து விற்கிறார்கள். ஆனால் எவ்வளவுதான் ஓய்வின்றி உழைத்தாலும் அவர்களது வலைபோலவே ஓட்டையாய் இருக்கிறது நிஜவாழ்க்கை.

கடல் மீன்களில் பலவகை உள்ளன. ஒவ்வொரு மீன் வகைகளிலும் பல இனங்கள் உள்ளன. பாறைமீனிலும் சுறாமீனிலும் பல இனங்கள் இருக்கின்றன. அதிகம் பேர் பாற்சுறாவை மட்டும்தான் விரும்பிச் சுவைக்கிறார்கள். சுறாமீன்கள் ஆபத்தானவை, ஆனால் உண்பதற்கு ஆரோக்கியமானவை. வெய்யிலில் காய வைத்த சுறாமீன் தோலும் முட்களும் எலும்புகளும் பீலிகளும் மனிதகுலத்திற்குப் பயனுள்ளவை, விலையும் உயர்ந்தவை.

'இறால் வாங்கும்போது எப்போதுமே அதன் தலையைச் சரியாகப் பார்த்து வாங்க வேண்டும். இறால்களின் தலை, செவுள் (சுவாசப்பூ) சுத்தமாகவும் உறுதியாகவும் இருந்தால், அது புதியது. அதாவது, இப்போதே பிடிக்கப்பட்டது என்று அர்த்தம். இறாலிலுள்ள சத்துகள் அபரிமிதமானவை. கனிமச் சத்து அதிகமுள்ளவை. இரத்தத்தில் ஈமோகுளோபினை அதிகரித்து ஞாபக சக்தியையும் அதிகரிக்கிறது. நுரையீரல் நோய்க்கெதிராகவும் போராடுகிறது.'

பெண்களுக்கு அருமருந்து உண்டென்றால் அது திருக்கை மீன்தான். இதை தாய்மார் சாப்பிட்டால் தாய்பால் சுரக்கும். அது உடம்பை முறுக்கிப் பிழிந்து கெட்டநீர் கசடுகளை வெளியேற்றி விடும். உடம்பையே திருகி கெட்ட கழிவுகளை வெளியேற்றுவதால்தான் அதற்குத் திருக்கைமீன் என்று சொல்வார்களாம். இது வித்தியாசமான மீன். உருவ அமைப்பில் மற்ற மீன்களிலிருந்து வேறுபட்டது. தட்டையான உடலமைப்புடையது. இதன் மேற்புறத்தில் இரண்டு கண்கள். கூர்மையான பற்கள் ரம்பம் போலிருக்கும். வாலின் முற்பகுதியில் இரண்டு கொடுக்குகள் இருக்கும். இந்தக் கொடுக்குகளால் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும். அதன் வால் உடலை விட நீளமாக இருக்கும். அந்த வாலில் ஏராளமாக மிக நுண்ணிய முட்கள் இருக்கும். கடலுக்கு அடியில் கும்மிருட்டில் கூட திருக்கை வாழும். ஒருவித ஒளியை உமிழ்ந்து மின்சார அதிர்வை ஏற்படுத்தி வெளிச்சம் பாய்ச்சும். இந்த வெளிச்சத்திற்குப் பயந்து எதிரிமீன்கள் ஓடிவிடும். பொதுவாக முட்களை நீக்கிவிட்டே மீனைச் சமைப்பார்கள். ஆனால் இதன் முட்களிலிருந்துதான் நிறைய மருத்துவப் பொருட்கள் எடுக்கப்படுகின்றன. இதில் ஒமேகா-3 அதிகம் இருக்கின்றது. உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் சக்தி இந்தத் திருக்கைமீனுக்கு இருக்கிறது. பித்தம், தலைசுற்றல், வாந்தி, தலைமுடி உதிர்வு போன்றவற்றைத் தடுக்கும். நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தும். மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். ஆஸ்துமா, இதயநோய், புற்றுநோய், நீரிழிவுநோய் போன்றவற்றின் அபாயத்தையும் குறைக்கும்.

சூடை என்றழைக்கப்படும் மத்தி மற்றும் அயிலா, திரளி, சங்கரா போன்ற கடல்மீன்களில் ஓமேகா-3 என்ற அமிலச்சத்துக் கொண்டவை. ஒமேகா-3 கொழுப்பு அமிலம் மூளைக்கும் இதயத்திற்கும் மூட்டுவலிக்கும் மாமருந்தென்றும் மனச்சோர்வு, மனஇறுக்கம், மனவழுத்தம் போன்ற பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் உடற்கொழுப்பின் அளவு குறைக்கப்படுவதாகவும் இதயத்துடிப்பு சீரடைவதாகவும் சமீப ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. நெத்தலிமீனில் ஒமேகா-3 மற்றும் பிற புரதங்களும் நிறைந்துள்ளது.

மீன்களில் நெத்தலி அற்புதமானது, ஆரோக்கியமானது. இரண்டு சென்ரிமீட்டர் அளவில் மிகச் சிறிதாய் இதன் அமைப்பு இருந்தாலும் அரும்பெரும் கனிமச் சத்துக்களைக் கொண்டது. நெத்தலி என்பது நெய்த்தோலி என மலையாளத்தில் அழைக்கப்படுவதை அறியும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது. சூரைமீன் அதிக சதை கொண்டது. ஒமேகா-3, விற்றமின் D12 ஆகிய சத்துகளும் நிறைந்தது. மிகச் சுவையானது. இந்த மீனைச் சிறு துண்டம் துண்டமாக வெட்டிப் பதப்படுத்தி விற்கிறார்கள். அதையே நாம் 'மாசி' என அழைக்கிறோம். இலங்கையில் இந்த மாசிக் கருவாடு தாயாரிக்கப்படுகிறது. அதிகம் மாலைதீவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. மிகச் சிறிதாக அரிந்து தூளாக்கி அல்லது அரைத்து மரக்கறி உணவில் சேர்த்துச் சமைக்கிறார்கள்.

இறைச்சி பிரியாணிதான் இன்றைய தலைமுறையின் பெருவிருந்து. ஆனால் கொழுப்புள்ள இறைச்சியை விட மனிதர்களின் உடல்நோய் தீர்க்கும் உன்னத மருந்துதான் மீன். ஓமேகா-3 என்னும் அமிலம்தான் உடல் வளர்ச்சிக்கும் உள்ளத்தின் ஆரோக்கியத்திற்குமான இயற்கை ஊட்டச்சத்து. ஈழத்தில் கீரிமீன் என அழைக்கப்படும் கானாங்கெழுத்தியில் ஒமேகா-3 மட்டுமன்றி செலினியம், மக்னீசியம் ஆகிய ஊட்டச் சத்துகளும் உள்ளடங்கியுள்ளன.

அயிரைமீன்கள் தனி ருசியானவை. அவை நமது ஆயுள் காப்பவை. ஒமேகா-6 என்ற கொழுப்புச் சத்துடைய அயிரை மீன்கள் புரோட்டீன் விற்றமின் கனிமச் சத்துகள் அபரிமிதமாக உள்ளவை. வயல்களிலும் ஏரிகளிலும் ஆறுகளிலும் ஓடைகளிலும் வாய்க்கால்களிலும் வளர்பவை. அதனால் மழைக்காலங்களில் நீரோடைகளில் வலை அல்லது அத்தாங்கு வீசி இந்த மீனைப் பிடிக்கிறார்கள்.

'கெட்ட கொழுப்புகள் குறைவாகவும் நல்ல கொழுப்புகள் அதிகமாகவும் உள்ளதால் அயிரையைச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இந்த மீன்களை உணவுடன் அடிக்கடி சேர்த்துச் சாப்பிடுவதால் நம் உடலின் இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, இரத்த அழுத்தப் பிரச்சினையைத் தடுக்கிறது. சர்க்கரை நோயாளிகள் அதிகம் சாப்பிடுவதால் உடலில் அபாயங்கள் குறைகின்றன. உயிர் வாழும் காலம் கூடுகின்றது' என்றார் பிச்சைப் பரிசாரி. பிச்சைப் பரிசாரியிடமிருந்து வெளிப்படும் இந்த வாழ்வியல் அறிவு அட்டாளைச்சேனையின் மரபுசார் அறிவுத் திரளுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது.



isarudeen@thaiveedu.com




# அமெரிக்கக் கண்டத்தின் முதற்குடிகள்

- குரு அரவிந்தன்

சென்ற நவம்பர் மாதம் அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டன் சென்றிருந்தேன். அமெரிக்காவில் நவம்பர் மாதத்தை அமெரிக்கப் பூர்வகுடி அல்லது முதற்குடி மக்களின் மாதமாகக் கொண்டாடுகின்றார்கள். அமெரிக்காவில் பல இடங்களில் முதற்குடி மக்களைப் பற்றிய காட்சியகங்கள் இருக்கின்றன. அலஸ்காவிலும் முதற்குடி மக்களின் காட்சியகத்தைப் பார்த்திருக்கின்றேன். அதேபோல, வாசிங்டனில் பல நினைவிடங்களும், அருங்காட்சியகங்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்றான அமெரிக்க முதற்குடிகளின் தேசிய அருங்காட்சியகமும் (National Museum of the American Indian) பிரபலமானது. வாசிங்டன் டி.சி-யிலுள்ள நேசனல் அங்காடியில் அமெரிக்க முதற்குடியினரின் தேசிய அருங்காட்சியகம் செப்டம்பர் 21, 2004-ம் ஆண்டு, பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த இடம் நான்காவது தெரு மற்றும் தென்மேற்கின் சுதந்திர அவென்யூ சந்திக்கும் இடத்தில் இருக்கின்றது.

அருங்காட்சியகம் சுமார் நாலு ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது இந்த அருங்காட்சியகத்தில் ஆண்டு முழுவதும் கண்காட்சிகள், திரைப்படம் மற்றும் வீடியோக் காட்சிகள், பள்ளிக் குழுக்களுக்கான நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் மற்றும் வாழ்க்கை, கலாசார விளக்கப் படங்கள் போன்றவை இடம் பெறுகின்றன. இந்த அருங்காட்சியகத்திலுள்ள சேகரிப்பில் 800,000-க்கும் மேற்பட்ட பொருள்களும், 125,000 படங்களின் புகைப்படக் காப்பகமும் அடங்கும். இவற்றை இனங்காண்பதற்கு இலகுவாக இக்காட்சிப் பொருட்களைச் சில பகுதிகளாகப் பிரித்துள்ளார்கள்.

1903-ம் ஆண்டு தொடக்கம் 1954-ம் ஆண்டு வரை ஜார்ஜ் குஸ்டாவ் ஹே (1874-1957) என்பவரால் வடக்கு மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் பூர்வீக மக்களை அடையாளப்படுத்தும் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவரது சேகரிப்புகள் பல இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. முதற்குடி மக்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமுள்ள பலரை இங்கே சந்திக்க முடிந்தது. சிலர் முதற்குடி மக்களைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்காகவும், சிலர் தங்கள் முன்னோரின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் புகைப்படங்கள் எடுப்பதும், சிலர் வரைபடங்களை வரைவதிலும் கவனஞ்செலுத்தினார்கள். அலஸ்காவிலிருந்து வந்திருந்த குடும்பத்தினருடன் உரையாடும்போது, அலஸ்காவில் நான் பார்த்த இடங்களைப் பற்றியும், சந்தித்த மக்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இதற்காகவே, பூர்வீக



மக்களைப் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளத் தாங்களும் அலஸ்காவிலிருந்து வாசிங்டன் வந்ததாகக் குறிப்பிட்டார்கள்.

அமெரிக்கப் பழங்குடி மக்கள் ஆசியாப் பகுதியிலிருந்து அலாஸ்கா வழியாக வந்திருக்கலாம் என ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். ஆதிகாலத்தில் ஆசியாவுடன் அலஸ்காவுக்குத் தரைத் தொடர்பு இருந்ததாகப் புவியியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். காலப்போக்கில் காலநிலை, உணவு, குழுக்களுக்கிடையிலான மோதல் போன்ற காரணங்



களால் பூர்வீக மக்கள் தெற்கு நோக்கி நகர்ந்திருக்கலாம். வடக்குப் பகுதிகளிலிருந்து புளோரிடாவின் வளைகுடாக் கடற்கரை வரை இவர்கள் இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றனர். ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான பூர்வீக அமெரிக்கர்கள் இப்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருவதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. சுமார் 300-க்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் பாரம்பரியங்களைக் கொண்ட மக்களாக இவர்கள் இருக்கின்றார்கள். இதன் காரணமாக இவர்களுக்கு இடையேயான மொழி, பண்பாட்டு, வரலாற்று, வாழ்வியல் வேறுபாடுகள் இருப்பதையும் அங்குள்ள காட்சிப்படுத்தலிலிருந்து அவதானிக்க முடிந்தது. இவர்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன்பிருந்தே நீண்டகாலமாக அமெரிக்க மண்ணில் வசித்து வருகிறார்கள். ஆனாலும் இவர்களது மண்ணில் வந்து குடியேறிய ஐரோப்பிய குடியேற்ற வாசிகளால் இவர்கள் ஆயுத பலம் கொண்டு தோற்கடிக்கப்பட்டு, அடக்கப்பட்ட வரலாறு இவர்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

வியாபார நோக்கத்தோடு வந்த ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறியதால், இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களின் மொழி, பண்பாடு போன்றவை அவர்களால் சிதைக்கப்பட்டன. இப்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கு, 16-ம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியக் குடியேற்றங்களால் பல வழிகளிலும் இழப்புகள் ஏற்பட்டன. ஐரோப்பியக் குடியேற்றக்காரர் கையாண்ட வன்முறை மற்றும் இனவழிப்புக் காரணமாக மட்டுமல்ல, அவர்கள் கொண்டுவந்த தொற்று நோய்களும் பல பழங்குடி மக்களின் இனம் அழிவதற்குக் காரணமாகின. இதைவிட இவர்கள் அடிமைகளாக்கப்பட்டு. சொந்த நிலங்களிலிருந்தும் துரத்தப்பட்டனர். உள்நாட்டுப் போரும், ஐரோப்பியருடனான கலப்பு மணங்களும் கூட இவர்களின் இனவழிவுக்கு வழிவகுத்தன.

அமெரிக்க அரசாங்கத்தின் ஒருங்கிணைப்புக் கொள்கைகளின் காரணமாக இவர்களின் பாவனையிலிருந்த மொழிகளில் பல இப்போது மறைந்துவிட்டன. 1800-களில் தொடங்கி, பூர்வீக அமெரிக்கர்கள் தங்கள் சமூகங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டனர், அவர்களின் பிள்ளைகளும் உறைவிடப் பள்ளிகளுக்கு கொண்டுசெல்லப்பட்டு ஆங்கிலக் கல்வி போதிக்கப்பட்டது. இதனால் இளைய தலைமுறையினர் சொந்த மொழியை மறந்து ஆங்கில மொழியைப் பேசத் தொடங்கினர். 1972-ம் ஆண்டுக்குப் பின்புதான் அமெரிக்கப் பூர்வீகப் பழங்குடியினர் தமது சொந்த மொழிகளை தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அமெரிக்கப் பழங்குடியினரின் மொழியென்று எடுத்துப் பார்த்தால், முக்கியமாக நாவஹோ மொழியைச் சுமார் 178,000 மக்களும், கிறீ மொழியைச் சுமார் 117,000 மக்களும், ஒஜிவி மொழியைச் சுமார் 56,600 மக்களும் பேசுகின்றார்கள். இதைவிட இனுக்ரிருற் மொழி, செரோக்கீ மொழி, லாகோட்டா மொழி போன்ற பழைய மொழிகளும் பழங்குடி மக்களால் பரவலாகப் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த மொழிகளில் ‘நாவஹோ’ மொழி ஐக்கிய அமெரிக்காவின் நாவஹோ பழங்குடி மக்களால் இன்றும் பேசப்படும் மொழியாக இருக்கின்றது. அதபாஸ்கா மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழியை இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்க இராணுவத்தினர் தமக்குத் தேவைப்படும் போது குறியீட்டு மொழியாகப் பயன்படுத்தினர். இதே போல அமெரிக்காவிலும், கனடாவிலும் கிறீ மொழியை அதிக முதற்குடி மக்கள் பேசுகின்றார்கள். இந்த கிறீ மொழி கனடாவின் எல்லாப் பாகங்களிலும் பேசப்படுகிறது. சுமார் 117,000 மக்களால் பேசப்படும் கிறீ மொழியிலுள்ள தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட ஒரு அடைமொழி பற்றி உங்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன். அது என்னவென்றால்,

‘கடைசி மரத்தை வெட்டிய பிறகுதான், கடைசி ஆறு மாசுபட்ட

பிறகுதான், கடைசி மீனும் பிடிபட்ட பிறகுதான், பணத்தை உண்ண முடியாது என்பதை நீ உணர்ந்து கொள்வாயா ?'


பழங்குடி மக்களின் புள்ளிவிபரக் கணக்கின்படி 2013-ம் ஆண்டு வரை அமெரிக்காவில் 169 பூர்வீக மொழிகள் பேசப் பட்டன. 1990-ம் ஆண்டில், பூர்வீக அமெரிக்க மொழிச் சட்டத் தைக் காங்கிரஸ் நிறைவேற்றியது, இதன் மூலம் பூர்வீக அமெரிக்க மொழியைப் பாதுகாக்கவும், அதற்குப் புத்துயிர் கொடுப்பதற்குமான ஆதரவும் பழங்குடி மக்களுக்குக் கிடைத்தது. காலப்போக்கில் சில பூர்வீக அமெரிக்க மொழிக ளைத் தவிர ஏனைய பூர்வீக மொழிகள் அழிந்து போவதற் கான சாத்தியங்கள் இருக்கின்றன. இதற்குப் புதிய தலைமு றையினர் தங்கள் மொழியைக் கற்க மறந்ததும் ஒரு காரண மாகும். காலனித்துவத்திற்கு முன்னர், பூர்வீக அமெரிக்க மொழிகள் வாய்வழியாக மட்டுமே பேசப்பட்டது. ஐரோப்பியர் களின் வருகைக்குப் பிறகு, பல பழங்குடியினர் பேச்சு வழக் கோடு எழுத்து முறை வடிவங்களையும் பின்பற்றத் தொடங்கி யிருந்தனர்.

கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற 574 பழங்குடி இனத்தவர்களில் சுமார் 229 பழங்குடி இனத்தவர்கள் வடக்கேயுள்ள அலாஸ் காவில் காணப்படுகின்றனர். அலாஸ்கா சென்றபோது அங்க ரேச் நகரிலுள்ள சமூகக் கலாசார நிலையத்தில் அவர்களை யும் சந்தித்து உரையாட முடிந்தது. ஆனால் அவர்களில் அதி கமானவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகியிருப்ப தைத் தினமும் கவனித்தேன். மது போதையில் அவர்கள் தங் களுக்குள் சண்டை பிடிப்பதையும், பொலிஸார் வந்து தலை யிடுவதையும் காணமுடிந்தது. ஈயாக், ஹைடா, அதாபாஸ்-கன், டிலிங்கிட், அலுதிக், யூபிக், சிம்சியன், கப்க், உனங் காக்ஸ், சைபீரியன் யூபிக், இனுபியாக் போன்ற பழங்குடி இனத்தவரின் பூர்வீக குடியிருப்புகள் ரியுலானா ஏரியைச் சுற்றி இருக்கின்றன.

அலாஸ்காவைச் சேர்ந்த, இனுப்பியாக், யூப்பிக், எஸ்கிமோக் கள், அலெயுத்துகள் இனங்களைத் தொடக்கத்தில் பழங்குடி அமெரிக்கர்களாகக் கருதவில்லை. ஆனாலும் 2000-ம் ஆண் டுக்கான குடித்தொகைக் கணக்கெடுப்பு ஆவணங்களில், இவர்கள் எல்லோரையும் சேர்த்து அமெரிக்க முதற்குடிக ளும், அலாஸ்காப் பழங்குடியினரும் எனக் குறிப்பிடப்பட்டுள் ளது. ஆனால் ஹவாய் தீவுகளுக்குச் சென்றபோது, அங் குள்ள பழங்குடி மக்களுடன் பழக முடிந்தது.

இந்தக் கூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற பழங்குடியினர் மற்ற இறையாண்மை நாடுகளைப் போலவே அமெரிக்காவுடன் அர சாங்க உறவுகளைக் கொண்டுள்ளனர். ஆனால் சில பழங்கு டியினருக்குக் கூட்டாட்சி அங்கீகாரம் கிடைக்கவில்லை, அதாவது அவர்கள் அரசாங்க திட்டங்கள் மற்றும் அரசாங்கத் தின் ஆதரவு போன்றவற்றுக்குத் தகுதியற்றவர்களாகவே இருக்கின்றார்கள். 2020-ம் ஆண்டு நிலவரப்படி, 13 மாநிலங் களில் 66 பழங்குடி இனத்தவர் மாநில அங்கீகாரத்தைப் பெற் றுள்ளனர். மாநில அங்கீகாரம் எப்போதும் பழங்குடியின ருக்கு மாநில அல்லது கூட்டாட்சி நலன்களுக்கு உரிமைய ளிப்பதில்லை, ஆனால் அது அவர்களின் வரலாற்று மற்றும் சமகால இருப்பை ஏற்றுக்கொள்கிறது.

1838-ம் ஆண்டில், பழங்குடி இனத்தவரான செரோக்கி இனத் தவரை, ஜோர்ஜியாவிலிருந்து வலுக்கட்டாயமாக வெளி யேற்றி, ஒக்லகோமா என்ற இடத்திற்கு இடம்பெயர வைத்தார் கள். இந்த நிகழ்வே அமெரிக்காவின் 'கண்ணீர்த் தடங்கள்' (Trail of Tears) என வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படு கின்றது. இந்த இடத்தில் ஒரு நினைவுத் தூபியும் நடப்பட்டி ருக்கின்றது. சொந்த இடத்தைவிட்டு இடம் பெயரும்படி பல வந்தமாகச் செயற்பட்டதன் பாதிப்பால் சுமார் 5,000 வரையி லான செரோக்கி இனத்தவர்கள் இறந்து போனதாகச் சொல் லப்படுகிறது. இதேபோல இந்தியானா, புளோரிடா ஆகிய இடங்களில் பரம்பரையாக வாழ்ந்த பழங்குடி இனத்தவர்க



ளும் அரசினால் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டனர். 'கண் ணீர்த் தடங்கள்' என்பது, பிற பழங்குடிக் குழுக்கள் தொடர்பி லான பலவந்தமான இடப்பெயர்வு நிகழ்வுகளையும் குறிக்கப் பயன்படுத்தும் வார்த்தையாக இருக்கின்றது. இச்சொற்றொ டர்ப் பயன்பாடு 1831-ம் ஆண்டில் சொக்டாவ் இனத்தவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டபோது உருவானது. சுமார் ஆயிரத்து இருநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒக் லகோமா என்ற இடத்திற்கு இவர்கள் சொந்த மண்ணைப் பறி கொடுத்து வலுக்கட்டாயமாக இடம் பெயர்ந்து நடந்தே செல்ல வேண்டியிருந்தது.

புதிய எக்கோட்டா, இன்றைய கோர்டன் கவுண்டியில், வட மேற்கு ஜார்ஜியாவில், கால்ஹவுனுக்கு வடக்கே அமைந்துள் ளது. இது ரெசாக்காவின் தெற்கே, இன்றைய புதிய நகரத் திற்கு அடுத்ததாகவுள்ளது, இந்த இடம் இப்போது மாநிலப் பூங்காவாகவும், வரலாற்று சிறப்புமிக்க இடமாகவும் பாதுகாக் கப்பட்டு வருகிறது. இது 1973-ல் தேசிய வரலாற்று அடை யாள மாவட்டமாகத் தெரிவு செய்யப்பட்டது. ஆனாலும் அமெ ரிக்கப் பழங்குடியினர் பொதுவாகப் பின்தங்கிய நிலையி லேயே இப்பொழுதும் அப்பகுதிகளில் வாழ்கின்றார்கள்.



kuruaravindan@thaiveedu.com




எங்கள் ஓவியக்கூடத்திற்கு முன் ஒரு திறந்தவெளி இருக்கும். பேனர்களைச் சட்டத்தில் இணைக்க, வெயிலில் காயப் போட என்ற பல பயன்பாடுகளுக்குப் பயன்படும். அங்கு ஒரு மூலையில் எங்கள் அனுமதி பெற்று ஒரு நண்பர் இரண்டு மூன்று கள்ளிப் பெட்டிகளைக் கொண்டு கூண்டுகள் அமைத்திருந்தார். எல்லாம் புறா வளர்ப்பதற்கு, இதை அவ்வப்போது வேடிக்கை பார்ப்பது எனக்கு ஒரு பொழுதுபோக்கு. அவர்கள் உலகம் தனி. ஒவ்வொரு புறாவின் பறக்கும் திறன், மற்ற சிறப்பம்சங்கள் என்று பேசிக்கொண்டே இருப்பார்கள். புறாப் பந்தயங்களில் கலந்துகொள்ள தங்கள் புறாக்களைக் கடும் பயிற்சியெடுக்க வைப்பார்கள். கூடுதல் நேரங்கள் பறக்கும் புறாவே ஜெயிக்கும். இதற்கான மைதானங்கள், குளக்கரைகளிலோ, மொட்டை மாடிகளிலோ அமைந்திருக்கும். சதா வானத்தையே பார்த்துப் பலருக்குக் கழுத்து வலி கூட வந்திருக்கும்.

வெகு அபூர்வமாகவே திரைப்படங்களில் இந்தப் புறாப் பித்து சித்தரிக்கப்பட்டிருக்கிறது. என் நினைவுகளில் ஐ.வி. சசி இயக்கிய அங்காடி திரைப்படத்தில் குதிரவட்டம் பப்புவும் குஞ்சனும், இப்படிப் புறா வளர்த்துக் கொண்டிருப்பார்கள். ‘பாவாடை வேணும் மேலாடை வேணும் பஞ்சாரப் பைங்கிளிக்கு’ என்ற பாடல் காட்சியில் புறாவை அழைக்கும் சங்கேதக் குரலை அவ்வப்போது இருவரும் எழுப்பிக்கொண்டே இருப்பார்கள்.

டெல்லி 6 என்ற இந்தித் திரைப்படத்தில் இதே போல மொட்டைமாடிப் புறாக்களுடன் ‘மசாக்கிலி’ என்ற புகழ் பெற்ற ஏ.ஆர். ரகுமான் பாடல் ஒன்றும் உண்டு.

தமிழில் வெற்றிமாறன், பல விருதுகள் பெற்ற ‘ஆடுகளம்’ என்று ஒரு படம் இயக்கியிருந்தார். இதன் கதைப் பொருள் புறாப் பந்தயங்களல்ல, சேவல் பந்தயம் என்றழைப்படும் ஒரு விளையாட்டு. சேவல்கள் கால்களில் கத்தியைக் கட்டி மோத விட்டு, பந்தயம் கட்டுவது இந்த விளையாட்டின் முக்கிய அம்சம். மலையாளத்தில் இப்போது புகழ்பெற்ற நடிகர் சவுபின் சாஹிர், முன்பு ஒரு படம் இயக்கியிருந்தார். தலைப்பு: பறவா! இளைஞர்கள், சிறுவர்களிடையேயிருந்த புறாப் பந்தய மோகத்தோடு கிரிக்கெட் களம் ஒன்றையும் கூடவே அமைத்திருந்தார். இந்தத் திரைப்படம் மக்களிடையே வரவேற்பையும் பெற்றது.

சமீபத்தில் நான் பார்த்த திரைப்படம் ‘பைரி’ என்ற நான்காம் தலைமுறை - ராஜலிங்கம் கதை! புறாப்பந்தய மோகம் எப்படி வெறியாக மாறி, இளைஞர்களில் வாழ்வைப் பாதிக்கிறது என்பதை அழகாகச் சொல்லும் படம். ஜான் கிளாடி இயக்கிய இந்தப் படம் நாகர்கோவில் நகரத்தில் அருகவிளை என்ற பகுதியில் நடைபெறுவதாகத் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. புறா வளர்ப்பதும், பந்தயத்திற்கு விடுவதும் பல தலைமுறைகளாக நாகர்கோவில் நகரம் முழுவதும் நடைபெற்றிருக்கிறது. அந்தப் பாரம்பரியம் இன்றும் தொடர்கிறது. சிறுவர்களுக்குக் கால் முளைத்தவுடனேயே, கள்ளிப் பெட்டிகளால் கிடைத்த இடங்களில் கூண்டுகள் கட்டுவதும், அவற்றில் புறா வளர்ப்பதும், அதைப் பற்றியே பேசுவதும் ஒரு பற்றாகிவிடுகிறது. பெரும்பாலும் அய்யா வழியைப் பின்பற்றும் இந்து நாடார்களும், கிறிஸ்துவர்களும் வாழும் பகுதிகளில் மொட்டை மாடிக் கூண்டுகளும், சதா வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கும் இளைஞர்களும் சகஜம்.

இப்படிப்பட்ட இளைஞர்களில் ஒருவன்தான் லிங்கம். அவனுடைய கண்டிப்பான தாயாரால் நல்ல கல்வி கிடைத்தும், விளையாட்டுத்தனமும் புறா மோகமும் அவனை அலைக்கழிக்கின்றன. பொறியியல் கல்லூரியிலும் பாடங்களில் கவனஞ் செல்லவில்லை. ஏகப்பட்ட அரியஸ். இந்த நேரத்தில் இவர்கள் அனைவரின் காப்பாளரான ரமேஷ் பண்ணையாரின் புறா உலக சாதனை படைத்ததைக் கேட்டபின் இவனது மோகம் அதிகரிக்கிறது. கூடவே தூபம் போட இவனது உயிர் நண்பன் அமல்.

ஒரு நாள் தாயாரிடம், வீட்டிலிருந்தே படித்துத் தேர்வுகள் எழுதப்போவதாகவும், அப்போது போரடித்துவிடாமல் இருக்க ஒன்றிரண்டு புறாக்களை வளர்க்க அனுமதி கேட்கிறான். அவளோ பொங்கியெழுகிறாள், அவள் கணவன் முதல் சித்தப்பன், பெரியப்பன் வரை அனைவரும் சீரழிந்தது இந்தப் புறாப் பந்தய வெறியினால்தான் என்பதை எடுத்துச் சொல்லியும் அவன் கேட்பதாக இல்லை. ஒரு கட்டத்தில் அவன் குரல்தான் ஓங்குகிறது, தாயாருக்கு மரியாதை காற்றில் பறக்கிறது. மொட்டை மாடியில் ஒரு அறை எழும்புகிறது. இதற்கெல்




லாம் கூட உதவுவது அமல். சதா புறாக்களுடன் நேரத்தைக் கழிக்கிறான் லிங்கம். இது கண்டு பொறுக்காமல் தாயார் சரஸ்வதி நேராக அமல் வீட்டுக்குச் சென்று சண்டையிடுகிறாள், அவன் பிறப்பைக் கேவலமாகப் பேசுகிறாள். இனிமேல் வீட்டு வாசலை மிதிக்கக்கூடாது என்று ஆணையிடுகிறாள். வேதனையிலும் அவமானத்திலும் துடிக்கிறான் அமல்.

அமல் ஒரு வித்தியாசமான மனிதன். கை, கால் சூம்பி தரையோடு ஊர்ந்து நகரும் அவனது தகப்பன் மீது உயிர். அவரைக் கண் போல் காப்பாற்றுகிறான். எப்போதும் சிரித்துக் கொண்டேயிருப்பவன். இதே போல ரமேஷ் பண்ணையார் நூறு ஏர் பூட்டி விவசாயம் செய்த பெரிய பரம்பரையின் இப்போதைய வாரிசு. கட்டுமஸ்தான இளைஞன். நிதானம் தவறாதவன். தலைமைப் பண்பும், சக இளைஞர்கள் மீது பாசமும் பரிவும் கொண்டவன். அவன் பேச்சை யாரும் தட்டுவதில்லை.

புறாப் பந்தய உலகம் அலாதியானது. எல்லோருக்கும் புத்தாண்டு ஏப்ரல் மாதத்தில் வந்தால் இவர்களுக்கு மே மாதம். புறாக்களை அதிக நேரம் பறக்கப் பயிற்சியளிப்பது முக்கியமானது. புறாக்களின் புகைப்படமும், கண்களின் க்ளோஸப்பும் அடங்கிய புகைப்பட ஆல்பங்கள் உண்டு. விற்பனை சில சமயம் லட்சங்கள் வரை போகலாம். சில புறாக்கள் குறிப்பிட்ட சுற்றளவு பறக்கும். இன்னும் சில நீண்ட தூரங்கள் எடுத்துக்கொள்ளும். அனைத்துமே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மீண்டும் காட்சியளிக்க வேண்டும். அதற்குத்தான் கடும் பயிற்சி. பறந்து கொண்டிருக்கும் ஒரு புறாவைக் கீழே இறக்க வேண்டுமென்றால், மேலும் சில புறாக்களைப் பறக்க விட வேண்டும். இவற்றின் சிறகுகளின் படபடப்பு பறந்து கொண்டிருக்கும் புறாவைக் கவர்ந்து கீழே இறங்கச் செய்யும். புறாப் பந்தயங்களுக்கு ரெஃப்ரீ என்றழைக்கப்படும் நடுவர்கள் உண்டு. இவர்கள் புறாக்கள் பறக்கும் நேரத்தையும், மீண்டும் காட்சியளிக்கும் நேரத்தையும் குறித்துக்கொண்டே வருவார்கள். இவர்கள் சொல்லும் தீர்ப்பே இறுதியானது. அப்படியும் சிலர் இவர்களைக் கைக்குள் போட்டுக்கொண்டு மோசடி வேலைகளைச் செய்வதுமுண்டு. அப்படி நடந்த ஒரு சம்பவம் லிங்கத்தின் வாழ்க்கையை மாற்றுகிறது!

சுயம்பு ஒரு பணக்கார ரவுடி. 10 வழக்குகளுக்கு மேல் நிலுவையில் இருக்கும் ஆசாமி. இவனும் ஒரு புறாப் பந்தய பைத்தியம். இவன் பங்குகொள்ளும் பந்தயத்தில் நடுவரைக் கைக்குள் போட்டுத் தில்லுமுல்லு செய்கிறான். இதைக் கண்டுபிடித்த லிங்கம், அவனுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறான். சுயம்புவின் ஜால்ராக்கள் அனைவரும் லிங்கத்தின் மீது தாக்குதல் நடத்துமளவுக்கு விவகாரம் போகிறது. ரமேஷ் பண்ணையார் வந்தும் எதுவும் கட்டுக்குள் வரவில்லை. யாரும் யாரையும் மதிப்பதாக இல்லை. இடையில் சுயம்பு-வின் மைத்துனன் கடும் வன்மத்துடன் வந்து சேர்கிறான். எப்போதுமே லிங்கத்தின் எதிரியான வில்லி, தன் பங்குக்குத் தூபம் போடுகிறான். சுயம்புவின் புறா காட்சியளிக்க வரும் நேரத்தில் திடீரென்று பட்டாசுகள் வெடிக்க, புறா குழம்பிப் போய் வரவில்லை. லிங்கம் கோஷ்டியினர்தான் இந்தப் பட்டாசு வெடிப்புக்குக் காரணம் என்று புரளி கிளப்புகிறார்கள்.

லிங்கத்தின் புறா பறக்கும் தினம் வருகிறது. அதற்கு முன் அவன் இரவுபகலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புறாக்களுக்குப் பயிற்சியளிப்பதையும், பைரி என்றழைக்கப்படும் கழுகு, பறக்கும் புறாக்களை விரட்டித் தாக்கிக் கொல்வதையும் விரிவாகத் திரையில் காட்டுகிறார்கள். ஒன்றிரண்டு புறாக்கள் மிஞ்சுகின்றன. ஒன்று, அன்று பறக்க விடப்படுகிறது. நடுவர் இவனுக்கு விரோதமாகவே நடந்துகொள்கிறார். புறா காட்சியளிக்கும் நேரத்தில் திடீரென்று வானத்தில் ஏராளமான புறாக்



கள் தோன்றுகின்றன. இவனது புறா மிரண்டு போனாலும் சரியான நேரத்துக்குக் காட்சியளிக்கிறது. ஆனால் எதிர்க்கோஷ்டியினரும் நடுவரும் அது இவனது புறாவே இல்லை என்று சாதிக்கின்றனர். எவ்வளவு கெஞ்சியும் நடுவர் கேட்பதாக இல்லை. இயலாமையின் ஆவேசத்துடன் எங்கிருந்து புறாக்கள் கிளம்பி வந்தன என்று தேடிக் கிளம்புகிறான். எல்லாமே சுயம்புவின் இடத்திலிருந்து வந்தவை என்று தெரிந்து நேராக அவனிடம் மோதுகிறான். கட்டுமஸ்தான சுயம்பு, கத்தியால் லிங்கத்தைச் சரமாரியாகத் தாக்கி, சாலையில் தூக்கியெறிகிறான்.

லிங்கத்தைத் தேடிவந்த நண்பர்கள், அவனைத் தூக்கி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றனர். அங்கு ரமேஷ் பண்ணையார் எவ்வளவோ தடுத்தும், அமல் ஆவேசத்துடன் சுயம்புவைப் பழிவாங்க ஓடுகிறான். அவன் வீட்டு வாசலில் ஒரு அழகிய புறாவைப் பறக்கவிட்டவுடன், புறா வெறியன் சுயம்வின் கவனம் முழுவதும் அதன்மீது பாயும்போது, பின்னால் அவன் இடுப்பில் கடப்பாரையால் செருகி விட்டு ஓடுகிறான் அமல்!

அமலைத் தேடி பெரிய கூட்டமே அலைகிறது. அவன் தஞ்சம் புகுந்திருப்பதோ ஒரு பன்றிப் பண்ணையில். அச்சம் அவனைப் படாத பாடு படுத்துகிறது. செய்தியறிந்து லிங்கமும் குமுறுகிறான். பண்ணையாரிடம் அரசியல்வாதிகள் உதவி கொண்டாவது அவனைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டுகிறான். ரமேஷும் ஏராளமான பெரிய மனிதர்களை இதற்காகச் சந்திக்கிறார். எதற்கும் சுயம்பு மசியவில்லை. லிங்கம் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டவுடன், துணிமணிகளை எடுத்துக்கொண்டு சென்னைக்குக் கிளம்புகிறான். அவன் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. லிங்கம் டிஸ்-சார்ஜ் ஆனவுடனேயே சுயம்புவின் ஆட்கள் அவனைத் தேடியலைகின்றனர். பஸ் நிலையம் நோக்கி அவன் பைக்கில் செல்லும்போதே பெரும் படை துரத்துகிறது. அந்த நேரத்தில் சுயம்புவின் தொலைபேசி அனைவரையும் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு திரும்பி வருமாறு சொல்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் நேரில் வந்து சுயம்புவை மிரட்டியதால் வந்த முடிவு. ஆனாலும் அவன் அடங்கவில்லை. அன்றிரவே அமலைக் கொடூரமாகக் கொலை செய்கின்றனர்.

அமல் அனுமதிக்கப்பட்ட மருத்துவமனையில் நண்பர்கள் அனைவரும் லிங்கத்திற்குத் தகவல் தர முயற்சிக்கையில் அவனது தாய் தடுக்கிறாள். அவன் சென்னையில் எப்படியாவது பிழைக்கட்டும், இங்கு வந்து மீண்டும் ரத்தக் களரியில் குதிக்கக்கூடாது என்று மன்றாடுகிறாள். லிங்கம் வரமாட்டான் என்ற அசரீரியோடு படமும் முடிகிறது!

சமீபத்தில் வெளிவந்த தமிழ்ப் படங்களில் என்னை மிகவும் கவர்ந்தது ‘பைரி’. ஒரு முதல் படத்தில் இவ்வளவு திறமைகளைக் காட்டமுடியுமா என்ற கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார் இயக்குனர் ஜான் கிளாடி. அவரே அமல் என்ற பாத்திரத்தில் அற்புதமான நடிப்பையும் வெளிப்படுத்தியிருக்கிறார். வீட்டுக்குள் மாட்டியிருக்கும் காமராஜர், சிவாஜி படங்கள் தொடங்கி பல நுணுக்கமான விஷயங்கள் படம் முழுதும் விரவி நிற்கின்றன. லிங்கமாக நடிக்கும் சையது மஜீத் முதல் அம்மாவாக நடிக்கும் விஜி சேகர் வரை அனைத்து நடிகர்கள் வெகு உணர்ச்சிகரமாக நடித்திருக்கின்றனர். புறாப் பந்தய ஆர்வம், வெறியாக மாறும்போது எந்தளவுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றனர் இந்த இளைஞர்கள்.

அமேசன் தளத்தில் காணக் கிடைக்கிறது!



jeeva@thaiveedu.com




மலையக இலக்கியத் தளத்தில் 'கூடைக்குள் தேசம்' என்றதுமே சு. முரளிதரனின் ஹைக்கூக் கவிதையும் கவிதைத் தொகுதியுமே நினைவுக்கு வரும். ஜப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூக் கவிதைகள் பரபரப்பாகப் பேசப்பட்ட எண்பதுகளில்,

*'இந்தக் காட்டில்*
*எந்த மூங்கில்*
*புல்லாங் குழல்'*
என்கிற கவிதையையும்

*'உற்றுப்பாருங்கள் தெரியும்*
*ஆற்று மணல்களும் எழுதும்*
*அழகிய கவிதைகள்'*

போன்ற கவிதைகளை எழுதிய அமுதோனின் (தமிழ்நாடு) 'ஹைக்கூ' கவிதை நூலைப் பைபிள் போலத் தூக்கித் திரிந்தவர்கள் நாங்கள். எங்காவது உரையாற்ற வாய்ப்புக் கிடைக்கும் பொழுதுகளில் (இப்போது கூட மாணவர்கள் - இளைஞர்கள் மத்தியில் உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்தால்) இந்த இரண்டு கவிதைகளில் முன்னையதை உரையின் தொடக்கத்திலும் பின்னையதை உரையின் முடிவிலும் திருக்குறள் போலக் கூறுவதுண்டு. ஒரு வகையில் திருக்குறள் தான் ஹைக்கூ கவிதை வடிவத்தின் தொடக்கப்புள்ளி என்று வாதிடுவோரும் உள்ளனர்.

இப்படியான ஹைக்கூத் தாக்கம் ஓங்கியிருந்த எண்பதுகளின் பிற்கூறுகளில் 'கூடைக்குள் தேசம்' எனும் மலையக ஹைக்கூக் கவிதைத் தொகுதியை வெளியிட்டு ஆச்சரியம் காட்டியவர் மலையகக் கவிஞர் சு. முரளிதரன். மலையகத்துக்கு மாத்திரம் அல்லாது இலங்கைக்கே இதுதான் முதலாவது தமிழ் ஹைக்குக் கவிதை நூல் என்பதுவும் அந்த நூலின் விலை அப்போது ரூ. 9.75 என்பதும் எனக்கு இன்றுவரையான ஆச்சரியங்களில் ஒன்று. அதே நேரம் இன்று சு. முரளிதரன் அந்தக் கவிதைகளே வாசித்தால் அவரே சில படிமங்களை மாற்றிப் போட வாய்ப்புகள் உள்ளன.

*'கூடையை கனக்க*
*கனக்கச் சுமந்து சென்றார்கள்*
*உள்ளே இந்தத் தேசம்'*
எனும் முதலாவது கவிதையுடன் ஆரம்பமாகும் தொகுதிஅது.

*'சங்கக் கூடுகள் அப்படியே*
*இருக்க ஆவிகள் இடம்மாறின*
*இன்னும் சங்கச் சண்டை'*
எனும் அரசியல் பேசும் ஹைக்கூ,

*'வேலை முடித்தவன் வீடு திறந்தான்*
*இனி விடியுமட்டும்*
*பூட்டுக்குள் சாவி'*
எனும் காமம் சொட்டும் கவிதை,

*'போதுமான ஆட்களேறியும்*
*புறப்படவில்லையே புகையிரதம்!*
*லயன்கள்'*
என மலையகப் பெருந்தோட்டக் குடியிருப்பைக் குத்திக்காட்டும் ஹைக்கூ,

*'நிலவுக்காக அழுவதை*
*நிறுத்திக்கொண்டது லயக் குழந்தை*
*ரொட்டி முன்னே'*
என அந்த லயக் குழந்தைகளின் வறுமையை அழகியலில் வடித்த ஹைக்கூ,

*'வறுமை கொடுமை அடக்குமுறை*
*மலிந்த பூமியில் கொழுந்து விட்டது*
*தேயிலை'*
எனும் அழகியல் நிறைந்த அரசியல் எடுத்துரைப்பு என மலையகம் சார்ந்ததும் மலையகம் சாராததுமான 76 ஹைக்கூப் பாணியிலான கவிதைகளைக் கொண்ட 'கூடைக்குள் தேசம்' அந்தனி ஜீவாவின் முயற்சியில் மலையகம் வெளியீட்டகம் சார்பில் 1988-ம் ஆண்டு வெளிவந்தது.

இந்த நூலுக்கு 'நேசம் கலந்த உண்மை' எனும் தலைப்பில் பின்னுரை எழுதியுள்ள 'மேமன் கவி' இவ்வாறு கூறுகிறார்.

'சிலவேளை ஒரு கவிதைத் தொகுதியின் தலைப்பே அருமையான கவிதையாக மலர்வதுண்டு.அதே போல நண்பர் சு.முரளிதரனின் முதலாவது தொகுதியான 'தியாக யந்திரங்கள்' என்ற தலைப்பே கவிதை நயத்தோடு மிளிர, இன்று வெளிவந்திருக்கும் ஹைக்கூப் பாணிக் கவிதைகள் அடங்கிய தொகு

தியின் தலைப்பான ‘கூடைக்குள் தேசம்’ என்ற தலைப்பே ஒரு ஹைக்கூவின் கனதியைக் கொண்டுள்ளது’

கவிஞர் மேமன் கவி கூறுவது போலக் கவித்துவம் கலந்த இந் தக் ‘கூடைக்குள் தேசம்’ எனும் தலைப்பு மலையகத்தில் ஒரு சிறுகதைக்கும் அந்த சிறுகதையும் இன்னும் பல கவிதைக ளும் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்றுக்கும் சூட்டப்பட்டிருக்கி றது என்பது சுவாரஷ்யமான தகவலாகவே இருக்கும்.

இவ்வாறு ஒரு படைப்பின் தலைப்பை இன்னுமொரு படைப் புக்கு இடும் வழக்கம் தமிழ்த் திரைபடங்களில் நடப்பதுண்டு. உதாரணத்திற்கு ரஜினிகாந்த் நடித்த ‘விடுதலை’ எனும் அதே தலைப்பில் வெற்றிமாறன் இயக்கி சூரி நடித்த ‘விடுதலை’யும் வெளிவந்தது.

‘கண்டிச் சீமை’ எனும் கவிதை நூல் மலையகத்தில் கண்டி யில் வெளிவந்துள்ளது. தலாத்து ஓயாப் பகுதியைச் சேர்ந்த எம். கதிர்வேல் எனும் ஒரு கவிஞர் இத்தகைய தொகுப் பொன்றை (ஹில் கிங் புக் ஹவுஸ் 2003) வெளியிட்டுள்ளார். ‘கண்டிச் சீமை’ எனும் தலைப்பில் அவர் எழுதியுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.

***‘இருள்வலி ஒளியில் பெரும்பலம் கொண்ட***
***குறிஞ்சி சுற்றி குறிஞ்சா பின்னல்***
***மருள்காண் கானில் மரையும்***
***மானும் மந்தி முயலும் பன்றி***
***வரையும் சரிவும் வாகை மரமும்***
***திரையாய் அசையும் திரண்ட சருகும்***
***கரை புரண்டோடும் காட்டாறு ஓடை***
***கண்டிச் சீமை கொண்ட காட்சி***

***காடுகொன்று காட்சி மாற்ற***
***அட்டைக் கடியில் பட்ட அவதி***
***சாட்சிகளாக சாவுகள் பல காண***
***கண்டிச்சீமை கதைகள் சொல்லும்***
***கேட்டி கிழித்த கீழ்த்துடைக் குருதி***
***காணி முழுதும் சிதறிப் பரவிட***
***தோட்டி வேலை தோட்ட வேலை***
***செய்து செழிப்பாக்கினோம் நாட்டை***

***நாங்கள் நலிந்து நடைபிணமாக***
***ஆன போதும் அசர வில்லை***
***தாங்கள் பெற்ற எம் தயவை மறந்து***
***கோணல் புத்தி கொண்ட மனிதர்***
***நாமம் பலதும் நமக்குச் சூட்டி***
***‘பறத் தமிழன்’ என்றோர் அன்று***
***தேசம்தேடி சென்று கதைகள்***
***தெரிந்த மனிதன் கைமுன் சொன்னான்***

***‘செடித் தெமழு’ அவன் செப்பிய வார்த்தை***
***முரட்டுத் தமிழன் என்பதே கருத்து***
***கொடிபோல தொடர் கொண்ட உறவு***
***இன்று முனைப்பு இதனை அழிக்க***
***அடிமுடி தெரியா அன்னவர் செயலை***
***ஆழ்ந்து நோக்கின் தாழ்ந்து தெரியும்***
***படிப்படியாக அவர் அறிந்து வருந்த***
***பாரினில் காலம் புகட்டிடும் பாடம்’***

இந்தக் ‘கண்டிச் சீமை’ கவிதைக்குள் இயற்கையில் தொடங்கி மிருகங்களுக்குள் வந்து பாரபட்சங்களைப் பாடி அவலங்க ளில் மீளும் காலத்தை எதிர்பார்த்து நிற்கும் கவிதைகளாகி நிற்பதைக் காணலாம். இவை 1960-கள் முதல் அவ்வப்போது எழுதப்பட்டவை 2003-ல் தொகுப்பாக்கம் பெற்றுள்ளது.

இதே ‘கண்டிச் சீமை’ எனும் தலைப்பில் மலையக நாட்டார் பாடல்களின் தொகுப்பொன்று கொட்டகலையிலிருந்து இதே காலப்பகுதியில் (2003) கோ. குமாரவேல், ம. விக்னேஷ்வரன், ச. சிவகுமார், ஜெ. லூபாஹரன், தி. தவராஜ் ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ளதாக கலாநிதி. பெ. சரவணகுமார் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றில் (செல்.. வா.. சேர் - 2024) குறிப்பிட் டுள்ளார்.

‘கண்டிச் சீமையிலே...’ எனும் தலைப்பில் மீட்டுருவாக்க மொழிபெயர்ப்பு ஆய்வு நூல் ஒன்றைச் சட்டத்தரணி இரா.சட-கோபனும் ‘கண்டிச் சீமை’ (வீரகேசரி 2014) எனும் தலைப்பில் மாத்தளை சோமு ஒரு மலையக நாவலையும் (மீனாட்சி புத் தக நிலையம் 2017) தந்துள்ளனர்.

‘மலைகளைப் பேசவிடுங்கள்’ எனும் மல்லியப்புசந்தி திலக-ரின் கட்டுரைத் தொகுப்பு அவரது ஆசிரியரான வ. செல்வ-ராஜா நெறிப்படுத்திய நாடகத்தின் தலைப்புதான். அதே போல 2007-ம் ஆண்டு வெளிவந்த மல்லியப்புசந்தி திலகரின்




‘மல்லியப்புசந்தி’ கவிதை நூல் தலைப்பில் அதற்குப் பின்ன தாக ஒரு மலையகச் சிறுகதை வந்ததாகவும் அறியக்கிடைக் கின்றது. அண்மையில் (கொடகே 2022) ‘மலைகளின் பாடல்’ எனும் தலைப்பில் சிவனு மனோஹரன் எழுதி வெளியீடு செய் துள்ள கவிதை நூலிலும் கூட ‘மல்லியப்புசந்தி’ எனும் ஒரு கவிதை இடம்பெற்றிருப்பது சுவாரஷ்யம் நிறைந்தது.

***‘இது மலைகளின் நுழைவாயில்***
***வந்தாரை ஏற்கும்***
***உயர் நிலம்***
***மலைகளின் மக்கள் தம்***
***உரிமைக்காய்***
***உரத்தொலித்த கோஷங்களின்***
***ஒலிப்பிடம்***
***மலைகளில் திரியும்***
***மாடுகளை வளர்ப்பதாய்***

*சொல்லிக்கொள்வோரின்*
*கபட மேடை*
*அத்தனைக்கும் மேலாய்*
*அரசியல் மேடைக்கும் அதுதான்*
*நுழைவாயில்*

*காலம் இழுத்த கரைகளைக் கழுவும்*
*நிலவு அடர்ந்த*
*நடுநிசிப் பொழுதொன்றில்தான்*
*மல்லியப்பு சந்திக்கு*
*புத்தன் வந்தான்*
*மலைகளை ஆளும்*
*ரட்சகர்களின் கட்அவுட் கண்டு*
*வாயடைத்து நின்றான்*
*சந்தா வளர்த்த*
*சதை பிண்டத்தில் ஒளிரும்*
*தேஜஸ் அவன் கண்களை*
*உறுத்தவே அவனும்*
*நிஷ்டையில் ஆழ்ந்தான்*
*வெளுத்த இரவுகளில்*
*சந்தியில் இறைத்த*
*வாக்குகள்*
*காற்றுடன் கரைந்தும்*
*செத்த சிரிப்புடன்*
*பல் இளிக்கும் பதாகை*
*ஓவியங்களில் ஒழுகும்*
*அருவருப்பு*
*புத்தனுக்கும் பழகிற்று*
*வருடம் ஒரு முறை*
*வந்து போகும்*
*சமன் தெய்யோவுக்கு*
*மலைகளின் மேய்ப்பரை அறிவதற்கு*
*அவகாசம் இருந்ததில்லை*
*வாய்மூடி இருப்பதால்*
*புத்தனின் வாயடைத்துப் போனதாய்*
*நினைப்பாரின் அறிவீனமது*
*இனியும் மல்லியப்பு சந்தியிருக்கும்*
*அங்கு*
*உழைக்கும்*
*மக்களுக்காய் வெடிக்கும்*
*கபட போராட்டமும் நடக்கும்*
*ஆனால்*
*புத்தன் மட்டும் இரான்!*
*ஏனெனில்*
*'மேய்ப்பரின்*
*தூரதரிசனம் கண்டு*
*அவன் மலையேறிவிட்டான்'*

என 'மல்லியப்புசந்தி' எனும் தலைப்பில் சிவனு மனோஹரன் கவிதை எழுதி அங்கே புத்தன் மலையேறிவிட்டான் எனக் கூறி அரசியல் குறியீடு செய்தாலும் அங்கே மல்லியப்புசந்தியில் புத்தன் நிரந்தரமாகிவிட்டான் என்பதுதான் அரசியல் யதார்த்தமாகிறது. மல்லியப்புசந்தி 'பிரின்ஸஸ் சந்தி'-யாக (பிரின்ஸஸ் படமாளிகை) மருவிவந்த ஒரு காலகட்டத்தில் (2000) மக்கள் மொழியான 'மல்லியப்புசந்தி' (மல்லிகைப் பூச் சந்தி எனும் இலக்கணங்களை மீறியதாக) எனும் சொல்லாட்சியைத் தலைப்பாகத் தெரிவு செய்ததை விமர்சகர் வ. செல்வராஜா அறிமுகவுரையில் (நூல் வெளியீட்டு விழா 2007 DKW மண்டபம் ஹட்டன்) சிலாகித்துப் பேசியிருந்தார். இப்படியாக மலையகத் தமிழ் மக்களால் தமது தென்னிந்தியப் பாரம்பரியச் சொல்லாட்சியாக (மல்லிய பூவு என மல்லிகையை அழைக்கும் மக்கள் மொழி) மல்லியப்பு சந்தியை திலகர் மீள நிறுவிய (இல்லாதவிடத்து அது இன்று பிரின்ஸஸ் சந்தியாக மக்களை விட்டுப்போயிருக்கும்) அந்தத் தலைப்பு அதற்குரிய இடத்தின் முக்கியத்துவத்தை தமதாக்கிக் கொண்ட தமிழ் மக்கள் மீது அச்சப்பட்ட சிங்கள பௌத்தம் அவசர அவசரமாக 'சமன்' தேவாலயத்தை அந்த மல்லியப்புச்சந்தியில் அமைத்து 'ஆக்கிரமிப்பு' செய்திருப்பதன் மூலம் அங்கே 'புத்தன்' பௌத்தத்தின் குறியீடாக நிலை கொண்டிருப்பதை இந்தச் சந்தரப்பத்தில் நினைவுறுத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. அதைத்தான் சிவனு மனோஹரன் குறியீடாக்க முயன்றாரா என எண்ணி வாசிக்க எத்தனித்த போது அது மீளவும் ஓர் மலையக அரசியல் விமர்சனக் கவிதையாக மாத்திரமே தன்னை மட்டுப்படுத்திக்கொண்டுருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இத்தகைய பின்னணிகள் போலவே 'கூடைக்குள் தேசம்' எனும் சு. முரளிதரனின் கவிதைத் தலைப்பைக் கொண்ட ஒரு சிறுகதையை கவிஞர் பிபிலை நா. ஜெயபாலன் எழுதியுள்ளார். கவிஞர் பிபிலை ஜெயபாலன் 'மழை காணா மலை', 'வெளிச்சம் காணாத விழிகள்' ஆகிய இரண்டு கவிதை நூல்களைத் தந்தவர். எனினும் இந்தக் 'கூடைக்குள் தேசம்' சிறுகதை அடங்கியுள்ள தொகுப்பு அவரது படைப்புகளை ஆய்வுக்குட்படுத்தி அ. யோகநந்தனி எனும் நூலகப் புலமைச் சான்றிதழ் கற்கை மாணவி ஒருவர் தொகுத்திருக்கும் நூலாகும். இந்த நூல் நா. ஜெயபாலன் எழுதிய எட்டு (08) சிறுகதைகளையும் ஐம்பத்துமூன்று (53) கவிதைகளையும் கொண்டது. இந்தத் தொகுப்பு முயற்சி பற்றித் தொகுப்பாளர் அ. யோக-நந்தினி பின்வருமாறு எழுதுகிறார்.


'இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்படும் நூலகத் தகவல்கள் விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறிக்குச் செயற்திட்டம் ஒன்றை முன்வைக்கும் பொருட்டு ஊவாவின் எழுத்தாளர் என்ற தலைப்பில் ஆக்கங்களைத் தொகுக்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றினாலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளப் பல சிரமங்களை எதிர்கொண்டேன். இத்தருணத்தில்தான் கவிஞர் மல்லியப்புசந்தி திலகர் அவர்களிடம் தொடர்பு கொண்டபோது கவிஞர் நா. ஜெயபாலனைத் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். கவிஞர் நா. ஜெயபாலன் தன்னால் முடிந்ததைச் செய்வதற்கு முன்வந்தார். எனது செயற்திட்டமும் வெற்றியளித்தது'

இப்படி ஒரு செயற்திட்ட வடிவத்தில் 1988-க்குப் பின்னர் மீண்டும் 2015-ம் ஆண்டு அரங்கிற்கு வந்த 'கூடைக்குள் தேசம்' எனும் தலைப்பில் வெளிவந்த தொகுப்பிலும் ஜெயபாலனின் ஏனைய நூல்களிலும் உள்ளடங்கியுள்ள அவரது கவிதைகள் குறித்து அடுத்து வரும் பதிவுகளில் பார்க்கலாம்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com



# தமிழறிஞர் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

**– வே. விவேகானந்தன்**

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர்களுள், ஆசுகவியென வர்ணிக்கப்படும் கல்லடி வேலுப்பிள்ளை தனித்துவம் மிக்கவராவார். இவர், வலிகாமம் வடக்கிலுள்ள வயாவிளான் என்னும் கிராமத்தில் வாழ்ந்து வந்த கந்தப்பிள்ளை - வள்ளியம்மை இணையருக்கு மகனாக, 1860-ம் ஆண்டு, மார்ச் மாதம் ஏழாம் திகதி பிறந்தார்.


இவர் தனது ஆரம்பக் கல்வியை, அகஸ்டீன் என்பவரிடம் கற்றுப், பின்னர் பெரும் புலவர் நமசிவாயம், தமிழறிஞர் நெவின்சன் சிதம்பரப்பிள்ளை, புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த வித்துவான் கதிர்காம ஐயர் ஆகியோரிடம் தமிழ் மொழியின் இலக்கண நுட்பங்களைக் கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். சமஸ்கிருத மொழியையும் கற்றுக் கொண்டார். இவர் பெரும்பாலும், இவரது வீட்டுக்கு அருகே காணப்பட்ட பெரியதொரு கல்லின் மேலிருந்தே, புத்தகங்களை படிப்பதும் இரசிப்பதுமாக இருந்தார். எனவே அவ்வூர் மக்கள் இவரை, கல்லடி வேலுப்பிள்ளை என அழைத்து வந்தனர். அதுமட்டுமின்றி இவரது பெயரிலேயே இன்னுமொருவர் அங்கு வாழ்ந்து வந்தனால், இவரை அடையாளப்படுத்தக் கல்லடி வேலுப்பிள்ளை என அழைத்ததாகவும் கூறப்படுகிறது. இளமையிலேயே நினைத்தவுடன் கவிதைகள் புனையும் ஆற்றல் காணப்பட்டமையாலும், ஆயிரக்கணக்கான ஆன்மீகக் கவிதைகளையும், சிறந்த கண்டனக் கவிதைகளையும், தனித்துவம் மிக்க நகைச்சுவைக் கவிதைகளையும் இயற்றி வந்தமையாலும் 'ஆசுகவி' எனவும் மக்கள் அழைத்து வந்தனர்.

வேலுப்பிள்ளை அவர்கள், தனது கருத்துகளைச் சுதந்திரமாகவும், துணிச்சலுடனும் வெளியிடுவதற்காகத், தன் சுய முயற்சியில் ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென நீண்ட காலம் எண்ணியிருந்தார். அவரது அக்கனவு நாற்பது வயதுக்குப் பின்னரே நனவாகியது. தமிழார்வம் மிக்க ஒருசில அன்பர்களின் உதவியுடன் சென்னைக்குச் சென்று, அச்சு இயந்திரம் ஒன்றை விலைக்கு வாங்கி வந்து, யாழ்ப்பாணத்திலே நிறுவி, தானே அச்சுக்கோர்த்து, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் உயர்ந்த குறிக்கோளுடன், 1902-ம் ஆண்டு, 'சுதேச நாட்டியம்' என்னும் பெயரில், இருவாரத்துக்கு ஒருமுறை வெளிவரும் வகையில், பத்திரிகையை வெளியிட்டார். அக்காலகட்டத்தில் இலங்கையில் இடம்பெற்ற சமய, சமூக, அரசியல் தவறுகளையும், குறைபாடுகளையும் துணிச்சலுடன் சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவிக்க அவர் தயங்கியதில்லை.

'இவர்கள் மனுஷரல்லவா ?', 'பணமுள்ள பாக்கியவான்களே யாது செய்கிறீர்கள் ?', 'ஸ்ரீ வர்மாவும் ஆத்மபோதினியும்', 'தேகஸ் திதியும் புண்ணிய கிருத்தியங்களும்', 'காந்தியும் கதரும்' போன்ற கண்டன, சீர்திருத்த, மற்றும் விழிப்புணர்வுக் கட்டுரைகளை அதிரடியாக எழுதினார். அரசைக் கண்டித்து எழுதியதற்காக 1915-ம் ஆண்டு சிறை வாழ்க்கையையும் அனுபவித்தார். அவர் பத்திரிகையை ஆரம்பிக்கும் போது, *'எப்பிரபுவாயினும், எவ்வதிகாரியாயினும், எக்குருவாயினும், எந்நண்பனாயினும், எக்கலை ஞானியாயினும், நீதியற்ற கிரியைகளைச் செய்வார்களாயின், அக்கிரியைகளையும், அவர் கீழ்நிலையையும் வெளிப்படுத்த, எதற்காகவேனும் அஞ்சிப் பின்நிற்கப் போவதில்லை. இதுவே நடுநிலையும், பொது நன்மையையும் விரும்பும் பத்திரிகா இலட்சணமாகும்.'* என்ற கொள்கையுடன் ஆரம்பித்தார். அதனை நடைமுறையிலும் கடைப்பிடித்தார். அதேவேளை, *'நாம் இப்பத்திரிகையை ஆரம்பித்தது ஒருவரைத் தூஷிக்கும் நோக்கத்துடனல்ல. எமது நயத்துக்காகவும், பிறர்க்கு விசேஷ நற்புத்திகளையும், பிறதேச வர்த்தமானங்களையும், அறிவிக்கும் நோக்கமாக்கவுமே தொடங்கினோம்.'* எனக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பத்திரிகையில், அரசியல் விமர்சனம், சமூக செயற்பாடுகள், கிராம அபிவிருத்தி தொடர்பான செய்திகள், சமய, சமூகப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு, சைவ சித்தாந்தம் பற்றிய கட்டுரைகள், பழந்தமிழ் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் என்பவற்றுடன் அக்காலப் பகுதியில் புத்திலக்கியமாக விளங்கிய நாவல்கள், நாடகங்கள், நூல் விமர்சனங்கள் போன்றவையும் இடம்பெற்றன. அதனால் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைக்கும் ஒரு பத்திரிகையாக அது விளங்கியது. மகாகவி பாரதியார், கவிமணி போன்றவர்களின் கவிதைகளும் மறுபிரசுரமாக வெளிவந்தன. அப்பத்திரிகை மூலமும், பிற படைப்புகள் ஊடாகவும் தமிழ் மொழியின் சிறப்

புகளையும், செழுமையினையும் கல்லடி வேலுப்பிள்ளை வெளிக்கொணர்ந்தார். இவரது பத்திரிகைக்கு இலங்கையில் மட்டுமின்றி, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளிலும் வாசகர்கள் இருந்தனர். கவிபாடுவதில் வல்லவரான இவர், வசன நடை கைவந்த வல்லாளர் என அழைக்கப்படும் ஆறுமுக நாவலருக்குப் பின்னர், தமிழ் மொழி, வசன நடையை, அவ




ருக்கு இணையாகக் கையாண்ட பெருமைக்குரியவர்.

கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள், பல கவிதைகளையும் கட்டுரைகளையும் ஆய்வுகளையும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதிய போதிலும், அவற்றுள் மிகச் சிலவே அச்சிலும், நூலுருவிலும், வெளிவந்ததாகக் கூறப்படுகின்றது. அவரது நூல்கள் வரலாறு, சமயம், பண்பாட்டுச் சீர்குலைவு மற்றும் கண்டனம் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி', 'கதிரமலைப் பேரின்பக் காதல்', 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி', 'அழகம்மா திருமண அலங்கோலக் கும்மி', 'உரும்பிராய் கருணாகர விநாயகர் தோத்திரப் பாமாலை', போன்றவற்றை இவரது சிறப்பான படைப்புகளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். மாவைக் கந்தர் அஞ்சலி, மாவை சுப்பிரமணிய சுவாமி தோத்திரம், கதிர்காம சுவாமி பதிகம், கதிர்காம சுவாமி கீர்த்தனம், கதிரை வேலர் பதிகம் என்பன இவரது ஏனைய சில படைப்புகளாகும். நினைத்தவுடன் கவிதை இயற்றிப் பாடும் வல்லமை பெற்ற இவர், ஒரு முறை நிவிற்றிக்கொல்லை என்ற இடத்துக்குத் தனது நண்பரைக் காணச் சென்றார். வியர்த்துக் களைத்து வந்த வேலுப்பிள்ளைக்கு அவரது நண்பர் ஒடியற் கூழ் கொடுத்து பசியாற்றினார். விடைபெறும் போது நண்பர், புலவரே!, தங்கள் வருகையின் நினைவாக ஒரு பாடல் பாடுவீர்களா ? எனக் கேட்டது...,


***'அல்லையுற்று இரத்தினபுரியண்டி யப்பாலே நிவிற்றிக்***
***கொல்லையடைந் தலுப்புக் கொண்டதற்கு - கல்லடியான்***
***வண்டாரும் மாலையணி மற்புயச் சுப்பையனுடன்***
***கொண்டாடினான் ஒடியற் கூழ்'***

எனப் பாடிச் சென்றார்.

நெருங்கிய நண்பரான சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் உதவியோடு, 1918-ம் ஆண்டு வெளிவந்த, 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற நூல் ஒரு வரலாற்று ஆய்வு நூலாகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்த முன்னோர் பற்றியும், சமூகப் பின்னணிகள் குறித்தும், தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறும் நூலாகும். அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்களின் பெயர்களுக்கான காரணங்களை, இடப்பெயர் ஆய்வின் மூலம் நிறுவியுள்ளார். அக்காலப் பகுதியில் சிறந்து விளங்கிய சட்ட மேதைகளில் ஒருவரான, ஐசக் தம்பையா அவர்கள், இந்நூல் பிரசுரமாகி வெளிவரப் பேருதவி புரிந்துள்ளார். இதன் இரண்டாவது பதிப்பு 2002-ம் ஆண்டு ஆசியக் கல்விச் சேவைகள் (Asian Educational Services) என்னும் அமைப்பினால் புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் சிறந்த விமர்சகர் என்பது பலர் அறியாத செய்தியாக இருக்கலாம். 'நொறுங்குண்ட இதயம்', 'அரியமலர்' ஆகிய இரு நாவல்களுக்கு இவர் விமர்சனம் எழுதியுள்ளார். அக்காலத்தில், பல புலவர்கள் நாவல், சிறுகதைகள் என்பனவும் இலக்கியங்களா ? என முரண்டு பிடித்துக் கொண்டிருந்த போது, நாவலை இலக்கியமாகக் கருதி, விமர்சனம் செய்து, விமர்சனத்துறைக்கு முன்னுதாரணமாக விளங்கியவர் கல்லடி வேலுப்பிள்ளை. இந்த இரு நாவல்களையும் எழுதியவர், பிரபல சட்ட மேதையான ஐசக் தம்பையா அவர்களின் மனைவியார், மங்களநாயகி அவர்கள். 267 பக்கங்களையும், இருபது அத்தியாயங்களையும் கொண்ட, 'நொறுங்குண்ட இதயம்' என்ற நாவலைப் படைத்த தன் மூலம், ஈழத்தில் தமிழ் நாவலைப் படைத்த, முதன்மைப் பெண்மணி என்னும் பெருமையையும் அவர் பெற்றார். இதனைக் கல்லடி வேலுப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். *'நம் யாழ்ப்பாணப் பெண்மணிகளுள், 'கற்ற பெண்டிர்க்கு விளக்கு' என்னும் பிராகிருத சாக்கியாய், இவ்விதமான ஒரு இனிய போதனையுள்ள பெரிய கற்பனா சரிதத்தை, மன அடக்கத்தோடு முதன்முதல் செய்தவர் இவரேயெனில், இதை நம் தேயத்தார், நம் சாதியர் வியந்து பாராட்டுவது நூதனமாக மாட்டாது'.*

மங்களநாயகி அவர்கள் எழுதிய, 'அரியமலர்', என்னும் நாவல் பற்றிக் கல்லடி வேலுப்பிள்ளை, *'தமிழ் மணம் வீசப்பெற்ற எச் சமயப் பிள்ளைகளாயினும், இச்சரித்திரத்தை வாசிப்பா ரெனில், மிகுந்த ஆச்சர்யத்தையும், ஆத்திரத்தையும் அடை யாது விடமாட்டார்கள் என்பதும், இப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினோர், முற்றாக வாசியாது கீழ் வைக்க மனம் ஒருப்*



*படார் என்பதும் சித்தாந்தம். ஆதலின் இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்தவர் கையிலும் நிச்சயம் இருக்கவேண்டிய ஒன்றா கும் என்பதை இதனை வாசிப்போர் நன்கறிவர்'* என வியந்து பாராட்டியுள்ளார்.

கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்களுடனும், புலவர்களுடனும், மிக நெருங் கிய தொடர்பைப் பேணி வந்தார். உடுப்பிட்டி சிவசம்புப் புல வர், புலோலியைச் சேர்ந்த நா. கதிரவேற்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர், நவநீத கிருஸ்ண பாரதியார், சேர். பொன். இராமநாதன், நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர், குருகவி மகா லிங்கசிவம், தெல்லியூர் பாவலர் தெ. துரையப்பா போன்றவர் கள் அவர் மீது அன்பும் நன்மதிப்பும் கொண்டிருந்தனர். தமிழ கத்திலிருந்து மறைமலையடிகள் இலங்கைக்கு வந்தபோது, அவரது நட்பையும் பெற்றுக் கொண்டார்.

கவிஞர், உரைநடை ஆசிரியர், துணிவு மிக்க பத்திரிகையா ளர், இணையற்ற கண்டனகாரர், வரலாற்று ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட கல்லடி வேலுப்பிள்ளை அவர் கள் 1944-ம் ஆண்டு ஜுலை மாதம் நான்காம் திகதி அமரத்து வமடைந்தார். அவரின் மறைவின் போது, அவரிடத்து நீங்காத அன்பும், மரியாதையும் கொண்ட பெரும் புலவரான, நவநீத கிருஷ்ண பாரதியார் பின்வரும் பாடலைப் பாடி நினைவு கூர்ந்தார்.

***'மலைமலிந்த பெருவெள்ளம் பாய்ந்ததெனச்***
***சொற்பொருட்கள் மலிந்து பாயும்***
***கலைமலிந்த நிமிடகவி மாற்றாரும்***
***தம் பிழையைக் கருத்திற் கொண்டு***
***நிலைமலிந்த ஒழுக்கநெறி நிகழச் செய்***
***எழுத்தாளன் நேர்மை குன்றான்***
***சிலைமலிந்த எழுத்தென்ன வேற்பிள்ளை***
***புகழுடலம் சிறந்து வாழி'***

'இவர் ஒரு கண்டனப் புலி. நினைத்தவுடன் பாடும் தெய்வீக சக்தி மிக வாய்க்கப் பெற்றவர்.' எனப் பேராசிரியர் ஆ. சதாசி-வம் 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் 'நமது பிள்ளை அவர்கள் இயற்கைப் புலவர் வரிசையில் வைத்து மதிக்கப்படுவதற்குரியவர். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு அங்குரார்ப்பணம் செய்தவர்களில் பிள்ளையவர்களும் ஒருவர்' எனப் பாராட்டியுள்ளார். 'அவருடைய பெரு முயற்சியாக, 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற பெருநூல் விளங்குகிறது' என இரசிகமணி கனக. செந்திநாதன் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலில் விதந்துரைத்துள்ளார். வழக்கறிஞர் வ. இராசநாயகம் அவர்கள் தனது உள்ளக் கிடக்கையினைப் பின்வரும் பாடல் மூலம் வெளிப்படுத்தியுள் ளார்.

***கண்டனத்திற் கைதேர்ந்த காள மேகம்***
***கருதுதமிழ்க் கன்னிகைமோ கத்தால் ஈழ***
***மண்டலத்தில் வயவையென்னும் சிற்றூர் தன்னில்***
***வந்துதித்தான் எனக்கவிகள் ஏங்கி நிற்கத்***
***தண்டமிழில் இடிகுமுற மின்னல் பாயச்***
***சரசரென வசைமாரி பொழிந்து நிற்கும்***
***வண்டமிழ்வேற் பிள்ளயென்னும் கவிஞா! - நின்னை***
***மறந்திடுமோ தமிழுலகம் மறவா தன்றே!***

இவ்வாறு அக்காலப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோரால் போற்றிப் புகழப்பட்ட கல்லடி வேலுப்பிள்ளை அவர்களை எதிர்காலச் சந்ததியினரும் அறியும் வகையில் நினைவு கூரு வோமாக. கல்லடி வேலுப்பிள்ளையின் பேரன் சிலோன் விஜ யேந்திரன் என்பவர் 1990-ம் ஆண்டு 'கல்லடி வேலுப்பிள்ளை வாழ்வும் பணியும்' என்னும் நூலை எழுதி 1990-ம் ஆண்டு வெளியிட்டார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.



vivekananthan.v@thaiveedu.com



# கனடாவின்
## கவின் தமிழ்த்தூது
# கவிநாயகர் வி. கந்தவனம்

### - இளவாலையூர் செ. இராசநாயகம்

அமரராகிய கவிமணி கந்தவனமும் நானும் 1933-ம் ஆண்டின் ஆவணியிலும், ஐப்பசியிலும் பிறந்தோர் ஆவர். என்னிலும் இரு மாதங்களால் இளையவர். கனடாவிலே தான் அவரை நான் சந்தித்தேன்.

ஸ்கார்பரோ நகரப் பொது அவை அரங்கு, திருமறைக் கலா மன்ற இயக்குனர் அமரரான அருட்பணி மரிய சேவியரின் அறுபதாவது அகவை விழா, அமரரான ஆத்மஜோதி முத்தையா அவர்களது வரவேற்பு விழா, நான் என் மகனாகவே நேசிக்கும் குரும்பசிட்டி ஜெகதீஸ்வரனது அறுபதாவது அகவை விழா போன்ற சில நிகழ்வுகளில் கண்டு கதைத்த அறிமுகப் பழக்கமே கிடைத்தது.

தமிழில் வாரந்தோறும் வரும் அச்சு ஊடகங்களாலும், பல பொது மேடை விழாக்களாலும், கனடியத் தமிழ் வானொலிக் கூட்டுத்தாபனம் (CTBC) தொடர்ச்சியாக வெளிவந்த கவிநாயகரின் வாழ்வும் வரலாறும் நிகழ்வினாலும் கவிஞரின் அறிவாற்றல், அவரது புகழ், ஆளுமை என்பவற்றை நிறையவே அறிந்திருந்தேன். தனியே ஓரிடத்தில் அமருகின்ற வாய்ப்புக் கிடைக்கின்ற வேளைகளில், எதையாவது எழுதிக்கொண்டேயிருக்கும் கந்தவனத்தாரின் மனப்பக்குவத்தைக் கண்டு நான் வியந்திருக்கிறேன். ஈற்றில் அவரை நான் சந்தித்த நிகழ்வே என் இதயத்திற்கு இதமானதும், துக்கமானதுமாக நிலைத்துள்ளது.

என் இதயத்தின் கடும் அடைப்புகளை அகற்றும் மருத்துவ சிகிச்சையின் பின், செய்யவேண்டிய கண்காணிப்புடன் கூடிய நடைப்பயிற்சிக்காக சென்ரினரி வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு, கீழ்ப்பாகத்திலுள்ள பொதுவான இருக்கைப் பகுதியில் கவிஞர் தனிமையாக இருக்கக் கண்டேன். நோய் வாய்ப்பட்டுள்ள எவரையோ பார்ப்பதற்கு வந்திருப்பார் என்ற எண்ணத்தில், கிட்டப்போய், ஏன் இங்கு வந்திருக்கிறீர்கள் என்று வினவினேன். நான் கேட்ட வினாவுக்கு உரிய விடையைத் தராது, நீர் ஏன் வந்திருக்கிறீர் என்று சொல்லும் என எதிர்வினா எழுப்பினார். என் இதய அடைப்புகள் அகற்றப்பட்ட மருத்துவ சிகிச்சை பற்றிக் கூறினேன். எனது பதிலைக் கேட்டவுடன் பெரிய சத்தத்தோடு சிரித்துக்கொண்டே ‘இனி உமக்கு மரண பயமே இல்லை அப்பனே’ என்று வலுவூட்ட நானும் ‘மரணமடையாமல் வாழ எனக்கு விருப்பம் இல்லை’ என்று கூறி விடைபெற்றுச் சென்றேன்.


அவர் அங்கே தன்னைப் பீடித்திருந்த நோய் காரணமாகத் தான் வந்திருந்தாரோ... அந்த நோய் பற்றிய உள்ளுணர்வோடுதான் எனக்குத் தைரியம் ஊட்டும் வார்த்தைகள் வெளிவந்தனவோ... என கந்தவனக் கவிக்கனவானின் உள்ளத்தெழுந்த வார்த்தைகளை எண்ணி வியக்கின்றேன். வேதனை அடைகின்றேன்.


அமரரான கவிநாயகர் செந்தமிழால், மரபுத் தமிழ்க் கவிதைகளால், கருத்துச் செறிந்த மேடைப்பேச்சால், இந்து மாமறைத் தெய்வீகச் சிந்தனை ஊட்டல்களால் கற்றோர், செவிப்பயன் பெற்றோர் பலராம். இறந்தும் இறவாப் புகழொடு வாழ்வபர்.

அமரர் கவிநாயகர் கந்தவனத்தாரைப் பற்றி என் நெஞ்சில் நிலைத்துள்ள ஒரு சில வார்த்தைகள் இவை.

***தனிச் சுவைத் தமிழ்க்***
***கவிதை மலர்களின் நந்தவனம்***
***நமக்குத் தொழில் கவிதை என்ற***
***பாரதியின் சீடனாய் வந்தவனம்***
***கவி உளத்தோர் எல்லாம்***
***தமக்குரியர் எனக்கூறும் சொந்தவனம்***
***காலத்தின் கட்டாய விதியால்***
***அமரகவி ஆகிவிட்ட கந்தவனம்***
***இவர்போல் இனி எமக்கு வேறெவரோ***
***எனத்தேட வைத்ததே இந்தவனம்***

rasanayagam.s@thaiveedu.com






# கவிஞர் கந்தவனத்தின் பாவாரம்

## மைதிலி தயாநிதி


அண்மையில் இயற்கை எய்திய கவிஞர் கந்தவனம் (1933-2024) தமிழ்ச் செய்யுள் மரபில் நின்று கவிதை யார்த்தவர். நூல்கள் பலவற்றை வெளியிட்டவர். அவர் இயற்றிய செய்யுள் நூல்களுள்ளே பாவாரமே அளவிலும், பொருளிலும் ஏனைய நூல்களிலும் பார்க்க முக்கியத்துவமுடையதாகத் திகழ்கிறது. பாவாரம் என்பது 2008-ம் ஆண்டில் சென்னை காந்தளகம் பதிப்பித்த ஓர் இசைத்தமிழ் நூலாகும். இந்நூலுக்கு முன்னோடி எனக் கருதத்தக்கவை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் பல்லவர் காலத்தில் எழுந்தனவும், பின்னர் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டு, இசையமைக்கப்பட்டனவுமான தேவாரங்களாகும். இந்தியாவிற் காணப்படும் 63 தலங்கள், இலங்கையில் உள்ள 45 தலங்கள் என மொத்தமாக 108 தலங்கள் மீது பாடப்பட்ட பதிகங்களைக் கொண்ட பாவாரம், தமிழ்ப் பண் முறைமையின் பிரகாரம் இசையமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பாவாரத்திற்கும் தேவாரத்திற்கும் பொருள், வடிவம், இசை என்பனவற்றின் அடிப்படையில் ஒற்றுமை உண்டு. தேவாரம் பல்லவர் காலத்தில் வேளாளர்களும், பிராமணர்களும் ஒன்று சேர்ந்து முன்னெடுத்த பக்தியியக்கத்திற்கு உந்துசக்தியாக இருந்தது போன்று, பாவாரமானது கனடாவில் ஈழத்தமிழ்ச் சைவத்தின் வித்தீட்டு முயற்சிகளுக்கு உரனூட்டுவதாக அமைகிறது. மேலும், இந்நூல் சமகாலத் தமிழர் வாழ்வியல் குறித்த பல குறிப்புகளையும் கொண்டிருக்கின்றது.

மேலும், அவரின் பாவாரம் பரந்த தமிழ்ச் சமூகச் சூழலுடன் தொடர்புடையது. ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான தொன்றுதொட்டு வரும் சமூக, பண்பாட்டு உறவைப் பாவாரம் புதுப்பிக்கிறது. அதே சமயம், வடிவத்தாலும், பொருளாலும் தேவாரத்தை ஒத்திருக்கின்றமையால், தேவாரத்துக்கிணையான அந்தஸ்தினை அது கோரி நிற்பது போலுள்ளது. அத்துடன், ஈழத்தில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் என திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய இரண்டு மட்டுமே இருக்கத்தக்கதாக, அவற்றுடன் நாற்பத்து மூன்று தலங்களைச் சேர்த்துத் தமிழகத்திற்கிணையான சிவபூமியாக ஈழத்தைக் கட்டமைக்கவும் பாவாரம் முனைகிறது. பாவாரம் பெறும் ஈழத்திருத்தலங்களாவன: திருக்கோணமலை, திருத்தம்பலகாமம், திருக்கேதீச்சரம், திருமுன்னீச்சரம், திருநகுலேச்சரம், திருவண்ணார்பண்ணை, திருக்காரைநகர், திரு ஊர்காவற்றுறை, திரு ஊரதீவு, திருச்சிதம்பரேச்சரம், திருவட்டூர், திருச்சுதுமலை, திருச்சுழிபுரம், திருச்சண்டிலிப்பாய், திருநல்லூர்-சட்டநாதர், திருநல்லூர்-கயிலாயநாதர், திருநெல்வேலி, திரு உரும்பராய், திரு இணுவில், திருக்கதிரைமலை, திருமயிலணி, திரு ஏழாலை, திரு இருபாலை, திருப்புத்தூர், திரு ஆவரங்கால், திருவல்வெட்டித்துறை, திருப்புலோலி (பருத்தித்துறை), திருமூச்சம்புலம், திருமட்டுவில், திருச்சாவகம், திருக்கொடிகாமம், திரு உருத்திரபுரம், திருமுரசுமோட்டை, திருப்புதுவிளாங்குளம், திருவவுனிக்குளம், திருக்கோயிற்குளம், திரு ஒட்டுசுட்டான், திருக்கொக்கட்டிச்சோலை, திருச்செட்டிப்பாளையம், திருப்பொன்னம்பலவாணேச்சரம், திரு அருணாசலேச்சரம், திருக்கப்பித்தாவத்தை, திருநுவரெலியா, திரு இரத்தினபுரி, திருக்காலி என்பனவாகும்.

கவிஞர் கந்தவனம் தனது சொந்த அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்குக் கவிதையை ஊடகமாகக் கொண்டனர் என்று கூறமுடியாது. சொந்த அனுபவ வெளிப்பாடாக அமையும் பாடல்கள் தன்னுணர்ச்சிக் கவிதை எனும் வகைமைப்பாற்படும். ஆனால், கவிஞரது கவிதைகளிலே சமூகத்தின் சிந்தனை மாற்றத்திற்கேதுவான கருத்துகளுக்கு முதன்மை இடம் கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம்.

பாவாரம் வெறும் தோத்திர நூலாக மட்டும் அமையாது மக்களிடையே சமத்துவமின்மை, ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பாதிக்கும் இனப்பிரச்சினைகள் முதலான அரசியல், சமூக நிலைமைகளைப் பிரதிபலிப்பதாயும் விளங்குகிறது. இத்தகைய தொரு சமூக பிரக்ஞையை கவிஞர் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் எழுதிய கீரிமலையினிலே (யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1969), இலக்கிய உலகம் (கொழும்பு: அரசு வெளியீடு, 1964), பாடுமனமே (சாவகச்சேரி: நுணாவிலூர்த் தமிழ் மன்றம், 1972) முதலிய நூல்களிலும் காணலாம். இந்நூல்கள் அக்கால சமூக, இலக்கியச் சூழல்கள் தந்த சவால்களினால் உந்தப்பெற்று எழுதப்பட்டவை. 1960-களில் நிகழ்ந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டங்கள், இலக்கியத்தில் அக்காலத்தில் நிகழ்ந்த மரபும், புதுமையும் பற்றிய கருத்துப் போராட்டங்கள், இலக்கியத் திறனாய்வில் மார்க்சிய கோட்பாட்டின் செல்வாக்கு முதலானவை இந்நூல்களின் தோற்றப்பாட்டில் செல்வாக்குச் செலுத்தின. இக்காலகட்டத்தைக் குறித்து யாழ்வாணன் யாழ் இலக்கிய வட்டம் - இருதசாப்தங்கள் - சில நினைவுகள் (1986) எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார்:

*1956-57-ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நாட்டில் பரவலாகப் பொருளாதார, அரசியல், கலாசாரத் துறைகளில் புதிய சிந்தனைகள் ஏற்படத் தொடங்கின. இடதுசாரி இயக்கங்கள் தங்கள் அரசியல் சித்தாந்தங்களோடு கலை இலக்கியத் துறையையும் இணைத்துச் செயற்பட முனைந்து நின்றன. மரபுவழி நின்று இலக்கியம் படைப்போர் ஓரணியாகவும், அரசியல் சித்தாந்தங்களோடு இரண்டறக்கலந்த எழுத்தாளர்கள் மறு அணியாகவும் செயற்படத் தொடங்கினர். இழிசினர் வழக்கு, மண்வாசனை, மரபு, தேசிய இலக்கியம், மக்கள் இலக்கியம் போன்ற புதிய சொற்றொடர்கள் ஆக்க இலக்கிய துறையினரால் வாசகர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டு அதனால் இலக்கிய சர்ச்சைகள் ஏற்படுத்தப்பட்டன. இக்காலகட்டத்திலேதான் பழைமையைப் புரிந்து மரபு மீறாமல் அவற்றின் கட்டுக்கோப்புக்குள் நின்று சமூகநலன் பயக்கும், ஆரோக்கியமான இலக்கியம் படைக்கும் ஆற்றல் உள்ள எழுத்தாளர்களை உறுப்பினர்களாக உள்ளடக்கி உருவாக்கப்பட்டதுதான் யாழ் இலக்கிய வட்டம். யாழ் இலக்கிய வட்டத்தின் தோற்றம், அக்காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர்கள் எனத் தம்மை முத்திரையிட்டுக் கொண்டவர்களுக்கு மருட்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். யானை பார்த்த குருடன் கதை போன்று, யாழ் இலக்கிய வட்டத்தினர் யாவருமே அவர்களுக்குப் பிற்போக்குவாதிகளாகத் தென்பட்டனர். அதனால் இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளை விமர்சித்தும் பேசியும் எழுதியும் வந்தனர்.* (பக்கம் 3-5).




முற்போக்கு எழுத்தாளர் அணியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்ட யாழ். இலக்கிய வட்டத்திற்குத் தீவிர பங்களிப்புச் செய்தவர்களில் கந்தவனமும் ஒருவர். மரபுக் கவிதையின் சமூக இயைபினைப் பேணிய இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் இவரும் ஒருவர். இலக்கியம் என்றால் என்ன? இலக்கிய மரபு என்றால் என்ன? முதலானவை குறித்துச் சிந்தித்துத் தனது கருத்துகளை மரபுச் செய்யுள் வடிவத்தில் இலக்கிய உலகம் (1964) எனும் நூலில் தந்தவர். கவிஞரின் சமுதாய அக்கறையைப் புலப்படுத்தும் சில பாடல்களைப் பாடுமனமே நூலிலிருந்து கீழே தருகிறேன்:

***வாழவோர் வழி யின்றியே தினம்***
***வாடுவார் வளங் கண்டிட***
***ஏழமை வர வேது வாகிய***
***ஏக போக உரிமைகள்***

***வீழவெந் தும டிந்திடத் தமிழ்***
***மேன்மை நீதி விளங்கிட***
***வாழுவான் கவி யாக்கிடே னெனில்***
***வந்து தோன்றிய தேதுக்கே***

***வாழா தவர்கள் வாழ்ந்திடப் பாடு***
***பாழும்வ றுமைதொ லைந்திடப் பாடு***
***ஏழை யென்றொரு மானிட னிங்கே***
***இல்லையில் லையெனத் துள்ளியே பாடு***

***சாதி சமய வேற்றுமை யில்லைச்***
***சண்டைக ளாற்பய னாவதொன் றில்லை***
***நீதி யாவர்க்கு மொன்றெனப் பாடு***
***நெஞ்சினில் தூய்மைவி ளங்கிடப் பாடு***

இத்தகையதொரு சமூகப் பிரக்ஞையின் எதிரொலியைப் பாவாரத்தில் கேட்க முடியும். 'சாதிபேதங்கள் ஏதுமில்லாதார்' (பாடல் 409) 'சாதிபேதம் பாராதார்' (பாடல் 458) 'சாதிகள் நோக்கமாட்டார் சாத்திரம் பார்க்கமாட்டார்' (பாடல் 54) 'சாதியிலார் பேதமிலார் சாத்திரங்கள் ஏதுமிலார்' (பாடல் 997) என்று இறைவனை வழுத்தும் கவிஞர்,

***சைவத்தில் சாதி இல்லை***
***சமூகத்தில் தானும் இல்லை***
***வையகத்தில் பிறப்பி னாலே***
***மக்களிற் பேதம் இல்லை***

- பாடல் 608

என்று அறைகின்றார்.

கனடாவில், குறிப்பாக, இலங்கைத் தமிழர்களிடையே சைவத்தை வேரூன்ற உழைத்தவர்களுள் கவிஞரும் ஒருவர். தமிழ்த் தேசியத்தை ஆதரித்த கவிஞராகவே அவரைப் பாவாரம் இனம் காட்டுகிறது. தமிழ்த் தேசியம் மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது எனினும் மத வழிபாடுகளுக்கெதிரானதாக இருக்கவில்லை. எனவே, தமிழ்த் தேசியத்தை ஆதரித்த கவிஞரும் சைவம் தொடர்பான நூல்களையே அதிக எண்ணிக்கையில் ஆக்கியுள்ளார். கவிஞர் தன் வாணாளில் தொடர்ச்சியாக எழுதிவந்தவர். அவரின் பிற சைவ நூல்களிற் சில வருமாறு: நல்லூர் நாற்பது, கனடா கந்தசுவாமி அகவல், சிவபுராண தத்துவம், கனடாவிற் சைவசமயம், சிவ வழிபாடு, கந்தன் கதை, குரு வழிபாடு, விநாயக வெண்பா, விநாயக விருத்தம், திலக-

வதியார் திருவெண்பா, சேக்கிழார் திருவெண்பா, சிவயோகசு வாமிகள் திருவெண்பா. இந்நூல்கள் தெய்வம், குரு, அடியார் எனும் முத்திறத்தார் பற்றியனவாய் அமைந்துள்ளன.

கனடாவில் ஈழத் தமிழ்ச் சைவ அடையாளத்தை சாய் சமிதி,



ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணமிஷன் போன்ற இந்திய இந் துமத அமைப்புகளிளிலிருந்து வேறுபடுத்தும் வகையில் வளர்த்தெடுக்க விரும்பியவர்களுள் ஒருவராகவே கவிஞரை நான் பார்க்கிறேன். கவிஞரும், அவர் போன்றவர்களும் உரு வாக்க முயன்ற சைவம் யாழ்ப்பாண வேர்களைக் கொண்டது. ஆனால், தெரிந்தெடுக்கப்பட்ட முறையிலேயே அவற்றிலி ருந்து அம்சங்கள் பெறப்பட்டன. நாவலர் விதந்துரைத்த ஆல யவழிபாடு, சிவயோகசுவாமிகள் வலியுறுத்திய சிவத் தொண்டு, வடநாட்டு வேதாந்தத்தின் பரவலுக்கெதிராக சேர். பொன். இராமநாதன் முதலியோரும் தமிழக அறிஞர்களும் வரித்துக் கொண்ட சைவசித்தாந்தம் என்பவற்றை மூலங்களா கக் கொண்டது. அதே சமயம் சமத்துவம் முதலான நவீன விழுமியங்களுக்கு ஏற்ப இசைவுபடுத்தப்பட்டது. இச் சைவத் தைக் கவிஞர் இந்து மதத்தின் ஒரு பகுதியாகவே காண்கி றார். கனடாவில் சைவசமயம் எனும் நூலில் 'யாராவது உங் கள் சமயத்தைப் பற்றி விசாரிப்பின் I am a Hindu belonging to the Saiva church' என்று கூறும்படி அறிவுறுத்துகிறார்.

காலதேச வர்த்தமானங்களுக்கேற்பவே கனடாவில் சைவம் வளர்க்கப்படல் வேண்டும் என்ற கவிஞரது உணர்வைப் பாவாரம் பிரதிபலிக்கிறது. இராமலிங்கசுவாமிகள் பாடிய அருட்பாவை நாவலர் நிராகரித்தமை குறித்த செய்திகளை எண்ணிப்பார்க்கும்போது, கவிஞரின் பாவாரம் எனும் நூலாக் கம் அவர் மனத்துணிச்சலையும் காட்டுகிறது. மரபை இறுகப் பற்றியிருப்பவராயினும், தேவை ஏற்படும்போது மாற்றங்க ளைப் புகுத்துவதில் தவறில்லை என்று கவிஞர் நம்பியவர். கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு தான் எழுதிய கந்தன் கதையில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களைச் செய் தவர். அது குறித்து அவர் '*இங்குள்ள சமய மாறிகள் சிலரின் பொய்ப் பிரசாரங்களுக்கும், இளம் சந்ததியினர் கேட்கும் கேள்விகளுக்கும் விடையளிக்கும் முகமாக சில மாற்றங் களையும் புதிய விளக்கங்களையும் தந்துள்ளேன். ஒரு சில சம்பவங்கள் முற்றாகவே நீக்கப்பட்டுள்ளன*' என்று கூறுகி றார். கச்சியப்பரே முதல் நூலை முழுமையாகத் தழுவவில்லை. அதுபோலத் தானும் கச்சியப்பரை வரிக்கு வரி பின்பற்ற வில்லை என்றும் கூறுகிறார்.

பாவாரத்தில் உள்ள பதிகம் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்க ளைக் கொண்டது. பொதுவாக, பதிகத்தின் நான்காம் பாட லில் சிவனின் மைந்தர் பற்றிய குறிப்பும், ஐந்தாம் பாடலில் ஐம்புலனடக்கம், மனவடக்கம் பற்றிய குறிப்பும் உண்டு. 'துன் னியஐம் புலவேடர் சுழலிற் பட்டு' என்ற வரி இடம்பெறும் சிவ ஞானசித்தியார் எனும் சைவசித்தாந்த நூலைப் பின்பற்றிப் புலன்களைக் கவிஞர் 'வேடுவர்' என்று அழைக்கிறார். 'வேடு வர் ஆட்சி செய்த குத்தகைக் குடில்' என்று உடலைக் குறிப் பிடுகின்றார். ஐம்புலன் அடக்கம் பற்றிப் பேசும் பாடல் ஒன்று வருமாறு:

***சொந்தமுள்ளவர் பந்தங்கள் அற்றவர்***
***சிந்தை செய்பவர் பந்தம் அறுப்பவர்***
***ஐந்து வேடுவர் அல்லல்கள் தீர்ப்பார்***
***அந்த மிழ்மயி லாடு துறையரே***

- பாடல் 325

அத்துடன், பொதுவாகப் பதிகங்களின் இறுதிப்பாடல் தமிழ்த் தேசிய நோக்கினையும், அபிலாஷையையும் வெளிப்படுத்தக் காணலாம்.

***கந்தனைக் கொண்டுவன் சூர்க ளைந்தார்***
***முந்தைய வினைகளை முறிய டிப்பார்***
***செந்தமி ழீழத்தைத் தந்த ருள்வார்***
***சிந்தைகொள் தம்பல காமத் தேவே***

- பாடல் 710

பாவாரத்தில் கவிஞர் தன் கூற்றாகச் சில பாடல்கள் பாடியி ருக்கிறார் எனினும், அவற்றைப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பு எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, இரண்டு பாடல்களைப் பார்ப்போம். ஒன்று கேதாரநாதருக்குக் காற்றைத் தூது அனுப்பும் பதிகம். தமி

ழில் தூது என்பது மிகப் பிரபல்யமான இலக்கிய வகைமைக ளுள் ஒன்று. தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றில் குயில், கிளி, அன்றில், வண்டு முதலியவற் றைத் தூது விடுத்ததாக அமைந்த பாக்களும், நெஞ்சுவிடு தூது, தமிழ்விடு தூது, வண்டுவிடு தூது, விறலிவிடு தூது முதலாய தூது நூல்களும் உள. இந்தியாவிலுள்ள கேதாரத் தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு சொந்த இடத்தை நீங் கிப் பிறதேசம் புக்க அடியவன் ஒருவன் காற்றைத் தூதாக அனுப்புவதாகப் பாடல் அமைந்துள்ளது. அவ்வகையில் இப் பாடல் போர்ச்சூழல் காரணமாக இலங்கையை விட்டு நீங்கிப் பிறதேசங்களில் வாழ்கின்ற ஈழத்தைச் சேர்ந்த அடியவர்க ளின் பொது வழிபாட்டுப் பாடலாக அமைந்து விடக் காண்கி றோம். நாடு விட்டு நாடு செல்லும் தேச சஞ்சாரியான வாழ்வு பற்றி இரண்டாவது பாடலில் குறிப்பிடப்படுகிறது. குடிப்பெயர் வும், தேசாந்தரி வாழ்க்கையும் ஈழத் தமிழரின் அடையாளங்க ளாகிப் போனமை கண்கூடு.

### திருக்கேதாரம் பண் – பழந்தக்கராகம்

***கடலரங்கிற் கூத்தாடிக் களித்துவரும் குளிர்காற்றே***
***சடையதனிற் கங்கையையும் திங்களையும் தரித்த வண்ணம்***
***நெடுமலையில் அமர்ந்தருளும் கேதார நிமலருக்குக்***
***குடிப்பெயர்ந்த அடிவனின் குறையெடுத்துச் சொல்லாயே***
- பாடல் 121

### திருவாரூர் பண் –பழம்பஞ்சுரம்

***நீரில் லாத பயிரானேன் நிழல் இல்லாத மரமானேன்***
***தேர்செல் லாத தெருவானேன் தேசாந் தரியாய் அலைகின்றேன்***
***ஊரைப் பார்க்கும் நோக்கில்லை உன்னைப் பார்க்க என வந்தேன்***
***ஆரும் இல்லை அலைவுற்றேன் ஆரூ ராரே அடைக்கலமே***
- பாடல் 93

இந்தியத் தலங்களுக்கான பாடல்களைக் ‘குடிப்பெயர்ந்தவ னின் யாத்திரைப் பாடல்கள்’ எனக் கருதி நாம் வாசிக்கலாம். ஆனால் ஈழத்தலப்பாடல்களை வாசிக்கும்போது, அவற்றில் ‘எங்கள் சிவனாரை யான் சென்று காண்பது என்றே’? எனும் குடிப்பெயர்ந்தவரின் ஏக்கமும், நாட்டில் அமைதி நிலவ வேண்டும் எனும் வேட்கையும் மேவியிருக்கக் காணலாம். இந்த ஏக்கம் கோபமாகவும் சிலசமயங்களில் மாறுகிறது. சுந்தரர் தோழமைப் பாங்கில் சிவனை *‘ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே’* என்று உரிமையுடன் திட்டியமை போன்ற நிந்தாஸ்துதி பாக்களை நிகர்ப்ப, கவிஞர் திரு-கோணமலை இறைவனை நோக்கி (பதிகம் 70) ஏளனத்துடன் பாடுகின்றார்.

***தமிழ்மக்கள் படுதுயரைப் பார்த்துக் கொண்டு***
***சிவபெருமான் அருளாது சிறந்த செல்வத்***
***திருகோணமலை மேவித் திகழ்வாரே.***

***சிறிதேனும் செந்தமிழர்கருள் செய்யாதே***
***திருக்கோணமலை மேவித் திகழ்வாராமே.***

குடிப்பெயர்ந்தவர்களின் தாயகமான ஈழத்தில் காணப்படும் தலங்களுக்குப் பாவாரம் முக்கியத்துவமளித்திருக்கிறது என் பது, பாவாரத்தின் சிறப்புகளில் ஒன்று. தாயக நினைவுகளைச் சுமந்துகொண்டு அந்நிய தேசங்களில் வாழும் மக்களின் பாராயணத்திற்கேற்ற வகையில் ஈழத்தலப் பதிகங்கள் காணப்படுகின்றன. தல விவரணங்கள் இப்பதிகங்களில் சிறப் பாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். திருக்கதிரைமலைப் பதிகத்தில் ‘அரிய வாணிப அங்காடிச் சுன்னையூர்’, ‘செம்மண் பாகத்துச் செல் வத் தலைநகர்’, ‘தோட்டச்செய்கையிற் பேர்பெற்ற சுன்னை யூர்’ என்று சுன்னாகத்தை வர்ணிக்கின்றார். அவ்வாறே திரு உரும்பராய்ப் பதிகத்தில் ‘மானவீரன் சிவகுமாரன் வாழ்ந்த பதியிலே தூனற்பாதம் காட்டி அருளும் சொக்கநாதரே’ என்று இறைவனை விளிக்கிறார். திருநெல்வேலிப் பதிகத்திலே அத் தலத்தை ‘சைவக் கலாசாலை ஓங்கிய திருநெல்வேலி’, ‘இரா மநாதர் ஆண்கல்லூரி ஏற்றவூர்’, ‘பெரிய பல்கலைக்கழகத் தைப் பேணுமூர்’ ‘உரிய வேளாண்மைக் கல்லூரி உள்ளவூர்’, ‘குருகுலச் சிற்பக் கலைஞரைக் கொண்டவூர்’ ‘பரதர் நாடகப் பள்ளியைக் கண்டவூர்’ என்று சிறப்பிக்கின்றார். திருவண் ணார்பண்ணைப் பதிகத்திலே அத்தல இறைவன் இராவணன் இசைகேட்டு அருள் செய்த தொன்மச் செய்தியையும், நாவ லர் பிரசங்கம் கேட்டு மகிழ்ந்த நவீனகாலச் செய்தியையும் அடுத்தடுத்து வைக்கின்ற பாங்கு (juxtaposition) நயக்கத் தக்கது.

***இராவணின் பாடலுக்கு இரங்கி நின்றார்***
***துன்னரிய ஆறுமுகக் குரவனார்தம்***
***சொற்பொழிவுமாரியிலும் தோய்ந்து நின்றார்***

சமூகத்தின் கவனம் பெறவேண்டிய சில விடயங்களையும் தன் பாடலில் இடையிடையே கவிஞர் புகுத்தியுள்ளார். எடுத் துக்காட்டாக, பெண்ணுரிமை, நீர்ப் பாதுகாப்பு எனும் கருத்து களைத் திருமயிலணிப் பதிகத்தில் வைத்திருப்பதைக் குறிப் பிடலாம்.

***மங்கைதனை இடப்பாகம் வைத்து மகிழ்வுற்றதுமேன்***
***மங்கையர்க்குச் சமவுரிமை வழங்குமுயர் கருத்தாலோ?***

***ஓடுகின்ற கங்கையினை ஒண்சடையில் அணிந்ததுமேன்?***
***ஈடிணையில் நன்னீரை எல்லோரும் பேணுதற்கோ?***

நிறைவாக, கனடாவிலே சைவமும் தமிழும் நிலை பெற தனது எழுத்துகளால் வலிமையும் செழுமையும் ஊட்டியவர் கவிஞர் கந்தவனம். ஆலய வழிபாடு, திருமுறைகள் சைவசித்தாந்த தத்துவம் என்பனவற்றைத் தன் சமயத்தின் ஆதாரங்கள் எனக் கொண்டவர், மரபினைப் பேணல் வேண்டும் எனும் விருப்பு உடையவர் எனினும், தேவையான சமயங்களில் அதில் மாற்றங்களும், புதுமையும் தேவை என உணர்ந்தவர். அத்தகைய சிந்தனையின் விளைபொருள்தான் பாவாரம். இது தேவார மரபின் தொடர்ச்சி. ஈழத்தைத் தமிழ்ச் சிவபூமி யாகக் கொண்டாடும் முயற்சி. தமிழ்ப் பக்தியிலக்கியத்திற்கு இலங்கைக் கவிஞர் ஒருவரின்
நற்கொடை.



maithilithayanithy@thaiveedu.com

# ஈழக்கொள்கையின் ஆழப்பற்றாளன்

# மா.க. ஈழவேந்தன்

## - பொன்னையா விவேகானந்தன்




ஈழத்தின் மூத்த குடிமகனாகவும் இனம் மீதான விட்டுக்கொடுக்காத அக்கறை மிக்க அரசியலாளராகவும் திகழ்ந்த மா.க. ஈழவேந்தன் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஏப்பிரல் 28) ரொறன்ரோவில் தன் வாழ்வை நிறைவு செய்துகொண்டார். அவரை நன்குணர்ந்தோருக்கும் உறவினர்களுக்கும் துயரம் தருகின்ற செய்தி என்கின்றபோதும் 'மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தோருள் ஒருவர்' என்ற ஆறுதல் அனைவருக்கும் உண்டு.

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ரொறன்ரோவில் நடைபெற்ற ஈழத்தேசியம் சார்ந்த எந்த நிகழ்வையும் அவர் தவறவிட்டதில்லை. வெள்ளைநிற தமிழ்த்தேசிய மேலாடையும் வேட்டியும் சிவப்பு மஞ்சள் சால்வையோடும் இவர் எங்கும் தோன்றுவார்.

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தொடருந்து நிலையப் பொறுப்பாளராகப் பணியாற்றிய திரு. கனகசபாபதி என்பவரின் மகனாவார். கனகேந்திரன் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியிலும் கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் கல்வி கற்றார். கொழும்பு மத்திய வங்கியிலும் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்திலும் பணியாற்றி 1980-இல் ஓய்வுபெற்றார்.

தமிழ்மொழியிலும் ஆங்கிலத்திலும் ஆற்றல் பெற்றிருந்த இவர், இனத்தின் மீதும் தாய்மண்ணின் மீதும் கொண்டிருந்த பெரும் பற்றுக் காரணமாக, தந்தை செல்வாவால் ஈர்க்கப்பட்டு ஐம்பதுகளிலேயே அரசியற் செயற்பாடுகளில் தன்னை இணைத்துக்கொண்டார். ஈழம் என்ற சொல்மீது பெருவிருப்புக்கொண்ட இவர், தன் பெயரை ஈழவேந்தன் என்றே வைத்துக்கொண்டார்.

தமிழரசுக்கட்சியில் முதன்மை உறுப்பினர்களுள் ஒருவாகத் திகழ்ந்த இவர், தன்னுடைய பேச்சாலும் எழுத்தாலும் இருமொழிப் புலமையாலும் மக்களால் நன்கு அறியப்பட்டவரானார். கோவை மகேசனை ஆசிரியராகக் கொண்டு இயங்கிய சுதந்திரன் பத்திரிகையில் பெருமளவில் சமூக, அரசியல் கட்டுரைகளை எழுதியவர் இவராகத்தான் இருக்கவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கிய வட்டுக்கோட்டைப் பிரகடனத்துக்கு முன்பாகவே இலங்கையில் தமிழருக்குச் 'சுயாட்சியே தீர்வு' என்ற வகையில் ஆழமாகச் சிந்தித்தவர் ஈழவேந்தன் அவர்கள். தமிழரசுக்கட்சி மிதவாத அரசியல் போக்கினைக் கொண்டிருந்த காலத்தில், திரு. வி. நவரத்தினம் அவர்கள் 1969-இல் தொடங்கிய தமிழர் சுயாட்சிக் கழகத்தில் இணைந்தார். இக்கட்சி தமிழருக்குச் சுயாட்சி மிக்க தாயகம் வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழவேந்தன் அவர்கள் மீண்டும் தமிழரசுக்கட்சியில் இணைந்துகொண்டார்.

1974-இல் சில கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற வலுவான அமைப்பை உருவாக்கின. இதில் தன்னை இணைத்துக்கொண்ட ஈழவேந்தன் அவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு கிளையின் தலைவராகச் செயற்பட்டார். 1977-இல் சிங்களத்தால் மேற்கொள்ளப்பட்ட இன வழிப்பில் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுள் இவரும் ஒருவர்.

ஈழவேந்தன் அவர்கள் இலங்கை வரலாற்றை ஐயம், திரிபு அற அறிந்திருந்தார் எனத் துணிந்து கூறலாம். அவர் பேச்சிலும் எழுத்திலும் இவ்வரலாற்று அறிவு பலவாறாக வெளிப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

இவருடைய பேச்சும் எழுத்தும் எப்போதும் தீவிரமாகவே வெளிப்படும். இதனால் அரச கெடுபிடிகள் இவரையும் விட்டுவைக்கவில்லை. 1977-இல் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றி பெற்று நாடாளுமன்றில் எதிர்க்கட்சியாக இயங்கியது. எனினும், ஈழவேந்தன் அவர்களுக்குக் கட்சிக்குள் உரிய அங்கீகாரம் இருக்கவில்லை என்றுதான் கருதவேண்டும்.

பின்னர் பணி ஓய்வுபெற்ற நிலையில், கோவை மகேசன், சந்ததியார் போன்றோடு இணைந்து தமிழர் விடுதலை முன்னணி என்ற அரசியல் அமைப்பைத் தோற்றுவித்தார். அதன் செயலாளராகவும் இயங்கினார். இலங்கையில் ஆயுதப் போராட்டம் தோற்றம் கொண்டதைத் தொடர்ந்து, அரச கெடுபிடிகள் வலுவடைய, ஈழவேந்தன் 1981-இல் தமிழகம் சென்றார்.

தமிழகத்திலும் தன்னுடைய அரசியல் பணிகளை அவர் வலுவோடு தொடர்ந்தார். பழ, நெடுமாறன் போன்றவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலை பற்றிய விழிப்புணர்வு தமிழகத்தில் வலுவடைவதற்குக் காரணராக இருந்தார்.

ஈழவேந்தன் அவர்கள் பற்றி நான் முன்னரே அறிந்திருந்த போதும் அவரை முதன்முதலில் தமிழகத்தில்தான் நேரில் கண்டேன். ஈழத்து மாணவர்களாகப் பல நிகழ்வுகளில் அவ

ரோடு இணைந்து பணியாற்றியிருக்கின்றோம். இவர் கருணா-நிதி, ஜெயலலிதா உட்படப் பல தமிழக அரசியல்வாதிகளை நேரில் சந்தித்து, ஈழத்தமிழர் இன்னல்களை விரிவாக எடுத்துரைத்திருக்கின்றார். இப்பணியில் இவர் இடைவிடாது இயங்கியதன் விளைவாகவே இவர் இந்திய அரசால் கைது செய்யப்பட்டு ஈராண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். நடைபெற்ற வழக்கின் முடிவில் விடுதலை செய்யப்பட்ட இவர் 2000-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இவர் எக்காலத்திலும் இந்தியாவுக்குத் திரும்ப முடியாது எனவும் கூறப்பட்டிருந்தது.

பின்னர் யாழ்ப்பாணத்தில் வசித்துவந்த இவர், போராளிகளுக்கான அரசியல் வகுப்புகளை வன்னிக்குச் சென்று நடத்தினார். இவருடைய அரசியல் அறிவும் வரலாற்றுத் தெளிவும் கற்றோருக்குப் பெரும் பேறாகவே அமைந்தது. அக்காலத்தில் இவரைப் போன்று தெளிவாக, அரசியலையும் வரலாற்றையும் கற்பிக்க எவரும் இருக்கவில்லை. இப்போதும்கூட இவருக்கு இணையாக எவரும் இல்லை என்றே கூறலாம்.

இத்துணை ஆற்றல் மிக்க ஒருவர், ஏன் தமிழ் அரசியல்வாதிகளால் ஒதுக்கப்பட்டார்? ஈழ அரசியலில் ஏன் இவர் முன்நிறுத்தப்படவில்லை? போன்ற வினாக்கள் தோன்றியதன் விளைவே இவர் 2004-இல் தேசியப்பட்டியல் வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதற்குக் காரணமாகும். அறுபதுகளிலேயே அரசியல் செயற்பாட்டில் ஆழமாக இறங்கியிருந்த இவரை விட, வல்லமை குறைந்தோர் எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியிருந்தனர். அந்த வாய்ப்பு கிடைக்கும்போது அவருக்கு வயது 71.

அவர் ஏறக்குறைய மூன்று ஆண்டுகள்தாம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்தார். அக்காலத்துக்குள் அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் பலவும் தமிழர்களின் விடுதலையை வலியுறுத்தியதாகவே அமைந்திருந்தன.

2007-இல் கனடாவுக்கு வந்த ஈழவேந்தன் பதவியைப் பெரிதும் போற்றாத நிலையில் இங்கேயே தங்கிவிட, அவ்வெற்றிடம் வேறொருவரால் நிரப்பட்டது.

கனடாவில் ஏறக்குறைய 17 ஆண்டுகள் வாழ்ந்த இவர், நடமாடிய நாள் முழுவதும் ஈழத்தேசியம் தொடர்பாகப் பேசுவதற்கும் சிந்திப்பதற்குமே செலவிட்டார். எங்கு சென்றாலும் அவர் வைத்திருக்கும் பையில் ஈழத்தேசியம் பற்றிய குறிப்புகளும் பிரசுரங்களும் இருக்கும். மேடைகளில் பேசுகிறபோது அவற்றைச் சான்றுகளாகக் காட்டிப் பேசுவது அவர் வழமை.

ஏறக்குறைய இறுதிநாட்கள் வரை, அவர் நினைவு தடுமாறியதாகவோ, மறதி வயப்பட்டதாகவோ தகவல்கள் இல்லை. மாறாக, வழமைபோல் சரளமாக உரையாடிக் கொண்டிருந்ததாகவே அவரோடு இருந்தவர்கள் கூறுகின்றனர்.

தமிழர்களுக்கு தனிநாடு வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இவர், தமிழர்கள் என்றோ ஒருநாள் விடுதலை பெறுவர் என்பதைத் தீர்க்கமாக நம்பினார். அந்த நம்பிக்கையை அவர் இறுதிவரை இழக்கவில்லை என்பதும் உண்மையே.

தமிழ்த்தேசியத்தை முன்வைத்து அரசியல் செய்தோர் பலரும் சமரசங்களுக்கு உட்பட்டே அரசியல் நடத்தியிருக்கின்றனர் என்பதே வரலாறு. என்றும் எவரோடும் சமரசங்களுக்கு உட்படாத அவரது கொள்கை சார்ந்த வாழ்வே, அரசியலாளர்களுடன் ஒத்தியங்க முடியாத நிலையை ஏற்படுத்தியது.

இருமொழிப்புலமை, எழுத்தாற்றல் என்ற, பலரால் முடியாத ஆற்றல்கள் இவரிடம் இருந்தன. சுதந்திரன் என்ற களமும் இருந்தது. நூற்றுக்கணக்கான கட்டுரைகளை இவர் எழுதியி



ருக்கின்றார். பல நூல்களை வெளியிட்டிருக்கின்றார். நூலகம் என்ற வலைத்தளத்தில் இவர் எழுதிய சில நூல்களைக் காணலாம்.


ஈழவேந்தன் அவர்கள் கனடாவில் வாழ்ந்த காலத்தில் அவ-ருக்கு உதவ நூற்றுக்கணக்கான அன்பர்கள் இருந்தனர். அவர்கள் என்றும் அவருக்கு அனுசரணையாகவும் ஆதரவாகவும் இருந்துள்ளனர். அத்தகையோரின் அன்பும் ஆதரவுமே ஐயாவை இத்துணை காலமும் வாழவைத்தது. பல ஊடகங்களும் அவரைப் பலவாறாகச் செவ்விகண்டு பதிவிட்டிருக்கின்றன.

ஏறக்குறைய 70 ஆண்டுகால அரசியல், சமூக வாழ்வை வாழ்ந்தவர் இவர். நாவையும் பேனாவையும் ஆயுதங்களாகப் பயன்படுத்திய ஈழத்தேசியக் கொள்கையாளர் எவரும் இல்லை என்றே கூறலாம். ஈழவேந்தன் ஐயாவின் பெருவாழ்வு ஆவணமாக்கப்படுமாயின், வளரும் தலைமுறையினருக்கு அது பல செய்திகளைக் கூறும் பாடமாகவும் அமையும்.

ஈழவேந்தன் ஐயா பற்றியதான உரையாடல்கள் தொடரவேண்டும்.



vivekanandan.p@thaiveedu.com



# சட்டநாதன்: தனித்துவமான படைப்பாளி

**– அருண்மொழிவர்மன்**

எழுபதுகளின் தொடக்கங்களில் எழுதத் தொடங்கிய படைப்பாளிகளின் சிறுகதைத் தொகுப்புகளைக் கிட்டத்தட்ட பத்தாண்டுகளுக்கு முன்னர் தொடர்ச்சியாக வாசித்தேன். இலக்கியம் / எழுத்துச் செயற்பாட்டின் நோக்கம், அதன் வடிவம், உள்ளடக்கம் என்பன குறித்த பல்வேறு விவாதங்களும், அந்த விவாதங்களின் தெறிப்புகளாக / எதிர்வினைகளாகவும் பல்வேறு படைப்புகள் இந்தக் காலத்தில் வெளிவந்திருந்தன. அவற்றை வாசிக்கின்றபோது உள்ளடக்கம் சார்ந்தும், சொல்லப்படும் விதம் சார்ந்தும் முக்கியமானதொரு மாற்றம் இந்தக் காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது என்று உறுதியாகக் கூறமுடிகின்றது. அறுபதுகளில் ஈழத்தில் இடம்பெற்ற இலக்கியம் பற்றிய விவாதங்களையும் அந்நேரத்தில் முன்வைக்கப்பட்ட முற்போக்கு இலக்கியம் பற்றிய வரையறைகளையும் தொடர்ந்து கலையமைதிக்கு முக்கியத்துவம் கொடுத்து, உள்ளடக்கத்திலும் பல்வேறு புதிய கருக்களைப் படைப்புகளூடாகப் பேசிய காலப்பகுதியாக இது அமைகின்றது. குறிப்பாகத் தனிமனிதர்களுக்கிடையிலான உறவுகள், அதனால் எழுகின்ற சிக்கல்கள், சமத்துவத்தையும் விடுதலையையும் அவாவி நிற்கின்ற இளைய சமூகத்தினரின் ஊடான சமூகப் பார்வை என்பன இந்தக் காலகட்டங்களில் வெளியான சிறுகதைகளில் காணக் கிடைக்கின்றன. இந்த வகையான எழுத்துகளை எழுதியவர்களுள் தனித்துவமான ஒருவர் க. சட்டநாதன்.

க. சட்டநாதன் குறுநாவல், சிறுகதைகள், கவிதைகள் என்று பல்வேறு படைப்பிலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு இருந்தாலும் அவரது அடையாளமாகச் சிறுகதைகளே அமைகின்றன. அவரது முதல் சிறுகதையான நாணயம் 1969-ல் வீரகேசரியில் வெளியானது என்று ஜீவநதியில் வெளிவந்த, பரணிதரன் எடுத்திருந்த நேர்காணலில் குறிப்பிடுகின்றார். ஐம்பது ஆண்டுகளாக எழுதிவரும் சட்டநாதனின் எழுத்துகளைப் பார்க்கின்றபோது 1995 வரை அவரது 3 சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அவை;

- மாற்றம் (1980)
- உலா (1992)
- சட்டநாதன் கதைகள் (1995)

இதற்குப் பின்னர் முக்கூடல், புதியவர்கள், பொழிவு, தஞ்சம், துயரம் தரும் வாழ்வு உட்பட 7 சிறுகதைத் தொகுப்புகள், 2 கவிதைத் தொகுப்புகள், ஒரு நாவல், ஒரு கட்டுரைத் தொகுப்பு ஆகியன வெளியாகியுள்ளன. இக்கட்டுரை 1995-இற்கு முன்னர் வெளியான அவரது முதல் 3 சிறுகதைத் தொகுப்புகளை முன்வைத்தே எழுதப்பட்டுள்ளது.

சட்டநாதனின் கதைகள் நுட்பமான மனித உறவுகளும் அவதானங்களும் ஆண், பெண் உறவுகள் - அதில் நிலவும் சுரண்டல்கள், சாதிய ஒடுக்குமுறைகள் - அவற்றின் இறுக்கம், குழந்தைகள் உலகம், குழந்தைகள் குறித்த நுட்பமான அவதானம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதோடு இவற்றைச் சிக்கனமான, தெளிவான மொழிதலில் வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. பாலியல் உறவுகளையும் அவற்றினூடாகத் தொழிற்படும் சுரண்டல்களையும் இவரது கதைகள் வெளிப்படுத்துவதோடு இவ்வகை எழுத்துகளின் முன்னோடிகளில் ஒருவராகவும் இவரைக் கொள்ளலாம் என்றும் கருதுகின்றேன்.

மாற்றம் என்கிற அவரது முதலாவது தொகுப்பு 1980-ல் வெளிவந்திருந்தது. 'மாற்றம்', 'அந்தக் கிராமத்தியச் சிறுமி', 'தாம்பத்தியம்', 'பிச்சைப் பெட்டிகள்', 'இப்படியும் காதல் வரும்', 'உறவுகள்' என்கிற ஆறு சிறுகதைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவரது இரண்டாவது தொகுப்பான உலா 1982-ல் வெளிவந்திருந்தது, அதில் 'தரிசனம்', 'பக்குவம்', 'தளம்பல்', 'அரும்பு', 'ஒதுக்கம்', 'வித்தியாசமானவர்கள்', 'கவளம்', 'உலா' ஆகிய எட்டுக் கதைகள் வெளிவந்திருக்கின்றன. சட்டநாதன் கதைகள் என்கிற இவரது மூன்றாவது தொகுப்பில் அதற்கு முன்னைய தொகுப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளுடன் 3 புதிய கதைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

'பிச்சைப் பெட்டிகள்' இவற்றில் இருக்கின்ற முக்கியமான கதைகளுள் ஒன்று. இந்தக் கதையில் வருகின்ற ஈசன் ஒரு வேடிக்கையான மனிதர். பழம்பெருமையையும், தற்புகழ்ச்சியையும் வைத்து வாய் வார்த்தைகளால் தன்னை வாழவைத்துக்கொண்டிருப்பவர். நாள்தோறும் எம்மைச் சுற்றி இவர் போல பல ஈசன்களை நாமும் கண்டேதான் இருப்போம். இவர்களைச் சுற்றி இருப்பவர்கள் அனேகம் பேருக்கு இவர்களது

பொய்மை நன்கு தெரிந்தே தான் இருக்கும். ஆனாலும் அவர்கள் ஒரு சுவாரசியத்துக்காக இவர்களை ஏற்றுக்கொண்டவர்களாக இருப்பர். அவர்கள் அணிந்துகொண்டிருக்கும் அந்தக் கம்பீரமான முகமூடியைக் களைந்துவிட்டுப் பார்த்தால் அவர்கள் மிகுந்த கழிவிரக்கத்திற்குரியவர்களாக இருப்பர். தனது செல்வாக்குப் பற்றியும், இதோ மிகப் பிரகாசமான எதிர்காலம் ஒன்று தனக்கு அமையப்போகின்றது என்றும் தொடர்ந்து பேசும் ஈசனுக்கு, அவர் கேட்காமலேயே பஸ் ரிக்கெட் முதல், கோப்பி வரை தனது செலவிலேயே வாங்கிக் கொடுத்து உபசரிக்கின்றார் கதை சொல்லி. ஈசனது பெரிய மனிதத் தோரணையும் வைத்தியர் தாமோதரத்தாற்ர பேரன், சேர். துரை குமாரசாமியின் தம்பி, பிள்ளை என்கிற அவரது சமூகப் பின்னணியும் கதைசொல்லி மீது செலுத்தியிருக்கக்கூடிய மறைமுகமான அதிகாரமும் (சமூகச் சலுகையும்) இதற்குக் காரணமாகக்கூடும் என்றும் புரிந்துகொள்ளலாம். சாதியம் போன்ற ஒடுக்குமுறைகள் தொழிற்படும் விதங்களைப் பற்றிய உரையாடல்களின்போது பலரும் சாதிய, சமூகப் பின்புலங்கள் ஒருவருக்குத் தருகின்ற சமூகச் சலுகைகள் என்பது குறித்து நாம் மீளவும் மீளவும் உரையாடவேண்டி இருக்கின்றது.

இதே கதையில் பஸ்ஸில் ரிக்கெட் எடுக்காமல் பயணித்து டிக்கெட் பரிசோதகர்களால் குற்றப்பணம் செலுத்தும்படி கூறப்படும் கிழவர் ஒருவர் வருகின்றார். அனேகமாக ஏழ்மை காரணமாக ரிக்கெட் எடுக்காமல் தவிர்த்திருக்கக் கூடியவராகவே இந்தக் கிழவர் சித்தரிக்கப்படுகின்றார். ஆயினும் அவர் குற்றப்பணம் செலுத்துவதற்காக அந்த பஸ்ஸில் இருக்கின்றவர்களிடம் இரந்து பிச்சையெடுப்பதுவரை கொண்டு செல்லப்படுகின்றார். இறுதியில் ‘அந்தப் பொடிச்சீற்ற தட்டிப் பறிச்சதுக்கு செம்மையாப் பட்டிட்டன்... இது நல்லதுக்குத்தான்’ என்ற குற்ற உணர்வுடன் செல்கின்றார் கிழவர். ஆனால் எந்தக் குற்றவுணர்வும் ஈசனுக்கில்லை. சர்வசாதாரணமாக அவரால் ‘தம்பி ஒரு பத்து ரூபாய் தாரும். பிறகு தாறன்’ என்று கதைசொல்லியிடம் கேட்க முடிகின்றது. கிழவரால் அப்படியெல்லாம் கேட்க முடியாது. அவருக்கு இருப்பது பிச்சையெடுப்பது அல்லது தட்டிப் பறிப்பது என்கிற தெரிவுகள் மாத்திரமே.

கதையில் வருகின்ற இளம்பெண் பாத்திரமும் முக்கியமானது. அந்த ஒரு பஸ் சந்திப்பிலேயே ஈசன் அந்தப் பெண்ணுடன் நெருக்கமாகப் பழகத் தொடங்குகின்றார். பெண்ணும் அதற்கு இடங்கொடுப்பவளாகவே காட்டப்படுகின்றார். குற்றப் பணத்துக்காகப் பஸ்ஸிலிருந்த மற்றவர்களிடம் பணம் இரக்கும் கிழவர் ஈசனும் அந்தப் பெண்ணும் இருந்த இடத்தை அணுகியதும் பெண் தன்னிடமிருந்த சில்லறைகளை அவரிடம் கொடுத்து விட்டு அவசர அவசரமாகப் பஸ்ஸைவிட்டு இறங்கிவிடுகின்றார். அதன் பின்னர் தனது ‘பொக்கற்றைப்’ பார்க்கின்ற ஈசன் ‘நாற்பது ரூபாயும் சில்லறையும் இருந்த தனது பேர்சை அவள் அடிச்சிட்டாள்’ என்கிறார். ஈசன் பொய்மை நிறைந்தவர் என்றும், அவர் சொல்பவற்றை நம்பமுடியாது என்றும் கதையூடாகத் திரும்பத் திரும்பச் சொல்லும் கதைசொல்லியே, தனது பர்ஸை அந்தப் பெண் திருடிவிட்டாள் என்று சொல்வதை அப்படியே நம்பி, ஈசனுக்காக இரக்கப்பட்டுக் கொள்கின்றார். எத்துவாளித்தனம் நிரம்பிய ஈசனைவிட அறிமுகம் இல்லாத ஆணுடன் நெருக்கமாகி, இழைந்து இழைந்து பேசுகின்ற பெண் மோசமானவளாக இருக்கக்கூடும் என்பதாகத்தானே பொதுப்புத்தி இருக்கின்றது.

மனிதர்கள் அதிகாரம் தமக்குக் கிடைக்கின்ற பட்சத்தில் அதனை எப்படி பிறர் மீது சர்வசாதாரணமாகப் பிரயோகித்துத் தமது அதிகாரத்தைக் காட்டுகின்றார்கள் என்று பார்ப்பது ஒரு சுவாரசியமான விடயம். புலம்பெயர் நாடுகளில் இருப்பவர்களுக்குத் தெரிந்திருக்கக் கூடிய நல்லதோர் உதாரணம், வீடுகள் வாங்குகின்றபோது வீட்டு விற்பனையை உறுதி செய்யும் கடைசி நேரத்தில் வீட்டு அடமானக் கடன் முகவர்கள் (Mortgage Brokers) எப்படிப் பெரும் அதிகாரங்கொண்டவர்களாகி, அதனை மற்றவர்கள் மீது எவ்விதம் பிரயோகிக்கின்றனர் என்பது. சமூகத்தில் பெரிதாக எந்த விதமான அதிகாரமும் இருக்கமுடியாத சாதாரணமான நடத்துனரும் ஓட்டுனரும் அந்தப் பேருந்தில் தமது உச்சபட்ச அதிகா






ரத்தையும் பிரயோகிக்கின்றார்கள். மிச்சக் காசினைக் கேட்ட பயணியிடம் தான் ஏற்கனவே மிச்சக் காசினைக் கொடுத்து விட்டேன் என்று பொய்யுரைப்பதுடன், அவர் இரண்டாம் தடவை மிச்சக் காசினைக் கேட்டார் என்றும் கூறி அவமானப்படுத்துகின்றார் கொண்டக்டர். அதுபோலவே பத்து இறாத்தல் செத்தலும், ஐஞ்சாறு பிஞ்சுக் கத்தரிக்காயையும் ஒரு சிறு பையில் எடுத்துக்கொண்டு பேருந்தில் ஏறும் ஒரு சிறு வியாபாரியிடமும் அந்தப் பையுக்கும் ரிக்கெற் போட்டுப் பணம் அறவிடுகின்றார். டிக்கெட் எடுக்காமல் பயணித்த கிழவர் இதர பயணிகளிடம் பணம் சேகரித்த பின்னரும் ஒரு ரூபாய் நாற்பது சதம் குறைவாக இருந்தபோது அவனது வேட்டி மடியைப் பிடித்து பரிசோதகர்கள் இழுக்க அதிலிருந்த வெற்றிலைப் பொட்டலமும் சில்லறைக்காசுகளும் சிதறி விழுகின்றன. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கின்ற பஸ் சாரதி கிழவரைப் பார்த்து அடக்கமுடியாமல் குபீரிட்டு விழுந்து விழுந்து சிரிக்கின்றார். தன் சக மனிதர் தாழ்வுற்று இருப்பது கண்டு அவனுக்கு எந்த வருத்தமுமில்லை. ஆனால் இதே சாரதியும், நடத்துனரும் பேருந்தை விட்டு இறங்கிய பின்னர் மானுடநேயம் மிக்கவர்களாக மாறி

விடுகின்றனர். பேருந்தில் இருக்கின்றபோது நகைப்பிற்கிடமாகத் தோன்றிய அதே கிழவர் மீது இரக்கம் கொண்டு அவருக்குக் கைச்செலவுக்கு என்று ஐந்து ரூபாய்ப் பணத்தைக் கொடுத்து உதவுகின்றார் சாரதி. கதைசொல்லியின் மிச்சக் காசைக் கொடுக்காமல் அவரை ஏய்க்க நினைத்த நடத்துனரும் மனம் மாறுகின்றார். அவரது மிச்சக் காசினைக் கொடுப்பதோடு தம்பிக்கு ஏதேனும் நெருக்கடியோ என்று கேட்கும் கதைசொல்லியிடம், 'நெருக்கடி என்டாலும் இப்படி வேண்டாம் மாஸ்ரர்' என்கிறார். எனது வாசிப்பில் மிக முக்கியமானதாக நான் அவதானித்த விடயம் இது. பேருந்தினை விட்டு இறங்கிய பின்னர் அந்தச் சாரதியும், ஓட்டுனரும் கூட சாதாரண மனிதர்கள். அப்போது அவர்களால் அந்தக் கிழவரையும் பயணியையும் சகமனிதராக நேசிக்க முடிகின்றது. ஆனால் அதிகாரம் கையில் இருக்கின்றபோது அது எல்லோர்மீதும் அதிகாரத்தைப் பிரயோகிக்க வைக்கின்றது. இந்த வாழ்வனுபவத்தை மிகுந்த கலையமைதியுடன் இந்தச் சிறுகதையில் பதிவுசெய்துள்ளார் சட்டநாதன்.

'அந்தக் கிராமத்துச் சிறுமி' என்கிற கதை இன்னொரு விதத்தில் முக்கியமானது. இந்தக் கதையில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த சொர்ணம், ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த சண்முகத்துடன் தலைமறைவாகுவதைத் தொடர்ந்து ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் 28 குடிசைகளைத் தீக்கிரையாக்கிச் சண்முகத்தின் பெற்றோரையும் அடித்துக் கொல்கின்றனர். கோயில் முதலாளி மணியம், பழைய விதானை தர்மலிங்கம் ஆகிய அதிகாரம் கொண்டவர்கள் இதனை முன்னின்று செய்தபோதும் எவரும் காவல்துறையால் தண்டிக்கப்படாமல் தப்பிவிடுகின்றனர். சில ஆண்டுகளால் குழந்தை சொர்ணம்மாள் பிறந்த பின்னர், சண்முகமும் சொர்ணமும் ஊர் திரும்பும்போது மீண்டும் வன்முறை வெடிக்கின்றது. இம்முறை ஒடுக்கப்பட்ட சாதியினரும் தமது எதிர்ப்பைக் காட்டுகின்றனர். ஆதிக்க சாதிவெறி பிடித்த தர்மலிங்கம் கொல்லப்படுவதோடு குழந்தை சொர்ணம்மாளின் பெற்றோர் சண்முகம், சொர்ணம் இருவரும் கொல்லப்படுகின்றனர். இதன் பின்னர் சொர்ணம்மாள் தனது உறவினரான நாகு குஞ்சி வீட்டில் வளர்கின்றாள். ஊரில் சில வீடுகளில் சிலவேலைகளைச் செய்யும் சொர்ணம்மாள், அதற்கான எந்த ஊதியமும் தரப்படாமல் சுரண்டப்படுகின்றாள். ஆயினும் இந்தக் கதையின் இறுதியில் அதனை உணரும் சொர்ணம்மாள் எதிர்க்குரல் எழுப்புகின்றாள். குடிமையாகவோ அல்லது சுரண்டலாகவோ தனது உழைப்பைத் தராது தனக்கு ஊதியம் வேண்டுமென்று எதிர்க்குரல் எழுப்புகின்றள். தனது 'மாற்றம்' என்கிற கதையில் மூன்று பேரைத் தனியே எதிர்த்துத் தாக்கக் கூடிய பலங்கொண்டவனாக முத்தன் இருந்தபோதும் அவர்களிடம் அடிவாங்கி ஒடுங்கிப் போகின்றான். அந்தக் கிராமத்துச் சிறுமியில் திருப்பி அடிக்கும் ஒடுக்கப்பட்டவர்களின் உணர்வும், உழைப்புக்கு ஊதியம் கேட்கும் சிறுமியின் குரலும் பதிவாகின்றன.

சட்டநாதனின் கதைகளில் வருகின்ற சிறுவர்களின் உலகம் நுட்பமாகப் பதிவுசெய்யப்படுகின்றது. உலாத் தொகுப்பிலுள்ள அரும்பு என்ற கதையில் வருகின்ற ராஜி என்கிற சிறுமிக்கும் அந்தப் பெயரில் வருகின்ற கிரந்த எழுத்தான 'ஜி'-யை எழுத முடியாமல் இருக்கின்றது. இதற்காக ராஜியின் வகுப்பாசிரியை அவளை அடித்துத் தண்டிக்கிறார். இதனால் பாதிக்கப்படும் ராஜி, தனது பெயரையே வெறுக்கத் தொடங்குகின்றாள். தான் பாடசாலைக்கே போகவில்லை என்று சொல்கின்றாள். நல்லூழாக ராஜியின் தகப்பன் சிறுவர்களைச் சுயமரியாதையுள்ள சக மனிதர்களாகப் பார்ப்பவனாக இருக்கின்றான், அதனால் அவனால் ராஜியைப் புரிந்து கொள்ள முடிகின்றது. சிறுவர்களின் உலகம் நுண்ணுணர்வுகளால் நிறைந்தது. வன்முறைகளின் மூலம் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரப்படும் சிறுவர்கள் உளவியல் பாதிப்புகளுக்குள்ளாவதுடன், வன்முறைகளின் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும் மாறிவிடும் வாய்ப்பு இருக்கின்றது. ராஜியின் தகப்பன் ராஜியை வேறொரு பாடசாலையில் சேர்த்துவிடுகின்றான். கிட்டத்தட்ட இதே அனுபவம் எனக்கும் நடந்தது. எனது மகன் பெயர் அதீதன், அவன் கனடாவில் இரண்டாம் வகுப்புக்கான தமிழ்ப் பாடசாலைக்குச் சென்றபோது அவனது ஆசிரியர் அவனது பெயரை ஆதித்தன் என்றே அழைத்தும் எழுதியும் வந்தார். அவன் ஆசிரியரிடம் தனது பெயரைத் திருத்திச் சொல்லியும் ஆசிரியர் கேட்கவில்லை. அவனது பாடக் கொப்பியில் ஆசிரியர் ஆதித்தன் என்று எழுதியிருந்ததற்குக் குறுக்காகக் கோடிட்டு விட்டு அதீதன் என்று தனது பெயரை எழுதியிருந்தான். நாமும் ஆசிரியரிடம் அவனது பெயர் அதீதன் என்று திருத்திச் சொன்னோம், ஆசிரியரோ அது தனக்கு வாயில வருகுதில்லை, எல்லாம் ஒன்றுதான் என்று சொன்னாரே தவிர தனது தவறை உணரவேயில்லை. வீடு வந்த அதீதன், ஆசிரியர் தனது பெயரைக்கூடச் சரியாகச் சொல்கிறாரில்லை, தான் இனி அவரிடம் படிக்கப் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டான். பின்னர் அடுத்த வருடம் நாம் வேறு ஒரு ஆசிரியரிடம் சேர்த்துவிட்டோம்.

இதுபோல பக்குவம் என்கிற கதையிலும் அந்தச் சிறுமி நம்பிக்கையை ஊட்டுபவளாக இருக்கின்றாள். போர்க்காலச் சூழலில் சுட்டுக்கொல்லப்பட்ட பரந்தாமன் என்ற ஆசிரியரின் செத்தவீட்டுக்குப் போகின்ற ஒருவன் தனது கறள் பிடித்து, இரும்புக்கே விற்கக்கூடிய நிலையிலுள்ள துவிச்சக்கர வண்டியை நிறுத்தப் பாதுகாப்பான இடம்தேடி முன்பின் அறிமுகமில்லாத ஒரு வீட்டிற்குச் செல்கின்றான். அந்த வீட்டிலிருந்த ஒன்பது அல்லது பத்து வயது மதிக்கத்தக்க சிறுமி துவிச்சக்கரவண்டியை விட்டுச் செல்ல அனுமதியளிக்கின்றாள். ஏன் சுட்டுக்கொல்லப்பட்டான் என்று தெரியாமலே, 31 வயதில் சுட்டுக் கொல்லப்பட்டதால் ஏற்படும் வாழ்வின் அபத்தம், அதனால் ஏற்படும் எதிர்மறை எண்ணங்களுடன் செத்தவீட்டால் திரும்பிவரும்போது, தனது துவிச்சக்கரவண்டி பாதுகாப்பாக இருக்குமா, பெய்யும் கடும் மழையால் நனைந்திருக்குமோ என்று யோசித்துக்கொண்டு வரும்போது வண்டியைத் தூக்கிப் பாதுகாப்பாகவும் நனையாமலும் வைத்திருக்கும் சிறுமி நம்பிக்கை தருபவளாக இருக்கின்றாள். சிறுவர்களின் உலகத்தையும் சிறுவர்களின் இருப்பைப் பற்றியும் பிரக்ஞையில்லாத, சிறுவர்களின் எதிர்பார்ப்பைப் புரிந்துகொள்ளாத பெரியோர்களினை வெளிப்படுத்தும் கதையாக 'உலா' அமைகின்றது.

தாம்பத்தியம் என்கிற கதையில் வேலாயுதம் என்பவரின் மனைவி பர்வதம் நோயுற்ற பின்னர் உதவிக்கு வருகின்ற பர்வதத்தின் தங்கை லட்சுமியுடன் வேலாயுதத்துக்கு உறவு ஏற்படுகின்றது. லட்சுமி குழந்தையையும் பெற்றுக்கொள்ளுகின்றாள். பர்வதமும் இதனை ஓரளவு ஏற்றுக்கொள்கின்றாள். இந்

தக் கதையுடன் சேர்த்துப் பார்க்கின்றபோது இந்தக் கதையும் சரி இதற்கு முன்னர் குறிப்பிட்ட மாற்றம் கதையும் சரி, சாதியப், பொருளாதார ரீதியில் தமக்கிருந்த ஆதிக்கங்களின் / அதிகாரங்களின் மறைமுகமான துணையுடன் ஆண்கள் பெண்களுடன் திருமணத்துக்கு அப்பாலான உறவுகளாகப் பேணியமையை ஆண்கள் மீதான மென்மையான போக்குடன் பார்க்கின்றமை ஓர் உறுத்தலாகவே இருக்கின்றது. ஆயினும் உலா தொகுப்பிலுள்ள தரிசனம், தளம்பல் போன்ற கதைகளில் ஆண்களின் சுரண்டலால் பாதிக்கப்பட்டு, விவாகரத்தாகி இரண்டாம் திருமணம் / உறவிலும் ஏற்பட்ட விரிசலின் பின்னர் ஆண்களில்லாத - தனித்துவாழும் பெண்களைக் காட்டுகின்றது. தரிசனம் கதை மிக முக்கியமான கதை, இதில் வாசிப்புப் பழக்கம் கொண்ட பெண்ணுக்கு ஆணாதிக்க, பழமைவாத சிந்தனைகள் கொண்ட ஆணுடன் திருமணம் நடக்கின்றது. அவனின் நண்பனான நகுலேஸ் என்பவன் தீவிர இலக்கிய வாசிப்பும் சீரிய திரைப்படங்கள் பற்றிய அறிவும், இசையிலும் பல்வேறு கலைகளில் ஈடுபாடும் கொண்டவன். கணவனின் நண்பன் என்று அறிமுகமாகும் நகுலேஸ் மூலம் அவளும் திரைப்படக் கண்காட்சிகளுக்குப் போகவும் நிறைய விடயங்களைத் தேடி வாசிக்கவும் தொடங்குகின்றாள். அவள் நகுலேசுடன் பழகுவது கணவனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தி அவன் கொடுமைப்படுத்தி விவாகரத்து வரை செல்கின்றது. ஏழாண்டுகள் கழித்து வீடு தேடிவரும் கணவனிடம் அவள் பின்வருமாறு சொல்கின்றாள்:

எனக்குப் பசித்தது. மலருக்கும் பசித்தது. இலக்கியம் அது இதெல்லாம் இரண்டாம் பட்சமாய்ப் போன பொழுதுதான் நகுலேஸ் திரும்பவும் எனது வாழ்விலை குறுக்கிட்டான்...

தனித்திருந்தவளுக்கு அவனது துணை வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் பொருளாதாரக் காரணங்கள்தான். வயிறு குளிர்ந்தது. மீண்டும் இலக்கியப் பேச்சு, கலைத் திரைப்படங்கள், மதுரை சோமுவின் கச்சேரி, பாலேந்திராவின் நாடகங்கள், ரிவியில் லெஸ்ட்டரின் படங்கள், இந்தச் சுகங்களுக்கெல்லாம் துணையாய் இருந்தவன் தனது சுகத்தையும் நினைத்து என்னைத் தொட்டபொழுது, வருத்தத்துடன் உங்களைத்தான் நினைத்துக்கொண்டேன். அன்று கையையும் காலையும் ஒருவித அபிநயத்துடன் ஆட்டிக்கொண்டு 'நண்பன் மனைவியைப் பெண்டாளலாமோ என்று குதித்தவர் இதைப் பார்ப்பதற்கு இல்லையே என்று'.

என்னைத் தொட்ட நாளிலையிருந்து நகுலேசுக்கும் புத்தி மாறிப்போச்சு. உங்களைப் போலதான் அவனும் தனது மீசை முளைத்த தனத்தைப் பறை கொட்டத் துவங்கினான். நளினம், நாகரிகம் எல்லாமே முகமூடிதான். திரைகிழிய, அவனது சொரூபம் தெரிந்தது. இந்த வாத்தி உத்தியோகம் போனவருஷம் தான் எனக்குக் கிடைச்சது. இது கிடைக்கிறவரைக்கும் அவன் ஆண், நான் பெண். அவன் உழைத்துப் போடுறவன்; நான் எதிர்பார்த்திருப்பவள். நான் அவன் சொற்படி நடக்க வேண்டாமோ ?

வாசிப்பும், கலை இலக்கியப் பரிச்சயமும் ஈடுபாடும் கூட மனிதர்களைப் பக்குவப்படுத்தும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. குறிப்பாகச் சுரண்டல்வாதிகளுக்கு இவையெல்லாம் தமது சுரண்டல்களுக்கான கருவிகளாகவும் அமைந்துவிடும் என்பது நுட்பமாக வெளிப்படும் கதை இது.

உறவுகள் என்கிற கதையில் கல்வியாலும் பதவி, சம்பளம் ஆகியவற்றாலும் பெண் உயர்நிலையில் இருந்தபோதும் கூட 'ஆணாகவும்' சாதியத்தாலும் ஒரு ஆண் எப்படி ஆதிக்கம் மிக்கவனாகவும் ஒடுக்குமுறையாளனாகவும் மாறுகின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றது. எழுத்தாளராக இருக்கும் பெண்ணுக்கும், சக எழுத்தாளரான அருணுக்கும் இருக்கும் நட்பினை அவர்களுக்கிடையில் தொடர்பு இருப்பதாகச் சந்தேகித்து உடல், உளரீதியில் துன்புறுத்துகின்றான் கணவன். ஒரு கட்டத்தில் பொறுக்கமுடியாத மனைவி தான் 'தூய்மையானவள்' என்பதைக் கணவனுக்குத் திரும்பத் திரும்பச் சொல்வதையே அவமானமாகக் கருதுகிறாள். அவனது சித்திரவதைகளைப் பொறுக்கமாட்டாது 'ஓம். இன்று நான் அருணோட அவன்ட அறையிலதான் இருந்தனான்' என்று பொய்க்குச் சொல்கிறாள். அவன் உடைந்துவிடுகிறான், பின்னர் தனது உடைமைகளையும் தான் வாங்கிக்கொடுத்த தாலியையும் எடுத்துக்கொண்டு அவன் வீட்டிலிருந்து வெளியேறி விடுகின்றான். தாம்பத்திய உறவை வெட்டிக்கொள்ளும் துணிவில்லாமலிருந்த தனக்கு, அவனாகவே வீட்டைவிட்டு வெளியேறியதே பெரிய உதவி என்று அவள் நிம்மதியடைகின்றாள்.


சட்டநாதனின் கதைகளில் வரும் பெண்கள் பலர் ஆணாதிக்கத்தாலும், சமூகச் சுரண்டல்களாலும் பாதிக்கப்பட்டாலும் அவற்றை எதிர்த்துச் சோர்ந்துவிடாமல் துணிந்து நிற்பவர்களாக, அல்லது சமூகக் கட்டுகளால் பாதிக்கப்பட்டிருந்து அதிலிருந்து உடைத்துக்கொண்டு வெளியேறும் முதல் தலைமுறையினராகக் காட்டப்பட்டுள்ளனர். ஜீவநதி இதழாசிரியர் பரணிதரனுக்கு வழங்கிய நேர்காணலில் சட்டநாதன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

*பெண்கள் பொதுவாக ஆதரவற்றவர்கள், ஆணின் ஆதிக்க அழுத்தங்களுள் அகப்பட்டுச் சிதைந்து போகக் கூடியவர்கள். நமது சமூக வெளியில் அத்தகையவர்களே அனேகமாக உள்ளனர். அத்தகைய பெண்களுக்கு எனது எழுத்து பலம் தருவதுடன் அவர்கள் நிமிர்ந்துநின்று சரியெனப்படுவதைச் செய்யத் துணை சேர்ப்பதாகவும் இருக்கின்றது. ஆயினும் சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் நின்று செயற்படவே அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.*

பிரக்ஞைபூர்வமான இந்தப் புரிதலுடன் தனது எழுத்துச் செயற்பாட்டை மேற்கொண்ட சட்டநாதன் சமூகத்திலிருந்து சாதிய ஒடுக்குமுறை, பாலியல் சுரண்டல்கள், ஆணாதிக்கம், இவற்றால் நிகழும் ஒடுக்குமுறைகள், அந்த ஒடுக்குமுறைகளில் இருந்து வெளியேறுவதற்காகச் செய்யப்படும் மீறல்கள் ஆகியவற்றையும், குழந்தைகளதும் பெண்களதும் உலகத்தையும் தனது படைப்புகளூடாகச் செய்த தனித்துவமான எழுத்தாளராவார்.



arunmozhivarman@thaiveedu.com




# மலையகப் பெண்களின் கதைகளைப் பிரதிபலிக்கிறதா 'மலையகா'?

– மல்லியப்புசந்தி திலகர்

இலங்கை மலையக மக்களின் 200 ஆண்டுகால வாழ்க்கை வரலாறாகி விட்டிருக்கிற பயணத்தில் இலக்கியத்தில் மலையக மக்களின் தனித்துவம், அடையாளம், மாற்றம், பண்பாடு கலாசாரம் குறித்த தளங்களில் மலையக இலக்கியம் பெரும் பங்காற்றியுள்ளது. ஆரம்பத்தில் மலையகப் பெண்களின் பங்களிப்புகள் குறைவாக இருந்தபோதிலும்...' எனத் தொடங்கும் பதிப்புரையை தொடங்கியிருக்கும் 'மலையகா' - மலையகப் பெண்களின் கதைகள் எனும் சிறுகதைத் தொகுப்பு 2024-ஆம் ஆண்டு ஜனவரியில் 'ஊடறு' அமைப்பின் வெளியீடாக வந்திருக்கிறது. இலங்கை மலையகத்தின் யுவராணி இராஜேந்திரனின் அட்டைப்படம், பா. ரவீந்திரனின் பக்க வடிவமைப்பு, ஜோதி அச்சகத்தின் தரமான அச்சுப்பதிப்பு என, விடியல் பதிப்பகத்தின் ஊடாக வெளிவந்திருக்கும் இந்த 303 பக்கங்களிலான நூலை இந்திய விலை 280 ரூபாயில் பெறலாம் (இலங்கை ரூபாய் 2000 ஐ எட்டலாம்) எனக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விபரங்களுடன் இந்த விமர்சனக் குறிப்பைத் தொடங்குவதற்கு காரணமே, இந்த நூல் பரவலாக வாங்கப்பட வேண்டும், வாசிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தவே. இப்படியான ஒரு முயற்சியைப் பற்றி சிந்தித்தமைக்கும் செயற்பட்டமைக்கும் பெண்ணிய செயற்பாட்டாளர்களான றஞ்சி (சுவிஸ்) உள்ளிட்ட தோழமைகளுக்கு நன்றி கலந்த பாராட்டுகளை முதலில் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

மலையகப் பெண்களின் கதைகளைத் தொகுக்க எண்ணிய போது அந்தத் தொகுப்புக்கு தெரிவு செய்திருக்கும் தலைப்பே அலாதியானது. மலையகத்தைக் குறித்து நிற்பதற்காக 'குறிஞ்சி' எனும் சொல்லோடு தொடங்கும் தலைப்புகளைத் தெரிவு செய்யும் போக்கு ஒரு காலத்தில் இருந்தது. 'குறிஞ்சிப்பூ' (மலையகக் கவிஞர்களின் தொகுப்பு - ஈழ குமார் 1965), 'குறிஞ்சி மலர்கள்' (மலையகப் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் - அந்தனிஜீவா-2000), 'குறிஞ்சிக் குயில்கள்' (மலையகப் பெண் படைப்பாளிகளின் கவிதைகள் - அந்தனிஜீவா-2002) போன்றவற்றை அதற்கான உதாரணங்களாகக் கொள்ளலாம். ஆனால் 'மலையகம்' எனும் கருத்தியல், சமூகவியல் அடிப்படையில் ஓர் இனத் தேசியத்தின் அடையாளமாக வலுப்பெறத் தொடங்கியதுமே 'மலைமுரசு', 'மலைப்பொறி' போன்ற அடைமொழிகளோடு மலையகச் சிற்றிதழ்கள் தம்மை புதுப்பித்துக்கொண்டன. அதுவரை 'முத்தமிழ் முழக்கம்' என வெளிவந்த இதழின் தலைப்பையே அதன் கூட்டாசிரியர்களான கவிஞர் ஈழகுமார், க.ப. சிவம் ஆகிய இருவரும் 'மலை முரசு' என மாற்றிக் கொண்டார்கள். 'மலைநாடு, மலைநாடு என்று போற்றுவோம்! மலை முரசறைந்து மலை மக்கள் வாழ்வு உயர்த்துவோம்!' என்னும் முழக்கத்துடன் 1962, ஜனவரியிலிருந்து வெளிவந்த ஏடு 'மலை முரசு' எனக் குறிப்பிடுகின்றார் தெளிவத்தை ஜோசப். (இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும் - 2000-2002 தினகரன் தொடர் கட்டுரை).

இவ்வாறு எழுச்சி பெற்று வந்த 'மலையகம்' எனும் கருத்தியலின் தாக்கத்தின் தொடர்ச்சியாக, தெளிவத்தை ஜோசப் தொகுத்த துரைவி வெளியீடான 'மலையகச் சிறுகதைகள்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் கொள்ளலாம். அதற்கடுத்து அத்தகையதொரு தொகுப்பாக வந்திருக்கக் கூடிய மலையகப் பெண்களின் கதைகளின் தொகுப்புக்கு 'மலையகா' என தலைப்பிட்டிருப்பது சாலப் பொருத்தமானது. 'மலையகன்' எனும் புனைப் பெயரில் அவ்வப்போது அரசியல் கட்டுரைகள் சிலவற்றை எழுதியிருக்கும் நான் (கட்டுரையாளர்), ஆஹா... சுப்பர் (Super) என சொல்லிக்கொண்டே 'மலையகா' எனும் தொகுப்பின் தலைப்பை உள்வாங்கிக் கொண்டேன் என்கிற உண்மையை இங்கே பதிவு செய்ய வேண்டும். 'மலையகன்' என எனக்கொரு புனைப்பெயரைச் சூட்டிக் கொள்ள எண்ணிய நான், 'மலையகா' என ஒரு பெண்ணுக்குப் பெயர் சூட்டலாம் என ஒரு போதும் எண்ணியதில்லை. 'ஓவியம்' எனும் சொல்லில் இருந்து 'ஓவியா' என மகளுக்கு பெயர் சூட்ட முடியுமெனில், 'மலையகம்' என்ற சொல்லில் (கருத்தியலில்) இருந்து 'மலையகா' எனும் பெயரைத் தேர்ந்தெடுப்பது எத்தனை பொருத்தமானது. மலையகப் பெண்களின் கதைகளைத் தொகுக்க 'மலையகா' எனும் இந்தப் பெயரைத் தெரிவு செய்தவர்களுக்கு எனது பெரும் பாராட்டுகளையும் பதிவு செய்கிறேன். இதுதான் பெண் உணர்வு, தன்னுணர்வு. இந்தத் தொகுப்பின் மிகப் பலமான (Positive) அம்சங்களில் ஒன்றாக இதனைக் கொள்ளலாம். இனி பெண்குழந்தைகளுக்கு சூட்டக் கூடிய பெயராகவும் பரிந்துரைக்கக்கூடியது 'மலையகா'.

'ஆரம்பத்தில் மலையகப் பெண்களின் பங்களிப்புகள் குறைவாக இருந்த போதிலும்...' எனும் பதிப்புரையில் விட்ட இடத்தில் இருந்து இனி தொடர்ந்தால், ஆரம்பத்தில் மலையகப் பெண்களின் பங்களிப்புகள் குறைவாக இருந்தன என்பதற்கு அப்பால் ஆரம்பத்திலேயே மலையக இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பும் இருந்தது என்பதை முதலில் பதிவு செய்துகொள்ள வேண்டியுள்ளது. மலையக இலக்கியத்தின் ஊற்

றுக்கண்களான நாட்டார் பாடல்களின் பெண்கள் பாடுவதாக அமைந்த பாடல்களில் இருந்தே அது ஆரம்பிக்கிறது. அவை எழுத்து இலக்கியங்களாக, அச்சு இலக்கியங்களாக உருப் பெற்ற சுமார் நூறு வருட வரலாற்றில் எழுபத்தைந்து வருடங் களுக்கு முன்பே கோ.ந. மீனாட்சியம்மையின் படைப்புகள் அச்சேறியிருக்கின்றன. அதேபோல 'அஞ்சுகம்' என்பவரின் எழுத்துக்களையும் கூட அடையாளங் காட்ட எத்தனிக்கிறார் மு.நித்தியானந்தன் (கூலித்தமிழ், 2014). எனவே, குறைவான பங்களிப்பாக இருந்தாலும் மலையக இலக்கிய உருவாக்கத் திலும் தொடர்ச்சியிலும் மலையகப் பண்களின் பங்களிப்பு இருந்து வந்துள்ளது என்பது இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. அந்த சுட்டிக்காட்டுதலை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் பதிவு செய்கிறது முகவுரை.

'பெருமூச்சும் சிறுநகையும்' எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீலன் எழுதியிருக்கும் முகவுரை இந்த நூலின் இன்னுமொரு பலம். நேரே மலையகப் பெண்களின் கதைகள் என்ற கோதாவுக்குள் இறங்கிவிடாமல் மலையக இலக்கிய வரலாற்றைத்தொட்டு, அதில் பெண் படைப்பாளர்களின் பங் களிப்பை விரிவாகப் பேசி இந்தத் தொகுப்பின் பலம், பலவீ னங்களை எடுத்துச் சொல்லும் முகவுரை அது.

ரோஹினி முத்தையா (2, நாவலப்பிட்டி - கண்டி), அக்னஸ் சவரிமுத்து (4, வட்டகொடை - நுவரெலியா), பாலரஞ்சனி சர்மா (3, மாத்தளை), புசல்லாவ இஸ்மாலிஹா (3, புசல்லாவை - கண்டி), ரூபராணி ஜோசப் (2, கண்டி), சாந்தா ராஜ் (ஹட்டன் - நுவரெலியா), அரபா மன்சூர் (கண்டி), செ.கோகிலவர்தனி (ஹட்டன் - நுவரெலியா), பிரமிளா பிரதீபன் (5, பதுளை), நயீமா சித்தீக் (4, ஹப்புத்தளை பதுளை), நளாயினி சுப்பையா (2, கண்டி) பேபி இம்மானுவேல் (கொழும்பு), இரா. சர்மிளாதேவி (கண்டி), பூரணி (கண்டி), பவானி வேதாஸ் (2, கண்டி), சிவாஜினி சதாசிவம் (மாத்தளை), செல்வி சுந்தரி மலைசுவாமி (சாமிமலை - நுவரெலியயா), சுகந்தி வெள்ளையக் கவுண்டர் (கந்தப்பளை – நுவரெலியா), தியத்தலாவை எச்.எப்.ரிஸ்னா (2, தியத்தலாவை - பதுளை) மலைமதி சந்திரசேகரன் (மாத்தளை), லறீனா அப்துல் ஹக் (மாத்தளை), சாந்தி மோகன் (பண்டாரவளை - பதுளை), பேராதனை ஷர்புன்னிஷா (ஹட்டன் - நுவரெலியா) ஆகிய 23 பெண் படைப்பாளிகளின் 42 கதைகள் 'மலையகா'வில் தொகுக்கப்பட்டுள்ளன.

தொகுப்பு என்று வரும்போது அதனைத் தொகுப்பதற்கான அடிப்படைகள் எவையேனும் இருப்பது சிறப்பு. 'மலையகா' தொகுப்பின் தேவை எங்கிருந்து எழுகிறது? என்பதனை பதிப்புரையின் ஆரம்பம் எடுத்துக் கூறுகின்றது. 'இலங்கை மலையக மக்களின் 200 ஆண்டுகால வாழ்க்கை வரலாறாகி விட்டிருக்கிற பயணத்தில்...' எனத் தொடங்குவதானது, அந்த பயணத்தில் மலையகப் பெண் படைப்பாளர்களின் சிறுகதைப் பங்களிப்பை ஆவணப்படுத்துவது என்பதாகப் பொருள்படு கிறது.

அந்த வகையில் 'மலையகா'வில் தொகுக்கப்பட்டுள்ள கதைகளின் கதைக்காலங்கள் அல்லது அவை எழுதப்பட்ட காலங்கள் பற்றி ஆராய்வது அவசியமாகிறது. 1994, 1994, 1999, 2001, 2001, 1994, 1998, 1992, 1987, 1997, 1997, 1997, 1997, 1999, 1994, 2000, 2010, 2007, 2007, 2006, 2010, 1981, 1978, 1982, 1997, 1994, 1994, 1999, 1975, 2003, 2003, 1997, 1997, 1994, 2011, 2010, 1996, 2015, 1993, 1993. இவ்வாறு கதை தொக்கப்பட்டுள்ள ஒழுங்கில் காலத்தை இங்கே எடுத் துக்காட்டுவதன் நோக்கம், 200 ஆண்டு கால மலையக வர லாற்றில் எந்தக் காலப்பகுதியினை இந்தத் தொகுப்பு பிரதிப லிக்கிறது என்பதனைப் புரிந்துகொள்வதற்காகும். அதேநேரம் கதாசிரியர்கள் அனைவரும் ஊவா (பதுளை மாவட்டம்), மத்திய (நுவரெலியா, கண்டி, மாத்தளை) மாகாணங்களைச் சேர்ந்த வர்களாக இருப்பது அவதானிக்கத்தக்கது. இதற்கு வெளியே சப்ரகமுவ (இரத்தினபுரி, கேகாலை), மேல்(களுத்துறை, கொழும்பு, கம்பஹா), தென் (காலி, மாத்தறை) மாகாணங்க ளிலும் பகுதியளவில் குருநாகல் மாவட்டத்திலும் மொனரா கலை மாவட்டத்திலும் கூட மலையகம் விரிந்திருக்கிறது என் பதும் இங்கு அவதானத்துக்குரியது. இங்கு காலம் எடுத்துக் காட்டப்பட்டது போல களங்களும் எடுத்துக் காட்டப்படுகின்ற மையானது அங்கே கதைக்களங்கள் மாறுபடுகின்றன என்-பதை எடுத்துரைக்கவேயாகும்.

அந்த வகையில் 1975-ஆம் ஆண்டு பூரணியினால் எழுதப் பட்ட கதையே இந்தத் தொகுப்பில் காலத்தால் முந்தியதாகும். அதேபோல 2015-ஆம் ஆண்டு லறீனா அப்துல் ஹக்கினால் எழுதப்பட்ட கதையே காலத்தால் பிந்திய கதையாகும். எனவே 1975-க்கும் 2015-க்கும் இடைப்பட்ட 40 ஆண்டுகாலத்தில் வெளியான மலையகப் பெண்களின் கதைகள் தொகுக்கப்பட் டுள்ளன. இதனை நான்கு தசாப்த காலகட்டங்களாக வகுத்த நோக்கும்போது பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

- முதல் பத்தாண்டு காலமாகக் கருதக் கூடிய 1975-1986 காலப்பகுதியில் (4 கதைகள்).
- இரண்டாம் பத்தாண்டு காலமாகக் கருதக் கூடிய 1986-1995 காலப்பகுதியில் (11 கதைகள்).
- மூன்றாம் பத்தாண்டு காலமாகக் கருதக் கூடிய 1996-2005 காலப்பகுதியில் (18 கதைகள்).
- நான்காம் பத்தாண்டு காலமாகக் கருதக் கூடிய 2006-2015 காலப்பகுதியில் (8 கதைகள்).
- எழுதப்பட்ட காலம் குறிப்பிடப்படாத ஒரு கதை (நயீமா சித்திக் - நெடி துயர்ந்த மலையில்).

காலம் குறிப்பிடப்படாத இந்தக் கதை நயீமா சித்திக்கின் ஏனைய கதை எழுதப்பட்ட காலங்களிலேயே எழுதப்பட்டிருக் கலாம் என கணித்தால், அது முதலாவது பத்தாண்டு காலத் திற்குள் உள்ளடக்கப்படலாம். எனவே 'மலையகா' கொண்டுள்ள கதைகளில் 1996 க்கும் 2005 க்கும் இடைப்பட்ட காலத்தில் அதிகளவான கதைகள் (18) சேர்க்கப்பட்டுள்ளன. அதற்க டுத்ததாக 1986 க்கும் 1995 க்கும் இடைப்பட்ட காலத்தில் 11 கதைகளும் அதற்கடுத்ததாக 2006 க்கும் 2015க்கும் இடைப் பட்ட காலத்தில் 8 கதைகளும் உள்ளடக்கப்பட்டுள்ள அதே வேளை, 1975 க்கும் 1986 க்கும் இடைப்பட்ட காலத்தில் 5 கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாகப் பார்க் கும்போது 200 ஆண்டுகால மலையக வரலாற்றில் நாற்பது (40) ஆண்டு கால கட்ட கதைகள் மாத்திரமே, இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

200 ஆண்டு கால மலையக வரலாற்று, ஏறக்குறைய 100 ஆண்டு கால எழுத்திலக்கிய வரலாற்றை தன்னகத்ததே கொண்டுள்ளது. 1925-ஆம் ஆண்டளவிலேயே நடேசய்யர் - மீனாட்சியம்மை தம்பதிகள் துண்டுப்பிரசுர இலக்கியமாக அவற்றை ஆரம்பித்துள்ளனர். (அதற்கு முன்பதாகவே 1869-ஆம் ஆண்டு ஆபிரஹாம் ஜோசப்பின் 'கோப்பிக்கிருஷி கும்மி'


எழுத்துரு பெற்றிருந்தது). சிறுகதை என்றுவரும்போது 1931-ஆம் ஆண்டு நடேசய்யரால் எழுதப்பட்ட 'ராமசாமி சேர்வையின் சரிதம்' எனும் கதையை முதல் மலையகச் சிறுகதை என அடையாளப்படுத்துவதுடன் அதனை ஈழத்தின் முதல் சிறுக தையாளர்களாக அடையாளப்படுத்தப்படும் சம்பந்தர், வைத் திலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோருடன் நடேசய்யரும் நான்காமவராக சேர்க்கப்படல் வேண்டும் என 'மலையகச் சிறு கதை வரலாறு' நூலில் தெளிவத்தை ஜோசப் விவாதிக்கிறார்.

இந்த நால்வருக்கு முந்திய சிறுகதையாளர்களும் இலங்கை யில் இருந்திருக்கிறார்கள் என்கின்ற கருத்து வைப்புகளும் உள்ளன. இங்கே யார் முந்தியவர் ? என்பதற்கு அப்பால் ஒரு தொகுப்பு ஏதேனும் விவாதத்தை முன்வைப்பதாக அல்லது ஏற்படுத்துவதாக அமைதல் சிறப்பு. அந்தவகையில் 'மலையகா' தொகுக்கப்படுவதற்கான அடிப்படைகள் என்ன? என்பது குறித்த சில கேள்விகளை எழுப்புவதன் மூலம் சில விவாதப் புள்ளிகளைத் தோற்றுவிக்கலாம்.

- 'மலையகா' வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட கதைகளுக் காக விதித்துக்கொண்ட கால எல்லை 1975 க்கும் 2015-க் கும் இடைப்பட்ட 40 ஆண்டுகளுக்குள் மட்டுமானதாக அமையப்பெற்றது ஏன் ?
- மலையகப் பெண்களின் கதைகள் 1975-ஆம் ஆண்டுதான் தொடங்குகின்றதா ?
- கதைகளைத் தொகுப்பதில் 'மலையகா, ஒரு கால ஒழுங் கைக் கடைப்பிடிக்காதது ஏன் ?
- கால ஒழுங்கு அல்லாது வேறு ஏதேனும் ஒரு ஒழுங்கு / முறைமை கடைபிடிக்கப்பட்டிருக்குமெனில், அது என்ன ?
- 'மலையகா'வுக்காக தேர்வு செய்யப்பட்ட மலையகப் பெண் சிறுகதையாளர்களைத் தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப் பட்ட அளவுகோள்கள் எவையேனும் உண்டா ?
- இதற்கு முன்பதாக வெளியாகியுள்ள தொகுப்புக்களில் சேர்க்கப்பட்ட கதைகளே 'மலையகா' விலும் சேர்க்கப்பட் டுள்ளமை ஏன் ?

மேற்படி விவாதப் புள்ளிகள் 'மலையகா' மீதான விமர்சனமாக அல்லாமல், மலையகப் பெண் கதையாசிரியர்கள் குறித்த கவனம் கொள்ளலாகவே பார்க்க வேண்டியுள்ளது. இங்கே தொகுக்கப்பட்டுள்ள 23 கதையாசிரியர்களில் பிரமிளா பிரதீபன், எச்.எப்.ரிஸ்னா, லறீனா அப்துல் ஹக் முதலானவர்கள் தவிர்த்து, ஏனையோர் சமகாலத்தில் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருப்பவர்கள் இல்லை. ஆனால், ஒரு காலத்தில் தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தவர்கள் என்பதும் கடந்த காலத் தொகுப்புகளில் எல்லாம் இடம்பெற்றவர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. ரூபராணி ஜோசப், பூரணி, சாந்தாராஜ் பொன்றவர்களிடம் நாம் தொடர்ந்தும் கதைகளை எதிர்பார்க்க முடியாது. இவர்கள் உள்ளிட்ட ஏனைய மூத்த பெண் எழுத்தா ளர்கள் எல்லோருமே கூட 2000-க்கு முற்பட்ட காலத்திலேயே அதிகம் எழுதியூள்ளனர். புஸல்லாவ இஸ்மாலிஹா, நயீமா பஷீர், நளாயினி சுப்பையா, அக்னஸ் சவரிமுத்து போன்ற மூத்த எழுத்தாளர்களின் கதைகளின் கடந்த கால வீரியங்கள் தெரிகின்ற போதும் அவை கடந்த காலக் கதைகள் என்பதை மறுப்பதற்கில்லை. எனவே, 2024-ஆம் ஆண்டு தொகுக்கப் பட்டுள்ள மலையகா - 'மலையகப் பெண்களின் கதைகளை' முன்வைத்து சில கேள்விகளை முன்வைக்கலாம்.

- சமகாலத்தில் மலையகத்தில் சிறுகதைகள் எழுதிக்கொண் டிருக்கும் பெண் எழுத்தாளர்கள் யாவர் ? (அண்ணளவாக) எத்தனை பேர் ?
- 'மலையகா' வெளிவந்த காலத்தில் (2024) மலையகப் பெண்களின் நிலைமைகளை பிரதிபலிக்கும் கதைகளை 'மலையகா' வினால் சுமந்து வரமுடிந்ததா ?
- 'மலையகா' வில் சேர்க்கப்பட்டுள்ள 1975-க்கு முற்பட்ட மலையகப் பெண்களின் கதைகள் யாவை? அவற்றை எழுதியோர் யாவர் ?
- 1986-1995 தசாப்தத்தில் இருந்து இத்தொகுப்புக்காக சேர்க் கப்பட்ட 11 கதைகள், 1996-2005 தசாப்தத்தில் இருந்து இத்தொகுப்புக்காக சேர்க்கப்பட்ட தொகுக்கப்பட்ட 18




கதைகள் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது, 2006-2015 தசாப்தத்தில் இருந்து 8 கதைகளே இடம்பெற்றுள்ளன. எனவே, மலையகத்தில் பெண் கதை எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றதா ?
- 2015-2024 எனும் இறுதி பத்தாண்டு காலத்தில் (இந்தத் தொகுப்பு 2024-இல் வெளிவருகின்றது என்பதைக் கவனத் தில் கொண்டு) குறைந்த பட்சம் ஒரு கதையையேனும் மலையகாவால் உள்வாங்க முடியாது போனது ஏன் ?
- ஆக, 'மலையகா' புதிய தொகுப்பா ? அல்லது தொகுப்பு களின் தொகுப்பா ?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண முயலும் போது, மலை யகப் பெண் கதாசிரியர்களின் வகிபாகம் குறித்த, எண்ணிக்கை குறித்த ஒரு கணக்கெடுப்பும் அதில் இருந்து முன்செல்ல வேண்டிய பக்கங்கள் குறித்துமான ஒரு தீர்மானத்துக்கு வர முடியும். அது 'ஊடறு'வின் பணியல்ல. அது மலையக கலை இலக்கிய ஆய்வறிஞர்களின் கைகளில் உள்ள பணியாகிறது. சமகாலத்தில் பல்கலைக்கழக மட்டத்தில் கலைத்துறையில் / தமிழ்த்துறையில் / சமூகவியல்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களின் ஆய்வுக் கவனத்தைப் பெற வேண்டியுள்ளது. இது போன்ற தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ள தமது மாணவர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு

பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் பொறுப்பாகிறது.

தமக்குக் கிடைக்கக் கூடியதான கதைகளைக் கொண்டு 'ஊடறு' ஒரு தொகுப்பைக் கொண்டு வந்து அதன் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் குறைந்த பட்சம் கால ஒழுங்கிலாவது இந்தக் கதைகள் தொகுக்கப்பட்டிருக்கலாம் என்பதை 'ஊடறு'வின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. 'மலையகா' கால ஒழுங்கில் 1975 முதல் 2015 வரையான என தொகுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் கதைக்கருக்களின், கதை மாந்தர்களின் போக்குகளை அடையாளம் காண்பதன் ஊடாகவாவது ஓரளவு மலையகப் பெண்களின் நிலவரத்தைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்திருக்கலாம். உண்மையில் கால மாற்றத்தால் மலையகப் பெண்களின் வாழ்வில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஏற்ற இறக்கங்களை வெளிப்படுத்துவதற்கு, இந்த கால ஒழுங்கிலான கதைகள் வழி ஏற்படுத்தியிருக்கலாம்.

மறுபுறமாக மலையகப் பெண்கள் எழுதியுள்ளதான இந்தக் கதைகள் 'மலையகா'வின் உபதலைப்பாக குறிக்கப்படும் 'மலையகப் பெண்களின் கதைகள்' என்பதுவும் இரண்டு கேள்விகளை தோற்றுவின்றன.

- மலையகப் பெண்களின் கதைகள் என்பது பெண்கள் எழுதும் கதைகளா ?
- மலையகப் பெண்கள் பற்றியதான கதைகளா ?

இந்த இரண்டு கேள்விகளில் முதலாவதுக்கு 'ஆம்' என்றும் இரண்டாவதற்கு 'இல்லை' என்றும் பதிலளிக்கலாம். மலையகப் பெண்கள் எழுதும் கதைகள் மலையகப் பெண்கள் பற்றியானதாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்களுக்குப் படைப்புச் சுதந்திரம் உண்டு. ஆனால், பெண்களாலேயே வெளிப்படுத்த வேண்டிய பெண்களின் கதைகள் நிறையவே உண்டு. அவற்றை அவர்கள்தான் வெளிப்படுத்தியாக வேண்டும். அந்த இடைவெளி மலையகப் பெண்களின் கதைகளில் காணப்படுவதாகவே, 'மலையகா' சாட்சி பகர்கிறது. அதே நேரம் மலையக ஆண் எழுத்தாளர்களின் கதைகளில் படைக்கப்படும் பெண் பாத்திரங்கள் அல்லது பெண்களின் பிரச்சினைகளை முன்னிறுத்தும் கதைகள் அவற்றை சொல்ல வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, அண்மையில் வெளிவந்த சு. தவச்செல்வனின் 'ஆடுபாலம்' கதைத் தொகுப்பில் சில கதைகளை அவதானிக்கலாம்.

மலையகப் பெண்களின் கதைகளைத் தொகுக்க வந்தவேளை, அதில் முஸ்லிம் படைப்பாளர்களின் கதைகள் இடைவிலகிச் செல்வது தொடர்பில், முகவூரையில் ஜெயசீலன் எழுதியிருக்கும் குறிப்பு கவனத்துக்குரியது. அதே நேரம், மலையகப் பெண்களின் கவிதைகளை இதற்கு முன்னர் 'இசை பிழியப்பட்ட வீணை' எனும் தலைப்பில் வே. தினகரனைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு தொகுத்த போதும், இந்தச் சிக்கல் அவதானிக்கப்பட்டது. கிழக்கு மாகாண பெண்கவி அனார் புனை பெயர் ஒன்றில் எழுதிய கவிதையும்கூட அதில் சேர்க்கப்பட்டிருந்தது. 'இசை பிழியப்பட்ட வீணை' நூலுக்கு 'ஊடறு' சார்பில் ரஞ்சி (சுவிஸ்) தேவா (ஜேர்மனி) ஆகியோர் எழுதியிருக்கும் பதிப்புரையில் ஒரு பகுதி இங்கு மீண்டும் நினைவுகூரத்தக்கது.

*'பொதுவாக கவிதைகளின் பாடுபொருள் சமூகப் பிரச்சினைகள் சார்ந்தும் அரசியல் பொருளதாரம் சார்ந்துமே படைக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வுக்கே அல்லாடும் ஒரு சமூகத்தில் பெண்ணியப் பார்வை அரிதாகக் காணப்படுவதை நாம் புரிந்துகொண்டுதான் ஆக வேண்டும். இவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற இலக்கியத் தளமும் கூட நாட்டின் மற்றையப் பகுதிகளில் வாய்க்கப் பெற்றதைப்போல பரந்து விரிந்ததல்ல. வசதி வாய்ப்புக் கொண்டதல்ல' (2007).*

இத்தகைய புரிதலோடுதான் மலையகப் பெண்களின் கதைகளையும் 'ஊடறு' தொகுக்க முன்வந்திருக்க வேண்டும். இதற்கிடையே ஜெயசீலன், ஹெரோசனா தொகுத்த கோ.ந. மீனாட்சியம்மை படைப்புகளையும் ஒருசேர தொகுக்க ஊடறு பங்களிப்புச் செய்துள்ளது என்பதை நினைவு கூரவேண்டியுள்ளது. இந்த மூன்று பெண்ணிலை சார்ந்த தொகுப்புகளுக்காகவும் மலையக இலக்கியத் தளத்தின் சார்பில் 'ஊடறு'வுக்கு நன்றிகளைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. அதே நேரம் 2007-இல் இருந்த நிலைமைகளைவிட, மலையகப் பெண்கள் சூழலில் ஏற்பட்டிருக்கும் பின்வரும் அவதானிப்புகளைக் கவனத்தில் கொண்டு, அடுத்த தொகுப்புக்குச் (அது மலையகப் பெண்களின் கட்டுரைத் தலைப்பாகக் கூட இருக்கலாம்) செல்லலாம்.

குடும்பப் பொருளாதாரத்தை சுமந்தே ஆகவேண்டிய மலையகப் பெண்களின் சுமைகள் (ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது House wife கலாசாரம் இங்கு மிகமிக குறைவு), பெருந்தோட்டத் தொழிற்சூழலில் அவர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளும் தொந்தரவுகளும், பெருந்தோட்ட முறை மாற்றமடைந்து அறிமுகப்படுத்தபட்டு வரும் காணிக் கொழுந்து (அவூட்குரோவர்) முறையில் இடம்பெறும் பெண்களின் உழைப்பு சுரண்டப்படல், பெருந்தோட்டத் தொழிலுக்கு மாற்றாக அவர்கள் தெரிவு செய்யும் வெளிநாட்டுப் பணிப் பெண் வேலைகள் (இது குறித்து பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி. பஸீஹா அஸ்மி குழுவினர் அண்மையில் செய்த ஆய்வறிக்கை கவனத்தில் கொள்ள வேண்டிய மலையகப் பெண்களின் பல்வேறு பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது - நூலாக்கமும் பெற்றுள்ளது), வெளிநகர வீட்டுவேலைப் பெண்கள் ஆகிய தெரிவுகளில் ஏற்படும் சிக்கல்களும் குடும்பச்சிதைவுகளும் வீட்டு வேலைக்கு எனச் செல்லும் மலையகச் சிறுமியர்கள் வெளிநகர சிறப்பங்காடிகளில் (Super Markets) விற்பனை உதவியாளர்களாக, காசாளர்களாக தமது பொருளதார வாழ்வைத் தொடங்கும் மலையக இளம் யுவதிகள் (இந்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக்கொண்டு வருவது அவதானிக்கப்படுகிறது), ஆண்கள் மட்டுமே ஆரம்பத்தில் தெரிவு செய்த கடைச்சிப்பந்திகள் தொழிலை இப்போது மலையகப் பெண்களும் தெரிவு செய்வது, தோட்டத் தொழிலுக்கு அடுத்து மலையகப் பெண்கள் தொழிற்படையாகத் திரண்டிருக்கும் ஆசிரியத் தொழிலில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், சாதனைகள், அதிகரித்து வரும் மலையகப் பெண் பட்டதாரிகள்: அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், சாதனைகள் போன்ற இன்னோரன்ன மலையகப் பெண்களின் பேசப்படாத, பேசப்படவேண்டிய கதைக் கருக்கள் விரவிக்கிடக்கின்றன.

இவை 'மலையகா 2'-க்கான தேவையை வலியூறுத்த நிற்கின்றன. இவை குறித்து மலையகப் பெண் எழுத்தாளர்கள் கவனம் கொள்ளதபோது 'மலையகா 2' கூட மலையகப் பெண்களின் கதைகளின் தொகுப்புகளின் தொகுப்பாகவே அமைய வாய்ப்புண்டு.



thilagar@thaiveedu.com

# பன்னூலாசிரியர் சித்தி ஜுனைதா பேகம்

**– பொ. திராவிடமணி**

பெண், விடுதலையைப் பெற்றுவிட்டதாகப் பிரகடனப்படுத்திக்கொள்ளும் இன்றைய சூழலிலும், பெண்கள் பொதுவெளியில் சமூகம் சார்ந்தும், படைப்பு சார்ந்தும் இயங்குவதென்பது கடினமாக இருக்கிறது. அதுவும் பெண் விடுதலையற்று, அடிமை விலங்கிட்டு, இருட்டறையில் முடங்கிக் கிடந்த 20-ம் நூற்றாண்டு எனில் சொல்லவா வேண்டும். அதிலும், கல்வியறிவு முற்றிலும் முடக்கப்பட்டிருந்த சமூகத்தில் ஒரு பெண்ணின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அத்தகைய சூழலில் மூன்றாவது வரை பள்ளியில் படித்த ஒருவர் படைப்புலகமே வியக்கும் வகையில் சிறுகதை, புதினம், நெடுங்கதை, கட்டுரை எனப் பன்முக ஆளுமையாக விளங்கிப் பல படைப்புகளைப் படைத்தளித்துள்ளார் எனில், வியப்பாக இருக்கிறதல்லவா? ஆம். அத்தகைய வியப்பின் வரலாற்றுக் குறியீடாக விளங்குபவர்தான் சித்தி ஜுனைதா பேகம்.

சித்தி ஜுனைதா பேகம் இந்தியாவில், தமிழகத்தில் உள்ள நாகப்பட்டினம் மாவட்டத்தில் இஸ்லாமியர்களின் புனிதத் திருத்தலம் அமைந்துள்ள நாகூர் எனும் சிற்றூரில், எம். ஷெரீப் பெய்க் - முத்துக்கனி இணையருக்கு முதல் மகளாக 1917-ம் ஆண்டு பிறந்தார். இளமையிலேயே தன் தாய் முத்துக்கனி மறைய, சிற்றன்னை கதிஜா நாச்சியாரால் வளர்க்கப் பெற்றார். இவரது தந்தை ஷெரிப் பெய்க் ஒரு ஆங்கிலேயக் கப்பலில் கேப்டனாக இருந்தார். ஆச்சிமா என்று அழைக்கப் பெற்ற இவர் தமது 12-வது வயதில் தனது சிற்றன்னை கதிஜா நாச்சியாரின் சகோதரர் ஏ. ஃபகீர் மாலிமார் என்பவரை மணந்தார். அவர் நாகூரில் ஒரு மளிகை கடை வைத்திருந்தார். வணிகத்தின் பொருட்டு மலேசியாவிற்கு அடிக்கடி சென்று வந்துகொண்டிருந்தார். இரண்டாம் உலகப்போரின் பொழுது மலேசியாவில் பெரிபெரி எனும் நோயால் தாக்கப்பட்டு உயிரிழந்தார். சித்தி ஜபீரா, சித்தி ஹமீதா, சித்தி மஹ்மூதா, சித்தி சாதுனா என்ற நான்கு மகள்களுக்குத் தாயான இவர் தமது 17-வது வயதில் கணவரை இழந்தார்.

சித்தி ஜுனைதாவின் குடும்பம் கல்விக் கேள்வியிலும், அரசியல் பின்புலத்துடனும், சிறந்து விளங்கியதாகும். இவரது தாத்தா மு.யூ. நவாபு சாகிபு மரைக்காயர் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் காங்கிரஸ் குழுத் தலைவராகத் திறம்படச் செயலாற்றிய பெருமைக்குரியவர். முற்போக்கு சிந்தனையுடையவர். இவர் சித்தி ஜுனைதாவின் படைப்பாக்க முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமது முதல் புதினமான 'காதலா? கடமையா?' எனும் புதினத்தின் முன்னுரையில் சித்தி ஜுனைதா தன் தாத்தாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'இப்புத்தகத்தை அச்சிடுமாறு என்னைப் பலமுறையும் தூண்டிய உற்றார் உறவினர்கட்கும், தாய் நாட்டின் விடுதலைப் போரிற் கலந்து, சிறை சென்ற தேசபக்தரும், தற்போது தென் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் தலைவராக இருந்துவரும், எனது பாட்டனார் மு.யூ. நவாபு சாகிபு மரைக்காயர் அவர்கட்கும்' தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவருடன் பிறந்த நான்கு சகோதரர்களில் மூத்த சகோதரர் ஹிசைன் முனவர் பெய்க் பன்மொழி வித்தகர், சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். இரண்டாவது சகோதரர் முஜுான் பெய்க் காரைக்காலில் 'பால்யன்' எனும் இதழைப் பல ஆண்டுகள் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திய பெருமைக்குரியவர். மற்ற இரண்டு சகோதரர்கள் இறந்துபோயினர்.

இத்தகைய பின்னணியுள்ள குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சித்தி ஜுனைதா பேகம் பள்ளியில் மூன்றாவது வரை மட்டுமே படித்திருந்தார். இருபதாம் நூற்றாண்டு காலப் பகுதியில் பாரதி, பாரதிதாசன், பெரியார் எனச் சில முற்போக்குச் சிந்தனைவாதிகள் தோன்றிப் பெண் கல்வியின் இன்றியமையாமையை, அதன் தேவையை வலியுறுத்தி வந்தனர். எனினும், ஒரு சில சமூகத்தையன்றிப் பெரும்பான்மையான சமூகப் பெண்களுக்குப் பெண்கல்வி என்பது எட்டா கனியாகவே இருந்திருக்கின்றது.

அன்றைய பெண்கல்வி நிலைகுறித்து உ.வே.சா. அவர்கள் சித்தி ஜுனைதாவின் முதல் புதினமான 'காதலா? கடமையா?' எனும் புதினத்திற்கு அளித்துள்ள மதிப்புரையில்...,

*'இப்போது சில காலமாக ஆண்பாலரைப் போலவே பெண்பாலரும் கல்வி விஷயத்தில் இந்நாட்டில் முன்னேற்றமடைந்து வருகிறார்களென்பதை யாவரும் அறிவர். பெண்பாலரில் சில சாதியினர் மட்டும் கல்வியில் மிக்க மேம்பாடுற்று விளங்குகின்றனர். தமிழ் சம்பந்தப்பட்ட மட்டில், முகம்மதியப் பெண்*

*மணிகளில் நன்றாகப் படித்தவர்கள் இருப்பதாகத் தெரிய வில்லை. ஆண் பாலரில் அந்த வகையிற் பல வித்துவான்கள் உண்டு'* (சித்தி ஜுனைதா பேகம், காதலா? கடமையா?) என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

'நூருல் இஸ்லாம்' எனும் இதழைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பைப் பெற்ற இவர் செந்தமிழையும், படைப்பாற்றலை யும் ஒருசேரக் கைவரப் பெற்றார். சித்தி ஜுனைதா தமது 16-வது வயதில் எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய முதல் சிறு




கதை 1929-ல் 'நூருல் இஸ்லாம்' இதழில் வெளிவந்துள்ளது. அதன் பிற்பாடு தமது 81-வது வயதில் இறக்கும் வரை தொடர்ந்து பல நூல்களைப் படைத்தளித்துள்ளார்.

தமது 21-வது வயதில் முதல் புதினமான 'காதலா? கட மையா?' எனும் வரலாற்றுப் புதினத்தை 1938-ம் ஆண்டு வெளியிட்ட இவர், அதனைத் தொடர்ந்து 'செண்பகவல்லி தேவி அல்லது தென்னாடு போந்த அப்பாஸிய குலத்தோன் றல்' (1947) எனும் வரலாற்றுப் புதினத்தையும், 'மகிழம்பூ' எனும் புதினத்தையும் வெளியிட்டுள்ளார்.

'மலைநாட்டு மன்னன்' எனும் தொடர் கதையையும், 'ஹலிமா அல்லது கற்பின் மாண்பு', 'பெண் உள்ளம் அல்லது கணவ னின் கொடுமை' போன்ற கதைகளையும், திரு நாகூர் அண் ணலின் திவ்ய மாண்பு எனும் வாழ்க்கை வரலாற்று நூலையும், காகா ஹஸன் பசரீ (ரஹ்) எனும் முஸ்லீம் பெருமக்களின் வாழ்க்கை வரலாற்று நூலையும் எழுதியுள்ளார்.

சித்தி ஜுனைதா 'நூருல் இஸ்லாம்', 'செம்பிறை', 'ஷாஜஹான்' போன்ற இதழ்களில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து கிட் டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு, அவரது சகோ தரி மகன் நாகூர் ரூமி 1995-ல் 'இஸ்லாமும் பெண்களும்' எனும் தலைப்பில் ஒரு கட்டுரைத் தொகுப்பை வெளிட்டுள் ளார்.

இவர், தான் படைப்புத்துறையில் தடம் பதிக்க எவரையும் முன்மாதிரியாகக் கொள்ளவில்லை என்பதை பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

*'நான் என் எழுத்துலக நுழைவிற்கு எனக்கு முன் மாதிரியாக யாரையும் பின்பற்றவில்லை. எனது சிறுகதை, நவீனம் எல் லாம் இயல்பாக எனக்கமைந்த சொந்த நடை என்றே நினைக் கிறேன். நான் முதன் முதலில் எழுதிய நெடுங்கதை 'காதலா? கடமையா?' என்பது. இந்த நவீனத்தை நான் எழுத எந்தக் காரணமும் எனக்கில்லை. நான் எழுத வேண்டும் என்ற எனது சொந்த அவாதான்.'* என்று 1999-ல் முஸ்லீம் முரசு பொன் விழா மலருக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

சித்தி ஜுனைதா பேகம் தன்னம்பிக்கை மிக்க ஆளுமையான பெண்மணி. என்னதான் குடும்பப் பின்னணியைப் பெற்றிருந் தாலும் ஊக்கமளிக்கவும், உறுதுணையாகவும் சிலர் இருந்தி ருந்தாலும், அவருக்குள் இருந்த படைப்பாற்றல், அதை வெளிக்கொணர வேண்டும் எனும் துணிவு, இவை இரண்டும் இல்லையெனில் இத்தகைய புரட்சிப் பெண்மணி தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்திருக்கமாட்டார். இவர் தன்னைப் 'பன் னூலாசிரியை' என்றே அடையாளப்படுத்திக்கொண்டார். தன் வீட்டின் முகப்பிலும் 'பன்னூலாசிரியை' எனும் பெயர்ப் பல கையைச் சுவற்றில் மாட்டிவிட்டிருந்தார் என அறியமுடிகிறது. தமது முதல் புதினமான 'காதலா? கடமையா?' வெளிவந்த பொழுது அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பையும், அனுபவங்களை யும் பிற்பாடு தன் குடும்பத்தாரிடம் பின்வருமாறு பதிவுசெய் துள்ளதை அறியமுடிகிறது.

*'இந்த நாவலை எழுதிய பிறகு எழுந்த எதிர்ப்புகள் சுவாரசிய மானவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கூடச் சொல்லலாம். நாவல் வெளிவந்த பிறகு கூட்டம் கூட்டமாக வெள்ளைத் துப்பட்டி அணிந்த பெண்கள் தெருப்பள்ளித் தெரு வீட்டுக்கு வந்து ஆச்சிமாவைப் பார்க்க வந்தார்களாம்! சும்மா அல்ல. ஒரு கெட்டுப்போன நல்ல குடும்பத்துப் பெண்ணை விசாரிக்க வருவதுபோல!. இந்தத் தகவலை என் னிடம் ஆச்சிமாவே நேரடிப்பேச்சில் இதே வார்த்தைகளில் சொன்னது. அம்மாவும் இதை உறுதிப்படுத்தினாங்க'* (கட் டுரை, நாகூர் ரூமி சித்தி ஜுனைதா பேகம் ஓர் அறிமுகம்) என்று நாகூர் ரூமி குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய சூழலைப் பிற்காலத்தில் சித்தி ஜுனைதா ஒரு தகவலாகக் கூறிக் கடந்திருந்தாலும் அவரது காலத்தில் மிகப்பெரிய எதிர்ப்பலையாக அது இருந்திருக்கக் கூடும். குடும்பத்தார், நண்பர்கள் எனச் சிலரது ஆதரவு அவருக்கு இருந்திருந்தாலும், சமூக எதிர்வினைகளை எதிர்கொள்ளக்



கூடிய நெஞ்சுரத்தை அவர் பெற்றிருந்ததனால் மட்டுமே அந்த அசாதாரணமான சூழலைக் கடந்து வந்திருக்கின்றார். பிற்பாடு பல படைப்புகளைத் தந்திருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

நுட்பமான அறிவும், தெளிந்த சிந்தனையுமுடைய சித்தி ஜுனைதா, அவரது படைப்புகளின் வழி தான் காண விரும் பிய நாட்டு முன்னேற்றங்கள் குறித்தும் பாத்திரங்களின் வழி பதிவுசெய்துள்ளார்.

*சுரேந்திரன் தன் நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் கவன மாக இருந்தான் எனக் குறிப்பிடும் பொழுது, '18 வயதிற்கு மேல் 45 வயதிற்குள்ளடங்கிய ஒவ்வொரு ஆண்மகனுக்கும் புத்தக பயிற்சி அளித்தான். மக்கட்கு கல்வியில் ஆர்வத்தை யூட்டினான். வைத்திய வசதிகளையும், பயிர்த் தொழில், குடி சைக் கைத்தொழில் முதலியவற்றில் விருத்தியையும் அவன் பெருக்கினான். சுரேந்திரன் தன்னுடைய முழு கவனத்தையும் தங்கள் முன்னேற்றத்தில் ஈடுபடுத்தியதைக் கண்ட நாட்டு மக் கள், அவனை அன்போடு நேசித்து வந்தனர்'* என்கிறார் (காதலா? கடமையா?). மேலும் அவர் பெண் விடுதலை குறித்தும் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

*'பெண்ணினத்திடத்து அவனுக்குள்ள அளவு கடந்த அபிமா னத்தினால் பெண்களின் விடுதலைக்கென உழைத்தான். பெண்மணிகளின் விடுதலையின் மூலமாகவே, நாட்டின் முன் னேற்றமும் சித்திபெறுமென்பது அவனது திடமான நம் பிக்கை. எந்தச் சமூகம் பெண் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறதோ, அந்தச் சமூகம் ஒருகாலத்தும் தலை நிமிர்ந்து நிற்கமுடியாதென்பது அவனது கொள்கை. ஒரு சமூ கத்தின் வாழ்வும், தாழ்வும், உயர்வும், வீழ்ச்சியும் அதனுடைய பெண்களைப் பொறுத்தவைகளாயிருக்கின்றனவென்பது மறுக்க முடியாத உண்மை. ஏன்? பெண்ணினம் சாதாரணமா னதல்ல, அவர்கள் எதிர்கால மக்களின் தாய்மார்கள். சமூகத் தின் அபிவிருத்தி அவர்களிடம் கைவசமிருக்கின்றது'* (காதலா? கடமையா?) என்று மன்னன் சுரேந்திரன் சிந்திப்பதாக சித்தி ஜுனைதா பேகம் கட்டமைத்திருக்கின்ற பத்தியின் மூலம் அவருக்கிருந்த பெண்விடுதலை குறித்தான கருத்தியலை நம்மால் அறிந்துகொள்ளமுடிகிறது.

இவர் அக்காலத்தில் நிலவிய ஆணாதிக்க மனோநிலையை எதிர்த்துக் குரல்கொடுக்கவும் தயங்கவில்லை. 1955-ல் நூருல் இஸ்லாம் எனும் இதழில் எழுதிய கட்டுரையில் *'ஒரு முஸ்லீம் பெண் தன்னில்தானே ஒளி வீசுகின்றாள். அவள் பெயருக்கு அவளே உரிமை பெற்றவள். அவள் செல்வத்துக் கும் அவளே அதிகாரி. அவள் திருமணம் செய்துகொண்ட தால் உரிமைகள் அனைத்தையும் இழந்துவிடவில்லை. அவ ளுக்குத் தனியாக ஆத்மா உண்டு. அவளுக்கு தெய்வம், அவள் கணவனல்ல'* (கட்டுரை, கீரனூர் ஜாகிர்ராஜா, சித்தி ஜுனைதா பேகம். கணவன் அவளுக்குத் தெய்வமல்ல) என்று அக்காலத்தில் மிகத் தெளிவாக எழுதியிருப்பது ஆணாதிக்க மனோநிலை உடையார்க்குச் சவுக்கடி கொடுத்தாற்போல் உள்ளது.

இஸ்லாமியர்களின் வேதமாகிய திருக்குர்ஆன் பெண்கல்வி குறித்து வலியுறுத்தியுள்ளபோதிலும், பெண்களுக்காண கல்வி என்பது மறுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாத சித்தி ஜுனைதா பேகம், ஒரு கட்டுரையில் அதனை வன்மை யாகக் கண்டிக்கிறார். *'இஸ்லாத்தில் தெளிவாய் வற்புறுத்திப் பெண்கல்வி அனுமதிக்கப்பட்டிருப்பினும் முஸ்லிம் பெண் கள் கல்வியில் மிகவும் பிற்போக்கடைந்திருக்கவும், மற்றைய*

*பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கவும் காரணம் என்ன? தன்னலப் பேய் பிடித்த பலர் பொருள் தெரியாது குர்ஆன் ஓதி விடுதலே அறிவையளிக்குமெனப் பல ஆண்டுகளாய்க் கூறி, இஸ்லாமியப் பெண்களை ஏமாற்றி அவர்களை விலங் குகட்குச் சமமாய் ஆக்கி வைத்திருப்பதே காரணமென்றால் மிகை யாகுமோ?'.* (கீரனூர் ஜாகிர்ராஜா, சித்தி ஜுனைதா பேகம்) என்று கேட்கிறார்.

பள்ளி இறுதி வகுப்புவரைப் படிப்பதே அன்று மிகப்பெரிய சவால்தான். பழமை மரபில் வழிவந்த தன் தாயால் தமது பள் ளிப் படிப்பு மூன்றாவதுடன் தடைபட்டதை எண்ணி வருந்திய சித்தி ஜுனைதா பேகம், தன் பெண் பிள்ளைகளின் படிப்பில் மிகவும் கவனமாக இருந்தார். பிள்ளைகளின் படிப்பிற்காக நாகூரிலிருந்து நாகப்பட்டினத்திற்கு குடிபெயர்ந்தார். பள்ளி இறுதிவரை படிக்க வைத்தார். சகோதரிகளின் பிள்ளைகளை யும் பேரப் பிள்ளைகளையும் கல்லூரியில் மேற்படிப்புவரை படிக்க வைத்து, கல்லூரி விரிவுரையாளராக உயரும் நிலைக்கு ஊக்கப்படுத்தினார்.

தனக்குப் பள்ளிக்கூடம் செல்லும் வாய்ப்புதானே மறுக்கப்பட் டது. வீட்டிலிருந்தே படிப்பதற்குத் தடையென்ன? என்று எண் ணிய இவர் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், சிற்றிலக்கியம், சைவசித்தாந்தம் போன்ற இலக் கிய வகைமைகளை நன்கு படித்தறிந்திருந்தார். சித்தி ஜுனைதாவின் இலக்கிய வாசிப்பின் பயனை அவரது படைப் புகளில் காணமுடிகிறது. இது குறித்து உ.வே.சா. 'காதலா? கடமையா?' புதினத்திற்கு எழுதியுள்ள மதிப்புரையில் குறிப் பிடும்பொழுது.

*'இதன் நடை யாவரும் படித்தறிந்து மகிழும்படி அமைந்திருக் கிறது. கதைப்போக்கும் நன்றாக உள்ளது. இடையிடையே பழைய நூல்களிலிருந்து மேற்கோள்கள் கொடுத்திருப்பது, இந்நூலை எழுதியவருக்குத் தமிழ் இலக்கிய நூல்களில் நல்ல பயிற்சியுண்டென்பதைக் காட்டுகிறது.'* என்று குறிப்பிட் டுள்ளார். இதன் மூலம் சித்தி ஜுனைதா பேகம் ஒரு சிறந்த படைப்பாளி மட்டுமல்ல படிப்பாளி என்பதையும் அறிந்து கொள்ளமுடிகிறது. சிலர் இவரது படைப்பாற்றலை அறிந்து, அவருடைய பெயரைக் குறிப்பிடாமல் படைப்புகளை இதழ்க ளுக்கு அனுப்பும்படி அறிவுறித்தியபோதும், அதனை ஏற்கா மல் தன் பெயரிலேயே படைப்புகளை அனுப்பிப் புரட்சி செய்த புதுமைப்பெண் இவர்.

தமிழறிஞர் நா. கண்ணன் 'முஸ்லீம் சமூகம் தந்த முதல் பெண் தமிழ் எழுத்தாளர் - சித்தி ஜுனைதா பேகம்' எனும் கட் டுரையில் இவரைப் பற்றியும், இவரது படைப்புகள் பற்றியும் குறிப்பிடுகையில்,

*'சித்தி ஜுனைதா பேகம் தீர்க்கமான கொள்கையும் விடுதலை உணர்வும் கொண்ட பெண்ணாகத் திகழ்கிறார். தனது இஸ் லாம் சமூகத்தில் சாதிகள் கிடையாது எனினும் தமிழ்ச் சாதி வேறுபாடுகள் பற்றி அக்கறை கொண்டிருக்கிறார். திருமூல ரின் வசனமான 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று தமி ழர்கள் வாழவேண்டுமென வலியுறுத்திகிறார். இவரது சமய சமரச சன்மார்க்க நோக்கு இவரது கதைகளில் மிளிர்கிறது. இஸ்லாமை முதன்மைப்படுத்தி இவர் எழுதியிருந்தாலும், மூன்றில் ஒரு பங்குக் கதைகள் இந்துப் பாத்திரங்களை வைத்தே எழுதப்பட்டுள்ளது. மேலும், இவர் சரளமாக திரு- மூலர், மாணிக்கவாசகர் போன்றோரை மேற்கோள் காட்டுவதி லிருந்து இவருக்கு சைவ சித்தாந்தப் பரிட்சயமும் இருப்பது தெரிகிறது. இவரது நடை 'மென்னடை' என்று பலர் போற்று கின்றனர்'* என்கிறார்.

சித்தி ஜுனைதா பேகத்தின் முதல் புதினமான 'காதலா? கட மையா?' எனும் புதினத்தின் கதைதான், எம்.ஜி.ஆர். நடித்து வெற்றிபெற்ற 'நாடோடி மன்னன்' எனும் திரைப்படத்திற்கு அடிப்படைக் கதையாக அமைந்தது என்பர். 'நாடோடி மன் னன்' திரைப்படத்திற்கு வசனம் எழுதிய ரவீந்தர் (ஹாஜா முகைதீன்) நாகூரைச் சேர்ந்தவர் என்பதும் நோக்கத்தக்கது.

இத்தகைய புரட்சிப் பெண்ணான சித்தி ஜுனைதா பேகம் மார் பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். இது குறித்து நாகூர் ரூபி தனது கட்டுரையில் பின்வருமாறு பதிவு செய்துள் ளார் *'ஆரம்பத்தில் உடல்நலக்குறைவால் அவதிப்பட்டதாக ஆச்சிமா பேட்டியில் கூறியுள்ளார் 1979-80-களில்தான் அவர் களுக்கு மார்புப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. 1998 வரை வாழ்ந்த ஆச்சிமா தனது நோய்க்காக ஆங்கில மருத்துவத்தை நாடவில்லை. சித்த மருத்துவம் செய்து கொண்டார்கள். புகழ்பெற்ற ஓய்வுபெற்ற நீதிபதி பலராமய்யா தான் அவர்களுக்கு வைத்தியம் பார்த்தார்'* (கட்டுரை, சித்தி ஜுனைதா பேகம் ஓர் அறிமுகம்) என்று தன் சிற்றன்னையின் நோய்குறித்து நாகூர் ரூமி குறிப்பிட்டுள்ளார். புரட்சிப் பெண் ணாகவும், புதுமைப் போராளியாகவும் திகழ்ந்த சித்தி ஜுனைதா பேகம், மார்பகப் புற்றுநோயை எதிர்த்தும் 18 ஆண்டுகள் போராடினார். நோய் முற்றிய நிலையில் மார்ச் 19, 1998 அன்று இறைபதம் அடைந்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த நா. கண்ணன் துபாயில் சித்தி ஜுனைதா பேகம் குறித்து நண்பர் மூலம் அறிந்தார். பின்னர் நாகூ ருக்கே சென்று சித்தி ஜுனைதா பேகத்தின் உறவினர்கள், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சந்தித்து அவரது படைப்புகளைப் பெற முயற்சி செய்தார். ஆனால், அது உட னடியாகக் கைகூடவில்லை. விடாமுயற்சியின் பயனாக அவ ரது முதல் புதினமான 'காதலா? கடமையா?' எனும் புதினத் தைக் கவிஞர் நாகூர் ரூமியிடம் பெற்றார், அரிதினும் அரி தாய்க் கிடைத்த அப்புதினத்தை இலக்கப் பதிவாக தமிழ் மரபு அறக்கட்டளையின் மூலம் வெளியிட்டுள்ளார்.

சித்தி ஜுனைதா பேகத்தின் நூல்கள் முதுசொல் கூடத்தில் பொது வாசிப்பிற்கு வைக்கப்படும் என்று தமிழ் மரபு அறக் கட்டளை கூறியிருப்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. நூற் றாண்டு கடந்த இப்பெண் ஆளுமையின் படைப்பு குறித்தும், புரட்சிகரமான நகர்வுகள் குறித்தும் அவரது முற்போக்கு சிந் தனைகள் குறித்தும் பேசுகிறோமென்றால், அது அப்புரட்சிப் பெண்மணியின் துணிவுக்கும், முயற்சிக்கும் கிடைத்த மாபெ ரும் வெற்றியாகும்.



thiravidamani.p@thaiveedu.com



# மாஜிதாவின் 'சுவை'

## பெண் வெற்றியின் கொண்டாட்டம்

- கருணாகரன்

பழகிய வழியில் பயணிப்பதை விடப் புதிய வழியில் பயணிக்கும்போது தெரியும் காட்சிகள் அதிக ஈர்ப்பை அளிப்பதுண்டு. அதிலுள்ள புதுமையே கூடுதலான கவனத்தை உண்டாக்குவது. மனித மனத்துக்கு எப்போதும் புதுமையில் ஈடுபாடு அதிகம். புதிய ஆடைகள், புதிய ஆபரணங்கள், புதிய வாழ்க்கை, புதிய சூழல், புதிய பொருட்கள், புதிய எண்ணங்கள், புதிய வடிவங்கள் என இந்தப் புதுமையின் நாட்டம் கட்டற்று விரிந்து கொண்டேயிருப்பது. ஆசையோடு வாங்கி, இன்று நம்முடைய கையில் வைத்திருக்கும் கைபேசி (Mobile phone) அடுத்த ஆறு மாதத்தில் அதனுடைய கவர்ச்சியை இழந்து விடுகிறது. பாவிக்கக் கூடியதாக இருக்கும்போதே புதியதை (New verson) வாங்கிக் கொள்கிறோம். கலை, இலக்கியத்தில் இது இன்னும் உச்சம். புதிய உள்ளடக்கத்தை, புதிய வெளிப்பாட்டை (மொழிதலை), புதிய வடிவத்தை வாசகர்களும் பார்வையாளர்களும் எதிர்பார்க்கிறார்கள். கேட்பவர்களும்தான் என்பதால் புத்தாக்கத்தையும் புதிதளித்தலையுமே கலையும் இலக்கியமும் எப்போதும் தம்முடைய விதியாகக் கொண்டுள்ளன. சிருஷ்டி அல்லது படைப்பு என்று அதைச் சொல்வதே முன்னில்லாத ஒன்றின் புதிதையாகும். அந்தப் புதிதளித்தலே அதற்குரிய மதிப்பும். ஆனால் அது அதிர்ச்சிகரமான வெளிப்பாடாக இல்லாமல், ஆழமும் விரிவும் அடிப்படையான தகுதியும் கொண்டிருக்க வேண்டும். என்றால்தான் அவற்றுக்கு எப்போதும் நிரந்தர மதிப்புண்டு. கிளாஸிக் படைப்புகள் அத்தனையிலும் இதனைக் காணலாம். ஏறக்குறைய இந்த அடிப்படைகளைக் கொண்டதாக அண்மையில் மாஜிதா எழுதிய 'சுவை' (காலச்சுவடு - மார்ச் 2024) என்ற கதை உள்ளது.

தமிழ்ப் புலம்பெயர் இலக்கியம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த நனவிடை தோயும் இலக்கியப்போக்கிலிருந்து விடுபட்டு, தாம் வாழ்கின்ற கள - காலச் சூழலைப் பிரதிபலிக்கும் எழுத்துகள் கடந்த பத்தாண்டுகளில் அதிகமாக வரத் தொடங்கியுள்ளன. சிறுகதைகளில் ஷோபாசக்தி, ப.அ.ஜெயகரன், ப. தெய்வீகன், கலாமோகன், அனோஜன் பாலகிருஸ்ணன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், தமிழ்நதி, குரு அரவிந்தன், அ. முத்துலிங்கம், ஆ.சி. கந்தராஜா, ஜீவகுமாரன், வ.ந. கிரிதரன், பொ. கருணாகரமூர்த்தி, சுமதி ரூபன் (கறுப்பி சுமதி) நோயல் நடேசன், மெலிஞ்சிமுத்தன், நிருபா, கலா சிறிரஞ்சன், நிவேதிதா போன்றோர் இந்த மாற்ற வழியில் முக்கியமானோர். சிலர் தாம் வாழ்கின்ற நாடுகளில் பிற சமூகங்களுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இடையிலான அரசியல், பண்பாட்டு உராய்வுகளைக் கவனித்து எழுதுகின்றனர். சிலர் புதிய திணையில் வேர்கொள்ள முற்படும் வாழ்க்கையைப் பற்றி எழுதுகிறார்கள். சிலர் புதிய களத்தின் ருசியை எழுதுகின்றனர். சிலர் அந்த நாடுகளில் உள்ள பிற சமூகங்களைப் பற்றி, குறிப்பாக அங்குள்ள பூர்வகுடிகளைப் பற்றி எழுதுகிறார்கள். கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து எழுதுவோர் பெரும்பாலும் இதில் அடங்குவர். இதை விட தாம் வாழ்கின்ற நாடுகளிலுள்ள அதிகார மையங்களான இனம், மதம், வர்க்கம், அரசு போன்றவற்றிற் தொழிற்படும் மேலாதிக்கத்தை அல்லது அவை செயற்படும் நியாயத்துக்குப் புறம்பான நிலையைச் சுட்டும் புனைவுகளைச் சிலர் செய்கிறார்கள்.

மாஜிதாவின் 'சுவை' கதை, பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டது. அங்கே நிலவுகின்ற வெள்ளையின மேலாதிக்க நுண்ணரசியலையும் அகதிக் கோரிக்கையை அணுகுவதில் உள்ள சட்டப் பிரச்சினைகள், அதற்கான அணுகுமுறைகளையும் பேசுகிறது. கூடவே சமபாலுறவு (LGBD) பிரச்சினையையும். ஆக மூன்று முக்கிய பிரச்சினைகளைச் சமனிலையில் வைத்து மிகச் சிறப்பாக கதையை உருவாக்கியுள்ளார் மாஜிதா.

அகதிகளின் விடயத்திலும் பாலுறவு சம்மந்தமான சட்டங்களிலும் பிரித்தானிய அரசும் சட்டங்களும் தாராளத் தன்மையைக் கொண்டிருந்தாலும் அதற்கு வெளியே சமூகச் சூழலிலும் தனி மனிதர்களிடத்திலும் இது எதிர்நிலையில் பல சமயங்களிலும் தொழிற்படுகிறது. சட்டமும் அரசியற் சாசனமும் கல்வியும் முற்போக்கானதாக இருக்க, சமூக யதார்த்தமும் தனி மனித உளநிலையும் பிற்போக்குத்தனமாக இருக்கின்றன. இந்த முரண் உலகளாவிய தன்மையைக் கொண்டது. பிரித்தானியாவில் மட்டுமல்ல, சர்வதேச அளவில் நிலவும் பொதுப் பிரச்சினை. இலங்கையில் இது இன்னும் தீவிரமானது. சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட - ஏற்றுக் கொள்ளப்பட்ட பல விடயங்கள், சமூக நடைமுறையிலும் தனிமனித

உளநிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் முரணாக இருக்கின்றன. இதனால்தான் இலங்கையில் இனவாதம் தொடக்கம் சாதியம் வரை தொடர்ந்தும் கொதிப்போடுள்ளது. சாதி, மத, பால், மொழிச் சமத்துவத்தையெல்லாம் வலியுறுத்தும் அரசியற் சாசனமும் சட்டமும் இருந்தாலும் எதுவுமே பயனற்றவை. நம்பிக்கையில்லாதவை என்று நீடிக்கும் நிலை உள்ளது. சட்டத்தையும் சாசனங்களையும் அர்த்தமாக்குவது அவற்றின் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள அதிகாரத் தரப்பினராகும். அவர்கள் அதைச் செய்யவில்லை என்றால்



சட்டமும் சாசனமும் பாதிக்கப்படுவோரிடத்தில் நம்பிக்கையை இழந்து விடும். பிரித்தானியாவில் இது மென்னிலையில் தொழிற்படும் நிறவாதமாகவும் மேல்வர்க்கக் குணாம்சமாகவும் உள்ளது. இதற்குக் குறியீடாக எட்வேர்ட் என்ற பாத்திரத்தை மாஜிதா உருவாக்கியுள்ளார்.

கதையின் தொடக்கத்திலேயே பிரித்தானாவைப் பூர்வீகமாகக் கொண்ட வெள்ளையின சட்ட நிறுவனமொன்றின் பொறுப்பில் உள்ள எட்வேர்ட்டைப் பற்றிய சித்திரத்தைத் தருகிறார் மாஜிதா. எட்வேர்ட்டின் பணிமனையில் வேலை செய்கின்ற இன்னொரு உதவியாளரானா அல்பியும் ஏறக்குறைய எ-ட்வேர்ட்டின் குணாம்சத்தோடு ஒத்தவனே. அங்கேதான் கதையில் இன்னொரு பாத்திரமாக வரும் கதை சொல்லியான இலங்கைப் பெண், சிரமங்களின் மத்தியில் வேலை செய்கிறாள். அவளுடைய இயல்பும் அவள் சந்திக்கும் நெருக்கடியும் அதிலிருந்து மீள்வதற்காக அவள் எதிர்பார்த்திருந்த சூழலும் அதொரு வாய்ப்பாக வந்தமைவதும் கதையின் உயிரான பகுதிகள். கதையில் இலங்கைப் பெண், பிரித்தானியச் சட்டவாளர் மற்றும் உதவியாளர், ஆபிரிக்கப் பெண் என மூன்று வெவ்வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த பாத்திரங்கள் இயங்குகின்றன. ஆனால் நடைமுறை அர்த்தத்தில் இதை இரண்டு பிராந்தியங்களாகவே கொள்ள முடியும். வெள்ளையர் (பிரித்தானியர்) அல்லாத ஆசிய, ஆபிரிக்கர்கள் அனைவரும் ஒரே பிராந்தியத் தன்மைக்குரியவர்கள் என்ற யதார்த்தமே அது. அதுவே கதையிலும் நிகழ்கிறது.

பிற நாட்டிலிருந்து அகதிகளாக வருவோரை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுதல், அவர்களுக்குக் குடியுரிமை வழங்குதல், வேலை செய்வதற்கான அனுமதியை அல்லது உரிமையைக் கொடுத்தல் என்றெல்லாம் பிரித்தானிய அரசு தாராளத் தன்மையைக் கொண்டிருந்தாலும் இவற்றை எட்டுவதற்கு ஒவ்வொரு அகதியும் படுகின்ற சிரமங்கள் எளிதானவையல்ல. (இது ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் உள்ள பொதுச் சூழலாகும்) இது முதற்கட்டம். அப்படி அகதி ஏற்பு, வேலை செய்யும் உரிமை, குடியுரிமை போன்றவை எல்லாம் சரிவந்தாலும் ஆசிய, ஆபிரிக்க மக்கள் அங்கே மிக நூதனமான முறையில் வேறுபடுத்தப்படுவது இயல்பு. இதை நுட்பமாகக் கவனப்படுத்தியிருக்கிறார் மாஜிதா.

இந்த மாதிரி விசயங்களைப் புனைவில் அதுவும் சிறுகதையொன்றில் கொண்டு வருவது சவாலானது. ஏனென்றால் இது பண்பாடு, அரசியல், அதிகாரம் சார்ந்த தீவிரமான பிரச்சினை. கட்டுரையாக அல்லது நாவலாக எழுதும்போதே இந்தப் பிரச்சினையின் ஆழ, அகலத்தையும் அதன் தீவிர நிலையையும் வெளிப்படுத்த முடியும். ஆனால், சிறுகதையிலேயே இந்தப் பிரச்சினையை மட்டுமல்ல, LGBD-யைப் பற்றியும் சிறப்பாகப் பேசி விடுகிறார் மாஜிதா. எங்குமே எதைப்பற்றியும் தனித்து நின்று பிரச்சாரமாகப் பேசும் தொனியில்லை. அனைத்தையும் புனைவுக்குரிய அம்சத்தோடு பேசிக் கொள்கிறார்.

ஆபிரிக்கப் பண்பாட்டுச் சூழலில் (நைஜீரியாவில்) இருந்து பிரித்தானியப் பரப்பிற்குள் அகதியாகவும் LGBD-யாகவும் நுழையும் டேயோ என்ற இளம்பெண்ணின் பிரச்சினையைக் கையாள்வதே கதையின் வெளித்தோற்றம். ஆனால் கதையின் தொடக்கம் வேறாக ஆரம்பித்து நமக்கு வேறொன்றை முதலில் காட்டுகிறது. அது *"ஏய் மிஸ். கம்யூனிஸ்ட், உன்னை மிஸ்ட்டர் எட்வேர்ட் அவருடைய கெபினுக்கு கூப்பிடுறார். அல்பி, திறந்திருந்த கதவின் நடுவில் நின்று வலது கையை உயர்த்தி சீட்டி அடிப்பது போல் ஒலி எழுப்பி என்னை நோக்கிச் சீண்டலாகக் கூவினான். மடிக்கணினியில் அமிழ்ந்திருந்த நான் தலையைத் தூக்கி என்ன என்பதுபோல் அவனை முறைத்துப் பார்த்தேன்.*

*உன்னை மிஸ்ட்டர் எட்வேர்ட் அழைக்கின்றார் என்று சட்டென்று குரலினை இறக்கினான். நேற்று சாப்பாட்டறையில்*

*நடைபெற்ற பலஸ்தீன இஸ்ரேல் யுத்தம் தொடர்பான விவாதத்தில் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எனக்கு எந்தவிதச் சிக்கலும் இருப்பதாகத் தெரியவில்லை என்று அல்பி வக்காலத்து வாங்க, 'நீ வெள்ளைக்கார வலதுசாரி வேடத்தில் பேசுகின்றாய்' என நான் நையப் புடைத்ததன் காயம் இன்னும் அவனுக்குள் பதுங்கி இருப்பதன் பிரதிபலிப்புதான் அவன் என்னை ஆரம்பத்தில் விழித்துக் கூப்பிட்டதன் காரணம் என்பதை நினைக்கையில் சிரிப்பு வந்தது"* என கதை சொல்லிக்கும் கதையில் வரும் துணைப்பாத்திரமான அல்பிக்குமிடையிலான முரணாகக் காட்டப்படுகிறது. இருந்தாலும் கதை



சொல்லியை அல்பி ஒரு கொம்யூனிஸ்டாக விழிப்பதும், இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தத்தில் அல்பியின் அமெரிக்க - இஸ்ரேல் சார்பு நிலைப்பாட்டைக் கதை சொல்லி கடுமையாக எதிர்ப்பதாகக் காட்டுவதன் மூலமும் கதைசொல்லியின் இயல்புத் தன்மை அடையாளம் காட்டப்படுகிறது.

அகதியாகவும் LGBD யாகவும் நுழையும் டேயோவின் பிரச்சினையைக் கையாளும் இளைய சட்டவாளரான ஆசியப் பெண்ணே கதைசொல்லி. தானொரு இளைய சட்டவாளர், ஆசியப் பெண், பணியிடத்தில் இன்னும் வலுவான இடத்தைப் பெற்றுக் கொள்ளாதவள் என்பதையெல்லாம் கடந்து, துணிச்சலோடு டேயோவின் வழக்கைக் கையாள்வதன் மூலம் தன்னை நிலைப்படுத்தி மேலெழுகிறாள். கூடவே டேயோவையும் வலுப்படுத்தி, அவளுடைய வழக்கை வென்று இருவரும் வெற்றியைப் பெறுகின்றனர். இதற்குள் டேயோவினுடைய பாட்டியின் எதிர்மறையான மனநிலையையும் வென்று விடுகிறாள். சம நேரத்தில் பாட்டி, எட்வேர்ட், அரசு, சட்டம், நீதிமன்றம் எனப் பல நிலைகளில் காணப்படுகின்ற பல பிரச்சினைகளை விவேகம், புத்திக்கூர்மை, துணிச்சல் போன்றவற்றினால் வெற்றி கொள்வதாகக் காட்டுவதன் மூலம் எதையும் நாம் எதிர்கொள்ள முடிந்தால் வெற்றியை எட்டலாம் என்று உணர்த்துகிறது கதை.

தான் ஒரு இளநிலைச் சட்டவாளர், தனக்கு மேலுள்ள எட்வேர்ட்டின் தீர்மானத்துக்கும் உளநிலைக்கும் மாறாக டேயோவின் வழக்கை எடுத்து வெற்றியடைவேன் என்ற தீர்மானத்தை அவள் (கதை சொல்லி) எடுக்கும் இடம் முக்கியமானது. அதுவே கதையின் உயிர். அதிலிருந்தே, அந்தத் தீர்மானப் புள்ளியிலிருந்தே அனைத்தும் நிகழ்கின்றன. கூனியின் விருப்பமே கைகேயின் விருப்பமாகி, அதுவே தசரதனின் தீர்மானமாகி, ராமன் அயோத்தியை விட்டுப் புறப்பட்டது தொடக்கம், ராம - ராவண யுத்தம் வரை சென்றதைப்போல இங்கே அவள் எடுக்கும் அந்தத் துணிகர - சவாலான தீர்மானமே ஏனைய அனைத்துமாகின்றன. மட்டுமல்ல, கதையின் பெரும்பாலான பாத்திரங்கள் பெண்களே. வெற்றியடைவதும் பெண்களே. தோற்கடிக்கப்படுவது எட்வேர்ட் மற்றும் டேயோவின் கணவன் என ஆண்கள் மட்டுமல்ல, அதிகார அமைப்பும் அதனுடைய மனநிலையும்தான்.


வழக்கில் மட்டுமல்ல, அதற்குப் பிறகு அதைப்பற்றி எட்வேர்ட் கேட்கும்போது, 'இந்த வெற்றி உங்களால்தான் ஏற்பட்டது. நீங்கள் சொன்ன 'காலத்திற்கு ஏற்றமாதிரி மாற்றங்கள் நிகழும்போது சுவையையும் ரசனையையும் சட்டத்திற்கும் வழங்க வேண்டும் அல்லவா!' என்று அவர் ஒருபோது அவளுக்குச் சொன்னதையே எட்வேர்ட்டிடம் கேட்டு அவரை மடக்கி விடுகிறாள். இது, எட்வேர்ட் ஏற்கத் தயங்கிய வழக்கை எடுத்து அவரைத் தோற்கடித்தது மட்டுமல்ல, அவர் சொன்னதை வைத்தே அவரை வழக்கிற்கு வெளியேயும் தோற்கடித்ததாகும்.

ஆக, இது பெண்களுக்கு மேலும் ஊக்கத்தையும் தெம்பையும் அளிக்கின்ற கதையுமாகும். அதிலும் தன் பாலுறவுப் பிரச்சினையை பொதுநிலையிலும் சட்டத்திலும் எப்படி எதிர்கொள்ள வேண்டும். அதொரு வளர்ச்சியடைந்த உறவு நிலை என்பதையும் உணர்த்திச் செல்கிறார் மாஜிதா.

கதையில் இவற்றையெல்லாம் கவனப்படுத்தி, புதிய பரப்பொன்றைத் திறந்து சர்வதேசத் தன்மை ஒன்றைத் தமிழ்ப் பரப்பில் உருவாக்கியிருக்கிறார் மாஜிதா. தமிழ்ச் சிறுகதையின் இன்னொரு பரிமாணம் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய புதிய விரிதளத்தையே காலம் வேண்டி நிற்பது.



karunagaran@thaiveedu.com




‘கண்டிச் சீமையில் இருந்து தமிழ்ச் சீமைக்கு’

# தெளிவத்தை ஜோசப்பின் ‘மாறுதல்கள்’ நாவலை முன்வைத்து...

– வசந்தி தயாபரன்

‘மாறுதல்கள்’ நாவல், தாய்வீடு பத்திரிகையில் தொடராக வெளிவந்து, தற்போது நூலுருப் பெற்றுள்ளது. தாய்வீடு பதிப்பகத்தின் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. தாய்வீடு ஆசிரியர், திரு. டிலிப்குமார் தனது பதிப்புரையில். ‘எழுத்தாளர் தெளிவத்தை தனது தேடல்களையும் அனுபவங்களையும் அழிவற்ற படைப்புகளாக மாற்றும் திறன்கொண்ட சமூகப் படைப்பாளி’ எனவும், ‘ஐந்து வருடங்களாக எந்தவொரு எல்லைகளும் விதிக்கப்படாது, ஒரு பறவையின் சுதந்திரத்தோடு அவரால் எழுதப்பட்டதே இந்நாவல்’ எனவும் குறிப்பிடுகிறார். பாக்யாப் பதிப்பகத்தின் பங்களிப்பும் இதில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதாகும். அவ்வகையில் மல்லியப்புசந்தி திலகர் அவர்களின் அறிமுகவுரையும் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.


சமூகம் பற்றிய ஆழ்ந்த அக்கறை என்பது, எழுத்தாளருக்கு அமைந்திருக்கவேண்டிய இன்றியமையாததொரு பண்பு நலன் என்பதில் சந்தேகமில்லை. மலையகம் பற்றிய தெளிவத்தையின் எழுத்துக்களில் அது மிகையாகவே காணப்படுவதுண்டு. மலையகத்தில் பதுளையை அண்டிய அவரது சொந்த ஊரான தெளிவத்தையைக் கதைக்களமாகக் கொண்டு விரியும் இந்நாவலில் அதனை நாம் துல்லியமாக அடையாளம் காணலாம்.

தோட்டங்கள் அரசுடைமையாகின்ற காலத்தை மையப்படுத்தியதாக நாவலின் சம்பவங்கள் பின்னப்பட்டுள்ளன. எனினும், அண்ணளவாக நாற்பதுகளிலிருந்து எழுபதுகளின் தொடக்கம் வரையான பரந்த காலப்பகுதியைத் தொட்டும், அன்றைய மலையகத்து வாழ்வை நினைவுகூர்ந்தும், அனுபவத் தழும்புகளை வருடிப்பார்த்தும் நாவல் மெருகூட்டப்பட்டுள்ளது. எனவே, லயத்து மக்களின் சமூக - கலாசார - வாழ்க்கைப் போராட்டங்கள் குறித்த இன்னுமோர் ஆவணப் பதிவென இதைக் கொள்வதிலும் தவறில்லை. தாய்வீடு ஆசிரியர் கூறுவதுபோலவே, ‘ஒரு மானுடராக, தமிழராக, மலையகத்தவராக’ தெளிவத்தையின் பேனா எழுதிச்சென்றதே ‘மாறுதல்கள்’ நாவல்.

பழைய - புதிய தலைமுறைகளின் கூட்டாக, கதை மாந்தர்கள் நாவலில் உலா வருகிறார்கள். துரையின் கார் மட்டும் போய்வர அனுமதிக்கப்பட்ட தோட்டத்துக்குள் பஸ் ஓட ஆரம்பிக்கின்றது, என்ற செய்தி சுபசெய்தியொன்று போலவே முக்கியத்துவம் பெறுகிறது. அத்தனை நாளும் பதுளைக்குச் செல்வதற்கு தோட்டமக்கள் எதிர்கொண்ட துயரையும். ‘கட்டுச்சாதம் கட்டிக்கொண்டு பத்து மைலைக் கடந்து மெயின் ரோட்டுக்கு வந்து, அதன்பிறகு பஸ் பிடித்து டவுனை அடைய வேண்டும்’ என்ற வார்த்தைகள் எமக்குப் புரிய வைக்கின்றன. பஸ் ஓடுவதன் தொடர்ச்சியாகப் பிள்ளைகள் பதுளைப் பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கான வாசலும் திறந்து கொள்கிறது.

பெரிய கங்காணியும் தனது ஒரே மகள் சீதையை ‘பொட்டப் புள்ளயா இருந்தாலும் நாலெழுத்துப் படிக்கட்டும்’ என்று பதுளைக்கு அனுப்புகிறார். இராமர் என்ற நம்பிக்கையான பையனிடம் அவளைக் கவனமாகக் கூட்டிச்சென்று வரும் பொறுப்பை ஒப்படைக்கிறார். அவர்கள் இருவரையும் பற்றிய தோட்டத்துப் பெண்களின் வம்புப் பேச்சுகள், கங்காணியின் மனதைப் பதைக்க வைக்கின்றன. அவருடன் முரண்படும் வாலிபர்கள் கூட, ‘நானாயிருந்தா அந்தப் பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போவேன், ஆனால் திரும்பி வரமாட்டேன். அப்படியே போயிடுவேன்’ என்று அவரது மனக்குரங்கை ஆட்டுவிக்கிறார்கள். ஆயினும், சீதை நாட்டு நடப்பு அறிந்தவளாகவும், பஸ் கண்டக்டரின் மனிதத்தன்மையற்ற செயல்களைத் துணிவுடன் தட்டிக் கேட்பவளாகவும், கல்வி மிடுக்குடையவளாகவும் வளர்கிறாள். சமகால நடப்புகள் பற்றிய அறிவும், பொறுப்பும், ஒழுக்கமும், தன்னம்பிக்கையும் உடையவனாக இராமர் சித்திரிக்கப்படுகிறான். பிற்பாடு இராமர் பதுளை நகரில் கடையொன்றில் பணிபுரிபவனாக, தோட்டத்துக்கு வெளியேயான உலக அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறான். அவன், நாளடைவில் தனது மக்களின் வாழ்வை மீட்டெடுப்பது குறித்த பிரக்ஞையும் தூரநோக்கும் கொண்டவனாக மாறுகிறான்.

தங்கராசு என்கின்ற இன்னொரு வாலிபனும் தோட்டத்துக் குள்ளே நடக்கின்ற அராஜகம், பொலிஸ் அடக்குமுறை, அர சியல் தந்திரோபாயங்கள், தொழிற்சங்கங்களின் திருகுதா ளங்கள் முதலானவற்றைப் பொறுக்காதவனாகக் கொதிக்கி றான். தோட்டங்களை அரசுடைமையாக்குவதற்கான முன்னெ டுப்புகள் அவனைச் சிந்திக்க வைக்கின்றன. 'தமது லயத்துக்




காணிகளை அளக்க விடமாட்டோம்' என்று போராடுவதாலும், தனது காதலி மீனாட்சியுட்பட்ட தோட்டத்துப் பெண்கள்மீதான அத்துமீறல்களைத் தடுப்பதாலும், லயத்தை எரியூட்டுதல் முதலிய வன்முறைகளை அச்சமின்றித் தட்டிக் கேட்பதாலும், தனது சிலம்படித் திறமையால் காடையர்களை விரட்டுவதா லும் அவன் பொலிஸாரால் தேடப்படும் குற்றவாளியாகிறான். அநீதி கண்டு பொங்கும் அவனுடைய பண்புநலனை, கிரேக் கக் கடவுளான புரொமத்தியசுடன் ஒப்பிடுவதன் மூலம் மிக எளிதாகச் சொல்லிவிடுவது தெளிவத்தையின் பரந்த வாசிப் புக்கான சான்று!

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தோட்டத்து மக்களுடன் உள்ளன்புடன் நேயமாகப் பழகுகின்றன. சியாத்து என்பவரின் குடும்பம், தோட்டத்து மக்களுடன் அன்பாகப் பழ குகிறது. அவரது மகள் சுவர்ணாவுக்கும் இராமருக்குமிடையே காதல் அரும்புவதை மோப்பம் பிடித்துவிடும் ஹாமதுரு, இராமரை எச்சரிக்கிறார். சிங்களக் குடும்பத்துடன் அவன் நெருக்கமாகப் பழகுவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நட வடிக்கை அது! ஆதிக்க சக்திகள், பற்பல வழிமுறைகளைக் கையாண்டு, அத்தகைய நெருக்கங்களைத் தகர்த்து, இன முரண்பாட்டினை ஏற்படுத்தி, பகைமை நெருப்பினை மூட்டிய பல சம்பவங்களும், 'வந்து குடியேறியவர்கள் வசதிகள் பெற்று வாழ, இந்த மண்ணின் மக்களாகிய உங்களுக்கு என் னதான் கிடைக்கிறது?' என்று மேடைபோட்டுப் பேசுவதும், அதனால் விளையும் பெரும்பான்மை சமூகத்தின் மனத்திரி பும், விளைவாக அரங்கேறிய வன்செயல்களும் நாவலில் பதி வாகியுள்ளன. அத்தகைய நிலையை உருவாக்கிய மனிதர் கள், அமைப்புகள், கட்சிக் கூட்டங்கள், காவல்துறையின் சீண்டல்கள், பாரபட்சமான கெடுபிடிகள் என்பவற்றை இந்நா வல் நுணுக்கமாகப் பேசுகிறது. ஐந்தேக்கர் ஹாமதுரு, துஷாரா முதலிய கதாபாத்திரங்கள் ஊடாக இச்சம்பவங்கள் நகர்த் தப்படுகின்றன.

மீனாட்சி, தங்கராசு காதல், பலசரக்குக் கடைகள் 'பலநோக் குக் கூட்டுறவுச் சங்கங்களாக' மாற்றம் பெற்றமை, இயக்கங்க ளின் இரகசியமான கூட்டங்கள் நடைபெறுதல், வியாபாரம் செய்துகொண்டிருந்த வடக்கு முதலாளிகள், திடுதிப்பென்று கடைகளை மூடிவிட்டு யாழ்ப்பாணம் செல்ல நேர்ந்தமை முத லிய சமகாலச் சம்பவங்களும் கதையிலே பதிவாகியுள்ளன. தங்கராசுவின் சிலம்படி வித்தைத் திறமை, அஞ்சாமை, தோட்டத்து மக்களின் எதிர்காலம் குறித்த அக்கறை என்பன அவனை மாறுதலின் உந்துவிசையாகக் காட்டுகிறது. நண் பன் இராமரின் உதவியுடன் தங்கராசு வவுனியா நோக்கிச் செல்கிறான். தோட்டத்தில் வேலையில்லாமல், குடியிருக்க வீடும் இல்லாமல் நிர்க்கதியான நிலையை நோக்கி நகர வுள்ள தனது குடும்பத்தாரையும் நாளடைவில் அங்கு அழைத்துச் செல்கிறான். ஐம்பத்தெட்டுக் கலவரத்தைத் தொடர்ந்து அவனது முன்னோர்களும் வவுனியாவுக்கும் கிளி நொச்சிக்கும் புறப்பட்டுச் சென்ற வரலாறும் நாவலில் தொட் டுக் காட்டப்படுகிறது. அவனது காதலி மீனாட்சியும் அவளது குடும்பத்தாரும் இன்னும் பலரும் எனப் படிப்படியாக அந்தக் குடிபெயர்வுகள் தொடர இருப்பதாக நாவல் சொல்கிறது.

புனைவொன்றின் வெற்றிக்கு, பாத்திர வார்ப்பும் பெரும் பங்க ளிக்கிறது. தெளிவத்தை காட்டுகின்ற பெரிய கங்காணி, தனது பெருத்த தொந்தியுடன், கோட் பொக்கட்டுகளில் குலுங்குகின்ற செக்றோல்களுடனும், அதிகாரத் தோரணையு டனும் தோட்டத்து மலைகளில் உலவுகிறார். தோட்ட அலுவல கத்துள் எமது கையைப் பிடித்து அழைத்துச் செல்லும் தெளி வத்தை, 'லொக்புக்' மகாத்மியம், மத்தளம் போல இருபுறமும் அடிவாங்கும் ஊழியர்களின் உளப்பாங்கு, துரையின் கெடுபி டிகள், சிறுதோட்ட உரிமையாளர்களின் மிரட்டல்கள், தோட்ட மக்கள் மீதான அவர்களது காழ்ப்புணர்வு என உள்வீட்டுத் தகவல்களால் எம்மை வியப்படைய வைக்கிறார்.

தோட்டத்துரையை, 'மூக்கன்' என்று அங்குள்ளோர் செல்லப் பெயர் வைத்து அழைப்பதையும், அது வேறொன்றுமில்லை,

‘மூர்க்கன்’ என்பதன் திரிபு என்பதையும் அவர் சொல்லும் விதம் அலாதியானது. லண்டனிலிருந்து பாராட்டுக் கடிதம் வருகின்றபோது, துரையின் உல்லாச மனநிலையை, ‘காரேறப் போகும் தோட்டத்துச் சிறுமி போல துரை கனகுஷியாக இருக்கிறார்’ எனத் தெளிவத்தை பொருத்தமான உவமை கொண்டு தனக்கேயுரிய கிண்டலுடன் விபரிக்கின்றார்.

‘மாறுதல்கள்’ என்ற தலைப்பு ஒரு விரிந்த பொருட்பரப்பைச் சுட்டுகிறது. ஒரு சமூகத்தின் அசைவியக்கத்துக்கான கூட்டுக் காரணிகளைத் தொட்டுக்காட்டி நிற்கிறது. மலையக மக்கள் பற்றி, ஜவகர்லால் நேருவுக்கும் டி.எஸ். சேனநாயக்காவுக்கும் இடையிலான உரையாடல்கள், தொடர்ந்து தோட்டப்புற மக்கள் ‘நாடற்றவர்கள்’ என்ற புதிய அடையாளத்தைப் பெற்றமை, 58-ல் நடந்த கலவரங்கள், வடக்கு நோக்கி இடம்பெயர்வுகள் தொடங்கியமை, அரசியல் புறக்கணிப்புகளும் ஓரங்கட்டல்களும் என்ற விடயங்கள் உணர்வுபூர்வமானதாகப் பேசப்படுகின்றன.

பெண் - ஆண் பற்றிய, சமூகத்தின் இறுகிவிட்ட கற்பிதங்களை உடைத்துக் கொண்டு, பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய சிந்தனை முகிழ்ப்பது மாறுதலின் முதற் படியாக இந்நாவலில் காட்டப்படுகிறது. கல்வியறிவு வளர்ச்சியும் கால மாற்றத்துடனான அறிவுசார்ந்த வளர்ச்சியும் தோட்டவாழ் மக்களின் சிந்தனை விரிவுக்கு வழிகோலுவதாக அமைந்ததும், பின்னர் தமது சமூகத்தின் இருப்பு, அதன்மீதான பல்கோணங்களிலான ஒடுக்குமுறை என்பன பற்றிய புரிதலுக்கு அது இட்டுச் சென்றதும் வரலாறு.

இராமர் கடையில் வேலைக்குப் போவதால், அவன் பெயர் தோட்டத்து செக்றோலில் பதியப்படாமல் வேலையில்லாமல் போகலாம் என்றதும், ‘நாமதான் தேயிலை மலையே கெதின்னு கிடந்துட்டோம்! அதுகளாச்சும் வெளிய போகட்டுங்க...நாலு மனிசரோட பழகட்டுங்க... நல்லது கெட்டது தெரிஞ்சுக்கிடட்டுங்க...’ என்கின்ற பெண்குரல், அடக்குமுறையிலிருந்து வெளியேறத் துடிக்கின்ற குரலாக ஓங்கி ஒலிக்கிறது.

பெரிய கங்காணியின் வேலையும் பறிபோகும் நிலையில், அசைக்கமுடியாத அவரது இராச்சியமே ஆட்டங் கண்ட போது, அதனைச் சுலபமாகக் கடந்துபோகத் தலைப்படுகின்ற அவரது படிப்பறிவுள்ள மகள் சீதையின், ‘செக்றோலைத் தலயச் சுத்தித் தொரை மேசையில வீசிட்டு வந்திருங்கப்பா’ எனும் நம்பிக்கைக் குரல்கூட மாறுதலுக்கான விளைவேயன்றி வேறன்று.

தோட்டங்கள் அரசுடைமையானால், ‘வேலையின்றிப் பிச்சையெடுக்க விடமாட்டேன்’ என்று, புதிய இடத்தில் வாழ்தல் பற்றிய நம்பிக்கையுடன் குடும்பத்தாரை அழைத்துக்கொண்டு புறப்பட்டுச் செல்கின்ற தங்கராசுவின் உறுதியான கால்கள், மாறுதலுக்கான வழியில் நடை பயில்கின்றன. வேர்களிலிருந்து பிடுங்கப்பட்டு புதிய மண்ணில் நடப்படுவதும் அதற்கு இசைவாக்கமடைந்து வாழவும் வளரவும் முற்படுவதும் மக்கள் கூட்டங்களுக்குப் புதியதல்லவே! வன்னி மண்ணை நம்பிக்கையுடன் சென்றடையும் மக்களுக்கான வரவேற்பு எவ்வாறு அமைகிறது என்பதைக் காட்ட அங்கு அருகருகே வாழும் யாழ்ப்பாணத் தமிழ்க் குடும்பத்தையும் மலையகக் குடும்பத்தையும் நாவலில் கோர்த்துள்ளார் தெளிவத்தை. காணிகளில் வேலை, குடியேற்றத் திட்டங்கள், காணிப் பகிர்வு என்ற தொடர் செயற்பாடுகளின் வெற்றி எத்தகையது? குடிபெயர்வின் போக்கு எவ்வாறானதாக இருக்கும்? முதலிய தெளிவத்தையின் கேள்விகள் இன்னும் வினாக்களாகவே உள்ளன.

ஒரு வரலாற்றைக் கூறப்புகும் தெளிவத்தை, புனைவிலக்கிய வாதி என்பதையும் வாய்மொழி இலக்கியம் தெரிந்தவர் என்பதையும் நாம் நாவலில் ஆங்காங்கு காணலாம். இதுவரை, மலையகம் பற்றி வெளிவந்த நூல்களின் பெயர்களை ஒரு அத்தியாயத்தில் அவர் குறிப்பிடக் காணலாம். இந்நூலில் 290-ம் பக்கத்தில் அவற்றை நாம் காணலாம். தேயிலை தேசம், ஒப்பாரிக் கோச்சி, குருதி மலை, நாமிருக்கும் நாடே, காளிமுத்துவின் பிரஜாவுரிமை, தூரத்துப் பச்சை, காலங்கள் சாவதில்லை என அவை விரிகின்றன.

‘ஈயத்தைப் பார்த்து இளித்துக் கொள்கிறது பித்தளை’ என்றும், ‘கேப்பையில நெய் வடியுதுன்னா கேக்கிறவனுக்குப் புத்தியில்லையா’ என்றும் மண் மணக்கும் சொற்றொடர்கள் ஆங்காங்கே வந்து விழுகின்றன. நல்ல தமிழறிந்தவர் என்பதை ‘செந்தட்டிப் பட்ட தோலாய் நினைவு நமநமத்தது!’ முதலிய வரிகள் சுட்டி நிற்கின்றன.

தெளிவத்தை கூறுவதுபோல, இருநூறு வருடங்களுக்கு முன்னர் கண்டிச் சீமைக்கு வந்தவர்கள், பிற்பாடு அங்கிருந்து தமிழ்ச் சீமைக்குக் குடிபெயர்கிறார்கள். மனிதகுலத்தின் வரலாறு நெடுகிலும் மக்கள் பல தேவைகளை முன்னிட்டு அசைந்துகொண்டே இருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் மட்டுமே வேறுபடுகின்றன.

நாவலின் இறுதியில் தெளிவத்தை ‘தீர்மானங்களை நோக்கியும் முடிவுகளை நோக்கியும் நிகழ்வதில்லை, மாறுதல்கள்’ என்று அழுத்தமாகக் கூறுவது எம் கவனத்தை ஈர்க்கிறது. காலமே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் என்கிறார், தெளிவத்தை.


‘காலமே மதியினுக்கோர் கருவியாம்’.



vasanthy.t@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




# சமனற்ற நீதி: அமெரிக்க நீதித்துறை பற்றிய காட்டமான எதிர்ப்புக் குரல்!

– எஸ்.கே. விக்னேஸ்வரன்

இலங்கையின் 2009-ம் ஆண்டு இறுதி யுத்தம் நடந்து முடிந்த பின்னான அடுத்த ஆறு மாதங்களுக்கு மேலாக இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகைகளில் திரும்பத்திரும்ப அதோடு சம்பந்தப்பட்ட விடயங்களே பிரதான இடத்தைப் பெற்றிருந்தன. அந்தக் காலத்தில் வெளிவந்திருந்த Sunday Times பத்திரிகையில் ஒரு சிறிய செய்தியாக ராஜ் ராஜரட்-னம் அவர்களது கைது பற்றிய செய்தி ஒன்று வந்திருந்தது ஞாபகம். அப்போது அவர் பற்றி நான் அறிந்திருந்ததெல்லாம் அவர் ஒரு பெரிய பணக்காரர், சுனாமி அழிவுகள் தொடர்பான நிவாரண வேலைகளுக்கு நிதியுதவி செய்தவர் என்பவை மட்டுமே. அதனால் அந்தச் செய்தி என் கண்ணில் பட்டு வாசிக்குமளவுக்கு முக்கியமாக இருந்திருக்கக் கூடும். ஆயினும் அது எனக்கு அவ்வளவு அவ்வளவு முக்கியமான எந்தத் தகவலையும் தரவில்லை. பொதுவாகப் பெரும் பணக்காரராக வருபவர்களுக்கும், நியாயமற்ற முறையில் நடக்கும் வணிக நடைமுறைக்கும் எப்போதும் ஏதாவது சம்பந்தமிருக்கும் என்ற பொதுவான நம்பிக்கை என்னிடம் இருந்தது. அச்செய்தியை வாசித்த போதுதான், அமெரிக்காவின் முக்கியமான ஒரு பெருந்தொழிலதிபரான அவர் சட்டவிரோதமான வகையில் செயற்பட்டமை, குறிப்பாகப் பங்குச் சந்தையின் உள்ளகத் தகவல்களை இரகசியமாகப் பெற்று அதற்கேற்பப் பங்குகளை வாங்குவதன் மூலம் சந்தையில் பாரிய லாபங்களைப் பெற்றமை, அதன் காரணமாக அவர் கைதுசெய்யப்பட்டு நியூயோர்க் மாநில நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அந்தச் செய்தி தெரிவித்தது. அதற்கு மேலாக வேறு தகவல்கள் ஏதும் இருக்கவில்லை. அதன் பின் அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறியும் ஆவலும் எனக்கு இருக்கவில்லை. அவர் ஒரு சமூக சேவையாளர், இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனிநபராகப் பெரும் உதவி செய்தவர் என்று ஏற்கனவே அறிந்திருந்தேன். அதுசார்ந்த ஆர்வமே இந்தச் செய்தியைக்கூட நான் வாசித்துப் பார்க்கவும் காரணமாக இருந்தது. மற்றப்படி எனக்கு அதில் வேறெந்த ஆர்வமும் இருக்கவில்லை. அவரது வழக்குக்கு என்ன நடந்தது என்பதுவும் எனக்கு வெறும் தகவலாகவே தெரிந்திருந்தது. கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னும்கூட அந்த விடயம் பற்றி யாரிடமும் உரையாடவோ, வாசிக்கவோ எனக்கு எந்தச் சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை.

ஆனால், சில ஆண்டுகளுக்குமுன் அவர் எழுதிய ஆங்கில நூலான Uneven Justice: The Plot to Sink Galleon என்ற நூலை கவிஞர் சேரனது இல்லத்தில் தற்செயலாகக் கண்டு, அதன் முதற்சில அத்தியாயங்களை வாசித்திருந்தேன். ராஜ் ராஜரட்னம், சிறையிலிருந்து விடுதலையான பின்னர் தனக்கு நடந்த நீதியற்ற விசாரணை பற்றியும், தனக்கு வழங்கப்பட்ட தண்டனை பற்றியும் சிறையில் இருந்த காலத்திலேயே, ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கிய இந்த விரிவான தன்வரலாற்று நூலை, 2021 டிசம்பர் மாதம் வெளியிட்டு வைத்திருந்தார். அமெரிக்க நீதித்துறையிலும், நீதிமன்றத்தின் நடவடிக்கைகளிலும் நிலவும் அதிகாரத்துவம் நிறைந்த போக்கின் காரணமாகத் தனக்கு நடந்த அநியாயமான சிறைத் தண்டனை பற்றி அவரது இந்த நூல் விபரிக்கின்றது.

அமெரிக்க பங்குச் சந்தை பற்றியும், அதுதொடர்பாக அன்றைய அமெரிக்காவில் அமுலிலிருந்த சட்டங்கள், அவை இயங்கிவரும் முறைமை என்பவை பற்றிய நீதிமன்றங்களின் அன்றைய புரிதல்களின் போதாமை, நீதிமன்றங்களும் நீதித்துறையைச் சேர்ந்த அரசசார்பு வழக்கறிஞர்களும் இவ்விடயப்பரப்பைக் கையாள்வது தொடர்பாகக் கொண்டிருந்த மட்டுமீறிய அதிகாரங்கள், அன்றைய ஊடகங்கள் இந்த விடையத்தை பணமீட்டக்கூடிய ஒரு பரபரப்புச் செய்தியாகப் பார்த்தனவே அன்றி, உண்மையாக நடந்தது என்ன என்ற விடையத்தை கவனத்தில் எடுக்கவேண்டும் என்ற பொறுப்புணர்வு அற்றுச் செயற்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களின் பின்னணியில் தான் ஒரு குற்றவாளியாக பிரகடனப்படுத்தப்பட்டதாக அவர் அதில் எழுதியிருந்தார்.

தமது வழக்கில் நடந்த விடயங்கள் ஒவ்வொன்றையும் விலாவாரியாக விளக்கி, எப்படி தாம் ஒரு குற்றவாளியாக்கப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டேன் என்பதை விளக்கும் ஒரு விரிவான வரலாற்று ஆவணம் என்று சொல்லக்கூடிய முக்கியமான ஒரு நூலாக இது இருக்கும் என்று அதை நான் வாசித்த அளவில் நினைத்திருந்தேன். தற்செயலாக வாசிக்கக் கிடைத்த இந்த நூலின் ஆங்கிலப் பிரதியின் முன்னுரை மற்றும் சில அத்தியாயங்களை மட்டும் படித்திருந்த எனக்கு இந்த நூல் எழுநா மின்னிதழில் தொடராக வரத்தொடங்கிய போது, மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அதைக் கண்டதும் அது தொடர்பாக எனது முகநூலில் ஒரு குறிப்பை எழுதினேன்.

அக்குறிப்பில் அவர் தான் 'ஒரு குற்றவாளியே அல்லவென்றும், வழக்குத் தொடுநர்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்

காக, எல்லாவிதமான, வழமையான கைது நடவடிக்கைகளையும் மீறி தன்னை ஒரு கிரிமினல் போலக் கைது செய்தமை பற்றியும், உண்மையில் தனக்கு என்ன நடந்தது என்பதை விபரித்தும் எழுதப்பட்ட இச் சுய வரலாற்று நூல், உண்மையில் தமிழில் வரவேண்டும் என்று நான் விரும்பியிருந்தேன். அமெரிக்காவின் சட்டத்துறையில் இருக்கும் பலவீனமான பக்கங்களைச் சுட்டிக்காட்டும் அதே வேளை, ஒரு தனி மனிதனாக தனக்கேற்பட்ட நிலமையை அவர் முன்வைத்து, அதற்கு எதிரான குரலைத் தனிநபராக நின்று இந்த நூல் மூலம் எழுப்பியிருந்தார். நூல் வெளிவந்த பின்னான காலத்தில் அவர் தொடர்ச்சியாகப் பல ஊடகங்களில் தனக்கு நடந்த தவறான கைதும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு வழங்கப்பட்ட சிறைத்தண்டனை பற்றியும் விரிவாகப் பேசியுள்ளார்.

அந்த நூல் இப்போது மொழியாக்கம் செய்யப்பட்டு எழுநா இதழில் தொடர்ச்சியாக வெளிவரத் தொடங்கியுள்ளது. இந்த மொழிபெயர்ப்பை ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களும் கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான சோ.ப. அவர்களும் இணைந்து செய்துள்ளனர். இந்த நூல் தமிழில் அவசியம் வெளிவரவேண்டிய முக்கிய நூல்களில் ஒன்றாக நான் நினைத்திருந்தேன். அது இப்போது தமிழில் வந்திருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது' என்று எழுதியிருந்தேன்.

ராஜ் ராஜரட்னம் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட, அமெரிக்காவின் பிரபல தொழிலதிபர். அவரது நிறுவனமான கலியன் நிறுவனம் அமெரிக்காவின் மிகப் புகழ்பெற்றதும் வெற்றிகரமாக வளர்ந்து வந்ததுமான ஒரு பங்குச் சந்தை முதலீட்டு நிறுவனம். அவரது நிறுவனம் அமெரிக்க நீதிமன்றத்தால், அமெரிக்காவின் பங்குச் சந்தை வியாபாரம் தொடர்பாக அமுலில் இருந்த சட்டத்துக்கு முரணான வழியில் உள்ளகத் தகவல்மூலமான பங்குச்சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டின் பேரில் 2009-ம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக அவர்மீது தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, 11 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டபோதும், அது பின்னர் 7½ ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அன்றைய நாட்களில் அமெரிக்காவின் ஊடகங்களின் பிரதான கவனத்தைப் பெற்றிருந்த மிக முக்கியமான வழக்குகளில் ஒன்றாக அவர் மீது தொடுக்கப்பட்டிருந்த இந்த வழக்கைக் கூறலாம். இது, சாதாரண வழக்குகளைப் போலல்லாது அரச தரப்பினதும், அரச தரப்பு பிரதான வழக்கறிஞரதும் எதிர்கால நலனின் அடிப்படையில் கையாளப்பட்ட ஒரு வழக்கு. இந்த வழக்கு, உலகளாவிய ரீதியிலும் பலத்த கவனயீர்ப்பைக் பெற்றிருந்தது.

ஆனால், அந்த நூல் எழுநாவில் தொடராக வெளிவர முன்பாகவே, கடந்த ஜனவரி (2024) யாழ். நகரில் வெளியிடப்பட்டு விட்டது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. இலங்கையில் தமிழில் வெளிவரும் நூல்கள் பற்றிய தகவல்களை மிகவும் ஆர்வத்துடன் கவனித்து வருபவன் என்ற போதிலும் அது எனது கவனத்திலிருந்து எப்படியோ தப்பிவிட்டது. முகநூலில் நான் எழுதிய குறிப்பு அந்த நூலின் சில அத்தியாயங்களை மட்டும் வாசித்த அடிப்படையில் அமைந்தது மட்டுமன்றி, அது தொடர்பாக அப்போது வெளிவந்த ஆங்கிலக் கட்டுரைகள் (எனது கவனத்துக்குரிய சில விமர்சகர்கள் எழுதியவை) மூலமும் அறிந்திருந்த தகவல்களின் அடிப்படையில் செய்யப்பட்ட பதிவு. ஆயினும், எனது முகநூல் குறிப்பிற்கு வந்த சில எதிர்வினைகள் அவர் அப்போது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டிருந்த உள்ளகத்தகவல்களை அறியும் சட்டவிரோத நடவடிக்கையின் அடிப்படையில் தனது வியாபாரத்தைச் செய்துவந்தார் என்றும், குற்றச்சாட்டு உண்மையானதே என்றும் விவாதிப்பவையாக அமைந்திருந்தன.

இந்த விவாதத்தை ஆங்கிலத்தில் அந்நூலின் முதற்சில அத்தியாயங்களை வாசித்தவன் என்ற முறையில் என்னால் முழுமையாக ஒப்புக் கொள்ள முடியவில்லை என்பதாலும், இந் நூல் தமிழில் ஏற்கனவே வெளிவந்து விட்டது என்பதைப் பின்னர் அறிந்து கொண்டதாலும் உடனடியாக அந்த நூலை வாங்கிப் படித்தேன். அமெரிக்காவில் அவர் கைது செய்யப்பட்ட விதம், அவரைக் குற்றவாளியாக எப்பாடுபட்டாவது நிரூபிக்கும் நோக்குடன் வழக்கு நடத்தப்பட்ட விதம் என்பவை பற்றிய விரிவான தகவல்களை இந்த நூல் வெளிப்படுத்தியது. அதன் பின்னைய (நான் ஆங்கிலத்தில் வாசிக்காத) பக்கங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருந்ததை வாசித்தபோது, நான் முன்னரே குறிப்பிட்ட விடயங்கள் உண்மைதான் என்பதை அவை உறுதிப்படுத்தின.

ராஜ் ராஜரட்னம் கைது செய்யப்பட்ட காலத்தில் பங்குச் சந்தை தொடர்பாக அங்கு வழக்கிலிருந்த சட்டமானது, பங்குச் சந்தையிலிருந்து உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் தகவல்களை அடிப்படையாக வைத்தே பங்குகளை வாங்குதலும் விற்றலும் நடத்தப்பட வேண்டும் என்றும், அதற்கு முன்பாகக் கிடைக்கும் உள்ளகத் தகவல்களை இடைத்தரகர்களிடமிருந்து இரகசியமாகப் (பெரும்பாலும் விசேட கொமிசன் கொடுத்துப்) பெறுவதும், அவற்றின் அடிப்படையில் பங்குகளில் முதலீடு செய்வதும், தண்டனைக்குரிய குற்றம் என்றும் இருந்தது. ராஜ் ராஜரட்னம் இவ்வாறு உள்ளகத் தகவல்களைப் பெற்று தனது நிறுவனமான கலியன் நிறுவனத்தின் மூலமாகப் பங்குகளைக் கொள்வனவு செய்தார் என்பதே அவர்மீதான குற்றச் சாட்டாக முன்வைக்கப்பட்டது.

அதாவது அன்று அமுலிலிருந்த சட்டத்துக்கு (இப்போது அது நடைமுறையில் இல்லை) முரணான நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார் என்பதற்காக அவர் கைதுசெய்யப்பட்ட விதம், நடப்பிலிருக்கும் ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான மனோநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவென்றே திட்டமிட்டு, ஒரு பயங்கரக் கொள்ளைக் கோஷ்டியின் தலைவரைக் கைதுசெய்வதுபோல - தமிழ்ச் சினிமாப் பாணியில் அவரைக் கைதுசெய்தமை, ஊடகங்களுக்கு அவர் பற்றி - குறிப்பாக அவரது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களைக் கூடப் பார்வைக்குட்படுத்தவோ, அவரது ஊழியகர்களிடம் எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளவோ செய்யாமல் தனக்கு வசதியான வகையில் குற்றங்களைச் சோடித்து மோசமான ஒரு பிம்பத்தை ஏற்படுத்தும் வகையில் - ஒரு பெரும் மோசடிக்காரர் என்ற வகையிலான பேட்டிகளையும் ஊடகச்சந்திப்புக்களையும் வழக்குத்தொடுநர் செய்திருந்தமை என்று, எல்லாமே ஒரு திகில் திரைப்படக் காட்சிகள் போல விரிவாக இந்த நூலில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவர் மீது சுமத்தப்பட்ட பாரிய குற்றங்கள் எவையும் முழுமையான விசாரனைகளின் மூலம் பெற்ற தகவல்களின் அடிப்படையில் இல்லாமல், அவரைக் குற்றவாளியாக்கும் நோக்குடன் சோடிக்கப்பட்டவை என்பதை நூல் தெளிவாக முன்வைக்கிறது.


எனக்குத் தெரிந்தளவில் அமெரிக்கா தவிர்ந்த வேறெங்கும், இதுபோன்ற குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை, அவர் குற்றவாளி தான் என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை, அரசுதரப்பு வழக்குத்தொடுநர், 'அவர் ஒரு குற்றவாளிதான்' என்று பகிரங்கமாக அறிவிப்பதையோ, அவரைக் குற்றவாளிதான் என்று ஊடகங்களில் அறிவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதையோ செய்ய முடியாது. ஆனால், அன்றைய அமெரிக்க தென் மாவட்ட நீதிமன்ற பிரதான வழக்குத்தொடுநர் ப்ரீத் பராராவிடம் அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் நிரம்பியிருந்ததாகக் கூறும் ராஜ் ராஜரட்னம், அதற்கு உதாரணமாக, தான் கைது செய்யப்பட்ட பின்னான ஆரம்பகட்ட விசாரணைகளை 'பங்கு மற்றும் பரிவர்த்தனை ஆணைய' அதிகாரிகள் தன்னுடன் நடத்திக் கொண்டிருந்த வேளையில், ப்ரீத் பராரா தனது அலுவலகத்தில் இவ்வழக்குத் தொடர்பாக ஓர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திக் கொண்டிருந்தார் என்று பதிவு செய்கிறார். அந்த ஊடகச் சந்திப்புத் தொடர்பாக அவர் தனது நூலில் இவ்வாறு எழுதுகிறார்:

*'ஊடகச் சந்திப்பில் அரசுத் தலைமை வழக்குரைஞர் பராரா பல வரைபடங்களை வெளியிட்டார். பராராவின் கற்பனையால் வரையப்பட்ட 'உட்தகவல் வணிக வலையமைப்பு' வரைபடங்களில் இருக்கும் 'தலைமைச் சதிகாரன்' பாத்திரத்தை அவர் எனக்கு வழங்கியிருந்தார். அந்த வரைபடங்களில் என்னோடு கோர்த்துவிடப்பட்டவர்களில் ஒரு சிலரை மட்டுமே எனக்குத் தெரியும்'*

*'... இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் உட்தகவல் வணிகத்தின் மூலமாகப் பங்குச் சந்தையில் நான் நடத்தியிருப்பதாகச் சொல்லிக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த குறிப்பிட்ட வணிகங்களில், மொத்தமாக முப்பது மில்லியன் டொலர்கள் நட்டத்தை என்னுடைய கலியன் நிறுவனம் சந்தித்திருக்கிறது என்ற உண்மையை பராரா மிகவும் தந்திரமாக அந்த ஊடகச் சந்திப்பில் மறைத்துவிட்டார். அந்த உண்மையைச் சொல்லியிருந்தால் ஊடகவியலாளர்களிடம் அது சந்தேகங்களைக் கிளப்பிவிடும் என்பதால் பராராவும் அரசுத் தரப்பினரும் மிகவும் கவனமாகத் தங்களது புனைகதையை எழுதினார்கள்.'*

இதுமட்டுமல்லாமல், வழக்கு விசாரணைகள் நடந்தபோது பல பொய்யான இட்டுக்கட்டுக்களையும் சேர்த்து தம்மை எப்படியாவது இந்த வழக்கில் குற்றவாளியாகக் காட்டிவிடும் முனைப்புடன் அரசதரப்பு வழக்கறிஞர் தொடர்ந்து செயற்பட்டு வந்தமைபற்றி பல முக்கிய தகவல்களை இந்நூல் வெளியிடுகிறது. அவற்றில் சுவாரசியமான ஒன்றுதான், தனது பிணைக் கோரிக்கைக்காக அரசு தரப்பு வழக்கறிஞரால் முன்வைக்கப்பட்ட வாதம். அதாவது அவரது சகோதரிகளில் ஒருவர் தென்னாபிரிக்காவில் வசிக்கிறார் என்றும், அவரைப் பிணையில் விடுவித்தால் அவர் தென்னாபிரிக்காவுக்குச் சென்று தலைமறைவாகி விடுவார் என்ற காரணத்தால், வழக்கு முடியும்வரை தடுப்புக் காவலில் அவரை வைத்திருக்க வேண்டும் என்று அரசு தரப்பு கோரிய விடயம் ஆகும். தென்னாபிரிக்காவில் வசிக்கும் ஒருவரை அமெரிக்க நீதிமன்றம் ஒன்றின் கோரிக்கைக்காக அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பும் எத்தகைய ஒரு கடப்பாட்டு ஒப்பந்தத்தையும் தென்னாபிரிக்க அரசு கொண்டிருக்காத காரணத்தினால், அவரது சகோதரிகள் இருவரில் ஒருவர் தென்னாபிரிக்காவில் வசிப்பதான கதையை அரசதரப்பு வழக்கறிஞர் புனைந்து குறிப்பிட்டிருந்தார். ஆனால் உண்மையில் அவரது சகோதரிகள் யாருமே தென்னாபிரிக்காவில் வசிக்கவில்லை என்பதால், நீதிமன்றம் வழமைக்கு மாறான அதிக பிணைத்தொகையுடனான தனிநபர் பிணையை விதித்து அவரை விடுவிக்க ஒப்புக் கொண்டது.

இப்படியான வழக்கில் தன்னை குறிவைத்து அரச தரப்பு நடந்துகொண்டமைக்கான வலுவான காரணமாக இருந்திருக்கக்




கூடிய இன்னொரு விடயத்தை ராஜ் ராஜரட்னம் தனது நூலில் குறிப்பிடுகிறார்:

*'அரசுத் தரப்பு என்னைக் குறிவைத்ததற்கு வேறொரு வலுவான காரணமுள்ளது. ஒக்ரோபர் 2009-இல் அமெரிக்காவில் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் பொருளாதாரக் கட்டமைப்பு அதலபாதாளத்தில் சரிந்துகிடந்தது. அமெரிக்காவின் வங்கிகளும் பெரும் நிதிநிறுவனங்களும் திவாலாகின. இதனால் அமெரிக்காவில் பல இலட்சம் மக்கள் தங்களது வாழ்நாள் சேமிப்புகளை இழந்து நடுத்தெருவுக்கு வந்தார்கள். நாடு முழுவதும் கொந்தளிப்பும் கொதிப்பும் பரவியிருந்தன.'*

*'முழு அமெரிக்காவுமே வால் ஸ்றீட்டுக்கு எதிராகவிருந்தது, ஆனால் பெரு வங்கிகள் மீது அரசாங்கத்தால் குற்றம் சுமத்த முடியவில்லை. பெரும் வங்கிகளில் கைவைத்தால் நாட்டின்*

*பொருளாதாரக் கட்டமைப்பு முற்று முழுதாக நொருங்கி விடும். பெரும் வங்கிகளின் இயக்குனர்கள் தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றெல்லாம் அரசாங்கம் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால், பொதுமக்களும் ஊடகவியலா ளர்களும் உணர்ச்சிகரமான எதிர் வினைகளில் இறங்கி னார்கள்'.*

*'மக்களையும் ஊடகங்களையும் திருப்தி செய்வதற்காக யாராவது ஒருவரைப் பிடித்துக் குற்றம் சுமத்தி அரங்கில் நிறுத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. இந்த ஊழல்வாதியே அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமென்று கூறி, அகப்பட்டவர் மீது பழியைப் போட்டு விட்டு, அரசு தனது பொறுப்பிலிருந்து நழுவ நினைத்தது. இவ்வாறு அகப்பட்டவன் நானாக இருந்தேன்.'*

இவர் மீதான குற்றம், பங்குச் சந்தையில் எட்டு நிறுவனங்க ளின் பங்குகளை அவர் உட்தகவல் வணிக மூலம் கைத யாண்டார் என்று ஆரம்பத்தில் இருந்தபோதும், பின்னர் அதுவே 34 நிறுவனங்களின் பங்குகள் சார்ந்த குற்றமாகப் பெருப்பிக்கப்பட்டது. ஆயினும் வழக்கு விசாரணையின் போது அது மீண்டும் எட்டு நிறுவனக்கள் சார்ந்ததாகக் குறைக்கப்பட்டதுடன் 'கோல்ட்மன் சாக்ஸ்' பங்குகளிலும் உட் தகவல் வணிகம் மேற்கொண்டதாகப் புதிய ஒரு குற்றச்சாட் டும் சேர்க்கப்பட்டிருந்தது.

இவரது வழக்கிற்கான முக்கிய காரணமாக இருந்தவரான அர சுத் தலைமை வழக்கறிஞர் இந்தியப் பின்னணியைக் கொண் டவரான ப்ரீத் பராரா, நிலவும் சட்டத்தைச் சற்றும் மதிக்காதவ ராகவும், குற்றம் சாட்டப்பட்டவர்களை கடுமையாக மிரட்டுபவ ராகவும், அவமான நடை செய்யப்படும் என்றும் (குற்றம் சுமத் தப்பட்டவர்களை - அவர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றில் - நிரூபிக்கப்படும் முன்னரே கைதிகளாக்கி பொதுமக்கள் பார்க்கும் வகையில், அவர்களது கேலிக்கு உள்ளாகும் விதத்தில பகிரங்கமாக மக்கள் முன் நடத்திச் செல்லும் செயலை அவமான நடை என்பர். இது குற்றம் சாட்டப்பட்டவர் மனோரீதியாக உடைந்து போகச் செய்வதற்கு அரசுதரப்பால் செய்யப்படும் ஒருவகை நடைமுறையாக அப்போது அமெரிக் காவில் இருந்தது. ராஜ் ராஜரத்தினமும் இத்தகைய அவமான நடைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.) தான் சுமத்துகின்ற குற் றங்களை ஒப்புக் கொள்ளும்படி மிரட்டும் ஒருவர் என்றும், குற் றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சாட்சியம் கூறுமாறு அவரது குடும்ப உறுப்பினர்களையும் தொழிற் பங்காளிக ளையும் மிரட்டி அழுத்தம் கொடுத்து வாக்குமூலம் பெறுவார் என்றும், அவற்றை செய்ய ஒப்புக்கொள்பவர்கள் குறைந்த தண்டனையுடன் தப்பிக்கலாம் என்று பேரம் பேசுவார் என் றும், அவர்பற்றி விரிவாக நூலில் விளக்கிக் கூறுகிறார் ராஜ்-ராஜரட்னம்.

இத்தகைய நிலமைகளில் அமெரிக்க ஊடகங்கள் எப்படி நடந்துகொள்பவை, நடந்துகொண்டன என்பதைப் பற்றி அவர் விபரிப்பதை, இன்றைய அமெரிக்க ஊடகங்களின் உலகச் செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தெளிவா கப் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் எழுதுகிறார்:

*'பராராவின் பொய்யுரைகளை 'நம்பத்தகுந்த அரசிய வட்டா ரங்களிலிருந்தும் விசாரணைக் குழுவினரோடு நெருக்கமான வர்களிடமிருந்தும் கிடைத்த செய்திக் கசிவுகள்' என்று குறிப் பிட்டு ஊடகங்கள் உலகம் முழுவதும் பரப்பிக் கொண்டி ருந்தன. நிலமைகளைக் கவனத்துடன் ஆராய்ந்து உண்மை களைக் கவனத்துடன் வெளியிடாமல், பரபரப்பை மட்டுமே செய்தியாக்கும் ஊடக அசிங்கம் அங்கே நிகழ்ந்து கொண்டி ருந்தது. 'மிகப்பெரிய உட்தகவல் வணிகக் கும்பலை அர சாங்கம் கண்டுபிடித்தது' என ஊடகங்களில் நாள் தவறாமல் செய்திகள் வெளியாகின. ராஜ் ராஜரட்னம் ஏன் குற்றவாளி என விளக்கும் அரச தரப்பு வழக்குரைஞர்களின் உரைகளோடு தலைப்புச் செய்திகள் வெளியிடப்பட்டன. நான் சிறைக்கு அனுப்பப்பட்ட பின்னும் இந்த ஊடகப் பேரலை ஓயவில்லை. பின்னும் பல வருடங்களுக்கு நானே தலைப்புச் செய்தியாக இருந்தேன்.'*

*'ஊடகங்களின் பொறுப்பற்ற தன்மையும், பொய்களைப் பணமாக்கும் அவசரமும் அரசுத் தரப்பு வழக்குரைஞர்களின் சூழ்ச்சிகளுக்கு மூடுதிரையாகின. அவர்களைக் கேள்வி கேட்க ஆட்களற்றுக் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தார்கள். தாங்கள் எண்ணியவற்றைச் செய்துகொண்டே போனார்கள். இவர்களது இந்த அராஜகப் போக்கு பலரது வாழ்க்கையை நாசமாக்கத் தொடங்கியது. கையில் கிடைத்தவர்களின் தலையிலெல்லாம் ஆதாரமற்ற வழக்குகள் சுமத்தப்பட்டன. பராரா தன்னுடைய விருப்பத்திறகு ஏற்றவாறு சட்டத்தின் விதிகளை நளினமாக உடைத்தார். குற்றவியல் வரையறைக ளுக்குள் பொருந்திவராத வணிகத்துடன் தொடர்புடைய வழக்குகளையும் வலிந்து குற்றவியல் வழக்குகளாக்கினார்.'*

ராஜ் ராஜரட்னம் அவர்கள் தனது நூல் முழுவதிலும் தெளி வாக தனது பக்கத்து நியாயங்களைக் கேட்பதைவிட, தனக்கு எதிராகக் கோர்த்து விடப்பட்ட விடயங்களைப் பற்றி நீதிமன் றத்தின் கவனத்தை குவிக்கும் முயற்சியில் அரசுதரப்பு வழக் கறிஞர் தீவிரமாக இருந்தார் என்று விரிவாக விளக்குகிறார். பொய்யான சாட்சியங்களைச் சொல்வதற்காக அவர் பல பங் குச் சந்தை வர்த்தகர்களை மிரட்டிப் பணியவைத்து தயார்ப டுத்தியிருந்தார். பத்திரிகை நிருபர்களுக்கும் உண்மை என்ன என்பதை விட, அரசுதரப்பின் கருத்துக்களை அப்படியே பிர சுரிப்பதில் தான் அதிகமான அக்கறை இருந்தது. உதாரண மாக, 'கலியன் தொழில்நுட்பத்துறை முதலீட்டு நிதியத்துக்கு வழங்கப்பட்டிருந்த உரிமம், தொழில்நுட்பத்துறையில் முத லீடு செய்வதாகும். எனவே, ஹில்டன் பங்குகளை வாங்கியது சட்டவிரோதமானது' என்று, ஊடகங்கள் எழுதித் தள்ளின. அவை உண்மையில் என்ன நடந்தது என்பது பற்றிச் சிறிதும் கவலைப்படாமலே அரசதரப்பு முன்வைத்த குற்றச்சாட்டை அப்படியே எழுதித் தள்ளின. ஆனால் உண்மையில் கலியன் தொழில்நுட்பத்துறை முதலீட்டில், 25% நிதியைத் தொழில் நுட்பத் துறை சாராத துறைகளிலும் முதலீடு செய்யலாம் என்ற விதி இருப்பதை வசதியாக மறைத்துவிட்டு, 2009 வரை யான காலப்பகுதிவரை கலியனால் அதில் முதலிடப்பட்ட 20% முதலீட்டை மட்டுமே எடுத்துக்கொண்டு, எந்தவித ஆய்வுக ளுமின்றி சட்டவிரோத முதலீட்டில் ஈடுபட்டதாக அரசு தரப்பு வழக்கறிஞர் சொன்னதை ஊடகங்களும் அப்படியே எந்த ஆய்வுமின்றி வாந்தி எடுத்தன.

எப்பாடுபட்டாவது அவரைக் குற்றவாளி ஆக்கி விடுவதன் மூலம் புகழ் பெற்றுவிட முடியும் என்ற ஆர்வமும் அதன் மூல மாக இதைவிடப் பெரிய பதவிகளை தான் அடைந்துவிட முடி யும் என்ற வெறியும் அரசு தரப்பு வழக்கறிஞரிடம் இருந்தது என்பதை மிகத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது இந்த நூல்.

அது மட்டுமல்ல, இதே உட்தகவல் வணிகத்தில் உண்மையாகவே ஈடுபட்ட சிலரையும் அரசு தரப்பு வழக்கறிஞர் மிரட்டியும் குறைந்த பட்ச தண்டனை தரமுடியும் என்று பேரம் பேசி மருட்டியதையும், வழக்கில் ராஜ் ராஜரத்தினத்துக்கு எதிரான பொய்ச் சாட்சியங்கள் சொல்வதற்குத் தயார் செய்ததையும், பற்றி விரிவான தகவல்களையும் இந்த நூல் தெளிவாக முன்வைக்கிறது. அதைவிடவும் மிகவும் தந்திரமான விதத்தில், தொலைபேசி ஒட்டுக்கேட்டல் மூலமாக நடந்த உரையாடல் பதிவுகளிலிருந்து வெட்டப்பட்ட சிறு துண்டங்களை மட்டும் ஒலிக்க வைத்து அவர் குற்றம் செய்தார் என்று நிரூபிக்கும் கீழ்த்தரமான நிலைக்குத் தாழ்ந்தும் அரசதரப்பு நடந்து கொண்டதை விரிவாக அம்பலப்படுத்துகிறார்.

ராஜ் அவர்களின் வழக்கறிஞர் மிகவும் கடின உழைப்புடன் நியாயத்தை நிலைநாட்ட வாதாடியபோதும் அவரது வழக்குத் தோல்வியில் முடிந்தது பற்றி இப்படி எழுதுகிறார்:

*'ஜோன் டௌட் அவர்கள் (ராஜ்-இன் வழக்கறிஞர்) தன்னுடைய கடின உழைப்பாலும், சாதுரியமான உத்திகளாலும் என்னைக் காப்பாற்ற முனைந்தார் என்பதில் சந்தேகமில்லை. எனினும், அரச தரப்பு வழக்குரைஞர்கள் பொய்ச் சாட்சியங்களையும், முறைகேடாக, ஒட்டுக் கேட்கப்பட்ட தொலைபேசிப் பதிவுகளையும் சகுனியின் பகடைக் காய்களைப் போன்று தந்திரமாகக் கையாண்டபோது, வழக்கு அரசுக்குச் சாதகமாக முழுமையாகத் திரும்பிவிட்டது. நாங்கள் பொய்களாலும் சதிகளாலும் தோற்கடிக்கப் பட்டோம்.'*

அமெரிக்காவில் அன்று நிலவிய நிலை பற்றி அவரது நூல் இவ்வாறு பதிவு செய்கிறது:

*'2009-2013 காலகட்டத்தில் 'உட்தகவல் வணிக வேட்டை' என்ற பேரலை வீசியபோது, அரசுத்தரப்பால் எண்பத்தைந்து நபர்கள் மீது உட்தகவல் வணிகக் குற்றம் சுமத்தப்பட்டது. தாங்கள் நிரபராதிகளே எனச் சொல்லி என்னைப்போல உறுதியாக நின்று சட்டப் போராட்டம் நடத்திய அனைவருமே வழக்கில் தோல்வியைத் தழுவினார்கள். இவ்வாறு உறுதியாக நின்றவர்கள் போக எஞ்சியவர்கள் மன்றாட்டுப் பேரத்தை நடத்தி அரசு தரப்பிடம் பணிந்து போனார்கள்.'*

வால்ட்டர் பவ்லோ என்பவர் வைற்கொலர் எனப்படும் உயர் அலுவலர்களுடைய குற்றச் செயற்பாடுகளை ஆய்வு செய்து எழுதுவதில் நிபுணர். தன்னுடைய எழுத்துகளுக்காக தேசிய அளவில் புகழ் பெற்றவர். அவர், 19.12.2012 தேதியிட்ட 'ஃபோர்ப்ஸ்' பத்திரிகையில் 'வைற்கொலர் பிரதிவாதிகளுக்கு நீதியான விசாரணை கிட்டுமா?' என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். உயர் குழாத்தைச் சேர்ந்த பிரதிவாதிகளுக்காக ஆஜராகும் புகழ்பெற்ற வழக்கரிஞரான பரிலோட்னிக் என்பவருடைய வார்த்தைகளை அந்தக் கட்டுரையில் மேற்கோள் காட்டியிருந்தார். அது பின்வருமாறு:

*'ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால் பொதுமக்களுடைய வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே நிதிச்சந்தை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்க அரசு தயங்குகிறது. குற்றம் சுமத்தப்பட்டவர் நிரபராதி எனத் தெரிந்தாலும் அவர் தண்டனையைப் பெற்றுக் கொள்கிறார். நாங்கள் கறை படிந்த ஜூரி முறைமையைக் கொண்டிருக்கிறோம். முழுச் சமுதாயமுமே ஒருபக்கச் சார்பாக வெளிப்படும் பொய்களுக்குள் மூழ்கிக் கிடக்கிறது. நிதிச்சந்தை சார்ந்த வழக்குகளில் எதிர்வழக்காடச் செல்லும் ஒவ்வொருவருமே தண்டனையைப் பெற்றுக் கொள்வது இதனாலேயே நடக்கிறது.'*

இந்த நூல் வெளியான பின்னர் அது பற்றிய குறிப்பொன்றை Real Clear Markets என்ற இதழின் ஆசிரியரும் பத்தியாளருமான Tamny அவர்கள் ஃபோப்ஸ் என்ற என்ற இதழில் எழுதியிருந்தார். இந்த நூல் பற்றிய ஒரு விரிவான பதிவாக அமைந்த அக்கட்டுரையில், இந்த வழக்கை விசாரித்த நீதிபதியான Holwell பின்னாளில் சொன்ன ஒரு குறிப்பை அவர் சுட்டிக் காட்டுகிறார்:

*'ராஜரட்னத்தை, அவர்களின் நம்பகத்தன்மை குறைந்த சாட்சிகளுடன் எப்படியாவது வலுவிழக்கச் செய்வதற்கு வசதியாக, அவர்கள் கலியன் நிறுவனத்தின் தொலைபேசிகளை - குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஓர் அமைப்புக்குச் செய்வது போல - ஒட்டுக்கேட்டனர். வழக்கைத் தலைமை தாங்கிய நீதிபதி (ஹோல்வெல்) பின்னர் ஒருபோது ஒப்புக் கொண்டது போல், 'ஒரு நடுவர் மன்றத்திற்கு வயர்டேப் சான்றுகள் எவ்வளவு தீங்கு விளைவிக்கும் என்பதை மிகைப்படுத்திக் கூறுவது கடினம். ஞாயிற்றுக்கிழமை இரவு உணவிற்கு நீங்கள் என்ன சாப்பிடப் போகிறீர்கள் என்று கேட்க உங்கள் அம்மாவை அழைக்கும் ஒரு பதிவை யூரிகள் முன் இயக்குவதன் மூலமாகவே ஒருவரை குற்றவாளியாக்கிவிட முடிகிறது'.*

உண்மையில் ராஜ் ராஜரட்னம் அவர்களது வழக்கில் அது தான் நடந்தது. ஒட்டுக்கேட்ட தகவல்களாலும், குழப்பகரமான விவாதங்களாலும், பங்குச்சந்தையின் இயங்கு விதிகள் பற்றிய விளக்கமின்மை காரணமாகவும் குழம்பிப் போயிருந்த யூரிகளால் அதன் நுணுக்கமான சட்ட விபரங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தலைமை நீதிபதியும், யூரிகளும் கூட ஊடகங்களின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். அதற்கேற்ற வகையில், ஊடகங்கள் மத்தியில் பராராவினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கள் தாக்கம் செலுத்தின.

ஆனால் பராராவுக்கு, ராஜின் சகோதரரான ரங்கனுக்கு எதிராகவும் இதே பாணியில் நடத்திய பங்குச்சந்தை தொடர்பாக திட்டமிட்டு புனையப்பட்ட வழக்கில் படுதோல்வியே கிடைத்தது. ராஜ் அவர்களின் வழக்கறிஞர்கள் தமது முன்னைய பராராவின் வழக்காடும் முறையைப் புரிந்துகொண்டு நடந்து கொண்டதின் பயனாக, அனைத்து யூரிகளும் ஒரு மனதாக அவரை விடுதலை செய்யும் நிலை ஏற்பட்டது. இது பராராவுக்கு கிடைத்த பெரும் அதிர்ச்சியான முடிவாக இருந்தது.

நூலில் முக்கியமான கவனத்துக்குரிய ஒருவிடயத்தை இங்கு குறிப்பிடுகிறார்:

'ப்ரீத் பராராவால் இலக்கு வைத்து வீழ்த்தப்பட்டவர்களில் அதிகமானோர் தென்னாசியர்களே. பராரா வேண்டுமென்றே தென்னாசியர்களை இலக்கு வைத்தாரா? ஏன்?' என்று கேள்வி எழுப்பி அவரது நடவடிக்கைகளை நூலின் இறுதிப்பகுதியில் ஆராய்கிறார் ராஜ். ஆரம்பத்தில் இப்படியான கருத்துகள் வந்தபோது தான் நம்ப மறுத்ததாகவும், அதன் பின்னான நடவடிக்கைகளை, குறிப்பாக அவரது சகோதரரான

ரங்கனின் கைதின்போது அப்படி இருக்கலாமோ என்ற சந்தேகம் அவருக்கு எழுகிறது. இதையடுத்து தொடர்ச்சியாக நடந்த சில வழக்குகளைப் பார்க்கையில் அதில் ஒருவகையான உண்மை இருப்பதை அவரால் ஒப்புக் கொள்ளவேண்டி இருக்கிறது. அவர் சொல்கிறார்:

'ஃபெர்ஸ்ட் போஸ்ட்' இணையத்தளத்தின் ஆசிரியர் ச. ஜெகநாதன், அமெரிக்காவின் வெள்ளை இனவாத அதிகாரிகள் இந்தியர்கள் மீது தாக்குதலை நிகழ்த்துவதற்கு ப்ரீத் ப்ராராவைப் பயன்படுத்துகிரார்கள் என்று எழுதினார். அவர் சொல்வதில் முழு உண்மையுண்டு. தேவ்யானியையோ, ராஜத் குப்தாவையோ, ராஜ் ராஜரட்னத்தையோ ஒரு இந்திய வம்சாவழி அதிகாரி கைது செய்யும்போது அதில் வெள்ளை இனவாதம் இல்லை என்ற ஒரு தோற்றம் ஏற்பட்டுவிடும்.'

'நியூயோர்க்கில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரியின் மகளான கிருத்திகா பிஸ்வாஸுக்கு நடந்தது பலருக்கு நினவிருக்கும். கிருத்திகா தனது ஆசிரியர்களுக்கு 'இணைய வழி அச்சுறுத்தல் கொடுத்ததாக கைதுசெய்யப்பட்டார். கைவிலங்கிடப்பட்ட நிலையில் கல்லூரியிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட கிருத்திகா, இரண்டு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் குற்றமற்றவர் என்று பின்னர் தெரிய வந்தது.'

இவ்வாறு உட்தகவல் வணிகத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக பராராவால் வேட்டையாடப்பட்டவர்களில் இன்னொருவர் சஞ்சய் வல்வானி. தென்னாசியக் குடியேறி. தனது சொந்த முயற்சியால் அடிநிலையிலிருந்து முன்னேறி தனது 44-வது வயதில் விஷியம் என்ற நிதியத்தில் மேலாளராகப் பதவி வகித்தவர். 2016 யூன் 15 அன்று பராராவால் அவர் மீது உட்தகவல் வணிகக் குற்றம் சுமத்தப்பட்டது. அவருக்கு 85 வருடங்கள் சிறைத் தண்டனை கிடைக்கும் என்று பராராவின் அலுவலகம் மிரட்டியது. ஆனால், அவர் தாம் குற்றமற்றவர் என்று நீதிமன்றில் தெரிவித்தார். அவர் நீதிமன்றத்திலிருந்து வெளியேறும் படங்களைப் பிரசுரித்தும், அவர் மனோரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் பத்திரிகைகள் எழுதின. 'வால் ஸ்றீற்'றைப் பொறுத்தவரை அவர் வழக்கிலிருந்து மீண்டாலும் புறக்கணிக்கப்படுவார் என்று அவரது சகா ஒருவரும் கருத்துத் தெரிவித்திருந்தார், 2016 ஜூன் 17-ம் திகதி அவரது விஷியம் நிறுவனம் மூடப்பட்டது. அதன் பின் மூன்றாவது நாள் அவர் தற்கொலை செய்துகொண்டார். இவர் தாம் குற்றமற்றவர் என்று கடைசிவரை சொல்லிக் கொண்டிருந்தார் என்று முடிக்கிறார் ராஜ்.

இறுதியாக நூலில் அவர் குறிப்பிடும் விடையங்கள் முக்கிய கவனத்துக்குரியவை. அவை அமெரிக்க நீதித்துறை அன்று நடந்துகொண்ட விதம் பற்றிய மிக முக்கியமான விமர்சனம் என்று குறிப்பிடலாம். அவர் எழுதுகிறார்:

*'என்னுடைய வழக்குப் பற்றிய செய்திகளை மைய நீரோட்ட ஊடகவியலாளர்கள் கையாணட விதம் எனக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. பொதுமக்களின் நன்மைக்காக எப்போதும் காவல் நாய்களைப் போன்று விழிப்புடன் இருக்க வேண்டியவர்கள், நன்றாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். இந்த ஊடகவியலாளர்கள் அரசுதரப்பு வழக்குரைஞர்களின் குமாஸ்தாக்கள் போன்று செயலாற்றினார்கள். அரசு தரப்பு வழக்குரைஞர்கள் பொது மக்களிடையே எனக்கு எதிரான அபிப்பிராய அலையை உருவாக்குவதற்காக ஊடகவியலாளர்களைப் பயன்படுத்தினார்கள். அரச விளம்பரங்களைத் தமது ஊடகங்களுக்குப் பெற்றுக்கொள்ளும் பணத்தாசையாலும், தங்களது பத்திரிகைகள் பரபரப்பாக விற்பனையாக வேண்டும் என்பதற்காகவும் ஊடகவியலாளர்கள் உண்மைகளைத் திரிவுபடுத்தி, மக்களை எளிதில் கவரும் திகிலான கட்டுக் கதைகளை உருவாக்கி வெளியிட்டார்கள்*

*எனது மேன் முறையீட்டு நடவடிக்கைகளின் போது ஓய்வு நிலை நீதிபதிகள் எண்மர் எனக்குச் சாதகமாக ஒரு சட்ட ஆய்வறிக்கையை நீதிமன்றத்துக்குக் கூட்டாக வழங்கியிருந்தார்கள். பேராசிரியர் றொபேர்ட் ப்ளேக்லி அவர்கள் 1968-இல் இயற்றப்பட்ட 'டைட்டில்-3' வடிவமைப்பதின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர். அவர் எனக்குச் சாதகமாக ஒரு சட்ட ஆய்வறிக்கையை நீதி மன்றத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்த அறிக்கையில் 'ராஜ் ராஜரட்னத்தின் கைபேசியை முறைகேடாக ஒட்டுக்கேட்கப்பட்ட ஒலிப்பதிவுகள் சட்டப்படி செல்லுபடியற்றவை' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டிருந்தார். பொருளாதாரத்துறை நோபல் பரிசு பெற்றவரான மில்டன் ஃபிரீட்மன் 'உட்தகவல் வணிகம் ஒரு குற்றச் செயலல்ல' என்ற கருத்தை முன்வைத்திருந்தார். இந்த அறிஞர்கள் அமெரிக்க நீதிமுறையின் அவலங்களைக் கண்டு கொதிப்படைந்திருந்தனர். அரசு தரப்பு 'நீதி' என்ற வெற்றியை அடைவதற்கு வஞ்சகமான பொய்களையே ஆயுதங்களாக உபயோகிப்பதைக் கண்டு கவலையடைந்திருந்தனர்.*

*குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்றாடவேண்டும் என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர்கள் பிரதிவாதிகளுக்கு எப்போதுமே அழுத்தத்தைக் கொடுத்தார்கள். அவ்வாறு மன்றாட மறுத்தவர்களுக்கு நீண்டகாலச் சிறைத்தண்டனையை நீதிபதியிடம் கோரினார்கள். நீதி மன்றமோ அரசுதரப்பு வழக்குரைஞர்களின் இந்தப் போக்கைக் கண்டும் காணாமலிருக்கிறது. இது அமெரிக்க நீதி முறைமையின் நேர்மையையும் நம்பகத்தன்மையையும் நிச்சயமாகவே நாசமாக்குகிறது.'*

நூல் முழுக்க இவ்வாறான பல முக்கிய தகவல்கள் எவ்வளவோ நிரம்பிக் கிடக்கின்றன. அவசியம் வாசிக்கப்பட வேண்டிய முக்கியமான ஒரு நூல் இது என்று துணிந்து கூறலாம். சரியாகச் சொல்வதானால் இந்த நூல் வெறுமனே ஒரு தொழில் முனைவரின் ஒரு காலகட்ட வாழ்க்கை பற்றிய சுய சரிதையாக மட்டுமன்றி, ஒரு சிறப்பான இலக்கியத்தரம் மிக்க அபுனைவு நூல் என்ற தகுதியையும், அமெரிக்க நீதித்துறையில் இருக்கும் மிகப் பலவீனமான பக்கத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்தும் ஒரு சமூகப் பொறுப்புள்ள, அமெரிக்க அரசியல் சாசனம் பற்றிய விமர்சன நூலாகவும் அமைகிறது.

ஆம். அனைவரும் வாசிக்கவேண்டிய ஒரு அருமையான, அமெரிக்க நீதித்துறை பற்றிய ஒரு காட்டமான எதிர்ப்புக் குரல் இது!



vickneaswaran.sk@thaiveedu.com




ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் விளைவாக மேலெழுந்த இனவாதச் சிந்தனையின் வளர்ச்சியும் இலங்கை அரசுருவாக்கத்தின் தோல்வியும் இலங்கையில் இனமுரண்பாடு கூர்மையடைந்து செல்லவைத்தது. பிராந்திய மேலாதிக்க நாடுகளின் இடைத்தொடர்புகளினால் அது நீண்டகால உள்நாட்டுப் போராக மாறியது. கால்நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையின் இன முரண்பாடு என்பது உள்நாட்டுப் போராக வேயிருந்தது. அதைச் சார்ந்துதான் ஏனைய விடயங்கள் கையாளப்பட்டன. உலகில் நடந்த மிக மூர்க்கமான உள்நாட்டுப் போர்களிலொன்றாக இலங்கையின் உள்நாட்டுப் போர் கருதப்படுகிறது. அதன் நீண்டகாலத் தொடர்ச்சியும் அது ஏற்படுத்திய பேரழிவுகளும், அதன் புறவிளைவுகளும் இலங்கையின் இன முரண்பாட்டில் வெளிநாடுகள் அக்கறை கொள்வதற்கு வாய்ப்பளித்தன. பிராந்திய, பூகோள அரசியல் நலன்களை முன்னிறுத்தியே இலங்கை இன முரண்பாடு தொடர்பில் வெளிநாடுகளின் கரிசனை இயங்கியது. உள்நாட்டுப் போரென அது குறிப்பிடப்படுகின்ற போதிலும் அது சர்தேசச் சக்திகள் மற்றும் அதன் நலன்களோடு சம்பந்தப்பட்டிருந்தது.

இச்சர்வதேசச் சக்திகளில் பெரும்பாலானவை இன முரண்பாட்டினை ஆயுத மோதல் மூலமான தீர்வினைத் தவிர்த்து, ஆயுதங்களால் அல்லாத சமாதானமான தீர்வைக் காண பேச்சுவார்த்தை நோக்கிச் செல்வதற்கு இரு தரப்பையும் கட்டாயப்படுத்தியதுடன், அப் பேச்சுவார்த்தைகான அனுசரனையாளர்களாகவும் செயற்பட்டன. இனங்களுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவை வளர்ப்பதிலும் அபிவிருத்தி நோக்கி நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமென்பதிலும் இந்நாடுகள் - விசேடமாக மேற்குலக நாடுகள் - அதிக அக்கறையை வெளிப்படுத்தியிருந்தன. பல மில்லியன் நிதி இவற்றுக்குச் செலவழிக்கப்பட்டது. ஆயினும் அவற்றினால் குறிப்பிடத்தக்க நிலையான முன்னேற்றமெதுவும் ஏற்படவில்லை. இலங்கை இன முரண்பாட்டுக்குச் சமாதானமான தீர்வை வலி யுறுத்திய தரப்புகள் அனைத்துமே இந்தப் போருக்கான ஆயுத விற்பனை எவ்விதம் நடைபெறுகின்றது என்பது தொடர்பில் பாராமுகத்தைக் கடைப்பிடித்தன. ஈற்றில் மாபெரும் மனித அவலத்துடன் இலங்கையின் உள்நாட்டுப் போர் ஆயுதங்களால் முடித்து வைக்கப்பட்டது.

இவ்வழிவுகரமான யுத்தத்தில் ஆயுதங்களும் அவற்றின் பரிவர்த்தனைகளும் முக்கிய பங்காற்றின. ஆயுதங்களின்றி போர் என்பது நடைபெற முடியாது. ஆயுதங்கள் இன முரண்பாட்டை உருவாக்குபவையல்ல எனினும் அது மூர்க்கமான உள்நாட்டுப் போராக மாறுவதற்கும் நீண்டகாலம் நீடிப்பதற்கும் இன்றியமையாதவை. அவ்வகையில் இலங்கையின் இன முரண்பாடு பற்றிய உரையாடலில் ஆயுதங்கள் மற்றும் அவற்றின் பரிவர்த்தனை தொடர்பான விடயங்கள் தவிர்க்க முடியாதவை. இந்நிலையிற்தான் ஆயுதங்களை உற்பத்தி செய்திராத இலங்கையில் கால் நூற்றாண்டு காலம் மிக அதிகமான உயிரிழப்பை ஏற்படுத்திய உள்நாட்டுப் போருக்குத் தேவையான ஆயுதங்கள் இருதரப்புக்கும் எவ்வாறு தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருந்தன என்ற கேள்வி அவசியமானதாகிறது.

இலங்கை இன முரண்பாடுகள் தொடர்பாகப் பல நூற்றுக்கணக்கான நூல்கள், பிரசுரங்கள் வெளிவந்திருக்கின்றன. அவை பெரும்பாலும் இன முரண்பாட்டின் தோற்றக் காரணிகள் குறித்தும், இனமுரண்பாட்டின் அழிவுகள் குறித்துமே அதிக அக்கறை செலுத்திய போதிலும் இன முரண்பாட்டில் ஆயுதங்களின் வகிபாகம் அவற்றின் பரிவர்த்தனை தொடர்பாகத் துரதிஸ்ட்டவசமாக அலட்சியம் செய்யப்பட்டிருந்தது. தமிழில் அவ்வாறான முயற்சி நடைபெற்றதாக அறியமுடியவில்லை.

பேரழிவுப் போர் முடித்து வைக்கபட்டு 15 ஆண்டுகளின் பின்னர் அலட்சியப்படுத்தப்பட்ட விடயமான இலங்கையுடனான ஆயுதப் பரிவர்த்தனை தொடர்பில் நாம் அவசியம் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான நூல் தமிழில் வெளிவந்துள்ளது. 'சமாதானம் மற்றும் மத்தியஸ்தத்திற்கான சுவீடிய சங்கம் - The Swedish Peace and Arbitration Society (SPAS), சுவீடிய இலங்கைக் கொமிற்றி - The Swedish Sri Lanka Committee' ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட அறிக்கை 'இலங்கையுடனான ஆயுத வர்த்தகம் - பூகோள வணிகமும் உள்ளகச் செலாவணியும்' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது.

மூன்று தசாப்தகால யுத்தப் பேரழிவின் பின்னர், வீழ்ச்சிகளிலிருந்து மீளவும் புதிய திசைகளைக் கண்டடையும் முயற்சியின் பகுதியாகக் கடந்த காலத்தின் தவறுகளிலிருந்தும், கசப்பான வரலாற்றிலிருந்தும் கற்றுக்கொள்ளும் வகையிலான ஈழம் சார்ந்த பிரதிகளைக் கடந்த பதினைந்தாண்டுகளாக தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் 'வடலி' பதிப்பகம் இந்நூலை தமிழில் வெளியிட்டுள்ளது.

'இலங்கையில் இடம்பெற்ற கொடும் யுத்தத்திற்கு நீதி விசாரணை நடத்தப் போவதாகவும், இனப் படுகொலைக்குத் தீர்வு வழங்கப் போவதாகவும் கூறி இப்போது மனிதவுரிமைக் காவலர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்கிற சர்வதேச ஆயுத உற்

பத்தி நாடுகள்' தொடர்பாக இலங்கையில் - குறிப்பாக தமிழ் மக்களிடம் - பதிய வைக்கப்பட்டுள்ள விம்பத்தின் பொய்மை களை ஆதாரங்களோடு அம்பலப்படுத்துகிறது இந்நூல். 'விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளிற்கு மத்தியஸ் தம் வகித்துக்கொண்டே அதிர்ச்சியளிக்கும் விதமாக அதே சமாதானக் காலத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தீவில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்கும் ஆயுதங்களை விற் பனை செய்ததன் வழியாக அச்சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்து பேரழிவில் முடிந்த இறுதிப்போருக்குக் காரண மாயிருந்தன என்பதை ஆதாரங்களோடு விளக்குகிறது' என நூல் தொடர்பான விபரிப்பாகப் பின்னட்டையில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கு நியாயம் செய்வதாக நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு யுத்தங்களில் ஆயுத வர்த்தகத்தின் பங்கு பற்றி இலங்கையைக் கருத்திற்கொண்டு ஆராயும் இவ்வறிக்கையின் நோக்கம் குறித்துப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'இலங்கை அனுபவம் ஆயுத முரண்பாடுகளால் விளையும் சமகால உலகப் பிரச்சினைகளான கொலை, இடம்பெயர்வு, வறுமை, சமூகப் பிரிவினைகள், தனிமனித துயரம் என்பவற் றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போருக்குத் தேவையான ஆயுதங்களைப் பூகோள ஆயுத வர்த்தகம் வழங்கியது. ஆயுத வர்த்தக உடன்பாடொன்றை வடிவமைத்துச் செயற்படுத்தும் உலகளா விய முயற்சியில் இலங்கைக்கு ஆயுதம் வழங்கியது பற்றிச் செய்யப்படும் ஓர் ஆய்வு, ஆயுத வர்த்தகத்தைப் பற்றிய விவாதத்தைத் தொடங்கி ஒரு சர்வதேச உடன்பாட்டை எய்த லாம் என்ற நம்பிக்கையை ஊட்டலாம்.'

இந்த அறிக்கை ஆயுத வர்த்தகம் பற்றியும் அதைக் கட்டுப்ப டுத்த நடைமுறையிலிருக்கும் விதிகள் பற்றியும் ஆயுத முரண்பாட்டின் விதிகள் பற்றியும் விளக்குகிறது. அதே வேளை முரண்பாட்டின் ஓர் அங்கமாக ஆயுதங்களிருந்து முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சமதான முயற்சிகளையும் தடுத்து வந்திருப்பதையும் எடுத்துக்காட்டுவதாக' அறிக்கை யின் செயலுக்குரிய சுருக்கம் குறிப்பிடுகிறது.

'முரண்பாடு நிலைகொண்டிருந்த காலம் முழுவதும் போரில் ஈடுபட்ட இரு தரப்புகளுக்கும் பல்வேறு வழிகளில் ஆயுதங்கள் கிடைத்து வந்துள்ளன. இந்த ஆயுதங்களின் வரத்து போரை நீட்டியும் தீவிரமாக்கியுமுள்ளது. இதனால் இலங்கையின் பொருளாதாரமும் மக்களின் நல்வாழ்வும் சீரழிந்து போனது மல்லாமல் மனிதவுரிமை மீறல்களும் பெருகின. இந்த ஆயுத முரண்பாட்டால் மனிதக் குடியிருப்பு மீதான தாக்குதல், பலாத் கார ஆட்சேர்ப்பு, சிறுவர்களைப் படையில் சேர்த்தல், வலிந்து காணாமலாக்கப்படல், சித்திரவதை, மனிதர்களைக் கேடய மாக்கல், மனித நடமாட்டத்தை கட்டுப்படுத்தல், அவர்களின் தேவைகளைக் கட்டுப்படுத்தல் ஆகிய தீமைகள் விளைந்த தையும் கிடைத்த சிறிதளவு ஆயுதங்களும் பாரிய விளைவு களை ஏற்படுத்தும் என்பதையும் அது குறிப்பிடுகிறது.

அத்துடன் 'தமிழ் கிளர்ச்சியாளர்களை அடக்கும் எத்தனத் தில் பாரிய மனிதவுரிமை மீறல்களைப் புரியும் நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் மனிதவு ரிமை மீறல்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. இருந்த போதிலும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் அதற்கு எந்தச் சிக்கலும் ஏற்பட்டதில்லை. அதேபோல் விடுத லைப் புலிகளும் மேற்குலக நாடுகளின் தளர்வான சட்டங்க ளைச் சாதுரியமாகக் கையாண்டு புலம்பெயர்ந்த தமிழர்களி டமிருந்து நிதி சேகரித்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வந்தனர். இதனால் உலகின் சக்திவாய்ந்த ஆயுத இயக்கமாக அது பரிணமித்தது. இதனால் இரு தரப்பில் ஒரு வரும் வெல்ல முடியாமல் போர் நீண்டகாலம் நீடித்தமையை இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய 'பெரும்விலை கொடுத்த போர்', 'இலங்கை முரண்பாடு தீவிரமடைதல்', 'இடைவெ ளியை இணைத்தல்' ஆகிய மூன்று அத்தியாயங்களில் முத




லாவது ஆயுத முரண்பாட்டால் மக்களின் வாழ்விலும் பொரு ளாதாரத்திலும் ஏற்பட்ட தாக்கங்களையும், முரண்பாட்டில் சர் வதேசச் சக்திகளும் தேசிய சக்திகளும் வகித்த பங்கையும் விபரித்து சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவர்களின் நிகழ்ச்சிநிரல் மாறிவந்த பாங்கையும் விளக்குகிறது. 2009-ல் போர் முடித்து வைக்கப்பட்டபோதிலும் போர் மூலக் காரணமாக இருந்த காரணிகள் தீர்க்கபடாமல் இருப்பதையும் அடக்குமுறைகள் தொடர்வதையும் குறிப்பிடுகிறது.

இரண்டாவது அத்தியாயம் போரின் கடைசிப் பத்தாண்டுக ளில் இரு தரப்பும் ஆயுதங்களை எங்கிருந்து எவ்வாறு பெற்ற னர் என்பதை ஆராய்கிறது. இரண்டு தரப்பும் பெற்றுக் கொண்ட ஆயுதங்கள் முரண்பாட்டை எவ்வாறு நீட்டியது என் பதையும் விபரிக்கிறது.

மூன்றாவது அத்தியாயம் ஆயுத வியாபாரத்தில் சர்வதேசச் சக்திகளின் சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளியை நுணுக்கமாக ஆராய்கிறது. சீனாவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆயுத வர்த்தகத்தில் இரு வேறு நோக்குகளை கொண்டுள் ளதையும், பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வுகாண வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்த வேடதாரித்த

னத்தையும் இவ்வத்தியாயம் அம்பலப்படுத்துகிறது.

இலங்கையின் இன முரண்பாடு உள்நாட்டுப் போராக மாறிய மைக்கு (மிகக் குறைந்தளவாக இருந்தாலும்) இந்தியா வழங்கிய ஆயுதங்கள் காரணம். இந்தியப் பின்னணியில்லாமலும், ஆயுதங்கள் இல்லாமலும் (தமிழ்) ஆயுதக் குழுக்கள் போருக்குத் தயாராகியிருக்க மாட்டார்கள். 1990-ல் போரில் ஈடுபட்ட இருதரப்பும் புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்யத் தொடங்கின. யுத்தகாலம் முழுவதும் இரு தரப்புக்கும் ஆயுதங்கள் வந்து கொண்டிருந்தன. இதனால் ஒரு தரப்பும் வெல்லமுடியாத ஆயுத சமநிலை நிலவியது. பெருமளவு ஆயுதங்கள் வந்து குவிந்ததால் போர் உக்கிரமடைந்தது. இருதரப்பும் ஆயுதப் பரிச்சயத்தால் இன்னும் இன்னும் ஆயுதத் தொழில்நுட்பத்தில் முன்னேறி வந்தனர்.

உண்மையில் இலங்கை யுத்தத்தைப் பொறுத்தவரை இராணுவ உதவி அல்லது ஆயுதங்கள் கிடைக்காமல் போகும் காலங்களில் மாத்திரமே போரில் ஈடுபட்ட தரப்புகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தன. 1987-ல் பிரதான ஆயுத வழங்கியான இந்தியா தனது தந்திரோபாயத்தை மாற்றியமையால் போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. அக்காலத்தில் ஆயுதத்திற்கு முழுமையாக இந்தியாவை நம்பியிராமல் இருந்ததால், விடுதலைப் புலிகளால் விரைவில் உடன்பாட்டிலிருந்து விலகிப் போரைத் தொடரமுடிந்தது. அது போலவே 2002 போர் நிறுத்தத்திற்குக் காரணம் இரு தரப்புமே ஆயுதங்களைப் பெறுவதில் ஏற்பட்ட சிரமம் என்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

போர்க்களத்தில் ஏற்பட்ட இழப்பினாலும் பொருளாதார நெருக்கடியினாலும் இராணுவ நடவடிக்கையை விடுத்து பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கம் வருகிறது. மற்றப் பக்கமாக விடுதலைப் புலிகள் அமைப்பும் பூகோள பயங்கரவாத அச்சுறுத்தலால் ஆயுதங்கள் கொள்வனவு செய்ய நிதி திரட்டுவதில் சிக்கல் ஏற்பட்டதால் பேச்சு வார்த்தைக்கு வருகிறது. கடந்தகாலப் போர் வரலாறு முழுவதுமே ஆயுதங்களைப் பெற்றுத் தம்மைப் பலப்படுத்தும் வரையுமே மனமில்லாமல் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதை இருதரப்பும் ஒரு கைவந்த கலையாகக் கொண்டிருந்தன. அவை ஆயுதப் பற்றாக்குறையை நிரப்பிக்கொண்டு மீண்டும் உக்கிரமாகப் போர்புரியத் தொடங்குகின்றனவே ஒழிய சமாதானச் செயற்பாட்டை நோக்கி முன்னேறுவதில்லை. அவ்வகையில் பார்த்தால் போர் இறுகி அதன் இயக்கம் தடைப்படும் போதெல்லாம் ஆயுத வர்த்தகத்தினால் கிடைக்கும் ஆயுதங்கள் போரை மீளவும் இயக்கும் 'உராய்வு நீக்கி'யாகத் தொழிற்படுகின்றன. இதனாலே உள்நாட்டுப் போரின் உராய்வு நீக்கியாக 'ஆயுத வர்த்தகப் பரிவர்த்தனை'யைக் கருதவேண்டியுள்ளது.

இந்நூல் குறிப்பிடும் இன்னுமொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. இலங்கையுடனான ஆயுத வர்த்தகம் வியாபார ரீதியில் மிகச் சிறியளவான நன்மையைக் கொண்டது எனினும் பூகோள அரசியல் நலன்கள் ஆயுத வர்த்தகத்தைத் தீர்மானிக்கின்றமையை அது இலங்கை அனுபவத்திலிருந்து வலியுறுத்துகிறது.

2009-ல் பாரிய மனித அவலத்துடன் இலங்கையரசு போரை முடிவுக்குக் கொண்டுவருகிறது. இதில் பூகோள அரசியல் இராஜதந்திரச் செயற்பாடு முக்கிய பங்காற்றியது. சீனா வழங்கிய ஆயுதங்கள், அதனை எதிர்கொள்ள மேற்குலக நாடுகள், பிராந்திய நாடுகள் வழங்கிய ஆயுதங்கள் என்பன முக்கிய பங்காற்றின. மேம்படுத்தப்பட்ட ஆயுதங்களும் தகவல் தொடர்பு சாதனங்களும் இலங்கையரசுக்குக் கிடைத்தன. சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தை சர்வதேச ஆதரவை திரட்டுவதற்கு இலங்கையரசு பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் புலிகளைச் சர்வதேச ஆதரவு குறைந்த, பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்துவதில் பெருமளவு வெற்றியீட்டியது.

மறுபுறம் புதிதாக வழங்கப்பட்ட போர்க் கப்பல்கள் மற்றும் தொலைத் தொடர்பு உதவிகளைக் கொண்டு அது விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களைத் தொடர்சியாக அழித்தது. படகுகள் மூலம் ஆயுதங்களைக் கொண்டுவர முடியாத நிலையில் விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதையைச் சீரமைத்து தாழப்பறக்கும் விமானங்கள் மூலம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் அம்முயற்சிகள் போதிய பலனளிக்கவில்லை. ஒரு தரப்பில் ஆயுதப் பற்றாக்குறையும் மறுதரப்பிடம் நவீன ஆயுதங்களின் குவிவும் ராஜதந்திர ஆதரவும் வரலாற்றின் கொடிய மனித அவலத்துடன் நீண்டகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரக் காரணமாகியது. இறுதிப் போர்காலம் முழுவதும் இலங்கை அரசிற்கெதிராகப் பல்வேறு மனிதவுரிமைக் குற்றச்சாட்டுகள் மனித அவலங்கள் தொடர்பில் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் அடையாளப்படுத்தி முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் தேசிய சர்வதேச அமைப்புகளால் வெளிப்பாடுகள் செய்யப்பட்டபோதிலும், விடுதலைப் புலிகள் தரப்பு போர்நிறுத்தக் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் அது கண்டுகொள்ளப்படவில்லை. இலங்கை அரச தரப்புக்கான ஆயுதப் பரிவர்த்தனையும் நிறுத்தப்படவில்லை.

இலங்கையின் இராணுவத் தீர்வை இராணுவ உதவி செய்த நாடுகள் கூட வரவேற்கவில்லை. ஆயினும் ஆயுதப் பரிவர்த்தனைப் பிரமாணத்துக்கு மாறாக நடக்கும் நாடொன்றுக்கு ஏன் ஆயுதங்கள் வழங்கினார்கள் என ஒருவர் கேட்கலாம். இலங்கைக்கு ஆயுதம் வழங்க நாடுகள் விரும்பியது ஏன் என்பது பிராந்திய மற்றும் சர்வதேசிய அரசியல் நிலைமைகளில் தங்கியிருந்ததை வலியுறுத்துகின்ற இவ் அறிக்கை, உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் இலங்கை மாதிரியை நகலெடுப்பதிலுள்ள ஆபத்தையும் வலியுறுத்தியுள்ளது.

எல்லா வகையிலும் ஏற்புடைய சகல நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய ஒரு ஆயுத வர்த்தக உடன்பாட்டு வரைவை இனங்காணவும், ஆயுத வர்த்தகத்தின் தீயவிளைவுகளை விளங்கிக் கொண்டு எதிர்காலத்தில் பொறுப்புணர்வுடைய ஆயுத வர்த்தகத்தை நோக்கிய சர்வதேசச் செயற்திட்டத்திற்கான ஒரு அழைப்பை இவ் அறிக்கை கோருகிறது.

இலங்கை இன முரண்பாடு தொடர்பில் வெளிவந்த நூல்களில் இன முரண்பாட்டை முற்றிலும் வேறுவிதமான பார்வைக் கோணத்தில் விளங்கிக்கொள்வதற்கு இந்நூல் வற்புறுத்துகிறது. சிக்கலான கோள வணிக அரசியல் சம்பந்தப்பட்ட முறை சார்ந்த ஆய்வு என்ற போதிலும் அணுகுவதற்கு எளிமையானதாக அமைந்துள்ளது. அதற்கேற்ப தமிழ் மொழிபெயர்ப்பும் சரளமான, நேர்த்தியான நடையிலுள்ளது. இலங்கையின் இன முரண்பாட்டையும் உலகளாவிய ஆயுத முரண்பாடு உள்நாட்டுப் போர்கள் என்பவை தொடர்பிலும் அறிய விரும்புவர்களுக்கான நிதர்சனத்தை இந்நூல் நிச்சயம் வெளிப்படுத்துகிறது.

priyadarsan@thaiveedu.com

# அறிவு உற்பத்தியும் மெய்யியலும்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : க. சண்முகலிங்கம்

அறிவு உற்பத்தியின் மெய்யியல் பிரச்சினைகள் (Philosophical Problems of Knowledge Production) இயற்கை விஞ்ஞானங்கள், சமூக விஞ்ஞானங்கள், மனிதப் பண்பியல் (Humanities) ஆகிய அறிவுத் துறைகள் யாவற்றுக்கும் பொதுவானவையாகும். ஆயினும் இக்கட்டுரையில் சமூக விஞ்ஞானங்கள் மனிதப் பண்பியல் என்னும் இருதுறைகளின் அறிவு உற்பத்தியில் மெய்யியலின் பங்கு பற்றியே கவனம் செலுத்தப்படும்.

மெய்யியலிற்கும் ஆராய்ச்சிக்கும் உள்ள தொடர்பு யாது? என்ற வினாவுடன் இக்கட்டுரையில் கூறவிருக்கும் விடயங்களைப் பரிசீலிப்போம்.

சிறந்த ஆராய்ச்சியாளர்கள் எனப் புகழ் பெற்றவர்களாக விளங்கும் புலமையாளர்கள் கூட இன்று அறிவு உற்பத்தியின் மெய்யியல் என்ற விடயம் பற்றி அக்கறையற்றவர்களாக இருப்பதைக் காண்கிறோம். அவ்வாறிருக்கும் போது நாம் ஏன் இந்த விடயம் பற்றி அலட்டிக் கொள்ள வேண்டும் என்பது நியாயமான கேள்வியே. எமது பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மாணவர்களில் பெரும்பான்மையினர் மெய்யியல் என்ற பாடத்தைப் படிப்பதில்லை. ஆயினும் பல பல்கலைக்கழகங்கள் தொடர்ந்து ஆராய்ச்சியாளர்களை உருவாக்கி வருகின்றன. ஆகையால் நாம் ஏன் மெய்யியல் பற்றிக் கவலைப்பட வேண்டும்? சமூக ஆய்வின் மெய்யியல் பற்றி ஒரு கட்டுரையையோ நூலையோ எழுதும் அவசியம் என்ன என்பதையும் நியாயப்படுத்த வேண்டும். அத்தோடு விஞ்ஞான ஆராய்ச்சி, சமூக விஞ்ஞானங்களிலாயினும், இயற்கை விஞ்ஞானங்களிலாயினும் மெய்யியல் பிரச்சினைகளுடன் தொடர்புடையதாக உள்ளதால், ஆராய்ச்சி தொடர்பான பயனுள்ள கருத்துக்களை இவ்வினாவிற்கான விடையைக் காண்பதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

## மெய்யியல் என்றால் என்ன?

மெய்யியல் என்னும் எண்ணக்கரு விரிந்த பல புலமைத்துறைகள்சார் விடயங்களை உள்ளடக்கியது. பொது மக்கள் பார்வையிலும் மெய்யியலுக்கு அத்தகைய உயர் மதிப்பு இருந்து வருகிறது. புத்தகசாலைகளுக்குச் சென்று அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களைப் பார்வையிட்டால் ‘மெய்யியல்’ என்ற அடையாளம் ஒட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள நூல்களின் பெரும்பான்மையானவை ‘சமயம்’ பற்றியனவாக இருப்பதைக் காண்கிறோம். அவற்றுள் பல மறைஞானம் (Mysticism) பற்றியனவாக இருப்பதையும் காண்கிறோம். சமயம் என்னும் துறை ஆன்மீகம், அறம் என்னும் விடயங்களோடு தொடர்புடைய மெய்யியல் பிரச்சினைகளைப் பற்றியதாக உள்ளது. கிரேக்க மொழியில் ‘Philosophy’ என்ற சொல் ‘ஞானத்தின் மீதான காதல்’ (Love of Wisdom) என்ற பொருள் உடையது. காலப்போக்கில் இச்சொல் அறிவு என்ற குறுகிய பொருளில் உபயோகிக்கப்படலாயிற்று. ‘ஞானம்’ (Wisdom), ‘அறிவு’ (Knowledge) என்ற இரண்டு கருத்துக்களையும் இணைத்து அகராதிகள் மெய்யியல் பற்றிய வரைவிலக்கணத்தைத் தந்துள்ளன. உதாரணமாக ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி (1976) மெய்யியலைப் பின் வருமாறு வரையறை செய்துள்ளது. ‘Seeking after wisdom or Knowledge, especially that which deals with ultimate Reality, or with most General Causes and Principles of Things and Ideas and Human Perception and Knowledge of them’ விஞ்ஞானத்தின் மெய்யியல், சமூக விஞ்ஞானத்தின் மெய்யியல் ஆகியன பற்றி ஆராயும் நூல்கள் மெய்யியல் என்னும் சொல்லை இன்னும் குறுகிய ஒரு பொருளிலேயே உபயோகிக்கின்றன.

## மெய்யியல் விசாரணையின் நான்கு கூறுகள்:

மெய்யியல் விசாரணையில் (Philosophical Inquiry) நான்கு கூறுகள் உள்ளடங்கி உள்ளன. இந்நான்கு கூறுகளாவன:

- உள்ளதன் இயல் (Ontology) - இது புற உலகின் இருப்பும், அதன் இயல்பும் பற்றியது.
- அறிவு ஆராய்ச்சியியல் (Epistemology) - இது அறிவு பற்றிய கோட்பாடு, அறிவைப் பெறும் முறை என்பன பற்றியது.
- தருக்கவியல் அல்லது நியாயித்தல் முறைகள்
- முறையியல் (Methodology) - அறிவைப் பெறுவதற்காக தேர்வு செய்து கொண்ட முறைகளை அறிவு ஆராய்ச்சியியல் அடிப்படையில் நியாயப்படுத்துதலை (Epistemological Justification) இது குறிப்பிடுகின்றது. மேற்குறித்த நான்கு கூறுகளில் தருக்கவியல் அல்லது நியாயித்தல் தவிர்ந்த ஏனைய மூன்று கூறுகளும் அறிவின் உற்பத்தி பற்றிய மெய்யியலில் முதன்மையிடத்தைப் பெறுகின்றன.

## இரு முரண்பட்ட கருத்துக்கள்:

மெய்யியல், அறிவு என்ற இரண்டிற்கும் இடையிலான தொடர்பு குறித்து ஒன்றோடொன்று முரண்பட்ட இரு கருத்துக்கள் உள்ளன. இவ்விரு கருத்துக்கள் பற்றியும் நாம் தெரிந்து கொள்ளுதல் அவசியமானது.

* இம்மானுவல் கான்ட் என்ற மெய்யியலாளரும் அவர் வழி வரும் நவகான்டியவாத மரபினரும் (Kantian and neo - Kantian Tradition) மெய்யியலுக்கும் அறிவுக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறும் விளக்கம்.
* பின்னை நவீனத்துவக் கோட்பாடு (Post Modern Theory) கூறும் விளக்கம்.

மேற்குறித்த இருவகை விளக்கங்களில் முதலாவதான கான்டிய, நவ - கான்டிய விளக்கத்தை முதலில் பார்ப்போம்.

கான்டிய, நவ - கான்டிய சிந்தனையாளர்கள் 'மெய்யியல் தூய அறிவு பற்றிய விசாரணைக்கான நீதிமன்று (Philosophy as the Tribunal of Pure Reason) என்றும், அறிவு பற்றிய வினாக்களுக்கான விடைகள் குழப்பம் தருவனவாக அமையுமிடத்து இந்நீதிமன்று இறுதி முடிவைச் செய்யும் நடுத்தீர்ப்பாளர் / Ultimate Arbiter) என்னும் பணியைச் செய்கிறது என்றும் கூறினர்.

இரண்டாவதான பின் நவீனத்துவ கோட்பாட்டாளர்களின் விளக்கம் கடந்த முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இவ்விளக்கம் பின்வரும் மெய்யியலாளர்களால் வழங்கப்பட்டது.

- யக்குவஸ் தெறிதா (Jacques Derrida).
- ஜீன் பிராங்கோய்ஸ் லியோற்றாட் (Jean Francois Lyotard).
- றிச்சார்ட் றொர்ற்றி (Richard Rorty).

இக்கோட்பாட்டாளர்களின் கருத்துப்படி மெய்யியலிற்கு அறிவு குறித்த விடயங்களிற்கு தீர்ப்பு வழங்கும் உரிமை கிடையாது. மெய்யியல் என்பதே இன்னொரு உரையாடல் (Discourse) ஆகும். பல வகையான எடுத்துரைப்பு முறைகளில் மெய்யியலும் ஒன்று. அவ்வாறு இருக்கும் போது மெய்யியலுக்கு பிற எல்லா அறிவு விசாரணைகளுக்கும் மேலான ஓர் உயர் இடத்தை வழங்க முடியாது. இதனை உயன்கொட பின்வருமாறு கூறுகிறார்.

'According to this (Post Modern) perspective, Philosophy has no right to make such grand claims, because Philosophy is just another discourse, Narrative, and Tradition of writing, among many' (பக். 09).

## ஆராய்ச்சியும் அறிவு உற்பத்தியும்:

இதுவரை அறிமுகம் போன்றமையும் சில குறிப்புக்களைக் கூறினோம். அடுத்து எமது பிரதான விடயமான ஆராய்ச்சி பற்றியும் அறிவு உற்பத்திக்கும் அதற்கும் இடையிலான தொடர்பு பற்றியும் நோக்குவோம். ஆராய்ச்சி என்பதை அறிவின் உற்பத்திக்கான ஒரு செயல்முறை என வரையறை செய்யலாம். அத்தோடு ஆராய்ச்சி நிறுவனமயப்படுத்தப்பட்ட சமூகச் செயல்முறையாகவும் (Social Practice) வளர்ச்சியுற்றுள்ளது. ஆராய்ச்சியின் மூலம் விஞ்ஞான அறிவு (Scientific Knowledge) உற்பத்தியாகிறது. இவ்விஞ்ஞான அறிவின் உற்பத்தி பௌதிகவியல், உயிரியல், இரசாயனம், பொருளியல், சமூகவியல் அரசியல் விஞ்ஞானம் ஆகியதுறைகள் சார்ந்து முறைசார்ந்த செயல்முறையாக நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. இத்துறைகள் ஒவ்வொன்றும் துறைகள் சார்ந்த வரை சட்டங்களை தமக்கென வகுத்துக் கொண்டுள்ளன. ஆங்கிலத்தில் 'Disciplinary Frame Works' என இதனைக் குறிப்பிடலாம். தமிழில் 'புலமைத்துறைசார் வரைசட்டங்கள்' என இத்தொடரை மொழி பெயர்த்துக் கொள்ளலாம். இப்புலமைத்துறைகள் விஞ்ஞான அறிவை உற்பத்தி செய்வதோடு உற்பத்தி செய்த அறிவைப் பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளன. பல்கலைக்கழகங்களின் துறைகளும், பீடங்களும் இந்த வகையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன, பீடங்கள் (Faculties) மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன.

- இயற்கை விஞ்ஞான பீடம்
- சமூக விஞ்ஞான பீடம்
- மனிதப்பண்பியல் பீடம் (Faculty of Humanities)

இம்மூன்று பீடங்களைச் சார்ந்து வெவ்வேறு துறைகள் (Departments) கட்டமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிறுவனக் கட்டமைப்புக்குள்ளேயே ஆராய்ச்சியாளர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் செயற்படுகிறார்கள்.

## ஆராய்ச்சியும் மெய்யியலும்:

இன்றைய கட்டத்தில் ஆராய்ச்சிக்கும் மெய்யியலுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றி நாம் புதிதாகச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் இத்தொடர்பு பற்றி நாம் மறந்துவிட்டோம். மறந்துபோன இவ்விடயம் பற்றிய வரலாறு, அறிவாராய்ச்சியல், முறையியல் ஆகிய வினாக்களை மீண்டும் எமது நாட்டில் கேட்கவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. இத்தேவை, இடையிடையே அவ்வப்போது தோன்றிக்கொண்டே இருக்கிறது. அவ்வாறு தோன்றும் சந்தர்ப்பங்கள் அறிவு உற்பத்திக்கும் மெய்யியலுக்கும் இடையிலான தொடர்பைப் பற்றிச் சிந்திக்க வைக்கும் தருணங்களாக அமைவதுண்டு.

## சிறுநீரக நோய் ஆராய்ச்சி:


2011 – 2012 காலத்தில் இலங்கையில் சிறுநீரக நோய் ஆராய்ச்சி தொடர்பாக ஒரு பெரும் சர்ச்சை தோன்றியது. இச்சர்ச்சை வரண்ட வலயப் பகுதிகளில் சிறுநீரக நோய் பாதிப்புக்கு பெருந்தொகையினர் ஆளாவது ஏன் என்பது குறித்து களனிப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழுவொன்று ஆராய்ச்சியை மேற்கொண்டபோது ஏற்பட்டது. அக்குழுவின் ஆராய்ச்சி முடிவுகள் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன. களனிப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் தாம் ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்த போது, இலங்கையின் பௌத்தர்களால் வழிபடப்படும் தெய்வம் ஒன்றை வழிபாடு செய்து ஆராய்ச்சியைத் தொடர்ந்ததாகக் கூறினர். அத்தெய்வத்தின் வழிகாட்டலின் படியே தாம் கருதுகோள்களை வகுத்துக்கொண்டதாகவும், தரவுகளுக்கு விளக்கங்கொடுத்ததாகவும், தம் முடிவுகளும் அத்தெய்வத்தின் வழிகாட்டலின்படியே அமைந்ததாகவும் கூறினர். அவர்களின் இந்த நிலைப்பாடு பழைய வினாக்களை மீண்டும் கிளப்பின. இது பெரும் சர்ச்சைக்கு காரணமாயிற்று. இச்சர்ச்சையின் போது பின்வரும் விடயங்கள் பற்றிய சந்தேக வினாக்கள் எழுப்பப்பட்டன.

- ஆய்வாளர்கள் பயன்படுத்திய முறைகள் (Methods Employed)
- முறையியல் நியாயப்பாடு (Methodological Justification)

- தெய்வத்திடம் ஆலோசனை பெற்று செய்யப்பட்ட ஆய்வுக ளின் முடிவுகளின் வலிதுடமை

இச்சர்ச்சை பிரதானமாக ஊடகங்கள் மூலமாகவே நடத்தப் பட்டது. ஊடகங்கள் ஊடாக நடத்தப்பட்ட இந்தச் சர்ச்சையி லும் விவாதத்திலும் விஞ்ஞான ஆராய்ச்சியின் மெய்யியல் அடிப்படை (Philosophical Foundations) பற்றிய வினாக்கள் எழுப்பப்பட்டன. இவ்விவாதம் ஒரு குறுங்கால நிகழ்வாக அமைந்துவிட்டது. அது பொது மக்களின் கவனத்தை அதி கம் பெறாத நிகழ்வாகவும் அமைந்தது.

சிறுநீரக நோய் தொடர்பான மேற்கூறிய விவாதம் விஞ்ஞானி களை சில அடிப்படை வினாக்களுக்கான விடையைத் தேட வைத்தது. இவ்விடையத் தேடுவதற்காக அவர்கள் மெய்யிய லின் துணையை நாடவேண்டியதாயிற்று. ஏனெனில் அவர்கள்




எழுப்பிய வினாக்களுக்கான விடையை அவர்களது புலமைத் துறைகளான மருத்துவ விஞ்ஞானம், உயிரியல், இரசாயனம் போன்றவற்றின் எல்லைக்குள் நின்று பெற்றுக் கொள்ள முடி யவில்லை. உதாரணமாக களனிப் பல்கலைக்கழகத்தின் சிறு நீரக நோய் பற்றிய விவாதத்தின் போது எழுப்பப்பட்ட முக்கி யமான வினா ஒன்றைக் குறிப்பிடலாம்.

'ஆய்வு கூடப் பரிசோதனை மூலம் பெறப்பட்ட முடிவுகளை, கோவிலின் பூசகரான பெண்மணியின் ஆலோசனைகளுடன் கலப்புச் செய்வது சரியான முறையியல் எனலாமா? அப் பெண் பூசகர் ஆய்வாளர்களுக்கு கடவுளின் மெய்யறிவை கடத்தும் ஊடகமாகத் தாம் செயற்பட்டதாகக் கூறியதை ஏற்க லாமா?' (Is it correct to combine laboratory research with guidance provided by the priestess who claims to communicate devine wisdom to the research team?')

இந்த வினாவை வேறு வார்த்தைகளில் கூறுவோம். நவீன விஞ்ஞானத்தையும் சமயம் சார்ந்த பௌதீகவதீதத்தையும் கலப்புச் செய்வது சாத்தியமானதா? பட்டறிவு சார்ந்த அனு பவ விஞ்ஞானம் (Empirical Science) இயற்கைக்கு அப்பாற் பட்ட ஆலோசனையை ஆய்வுக் கருவியாக (Research Tool) ஏற்றுச் செயற்பட முடியுமா? அது விஞ்ஞானத்தின் பகுத்தறி வுக்கு ஏற்புடையதாக அமையுமா?

மேற்படி வினாவிற்கு இரசாயனவியல் துறையின் எல்லைக் குள் நின்று விடைகூற முடியுமா? இதனைப் பற்றிய முழுமை யான விடையைத் தேடுவதற்கு இரசாயனவியல் என்ற துறைக்கு வெளியே வரவேண்டும். அத்துறைக்கு வெளியே வந்து மெய் யியல் என்ற துறைக்குள் நின்றே இவ்வினாவிற்கான விடை யைத் தேடவேண்டும். இது மெய்யியல் சார்ந்த பிரச்சினையா கும். சிறுநீரக நோய் ஆராய்ச்சி சம்மந்தமான இவ்விவாதத் தில் விஞ்ஞானிகளில் ஒரு சிலரே பங்கு பற்றினர். விஞ்ஞான மெய்யியல் (Philosophy of Science) பற்றிய இந்த விவாதம் விஞ்ஞானிகளின் முழுமையான பங்கேற்பு இல்லாமல் முடி வுற்றது.

### விஞ்ஞான மெய்யியல்:

களனிப் பல்கலைக்கழகத்தின் சிறுநீரக நோய் ஆராய்ச்சி கிளப்பிய விவாதம் விஞ்ஞான மெய்யியல் (Philosophy of Science) சார்ந்தது. இந்த விவாதத்தினை அலெக்சாண்டர் றொசன்பேர்க் (Alexander Rosenberg) என்னும் மெய்யியலா ளர் தாம் எழுதிய 'Philosophy of Science: A contemporary Introduction' (விஞ்ஞான மெய்பியல்! சமகால அறிமுகம்) என்னும் நூலில் சுவாரசமான முறையில் பகுப்பாய்வுக்கு உட் படுத்தினார். இன்று நாம் நவீன விஞ்ஞானம் என்று கருதப்ப டும் அறிவுத்துறைகள் யாவும் மெய்யியல் என்ற அறிவுத்து றையில் இருந்து பிரிந்து சென்று தனித்தனியாக உருவாக்கம் பெற்றவையாகும். இவ்வாறு மெய்யியலில் இருந்து முதலில் பிரிந்து சென்ற அறிவுத்துறை கேத்திரகணிதம் (Geometry) ஆகும். கேத்திர கணிதம் 'Science of Space' என்றும் அழைக் கப்படும். கேத்திர கணிதம் தனித்துறையாக பொ.ஆ. மு.3-ம் நூற்றாண்டில் பிரிந்து சென்றது. 17-ம் நூற்றாண்டில் நியூட னின் அறிவியல் புரட்சி 'பௌதிகவியலை தனித்த விஞ்ஞா னத்துறையாக ஆக்கியது. பௌதிகவியல் மெய்யியலின் 'அதீதபௌதிகத்தில்' இருந்து பிரிந்தது. பௌதிகத்தை அடுத்து உயிரியல், உளவியல் ஆகிய விஞ்ஞானங்கள் மெய் யியலில் இருந்து வேறுபட்ட தனித் துறைகளாக வளர்ச்சி பெற்றன. இவ்விரு துறைகளும் தனித்தியங்கும் விஞ்ஞானங் களாக 20-ம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றன. இப்பட்டியலில் நாம் அரசியல் விஞ்ஞானம், சமூகவியல், வரலாறு, சட்டம் முதலியனவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம், ஆயினும் றொசன்பேர்க் கருத்துப்படி, பிரிந்துபோன மேற்குறித்த அறி வியல் துறைகள் ஒவ்வொன்றும் சிற்சில விடயங்களை மெய்யி யலின் பிரச்சினைகள் என விட்டுச்சென்றன. அவ்விஞ்ஞானத் துறைகள் தாம் விட்டுச்சென்ற விடயங்கள் சார்ந்த பிரச்சினை களுக்குத் தம்மால் தீர்வு காணமுடியாது எனவும், மெய்யி யலே அவற்றுக்கு விடை கூறவேண்டும் எனவும் கூறிவருகின் றன. உதாரணமாக: கணிதவியல் எண்கள் பற்றிய அறிவியல் துறை. ஆனால் கணிதவியல் எண்கள் என்றால் என்ன? எண் ணிக் கணக்கிடக்கூடிய பொருட்கள் இப்பிரபஞ்சத்தில் உள் ளனவா? போன்ற கேள்விகளுக்கு விடை கூறமுடியாது. இக் கேள்விகள் சார்ந்த பிரச்சினைகளை மெய்யியலாளர்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறே 'காலம்' (Time) என்னும் எண்ணக்கரு பௌதிகவியல் சார்ந்தது. ஆயி னும், பௌதிகவியலாளர்களால் 'காலம்' என்பதை வரையறை செய்ய முடியவில்லை. மனிதருக்கும் மிருகங்களிற்கும் இடை யிலான வித்தியாசம் என்ன என்பதை பரிணாம உயிரியல்

துறையினர் விளக்கங்கூற முயற்சித்தனர். ஆயினும் இன்று வரை தெளிவான விடை கிடைக்கவில்லை. பரிணாம உயிரிய லாளர்களில் சிலர் இந்தப் பிரச்சினைக்கான விடையைக் கூறும் பொறுப்பை மெய்யியலாளரிடம் விட்டுவிடுவோம் என்று கூறுகின்றனர். (றொசன்பேர்க் 2000 1-6).

றொசன்பேர்க் கூறியவற்றை நாம் சமூக விஞ்ஞானங்களுக் கும் பொருத்தமானவை என்றே கருதுகிறோம். நீதி, சமத்து வம், உரிமைகள் என்பன அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்ப டையான கருத்துக்கள் ஆகும். இந்தக் கருத்துக்களுக்கு மக் கள் மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுக்கிறார்கள். நாளாந்த வாழ்க்கையில் இவை முக்கியத்துவமுடைய பிரச்சினைக ளாக மக்களால் கருதப்படுகிறது. நீதி, சமத்துவம், உரிமை கள் என்பன ஏன் முக்கியம் வாய்ந்தனவாக உள்ளன?. மனித ரின் தனிப்பட்ட வாழ்விலும், கூட்டு வாழ்விலும் இவை ஏன் முக்கியம் பெறுகின்றன? இக்கேள்விகளுக்கு அரசியல் விஞ் ஞானமும் சட்ட விஞ்ஞானமும் திருப்தியான பதிலைக் கூறமு டியாதனவாக உள்ளன. அரசியல் விஞ்ஞானிகளும் சட்ட விஞ்ஞானிகளும் பண்டைய நூல்களை படித்து, ஆராய்ந்து இக்கேள்விகளுக்கு விடைகூற முனைகிறார்கள். இப்பண் டைய நூல்கள் கிரேக்கத்தில் வாழ்ந்த மெய்யியலாளர்களா லும், அவர்கள் காலத்தவர்களான சமய ஞானிகளாலும் எழு தப்பட்டவை என்பது கவனிக்கத்தக்கது.

சமகாலத்து மெய்யியல் இரண்டு வகை வினாக்களுக்கு விடைகூற முனைகிறது. இவ்விருவகை வினாக்களும், நவீன விஞ்ஞானத்தினால் விடைகூற முடியாதனவாகவும் உள்ளன. இவற்றுள் முதலாவது வகை வினாக்கள் பௌதிக விஞ்ஞா னங்கள், உயிரியல் விஞ்ஞானங்கள் சமூக அல்லது நடத்தை விஞ்ஞானங்களால் (Behavioural Sciences) விடைகூற முடி யாதவை. இவை இயற்கை உலகம், மனித உலகம் என்பன வற்றின் இருப்பு சார்ந்த ஆழமான வினாக்களாகும். இவ்வி னாக்களை உள்ளதன்இயல் (ontology) சார்ந்த வினாக்கள் எனலாம். இயற்கை விஞ்ஞானங்களாலும் விடைகூற முடி யாத வினாக்களாக உள்ளதன்இயல் வினாக்கள் உள்ளன.

சமகால மெய்யியலின் இரண்டாவது வகை வினாக்கள் அறி வாராய்ச்சியியல் வினாக்கள் (Epistemological questions) என்று அழைக்கப்படும். இவ்விரண்டாம் வகை வினாக்கள், முதல் வகை வினாக்களுக்கு விஞ்ஞானத்தால் ஏன் விடை கூற முடியவில்லை என்பதற்கு விடை கூற வேண்டியனவாக உள்ளன. விஞ்ஞான ஆராய்ச்சியின் உள்ளுறை விடயமாக உள்ளதன்இயல் வினாக்களும், அறிவாராய்ச்சியல் வினாக்க ளும் உள்ளனவேனும், அவற்றுக்கான விடையை மெய்யி யலே வழங்க வேண்டியதாக உள்ளது. இவ்விரு வகை வினாக்களை தனது பிரதான பிரச்சினைகளாக எடுத்துக் கொள்வது மெய்யியல் என்னும் அறிவுத்துறையேயாகும்.

விஞ்ஞானத்திற்கும் மெய்யியலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்நெருங்கிய தொடர்பை விஞ்ஞானத்தின் வர லாற்றின் மூலம் கண்டுகொள்ளலாம்.

ஐரோப்பாவில் அறிவின் வளர்ச்சியின்போது, முதற்கட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு (Organised knowledge) மெய்யி யலுக்கு உரியதாக இருந்தது இன்று தனித்தனி விஞ்ஞானத் துறைகளாக இருப்பவை பொது ஆண்டுக்கு முற்பட்டகால கிரேக்க நாட்டில் மெய்யியலுக்கு உரியனவாக இருந்தன. 19-ஆம் நூற்றாண்டு வரையும் விஞ்ஞானங்கள் யாவும், மெய்யிய லின் பகுதியாக அமைந்திருந்த நிலையே தொடர்ந்தது. அரிஸ்டோட்டில் பொ.ஆ.மு. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மெய்யியலாளரான அரிஸ்டோட்டல், அரசியல், கவிதையி யல், அழகியல், தருக்கவியல், பௌதிகவியல் ஆகியவற்றி லும் அறிஞராகக் கருதப்பட்டார். அவருடையதும் சமகாலத்தி னருமான மெய்யியலாளர்களதும் சிந்தனைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, மெய்யியல் விஞ்ஞானத்தின் மீது கொண்டி ருந்த ஈடுபாடும், விஞ்ஞானம் மெய்யியல்மீது கொண்டிருந்த ஈடுபாடும் தெளிவாகப் புலப்படும். இவற்றுக்கு நீண்ட வர லாறு உள்ளது என்பதும் தெரியவரும். அரிஸ்டோட்டலுக்கு முற்பட்ட காலத்து கிரேக்க சிந்தனையாளர்கள் விஞ்ஞான முறைகள், நியாயித்தல் என்பன பற்றி விவாதித்துள்ளார்கள். இந்த விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றன. உதாரணமாக 1564-1642 காலப்பகுதியில் வாழ்ந்தவரான கலீலியோ அரிஸ் டோட்டலின் பௌதிகவியலை விமர்சித்தார். அரிஸ்டோட்டல் முன்வைத்த பகுத்தறி நியாயித்தலை (Deductive Reasoning) கலீலியோ நிராகரித்தார். அவரது காலத்தில் கணிதவியலில் ஏற்பட்டுக் கொண்டிருந்த முன்னேற்றத்தால் உளத்தூண்டல் பெற்ற கலீலியோ தொகுத்தறி நியாயித்தல் (Inductive Reasoning) தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை எடுத்துக் கூறினார். கலீலியோவின் கருத்துக்கள் அவரது சமகாலத்தவ ரான பிரான்சிஸ் பேக்கன் என்பவரால் செம்மைப்படுத்தப்பட்ட வடிவத்தில் தொகுத்தறி நியாயித்தல் என்ற நியாயித்தல் முறையாக முன்வைக்கப்பட்டது. இது அனுபவவாத விஞ்ஞா னத்தின் அடிப்படையாகவும் அமைந்தது.

கிரேக்க சிந்தனையாளர்களும், அவர்களுக்குப் பிந்திய காலத்துச் சிந்தனையாளர்களும் கணிதவியல், வானியல், பௌதிகவியல், விற்பன்னர்களாகவும் இருந்தனர். அத்தோடு அவர்கள் அரசியல் சமூக சிந்தனை தொடர்பாகவும் முக்கிய மான பங்களிப்பை வழங்கியவர்களாகவும் இருந்தனர். மெய் யியலாளர் ஒருவர் சமூக விஞ்ஞானியாகவும் விளங்கிய இந்த நீண்ட மரபின் வழிவந்தவராகவே 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்ல் மார்க்சையும் கொள்ளுதல் வேண்டும். அவர் மெய்யிய லாளராக இருந்ததோடு பொருளியலாளர், சமூகவியலாளர், அரசியல்ச் சிந்தனையாளர், வரலாற்றாய்வாளர் என்ற பல்பரி மாணங்களை உடையவராக விளங்கினார். 19-ம் நூற்றாண் டில் மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில், அறிவின் வெவ்வேறு துறை கள் தனித்தனியாகப் பிரிந்துபோதல் பூரணமடையவில்லை. அக்காலத்தில் இயற்கை விஞ்ஞானங்கள் சமூக விஞ்ஞானங் களிலிருந்து பிரிந்துபோகத் தொடங்கியிருந்தன. அவையி ரண்டும் மெய்யியலில் இருந்தும் தமது தொடர்புகளைத் துண் டித்துக்கொண்டு பிரிந்து செல்லும் செயல்முறையும் ஆரம்ப மாகியிருந்தது. இருந்தபோதும் 20-ம் நூற்றாண்டின் பெரும் விஞ்ஞானிகளும், மெய்யியலாளர்களும் விஞ்ஞானத்திற்கும் மெய்யியலுக்கும் இடையிலான தொடர்பை வலியுறுத்திக் கூறினர். உதாரணமாக அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ‘அறிவாராய்ச்சி யலுக்கும், விஞ்ஞானத்திற்கும் நெருங்கிய பரஸ்பரத் தொடர்பு உள்ளது’ எனக் குறிப்பிட்டார். ‘விஞ்ஞானத்துடன் தொடர்பற்ற அறிவாராய்ச்சியியல் உள்ளீடற்ற வெற்றுத்திட்ட மாகும். அதுபோல அறிவாராய்ச்சி இயலுடன் தொடர்பற்ற விஞ்ஞானமும் குழப்பமான சிந்தனைக்கே வழிவகுக்கும்’ என் றும் அவர் குறிப்பிட்டார்.

அறிவின் உற்பத்தியின் பிரதான களங்களாக விளங்கும் பல் கலைக்கழகங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் விஞ்

ஞானத்தில் இருந்து மெய்யியல் பிரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். விஞ்ஞானம் மெய்யியலில் இருந்து பிரிக்கப்பட்டி ருப்பதன் எதிர்மறை விளைவு பல்கலைக்கழகங்களினதும், ஆராய்ச்சி நிறுவனங்களினதும் ஆராய்ச்சி நடைமுறைகளில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. இவற்றின் ஆராய்ச்சி நடைமுறையில் தரவுகளை திரட்டுதல், தொகுத்தல், அவற் றைப் பகுப்பாய்வு செய்தல் ஆகிய நுட்பக்கூறுகளுக்கு முக்கி யத்துவம் அளிக்கப்படுகிறது. இது அறிவு உற்பத்தியை ஒரு தொழில் நுட்பமுறையாக மாற்றுவதாக (Technicalisation of Knowledge Production) அமைகிறது. தரவுகளைத் தொகுத்த லும் பகுப்பாய்வு செய்தலும் (Data Collection and Analysis) தொடர்பான நுட்பங்களைக் கூர்மைப்படுத்துவதில் இயற்கை விஞ்ஞானிகளும் சமூக விஞ்ஞானிகளும் கவனம் செலுத்து கின்றனர். இலங்கையின் பொருளியலாளரான எஸ்.பி.டி. டீசில்வா (S.B.D. deSilva) இலங்கையிலும் பிற நாடுகளிலும் சமூகவிஞ்ஞானங்களின் ஆராய்ச்சி முறையியல், வெறும் தர வுகளைத் திரட்டுதல், தரவுகளைப் பகுத்தாராய்தல் என்னும் நுட்ப முறையாகத் தரம் தாழ்ந்து போனதை 1980-களிலேயே எடுத்துக் காட்டினார். தரவுகளைத் தொகுத்தலுக்கும் பகுப் பாய்வு செய்வதற்கும் முதன்மையளிக்கும் ஆராய்ச்சி 'சமூக விஞ்ஞானங்களில் சமூகப் பிரச்சினையொன்றிற்கான விளக் கத்தைத் தருவதற்குப் பதில் விசாரணை அறிக்கையொன்றை எழுதி வழங்குவதாகத் தரம் தாழ்ந்து விடுகிறது' எனவும் அவர் குறிப்பிட்டார். சமூக விஞ்ஞானங்களின் முறையியல் என்பது 'அருவமான கருத்துக்களையும் எண்ணக்கருக்களை யும் ஒழுங்குபடுத்திச் சிக்கலான தருக்க முறையை முன்வைப் பதான மெய்யியல் சார்ந்த விடயமாகும்' எனவும் அவர் குறிப் பிட்டார். விஞ்ஞானத்தையும் மெய்யியலையும் பிரித்து விடுவ தால், சமூக விஞ்ஞானங்களின் ஆராய்ச்சியில் தொழில்நுட்ப குறுக்கல்வாதம் (Technological Reductionsim) முதன்மை பெறுகிறது.


ஆராய்ச்சிக்கும் மெய்யியலுக்கும் இடையிலான தொடர்பை நாம் இன்னொரு கோணத்திலும் பாரக்கலாம். ஆராய்ச்சி என் பது அறிவை உற்பத்தி செய்வதை இலக்காகக் கொண்ட செயல்முறை எனக் கூறினோம். இக்கருத்து பல வினாக்களை எழுப்புகிறது. இவ்வினாக்கள் பலவற்றிற்கும் விடைகளைக் குறித்தவொரு புலமைத் துறையின் எல்லைக்குள் நின்று தேடிப் பெற்றுக் கொள்ளமுடியாது. உதாரணமாக அறிவு என் றால் என்ன? அறிவின் உற்பத்தி என்பதால் நாம் எதனைக் கருதுகிறோம்? அறிவை 'உற்பத்தி செய்தல்' முடியுமா? அவ் வாறு உற்பத்தி செய்யலாம் எனில் உற்பத்திக்கான சாதனங் கள் எவை? அவற்றுள் சில சாதனங்கள் பிறவற்றை விடச் சிறந்தவை என மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் எவை? ஆய்வாளர்கள் உலகம் பற்றிய 'உண்மைகளை' வெளியிடுகி றார்களா? 'உண்மை' என்றால் என்ன? தான் ஆராய்ச்சி நடத் துகிறேன் என ஒரு ஆய்வாளர் கூறும்போது, அவர் என்ன செய்கிறார்? ஆய்வாளர் ஆராயும் உலகத்தின் உண்மை இயல்புகள் எவை? அது இயற்கை உலகமா? அல்லது சமூக உலகமா? இயற்கையை ஆராய்வதற்குப் பயன்படுத்தும் முறையை மாற்றமின்றி சமூகம் பற்றிய ஆய்விலும் பிரயோ கிக்கலாமா? உலகம் உண்மையில் அறியக்கூடியதா? மரபு வழி அறிதல் முறைகளில் இருந்து ஆராய்ச்சியின் அடிப்ப டையான அறிவு எவ்வாறு வேறுபடுகிறது? அறிவை உற்பத்தி செய்து முன்வைக்கும் ஆய்வாளர்கள் என்ன அடிப்படைக ளில் பிறரால் அவ்வறிவு ஏற்புடையது எனக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கிறார்கள்? குறிப்பாக விஞ்ஞானிகளின் சமூ கம் என்ன அளவு கோல்கள் கொண்டு அதனை மதிப்பிட்டு, ஏற்றுக்கொள்ளும்? குறித்த அறிவை மதிப்பிடுவதற்கான வழி முறைகள் உள்ளனவா?

ஆய்வாளர்களுக்கு இதுபோன்ற கேள்விகள் உள்ளன என் பது தெரியும். வழக்கமாக அவர்களிடம் இவற்றுக்கான சில விடைகளும் உள்ளன. அவ்விடைகள் பொதுப்புத்தியின் பாற் பட்ட விடைகளே ஆகும். ஆனால் இவற்றுக்கான நெறிமு றைப்படுத்தப்பட்ட விடைகளைப் பெறுவதற்கு ஆய்வாளரின் புலமைத்துறைக்கு வெளியே வந்துதான் பதிலைத் தேட வேண்டும். குறித்த புலமைத்துறையின் எல்லைகளுக்குள் நின்று விடையைத் தேடமுடியாது. இவ்வினாக்கள் உண்மை யில் ஆராய்ச்சி பற்றிய கோட்பாடு சார்ந்த வினாக்களாகும். இவ்வினாக்களுடன் கோட்பாட்டுக்கு அப்பாலான (Meta-theoretical) விடயங்களும் தொடர்புடையன. இவ்வினாக்களை மெய்யியல் சிந்தனை வழிநின்றும் ஆராய வேண்டும். ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஒரு உண்மை தெளிவாகத் தெரிந்திருக்கும். அறிவு என்றால் என்ன என்ற எளிமையான வினாவிற்கே அவரவர் சார்ந்த புலமைத்துறைக ளில் விடையை எளிதாகப் பெற்றுவிட முடியாது. அவ்வாறான கேள்வியை எதிர் கொள்ளும் போது பெரும்பாலானோர் அது தேவையற்றது என ஒதுக்க முனைவர். அல்லது ஒரு 'தற்கா லிக பதிலை' வைத்து கொள்வோம் என்று முடிவு செய்து விட்டு அப்பாற் சென்று விடுவார்கள். இன்னொரு வழி மெய்யி யல் துறையைச் சேர்ந்த நண்பரிடம் ஆலோசனை பெறுதலா கும். அவ்வாறு ஆலோசனை பெறும்போது அந்நண்பர் மேற் படி வினாக்களோடு தொடர்புடைய விடயங்கள் சிலவற்றை உள்ளடக்கிய பட்டியலைத் தருவார். அப்பட்டியிலில் பின்வ ரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

- உள்ளதன் இயல் (Ontology).
- அறிவாராய்ச்சியியல் (Epistemology).
- முறையியல் (Methodology).
- முறைகள் (Methods).
- நியமங்கள் (Norms).
- மதிப்பீட்டுத் தீர்ப்புகள் (Value Judgements).
- சரிபார்த்தல் (Verification).
- பொய்ப்பித்தல் (Falsification).

இவை தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் தனித்த துறை யாக விஞ்ஞானத்தின் மெய்யியல் (Philosophy of Science) என்னும் துறை அமைந்துள்ளது.

இக்கட்டுரை ஜயதேவ உயன்கொட எழுதிய Social Research: Philosophical and Methodological Foundations என்னும் நூலின் இரண்டாவது இயலான 'Research and Philosophy in/of Research' என்னும் பகுதியின் பக்கம் 7 முதல் 16 வரை உள்ளவற்றைத் தழுவி எழுதப்பட்டது.



shanmugalingam@thaiveedu.com




ஒரு நூலில் இடம்பெறும் நூலியல் தரவுகளில் முதலாவதாக, 'நூலின் தலைப்பு' பற்றிய புரிதலை இந்த இதழில் விரிவாக நோக்குவோம்.

### நூலின் தலைப்பு:

ஈழத்துத் தமிழ் நூலியல் வரலாற்றில், நாவல், சிறுகதை, கவிதை இலக்கியங்களும் பிற துறைசார்ந்த அறிவியல் நூல்களும் நூலுருக்கண்ட வேளையில் வழங்கப்பட்ட இரட்டைத் தலைப்புகள் அக்காலகட்டத்து தமிழக - ஈழத்து நூலியல் உலகில் பொதுப்பண்பாக இருந்துவந்துள்ளன.

உதிர பாசம் அல்லது இரத்தினபவானி (சி.வை. சின்னப்ப பிள்ளை, 1915), பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம் (புலோலி க. சுப்பிரமணியம்,1918), சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி (எச். நெல்லையா,1934), ஆரோக்கிய வாழ்வு அல்லது நோயணுகா நெறி (வி. சக்திவேல், 1936), அகத்திய மாமுனிவராற் சொல்லப்பட்ட அகத்தியர் இலங்கை அல்லது அதிபூர்வீக இலங்கைச் சரித்திரம் (வ. நாதர், 1936), அருணோதயம் அல்லது சிம்மக்கொடி (ஏ.சீ. இராசையா, 1936), அனைவரின் மேம்பாடு அல்லது சர்வோதயம் (நா. சிவபாதசுந்தரன், 1953) என்றவாறமைந்த ஆரம்பகால இரட்டைத் தலைப்பு நூல்களின் வழியொற்றி சிறிது இடைவெளியின் பின்னர், பின்னாளிலும் ஸ்ரீ லங்கா சுதந்திர கீதம் அல்லது மரதன் ஓட்ட மணி ஒலி (ச.த.மு. சதக்குத் தம்பிப் பாவலர். 1970), மரணத்தின் பின் அல்லது போகுமாறெங்ஙனே வருமாறேதோ (மு. கந்தையா), லோவெட சங்கராவ அல்லது உலகாபிவிருத்தி மணிமாலை (ஸ்ரீ ஞானாலங்கார தேரர், 1973), விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள் (ஏ.எம். ரியாஸ் அஹமட், 2001) என இரட்டைத் தலைப்பு நூல்கள் வந்தவண்ணமே உள்ளன. இரட்டைத் தலைப்பாக இருந்தபோதிலும் இவை தீர்க்கமான தலைப்புக்களாக நூல் முழுவதும் வழங்கப்பட்டுள்ளதனால் நூலியலாளர்களுக்கும் நூலகர்களுக்கும் சிக்கலான பிரச்சினைகள் ஏதும் ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை.


பின்னாளில் புதுமை என்ற பெயரில் வெளிவந்த நூல்கள் சில நூலகர்ளை அதிகம் சிந்திக்கவைத்தது என்னவோ உண்மைதான். அமரர் எஸ்.பொ அவர்கள் 1972-இல் வெளியான தனது நூலொன்றிற்கு '?' கேள்விக் குறியையே தலைப்பாக வைத்தார். நெடுந்தீவு முகிலன் 2009-இல் அவர் எழுதிய நூலொன்றிற்கு 'ஃ' ஆய்த எழுத்து அல்லது அகேனத்தை தலைப்பாக வைத்தார். இவ்விரு நூல்களுக்கும் பட்டியலாக்கம் செய்யும் நூலகர்கள் தலையைப் பிய்த்துக்கொள்ளவே செய்வார்கள். நான் எஸ்.பொவின் நூலைப் பட்டியலாக்கம் செய்தபோது, 'கேள்விக்குறி' என்ற தலைப்புப் பதிவை இட்டு 'கே' வரிசையில் பட்டியலை ஒழுங்குபடுத்தினேன். மற்றவர்கள் எப்படிப் பட்டியலாக்கம் செய்தார்கள் என்பதை அவரவர்களிடம்தான் கேட்டறியவேண்டும்.


இலங்கையின் தேசிய நூலகத்திற்கு 2015-ல் விஜயம் செய்திருந்த வேளையில் அங்குள்ள தமிழ்-சிங்கள நூல்களை ஆவணப்படுத்துவதற்கு அனைத்து நூல்களையும் ஆங்கிலத்தில் transliteration செய்து கணினிமயப்படுத்தியிருந்தார்கள். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நூலின் தலைப்பு எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றதோ அதனை அப்படியே ஆங்கிலத்தில் உச்சரித்து எழுதிவைப்பதாகவே அவர்களது மின்பட்டியல் அமைந்திருந்தது. தேசிய நூலகத்தில் எஸ்.பொவின் நூலையும் நெடுந்தீவு முகிலனின் நூலையும் எப்படி மொழிமாற்றம் செய்திருப்பார்கள் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். என்னால் இரு நூல்களையும் அங்கு இறுதிவரை கண்டுபிடிக்க முடியவில்லை. உங்கள் நூல்கள் நீண்டகாலம் நூலகங்களில் பேணப்பட்டு அடுத்த தலைமுறைக்கும் அவை இலகுவாகச் சென்றடைய வேண்டுமானால் நூலின் தலைப்பை தமிழிலும், அதன் மொழிப்பெயர்ப்பை (Transliteration) ஆங்கிலத்திலும் தெளிவாக எழுதிப் பதிவுசெய்ய வேண்டும். இது ஆவணப்படுத்துவோருக்கு வசதியாக இருக்கும்.


ஒரு நூலின் தலைப்பு அந்த நூலின் பல்வேறு இடங்களிலும் வேறுபட்டுக்கிடப்பது பற்றி கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன். ஒரு நூலின் இரண்டு பதிப்புகள் இருவேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டும் உள்ளன. நோர்வேயிலிருந்து 'பனிப்ப

டலத் தாமரை' என்றொரு கவிதை நூல் தனது இரண்டாவது பதிப்பை 2006-ல் கண்டிருந்தது. கனடாவிலிருந்து இதே நூலின் முதலாவது பதிப்பு 'கரைசேரும் கடிதங்கள்' என்ற தலைப்புடன் முன்னதாக 2002-ல் முதற்பதிப்பாக வெளியிடப் பட்டிருந்தமையையும் குறிப்பிடவேண்டியுள்ளது.

'களம்பல கண்ட யாழ். கோட்டை' என்ற தலைப்பில் 8.7.1990 முதல் யாழ்ப்பாணத்தில் முரசொலியில் தொடராக ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இத்தொடர் மேலும் விரிவாக்கப்பட்டு முழுநூலாக பின்னாளில் 1995-ல் வெளியிடப்பட்டது. நூலின் அட்டையில் யாழ்ப் பாணக்கோட்டை வரலாறு' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நூலின் முழுத்தலைப்பு 'களம்பல கண்ட யாழ். கோட்டை: யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு' என்பதாகவே நூலியல் பதிவுகளில் அமைந்திருந்தன.







இதே எழுத்தாளர் எழுதிய 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' டிசம்பர் 2001-ல் வரதர் பவளவிழா வெளியீடாக வெளிவந்திருந்தது. பின்னர் சேமமடு பதிப்பகம் அதன் இரண்டாவது பதிப்பினை 2001-ல் வெளியிட்ட வேளையில் 'ஈழத்து தமிழ்ச் சிறுகதை வரலாறு' என்று பெயரை மாற்றியிருந்தனர். இரண்டும் ஒரே நூலே.

ஒரு நூல் தனது இரண்டாவது பதிப்பை வெளியிடும்போது தலைப்பினை எக்காரணம் கொண்டும் புதிய பதிப்பில் மாற்றக்கூடாது என்பது பொதுவான நூலியல் விதியாகும். இது பிற்காலத்தில் பல்வேறு குழப்பங்களுக்கும் வழிசமைக்கும். நான் மேற்குறிப்பிட்ட நூலின் முதற்பதிப்பின் உள்ளடக்கத்துடன் வேறும் பல புதிய ஆக்கங்கள் கொண்ட மேலதிக பக்கங்கள் சேர்க்கப்பட்டிருந்தமையால் தவறான புரிதலில், இரண்டாவது பதிப்பை புதிய தலைப்பில் நூலாசிரியர் வெளியிட்டிருக்கக்கூடும்.


மீள்பதிப்பு என்பது நூலை எவ்வித திருத்தங்களோ மாற்றங்களோ இன்றி மறுபதிப்பாக பிறிதொரு காலத்தில் வெளியிடுவதாகும். இங்கு மீள்பதிப்பு, மறுபதிப்பு என்பவை சமமான அர்த்தத்தைக் கொண்டிருக்கும். திருத்திய பதிப்புகள் எப்பொழுதும் மூலப்பதிப்பிலிருந்து சிறிதளவாவது வேறுபடுபவையே.

இதற்கு மற்றொரு உதாரணம் 'பலஸ்தீனக் கவிதைகள்' என்ற தலைப்பில் எம்.ஏ. நுஃமான் அவர்கள் தொகுத்த மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பாகும். 1981-ல் முதற்பதிப்பைக் கண்டிருந்தபோது இந்நூல் ஒன்பது பலஸ்தீனக் கவிஞர்களின் முப்பது கவிதைகளைக் கொண்டிருந்தது. பின்னாளில் 2000-ம் ஆண்டில் இக்கவிதைத் தொகுதியின் 2-வது பதிப்பை எம்.ஏ. நுஃமான் அவர்கள் வெளியிட்டபோது, இப்பதிப்பில் 15 கவிஞர்களின் 71 கவிதைகள் இடம்பெற்றிருந்தன. நிசார் கப்பானியும் ஃபத்வா துக்கான் தவிர்ந்த ஏனைய ஐந்து பெண் கவிஞர்களும் இத்தொகுதியில் புதிதாக இடம்பெற்றிருந்தனர். பக்க எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பை இரண்டாம் பதிப்புக் கண்டிருந்தபோதிலும் நூலின் தலைப்பு ஆசிரியரால் மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (பலஸ்தீனக் கவிதைகள் 1981-ம் ஆண்டுப் பதிப்பு 64 பக்கங்களையும், 2000-ம் ஆண்டு பதிப்பு 162 பக்கங்களையும் கொண்டிருந்தது).

மூல நூலின் ஆசிரியர், குறித்த நூலின் இரண்டாம் பதிப்பை பின்னொரு பொழுதில் வெளியிடும்போது அதில் கருத்து ரீதியாகவோ, பௌதிக ரீதியாகவோ பாரிய மாற்றங்களைச் செய்திருந்தால், அந்நூலைத் திருத்திய பதிப்பாகக் குறிப்படாமல், வேறொரு புதிய தலைப்பு வழங்கி, புதியதொரு நூலின் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டு வெளியிடத் துணியலாம். தமிழகப் படைப்பாளி சுஜாதாவின் மறைவுக்குப் பின்னர் வர்த்தக நோக்கத்தில் இத்தகைய புது முயற்சிகள் -சுஜாதாவின் புதிய நூல்களாக வடிவமைக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றன. இலங்கையிலும் அவ்வாறு வெளியிடப்பட்ட நூல்கள் பல. அவற்றைப் பட்டியலிடுவது இங்கு அவசியமற்றது. பல சிறுக

தைத் தொகுதிகள் அவ்வாறு வெளிவந்துள்ளதை அவதானித்துள்ளேன். முதற்பதிப்பில் வெளிவந்த சிறுகதைகளுடன் மேலதிக சிறுகதைகளைச் சேர்த்தும், சில பழைய கதைகளை நீக்கியும் புதிய தலைப்பில் ஒருவரின் நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வேளையில் இரண்டாவது பதிப்பாக அதனைக் குறிப்பிடாமல், புதிய தலைப்பின்கீழ் முதற்பதிப்பாகவே அதனைக் குறிப்பிடுவதால் அந்நூலை ஆவணப்படுத்துவோருக்கு எவ்வித பிரச்சினைகளும் தோன்றுவதில்லை.

சிறுகதைகள், கவிதைகள் குறுநாவல்கள் என்பவற்றின் புத்தாக்கங்களை மறுபதிப்பாக வெளியிடுவதா அல்லது புதிய நூலாக வெளியிடுவதா என்பதையிட்ட தீர்மானத்தினை நுலாசிரியரே எடுக்கவேண்டும். அதற்கு அவருக்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. ஆனால் மீள்பதிப்போ, புதிய முதற்பதிப்போ தெளிவாக நூலியல் பதிவுப் பகுதியில் குறிப்பிடப்படுவது அவசியம். தலைப்பினை மாற்றிவிட்டு இரண்டாவது பதிப்பாகக் குறிப்பிடும் வேளையில், அதன் முதலாவது பதிப்பை ஓர் ஆய்வாளர் அதே தலைப்பில்தான் தேடுவார் என்பது பொதுவான எதிர்பார்ப்பாகும்.




செங்கை ஆழியான் எழுதி 1985-ல் வெளிவந்த கடல் கோட்டை, பின்னர் 2008-ல் மீள்பதிப்புக்குள்ளாகிய வேளையில் 'கடற்கோட்டை'யாகச் சொற்புணர்ச்சிக்குள்ளாகியிருந்தது. மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து, இது ஒரு சாதாரண விடயம்தான். இருப்பினும் அதனை நூலியல் பார்வையில் கருத்தூன்றிப் பார்த்தால், நூலகங்களின் தலைப்புப் பட்டியலில் இரு பதிப்புகளும் அருகருகே இடம்பெற இயலாது போய்விட்டதை உணர்ந்துகொள்ளமுடியும்.

'களம் தந்த களங்கம்: குருநகர் கலைமாட்சி' என்ற தலைப்பிலான நூல், ஒரு நூலுக்குத் தலைப்பிடுதல் பற்றிய ஆழமான திட்டமிடும் தேவையை வலியுறுத்தும் மற்றொரு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இந்நூல், இரு வெவ்வேறு விடயங்களை உள்ளடக்கியது. நூலில் 'களம் தந்த களங்கம்' என்ற தென்மோடி நாட்டுக்கூத்து முதலாவதாக இடம்பெறுகின்றது. அமரர் சாந்தியோகு என்பவரால் 1856-ல் எழுதி மேடையேற்றப்பட்ட சந்தியோகுமையோர் படைவெட்டு என்ற கூத்தினை அடியொற்றி பின்னாளில் ஜேம்ஸ் அவர்களால் 1972-ல் படைவெட்டு என்ற கூத்து மேடையேற்றப்பட்டது. படைவெட்டுக் கதையின் ஆரம்ப நிகழ்வுகளில் சில மாற்றங்களைப் புகுத்தி களம் தந்த களங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக இந்நூலில் இடம்பெறுவது 'குருநகர் கலைமாட்சி' என்ற கட்டுரையாகும். இதில் குருநகர் பிரதேசத்தின் கலை, இலக்கிய, நாடக, நாட்டுக்கூத்து பற்றிய முக்கிய தரவுகள் சேகரித்துத் தரப்பட்டுள்ளன. வெளியீடு கண்ட நூல்கள், மலர்கள் மற்றும் பிற இலக்கியங்கள், அம்மண்ணில் அமைந்திருந்த மன்றங்கள், வாழ்ந்திருந்த நாடக எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், அண்ணாவிகள், அம்மண்ணின் நாட்டுக்கூத்துச் சிறப்பு, எழுதப்பட்ட கூத்துக்கள் என பல்வேறு தகவல்கள் ஒன்பது அத்தியாயங்களில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன. உண்மையில் இருவேறு நூல்களாக வெளியிடப்பட்டிருக்கவேண்டிய இந்நூலை இரண்டு தலைப்புகளையும் இணைத்ததாக ஆசிரியர் ஒரே நூலாக வெளியிட்டிருக்கிறார். நூலின் பெயர் களம் தந்த களங்கமா அல்லது குருநகர் கலைமாட்சியா என்ற சிக்கலை எமக்கு மேற்குறிப்பிட்ட நூலின் தலைப்பு தேடித்தந்துள்ளது. 2003-ல் வெளிவந்த இந்நூல் பற்றிய குறிப்புகளை நாட்டாரியல் வல்லுநர்கள் இன்றளவில் வெளிவந்த வெவ்வேறு ஆய்வுகளிலும் இருவேறு பெயர்களிலும் பதிவுசெய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய நிலையில், களம்தந்த களங்கமும் குருநகர் கலைமாட்சியும் இருவேறு நூல்கள் என்ற மாயையைத் தோற்றுவிக்கவும் தயங்கவில்லை.

(இன்னும் வரும்)



selvarajah.n@thaiveedu.com

# தமிழ்ப் பின்-நவீனத்துவத்தின் விரிதளம்

**- ஜிஃப்ரி ஹாசன்**

தமிழில் நவீனத்துவ, யதார்த்தவாத இலக்கியம் வலுவாகவுள்ள நிலையில் அதன் மீது படைப்பு மற்றும் சிந்தனைத் தளங்களில் தமிழ்ச் சூழலில் தாக்குதல்களைத் தொடுத்து வந்தவர்கள் நாகர்ஜுனன், ரமேஷ் பிரேம், எம்.ஜி. சுரேஸ்,தமிழவன், எம்.டி. முத்துக்குமாரசாமி, அ. மார்க்ஸ் போன்றோர். படைப்பு சார்ந்து நவீனத்துவ எல்லைகளை மீறிய படைப்பாளிகள் என்ற அளவில் இன்னும் பலரைக் குறிப்பிடலாம். கோணங்கி, சாரு நிவேதிதா, யுவன் சந்திரசேகர், விக்ரமாதித்த மாமல்லன், எஸ்.ரா என இப்பட்டியலை நீட்டிச் செல்லாம். இவர்களில் சிலர் சிறுகதை சார்ந்தும், சிலர் நாவல் சார்ந்தும் அதுவரை தமிழ் இலக்கியத்தின் பிரதான கதைகூறல் முறையாக இருந்த நவீனத்துவத்தின் எல்லைகளை மீறி புதிய சாத்தியங்களைப் பரிசோதித்துப் பார்த்தனர். வடிவம் சார்ந்தும், மொழி சார்ந்தும் இந்தப் புதிய பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கோணங்கி அதுவரை நவீன யதார்த்தவாத எழுத்து முறையில் புழக்கத்தில் இல்லாத ஒருவகைப் புதிய மொழியைத் தன் புனைவுகளில் முன்னிறுத்தினார். தமிழ் இலக்கியத்துக்கு அது ஒரு புதிய வருகை என்றளவில் கவனம் பெறுகிறது. அத்தகைய முயற்சிகளை நம் இலக்கியச் சூழலில் பலர் அங்கீகரிக்க மறுக்கலாம். ஆனால் இலக்கியம் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பதில்லை. பின்-நவீனப் படைப்புகளையும் சமகாலத் தமிழ் இலக்கியம் தன்னுள் ஒரு பகுதியாக, நவீனத்துவத்துக்குப் பிந்திய தமிழ் இலக்கியத்தின் ஒரு புதிய பரிமாணமாக உள்வாங்கித் தன் எல்லைகளை அகலத் திறந்துள்ளது.

பின்-நவீனப் படைப்புகள் சமூகப் பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து அவற்றைச் சாதாரண சனங்களின் மொழியில் முன்வைப்பதில்லை. நிஜமான கதாபாத்திரங்களைக் கொண்டு ஒரு மையக் கருவில் நின்று கதையை நகர்த்திச் செல்வதில்லை. கதைக்கான தொடக்கம், உச்சம், முடிவு என்ற நவீனத்துவ வரையறைகளை வேண்டுமென்றே மீறுகிறது. இதனால் இலக்கியம் குறித்த நவீனத்துவ வரையறையின்படி பின்-நவீன எழுத்துகளை இலக்கியமாக அங்கீகரிப்பதில் தயக்கம் ஏற்படுவது இயல்பானதுதான். ஆனால் இலக்கியம் என்பது ஓரிடத்தில் அசையாமல் தேங்கி நிற்கும் ஒரு பொருள் சார் பண்டமல்ல. அது ஒரு சமூக அசைவியக்கம். காலமாற்றத்துக்கேற்ப, சமூக மாற்றத்துக்கேற்ப தன்னளவிலும் மாற்றத்துக்குள்ளாகும் ஒரு பண்பாட்டுச் செயன்முறை. எனவே புனைக்கதை இலக்கியத்தில் புதிய மாற்றங்கள், பரிசோதனைகள் நிகழ்வதும், அங்கீகாரம் பெறுவதும் சாதாரணமானவை. இதுதான் இன்றைய எல்லா மொழி இலக்கியங்களினதும் தோற்றப்பாடாக இருக்கிறது.

உலகளவில் பார்த்தால் உண்மையிலேயே இந்த விடயம் இப்போது பழைய பேசுபொருளாகிவிட்டது. ஐரோப்பிய மற்றும் மேற்கத்தேய சூழலில் எண்பதுகள், தொன்னூறுகளிலேயே இந்த விவாதங்கள் அங்கு நடைபெற்று ஓய்ந்துவிட்டன. தமிழில் கூட இது பரவலான அங்கீகாரத்தைப் பெறாவிட்டாலும் 2000 காலப் பகுதியிலேயே அறிமுகமாகி பலத்த விவாதங்களைக் கிளப்பியது. இன்று தமிழுக்கும் இந்த விவாதப் பொருள் பழசுபட்டுவிட்டது. உலகளவில் இன்று பல்வேறு நோக்கங்களுக்காக இந்த வகை இலக்கியமே முன்னிறுத்தப்படும் - மேம்படுத்தப்படும் ஒரு சூழல் நிலவுகிறது. இலக்கியத்துக்கான நோபல் விருது உள்ளிட்ட உலகின் மிக முக்கிய இலக்கிய விருதுகள் இந்த வகைப் படைப்புகளுக்கே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.

நவீனத்துவ கதைகூறல் முறையில் மீறலை நிகழ்த்திக் காட்டிய, ஒரு மையக்கதையில் சுழலாது சிதறுண்ட சம்பவங்களின் கோர்வையாகப் படைப்பை முன்வைக்கும் இந்தப் புதிய போக்குகள் தமிழில் உச்சளவில் வெளிப்படவில்லை என்பதும் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய பக்கமாகவுள்ளது. இதனால் தமிழ் பின்-நவீனப் படைப்புகள் எனக் கருதப்படும் படைப்புகள் பின்-நவீனத் தன்மைசார்ந்து முழுமை பெறாத ஒருவகை மேலோட்டமான படைப்புகளாகவே உள்ளன. இந்தத் தளத்தில் இயங்கும் நமது படைப்பாளிகள் முக்கிய பின்நவீனக் கோட்பாட்டாளரான இஹாப் ஹாஸனின் பின்-நவீனக் கோட்பாடுகளும், அது தொடர்பான அவரது ஆய்வுக் கருத்துகளும் குறித்த ஒரு பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்வது அவர்களது படைப்புகளை மேலும் கூர்மையடையச் செய்யும். இவரது பின்-நவீனத்துவச் சிந்தனைகள், ஆய்வுகள் குறித்து தமிழ்ச் சூழலில் ஓர் ஆழ்ந்த மௌனமே நிலவி வருகிறது. எம்.ஜி. சுரேஷின் பின்-நவீனத்துவம் என்றால் என்ன? என்ற நூலில் மட்டுமே அவருக்கு ஒரு சிறு இடம் வழங்கப்பட்டது.

தமிழ்ச் சூழலில் பின்-நவீனப் படைப்புகள் எந்தளவு வெளி வந்துள்ளன என அறிந்துகொள்ளவும் அது தொடர்பான ஒரு வாசகக் கருத்துநிலையை உருவாக்கிக் கொள்ளவும் இவர் போன்ற பின்-நவீனக் கோட்பாட்டாளர்களின் சிந்தனைகள் பற்றிய அறிமுகமும் உரையாடலும் தமிழ்ச் சூழலுக்கு மிக வும் அவசியமாகின்றன.

50-க்கு மேற்பட்ட புத்தகங்களையும், 300-க்கு மேற்பட்ட கட்டு ரைகளையும் எழுதிய உலகின் மிக முக்கிய பின்-நவீனக் கோட்பாட்டாளர் பேராசிரியர் இஹாப் ஹாஸன். பின்நவீனத் துவம் குறித்த ‘Dismemberment of Orpheus’, ‘the postmodern turn: essays in postmodern theory and culture’, ‘from postmodernism to postmodernity’, ‘toward concept of postmodernism’ போன்ற இவரது கட்டுரைகள் சமகால பின்ந வீன சிந்தனையில் மிகவும் தாக்கமிக்கவையாகவும், மிக முக் கியமான திருப்பங்களை ஏற்படுத்திய கட்டுரைகளாகவும் கரு தப்படுவன.

பின்-நவீனத்துவம் முன்வைக்கும் மிக முக்கிய கதையாடல்க ளையும், அதன் தன்மைகளையும் சரியானதொரு அர்த்தத் தில் விபரிப்பதில் இஹாப் ஹாஸன் பெரியளவில் பங்களிப் புச் செய்திருக்கிறார். இவரது விமர்சன எழுத்துகள் மற்றும் கட்டுரைகள் இலக்கிய கலாசாரத்திலும், கோட்பாட்டிலும் ஒரு பெருந்தாக்கத்தை உண்டுபண்ணின.

பின்-நவீன இலக்கியத்தின் தன்மைகளை நவீனத்துவத்தோடு ஒப்பிட்டு முதன் முதலில் சிறப்பாக வேறுபடுத்திக் காட்டியவர் இஹாப் ஹாஸன்தான். ரொபர்ட் ஸ்டோர் போன்ற சிந்தனை யாளர்கள் கூட பின்-நவீனம் என்ற பதம் எப்போதும் தங்க ளைக் குழப்பும் ஒன்றாக இருப்பதாக அறிவித்திருந்த நிலை யில் இஹாப் ஹாஸன் அதனைத் தெளிவுபடுத்திக் காட்டி னார்.

‘நான் இந்தச் சொல்லுடன் மிகவும் பிணைந்திருந்து புதிய தோற்றப்பாடான அந்த இயக்கத்தைத் தெளிவுபடுத்த முயற் சித்தேன் என்று ஊகிக்கிறேன்’ என தன் பின்-நவீனக் கோட் பாட்டுக்கான தனது பங்களிப்பைப் பற்றி இஹாப் ஹாஸன் தனது நேர்காணலொன்றில் குறிப்பிடுவார்.

இஹாப் ஹாஸன் உருவாக்கிய நவீனத்துவத்துக்கும், பின்-நவீனத்துவத்துக்குமிடையிலான வித்தியாசங்களைத் தெளி வாக முன்வைக்கும் இரட்டை எதிர்நிலை அட்டவணை மிக வும் புகழ்பெற்றது. அதுவரை எல்லோரையும் குழப்பிக் கொண்டிருந்த பின்-நவீனக்கருத்தியலின் சரியான தன் மையை முதன் முதலில் இந்த அட்டவணையில் இஹாப் ஹாஸன் வரையறுத்தார். இதனால் அந்த அட்டவணை லிண்டா ஹட்சன் போன்ற உலகின் மிக முக்கிய விமர்சகர்க ளாலேயே அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இக்கட்டுரை பல மறுபதிப்புகளைக் கண்டது.


‘நவீனத்துவத்திற்கும், பின்-நவீனத்துவத்துக்குமிடையிலான வித்தியாசங்களைப் பட்டியலிட்டிருந்த இரண்டு செங்குத்து வரிசையில் சில பக்கங்கள் அடிக்கடி மறுபதிப்புச் செய்யப் பட்டன’ என்று இஹாப் ஹாஸனே தனது நேர்காணலொன்றில் அவரது இரட்டை எதிர்நிலை அட்டவணைக்குக் கிடைத்த பர வலான அங்கீகாரம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இதுதான் அந்த அட்டவணை:

| நவீனத்துவம் | பின்நவீனத்துவம் |
|---|---|
| புனைவுவாதம்/ குறியீட்டுவாதம் | டாடாயிசம் (கலை வேடிக்கை வாதம்) |
| உருவம் (மூடிய நிலை) | எதிர்-உருவம் (திறந்த நிலை) |
| நோக்கம் | விளையாட்டு |
| வடிவமைப்பு | சந்தர்ப்பம் |
| அடுக்கு நிலை | குலைத்துவிடல் |
| தேர்ச்சித் திறன் | சோர்வுநிலை |
| கலை புறவயமானது/ முற்றுப்பெற்ற | தொடர்செயல்/ நிகழ்த்துகை ஆக்கம் |
| படைப்பு/ ஒட்டுமொத்தப்படுத்தல் | சிதைவு/ கட்டுடைப்பு |
| ஒன்றிணைவு | முரண்படல் |
| இருப்பு | இன்மை |
| மையப்படுத்தல் | சிதறடித்தல் |
| வகைமை/ எல்லைப்படுத்தப்பட்டது | பிரதி பரஸ்பரம் சார்ந்திருத்தல் |
| பொருண்மை சார்ந்தது | அலங்காரமானது |
| உருவகம் | ஆகுபெயர் |
| விருப்பத் தேர்வு | பலவற்றின் கலவை |
| வேர்/ஆழம் | மேல்பரப்பு |
| விளக்கவுரை/ வாசிப்பு | எதிர்-விளக்கவுரை |
| குறிப்பீடு | குறிப்பான் |
| கதையாடல் | எதிர்க்கதையாடல் |
| தேர்ச்சியான சொற்கோவை | சாதார்ணமாக புழங்கும் சொற்கள் |
| அறிகுறி | விளைவு |
| பௌதீக அதீதம் | முரண்நகை |
| உறுதிப்பாடு | உறுதியற்ற தன்மை |

அவர் உருவாக்கிய இந்த இரட்டை எதிர்நிலை அட்டவணை நவீனத்துவத்துக்கும், பின்-நவீனத்துவத்துக்குமிடையிலான வேறுபாட்டினைத் தெளிவாக முன்வைப்பதோடு எது பின்-நவீன இலக்கியம் என்பதை ஒரு வாசகர் இலகுவில் அடையா ளம் கண்டுகொள்வதற்கும், ஓர் எழுத்தாளர் பின்-நவீனப் பிர திகளை உருவாக்குவதற்கும் அது மிகவும் உதவியாக அமைந்திருக்கிறது. இந்த அட்டவணையில் பின்-நவீனத்து வப் பண்புகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை தமிழ்ச் சூழலில் ரமேஷ் பிரேம், தமிழவன், எம்.ஜி. சுரேஷ், எம்.டி. முத்துக்குமா-ரசாமி, யுவன் சந்திரசேகர் போன்றவர்களின் புனைவெழுத்து களில் வெளிப்பட்டிருந்தது.

இந்த இரட்டை எதிர்நிலை அட்டவணை மொழியியல், இலக் கியக் கோட்பாடு, தத்துவம், மானுடவியல், உளப்பகுப் பாய்வு, அரசியல், விஞ்ஞானம் மற்றும் இறையியல் போன்ற துறைகளிலும் கூடக் கவனப்படுத்தப்பட்டு வருகிறது.



பின்-நவீனத்துவக் கோட்பாடுகளை மேலும் மக்கள்மயப்ப டுத்துவதில் அக்கறை எடுத்துக்கொண்ட இஹாப் ஹாஸன் புதிய சொற்களை உருவாக்கவும் செய்தார்.


'ஒரு தடவை பின்-நவீனத்துவத்தின் சிறப்பியல்புகள் அல்லது தூண்டு விசை அல்லது பாணி பற்றி விபரிக்கும் போது நான் indeterminance (உறுதியற்ற தன்மை) எனும் சொல்லை உரு வாக்கினேன். இது ஒரு போதாமையான விபரணமாகவே இருந்தது. ஏனெனில், பூகோள அரசியல் சூழலில், பின்-நவீ னத்துவமானது மேற்கத்தியக் கலாசாரங்களில் மட்டுமன்றி, ஒவ்வொரு வகையினதும் (கலாசாரத்தினதும்) மையங்களுக் கும் விளிம்புகளுக்கும், விளிம்புகளுக்கும் விளிம்புகளுக்கும், மையங்களுக்கும் மையங்களுக்கும், இன்மைகளுக்கும் இன் மைகளுக்குமிடையிலான புதிய உறவுகளிலும் தொடர்புபட் டது. இது உலகமயமாக்கல் / உள்ளூர்மயமாக்கலின் சிக்க லான மற்றும் புதிய சொற்றொடரியல் ஆகும்.' என்று அவர் தனது நேர்காணலொன்றில் குறிப்பிடுகிறார். பின்-நவீனத்து வத்தின் இயல்பு பற்றி விபரிக்கும் போது அவர் உருவாக்கிய indeterminance எனும் சொல் ஆங்கிலத்திற்கு ஒரு புதிய வர வாகவும், பின்-நவீனக் கோட்பாட்டின் மைய ஆன்மாவையே விபரித்து விடுவதாகவும் இருந்தது.

பின்-நவீனத்துவம் குறித்து விபரிக்கையில் இஹாப் ஹாஸன் உருவாக்கிய இந்த indeterminancy எனும் பதமானது பின்-நவீனக் கோட்பாட்டின் முக்கிய போக்குகளான நிச்சயமற்ற அர்த்தம்(ambiguity), தொடரறு நிலை(discontinuity), பன் மைத்துவம்(pluralism), தற்செயல் தன்மை(randomness), கல கம் (revolt), நெறிபிறழ்வு(perversion), சிதைவாக்கம் (deformation) போன்றவற்றுக்கு ஒரு கருத்தியல் வலுவை வழங்கி யது.

அநேகமாகத் தமிழ்ச் சூழலில் பின்-நவீனப் படைப்பாளிக ளின் புனைவெழுத்துகளில் இந்தக் குணாம்சங்கள் சில படைப்புகளில் ஓரளவும், சில படைப்புகளில் முழுமையாக வும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டுரைகூட பின் நவீனம் குறித்த அவரது முழுக் கருத்தியலையும் கவனத்திற் கொள்ளவில்லை என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.பின்-நவீனக் கோட்பாட்டுக்கான இஹாப் ஹாஸனின் முழுமையான பங்களிப்புக்காகவே அவரது மரணத்தை ஒட்டி இரங்கல் செய்தி வெளியிட்ட nytimes.org எனும் இணையத் தளம் 'Father of postmodernism dies at 89' என இரங்கல் குறிப்பு வெளியிட்டது.

தமிழில் இன்று பரவலடைந்திருக்கும் இந்தப் புதிய வகை இலக்கிய முயற்சிகளுக்குக் கோட்பாட்டுப் பின்புலத்தையும், வரையறையையும் இஹாப் ஹாஸன் வழங்கியிருக்கிறார். வெகுஜன மலின எழுத்துகள் அதிகமும் மலிந்துவிட்ட தமிழ்ச் சூழலில் அதனைப் பலர் அங்கீகரித்தாலும் கூட இலக்கியம் அதை ஏற்றுக் கொள்வதில்லை.

அதேநேரம், தமிழ் தீவிர இலக்கியத்தின் இந்தவகைப் புதிய எழுத்துகள் பலராலும் மறுக்கப்பட்டாலும் அது இன்று இலக் கியத்தில் வலுவாக ஊன்றிவிட்டது. இன்றைய தமிழ் இலக்கி யத்தில் நின்று நிலைத்துவிட்ட இலக்கியப் போக்காகவும் அது மாறிவிட்டது. எனவே, நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு களுக்கப்பால் இன்று இலக்கியம் இந்தப் புதிய வகை எழுத் துகளையும் அங்கீகரித்துவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.



jiffry.hassan@thaiveedu.com




இயற்கைச் செல்வம் குவிந்து கிடக்கும் ஓர் அற்புதமான நாடுதான் பப்புவா நியூ கினியா. தங்கமும் வெள்ளியும் செப்பும் இந்நாட்டில் பொதிந்து கிடக்கிறது. அது போலவே, வனாந்தரங்களும் பரந்து விரிந்திருக்கிறது. இந்நாட்டை 'பசுபிக் சொர்க்கம்' என்றும் 'அலாவுதீனின் குகை' என்றும் கூட அறிஞர்கள் சொல்வர். அதனால், காப்பரேட் கம்பனிகள் இந் நிலத்தை எப்போதும் மோப்பம் பிடித்துக்கொண்டேயிருக்கும். இத்தனை வளம் மிக்க நாட்டில் 37 சதவீதமான மக்கள்



வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என்று சொன்னால் பலருக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆச்சரியமாகவே இருந்தாலும் கசப்பான உண்மை இதுதான். ஏனெனில், தோண்டியெடுக்கப்படும் பெறுமதிமிக்க பொக்கிசங்களும், வெட்டிச் சாய்க்கப்படுகின்ற பெருத்த விருட்சங்களும் இம்மக்களை வறியவர்களாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த வஞ்சகக் கதையைத் தான் நாம் ஆராயப் போகிறோம்.

பப்புவா நியூ கினியா ஓசானியாவிலுள்ள (பெருங்கடலிட நாடுகளிலுள்ள) நியூ கினியாத் தீவின் கிழக்கு அரைவாசியையும் (மேற்கு அரைவாசி இந்தோனேசியாவின் ஆளுகைக்குட்பட்ட மேற்கு பப்புவா மற்றும் இரியன் ஜெயா மாகாணங்களைக் கொண்டது) மற்றும் பல தீவுகளையும் கொண்டது. இங்கு 850-இற்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடிய பூர்வ குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு சராசரியாக 540 சதுரக் கிலோ மீட்டருக்கு ஒரு மொழி பேசக்கூடிய சமூகம் வசிக்கிறது. 8200 பேருக்கு ஒரு மொழி இருக்கிறது. சில இடங்களில் 5 கிலோ மீட்டர் பரப்பளவில் 2000 மக்கள் மட்டும் தனித்த மொழியைப் பேசுகின்றனர். அத்தோடு, இந்நாட்டின் மொத்த சனத்தொகை 70 இலட்சம் ஆகும். இதனால் பப்புவா நியூ கினியாவை ஆயிரம் கலாசாரம் கொண்ட நாடு என்றும் வர்ணிக்கின்றனர். இந் நாடு ஏறக்குறைய 462,840 சதுர கிலோமீட்டர்கள் பரப்பளவு கொண்டது. இதில் 600 தீவுகளும் அடங்கும்.

ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து வந்துக்கொண்டிருந்த ஆதிமனிதர்கள் ஏறக்குறைய 50,000 - 60,000 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு குடியேறியுள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மண்ணுக்குச் சொந்தமான இந்த மூத்த குடிகளின் வழித்தோன்றல்களே இன்றைய பழங்குடிச் சமூகங்கள் ஆகும். ஆனால், காடுகளுக்குள் குடித்தனம் நடத்திய மற்றும் காட்டையண்டிய கிராமங்களில் வசித்த இம் மக்கள் இங்கிருந்து தந்திரமாகவும், சிலசமயம் வலுக்கட்டாயமாகவும் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தற்போது இந்நாட்டின் முக்கால்வாசி நிலங்களைக் கார்பரேட் கம்பனிகள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. நாட்டின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 3 சதவீதம் மட்டுமே பொதுவுடமையாக மிச்சப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பப்புவா நியூ கினியாவின் மக்கள் தொகையில் 83 சதவீதம் பேர் கிராமப் புறங்களில் வாழ்கின்றனர். பெரும்பாலும் நிலம், வனாந்திரம், ஆறுகள், அருவிகள் என்று இயற்கை வளங்களுடன் நெருக்கமான உறவினைப் பேணும் இப்பழங்குடி மக்கள் சிறியளவிலான விவசாயம், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும் உணவு சேகரித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய வாழ்க்கை முறையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் காடுகளையே நம்பியிருக்கின்றனர்.

ஆனால், தனியார் கம்பனிகள் இந்த வனாந்திரங்களைப் பழங்குடிச் சமூகங்களிடமிருந்து பறித்துக் கொள்கின்றன. அரசாங்கமும் இதற்கு உடந்தையாகக் காடுகளைக் குத்தகைக்கு விடுவதில் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது. கார்பரேட்டுக்கள் ஆக்கிரமித்த நிலங்களில் இன்று தங்கம், வெள்ளி மற்றும் செப்புச் சுரங்கங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. பிரமாண்டமான காட்டு மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டு



அயல்நாடுகளுக்கு விற்கப்படுகின்றன. அது போலவே, வன விலங்குகளும் விற்பனை செய்யப்படுகின்றன. விவசாய நிலங்களும், செம்பனைத் தோட்டங்களும் விரிவுபடுத்தப்படு கின்றன. வர்த்தகப் போக்குவரத்திற்காக மிக நீண்ட நெடுஞ் சாலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. இவ்வாறான காரணங்க ளால் பப்புவா நியூ கினியாவின் வனப் போர்வை வேகமாக அழிந்து வருகிறது. அதனால், இவை பற்றி விலாவாரியாக ஆராய வேண்டியது மிக அவசியமானது.

உலகின் நிலப்பரப்பில் பப்புவா நியூ கினியா என்பது வெறும் 1 சதவீதம் மாத்திரமே. ஆனால், இங்கு உலகின் பல்லுயிரிய லில் 7 சதவீதத்துக்கும் அதிகமானவை உள்ளன. அத்தோடு, அமேசான் மற்றும் காங்கோ வனாந்திரங்களை அடுத்து, உல கின் மூன்றாவது மிகப் பெரிய மழைக்காடு பப்புவா நியூ கினி யாவில்தான் உள்ளது. இங்கு 18,894 தாவர இனங்கள், 719 பறவைகள், 271 பாலூட்டிகள், 227 ஊர்வன, 266 நீர்வீழ்ச்சி உயிரினங்கள் மற்றும் 3000 வகையான Reef fishes இனங் கள் உள்ளன.

அதுமட்டுமன்றித், தனித்துவமான மரக் கங்காரு (Tree-kangaroo), இராட்சதப் புறாக்கள் (giant pigeons), வீட்டுப் பூனை களை விடப் பெரிய எலிகள், எறும்பு தின்னியைப் போன்று நீண்ட மூக்கினைக் கொண்ட Long-beaked echidna, பிடோ-ஹுய் என்ற (pitohui) இறக்கையில் விசம் கொண்ட பறவை மற்றும் வண்ணமயமான தோகை கொண்ட இரகினா சொர்க் கப் பறவை (Raggiana Bird-of-paradise) போன்றன உண்டு. இந்த இரகினாச் சொர்க்கப் பறவை பப்புவா நியூ கினியின் தேசியப் பறவை ஆகும். அந்நாட்டின் தேசியச் சின்னமாக வும், அந்நாட்டின் தேசியக் கொடியிலும் இது இடம் பிடித்துள் ளது.

அதுமட்டுமன்றி, இங்கு வாழ்கின்ற 30 சதவீதமான உயிரினங் கள் பூமியில் வேறெங்கும் கிடையாது. 'உலகின் பெரும்பா லான இடங்களில் நாம் காணும் உயிரினங்களைவிட அதிக மானவை பப்புவா நியூ கினியாவிலுள்ளன' என 35 ஆண்டுக ளுக்கும் மேலாக இந்தக் காடுகளின் சூழலியல் பற்றி ஆய்வு செய்த அவுஸ்திரேலியாவிலுள்ள ஜேம்ஸ் குக் பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த நிலப்பரப்புச் சூழலியல் நிபுணர் வில்லியம் லாரன்ஸ் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாது, இந்த மழைக் காடு பட்டாம்பூச்சியின் ஒரே அறியப்பட்ட வீடு என்றும், இராணி அலெக்ஸாண்ட்ராவின் பறவைப் பட்டாம்பூச்சிகள் Queen Alexandra's birdwing இங்கு ஏராளம் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இங்கு வாழும் பழங்குடி மக்களும் கூடத் தலைமுறை தலை முறையாக இக்காடுகளையே நம்பி வாழ்கின்றனர். இறைச் சித் தேவைக்காக விலங்குகளை வேட்டையாடுதல், கிழங்கு, சாமை மற்றும் பிற வாழ்வாதாரப் பயிர்களைப் பயிர்செய்து வனத்தோட்டங்களை அமைத்தல் போன்ற சீவனோபாயத்தில் ஈடுபடுகின்றனர். காகித மல்பெரி (Paper mulberry) மரத்தின் பட்டை உட்பட விறகு மற்றும் ஏனைய வன வளங்களையும் சேகரிக்கின்றனர். இவற்றைக் கொண்டு பட்டைத் துணிகளை யும் தயாரிக்கின்றனர். இவ்வாறான சிறப்புமிக்க, பெறுமதி மிக்க, பாதுகாக்கப்பட வேண்டிய இடத்தில்தான் பப்புவா நியூ கினிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் கார்பரேட் கம்பனி கள் காட்டு மரங்களைச் சரித்துவருகின்றன.

ஐரோப்பியர் மற்றும் ஜப்பானியரிடம் இந்நாடு அடிமையான தன் பின்னர்தான் காடழிப்பும் உக்கிரம் கண்டது. (1975-ல் பப் புவா நியூ கினியா சுதந்திரம் பெறும் வரை பிரிட்டிஷ் வசம் இருந்தது.) குறிப்பாக, இங்கு முன்னெடுக்கப்படுகின்ற வரம் பற்ற வெட்டுமரக் கைத்தொழில் வர்த்தகமே காடுகளை அம் மணமாக்கிக் கொண்டிருக்கின்றது. வெட்டுமரக் கைத்தொழி லானது காப்பரேட் கம்பனிகளுக்கு இலாபத்தைக் கொட்டிக் கொடுப்பதால் ஊழல் பேர்வழி அரசாங்கமோ மரவேட்டைக்கு இடங்கொடுத்திருக்கிறது. அகலத் திறக்கப்பட்டுள்ள கதவு கள் வழியே வனாந்திரங்களுக்குள் புகுந்த காப்பரேட் கம்பனி கள் பூர்வக் காடுகளை மொட்டையடித்திருக்கின்றன. விவசா யம் மற்றும் சுரங்கக் கைத்தொழிலுக்காகவும் காடுகள் துப்பர வாக்கப்படுகின்றன. இதன் விளைவாக, ஒரு காலத்தில் ஹார்ன்பில்களின் கூக்குரல்களும், சிக்காடாக்களின் பாடல்க ளும் எதிரொலித்த பப்புவா நியூ கினியாவின் வனாந்திரம் இப் போது இடைவிடாத மரக்கட்டைகளின் ஓசையையும், விழும் மரங்களின் உரத்த சத்தத்தையும் தாங்குகின்றன.

1972 முதல் 2002 ஆண்டுகளில் பப்புவா நியூ கினியாவில் வன நிலத்தின் சதவீதம் 82% இலிருந்து 71% ஆகக் குறைந் துள்ளது. 1972 மற்றும் 2014-க்கு இடையில் மாத்திரம் 9 மில்லி யன் ஹெக்டேர் முதன்மைக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 2001 முதல் 2020 வரையிலான சமீபத்திய தசாப்தங்களில் பப் புவா நியூ கினியா 1.57 மெகா ஹெக்டேர் காடுகளை இழந் துள்ளது. 2000-ம் ஆண்டு தொடக்கம் மரங்களின் பரப்பில் 3.7 சதவீதம் குறைவடைந்திருக்கிறது. இது 1.15 ஜிகா டொன் காபனீரொட்சைட்டு உமிழ்வுக்குச் சமனாகும். வெட்டுமர ஏற்று மதி வியாபாரமே பப்புவா நியூ கினியா காடழிப்புக்கு முதன் மைக் காரணம் என்று சூழலியலாளர்கள் அடித்துக் கூறுகின்ற னர். நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் வெட்டுமர ஏற்றுமதி 70-90 சதவீதம் ஆகும். இது உலகில் மிக உயர்ந்த விகிதங்க ளில் ஒன்றாகும். வெட்டுமர ஏற்றுமதி வியாபாரத்தை மலே சியா மற்றும் அவுஸ்திரேலிய நிறுவனங்களே செய்து வரு கின்றன.

வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் குற்ற வளையங்களே பெரும் இலாபத்தை ஈட்டுகின்றன. பப்புவாவிலுள்ள உள்ளூர்ச் சமூ கங்கள் ஒரு கன மீட்டர் மெர்பாவ் மரத்தை 11 டொலருக்குப் பெறுகின்றன. ஆனால், சீனாவில் இதன் பெறுமதி 240 டொல ராக இருக்கிறது. அதனால் 300,000 கனமீட்டர் அதாவது, 600 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மெர்பாவ் மரம் ஒவ்வொரு மாதமும் இங்கிருந்து வெளியேற்றப்படுகிறது. அதேவேளை சாலை வலையமைப்பு விரிவாக்கல் திட்டங்கள் காடுகளை மேலும் துண்டு துண்டாகக் கூறு போட்டுள்ளது டன், வனவிலங்குகளின் பாதையிலும் குறுக்கிட்டுள்ளது. தவிர, வளங்களைச் சுரண்டுவதற்காக வனாந்திரங்களைத் திறக்க அச்சுறுத்துகின்றது. காடுகள் வழியே ஊர்ந்து செல் லும் 4000 கிலோமீட்டர் நெடுஞ்சாலைத் திட்டமானது பப்புவா நியூ கினியா பெரும் மரச் சுடுகாட்டையே உருவாக்கி வருகி றது. பல சந்தர்ப்பங்களில் வேட்டைக்காரர்கள் உள்ளூர் மற் றும் சர்வதேசச் சந்தைகளில் வர்த்தகம் செய்வதற்காகச் சொர்க்கத்தின் பறவைகள், காசோவரிகள் மற்றும் மார்சுபி யல்களைத் தேடுவதற்கு மரம் வெட்டுபவர்களால் திறக்கப் பட்ட இந்தச் சாலைகளைப் பயன்படுத்துகின்றனர்.



2003 மற்றும் 2011-க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 5 மில்லி யன் ஹெக்டேருக்கு அதிகமான நிலப்பகுதி முறையற்ற விதத் தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக 2012-ம் ஆண்டு வெளி யிடப்பட்ட பசுமை அமைதி அறிக்கையின் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. அதன்படி, 2011-ல் வனம்சார் ஏற்றுமதி 20 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. குறிப்பாக, மேரு எனப்படும் குயிலர் இன மரங்களே அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படு கின்றன. முக்கியமாக சீனா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுக்கே மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வரு கின்றன.

சமீபத்திய ஆண்டுகளில், மரம் வெட்டுதல் மற்றும் விவசாயத் தொழிலிலுள்ள மோசடி நடைமுறைகள் நாடு முழுவதும் பெரும் வன இழப்பை ஏற்படுத்தியுள்ளன. சட்டவிரோத வன

இவ்வாறு மரம் வெட்டுபவர்களால் வெட்டவெளியாக்கப்படும் காட்டுப் பகுதியை விவசாய நிலங்களாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் படுவேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. குறிப்பாக, செம்பனை உற்பத்தி பாரியளவில் மேற் கொள்ளப்படுகின்றன. இந்தோனேசியாவின் வனாந்தரங்கள் எவ்வாறு செம்பனைத் தோட்டங்களில் புதைக்கப்பட்டனவோ அதையொத்த கொடூர சம்பவமே எதிர்காலத்தில் பப்புவா நியூ கினியாவிலும் நிகழும். எனவே, இந்த அழிக்கும் பட லத்தை முடிவுக்குக் கொண்டுவந்தாக வேண்டும்.

காடுகளை அழிப்பதற்குக் கிராமங்களின் அங்கிகாரத்தை

நாடும் இடைத் தரகர்கள் பெருந்தொகையான உள்ளூர் மக்களைக் கவர்ந்திழுப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த மக்களுக்குப் பொருட்களைப் பகிர்ந்தளிப்பதோடு, பல்வேறு வாக்குறுதிகளும் வழங்கப்படுகின்றன. அதனால், பழங்குடிக் குழுக்களுக்கிடையில் மோதல்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறான மோதல் பழங்குடிச் சமூகத்தைக் காடுகளிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. அதுபோல, இடைத்தரகர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் பின்னாளில் நிறைவேற்றப்படுவதில்லை. அம்மக்களுக்கு ஒரு சில அரிசி மூட்டைகளும் ஒரு பாழடைந்த நிலப்பரப்பும் மட்டுமே எஞ்சுகின்றன.

அதனால், தந்திரமாக இவ்வாறு ஆக்கிரமிக்கப்படுகின்ற காடுகளைப் பாதுகாப்பதற்காக அல்லது இந்தச் சிக்கல்களைச் சமாளிப்பதற்குப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அவற்றைப் பிரகடனம் செய்வது சாலச் சிறந்ததாகும். ஆனால், பப்புவா நியூ கினியாவில் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் 3 சதவீதத்துக்கும் குறைவான நிலத்தையே கொண்டுள்ளது. இதில் அரசுக்குச் சொந்தமான ஒரு சதவீதமான பூங்காக்களும் அடங்கும். ஆனால், மரம் வெட்டுபவர்களால் வழங்கப்படுகின்ற அரசியல் நன்கொடைகள், அனுசரணைகள் காரணமாக ஊடகப் பரப்புரைகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

1989 பார்னெட் விசாரணை (1989 Barnett Inquiry) சில மரம் வெட்டும் நிறுவனங்கள் அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம் வழங்குவதையும், அரசியலில் அதிகாரம் செலுத்துவதையும் வெளிக்கொண்டு வந்தது. இவ்வாறு பப்புவா நியூ கினியாவில் ஊழல் மோசடி மலிந்து கிடப்பதால் மரம் வெட்டும் நிறுவனங்கள் மற்றும் கொள்ளையர்கள் தன்னம்பிக்கையுடன் கிராமப் புறங்களில் உலா வருகின்றனர். இதன்மூலம் மதிப்புமிக்க மரங்களை அணுகுவதற்கும், வெட்டுவதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும், சட்டங்களைப் புறக்கணிப்பதற்கும், வெட்டுமர வியாபாரத்தினூடாக ஆயுதங்களைக் கடத்துவதற்கும் இக்கும்பலுக்கு இடங்கிடைத்திருக்கிறது.

ஆனால், 2008-ல் தான் சட்டவிரோதமாக மரம் வெட்டுவதற்கு இலஞ்சம் கொடுக்கப்படுகின்ற விடயம் குறித்துப் பப்புவா நியூ கினியாவின் பாராளுமன்றத்திலும் பேசப்பட்டது. அதுவரையில், அமைதி காக்கப்பட்டது. வனத்துறை அமைச்சர் பெல்டன் நமா என்பவரே இது குறித்து உரையாற்றியிருந்தார். இதன்படி, பப்புவா நியூ கினியாவில் மர வியாபாரத்தை முன்னெடுக்கும் பிரதான நிறுவனமான மலேசிய மரக் கூட்டமைப்பு தமது சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதற்கான உரிமம் வழங்கப்பட்டதை நீதிமன்றில் ஒப்புக்கொண்டது. அத்துடன், கார்பரேட் கம்பனிகளின் பாரிய வரி ஏய்ப்பும் நிதி மோசடியும் வெளிப்படுத்தப்பட்டது.

சிறப்பு வேளாண்மை மற்றும் வணிகக் குத்தகைத் திட்டத்தின் பேரில் அநீதியான முறையில் நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதனால், பப்புவா நியூ கினியாவில் 15 மில்லியன் ஹெக்டேருக்கும் மேற்பட்ட பகுதி கார்பரேட் கம்பனிகளின் கைகளில் உள்ளது. பப்புவா நியூ கினியாவிலிருந்து 2010 முதல் ஒவ்வொரு வருடமும் 3 முதல் 4 மில்லியன் கனமீட்டர் மரக்கட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. வெறும் 10 ஆண்டுகளில் உலகச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் வெப்பமண்டல வெட்டு மரங்களின் ஏற்றுமதி இரட்டிப்பாகியுள்ளது. கடந்த தசாப்தங்களில் மிகப்பெரிய வெப்பமண்டல வெட்டுமர ஏற்றுமதியாளராகவிருந்த மலேசியாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு 2014-ல் பப்புவா நியூ கினியா முதலிடத்திற்கு வந்தது.

பிரமாண்டமான வெட்டுமரத் திருட்டு எனும் அறிக்கையில், பப்புவா நியூ கினியாவில் வரி ஏய்ப்பு மற்றும் சட்டவிரோதப் பதிவுகள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளன. பப்புவா நியூ கினியாவின் மிகப்பெரிய வெட்டுமர ஏற்றுமதியாளரான மலேசியன் ரிம்புனான் ஹஜாவ் (Malaysian Rimbunan Hijau - RH Group) நிறுவனத்தின் 16 துணை நிறுவனங்களின் செயற்பாடுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி, இந்நிறுவனங்கள் ஆறு ஆண்டுகளில் வெப்பமண்டல வெட்டுமரங்களின் ஏற்றுமதியை 40 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.



தொடர்ச்சியாக வருமான வரியை இக்கம்பனிகள் செலுத்தவில்லை என்றும் வெளிப்பட்டுள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் வெட்டுமரங்களின் ஏற்றுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டதற்கான காரணம் பப்புவா நியூ கினியாவில் சட்டவிரோதமாக வழங்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மற்றும் வணிகக் குத்தகைகளின் விளைவும் ஆகும். இந்நிலைமை, மேலும் 5.5 மில்லியன் ஹெக்டேர்க் காடுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது. 2014-ம் ஆண்டு அரசாங்கத்தின் எல்லாச் சட்டவிரோத ஒப்பந்தங்களும் இரத்து செய்யப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட போதிலும், இன்றுவரையும் சட்டவிரோத வெட்டுமரக் கைத்தொழிலை நிறுத்துவதற்கோ, அபகரிக்கப்பட்ட மக்களின் நிலத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கோ எவ்விதமான தீர்க்கமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அது போலவே, கனிம வளங்களைத் தோண்டியெடுக்கும் நடவடிக்கையும் காடழிப்பில் குறிப்பிட்டளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. 1970-இற்குப் பின்னர் கனிமம் பிரித்தெடுத்தல் பப்புவா நியூ கினியாவின் தேசிய பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. Ok Tedi சுரங்கம் (செப்பு-தங்கம்) மற்றும் ராமு நிக்கல்-கோபால்ட் சுரங்கம் (Ramu Nickel-Cobalt Mine) ஆகிய சுரங்கங்களைத் தவிர, பப்புவா நியூ கினியாவிலுள்ள எல்லாச் சுரங்கங்களும் தங்கச் சுரங்கங்களாகவே இருந்து வருகின்றன. எங்கா (Enga) மாகாணத்திலுள்ள Porgera தங்கச் சுரங்கம் மற்றும் புதிய அயர்லாந்து (New Ireland) மாகாணத்திலுள்ள Lihir தங்கச் சுரங்கம் ஆகிய இரண்டும் மிகப் பெரிய தங்கச் சுரங்கங்களாகும். 1970 தொடக்கம்

2007-ற்கிடையில் சுரங்கக் கைத்தொழில் மூலமாக ஏறக்குறைய 5 மில்லியன் டொன் செப்புப் பெறப்பட்டுள்ளன. பப்புவா நியூ கினியா 2002-ல் 211,315 டொன் செப்பையும், 2003-இல் 202,277 டொன் செப்பையும் உற்பத்தி செய்துள்ளது. ஓகே டெடிச் (Ok Tedi) சுரங்கம் சுறுசுறுப்பான சுரங்கம் ஆகும். இச்சுரங்கத்தில் 2003-ம் ஆண்டில் 68 சதவீதம் தங்கமும், 84 சதவீதம் செப்பும் வெட்டியெடுக்கப்பட்டுள்ளன.



2009-ல் மொரோப் (Morobe) மாகாணத்தில் மறைக்கப்பட்ட பள்ளத்தாக்கில் (Hidden Valley) தங்கம் மற்றும் வெள்ளிச் சுரங்கம் தோண்டப்பட்டது. எடி க்ரீக் (Eddy Creek) தங்கச் சுரங்கம் 1926-ல் கண்டுபிடிக்கப்பட்டது முதற்கொண்டு இயங்கிவருகிறது. உலகப் போருக்கு முன் பப்புவா நியூ கினியாவில் நடந்த தங்க ஓட்டங்களின் மையமாகவும் இது இருந்தது. இவ்வாறு தங்கம், செப்பு, வெள்ளிச் சுரங்கங்களைத் தோண்டுவதன் மூலம் ஏக்கர் கணக்கில் பப்புவா நியூ கினியாக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுரங்கக் கைத்தொழில் காரணமாக வெளியேற்றப்படும் கழிவுகளினால் வனாந்தரங்களும் நதிக் கரைகளும் மாசடைந்துள்ளன. இதுபற்றிப் பப்புவா நியூ கினியாவின் கிழக்குச் செபிக் மாகாணத்திலுள்ள கொரோகோ கிராமத்தைச் சேர்ந்த பெனி என்பவர் கூறுகையில், நீர் வழிகள் மீன் வளர்ப்புக்கும் தோட்டப் பயிர்ச்செய்கைக்கும் உதவுகின்றன. இப்பகுதி மக்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும், துவைப்பதற்குமான தண்ணீரைப் பெரும் நதிகளும் கிளை நதிகளுமே கொண்டு வருகின்றன. ஒழுங்கற்ற சுரங்கக் கைத்தொழில் காரணமாக நதிக் கரை மாசடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதுபோலப், பாரிய சுரங்கக் கைத்தொழிலின் தாக்கம் இச்சமூகத்தை நீண்டகாலமாகப் பாதிக்கும் என்றும் குறிப்பிடப்படுகிறது. 16,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் 90 சதவீதத்திற்கும் அதிகமான நிலப்பகுதி புனர்வாழ்வுக்குக் கூடக் கிடைக்காது என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. இது எதிர்காலத் தலைமுறைக்குச் செபிக் படுகை காடுகளில் லிச்சென்ஸ்டைன் (Liechtenstein) நாட்டின் அளவிலான துளையைத் திறம்பட விட்டுவிடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உலகத்தில் ஆறாவது சிறிய நாடான லிச்சென்ஸ்டைன் ஆஸ்திரியாவுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையிலுள்ள அல்ப்ஸ் மலைத் தொடரில் அமைந்துள்ள ஜெர்மன் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற ஒரு நாடாகும்.) ஆக, மக்களைப் பிச்சைக்காரர்களாக மாற்றி வருகின்ற இந்தச் சுரங்கக் கைத்தொழில், மக்களை நாதியற்றவர்களாகவும் உருமாற்றிக் கொண்டிருக்கிறது.

பப்புவா நியூ கினியாவில் காடுகள் தொடர்ந்து கட்டுக்கடங்காமல் அழிக்கப்பட்டு வருவதால் வன உயிரினங்களும், பழங்குடி மக்களும் வாழ்விடத்தை இழந்து வருவதுடன், எஞ்சியிருக்கின்ற சிறிய துண்டுக் காடுகளிலும் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், மக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதுடன், உயிரினங்களின் எண்ணிக்கையும் சடுதியாகக் குறைந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் மாத்திரம் வாழக்கூடிய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. அதுமட்டுமன்றி, வரட்சி நிலைமையும் ஏற்படுவதால், காட்டுத் தீ அபாயமும் நிலவுகிறது. அத்துடன், மரங்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதால் காபனீரொட்சைட்டு வாயுவை உறுஞ்சும் வீதமும் குறைவடைந்து வருகிறது. அதனால் வளி மாசடைவு துரிதப்படுத்தப்படுகிறது. தவிர, நீரியல் வட்டமும் பாதிப்படைந்திருக்கிறது. குறிப்பாகக், காடழிப்பின் காரணமாக மழைவீழ்ச்சி குறைவடைந்திருக்கிறது. அதனால் ஏற்படும் வரட்சி சுற்றுச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆகவே, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் காடுகளின் குறைப்பு மற்றும் சீரழிவுக்குப் பதிலளிப்பதற்கான நடவடிக்கைகளைக் கண்டறிவது உடனடிப் பிரச்சினையாகும். அத்தோடு, வனாந்தரங்களை அழித்து இயற்கை வளங்களை விற்றுத் தின்கின்ற கும்பலுக்கெதிராகவும் சர்வதேச மட்டத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், அங்குள்ள பழங்குடி மக்களுக்கு நியாயத்தையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுப்பதோடு, பப்புவா நியூ கினியாவின் மிக முக்கியமான வனப்பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தி வளைந்துகொடுக்காத சட்டத்தை அமுல்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும்.

**உசாத்துணை:**


- *பப்புவா நியூ கினியா: 1000 கலாசாரங்கள் கொண்ட நாடு - 'பசிபிக் சொர்க்கம்' எனப்படுவது ஏன்? - விகடன்*
- *FOREST RESOURCES IN PAPUA NEW GUINEA - https://www.timbertradeportal.com/*
- *Protecting the Forests of Papua New Guinea Japan's support for sustainable forest management*
- *Logging, road construction continue to fuel forest loss in Papua New Guinea - by Spoorthy Raman on 30 November 2023 - https://news.mongabay.com/*
- *Taking down the giants - Leaving a trail of destruction, logging companies now venture further than ever to meet booming timber demands; in fact, even as far as New Guinea. - https://wwf.panda.org/*
- *Logging Operations in Papua New Guinea - https://www.pngfa.gov.pg/index.php/projects/logging-and-resource*
- *Mining in New Guinea | WWF*
- *Mining may contribute to deforestation more than previously thought, report says - https://news.mongabay.com/2023/04/mining-may-contribute-to-deforestation-more-than-previously-thought-report-says/*




sathees.selvarajah@thaiveedu.com



# மாதவர்

த. ஜீவராஜ்

அடுத்து வந்த சில நாட்கள் ஆதினிக்கு மிக அமைதியாக நகர்ந்தது போல் இருந்தது. இரவு நேரங்களில் அறிவாட்டிப் பாட்டியும், முல்லையழகியும் பேசிக்கொள்வதிலிருந்து இது புயலுக்கு முந்திய அமைதி என்பதை மூவரும் புரிந்துகொண்டார்கள்.

எனக்கு என்னவோ ஆளப்பிறந்தாள் ஏதோ சூழ்ச்சி செய்யப் போகிறாள் என்று தோணுது. ஒவ்வொரு நாளும் திடீர் திடீரென்று நெஞ்சு படபடத்துக் கொள்ளுது என்றாள் முல்லையழகி.

எனக்கும் அதே பயம்தான். அவள் நினைத்திருந்தால் தண்டப் பணத்தைச் செலுத்தி விட்டுச் சும்மா இருந்திருக்கலாம். ஊரறிய நிறை நீரில் நின்று தேங்காய் வாங்குவது சதுர்வேதி மங்கலத்து மக்கள் எங்கள் மேல் கோபம் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இருக்கும் என்றாள் கவலையுடன் அறிவாட்டிப் பாட்டி. இவ்வாறான கலக்கம் நிறைந்த உரையாடல்களோடு சில இரவுகள் கழிந்து போனது.


அன்று அதிகாலை நேரம். திடீரென்று குதிரை வண்டிகளின் சத்தம் கேட்டு ஆதினி திடுக்கிட்டு எழுந்தாள். பதட்டத்தோடு அருகில் படுத்திருந்த கோதையையும், அவள் தாயையும் ஆதினி அவசரமாக எழுப்பினாள். அறிவாட்டிப் பாட்டியும், முல்லையழகிப் பாட்டியும் வெளியில் ஒரு படை வீரனுடன் கதைத்துக் கொண்டிருப்பது நிலவொளியில் தெளிவாக விளங்கியது.

பரபரப்போடு உள்ளே ஓடி வந்த முல்லையழகி இன்று அதிகாலையில் ஆளப்பிறந்தாளுக்குத் தண்டனையை நிறைவேற்றி இருக்கிறார்கள். கந்தளாய்க் குளத்தில கழுத்தளவு தண்ணீரில் தேங்காயைத் தலைக்கு மேலாகப் பிடித்துக் கொண்டு கொஞ்ச நேரம் ஆளப்பிறந்தாள் நின்றிருக்கிறாள். கரையில பாதுகாப்புக்குப் படை வீரர்கள் காவல் இருந்திருக்கிறார்கள். திடீரென்று என்ன நடந்ததென்று தெரியாதாம் ஆளப்பிறந்தாளைக் காணலையாம். படை வீரர்கள் சுழியோடித் தேடுகிறார்களாம். மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டிருந்த முல்லையழகிப் பாட்டிக்குத் தலை சுற்றியிருக்க வேண்டும். அருகிலிருந்த தூணைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அவளைப் பற்றிப் பிடிக்க ஓடிவந்த ஆதினியையும், கோதையையும் சைகையால் தடுத்த முல்லையழகி நங்கை சானி அம்மையார் உங்கள் எல்லோரையும் உடனே இந்தக் குதிரை வண்டியில திருக்கோணேச்சரத்திற்குப் போகச் சொல்லியிருக்கிறார். அவர் எல்லா ஏற்பாடையும் செய்துவிட்டாராம். பயப்படாமல் உடனடியாக வெளிக்கிடட்டாம் என்று அவசரப்படுத்தினாள் முல்லையழகி.

ஈரத்தோடு காய்ந்து கொண்டிருந்த துணிகளை அள்ளிப் போட்டு மூட்டையாகக் கட்டினாள் கோதையின் தாய். ஆதினியும், கோதையும் அவர்களுடைய உடமைகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். முற்றத்தில் இரண்டு குதிரை வண்டிகள் தயார் நிலையிலிருந்தது. ஒன்றில் கோதையும் தாயும் ஏறிக்கொண்டார்கள். மற்றையதில் அறிவாட்டியும் ஆதினியும் ஏறிக்கொண்டார்கள்.

முன்னும் பின்னும் நெல் மூட்டைகள் ஏற்றப்பட்டு பக்கவாட்டில் தென்னங்கிடுகினால் மறைக்கப்பட்டிருந்தது. அந்தக் குதிரை வண்டிகள்.

நெல் மூட்டைகளுக்கு நடுவில் குறுகிக்கொண்டு இருவரும் அமர்ந்து கொண்டார்கள். ஏறுவதற்கு முன் அறிவாட்டிப் பாட்டி முல்லையழகிப் பாட்டியிடம் ஏதோ காதுக்குள் இரகசியம் கூறிவிட்டு வந்ததை ஆதினி அவதானித்தாள். எத்தனையோ கனவுகளோடு கந்தளாய்க்கு வந்து சிறிது காலத்திலேயே பொழுது புலராத காலையில் யார் கண்ணிலும் படாமல் மறைக்கப்பட்ட வண்டியில் ஊரைவிட்டு ஓடுவது ஆதினிக்குக் கனவு போலிருந்தது. அறிவாட்டிப் பாட்டி பேசும் மன நிலையில் இல்லை என்பதை ஆதினி புரிந்து கொண்டாள். எனவே பயணம் மௌனமாகவே ஆரம்பித்தது. நங்கை சானி அம்மையாரின் கட்டளைப்படி குதிரை வண்டிகள் இரண்டும் வேகமாகச் செல்லத் தொடங்கியது. அவற்றிற்கு அருகில் பாதையின் இருபக்கமும் குதிரை வீரர்கள் முன்னும் பின்னு



மாகக் காவலுக்கு வருகிறார்கள் என்பதை அவர்களை ஏற்றி வரும் குதிரைகளின் காலடிச் சத்தங்கள் மூலம் ஆதினி ஊகித்துக் கொண்டாள்.

அவர்கள் கடந்து வந்த சதுர்வேதி மங்கலத்து வீதிகளில் எது வும் வித்தியாசமான விடையங்கள் தென்படவில்லை ஆத லால் ஊருக்குள் இன்னும் ஆளப்பிறந்தாள் பற்றிய செய்தி

எதுவும் தெரியவில்லை என்பதை ஆதினி புரிந்து கொண்டாள். ஆளப்பிறந்தாள் பாட்டிக்கு அறிவாட்டிப் பாட்டி மேல் அப்படி என்ன கோபம்? ஏன் இத்தனை துன்பம் கொடுக்கிறாள்? பேசாமல் தண்டப் பணத்தைக் கொடுத்துவிட்டு இருந்திருக்கலாம் இல்லையா? என்று பலவாறு சிந்தித்தவாறு இருந்த ஆதினிக்கு ஒருவேளை ஆளப்பிறந்தாள் குளத்து நீரில் மூழ்கி இறந்து விட்டிருப்பாளோ? என்ற எண்ணம் தோன்ற உடலெ ல்லாம் சிலிர்த்துப் போனது.

நேரம் மதியத்தை எட்டியிருக்கும் என்பதைச் சூரிய வெப்பம் நெல் மூட்டைகளுக்கு இடையில் ஏற்படுத்திய உஷ்ணம் உணர்த்தியது. குதிரை வண்டிகள் இரண்டினதும் வேகம் மெல்ல மெல்லக் குறைந்து வந்து ஒரு நிழலான இடத்தில் நின்றது. ஒரு வேளைக்காரப் படை வீரன் பின்பக்கமிருந்த நெல் மூட்டையை இறக்கி விட்டு நீங்கள் இறங்கலாம் அம்மா என்றான். ஏதோ ஒரு யோசனையில் இறங்காமல் அமர்ந்திருந்த அறிவாட்டிப் பாட்டிக்கு அருகில் வந்த அந்தப் படை வீரன் இந்த இடத்தில்தான் உங்களை இறக்கி விடச்சொல்லி எங்களுக்கு உத்தரவு என்றான் மெதுவாக.

அறிவாட்டி வண்டியை விட்டு இறங்கியவுடன் அவரது முக சாயலை ஒத்த பருத்த உருவமுடைய ஒரு ஆண்மகன் ஓடி வந்து அறிவாட்டியின் முன்னால் முழந்தாளிட்டு அவருடைய கால்களை வணங்கினார். அறிவாட்டி திடீரென வாய்விட்டு அழுதபடி அந்த நபரை ஆரத் தழுவிக் கொண்டாள். அதைத் தொடர்ந்து சற்றுத் தூரத்தில் நின்றிருந்த பெண் ஒருவர் அருகில் வந்து அறிவாட்டியின் கால்களை விழுந்து வணங்கினார். அவர் அந்த ஆணின் மனைவியாக இருக்கக்கூடும் என்று ஆதினி நினைத்துக் கொண்டாள்.

அறிவாட்டியுடன் நின்று கொண்டிருந்த ஆணும் பெண்ணும் தூரத்தில் ஒரு மரத்தின் மறைவில் ஒழிந்திருந்தபடி இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிறுபெண் பிள்ளையை கை காட்டி அழைத்தார்கள். அந்தச் சிறுமி தயங்கித் தயங்கி அறிவாட்டிப் பாட்டியை நோக்கி வந்தாள். அறிவாட்டிப் பாட்டி ஓடிச்சென்று ஒரு கோழி தன் சிறகுகளுக்குள் குஞ்சை அணைத்துக் கொள்வது போல அந்தச் சிறுமியை அணைத்துக் கொண்டாள். அந்தச் சிறுமியின் தாயும், தகப்பனும் அந்தக் காட்சியைக் கண்களில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இவர் அறிவாட்டியின் தம்பி மாதவர். இப்போது நீங்கள் நிற்கும் இடம் தம்பலகாமம் சந்தி. இங்கிருந்து மாட்டு வண்டியில் உங்களை அவர் திருக்கோணேச்சரத்திற்கு அழைத்துச் செல்வார். எல்லா ஏற்பாடுகளையும் நங்கை சானி அம்மையார் முன்கூட்டியே செய்துவிட்டார். நீங்கள் பயப்படத் தேவையில்லை வழியிலுள்ள எங்களுடைய காவலர் படை உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும். உங்களை இறக்கி விட்டவுடன் கந்தளாய்க்குத் திரும்பச் சொல்லி எங்களுக்கு உத்தரவு என்று கோதையின் தாயிடம் கூறினான் வேளைக்காரப் படை வீரன். அறிவாட்டிப் பாட்டியின் உணர்ச்சிபூர்வமான சந்தர்ப்பத்தைக் குழப்ப விரும்பாது தங்கள் இரு குதிரை வண்டிகளுடனும் கந்தளாயை நோக்கி வேளைக்காரப் படைவீரர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

நீண்ட காலம் தொடர்பில்லாமல் இருந்த இரு சகோதரர்கள் இணைந்து கொண்ட இனிமையான சந்தர்ப்பத்தைத் தூரத்தில் நின்றபடி கோதையும், தாயும், ஆதினியும் சந்தோசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தின் பின் அறிவாட்டிப் பாட்டிக்குத் தாங்கள் இருக்கும் சிக்கலான நிலை ஞாபகத்துக்கு வந்திருக்க வேண்டும். தனது தம்பி மாதவரையும், அவரது மனைவி, மகளையும் ஆதினிக்கும், கோதைக்கும், கோதையின் தாய்க்கும் அறிமுகப்படுத்தி வைத்தார் அறிவாட்டிப் பாட்டி. சின்னனில மாதவன், பெரிசாகி மாதவராகிட்டார் என்று ஆதினியைப் பார்த்துக் கொடுப்பிற்குள் சிரித்தபடி கூறினார் அறிவாட்டிப் பாட்டி.

தயங்கித் தயங்கி நின்ற மாதவரின் மகளை ஆதினியும், கோதையும் தங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். பெரியவர்கள் நால்வரும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். மதிய உணவினை அனைவரும் ஒன்றாக இருந்து அருந்தினார்கள். நீண்ட காலத்துக்குப் பிறகு தம்பலகாமம் சோறு தன் வயிற்றுக்குள் போகிறது என்று பரவசத்தோடு அறிவாட்டிப் பாட்டி சொல்லிக் கொண்டார். உணவருந்திய பின்னர் மாதவரின் மனைவி கொடுத்த இளநீரின் சுவை மிக அருமையாக இருந்தது. மாதவரின் மனைவி கொண்டு வந்திருந்த பழங்களையும், தின்பண்டங்களையும் வாங்கிக்கொண்டு திருக்கோணேச்சரத்தை நோக்கிப் புறப்பட நால்வரும் ஆயத்தமானார்கள். மாதவரின் மனைவியும், மகளும் நெல்லேற்றி வந்த வண்டிலொன்றில் ஊருக்குள் பயணப்பட்டார்கள்.

மாதவர் முகத்தில் நிறைந்த சந்தோசத்தையும், அறிவாட்டி பாட்டியின் முகத்தில் சாந்தத்தையும் ஆதினி அவதானித்தாள். வாழ்வில் நடந்த ஒரு சிறு சம்பவம் அந்த இரு சகோதரர்களையும் இத்தனை காலம் எப்படிப் பிரித்து வைத்து விட்டது என்று ஆதினி நினைத்த போது, அவளது சகோதரர்களின் நினைவும் தாயின் நினைவும் ஞாபகத்துக்கு வந்து கண்ணீரை வரவைத்தது. அறிவாட்டிப் பாட்டிக்குத் தான் செய்யக்கூடிய மிகப்பெரிய கைமாறாக அந்தப் பயணத்தை மாதவர் நினைத்திருக்கிறார் என்பதை அவரது ஒவ்வொரு செய்கைகளும் ஆதினிக்கு உணர்த்தியது. மதியத்துக்குப் பின்னராக ஆரம்பித்த பயணம் என்பதால் இரவு தொடங்குவதற்கு முன்னர் கப்பல் துறையைச் சென்றடைந்துவிட வேண்டும் என்பதில் மாதவர் மிகத் தெளிவாக இருந்தார்.



jeevarajah@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***




தங்கள் நாட்டுக்கு வெளியே பெருநிலப்பரப்பை வென்றெடுத்த சோழர்கள், அங்கெல்லாம் தங்கள் அதிகாரப் பரவலாக்கத்துக்காக தங்கள் பிரதிநிதிகளை நியமித்தனர். அவர்கள் அவ்வவ் நாடுகளில் அந்தந்த நாட்டு அரசனின் பெயருடன் 'சோழ' என்ற முன்னொட்டைச் சூடிக்கொண்டனர். உதாரணமாக பாண்டி நாட்டில் அமர்த்தப்பட்ட சோழப் பிரதிநிதி, 'சோழபாண்டியன்' எனப்பட்டான். சேரநாட்டில் அமர்த்தப்பட்டவன் 'சோழ கேரளன்' எனப்பட்டான். இவ்வாறு இலங்கைக்கு அமர்த்தப்பட்டவன் 'சோழ இலங்கேசுவரன்' எனப்பட்டான்.

இலங்கைக்கு 'இலங்கை' அல்லது 'லங்கா' என்ற பெயர் இந்தக் காலத்திலேயே பரவலாக வழக்கில் வந்தது. அதற்கு முன்னர் தமிழில் 'ஈழம்' என்றும் வடமொழியில் 'சிங்களம்' என்றுமே இலங்கைத்தீவு அறியப்பட்டு வந்தது. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நாயன்மாரும் ஆழ்வாரும், இராமாயணத்தில் குறிப்பிடப்பட்ட இராவணனின் இலங்கை 'ஈழம்' தான் என்பதை மீண்டும் மீண்டும் பாடியிருப்பதைக் காணலாம்.

எனவே சோழர் காலத்தில் இலங்கைத் தீவுக்கு அமர்த்தப்பட்ட அரச பிரதிநிதி 'சோழ இலங்கேசுவரன்' என்றானான். தான் ஆளும் நாட்டில் தன் பெயரில் கல்வெட்டுப் பொறிக்கவும் அவன் அதிகாரம் பெற்றிருந்தான். திருக்கோணமலையில் நிலவும் குளக்கோட்டு மகாராசா பற்றிய பல தொன்மங்கள் ஏதோவொரு சோழ இலங்கேசுவரனுடன் தொடர்பானவை என்று பேரா.சி. பத்மநாதன் கருதுகிறார். சோழ இலங்கேசுவரன் கல்வெட்டுகள் திருக்கோணமலைப் பகுதியிலேயே கிடைத்துள்ளதால், அவன் பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டிருந்தாலும், திருக்கோணமலையை துணைத் தலைநகராகக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது. திருக்கோணமலைத் துறைமுகத்தின் வணிக எழுச்சி, பொலனறுவை அரசின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணிகளுள் ஒன்றாகக் கருதப்படுவது இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது.

இலங்கையின் முதலாவது சோழ இலங்கேசுவரனாக, ஐந்தாம் மகிந்தனைச் சிறைப்பிடித்துச் சென்ற இராசேந்திரனின் படைத்தலைவன் சயங்கொண்ட சோழ மூவேந்த வேளானே கருதப்படுகிறான். பன்னிரண்டாம் நூற்றாண்டு மிகிந்தலை மகாகிரிந்தேகமக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் பிராமணர் குடியிருப்பான 'சயங்கொண்ட சலாமேக சதுர்வேதிமங்கலம்' அவன் பெயரிலேயே அமைக்கப்பட்டது என்பது கா. இந்திரபாலாவின் கருத்து.

சிங்கள மன்னர்கள் தங்கள் பட்டங்களாக சிறீசங்கபோதி, அபய சலாமேகன் ஆகிய இரண்டையும் மாறிமாறிச் சூடுவதுண்டு. சோழருக்கு முந்தைய கடைசிச் சிங்கள மன்னனான ஐந்தாம் மகிந்தன் 'சிறீ சங்கபோதி' எனும் பட்டத்தைச் சூடியிருந்தான். எனவே அடுத்த அரசனுக்குரிய பட்டம் 'அபய சலாமேகன்' என்பதாகும். அதற்கமைய ஐந்தாம் மகிந்தனுக்குப் பின்னர் இலங்கையில் முடிசூடி ஆண்டதால், சயங்கொண்ட சோழ மூவேந்தவேளான் 'சயங்கொண்ட சலாமேகன்' எனும் பட்டத்தைச் சூடிக்கொண்டான் என இந்திரபாலா அனுமானிப்பார். சயங்கொண்ட மூவேந்தவேளான் காலத்தில் அமைக்கப்பட்ட மிகிந்தலை சதுர்வேதிமங்கலம் நூறாண்டுகளுக்கும் மேலாக இயங்கிவந்திருக்க வேண்டும் என்பதையே மகாகிரிந்தேகம தமிழ்க் கல்வெட்டு சொல்கின்றது.

சயங்கொண்ட சலாமேகனுக்கு அடுத்த இரண்டாவது சோழ இலங்கேசுவரனாகக் கருதப்படுபவன் கந்தளாய்க் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'சங்கவர்மன் உடையார்'. சலாமேகனுக்கு அடுத்து மீண்டும் சிறீசங்கபோதி என்ற பெயரே சூட்டப்படவேண்டும் என்பதால், இவன் சங்கபோதிவர்மன் என்பதைச் சுருக்கி 'சங்கவர்மன்' என்று பெயர் சூடிக்கொண்டான் என்பர். இவனை முதலாம் இராசேந்திர சோழனின் நான்காம் மகனாகிய வீரராசேந்திரன் என்று இனங்காண்பார் ஆய்வாளர் சேதுராமன். திருக்கோணமலை மானாங்கேணிச் சாசனத்தின் சிதைந்த வரிகள் '...ரான உடையார்' என்றே ஆரம்பிப்பதால், அதையும் '[சங்கவர்ம]ரான உடையார்' என வாசித்து, அதைப் பொறித்தவனும் சோழ இலங்கேசுவரனே எனக் கொள்ளமுடியும்.

மானாங்கேணிச் சாசனத்தில் சோழ இலங்கேசுவர தேவரின் எட்டாம் ஆட்சியாண்டில் திருக்கோணமலையில் இருந்த மச்சகேசுவர மூலத்தானத்திற்கும் இன்னொரு ஈசுவரமுடையார் கோவிலுக்கும் வேளான் கணபதி என்பவனால் செய்யப்பட்ட ஏதோ திருப்பணி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்கோணேசுவரத்தின் மலையுச்சியில் மூன்று கோவில்கள் இருந்தன என்பது நம்பிக்கை. அவற்றை சிவன் கோவில், திருமால் கோவில், அம்மன் கோவில் என்று இனங்காண்பார்கள். அம்மன் கோவில் கலிங்க மாகோன் காலத்தில் (1215) அமைக்கப்பட்டது என்பது அண்மையில் கண்டறியப்பட்ட கிவுலக்கடவ

லைக் கல்வெட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

ஒருவேளை மானாங்கேணிச் சாசனம் சொல்லும் மச்சகேசுவர மூலத்தானமும் கோணேச்சரமுடையார் கோவிலும் தான் அங்கிருந்த வேறிரு ஆலயங்களா என்று சிந்திப்பது ஆர்வமூட்டுகிறது. ஒரே வளாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சிவாலயங்கள் அமைந்திருந்தமை சோழர் காலத்தில் இயல்பு என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

சோழ இலங்கேசுவரனின் கந்தளாய்க் கல்வெட்டு, அவனது பத்தாம் ஆட்சியாண்டில் கந்தளாயிலிருந்த இராசராசச் சதுர்வேதிமங்கலம் எனும் பிராமணக் குடியிருப்பைச் சேர்ந்தோர் அங்கிருந்த முத்தங்கை அல்லது மூத்தவனக் கோவிலிலிருந்த பிரமச்சாரியொருவன் முன்னின்று செய்த அல்லது செய்யவேண்டிய செயலொன்று பற்றிச் சொல்வதாக அமைகின்றது. இது கந்தளாய்க் குளத்தை அண்டிய நீர்ப்பாசன வேலையொன்றைக் குறிப்பதாகக் கொள்வர். முத்தங்கை என்பதைத் துர்க்கை என்று கொண்டு அவன் அம்மன் கோவில் பூசாரி என்று கொள்வதுமுண்டு.

கந்தளாய்க் கல்வெட்டில் வானியல் குறிப்புகள் இடம்பெற்றுள்ளதால், இக்கல்வெட்டின் காலம் பொ.ஆ.பி. 1033, 1047 ஆகிய இரண்டில் ஒன்றை அண்டி வருவதாகக் கணித்துள்ளனர். எனவே இந்த இரண்டாம் சோழ இலங்கேசுவரன் முடிசூடியது 1023-ல் அல்லது 1043-ல் என்று கொள்ளலாம்.

1044-ம் ஆண்டு, முதலாம் இராசேந்திரனுக்கு அடுத்த சோழ மன்னனாக முடிசூடினான் முதலாம் இராசாதிராச சோழன் (1044 - 1054). இவன் காலத்துக் கல்வெட்டெதுவும் இலங்கையில் கிடைக்கவில்லை. எனவே இக்காலத்தில் இலங்கையில் சோழ இலங்கேசுவரனே முற்றதிகாரம் செலுத்தினான் என்பதை உணரலாம். கந்தளாய்க் கல்வெட்டின் காலம் 1043 எனக் கொண்டால், இரண்டாம் சோழ இலங்கேசுவரன் 1033-ல் முடிசூடிக்கொண்டதாக அமையும். அவ்வாறெனில் இராசேந்திரசோழன் ஆட்சி முடிவுற்றதும், இராசாதிராசன் ஆட்சி ஆரம்பத்தில் அவனது பிரதிநிதியாக சோழ இலங்கேசுவரனால் கந்தளாய்ச் சதுர்வேதி மங்கலத்தில் செய்யப்பட்ட நன்கொடை ஒன்றின் பதிவே கந்தளாய்க் கல்வெட்டு என்றாகும். இப்படிக் கொண்டால், இராசாதிராச சோழன், தன் காலத்திலும் தனக்கு முன் சோழ இலங்கேசுவரனாக நீடித்த தன் இளவல் வீரராசேந்திரனையே அங்கு தொடர்ந்தும் இலங்கேசுவரனாக ஆளச்செய்தான் என ஊகிக்கலாம்.

இதை இராசாதிராசனின் கல்வெட்டுகளில் வரும் மெய்க்கீர்த்தியும் உறுதிசெய்கிறது. அவன் தன் சிற்றப்பன், மைந்தர், தம்பிமார் ஆகியோரை சேரம், பாண்டி, இலங்கை, பல்லவம், கங்கம், கன்னகுச்சி ஆகிய இடங்களில் அரசாள அனுமதித்தான் எனும் வரி அங்கு உள்ளது. 'இலங்கையர்க்கிறைவனாக' நின்றாண்டவன் அவன் நெருங்கிய உறவினன் ஒருவனே என்பது இங்கு தெரியவருவதால், அவன் தம்பி வீரராசேந்திரனே அப்போதைய 'இலங்கேசுவரன்' என்பது உறுதியாகின்றது.

இராசாதிராச சோழன் கல்வெட்டெதுவும் இலங்கையில் கிடைக்கவில்லையே தவிர, அவன் காலத்தில் இலங்கையில் முக்கியமான சிங்கள எதிர்ப்புகள் இடம்பெற்றிருக்கின்றன என்பது தெரியவருகின்றது. இந்த எதிர்ப்புகளைத் தலைமை தாங்கி நடத்தியவன், ஐந்தாம் மகிந்தனிம் மகனும் காசியப்



பன் எனும் இயற்பெயர் கொண்டவனுமான விக்கிரமபாகு ஆவான். விக்கிரமபாகுவையும் அடுத்தடுத்து அமர்ந்த மூன்று உரோகண மன்னர்களையும் தான் வென்றதை தன் 1046-ம் ஆண்டுக்குப் பிந்தைய மெய்க்கீர்த்திகளில் இராசாதிராசன் பதிவுசெய்துள்ளான்.

மகாவம்சத்தின்படி, விக்கிரமபாகுவுக்குத் துணையாக மாரகல்லில் வசித்த புத்தன் என்பவனும் 'மக்ககுத்ரூசம்' எனும் ஊரில் வசித்த கீர்த்தி என்பவனும் பளுத்தகிரி எனும் இடத்தில் சோழருக்கு எதிராகப் பெரும்போர் புரிந்தனர். ஆறு மாதம் தொடர்ந்த இந்தப்போரில் பெருமளவு சோழ வீரர்கள் மடிய, சோழர்கள் பின்வாங்கி பொலனறுவையிலேயே தங்கினர்.

இந்தப் போரில் விக்கிரமபாகு தோற்றான். அவனது மணிமகுடம் முதலியவற்றை தாம் அபகரித்ததாக சோழர் குறிப்பிடுகின்றனர். ஆனால் போரில் பின்வாங்கிய அவன் கடுங்காய முற்று வாதரோகத்துக்கு உள்ளானான் என்றும், அந்த நோயால் மடிந்தான் என்றும் மகாவம்சம் சொல்கிறது. இப்படி அனுராதபுர அரசின் இறுதி வாரிசும் மண்ணிலிருந்து மறைந்தான்.



thulanchanan.v@thaiveedu.com

# இனப்படுகொலையின் அரசியல்
# கிழக்காசிய சமூகங்களில் இனப்படுகொலையின் வேர்கள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## அறிமுகக் குறிப்புகள்

இனப்படுகொலை என்பது வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் மக்களை சீரழித்த குற்றமாகும். இது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என்பதை வரலாறு நமக்குக் காட்டியுள்ளது. குற்றம் செய்தவர்கள் தீர்மானிக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கு உள்ளது. கடுமையான வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு அது செயற்படுத்தப்படுகிறது. இது மனித உயிர்களை இழப்பது மட்டுமல்ல, நம்பிக்கை, அறம், மனித உணர்வுகளை இழந்து வாழ வைப்பதும் கூட. விலங்கு இராச்சியத்தில் உள்ள வேறு எந்த உயிரினமும் தனது சக உயிரினங்களை பெருந்திரளில் கொல்ல ஏற்பாடு செய்வதில்லை. அதன் முரட்டு நடத்தை அல்லது நோயின் காரணமாக அவற்றிலொன்று சக உயிரியால் கொல்லப்படலாம் அல்லது இறக்கவிடப்படலாம், ஆனால் அழித்தொழிக்கும் காரணத்திற்காக கொலை செய்யப்படுவதில்லை. பிறகு ஏன் ஹோமோ சேபியன்கள் ஆகிய நாம் நம் சக உயிரினங்களை பெருந்திரளில் கொல்கிறோம் ?

இந்தக் கேள்வி முக்கியமானது. இதற்கு ஒரு சமூகப் பரிமாணமும் அரசியற் பரிமாணமும் உண்டு. இன்று பொதுவாக இனப்படுகொலைகள் என அறியப்படுகின்ற கூட்டுக்கொலைகளுக்கு இனத்துவம் என்பது காரணமாகக் கூறப்பட்டாலும், உண்மையில் இது நிகழ்வது இனப்படுகொலையை நிகழ்த்தும் இனத்தின் தேவைகளுக்காக அல்ல என்பதே உண்மை. மாறாக, இனத்தின் ஒரு சில உறுப்பினர்களின் நலனுக்காக இது திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய பெருந்திரளான கொலைகளை வழிநடத்துவதில் அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் மிக முக்கியமானவை, ஆனால் அதுமட்டுமல்லாமல் சக்தி வாய்ந்த ஆட்சியாளர்களின் மதமும் தனிப்பட்ட தன்முனைப்புக்களும் தமக்கான பாத்திரங்களை வகிக்கின்றன. இதை வரலாறெங்கும் காணலாம். இவ்வாறான இரண்டு நிகழ்வுகளை இக்கட்டுரை நோக்குகிறது.

உலகளாவிய அதிகாரத்துக்கான அவாவும் அதற்கான ஆட்சியாளர்களின் போட்டியும் தென்கிழக்காசிய வம்சங்களின் ஆரம்பகால நவீன இராஜ்யங்களான வியட்நாம், கம்போடியா, பர்மா, தாய்லாந்தி ஆகிய இடங்களில் மெதுவாக இன-அரசியல் ஒருங்கிணைப்பை வளர்த்தன. தென்கிழக்கு ஆசியாவில் கன்பூசிய மற்றும் பௌத்த சித்தாந்தத்தில் மையப்படுத்தப்பட்ட அரசுகள் தோன்றின. இதற்கு அதிகரிக்கப்பட்ட விவசாய முயற்சிகள், மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் 1368-இல் சீனாவில் மிங் வம்சம் நிறுவப்பட்ட பின்னரான புதிய தொழில்நுட்பத்தின் பரவல் ஆகியன முக்கிய பங்களித்தன. இவை அனைத்தும் இப்பகுதிக்கு இதற்கு முன்னர் கிடைத்திராத அளவு செல்வத்தையும் புதிய பிராந்திய விரிவாக்கத்தையும் இன மோதல்களையும் கொண்டு வந்தன. இது அப்பகுதிகளில் வாழ்ந்துவந்த பல்வகைப்பட்ட சிறுபான்மையினரின் எதிர்காலத்தை அச்சுறுத்தியது.

ஐரோப்பாவைப் போலவே, பதினான்கு முதல் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், இனத்துவ வேறுபாடுகள் பற்றிய புதிய கருத்துக்கள் தோற்றம் பெற்றன.




பண்டைய, நவீன விவசாய மாதிரிகளுக்கிடையிலான முரண்பாடு உருவானது. இவை இரண்டும் சேர்ந்து இனமத மோதல்களை அதிகப்படுத்தின. அண்டை நாடுகளுக்கு எதிரான வியட்நாமின் புதிய கன்பூசிய நாகரிக பணி, ஜப்பானின் பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் கொரியா மீதான படையெடுப்பு, கம்போடியா மீதான ஐபீரிய வெற்றியாளர்களின் விரிவாக்கத்திற்கான தாக்குதல்கள், ஜாவாவின் சக்திவாய்ந்த புதிய மாதரம் வம்சத்தின் எழுச்சியும் ஜாவானீஸ் இஸ்லாம் மீதான

அதன் மிருகத்தனமான சுத்திகரிப்பும், பர்மாவிலும் கம்போடியாவிலும் புத்தமதத்தை அடிப்படையாகக் கொண்ட பிரத்தியேகமான இனமத அடையாளங்களை நிறுவுவதற்கான வன்முறை என அனைத்தும் இனப்படுகொலைகளுக்கான கதவுகளைத் திறந்தன. தனிமனித நலன் இனப்படுகொலைகளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது, அதிகாரத்துக்கான அவா ஏற்படுத்தும் விளைவுகள் என்ன, இது இனப்படுகொலைக்கு எவ்வாறு பங்களிக்கிறது போன்ற வினாக்களை ஆராய்வதற்கு இரண்டு உதாரணங்களை நோக்கலாம்.

## வியட்நாமிய டாய் வியட்டின் கொலைக்களங்கள்:

பதினொராம் நூற்றாண்டிலிருந்து, வட வியட்நாமின் சிவப்பு நதிப் படுகையில் இருந்த வியட்நாமிய பௌத்த இராச்சியமான டாய் வியட்டில் இருந்து, படைவீரர்கள் மற்றும் குடியேற்றவாசிகளின் தெற்கு நோக்கி விரிவாக்கத்திற்கான முயற்சிகள் சாம்ஸுடன் கசப்பான போர்களைத் தூண்டின. பதினைந்தாம் நூற்றாண்டு வரை இவ்விருதரப்புக்கும் தொடர்ச்சியான போர்கள் நடந்தன. சீனாவின் சுங் வம்சத்தால் ஆயத உதவியைப் பெற்ற சாம்ஸ், டாய் வியட்டில் இராச்சியத்திற்கு ஒரு வலிமைமிக்க இராணுவ மற்றும் கடற்படை எதிரியாக இருந்தது. பதினொராம் நூற்றாண்டின் போருக்குப் பிறகு, டாய் வியட் அதன் சாம்ஸ் கைதிகளை வடக்கே நாடு கடத்தி வியட்நாமிய இதயப் பகுதியில் குடியமர்த்தியது. 1200 மற்றும் 1340-க்கு இடையில் 2.4 மில்லியனாக மதிப்பிடப்பட்ட டாய் வியட்டின் மக்கள் தொகையானது பொருளாதார மற்றும் மக்கள் தொகை விரிவாக்கம் ஆகியவற்றால் இரட்டிப்பாகியது. பதினான்காம் நூற்றாண்டில் நில எல்லையில் ஏற்பட்ட அழுத்தங்களுடன் தேசங்களுக்கு இடையேயான மோதல்கள் அதிகரித்தன. 1400 வாக்கில், சாம்ஸ் தாக்குதல்கள் நிலத்தின் உற்பத்தித்திறன் வீழ்ச்சி மற்றும் சராசரி பண்ணை அளவுகள், வறட்சி, நோய் மற்றும் உள்நாட்டு கிளர்ச்சிகளுடன் இணைந்து, மக்கள் தொகையை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்து, 1.6 மில்லியனாக்கியது. இதன்போது கொல்லப்பட்டோர் குறித்த விரிவான குறிப்புகள் இல்லை. சாம்ஸ் படைகள் 1360 முதல் 1390 வரை டாய் வியட் மீது மீண்டும் மீண்டும் படையெடுத்தன.

1368-ல் சீனாவில் மிங் வம்சத்தின் வருகை ஒரு இராணுவப் புரட்சிக்கு வழிவகுத்தது. சீனப் படைகள் இப்போது 'ஆரம்ப நவீன உலகில் மிகவும் மேம்பட்ட துப்பாக்கிகளை' வைத்திருந்தன. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, புதிய ஆயுதங்கள் தென்கிழக்கு ஆசியாவின் பிரதான நிலப்பகுதிக்கு பரவியது, குறிப்பாக டாய் வியட், அதன் படைகள் நவீன தொழில்நுட்பத்தை விரைவாகப் பெற்று தேர்ச்சி பெற்றனர். இது போர்ச் சமநிலையை மாற்றியதோடு இறப்புகளையும் பன்மடங்கு அதிகரித்தது.

1380-களில் வியட்னாமிய டாய் வியட் இராச்சியமானது, தமது பழங்குடி சிந்தனையை நவீனத்துவத்துடன் இணைக்கத் தொடங்கிய வியட்நாமிய அறிவார்ந்த கண்ணோட்டம் இப்போது மேலும் வீரியமாகவும் லட்சியமாகவும் வளர்ந்தது. இது தொடர்ச்சியான வன்முறை சுத்திகரிப்புகளுக்கு வழிசெய்தது. இதற்குக் கன்பூசியஸ் தத்துவங்கள் மீதான வியாக்கியானங்கள் பயன்பட்டன.

டாய் வியட் அரசு வலுப்பெற்றதால் ஏற்கனவே மோதல் தொடங்கியிருந்தது. அதன் படைகள் 1446-ல் சாம்ஸ் தலைநகரான விஜயாவைக் கைப்பற்றிச் சூறையாடின. வியட்நாமியர்கள் சாம்ஸ் மன்னரைக் கைப்பற்றி ஹனோய்க்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 1450-ல் மீண்டும் சாம்ஸ் மீது படையெடுத்து 33,500 கைதிகளை அழைத்துச் சென்றனர். இராணுவத்



சிதைவுண்ட சாமஸ் இராச்சியத்தின் எச்சங்கள்

தொழில்நுட்பத்தில் டாய் வியட்டை விட பின்தங்கியிருந்த சாம்ஸ், இன்னும் துப்பாக்கிகளை வைத்திருக்கவில்லை. இந்நிலையில் சாம்ஸ் சீனாவின் உதவியை நாடியது. 1467-ல் சீனா நவீன ஆயுதங்களை சாம்ஸ்க்குத் தரச் சம்மதித்தது. இந்நிலையில் 1469-ல் மீண்டும் போர் மூண்டது. ஆயுதங்கள் இருந்தபோதும் சிறிய படையைக் கொண்டிருந்த சாம்ஸ் தோல்வியைத் தழுவியது. சாம்ஸ் தலைநகருக்குள் நுழைந்த வியட்னாமியப் படைகள் 40,000-60,000 சாம்ஸ்களை வாளிற்கு இரையாக்கியதாகப் பதிவுகள் கூறுகின்றன.

சாம்ஸ் அரச குடும்பத்தைச் சேர்ந்த 50 பேரை வியட்நாமியர்கள் கைப்பற்றினர். வியட்நாமியர்கள் அரச குடும்பத்தையும் 20,000-30,000 கைதிகளையும் வடக்கே நாடு கடத்தினார்கள். சாம்ஸ் அரசரது தலை துண்டிக்கப்பட்டது. அரச குடும்பத்திற்கு ஹனோய் அரண்மனைக்கு அருகில் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டன, அங்கு அவர்கள் 30 ஆண்டுகள் வாழ்ந்தனர். சில சாம்ஸ் கைதிகள் வியட்நாமிய உயரதிகாரிகளின் தோட்டங்களில் அடிமைப்படுத்தப்பட்டனர், மற்றவர்கள் வியட்நாமிய பெயர்களை ஏற்கவும், வியட்நாமியர்களை திருமணம் செய்துகொள்ளவும் 'தங்களைத் திருத்திக்கொள்ளவும்' உத்தரவிட்டனர். ஆனால் அவர்களின் ஒருங்கிணைப்புக்கு உள்ளூரில் எதிர்ப்பு வளர்ந்தது.

இணைக்கப்பட்ட சம்பாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகள் இப்போது டாய் வியட்டின் பதின்மூன்றாவது மாகாணமாக மாறியது. டாய் வியட்டின் விரிவாக்கம் மேற்கு நோக்கியும் இருந்தது. 1448-ம் ஆண்டில், வடகிழக்கு லாவோஸில் உள்ள ஜார்ஸ் சமவெளிப் பகுதி டான் வியட்டுடன் இணைக்கப்பட்டது. 1471-ல் இந்தப் பிரதேசம் டாய் வியட்டின் மாகாணமாக மாற்றப்பட்டது. 1479-ல் புவான் சாம்ராஜ்யம் மற்றும் லாவோ இராச்சியமான லான் சாங்கிற்கு எதிராக ஒரு புதிய போரை டாய் வியட்டின் பேரரசர் தொடங்கினார். 1479 இலையுதிர்காலத்தில் 180,000 டாய் வியட் படைகள் மேற்கு நோக்கி அணிவகுத்துச் சென்றதாக வியட்நாமிய குறிப்புகள் உண்டு. இந்தப் போரில் உயிரிழப்பு அதிகமாக இருந்தது. வியட்நாமிய பதிவுகள் முயாங் புவான் பகுதியில் இருந்த 90,000 குடும்பங்களில் 70,000 பேர் பட்டினியால் இறந்தனர். செப்டம்பர் 1480

அளவில் சீன உளவாளிகளின் கூற்றுப்படி, டாய் வியட் படைகள் லான் சாங்கின் முக்கிய பிரதேசங்களைக் கைப்பற்றி '20,000-க்கும் மேற்பட்ட' லாவோ மக்களைக் கொன்றனர். அவர்கள் எதிர்ப்பைத் தோற்கடித்து, மேல் ஐராவதி நதி வரை முன்னேறினர், சுருக்கமாக அவாவின் பர்மிய இராச்சியம் மீது படையெடுத்தனர். 1484-ன் பிற்பகுதியில் லான் சாங்கில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னரே வியட்நாமியப் படைகள் டாய் வியட் பக்கம் பின்வாங்கின. தென்கிழக்கு ஆசியாவின் வடக்குப் பெருநிலப்பரப்பில் டாய் வியட் சாம்ராச்சியத்தின் திடீர் எழுச்சியானது பெருந்தொகையான மக்களின் கொலையோடு இணைந்தது. ஆசியாவின் பெரும் கொலைகள் ஒவ்வொன்றும் எதோ ஒருவகையில் அதிகார ஆசையோடும் இராச்சிய விரிவாக்கத்தோடும் பின்னிப் பிணைந்தவை. அதிலும் குறிப்பாக இனத்துவ வேறுபாடுகள், சித்தாந்த முரண்பாடுகள் அக்கொலைகளுக்கான உந்துதலாக இருந்திருக்கின்றன.

அண்டை நிலப்பரப்புகளைக் கைப்பற்றி ஒரு சாம்ராச்சியமாக டாய் வியட் வளர்ந்தபோதும் ஆட்சியில் உத்தியோக பூர்வ இனப்பாகுபாடு அதிகரித்தது. 1499-ம் ஆண்டில், வியட்நாமியர்கள் சாம்ஸ் பெண்களை திருமணம் செய்வதைத் தடை செய்தது. இந்த உத்தரவு டாய் வியட்டின் உள்நெருக்கடியின் பிரதிபலிப்பாகும். சாம்ஸ் இளவரசர் தப்பித்து தந்தையின் வாரிசு என்று தன்னை அறிவித்துக் கொண்டார். 1505-இல் டாய் வியட்டில் உள்ளக சதி நடந்தது. தனது பாட்டி மற்றும் இரண்டு அமைச்சர்களைக் கொன்று, பிசாசு ராஜா என்று அறியப்பட்ட லியுய் முக் அதிகாரத்துக்கு வந்து உறுதியற்ற சகாப்தத்திற்கு வழிவகுத்தார்.

வியட்நாமிய தோட்டங்களில் உள்ள சாம்ஸ் அடிமைகள் தெற்கே பெருமளவில் தப்பிச் சென்றனர், எஞ்சியிருந்தவர்கள் அவநம்பிக்கை அடைந்தனர். இறுதியாக, 1509-ம் ஆண்டில், ஒரு சதித்திட்டத்தை அவர்கள் அரங்கேற்றினர். அதையடுத்து தலைநகரின் சுற்றுப்புறத்தில் தங்கியிருந்த அனைத்து சாம்ஸ் மக்களையும் படுகொலை செய்ய அரசர் கட்டளையிட்டார். 1509-ம் ஆண்டின் எட்டாவது மாதத்தில், காவலில் இருந்த சாம்ஸ் கைதிகள் அனைவரும் தூக்கிலிடப்பட்டனர். 1471 முதல் 1509 வரை சாம்ஸுக்கு எதிராக இனப்படுகொலைக் கொள்கைகளை இடைவிடாமல் பின்பற்றிய அதேநேரம், டாய் வியட் தனது எல்லையை பரந்த அளவில் விரிவுபடுத்தியது. இதன்போதும் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 27 சாம்ஸ் பிரதேசங்களில் 22-இனை முழுமையாகக் கைப்பற்றி ஏனையவற்றை மறைமுகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது டாய் வியட். ஆனால் வெற்றியின் பின்விளைவு முரண்பாடாக இருந்தது. அதன் புதிய தொலைதூர பிரதேசங்களை நிர்வகிப்பதில் உள்ள சிரமம் காரணமாக, பதினாறாம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் டாய் வியட் பிரிந்தது. வடக்கு வியட்நாமிய இதயப்பகுதி தெற்கு எல்லைப் பகுதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இவ்வாறு மெதுமெதுவாக டாய் வியட் நெருக்கடிக்கு ஆளாகியது. இந்த நெருக்கடியும் இனத்துவ முரண்பாடுகளை அதிகரித்து இன்னும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு வாங்கியது.

### ஜப்பானிய ஒன்றிணைவும் கொலையால் களமாடலும்:

1467-ம் ஆண்டு முதல் ஜப்பானை உலுக்கிய உள்நாட்டுப் போர்களில் பல இலட்சக்கணக்கான மக்கள் இறந்தார்கள். இந்த உள்நாட்டுப் போர்களில் போராடும் படைகளைத் தோற்கடிக்க ஒரு மிருகத்தனமான இராணுவ இயந்திரம் தேவைப்பட்டது. ஜப்பான் 120 பிராந்திய களங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இது நாட்டின் பெரும்பகுதியில் பேரரசரின் செல்வாக்கை மறைத்தது. பிராந்திய நிலப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், சொத்துக்களை ஒதுக்குவதற்கும், வரி விதிப்புகளை ஒத்திவைப்பதற்கும் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மாகாண நில உரிமையாளர்களிடையே போட்டிப் படைகளை அரசர் நியமித்தார். பௌத்த பிரிவுகளும், பரந்த நில உடைமைகளையும், கோட்டைகளையும், படைகளையும் கொண்டிருந்தன. அப்போது போர்த்துகீசிய கப்பல்கள் ஜேசுட் மிஷனரிகளை தெற்கு ஜப்பானுக்கு கொண்டு வந்தன, மேலும் 1550-களில் இருந்து கியூ தீவில் பலர் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறினர். இது அங்கு மேலும் மோதலுக்கு வழிவகுத்தது. இக்காலப்பகுதியில் ஜப்பானில் வன்முறை சட்டமாகிவிட்டது, அதே சமயம் இரக்கமற்ற திருமண அரசியல், கூட்டாளிகளின் கொலை மற்றும் மத நிறுவனங்களின் அழிவு ஆகியவை பொதுவானவையாக இருந்தன. பல குடும்பங்கள் பிரிந்தன, அகால மரணம் அனைவரையும் அச்சுறுத்தியது.

இவை அனைத்திலிருந்தும் ஒரு புதிய ஜப்பானிய அரசியல் வந்தது. 1558-ல் லண்டனில் முதலாம் எலிசபெத்தின் முடிசூட்டு விழாவிற்கு ஒரு வருடம் முன்பு, பேரரசர் ஓகிமாச்சி கியோட்டோவில் அரியணை ஏறினார், ஆனால் அவரது பங்கு தற்காலிகமானது என்பதை வரலாறு நிரூபித்தது. 1590-களில் ஜப்பானின் வலிமையான இராணுவ மற்றும் நிர்வாக ஒருங்கிணைப்பின் மூலம் ஜப்பானில் ஆதிக்கம் செலுத்திய போர் வீரன் டொயோடோமி ஹிடெயோஷி தான், கொரியாவிலும் சீனாவிலும் கூட வெற்றிகளுக்கு அடித்தளம் அமைத்தான். புதிய இராணுவவாத, மையப்படுத்தப்பட்ட ஆட்சியானது ஜப்பானிய பழங்காலத்தின் வழிபாட்டு முறையை முத்திரை குத்தியது. இது ஜப்பானின் மூன்று அதிக மக்கள் தொகை கொண்ட தீவுகளில் பெரும்பாலும் நெல் வளரும் சமூகத்தில் விவசாய விவசாயிகளின் பங்கை வலியுறுத்தியது மற்றும் பிராந்திய விரிவாக்கத்தின் மீதான ஆவேசத்தை வலியுறுத்தியது.

1592-ல் கொரியா மீது ஹிடெயோஷி தனது முதல் படையெடுப்பைத் தொடங்கிய நேரத்தில், ஜப்பான் ஒரு நூற்றாண்டு தொடர்ச்சியான உள்நாட்டுப் போரைச் சந்தித்திருந்தது. மேலும் அதன் படைகளுக்கு பல தசாப்தங்களாக அனுபவம் இருந்தது. அவர்கள் பல்லாயிரக்கணக்கான திறன்மிகு போராளிகளைக் கொண்டிருந்தனர், அவர்களில் சிலர் துப்பாக்கிகளுடன் நன்கு பழக்கப்பட்டிருந்தனர். மாறாக, கொரியாவில் துப்பாக்கிகள் குறித்த பரீட்சயம் இருக்கவில்லை, போரில் சமீபத்திய அனுபவம் அவர்களிடம் இல்லை. ஒரு மிருகத்தனமான இராணுவவாதம் ஜப்பானை ஒன்றிணைப்பதில் வெற்றி பெற்றவுடன், கொரியாவில் பேரழிவு வன்முறைக்கு மேடை அமைக்கப்பட்டது.

ஜப்பானிய ஒருங்கிணைப்பு 1567-ல் ஆர்வத்துடன் தொடங்கியது. தமது களத்தை விரிவுபடுத்தவும், 'ஒரு வாளின் கீழ் அரசை ஒழுங்குபடுத்தவும்', பயங்கரவாதத்தின் ஆட்சி உருவாக்கப்பட்டு எதிரிகள் அழித்தொழிக்கப்பட்டனர். இது ஜப்பானை ஒருபோதும் மறக்க முடியாத இரத்தக் களரியில் மூழ்கடித்தது. 1570-73 காலப்பகுதியில் இந்த சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக, ஆயுதமேந்திய புத்த பிரிவுகள் போரிட்டன.

ஹொங் கஞ்சி துறவிகளுக்கு எதிரான போரைப் பற்றி ஹிடெயோஷி இவ்வாறு எழுதினார்:

*'நாம் அவர்களைப் பிடித்தோம். அவர்களை வெட்டினோம், பலரது அவயவங்கள் எடுக்கப்பட்டன. எத்தனை பேர் உயிரி*




*ழந்தனர் என்று எனக்குத் தெரியாது. எங்களின் இறுதிப் பழி வாங்கலுக்காக நாங்கள் ஹச்சிமானில் காத்திருக்கிறோம். நாங்கள் பின்தொடர்ந்து அவர்களை நசுக்கினோம். இறந்தவர்களின் தலைகளை எடுத்தோம். மற்றவர்களை நாங்கள் ஏரிக்குள் விரட்டியடித்தோம்.'*

ஜப்பானின் ஆயுதமேந்திய பௌத்த துறவியின் அரசியல்-இராணுவ சக்திக்கு எதிராக ஹிடெயோஷி 'உறுதியான போரை' தொடக்கியதால் மிருகத்தனங்கள் அதிகரித்தன. எதிர்ப் புரட்சியாளர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பௌத்த மடாலயங்கள் முழுமையாக சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. இந்தப் போரில் மடாலயங்களில் இருந்த நூலகங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் ஹிடெயோஷியின் இராணுவம் ஜப்பானின் மூன்று புனிதமான புத்த நிறுவனங்களில் ஒன்றின் நூற்றுக்கணக்கான கட்டடங்களை அழித்தது, மேலும் பல ஆயிரம் துறவிகளை எரித்துப் படுகொலை செய்தது.

ஹிடெயோஷியின் வீரர்கள் கைப்பற்றிய வேலைக்காரர்கள், காமக்கிழத்திகள் மற்றும் குழந்தைகள் என அனைவரும் கொல்லப்பட்டனர். இது குறித்த ஒரு வரலாற்று குறிப்பு இந்நிகழ்வுகளில் ஒன்றை இவ்வாறு விபரிக்கிறது:

*'மடாலயங்கள் முற்றிலும் சாம்பலாக்கப்பட்டதைப் பார்ப்பது பரிதாபமாக இருந்தது. பல ஆயிரம் சடலங்கள் சிதறிக் கிடந்தன. பௌத்த சட்டத்தின் அழிவை கண்கூடாகக் கண்டோம். இனிவரவுள்ள ஏகாதிபத்திய சட்டம் என்ன செய்யும் என்பதை பொறுத்திருந்து காண்போம்.'*

1573-ல் ஹிடெயோஷி கியோட்டோ மற்றும் சாகாய் துறைமுகத்தை கைப்பற்றினார். அவர் தலைநகரின் எட்டு நூற்றாண்டுகள் பழமையான அரசியல் மையத்தை எரித்து அழித்தார். அதன் பல மடங்களை இடித்துவிட்டு, புதிய அரண்மனைகளை நிர்மாணிப்பதற்காக 'கியோட்டோ மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள அனைத்து கற்சிலைகளையும்' உடைத்தார். அப்போது தலைநகரின் பழைய தெய்வ உருவச்சிலைகள் கழுத்தில் கயிறுகளால் தெருக்களின் சேற்றில் இழுத்துச் செல்வதைப் பார்ப்பது ஒரு பொதுவான காட்சியாக இருந்தது.

1574-ம் ஆண்டில், இக்கோ பௌத்த பிரிவைச் சேர்ந்த 20,000 ஆயுதமேந்திய உறுப்பினர்களால் பாதுகாக்கப்பட்ட இரண்டு கோட்டைகளை ஹிடெயோஷி முற்றுகையிட்டார். அவர்களின் உணவுப் பொருள் விநியோகத்தைத் தடுத்து, அவர்கள் பசியால் பலவீனமடைந்தபோது உள்நுழைந்து அனைவரையும் கொன்றார். 1570-களின் பிற்பகுதியில், ஹிடெயோஷி தனது படுகொலைகள், சக்திவாய்ந்த குடும்பங்களை அழித்தல், பௌத்த கோட்டைகள் மீதான தாக்குதல்கள் என்பவற்றைத் தீவிரப்படுத்தினார். அடுத்து, 1579-80-இல், 60,000 பேர் கொண்ட இராணுவம் ஒசாகாவில் உள்ள ஹொங்கஞ்சி பிரிவின் கோவில் கோட்டையை முற்றுகையிட்டது. ஆயிரக்கணக்கான முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தப்பிக்க முயன்ற போது அனைவரும் கொல்லப்பட்டனர்.

அடுத்த தசாப்தத்தில், அவர் இராணுவ மேலாதிக்கத்தைப் பயன்படுத்தவும், எதிர்ப்பை நடுநிலைப்படுத்தவும் விரும்பினார். சாத்தியமான கூட்டாளிகளுக்கு இராஜதந்திர ரீதியாக பிராந்திய சுயாட்சியை விட்டுக்கொடுப்பதன் மூலம், அவர்கள் தங்கள் நாடுகளின் மீதான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தினார். வியக்கத்தக்க வெற்றிகரமான தொடர் போர்களின் விளைவால், ஹிடெயோஷி 1591-ல் ஜப்பான் முழுவதையும் ஒன்றிணைத்தார். ஹிடெயோஷி வெறும் எட்டு ஆண்டுகளில் நவீன ஜப்பானை உருவாக்கினார், மேலும் சீனாவை எதிர்கொள்ளத் தயாராக இருந்தார்.

ஹிடெயோஷியின் இராணுவவாதம் பிராந்திய விரிவாக்கவாதத்துடன் இணைந்து ஜப்பானிய இன அடையாளத்தை வலுப்படுத்தியதுடன் கொரியா மீதான அவரது வரவிருக்கும் தாக்குதல்களின் இனப்படுகொலை வன்முறையை அதிகப்படுத்தியது. நான்காம் நூற்றாண்டில் அரிசிப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், ஜப்பானின் வளர்ந்து வரும் அரசியல், தெய்வங்களை நெற்செடியின் காதுகளாக சித்தரிக்கும் அதன் சொந்த விவசாய பிரபஞ்சத்தை உருவாக்கியது.

பௌத்தம் மற்றும் ஷின்டோயிசத்தின் செல்வாக்கால் இந்த விவசாய அண்டவியல் ஆதிக்கம் புதிய உச்சத்தை எட்டிய

நேரத்தில், ஜப்பான் முழுவதும் ஹிடெயோஷி அதிகாரத்தை கைப்பற்றினார். அரிசி புனிதமானது என்பதுடன் இறைச்சி சாப்பிடுவது கூட தூய்மையற்றது என்று தடை செய்யப்பட்டது. மாமிசம் விற்பது என்பது இப்போது ஒரு 'அருவருப்பான' தொழிலாக இருந்தது, இது நாட்டின் 'புறம்போக்கு' மக்களுக்கு மட்டுமே பொருத்தமானது என்ற கதையாடல் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதன்வழி புலால் உண்போர் கொலையுண்டனர், இன்னல்களுக்கு ஆளாகினர்.

ஹிடெயோஷி தனது பரம்பரை மிகவும் உயர்ந்தது என்று வலியுறுத்தினார். உள்நாட்டு ஷிண்டே சிந்தனையை வரைந்து, அவர் தன்னை 'சூரியனின் மகன்' (ஹிரின் நோ கோ) என்று கருதினார். மேலும், ஜென் புத்த ஆலோசகர்களின் ஊக்கத்துடன், அவர் ஜப்பானை 'கடவுள்களின் நாடு' (ஷிங்கோகு) என்றும்  ஜப்பானின் ஏகாதிபத்திய தெய்வம் (காமி) அனைத்து உணர்வுள்ள உயிரினங்களுக்கும் அடித்தளம் என்றும் குறிப்பிட்டார்.

ஜப்பானை மையமாகக் கொண்ட இந்த உலகக் கண்ணோட்டத்திற்காக, கன்பூசியனிசத்திற்கும் பௌத்தத்திற்கும் மேலாக ஜப்பானிய மதத்தை பதினைந்தாம் நூற்றாண்டின் ஷிண்டே சிந்தனையாளரிடமிருந்து ஹிடெயோஷி உருவாக்கினார். அவரது கிறிஸ்தவ விரோத, வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாடுகளுக்காக இராணுவவாத ஜென் புத்த துறவிகளின் ஆலோசனையையும் பெற்றார்.

ஹிடெயோஷியின் விரிவாக்கக் கட்டாயம், அத்தகைய பண்டைய முன்னோடிகளிலிருந்து முளைத்தது, உள்நாட்டு விவசாய மற்றும் கலாசார தரிசனங்களால் உரமாக்கப்பட்டது. அவரது இறுதி ஆண்டுகள் ஜப்பானிலும் அதற்கு அப்பாலும் அதிகரித்து வரும் வன்முறையை ஊக்குவித்தன. கொரியா மற்றும் சீனாவைக் கைப்பற்றுவது மரியாதை மற்றும் புகழுக்கான கூடுதல் தேடலாக ஹிடெயோஷி கருதினார்.

கொரியத் தலைவர்களால் ஹிடெயோஷியைப் புரிந்து கொள்ள முடியவில்லை. 1591-ம் ஆண்டின் நடுப்பகுதியில், ஹிடெயோஷி படையெடுப்பதற்கான தயாரிப்புகளைத் தொடங்கினார். கொரியா நிச்சயமாக சீனாவை விட எளிதான இலக்காகத் தோன்றியது. அது துப்பாக்கிகள் இல்லாத பூசன், டோங்னே மற்றும் கிம்ஹே ஆகிய மூன்று நகரங்களை மட்டுமே சுவர்களாக கொண்டிருந்தது. ஆனால் கொரியா தொழில்நுட்பத்தில் மேம்பட்டது, ஜப்பானை விட 'பண்பாடு அல்லது சாகுபடியில் பெரிதாக' இருந்தது. நன்கு படித்த கொரியர்களால் 1324-ம் ஆண்டிலேயே உலோக வகை அச்சிடலைக் கண்டுபிடித்ததுடன் உயர்தர மட்பாண்டங்களை உற்பத்தி செய்தது. ஆனால் பெரும்பாலான மக்கள் நெல் விவசாயிகள் அல்லது மீனவர்கள். அவர்கள் சிறந்த மாலுமிகளை உருவாக்கினர். இராணுவ கைவினைஞர்களின் திறன் அதிகமாக இருந்தது, ஆனால் உற்பத்தி அளவு குறைவாக இருந்தது. மே-ஜூன் 1592-ல் சுமார் 150,000 ஜப்பானிய படைகள் கொரியாவில் தரையிறங்கின.

ஜப்பானியர்கள் கொரியப் படைகளை அழிக்க முயன்றனர், படுகொலைகள் பெருகின. ஜப்பானியர்கள் மே 25 அன்று சில மணிநேரங்களில் பூசானைக் கைப்பற்றினர். அவர்கள் 8,000 தலைகளை எடுத்து, எதிர்ப்பு அடையாளம் காட்டிய ஒவ்வொருவரையும் வாள் முனையில் நிறுத்தினார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு, கொனிஷி 20,000 கொரிய படைகளால் பாதுகாக்கப்பட்ட டோங்னேயைத் தாக்கினார். அங்கு 5,000 பேர் கொலையுண்டனர். மறுநாள் 20,800 பேர் கொண்ட பிரிவு, பூசானில் தரையிறங்கியது. மே 31 அன்று, 'மூவாயிரம் கொரியர்களை வாளில் வீழ்த்தி' பூசான் கைப்பற்றப்பட்டது. அதே நாளில் 12,000 பேர் கொண்ட மூன்றாவது பிரிவு, கிம்ஹேயைத் தாக்கி, 8,000 பேரைக் கொலைசெய்தது. அத்தோடு சீஷியுவில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றது. மூன்று ஜப்பானியப் பிரிவுகள் மூன்று வாரங்களில் 20,000 கொரிய வீரர்களைக் கொன்றன.

ஜப்பானிய படைகள் சீன எல்லையை நோக்கி வடக்கே அணிவகுத்து, ஜூலை நடுப்பகுதியில் பியாங்யாங்கிற்கு அருகே 50,000 முன்கூட்டிய படையை திரட்டினர். ஐந்து ஜப்பானிய காலாட்படையின் நான்கு பிரிவுகளை ஜப்பானிய துறைமுகமான நகோயாவிலிருந்து நேரடியாகப் பயணம் செய்யும் பல நூறு கப்பல்களில் அனுப்பி கொரியாவின் மையத்திலும் தெற்கிலும் பயிர்களையும் வீட்டுத் தோட்டங்களையும் அழிப்பதன் மூலம் தனது வடக்குப் பகுதியை வலுப்படுத்த திட்டமிட்டார். ஆனால் புத்திசாலித்தனமான அட்மிரல் யி சன்சி-னால் கட்டளையிடப்பட்ட கொரிய கடற்படையை அவர் தவறாக மதிப்பிட்டார்.

யி சன்சின் பலமிக்க கவசத்தைக் கொண்ட ஆமை கப்பல்களை வடிவமைத்திருந்தார். இவையே முதல் இரும்பு போர்வை போர்க்கப்பல் ஆகும். இவை வேகமான, சூழ்ச்சி செய்யக்கூடிய கப்பல்களாக இருந்தன, அதன் படகோட்டிகள் வினைத்திறனாக வேகமாக தலைகீழாக செலுத்தி, பின்தொடர்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியனர். ஜூன் 1592-ல், கொரிய கடற்படை இரண்டு மோதல்களில் 40 ஜப்பானிய கப்பல்களை மூழ்கடித்து எரித்தது. யி பின்னர் 700 வீரர்கள் மற்றும் அவர்களது குழுவினரை ஏற்றிச் சென்ற ஒரு ஜப்பானியப் படையை அழித்தார், 26 போர்க்கப்பல்களால் அழைத்துச் செல்லப்பட்ட ஒரு விநியோகத் தொடரைக் கைப்பற்றினார், மேலும் பல ஜப்பானிய கப்பல்களை மூழ்கடித்தார். ஜூலை நடுப்பகுதியில் ஹன்சன் தீவில் ஒரு வெற்றிகரமான மோதலில், யியின் கடற்படை மேலும் 71 போர்க் கப்பல்களை மூழ்கடித்தது, அதன் பிறகு கடல் மிகவும் சிவப்பாக இருந்தது. அவர் அதே நாளில் தனது மோதல்களை பின்தொடர்ந்தார், மேலும் 48 ஜப்பானிய கப்பல்களை எரித்தார் மற்றும் ஹிடெயோஷியின் மீதமுள்ள கடற்படையை மீண்டும் ஜப்பானுக்கு விரட்டியடித்தார். 1592 டிசம்பரில் மட்டும் 10 போர்களில், யியின் கடற்படை 400 ஜப்பானிய போர்க் கப்பல்களை மூழ்கடித்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட கொரியா முழுவதும் கொரில்லா எதிர்ப்பு முளைத்ததால் கொலைகள் அதிகரித்தன. 22,000 கொரிய விவசாயிகள், ஜப்பானியப் படைகள் தங்கள் வீடுகளையும் நெல் வயல்களையும் சூறையாடிய பிறகு பட்டினி கிடப்பதை விட போராட விரும்பினர். அவர்கள் 84,500 வீரர்களைக் கொண்ட எஞ்சியிருந்த கொரியப் படைகளில் சேர்ந்தனர். 10,000 ஜப்பானிய வீரர்கள் கொரிய கோட்டையான சின்ஜூவைத் தாக்கியபோது, அவர்களில் கிட்டத்தட்ட 5,000 பேர் வீழ்ந்தனர். ஆக்கிரமிப்பு கிட்டத்தட்ட சரிந்துவிட்டது.

ஜப்பானியப் படைகள் தங்கள் மிருகத்தனமான போரை

இனப்படுகொலை மோதலாக மாற்றுவதன் மூலம் பதிலளித்தன. 5,000 சீனர்களைக் கொண்ட ஒரு முன்கூட்டிய குழு பியாங்யாங்கிற்கு அணிவகுத்தது, ஆனால் ஜப்பானியர்கள் பதுங்கியிருந்து அவர்களில் 3,000 பேரைக் கொன்றனர். ஜனவரி 1593-ல் 50,000 பேரைக் கொண்ட சீனப் பிரதான படை குதிரைப்படை மற்றும் பீரங்கிகளுடன் யாலுவைக் கடந்தது. ஜப்பானியர்களை பியாங்யாங்கிலிருந்து தெற்கு நோக்கி ஓட்டிச் சென்று, அவர்கள் கொனிஷியின் படைகளில் 2,300 பேரைக் கொன்றனர். பின்வாங்கிய ஜப்பானியர்கள் சியோலுக்கு தீ வைத்தனர். 'தலைநகரில் இருந்த அனைத்து சீனர்களையும் கொன்று, கோட்டைகளுக்கு வெளியே உள்ள அனைத்து வீடுகளையும் எரித்ததாக' ஒரு ஜப்பானிய அறிக்கை செய்தனர். ஒரு கொரிய ஆதாரம் அவர்கள் நகரின் கொரிய ஆண் மக்களையும் கொன்று குவித்ததாக தெரிவிக்கிறது. சீனத் தாக்குதல்காரர்கள் சியோலுக்கு வெளியே கிட்டத்தட்ட 10,000 படைகளைக் கொன்றனர். பதிலளித்த ஜப்பானியர்கள் சின்ஜுவைத் தாக்கி, அங்குள்ள அனைத்து மக்களையும் படுகொலை செய்தனர். இதைத் தொடர்ந்து படுகொலைக்குத் தூண்டப்பட்ட ஜப்பானியர்கள் 60,000-க்கும் மேற்பட்ட கொரியர்களைக் கொன்றனர்.

உள்நுழைந்த சீனத்தளபதி, கொரியாவின் கிராமப்புறப் பகுதிகள் போர் மற்றும் பெருந்திரள் கொலைகளால் சிதைந்து கிடப்பதைக் கண்டார். தனது அனுபவத்தை அவர் இவ்வாறு எழுதுகிறார்:

*'நாடு முழுவதும் தரிசாகக் கிடந்தது, ஒரு பெரிய பஞ்சம் கொரியர்களின் முகத்தை உற்றுப் பார்த்தது. சியோல் தெருவில் ஒரு சிறு குழந்தை இறந்த தாயின் மார்பில் இருந்து பால் உறிஞ்ச முயற்சிப்பதைக் கண்டேன். மனம் பதைத்தது. பசித்த மனிதர்கள் ஒருவரையொருவர் சண்டையிட்டுக் கொன்றனர், வெற்றியாளர்கள் தோற்கடிக்கப்பட்டவர்களை உண்கின்றனர், எலும்புகளிலிருந்து மச்சையை உறிஞ்சினர். ஒரு காய்ச்சல் தொற்றுநோய் தாக்கியது. அதில் பலியானவர்களின் சடலங்கள் சாலை முழுவதும் கிடந்தன, ஒருவரின் தலை மற்றொருவரின் மார்பில் தலையணையாக இருந்தது. சியோலிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் உள்ள இறந்த உடல்கள் வாட்டர் மவுத் கேட்டிற்கு வெளியே குவியல்களாகக் குவிக்கப்பட்டபோது அவற்றின் உயரம் சுவரைவிட பத்து அடி அதிகமானதாக இருந்தது.'*

ஏற்கனவே ஜப்பானியப் படையெடுப்பால் கொரியா சிதிலமடைந்திருந்தது. சீனாவை முழுமையாகக் கைப்பற்ற ஜப்பானியப் படைகளால் இயலவில்லை. இதனால் கோபமடைந்த ஹிடெயோஷி மார்ச் 19, 1597-ல் இரண்டாவது படையெடுப்பிற்கு உத்தரவிட்டார். மொத்தம் 141,500 ஜப்பானிய வீரர்களைக் கொண்ட ஒன்பது புதிய பிரிவுகள் தெற்கு கொரியாவைச் சென்றடைந்தன. ஹிடெயோஷி தனது தளபதிக்கு இனப்படுகொலைக்கான கட்டளையை வழங்கினார்:

*'கொரியர்களை ஒவ்வொருவராகக் கொன்று நாட்டை வெறுமையாக்குங்கள். கொல்லப்படும் அல்லது கைதுசெய்யப்படும் கொரியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஜப்பானிய வீரர்கள் வெகுமதியைப் பெற்றுக்கொள்வார்கள். இந்த எண்ணிக்கையை காட்ட கொல்லப்பட்ட கொரிய வீரர்களின் மூக்கினைத் துண்டித்து வைக்கலாம்.'*

படைகளுக்கு ஹிடெயோஷி இன்னும் துல்லியமான வழிமுறைகளை வழங்கினார்:

*'ஒரு மனிதனுக்கு இரண்டு காதுகள் உள்ளன, ஆனால் ஒரு மூக்கு மட்டுமே. ஒரு மூக்கை வெட்டுவதன் மூலம், நீங்கள் ஒரு தலைக்கு கணக்குக் காட்டுகின்றீர்கள். நீங்கள் ஒருவரை உயிருடன் பிடித்தால் முதலில் அவரது மூக்கை துண்டிக்கவும், பிறகு அவரைக் கைதியாக வைத்திருக்கவும் உங்களுக்கு அனுமதி உண்டு. மூக்குகள் பீப்பாய்களில் ஊறுகாய்களாக கியோட்டோவிற்கு அனுப்பப்பட வேண்டும்.'*

தலைகளை ஒரு மேட்டில் புதைப்பதற்கு முன், ஜப்பானியர்கள் காதுகள் மற்றும் மூக்குகளை வெட்டி அவற்றை பீப்பாய்களில் ஊறுகாய்களாக கியோட்டோவுக்கு அனுப்பினர். ஒரு மாதத்தில், இரண்டு ஜெனரல்கள் முறையே 18,350 மற்றும் 5,044 மூக்குகளை சமர்ப்பித்தனர். கொரியாவிலிருந்து அனுப்பப்பட்ட 200,000 மூக்குகள் கொல்லப்பட்டோரின் ஒரு பகுதியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தியது. ஜப்பானிய ஜெனரல் ஒருவரின் போர் நினைவுக் குறிப்புகள் 185,738 கொரிய மற்றும் 29,014 சீனத் தலைகள் அடக்கம் செய்யப்பட்டதற்கு சாட்சியமளித்தன. ஜப்பானியப் படைகள் 100,000-க்கும் மேற்பட்ட கொரிய கைவினைஞர்கள் மற்றும் அறிஞர்கள் மற்றும் 60,000 பெண்களைக் கைப்பற்றினர், மேலும் அவர்களை வலுக்கட்டாயமாக ஜப்பானுக்குக் கொண்டு சென்றனர் அல்லது வெளிநாடுகளுக்கு அடிமைகளாக விற்றனர்.

கொரியாவில் ஹிடெயோஷியின் இனப்படுகொலைப் படையெடுப்புகள், விரிவாக்கவாதத்தால் ஈர்க்கப்பட்டு, பழங்கால மற்றும் விவசாயத்தின் வழிபாட்டு முறைகளால் வலுப்படுத்தப்பட்டன. டோகுகாவா உள் அடக்குமுறை மற்றும் வர்த்தகக் கட்டுப்பாடுகள் ஆகியவை ஜப்பானிய மத சிறுபான்மையினரை அழித்தன. அரசியல் மேலாதிக்கம் மற்றும் இன ஒற்றுமையை நாடும் ஒரு விவசாயப் பேரரசின் மிருகத்தனமான இராணுவமயமாக்கல் மற்றும் ஒன்றிணைப்பு வெளிநாடுகளில் இனப்படுகொலையையும் உள்நாட்டில் வன்முறை கலாசார ஒடுக்குமுறையையும் உருவாக்கியது.

## தொடரும் குறிப்புக்கள்:

கிழக்காசிய சமூகங்களின் இராச்சிய விரிவாக்கமும் அத்தோடு இணைந்த இனத்துவ, மத மேலாதிக்க முரண்பாடுகளும் எவ்வாறு கிழக்காசிய வரலாற்றை படுகொலைகளின் வரலாறாக மாற்றியுள்ளது என்பதை இங்கு பார்த்தோம். குறிப்பாக நவீன ஆயுதங்களின் பரவலான பயன்பாடு இல்லாத பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையில் அரங்கேறிய கொடூரங்களையே பார்த்தோம். இதன் பிறகான காலம் எவ்வாறு இருந்தது. தென்னாசியா இதே காலப்பகுதியில் அமைதியாக இருந்ததா ஆகிய கேள்விகளை அடுத்த கட்டுரையில் நோக்குவோம்.

(தொடரும்...)



meenilankco@thaiveedu.com

# நற்றிணையைப் பதிப்பித்த பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்

**– சு. வேணுகோபால்**

பின்னத்தூரில் பிறந்த அ. நாராயணசாமி ஐயர் அவர்கள் அத்தையின் எதிர்ப்பை மீறி தமிழை விரும்பிக் கற்றார். கும்ப கோணம் திண்ணைப் பள்ளியில் தமிழாசிரியராக சேர்ந்து பணியாற்றினார். பழங்கல்வெட்டுகளைப் படித்தறியும் திறன் பெற்றிருந்தார். புலவர்களின் வரலாறுகளை ஆய்ந்தறிந்தார். தொல்காப்பியத்தைத் திரும்பத் திரும்பக் கற்றார். தொல்காப் பியப் பொருளதிகாரப் பகுதியில் எடுத்துக்காட்டியுள்ள மேற் கோள்களுக்கு எல்லாம் ஓர் அகராதியும் எழுதிவைத்தார். இயல்மொழி வாழ்த்து, தென்தில்லைக் கழம்பகம், இடும்பா வன புராணம் என்று 18 நூல்கள் வரை இயற்றியிருக்கிறார். இந்த ஆக்கப்பணியிலிருந்து மாறி நற்றிணைப் பதிப்புப் பணியில் ஈடுபட்டு செய்த தமிழ்த்தொண்டு அவருக்கு தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியாச் சுவடைப் பெற்றுத்தந்திருக்கி றது.

குறுந்தொகை, அகநானூறு, தொல்காப்பியம் மூன்றையும் படித்துப் படித்துக் குறிப்புகளை எழுதிவைத்தார். நற்றிணை யைப் பதிப்பித்துப் பின் ஒவ்வொன்றாகப் பதிப்பிக்க எண்ணி னார். நீரழிவு நோயினால் அல்லுற்ற நாராயணசாமி ஐயரால் நற்றிணையை மட்டுமே பதிப்பிக்க முடிந்தது. நிரம்பக் கனவு களுடன்தான் பதிப்புப் பணியில் ஆர்வம் கொண்டார். சொந்த மாகப் படைத்து வெளியிடுவதில் இருந்த ஆர்வம் பதிப்புப் பணி என்ற பெரும்பணி பக்கம் ஆரம்பத்திலேயே திரும்பா மல் போயிற்று. சற்றுத் தாமதமாக உணர்ந்து எட்டுத்தொகை நூல்களை ஏட்டில் வாசித்துக் குறிப்பெடுக்கத் தொடங்கினார். நற்றிணையைப் பதிப்பிக்க கடுமையான அலைச்சலை மேற் கொண்டார். அவர் சொல்கிறார்.

'...ஸ்ரீசுவாமி வேதாச்சலம் அவர்களுடைய முயற்சியைக் கொண்டு இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையி னுள்ளே பிரதியைக் காப்பிசெய்து தருவித்து ஒருவாறு திருத்தி வருகையில் மஹா மஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ உ.வே. சாமிநாதையரவர்கள் இரண்டு படிகள் அனுப்பினார் கள். அவற்றோடு ஒப்பு நோக்கி பின் மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்று அங்குள்ள படிகளோடு ஒப்பு நோக்கினேன். பின்பு சென்னையிலிருக்கும் ஸ்ரீமான் தி.க. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் தம்மிடத்திலிருந்த படிகள் இரண்டினையும் கொடுத்து உதவினார்கள். அவற்றினையும் பெற்று ஒருவாறு திருத்தி எனது அறிவிற்கு எட்டியவாறு ஓர் உரையை எழுதி அச்சிடத்தொடங்(கினேன்)....'

'எனக்குக் கிடைத்த எல்லாப் படிகளுக்குள்ளும் 234-வது பாட லும் 385-வது பாடலின் பிற்பகுதியும் காணப்படவில்லை. அவற்றையும் தேடிச் சேர்த்த பின்னரே வெளியிட வேண்டும் என்றிருந்த யான் காலதாமதப்படுவதைக் கருதி அவை கிடைப்பின் மறுபதிப்பிற் சேர்த்துவிடலாமென்று எண்ணத் தோடு இதை வெளியிடலானேன்' என்கிறார்.

தொல்காப்பியப் பொருளதிகாரப் பயிற்சியின் மூலம் பெற்ற சிறப்பையெல்லாம் அதில் எடுத்துக்காட்டிய மேற்கோள்க ளுக்கு எல்லாம் ஓர் அகராதியும் எழுதிவைத்துள்ளார். அவர் இறக்கும் முன் நற்றிணை உரை முழுவதும் அச்சிடாவிட்டா லும் அதில் பாடினோர் வரலாறும் பாடப்பட்டோர் வரலாறும் பின்னர் அவர் எழுதிவைத்தவாறு சேர்த்து முதல் பதிப்பாக 1915-ல் வெளியிட்டனர். பாடினோர் வரலாறு என்று 175 புலவர் கள் பற்றிய குறிப்புகளை விரிவாகத் தருகிறார். உதாரண மாக ஆலம்பேரி சாத்தனார் குறித்து 'இவர் மதுரையைச் சார்ந்த ஆருல் உலவிய நாட்டு ஆலம்பேரி என்னும் ஊரி லுள்ள சாத்தான் என்னும் இயற்பெயருடையவர். ஏடெழுது வோரின் மிகையால் வாலம்பேரி சாத்தனார் எனவுங் கூறப்ப டுபவர். இவர் பாடலால் இவர் நெய்தனிலத்தும், பாலை நிலத் தும் நன்றாகப் பயின்றவரென்று தெரிகின்றது. நற்றிணை 152-ஆம் பாடலில் எல்லாத் துன்பமும் மடல்முதலாயின தந்தன என்று தலைவனின் கூறுங் கூற்றும் நற்றிணை 255-ல் ஆறு பார்த்துற்ற அச்சமும், நற்றிணை 313-ல் வேட்கைத் தாங்காது தலைமகள் இரவு துயரங்கூறுவதும் மிக்க சுவையுடையதா கும்.

மற்றும் இவர் அகம் 81-ல் கடலனது விளங்கிலென்னும் உரை யும் அகம் 134-ல் வானவன் பிட்டன் குதிரைமலையையும் அகம் 175-ல் நெடுஞ்செழியன் போர்வென்ற திருத்தலையா னங் கானத்தையும் நெவியெனன்னும் கொடையாளியொருவ னையும் பாராட்டிக் கூறியிருத்தலானே அவர்கள் காலத்தவ ரென்று கொள்ளலாகும். இவர் பாடினவாக நற்றிணையில் 153, 255, 313, 388 பாடல்களும் அகத்தில் நான்குமாக எட்டுப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

இதேபோன்று பாடப்பட்டோர் வரலாறு என்று பதின்மூன்று மன்னர்களின் சிறப்புக் குறிப்பையும் தந்துள்ளார். உதாரணமாக அழிசி என்ற மன்னன் பற்றி 'இவன் சோழர் மரபினனாகிய ஒரு சிற்றரசன், மிகுந்த கொடையாளி, சோழ நாட்டிலுள்ள ஆர்காடென்னும் ஊரிலிருந்தவன். அவன் ஆற்காட்டையும் சில ஊர்களையும் கைக்கொண்டு ஆண்டுவரும் நாளில் இவனுக்குப் புதல்வனொருவன் பிறந்தனன். அவன் சேந்தலன் எனப் பெயரிட்டு வளர்க்க, வளர்ந்து 'திதிலை எஃகிற் சேந்தன்தந்தை, தேங்கமழ் விரிதார் இயறோர் அழிஇ... அரியலங் கழனியார்க்கு' (நற்றிணை 190) என்று குறிப்பிடும் மன்னன் உறையூரைக் கைப்பற்றி அரசாண்டு வந்தனன். 'ஏந்து கோட்டியானைச் சேந்தன் தந்தை' (குறுந்தொகை 258) இவனை நற்றிணையிற் பாடியவர் பெயர் தெரியவில்லை' என்று குறிப்பு எழுதுகிறார்.

சுமார் 50 பக்கங்களுக்கு மேல் பாடினோர் பற்றியும் பாடப்பட்டோர் பற்றியும் செய்திகளை முன்வைக்கிறார். என்.சி.பி.எச். வெளியீடுக்கு கு.வெ. பாலசுப்பிரமணியத்தின் நற்றிணை உரையை வெளியிட்டிருக்கிறது. இந்த தகவல்களுக்கு அவர் மெனக்கெடவில்லை.

நூலின் அமைப்பு பற்றி அட்டவணை, செய்யுள் முதற்குறிப்பு பற்றிய அகரவரிசை, அருஞ்சொற்பொருள் அகரவரிசை, என்று நற்றிணை செய்யுட்களை அணுகுவதற்கு வழியமைத்தவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்வர்கள். என்.சி.பி.எச். இவ்விதமான பகுப்பைச் சற்று மேம்படுத்தியிருக்கிறது. ஆனால் பாடினோர், பாடப்பட்டோர் பகுப்பு சிறு தகவல்களாக மட்டுமே தரப்பட்டுள்ளன. இதற்கு வெகு முன்னதாக பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் அவர்களின் பதிப்பை அடியொற்றி கழக வெளியீடு பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனாரைக் கொண்டு வெளியிட்ட மயக்கம்தரும் பாடல்களை சந்தி பிரித்தும், புதிதாக சில அருஞ்சொற் பொருட்களை சேர்த்தும், புதிதாக 234-வது பாடலை சேர்த்தும் வெளியிட்டிருக்கிறது. என்றாலும் பின்னத்தூரார் விளக்கவுரையையே முதன்மையாகக்கொண்டு வெளியிட்டிருக்கிறது. ஐந்தாவது பதிப்புகளைப் படிக்கும்போது நற்றிணை பின்னத்தூரார் உரையையே முதன்மையாகக்கொண்டு புதிதாகக் கிடைத்த ஒன்றிரண்டு செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. விளக்கவுரையில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் ஆழ்ந்த புலமை வெளிப்பட்டிருக்கிறது. நற்றிணைப் பாடல்களைப் படித்துப் படித்து தோய்ந்ததால் நுண்மான் நுழைபுலத்தோடு அவரால் விளக்க உரைகளையும், உள்ளுறைகளையும் எடுத்துச்சொல்ல முடிந்திருக்கிறது.

தமிழின் முதல் உரை நூலான இறையனார் அகப்பொருள் கருத்துரைத்தல் (சூத்திரத்தின் உட்பொருள் உரைத்தல்) கண்ணழித்தல் (சூத்திரத்தில் சொல் உரைத்தல்) பொழிப்புத் திரட்டல் (சூத்திரத்தின் பொருளைத் தொகுத்துரைத்தல்) அகலங்கூறல் (சூத்திரப் பொருளை தூய்மை செய்வதற்கு கேள்வியும் பதிலுமாக உள்ளுறுத்து விரித்துரைத்தல்) என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் கூறுவர். பின்னத்தூரார் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல் என்று மூன்று நிலைகளில் உரைசெய்திருப்பதோடு நன்னூலர் கூறும் பாடஞ் சொல்லல், உதாரணங்காட்டல், சொல்பொருள் உரைத்தல் ஆகியவற்றையும் கருத்தில்கொண்டு உரையினை எழுதிச் செல்லும் பாங்கினை ஆ. உமாமகேஸ்வரி குறிப்பிடுகிறார்.

பின்னத்தூரார் பாடலுக்கு, திணை, துறை, துறைவிளக்கம், இலக்கண விளக்கம் இவற்றைக்கூறி பின் செய்யுளை எடுத்துக்காட்டி, அதன்பின் செய்யுளின் சொற்பொருளினை விளக்குகின்றார். இதில் அரிய சொற்களுக்குத் தனியே விளக்கம் தருகிறார். விளக்கவுரையில் பாடலில் பயின்றுவரும் மெய்ப்பாடு, பயன் பற்றி குறிப்பிடுகிறார். தாம் கூறவந்தக் கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் மேற்கோள் தருகிறார். செய்யுளில் உள்ள 'பாடபேதத்தினை' குறிப்பிடுகிறார். பின்னத்தூராரின் இத்தனி உரை சிறப்புகளோடு உயர்ந்து நிற்கும் இடம் செய்யுளை கொண்டுகூட்டிப் பொருள் விளக்கும் இடத்தைக் குறிப்பிட வேண்டும்.

'நின்ற சொல்லர் நீடுதோன்றினியர்' என்ற நற்றிணைப் பாடலின் இடையே வரும் 'தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச் சாந்தில் தொகுத்த தீம்தேன்போல' என்ற வரிகளுக்கு, 'தாமரைத்தாது தலைவன் உள்ளத்திற்கும் சந்தனத்தாது தலைவி உள்ளத்திற்கும் உவமையாக்கி இருவரின் கருத்தும் ஒத்தவழி சாந்திலே தீன்தேனிரால் வைத்ததுபோலத் தலைவன் தலைவியால் அன்பு வைத்தான் எனப் பொருந்தவுரைக்க' என்று எழுதுகிறார்.

'இயற்கைப் புணர்ச்சி இறுதியின்கண் நின்னில் பிரியேன் என்றதனை இன்றுகாறும் நிலையிட்டவர் ஆதலின், இனியும் பிரியக்கூடாது என்று அதை அடக்கி நின்ற சொல்லர் என்றாள். யானோர்க்குந்தோறும் எனக்கு இனியராய் என்னை மகிழ்விப்பவர். அம்மகிழ்வுக்கு ஊறுண்டாகப் பிரியார் என்னுங் கருத்தால் நீடு தோன்றி இனியர் என்றார் இதுவும் அதனையே நோக்கி நின்றது. 'உழையமாகவும் பனிப்பவள், பிழையலள் மாதோ பிரிதும் நாமெனினே' எனக் கொண்டவராதலின் 'என்றும் என்தோள் பிரிவு அறியாதவர்' என்ற இதுவும் பிரியார் என்பதனை வலியுறுத்திற்று என்று உரையெழுதியுள்ளார். பசத்தல் - பசலைப் பாய்தல், இது கண்ணாடிமேல், வாயினாலூதிய ஆவிபட்டு அக்கண்ணாடி அழுக்கடைவதுபோல தலைவியின் நெற்றியிலுள்ள ஒளி தலைவனைப் பிரிதலால் மழுங்கித் தோன்றுதல், இதனைப் பீர் எனவும் பொன் எனவும் உரைப்பர் என்று விளக்கம் தருகிறார்.

நீடுதோன்று இனியர் என்றும், தோள் பிரிவு அறியலர் என்றும் கூறியதனால் மெய்ப்பாடு - உவகை, பயன் - ஆற்றியிருத்தல். திணை - குறிஞ்சி, கைக்கோள் - கற்பு என்று நுணுகி விளக்கம் எழுதுகிறார்.

அம்மூவனாரின்

***'கானலஞ் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்***
***நீல் நிறப் புன்னைக்கெழு நிழல் அசையி'***

பாடல் வரிகளுக்கு, பரதவர் புன்னையின் கீழிருந்து, கடலிற் செல்லுதற்குப் பதநோக்கி காற்று மாறியடித்தல் முதலான இல்லாத காலம். அதுகாறும் மீன் வலையை உனக்குந் துறைவனென்றது, தலைவன் சிறைப்புறத்திலிருந்து, தலைவியைக் கூடுதற்கு யாருமில்லாத பதம் பார்த்து, கூடுவதற்கு



ஆராய்ந்து கொண்டிருப்பது', என்று உள்ளுரையான பொருள் விளக்கம் தருகிறார். அதே பாடலில்,

***‘கணநிறை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம்***
***மணல் மடுத்து உரறும் ஓசைக் கழனிக்***
***கருங்கால் வெண்குருகு வெரூம்'***

என்ற அடிகளுக்கு, ‘சகடம் மணலில் மடுத்து முழங்கும் ஓசைக்குக் கழனிநாரை வெருவுமென்றது, தலைவன் சான் றோரை முன்னிட்டு அருங்கலன் தந்து வரைய வரும் மண முர சொலி கேட்பின், அலர் எடுக்கும் ஏதிலாட்டியர் வாய்வெருவி ஒடுங்காது நிற்பது என்றதாம்'. சக்கரம் மணலில் உருள நரநர வென ஓசை எடுப்பதைக்கேட்டு அருகில் உள்ள கழனிநாரை பயந்து பறக்கும். அதுபோல தலைவன் தலைவியை மணம்

முடிக்க விரும்பி வருவதைக் காணும் பரத்தையார் ஊரெங்கும் அலர் தூற்றுவர் என்று பொருத்தி விளக்கம் காண்கிறார். மெய்ப்பாடு - அச்சத்தை சார்ந்த பெருமிதம், பயன் - வரைவு கடாதல் என்று சுட்டுகிறார்.

ஒரு தலைவியின் காதல் விவகாரத்தை வெளிப்படையாக அலர் தூற்றாமல் தங்கள் முகபாவனைகளாலே கோடிட்டுக் காட்டி அலர் தூற்றும் வரிகளுக்கு அற்புதமான சமூக உளவியல் விளக்கம் காண்கிறார். ஏழைப்பெண் அல்ல. அந்த ஊரில் செல்வச் செழிப்பில் உள்ள பெண் என்பதைக் கொண்டு அணுகுகிறார்.

***'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி***
***மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி***
***மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற'***

என்ற வரிகளுக்கு, தலைவி எட்டியும் சுட்டியும் காட்டப்படும் குலத்தினல் அல்லாதலால், வாயினாற் கூறலும் ஏறிட்டுப் பார்த்தலும் குற்றமாகும் என்றஞ்சிக் கடைக்கண்ணால் நோக்கிக் குறிப்பாகக் கூறுவது குறிப்பித்ததாம். அங்ஙனம் பெருங்குடியிலே பிறந்து பெருநாணமும் உடையாள் ஆயினாள் ஒரு சிறுமி. காமந் தலைக்கொண்டு உடன் போயினாள் என்னேயென வியப்பெய்தலின் மூக்கின் நுனியின் கண்ணே சுட்டுவிரல் சேர்த்தினமை கூறியதாம். இதுவும் வாயினாலே கூற அஞ்சினமை குறிப்பதாயிற்று. 'அலரிற்தோன்றும் காமத்திற் சிறப்பே' என்று தொல்காப்பியர் சூத்திரம் வகுத்துள்ளமையும் எடுத்துக்காட்டுகிறார். மெய்ப்பாடு - பெருமிதம் என்றும் பயன் - போக்கு உடன்படுதல் என்றும் குறிப்பிடுகிறார்.

***'அம்மவாழி தோழி நம்வயின்***
***யானோ காணேன் அதுதான் கடிந்தே...'***

என்ற வெள்ளைக்குடி நாகனாரின் பாடலில் தோழி, தலைவியிடம் கொடிய விலங்குகள் உலவும் காட்டு வழியில் வருகிறான். அங்கே கடும்கோபம் கொண்ட புலியானது யானையை அடித்து வீழ்த்துகிறது. யானையின் குருதி பருகிய புலியானது வாயில் ஒட்டி பிசுபிசுக்கும் ரத்தத்தை முதிய வேங்கை மரத்தின் அடிப்பகுதியில் துடைக்கும். அவ்விதமான பாதை வழியில் வருகிறான். எனவே விரைந்து மணந்துகொள்வது நன்று என்பதாகக் குறிப்புணர்த்தும் பாடல் இது.

இதில் புலியின் செய்கையை மனித மனங்களோடு பொருத்துகிறார் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். 'புலி வேழத்தின் குருதி பருகி வேங்கை மரத்திலே சென்று துடைக்குமென்றது, ஊராரெடுக்கும் அலரானது என்னை வருத்தி அன்னை காதினுஞ் சென்றுவிட்டதென்பதாம்' என்கிறார்.

இப்பாடலுக்கு பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் தோழியின் எடுத்துரைக்கும் திறத்தை இன்னும் சிறப்பாக விளக்கியிருக்கிறார். இது கூடுதல் தகவலுக்காக. 'கல் அதர் மன்னும் கால் கொல்லும்' என்று இப்பாடலில் வரும் ஒரு வரிக்குப் பாடம்கொண்டு.

'நாடன் வரூஉம் பாதை யான் காணேன் ஆயினும் அஃது என் புறக்கண்ணிற்குக் புகுந்து அகக்கண்ணில் தோன்றி கல்லதராய்க் கால்கொல்லும் கனையிருளாய்க் கண்கொல்லும் என் றாள் என்க' என்கிறார். தன் அகக்கண்ணால் ஆபத்தான காட்டுவழி எத்தமையது என்று கண்டு சொல்கிறாள் என்கிறார்.

ஐயரவர்கள் பாட்டு முழுமைக்கும் உள்நுழைந்து உரை காண்பார். வரிகளை முன்பின் மாற்றிக்கூறி அழகான சித்திரத்தைப் பாடலில் உருவாக்கிக் காட்டுவார். வருவித்துக் கூறத்தக்க இடத்தில் வருவித்து விளக்குவார். சங்க நெறியும் மரபும் குன்றாமல் மிகப் பொருத்தத்துடன் எடுத்துரைப்பார். ஒரு பாடலில் தலைவி இல்லக் காவலில் இருக்கிறாள், அவள் தனிமையில் இருந்தாலும் முன்பு அவன் மார்பை சேரத்தழுவியிருந்த நினைவிலே இருக்கிறாள் என்றும், 'ஒரு மகள் உடையேம்' என்ற செய்யுளடிக்கு அவளது தாயானவள் 'உங்களைப் போல பல புதல்வியரைப் பெறவில்லை. (நான் ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என்று) ஒரே ஒரு புதல்வியைப் பெற்றிருக்கிறேன்' என்று கூறுவதாக பொருள்விளக்கம் தருவார்.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் நற்றிணைப் பதிப்பைப் படிக்கும்போது ஒன்று தோன்றுகிறது. முதல் 300 பாடல்கள் வரை நிதானமாக ஆழ்ந்து உரை எழுதியுள்ளார். பின்னால் வரும் 100 பாடல்களுக்கு குறிப்புகள்போல எழுதிச் சென்றிருக்கிறார். நோய் முற்றியதால் விரைவாக முடித்திருக்கவேண்டும் என்று தெரிய வருகிறது.

சில பாடல்களுக்கு இன்னும் பொருத்தமான விளக்கம் கண்டிருக்கலாம் என்பதை கு.வெ. பாலசுப்பிரமணியனும் பெருமழைப் புலவரும் தொட்டுக்காட்டியிருக்கின்றனர். இது பின்னத்தூராரின் உரைச்சிறப்பைக் குறைத்து மதிப்பிடுவதாக ஆகாது. ஆற்றாது காதல் உணர்வு மேலிட தலைவி நாணத்தை கைவிட்டுவிட நேரும் சந்தர்ப்பங்களும் அரிதாக நிகழும். இதற்கு உரை எழுதும்போது 'குற்றமற்ற கற்பினையுடைய மடவாள் ஒருத்தி தன் குழந்தையைப் பலி கொடுப்ப வாங்குதலும், அவள் அதனைக் கைவிட்டாற்போல இதுநாள் வரை காப்பாற்றி வளர்த்துவந்த நாணத்தை விட்டொழித்தாள்' என்று எழுதியிருப்பதற்கு கு.வெ.பா சற்று மெருகேற்றி உரை வரைந்திருக்கிறார். 'குற்றமற்ற கற்பினையுடைய அறிவற்ற ஒருத்தி தன் குழந்தையைப் பேய் வாங்கிக்கொள்ளக் கைவிட்டதைப்போல முன்னாளிலிருந்து நெடிதாக எம்மோடு வந்த நாணத்தையும் நாங்கள் கைவிட்டோம்' என்று சற்று துலக்கமாக விளக்கியிருக்கிறார்.

தலைவனுடன் உடன்போக்கு சென்ற தலைவி வறுமையுடன் வாழ்கிறாள். தன் தந்தையின் செல்வச் செழிப்பை மறந்து ஒரு பொழுது உண்டு ஒரு பொழுது உண்ண வழியின்றி வாழ்கிறாள். இதற்குப் பின்னத்தூரார், 'ஓடுகின்ற ஆற்றிலே இடையிடையே நீர் தேங்கி இருப்பதுபோல' என்று ஒப்புமைக் காண்கிறார். ஓடும் நீரில் நீர் இடையிடையே தேங்காது. வறண்ட ஆற்று மணலில் கருமணல் இடைவிட்டு இடைவிட்டு படிந்திருக்கும். அதைத்தொட்டு ஒப்புமை சொல்லியிருந்தால் சரியாக இருக்கும்.

‘அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி’ என்ற வரியில் வரும் ‘கழங்கு’ (நற்றிணை 47) என்ற சொல்லிற்கு வேலன் வெறியாட்டுக்கு முன்னான சித்திரம் எப்படி இருக்கும் என்று காட்டுகிறார். ‘கழற்சிக்காய் வித்துப் பலவற்றை முருகன் முன் வைத்து, வேலன் தன் தலையில் ஆடை சூடிக் கையில் பல தலைகளிற் சிறு பைகளைக் கட்டிய கோலொன்றை ஏந்தி அக்கோலிற் கழங்கு வித்துக்களை வாரி கட்டிவைத்திருக்கும் குறிப்புக் காணுகின்ற ஒருவகைக்குறி’ என்று அக்கால வழக் கத்தைக் கண்டுச் சொல்கிறார்.

‘வில்லாப்பூவின் கண்ணி சூடி’ (நற்றிணை 146) என்னும் வரி யில் வரும் வில்லாப்பூ என்பதற்கு விலைப்படுத்தற்கு ஆகாத பூ என்று குறிப்புகாட்டி, பூளை, ஆவிரை, எருக்கம், உழிஞை போன்ற பூக்கள் சூடப்படாதவை. விலைபோகாத பூக்கள் என்று அழகான உரை தருகிறார்.

தலைவன் பிரிந்து சென்றதால் காதல் நோய்க்கு ஆட்படுகி றாள். அவனளித்த நோய்க்கு மாற்றுமருந்தில்லை. நோய் தீர வேண்டுமென்றால் அவனே மருந்தாக இருக்கிறான். அவன் வந்து சேராமல் நோய் தீராது என்பதனை நற்றிணை 80-வது பாட்டில் வரும்.

***‘பெருந்தோள் குறுமகள் அல்லது***
***மருந்து பிறிதில்லையான் உற்ற நோக்கே’***

இரண்டடிகளை எடுத்துக்காட்டி, பின் இதே அனுபவத்தை வள்ளுவரும் எடுத்தாண்டிருப்பதை ஒப்புமைக்காட்டுகிறார்.

***‘பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை***
***தன்நோய்க்குத் தானே மருந்து’***

நற்றிணை 85-ம் பாடலில் ‘கொல்லிப்பாவை’ என்ற சொல் ஆளப்பட்டுள்ளது, அதன் தன்மைக்குரிய புராணச் செய்தி யொன்றை குறிப்பிடுகிறார். ‘தேவரையும் முனிவரையும் துன்பு றுத்த வருகின்ற அவுணரும் அரக்கரும் அப்பாவையின் நகை யைக் கண்டு மயங்கி உயிர்விடும்படி தேவதச்சனாக்கி வைத்த பெண் வடிவம் கொண்டது’ என்கிறார். இன்னும் நுணுக்கமாக அவுணர், அரக்கரில் வரும் வாடை கொல்லிப் பாவையின் மீது பட்டாலே பயங்கரமாக சிரித்தே கொன்றுவி டும் தன்மை கொண்டது என்கிறார். இந்தச் சிரிப்பை முப்புரம் எரித்த சிவபெருமானுடன் ஒப்புமைக் காட்டுகிறார்.

127-வது பாடலில் ஈனாப்பாவை என்னும் சொல்லிற்கு ‘தான் பெறாது கோரையாலே ஓர் உருவம் செய்துவைத்துத் தன் மகன் என முறைமை பாராட்டும் பாவை’ என்றும் ‘சாறு’ என்ற சொல்லிற்கு ‘ஊரில் நடக்கும் திருவிழாவை, ஊர்ப்பொது நிலத்திலிருக்கும் குயவன் அங்குள்ள வீடுகள்தோறும் கூறிச் செல்லும் வழக்கம்’ என்றும் ‘மன்றப் பண்ணை’ என்றும் சொல் லிற்கு ‘ஊர்பொதுப் பனை என்றுகூறி, இப்பனையில் ஊர் பொதுத் தெய்வத்தையும், குலதெய்வத்தையும் ஏற்றி தொன் றுதொட்டு வணங்கி வரும் நெய்தல் நிலத்து வழக்கம்’ என்றும் பற்பல செய்திகளுக்குள் உறைந்திருக்கிற பண்பாட்டு வழக் காறுகளை எடுத்துரைக்கிறார்.

***‘ஏதிலாளன் கவலை கவற்ற***
***ஒருமுலை அறுத்த திருமா உண்ணி’***

- நற்றிணை 216

என்ற வரியில் வரும் திருமாவுண்ணி என்பது கண்ணகி கதை யைக் குறிக்கிறது என்று முதன்முதல் உரை எழுதுகிறார்.

***‘அருமீன் பயந்த அறஞ்செய் திங்கள்***
***செஞ்சுடர் நெடுங்கொடி போல’***

என்ற நற்றிணை 202-ம் பாடலில் வரும் அறுமீன் என்பது கார்த்திகை நாள். அது நிறைமதியொடு சேர்கின்ற திங்க ளைக் கார்த்திகைத் திங்களென்ப. அத்திங்களில் நீராடி விளக்கேற்றி வைத்துப் பார்ப்பார்கு அளித்தல் அறமெனப்ப டுதலின் அறம்செய் திங்கள் என்றார்’ என்று பெருங்கடுங்கோ பாடலுக்கு பார்ப்பனர்களிடம் இருந்த வழக்காறை எடுத்துக் காட்டுகிறார்.

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் சங்க இலக்கிய நூல்க ளில் சிலவற்றிற்கு உரையெழுதி பதிப்பிக்க விரும்பினார். காலம் அவருக்கு கொடுத்து வைக்கவில்லை, தொல்காப்பி யத்தை திரும்பத் திரும்பக் கற்று அதில் துறைபோகியவராக விளங்கினார். மாணவர்களுக்குத் தமிழ் ஆசிரியராக இருந்த தால் இலக்கணத்தில் நல்ல புலமை பெற்றிருந்தார். எட்டுத் தொகை நூல் முழுக்க அவருக்கு வாசிப்பு இருந்தது. திருக்கு றளை சரியாக ஒப்புமைக்கு எடுத்துரைக்கும் திறன் பெற்றி ருந்தார். ஒரு பதிப்பாசிரியருக்குரிய எல்லாத்தகுதியும் இருந் தது. பாடபேதம் காணுவதில், கொண்டுகூட்டிப் பொருள் கொள்வதில், சொற்களுக்குப் பண்பாட்டின் அடிநாதத்திலி ருந்து பொருள் காணுவதில், உள்ளுறைந்திருக்கும் பொரு ளுக்கு உரை காணுவதில் சமூக உளவியல் பின்னணியில் பாடல்களை அணுகுவதில் நல்ல திறன் பெற்றிருந்தார். நற்றி ணையைப் பதிப்பித்து அதற்கு உரையெழுதியிருக்கும் பல் வேறு திறன்களை முழுக்க இக்கட்டுரையில் எடுத்துக்காட்ட வில்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அவரது சிறப்பான அணுகுமுறைக்கு அங்கங்கே தொட்டுமட்டும் காட்டியிருக்கின்றேன்.



venugopal@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com    Fax: 1-416-849-0594    Tel: 1-416-857-6406***

கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்

(2024-09-20, 2024-09-21, 2024-09-22)

கனடா




**குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு அமையவேண்டும்.**

இணையத்தளம் : www.tolkappiyam.ca

தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152




### தொகுப்புரை:

திருக்குறள், நாடு, மொழி, இனம், மதம் முதலிய எல்லைகளைக் கடந்து, எல்லோரும் ஓரினம் என்னும் கோட்பாட்டை அடிநாதமாகக் கொண்டு, உலக சமாதானம், உலக அமைதி, சமுதாய நல்லிணக்கம் ஆகியவை தொடர்பான கோட்பாடுகளை அறிவியல் வழி நின்று வகுத்த உலகப் பொதுமறையாகும்.

ஆசீவகம், வைதீக மதத்துக்கெதிராகத் தோன்றிய, சிறந்த அறிவியற் கோட்பாடுகளைக் கொண்ட ஆன்மீக மதமாகும். ஆசீவகம், திருக்குறளின் அடிப்படைக் கோட்பாடுகள் சில வற்றுடன் ஒத்துப் போவதாக இருந்தாலும் பெருமளவில் வேறானது.

திருக்குறள், மனித சமுதாயம் சிறப்புற வாழ வழிசமைக்கும் அரிய ஒழுக்கநெறிகளை வகுத்தும் தொகுத்தும் கூறும் வாழ்வியல் வழிகாட்டி. திருக்குறள், மதங்களுக்கு அப்பாற்பட்டு, எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் எவ்வினத்திற்கும் ஒக்கப் பொருந்தும் நூல் என்பதை நிறுவுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

- ஆய்வுச் சிக்கல் - ஆசீவக மெய்யியல் பற்றிய நூல்கள் எதுவும் கிடைக்காத நிலையில், பௌத்த, சமண இலக்கியங்கள், பிற ஆவணங்கள், தொல்லியல் சான்றுகள் முதலியவற்றிலிருந்து பெறப்பட்ட குறிப்புகளிலிருந்தே ஆசீவக மதம் பற்றி அறியப்படுகிறது. ஆசீவகக் கொள்கைகளாக அறியப்படுபவற்றைத் திருக்குறளுடன் ஒப்பாய்வு செய்வது சிக்கலானது.
- கருதுகோள் - தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்நாட்டில் வளர்த்தெடுக்கப்பட்டு வந்த அறிவியல் கருத்துகளைத் தொகுத்து, உலகத்தவர் அனைவருக்கும் பொருந்தும்படியாகக் கூறும் பொது நூல் திருக்குறள். இது வாழ்நாள் முழுமைக்கும் துணை நின்று வழிநடத்தும் வாழ்வியல் நூல். உலகப் பொது மறை என்பது கருதுகோளாகும்.
- ஆய்வியல் நெறி - இந்த ஆய்வில், அறிவியல் ஆய்வு, ஒப்பாய்வு, சமூகவியல் ஆய்வு, வரலாற்று ஆய்வு முதலிய ஆய்வியல் நெறிமுறைகள் கையாளப்பட்டுள்ளன.

**சான்றுகள்:**

முதன்மைச் சான்றுகள் - திருக்குறள், மூலமும் உரைகளும், ஆசீவகம் என்னும் தமிழர் அணுவியம், ஆசீவகமும் அய்யனார் வரலாறும் (பேரா.க. நெடுஞ்செழியன்), தமிழகத்தில் ஆசீவகர்கள் (முனைவர் ரா. விஜயலெட்சுமி), The Doctrines of the Ajivikas - Arthur Llewellyn Basham, ஆசீவகம் பற்றிக் கூறும் வடமொழி, தமிழ் இலக்கியங்கள், மணிமேகலை, பெரிய புராணம், புறநானூறு, நீலகேசி, அப்பர் தேவாரம் முதலியவை. கல்வெட்டுகள்.

**துணைச் சான்றுகள் – திருக்குறள் ஆய்வுகள்:**

ஆய்வு அமைப்பு - இயல் 1 - திருக்குறள், இயல் 2 - ஆசீவகம், இயல் 3 - ஒப்பாய்வு, இயல் 4 - முடிவுரை.

### இயல் 1

### திருக்குறள்:

பொருளியலாகிய பொதுவாழ்விற்கும் இன்பவியலாகிய தனிவாழ்விற்கும் அடிப்படை அறம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்த ஒழுக்க நூல் திருக்குறள். இந் நூல், ஏறக்குறைய பொ.ஆ.பி. 1-ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

செம்மொழி இலக்கியங்கள் தோன்றிய சங்க காலத்தின் பிற்கூறில் திருக்குறள் என்னும் அற இலக்கியம் எழுந்ததற்குரிய காலப் பின்னணி பற்றிய புரிந்துணர்வு இந்த ஆய்வின் முன்னோடியாக அமைவது முக்கியமானது. ‘இலக்கியம் காலத்தின் கண்ணாடி’ என்பது மறுக்கமுடியாத உண்மை. அவ்வக் கால அரசியல், சமூகப் பொருளாதாரப் பின்னணியில் மக்கள் வாழ்வின் உயர்ந்த கூறுகளை அல்லது மக்களுக்குத் தேவையானவற்றை எடுத்துக்கூறும் இலக்கியங்கள் எழுவது தான் நியதி.

அகமும் புறமும் பாடுபொருளாக இருந்த காலப் பகுதியை அடுத்து வாழ்ந்த திருவள்ளுவர், தான் வாழ்ந்த காலத்திற்கும் தன் நாட்டு மக்களுக்கும் மட்டும் உரிய ‘கோட்பாடுகளை’ வகுக்காது, எக் காலத்திற்கும் எந் நாட்டினருக்கும் ஏற்றதான ‘வாழ்வியற் கோட்பாடுகளை’ இத்துணை சிறப்பாக வகுத்திருப்பது வியக்கத்தக்கது.

### திருக்குறள் எழுந்த காலப் பின்னணி:

தொல்காப்பியம், தமிழில் இன்று கிடைக்கும் நூல்களுள் தொன்மையானது. தொல்காப்பியத்தின் காலம், பொ.ஆ.மு. 711-ம் ஆண்டு என்பது அறிஞர் கருத்து.

தொல்காப்பியம், வரலாற்றில், தமிழ் மொழி மிக உயர்நிலையிலிருந்த ஒரு காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

தொல்காப்பியத்தின் சிறப்பிற்குக் காரணமான 'வளம் மிக்க இலக்கியங்கள்' தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் வழக்கிலிருந்து காலத்தால் அழிந்திருக்கவேண்டும்.

தொல்காப்பியம், திணைக் குழுக்கள் 'குழு' நிலையிலிருந்து




அரசுகளாக விரிவாக்கம் பெறும் அரசியல் நிலையைக் காட்டுகிறது.

***'வேந்திடைத் தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்***
***போந்தை வேம்பே ஆர் என வரூஉம்***
***மாபெரும் தானையர் மலைந்த பூவும்'***

- தொல். பொருள். புறத்திணையியல் நூ. 5

என்றும்,

***'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்***
***நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்***
***யாப்பின் வழியது என்மனார் புலவர்'***

- தொல். பொருள். செய்யுளியல் நூ.75

என்றும் கூறும் தொல்காப்பிய நூற்பாக்களின் பகுதிகள் வாயிலாக,

- சேர, சோழ, பாண்டியர் அவரவர் அடையாளப் பூவால் அறியப்பட்டதும்,
- அவர்கள் மூவரும் நாற்பேரெல்லை கொண்ட தமிழ் நாட்டை ஆண்டதும்,
- 'என்மனார் புலவர்' என்று குறிப்பிடுவதன் மூலம், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமே அரசுகள் உருவாகிவிட்டன என்பதும், அறியக்கிடக்கிறது. அத்துடன், தொல்காப்பியம், 'நிலந்தரு திருவிற் பாண்டியன் அவை'யில் அரங்கேறியது என்னும் பாயிரத் தகவலும் தொல்காப்பியர் காலத்தில் நிலையான அரசுகள் இருந்ததை உறுதி செய்கின்றது.

தொல்காப்பியத்தை அடுத்து, திருக்குறள் எழுவதற்கு முன்பாக, தமிழகம் 'வீரயுகம்' என்று போற்றப்படும் மன்னராட்சிக் காலத்தைக் கண்டிருக்கிறது. மன்னராட்சி சிறப்புற்றிருந்த இக் காலப் பகுதியில் செம்மொழி இலக்கியங்களான எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகை இலக்கியங்கள் எழுந்தன. இவை, அகம் என்னும் காதல் வாழ்க்கையையும் புறம் என்னும் காதல் தவிர்ந்த ஏனைய வாழ்வியல் ஒழுக்கங்களையும் காட்டி நிற்பவை. சங்க இலக்கியங்களின் காலம், பொ.ஆ.மு. 5 முதல் 1-ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி என்பது இன்றைய ஆய்வாளர் கருத்து. அகழாய்வும் இக் கருத்தோடு ஒத்துக் காணப்படுகின்றது.

எனவே, திருவள்ளுவர் காலத்திற்கு முன்னதான காலப்பகுதியில், (பொ.ஆ.மு. 8 முதல் 1-ம் நூற்றாண்டு வரை) தமிழ் நாடு முடியாட்சியின் கீழ் இருந்திருக்கிறது.

அரசு விரிவாக்கம் காரணமாகச் சங்க காலத்தில் நடைபெற்ற போர்களுக்குக் கணக்கேயில்லை. தமிழ் நாடு, சேர, சோழ, பாண்டியர், வேளிர் குடிகள், குறுநில மன்னர்கள் என்று பல்வேறு இனக் குழுக்களின் ஆதிக்கப் போராட்டத்தில் பிளவுபட்டிருந்தது. அரச விரிவாக்கம், அரசுரிமை, வஞ்சினம், புகழ், புலவர்களால் பாடப்பெறல் என்று பல்வேறு காரணங்களால் சங்க காலத்தில் இடையறாது பெரும் போர்கள் நடைபெற்றன.

தலையாலங்கானத்துப் போர், வெண்ணிப் பறந்தலைப் போர், வாகைப் பறந்தலைப் போர், திருக்கோவலூர் போர், தகடூர் போர் என்று இவை போன்ற கொடூரமான பெரும் போர்களைத் தமிழகம் சந்திக்க நேர்ந்தது. இப் போர்களின் கொடுமை பற்றி, தொல்காப்பியம் பொருளதிகாரம், புறத்திணையியலும் சங்க இலக்கியங்களும் தரும் தகவல்கள் பயங்கரமானவை. இப் போர்கள், பல பேரரசுகளை நிலைகுலைய வைத்தன.

### போர்களின் விளைவு:

- வளம் மிக்க நாட்டுப் பகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டன, பொருளாதாரம் பெரும் சரிவைக் கண்டது. வறுமையும் அதன் பயனான தீயொழுக்கங்களும் மிகுந்தன.
- ஆண்கள் தொகை தாழ்ந்தது. பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர், குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டார்கள், பரத்தைமை ஒழுக்கம் தலைதூக்கியது.
- தமிழ் மன்னர்கள் வலுவிழந்தனர், மக்களைப் பாதுகாப்பாரற்ற நிலையில் வடநாட்டார் வருகையால் தமிழ் மொழியும், தமிழர் பண்பாடும், தமிழ் நாடும் கேள்விக்குறியாயின.
- வடமொழியும் வடநாட்டார் மதங்களும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. இந்தச் சூழலில் அற நூல்கள் எழுந்தன.

திருக்குறள், இத்தகையதொரு வாழ்வியல் நூலாக அமைவதற்கு அவர் வாழ்ந்த காலப் பின்னணியே அடிப்படையாக அமைந்தது எனலாம். வாழ்வியல் இலக்கியமான திருக்குறள், ஒரு குறிப்பிட்ட இனம், மதம், மொழி, நாடு என்னும் சிறு எல்லைகளுள் அமையாது, அவற்றைக் கடந்து, மனித குலத்திற்கேயுரிய பொது நூலாக இயற்றப்பட்டிருக்கிறது.

திருக்குறள் கூறும் கருத்துகள் அனைத்தும் ஒரு குறுகிய காலப்பகுதியில் எழுதப்பட்டதாகவும் கொள்ளமுடியாது. சங்கப் பாடல்கள் திருக்குறட் கருத்துகள் பலவற்றைத் தாங்கி வந்திருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. தமிழ் நாட்டில், தமிழ் இனத்திடையேயிருந்து வந்த கருத்துகளின் மகுடமாக, தொகுதியாகத் திருக்குறள் வெளிவந்திருக்கிறது என லாம்.

திருக்குறளின் உலகத்தவர் அனைவரையும் உள்ளடக்கும் பொதுத் தன்மையையும் அதன் சிறப்புகளையும் கண்ட இத்தாலிய நாட்டுக் கிறித்தவப் பாதிரியார், யோசேப்பு பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் பொ.ஆ.பி. 1730-ம் ஆண்டில் திருக்குறளை முதல் முதலாக இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார்.

'பிரெஞ்சு எழுத்தாளர்கள் வால்ட்டர், ரூசோ போன்றோர் படைப்புகளால் பிரெஞ்சுப் புரட்சியும், கார்ல் மாக்ஸ், லெனின் ஆகியோர் எழுத்தாற்றலால் சோவியத் புரட்சியும் எழுந்தது



போலத் தமிழகத்தில் திருக்குறளைத் தொடர்ந்து சமுதாய மாற்றம் நிகழாதது ஏன்?'

என்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நியாயமான வினாவிற்கு அவரே விடையும் தருகிறார்.

'திருக்குறள் அப்பட்டமான இலக்கியமாகக் கருதப்பெற்றுப் பதவுரை, பொழிப்புரை காணும் நிலையில் மட்டுமே பயன்படுத்தப் பெற்றது. அதை ஒரு வாழ்வியலாகப் பார்க்கும் அறிவியல் பார்வை யாருக்கும் வரவில்லை. அண்மைக் காலமாக இந்நிலை மாறி வருகிறது. 'திருக்குறளுக்கு இயக்கங்கள் தோன்றிப், புது உருக் கொடுத்துக் கொண்டு வருகின்றன என்று ஆசிரியர் எழுதியிருப்பது சரியான கணிப்பு.'

திருக்குறட் கருத்துகள் புத்துயிர் பெறுவதற்கு, திருக்குறள் பற்றிய உயர்ந்த நோக்கமும் துணிவும் கொண்ட உயர்நிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும், உயர் சிந்தனை வேண்டும், வினாக்கள் எழுப்பப்பட வேண்டும், ஒரு சமூகத்தில் உயர்ந்தோர் தோன்றுவது அந்தச் சமூகம் உருவாக்கும் சூழலைப் பொறுத்தது.

'அருவினை என்ப உளவோ கருவியான் காலம் அறிந்து செயின்' - திருக்குறள் 483, இன்றைய பணியை இன்றைய கருவி கொண்டு செய்தல் வேண்டும் என்பதே இதனால் அறியப்படும் அறிவுரை. 'சிறிய கட் பெறின் எனக்கீயும் மன்னே' மது அருந்தலையும் புலால் உண்ணுதலையும் பரத்தமை ஒழுக்கத்தையும் வாழ்வியல் நியதியாக ஏற்றுக்கொண்ட ஒரு சமூகத்திற்கு அவை தவறு என்று எடுத்துக் கூறி அம் மரபுகளைத் தகர்த்தெறிந்தார். இத்தகைய பின்னணியில் தான் திருக்குறள் எழுதப்பட்டது.

முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவரின் நல்லாட்சி பற்றிய புரிந்துணர்வு மிக உயரியது.

திருக்குறட் கோட்பாடுகள் - திருக்குறள் காலம் கடந்து வாழ்வதற்குரிய காரணங்களாக அறியப்படுபவை ஐந்து:

- மெய்யறிவுச் சார்புடைமை
- பொதுமை நோக்கு
- அறிவியல் அணுகுமுறை
- மனித முயற்சி
- இலக்கியல் இணைந்த இயல்பியல் காணல் (A possible ideal world)

## மெய்யறிவுச் சார்புடைமை:

குறள் பெரும்பாலும் மெய்யறிவுச் சார்புடையது. இன்று, அறிவியல் உலகம் கண்ட எண்ணற்ற உண்மைகள், சாதனங்கள் முதலியவை பற்றி வள்ளுவர் எண்ணிப் பார்த்திருக்க முடியாது. நாளாந்தம் மாறிவரும் கல்வியறிவு பற்றிப் பேசுவதை வள்ளுவர் தவிர்த்திருக்கிறார். இது அவரது சிந்தனைத் தெளிவைக் காட்டுகிறது. ஆனால், மெய்யறிவில் நாம் அதேயளவு வளர்ச்சி பெற்றவர்கள் என்று கூறமுடியாது.

வள்ளுவர், உலகம் பற்றியோ அதன் உருவம், பரிமாணம், சுழற்சி பற்றியோ அல்லது விலங்குகள், தாவரங்கள் பற்றியோ விபரமாக எதுவும் கூறவில்லை. இவை மாறும் இயல்பு கொண்டவை. மாறும் இயல்பு கொண்ட எதையும் அதிகம் பேசவில்லை.

மெய்யறிவு, காலத்துக்குக் காலம் மாறும் தன்மை கொண்டதல்ல. கடந்த 50,000 ஆண்டுகளின் மனித மூளையின் பரிமாணத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்பது அறிவியல் அறிஞர் கருத்து. மெய்யறிவுத் துறையில் ஏற்பட்ட மாறுதல்கள், அறிஞர் கூறியவை உண்மையாயின், வள்ளுவர் அன்று கூறியவை இன்றும் பொருந்தும்.

காட்டாக:

***'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்***
***ஞாலத்தின் மாணப் பெரிது'***

இக் குறளின் பொருள், மனிதர் சமூகமாக வாழும் காலம் வரை பொருந்தும். இதுபோன்ற நூற்பாக்களே குறளில் அதிகம்.


***'யாகாவாராயினும் நா காக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'***

*'தொட்டனைத்து ஊறும் மணங்கேணி மாந்தர்க்கு கற்றனைத்து ஊறும் அறிவு'*

இவை போன்ற பல நூறு குறள்களின் பொருள் மனித சமுதாயம் என்றென்றும் ஏற்கத்தக்கவை. இவை மெய்யறிவின் பாற்படுபவை.

'இயன்றவரை மனித சமுதாயத்தின் முழுமை பற்றியும் எண்ணி, அதன் இயல்புகளை ஆய்ந்து அதன் குறை நிறைகளைத் தெரிந்து, கரும்பிலிருந்து சாறு பிழிவது போல மானிட வாழ்வின் இயற்கையிலிருந்து நிலைக்கக்கூடிய, அதே சமயத்தில் பயன்படக்கூடிய சில உண்மைகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார் வள்ளுவர்.

அரசியல் அமைப்புகள், ஆட்சி முறைகள், பொருளாதாரத்



தத்துவங்கள், சமுதாயப் பழக்க வழக்கங்கள் காலத்தாலும் இடத்தாலும் மாறலாம். இவற்றையெல்லாம் கடந்து மனித சமுதாய வாழ்வில் நிலைத்து நிற்கும் அடிப்படைகள் சில உள.

வள்ளுவர் இயன்றளவில் இந்தளவில் நின்று, வாழ்வியல் நெறி முறைகளை வகுத்திருக்கிறார். குறளின் இந்தக் கூறு காலம், இடம் கடந்தும் நிற்கத் துணை புரிகிறது' என்கிறார், டாக்டர் வா.செ. குழந்தைசாமி.

'திருக்குறள் உலகப் பொதுமறை', 'வாழ்வியல் நூல்' என்றெல்லாம் உயர்வாகப் பேசப்படுவதற்குரிய காரணம் என்ன? அவர், மற்ற நூலாசிரியர்களை விடப் புதிதாக என்ன கூறியிருக்கிறார்? அதன் பயன்பாடு தான் என்ன? என்பன போன்ற வினாக்கள் ஆரோக்கியமானவை, வரவேற்கத்தக்கவை. வினாக்களே ஆய்வின் வித்தாக அமைகின்றன.

- 'தமிழ் மறை' எனப்பட்டாலும் மதநூல் வரிசையில் இடம் பெறாத மறைநூல் வள்ளுவம். திருக்குறளை யாரும் பிரச்சாரம் செய்யவில்லை.
- திருக்குறள் எழுதப்பட்ட காலத்திலிருந்து இரு நூற்றாண்டுகளைக் கடந்து வந்திருக்கிறோம்.
- வேளாண் சமூகமாக இருந்த நிலையைக் கடந்து, தொழில் சமூகமாக வளர்ந்து, இன்று கல்விச் சமூகமாக உயர்ந்திருக்கிறோம்.
- முடியாட்சி மாறிக் குடியாட்சி வலுப் பெற்றிருக்கிறது.
- சமத்துவம் முதலாய பொதுவுடமைக் கொள்கைகள் வளர்ந்துவிட்டன.
- மக்கள் சமூகம் மாற்றத்திற்கு உரியது.

'திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்' என்பது முறையான ஆய்வுக்குட்படுத்தக்கூடியது. முறையான ஆய்வுக்குட்படுத்தப்பட்டதா? ஆயப்பட்டு, எதிரான முடிவு வருமானால் அது தானாகவே அத் தகுதியை இழந்து விடும்.

வள்ளுவரது சமூகத்தில் எழுப்பப்பட்ட சில வினாக்களுக்குரிய விடைகள், இன்றைய சூழலுக்கும் பொருந்தும். அப்படியாயின், அது எத்துணை பெரிய சாதனை, எத்துணை ஆய்வுகள் இந்தச் சாதனைக்குத் துணை நின்றிருக்கின்றன.

- திருவள்ளுவர், மனித வாழ்வில் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதும் உலக மக்கள் எல்லாருக்கும் பொருந்துவதுமான அடிப்படைகளைக் கருத்தில் கொண்டே 'வாழ்வியல் நெறிமுறைகளை' வகுத்திருக்கிறார். இதுவே, 'திருக்குறள் காலங் கடந்தும் வாழ்வதன் இரகசியமாகும்.'
- திருவள்ளுவர், கையாண்டிருக்கும் சில சொற்களுக்கு விளக்கம் கொடுக்கவில்லை. விளக்கம் கொடுப்பது, சில சமயங்களில் ஆசிரியருக்குக் 'கட்டுபாட்டை' ஏற்படுத்தலாம்.
- காலம் கடந்து நிற்கும் ஒரு வாழ்வியல் என்பது அந்தந்தக் காலத்திற்கு ஏற்றதாக மட்டும் அல்லாமல் பயன் மிக்கதாகவும் இருக்கவேண்டும்.
- திருக்குறள் கோட்பாடுகளில் பெரும்பாலானவை மெய்யியல் துறை சார்ந்தவை.

## திருக்குறளின் பொதுமைப் பண்பு:

உலக ஒழுக்க நூல்கள் பலவற்றுடன் ஒப்பிடும் போது திருக்குறள் தலையாயது என்பது தெளிவாகிறது. உயர்ந்த கொள்கைகளை இன்னார் தான் கடைப்பிடிக்கவேண்டும் என்ற வரையறையின்றி, உலகத்தார் அனைவரும் ஒருங்கே ஏற்றுக்கொள்ளத் தக்கதான ஒரு பொது முறையைக் கொண்டுள்ள நூல் திருக்குறள். திருக்குறள், அதன் பொதுமை, சிறப்பு நோக்கியே உலகின் பல்வேறு மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

திருக்குறளின் பொதுமை பற்றி மேல்நாட்டு ஆய்வாளரும் அறிஞருமான M. Ariel என்பவர் (Journal Asiatique-1848) கூறுவதாவது:

'தமிழ் இலக்கியத்தின் தலைமை வாய்ந்த நூலாகும் திருக்குறள், மனிதரின் மிக உயர்ந்ததும் தூயதுமான கருத்து வெளிப்பாடுகளில் ஒன்றாகும். தனிப்பட்ட சாதிகள், இனங்கள், அல்லது கொள்கைகள் என்று வேறுபடுத்திப் பார்க்காமல் மனித குலம் முழுவதற்குமே திருவள்ளுவர் அறம் வகுக்கிறார் என்னும் உண்மையே எல்லாவற்றிலும் திருக்குறளில் வியக்கத் தக்கதாயிருக்கிறது. எல்லாரும் ஒத்துக்கொள்ளக்கூடிய மிகவுயர்ந்த அறநெறியையும், அனுமானத்தையும் கொண்டிருக்கிறது. தூய்மையையும் வாய்மையையும் மிகவும் நுண்ணிய

முறையிலும் ஆழ்ந்தும் எடுத்தியம்புகின்றது இல்வாழ்க்கை, சமுதாய வாழ்க்கைகளின் மிகவுயர்ந்த முறைகளை வகுக்கின்றது' என்பது அது.

வள்ளுவர், 'சொல் வன்மை' பற்றிப் பேசுகிறார். ஆனால், தன் தாய்மொழி உள்ளிட்ட எந்த மொழியின் பெயரையும் குறிப்பிடவில்லை. 'நாடு' பற்றிப் பேசும்போது தன் தாய்நாடு உள்ளிட்ட எந்த நாட்டின் பெயரையும் பேசவில்லை. அவ்வாறே எந்த இனம் பற்றியோ, குறிப்பிட்ட ஆறுகள் பற்றியோ பேசவில்லை. அரசு, அமைச்சு, ஆட்சி பற்றிப் பேசிய வள்ளுவர் தமிழ் நாட்டு அரச பரம்பரை பற்றியோ, மூவேந்தர் பற்றியோ பேசவில்லை. எந்த ஒரு மதம் பற்றியும் பேசவில்லை. அவர் திருக்குறளில் பேச எடுத்துக்கொண்ட அனைத்துத் தலைப்புகளிலும் இந்தப் பொதுத் தன்மையையே கடைப்பிடித்தார்.

திருவள்ளுவர், 'கருவி' என்னும் பதத்தைப் பல இடங்களில் பேசுகிறார். ஆனால், என்ன கருவி என்று எங்கும் குறிப்பிடவில்லை. காலமறிதல் என்னும் அதிகாரத்தில்...

'அருவினை என்ப உளவோ கருவியால் காலம் அறிந்து செயின்' (483) என்று ஒரு குறட்பா. பொருள் - செய்வதற்குரிய காலமறிந்து செய்து முடித்தற்காம் கருவிகளுடன் செய்பவர்க்கு, செய்தற்கரிய வினைகள் இல்லை. இன்றைய பணியை இன்றைய கருவி கொண்டு செய்யவேண்டும். கருவியானது வினையைப் பொறுத்து மாறலாம், காலத்தைப் பொறுத்து மாறலாம். அவர், இன்ன கருவி என்று குறிப்பிட்டிருந்தால் அவை இன்று பயனிறந்ததாக இருக்கலாம். இவ்வாறே, 'கற்பு' போன்ற பல சொற்களைத் தவிர்த்திருக்கிறார். இந்நிலையில் 'ஒழுக்கம்' பற்றி ஒரு அதிகாரத்தில் கூறுகிறார்.

'படைமாட்சி' என்னும் அதிகாரத்தில், அரசனது படை பற்றிப் பேசுகிறார். அவர் காலத்தில் யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்படைகள் இருந்தன. ஆனால் வள்ளுவர்,

'உறுப்பமைந்து ஊறு அஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை.' (761) என்கிறார். உறுப்புகளால் நிறைந்து, போரின் துன்பத்திற்கு அஞ்சாது நின்று வெல்லும் படை என்று கூறினாரே ஒழிய என்னென்ன உறுப்பு என்று கூறவில்லை. கூறியிருந்தால், இன்று திருக்குறள் 'பொதுமறை' என்னும் தகுதியைப் பெற்றிராது. அவர் எடுத்துக்கொண்ட தலைப்புகள் அனைத்திலும் பொதுவான பதங்களையே குறிப்பிட்டு அவை காலம், இடங் கடந்து நிலைபெற்று நிற்கும் வகை செய்தார்.

## எண்ணும் எழுத்தும் – திருவள்ளுவரின் அணுகுமுறை:

திருவள்ளுவர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கல்வி, கல்லாமை, கேள்வி என்ற மூன்று அதிகாரங்களில் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தியிருக்கிறார்.

ஆனால், காலத்துக்குக் காலம், இடத்திற்கு இடம் கல்வியில் ஏற்படும் வளர்ச்சி பற்றிப் பேசுவதைத் தவிர்த்திருக்கிறார்.

இலக்கணம், இலக்கியம், தத்துவம் பற்றிப் பேசவில்லை. 'கற்பவை கற்க' என்று கூறியிருக்கிறாரே தவிர எதனைக் கற்க வேண்டும் என்று கூறவில்லை. ஆனால், திருக்குறளில் 'எண்' பற்றியும் 'எழுத்து' பற்றியும் குறிப்பிடுமிடத்தில்,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' (392) என்கிறார். இங்கு, வள்ளுவர், எண், எழுத்து என இரு பிரிவுகளைக் குறிப்பிடுகிறார். எனவே, அறிவுத் துறையில் எண்ணுக்கு முதலிடம், முக்கியத்துவம் உறுதியாகிறது.

இன்று, அறிவியல் துறையில் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சியனைத்தும் கணிதத்தின் அடிப்படையில் அமைந்தவையே.

எண் என்பது, கணிதம், மனம், சிந்தனை. தமிழர் மனத்திற்கும், மனத்தில் எழும் சிந்தனைக்கும், சிந்தனையின் உயர்நிலையில் உருவாகும் கணிதத்திற்கும், கணிதத்தின் அடிப்படையான இலக்கம் என்னும் குறியீட்டிற்கும் ஒரே சொல்லைப் பயன்படுத்துவது கவனிக்கத்தக்கது. அன்றைய அறிவு வளர்ச்சி நிலைக்கு இதை ஓர் அகச்சான்றாகவும் சொல்லலாம்.

திருவள்ளுவர் காலத்தில் எண், எழுத்து மிக உயரிய நிலையில் இருந்திருக்கவேண்டும். திருவள்ளுவருக்கு ஏறக்குறைய 7-ம் நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர்,

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று அறியப்படுபவர். அந்த அடிப்படையில் திருவள்ளுவரின் எண், எழுத்துப் பற்றிய அறிவு குறைந்ததாக இருக்கமுடியாது. அன்றைய அறிவுத் துறையின் அடிப்படையில் எண்ணின் இடத்தையும் எழுத்தின் இடத்தையும் ஆழமாக அறிந்தே இவ்வாறு எழுதியிருக்கிறார்.

## திருக்குறளில் அறிவியல்:

வள்ளுவர் கீழ்க் காணும் குறளில் அறிவியல் அணுகுமுறைக்கு இலக்கணம் வகுக்கிறார்.

***'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'***

எடுத்துக் கொண்ட பொருள் எதுவாயினும் அசாதாரண தெளிவோடு அப் பொருளை நோக்குவது தான் அவரது கூற்றுகள் நிலை பெற்றனவாக அமைவதற்குக் காரணம்.

வள்ளுவர் சமயம் சார்ந்த எக் கருத்தையும் கூறவில்லை. கடவுள் வாழ்த்துக் கூறும் திருவள்ளுவர் அதைத் தாண்டி எவ்விதக் கடவுட் கொள்கையும் கூறவில்லை. கடவுள் வாழ்த்தில் கூட 'எல்லாம் வல்லது' என்று இன்றும் நாம் ஒப்புக் கொள்ளும் 'ஒரு சக்தி' என்று கூறினாரே தவிர, எந்தச் சமயத்துடனும் இணைத்துக் கூறக்கூடிய கடவுள் தத்துவத்தை அவர் கூறவில்லை. எந்தச் சமயத்துடனும் இணைத்து அடையாளப்படுத்தும் அளவுக்குக் கடவுட் கொள்கையை, தத்துவத்தைக் கூறவில்லை. ஆனால், திரு.வி.க, 'திருக்குறள் சமண அறத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பொது நூல்' என்கிறார் (தமிழ் நூல்களில் பௌத்தம்) பேரா. வையாபுரிப்பிள்ளை, வள்ளுவரைச் சைவராகக் கொள்வதே பொருத்தம் (தமிழ்ச் சுடர் மணிகள்) என்கிறார்.

திருக்குறளை ஆராய்ந்த காஞ்சிபுரம் வச்சிரவேல் முதலியார், ,திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே' என்கிறார். ஆனால், திருவள்ளுவர், இன்ன சமயத்தைச் சார்ந்தவர் என்று நாம் கோடிட்டுக் காட்டுமளவுக்குக் கூட அவர் இடம் தர வில்லை. சமயம் கடந்து நின்று திருக்குறளை எழுதியிருக்கி றார் என்றே கொள்ள வேண்டும்.

17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பேக்கன் (Bacon என்னும் சிந்த னையாளர் 'அறிவே ஆற்றல்' (Knowledge is Power) என்றார். இதனையே, அவருக்கு ஏறத்தாழ 16 நூற்றாண்டுகளுக்கு முன்னமே திருவள்ளுவர் 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்றார். திருவள்ளுவர் தாம் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு துறையிலும் சிறந்த அறிவியல் பார்வையோடு பிரச்சினை களை அணுகியிருக்கிறார். காட்டாக:

***'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து***
***அதனை அவன்கண் விடல்.'***

இந்தச் செயலை இக்கருவியால் இன்னவன் செய்து முடிப் பான் என்று ஆராய்ந்த பிறகே அத் தொழிலை அவனிடம் ஒப் படைக்க வேண்டும் என்பது பொருள். வள்ளுவரின் இந்தக் கருத்து, இன்றைய மேலாண்மைத்துறை (Management) நிபு ணர்கள் கூட வியக்கத்தக்கது.

இன்றைய நிலையில் இக் குறள் மிகவும் தேவைப்படுவது ஒன்று என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்பவை தமிழ் நாட்டிற்கு அறிமுக மான இந்தியப் பண்பாட்டு விழுமியங்கள். வள்ளுவர், இவற் றுள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் பாடி, 'வீடு' பற்றி நேரடியாகப் பேசவில்லை. இந்த முடிவால், அவரது அறிவியல் பார்வைக்கு இருந்த தடைக்கல் தாண்டப்பட்டது. மதச் சார்பற்ற (Secular) மறையொன்றை உருவாக்கியிருக்கி றார்.

## மனித முயற்சி:

வரலாற்றுக் காலம் முதலாக இன்றுவரையுள்ள வளர்ச்சிகள் அனைத்துமே மனித முயற்சியின் பயனேயாகும். மனித முயற் சியின் சிறப்புகள் எண்ணிலடங்கா. மனித முயற்சியின் சிறப் பைப் போற்றுவதில் வள்ளுவர் உயர்ந்து நிற்கிறார். மனிதரது முயற்சியால் ஆகாதது எதுவுமில்லை.

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப**
**எண்ணியார் திண்ணியராகப் பெறின்'**

இப்படிப் பல குறட்பாக்கள் மனிதரின் வினைத் திட்பம் பற்றிக் கூறுகின்றன. மனிதரின் முயற்சியைப் பாராட்டி, அவருக்கு உந்துகோலாக விளங்குபவர் வள்ளுவர்.

**'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய் வருந்தக் கூலிதரும்'**

மனிதரது முயற்சியின் சிறப்புப் பற்றி இதைவிடச் சிறப்பாக யாரும் கூறிவிட முடியாது.

வள்ளுவர் நம்பும் ஊழ் - வள்ளுவர் கோட்பாடுகளுள் 'விதி' என்பதும் ஒன்று. 'ஊழிற் பெருவலி யாவுள' என்று விதியின் வலுவை வலியுறுத்துகிறார். 'ஊழ்வினை உருத்து வந்தூட் டும்' என்னும் விதியின் விளக்கமாக விளங்குகிறது திருக்கு றளை அடுத்து எழுந்த தமிழ் நாட்டுக் காப்பியமான சிலப்பதி காரம்.

ஊழ், மனித முயற்சி ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்த வள்ளுவர், இவ்விரண்டில் வலியது எது என்னும் வினாவையெ முப்பி, தெளிவாகவே முடிவையும் வைக்கிறார்.

***'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்***
***தாழாது உஞற்று பவர்'***

சோர்வில்லாமல் முயற்சியில் குறைவில்லாமல் முயல்கின்ற வர், செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் ஒரு காலத்தில் புறங்காண்பர் (புறமுதுகு காண்பர்).

**'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறுதும்'**

என்று 'விதியை' நம்பிய சமூகத்தில் விதியையும் முயற்சியால் வெல்லலாம் என்பது, மனித முயற்சியை முன்னிலைப் படுத் தும் கொள்கையாகும்.

## திருக்குறளில் மதம் பற்றிய கருத்து:

இறைவன், எண் குணத்தான், அடியளந்தான் போன்ற சொற்க ளைக் காரணங் காட்டித் திருவள்ளுவரைத் தத்தம் சமயத் துள் இணைத்துக் கொள்கிறார்கள். திருவள்ளுர் சமயத்தை யும் கடந்தவர் என்பதற்குத் திருக்குறளே சான்று.

முடியாட்சி (monarchy) என்பது, அரசின் ஒரு வடிவம். இதில் அதிகாரம் முழுமையாகவோ அல்லது பெயரளவிலோ ஒரு தனிப்பட்டவரிடம் இருக்கும். பண்டைக் காலத்தில், அதிகாரம் அரசர் கையிலிருந்தது. அவரது விருப்பு வெறுப்பிற்கு ஏற் பவே ஆட்சி நடக்கும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட குடி யாட்சியில், ஒரு அரசு பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை, மக்கள் அவையால் இயற்றப்படும் சட்டங்கள் தீர்மானிக்கின் றன.

தனி மனிதருக்குரிய வாழ்வியலை வகுத்தாரா என்றால் 'இல்லை' என்றே கூறவேண்டும். உயர்ந்த வாழ்க்கை இப்ப டித்தான் இருக்கும் என்ற இலக்கைக் கொண்டு வாழ்வியலின் பல படிகளையும் ஆராய்ந்து அதன்படி வாழ்தல் பற்றிப் பேசி யிருக்கிறார்.

மனிதர் இனம், சாதி, மதம், மொழி என்னும் தடைகளைத் தாண்டிச் சுதந்திரமாகச் சிந்திக்கப் பழகவேண்டும். அவ்வாறு சுதந்திரமான நிலையில் தான் மனிதர் அறிவியல் முறையில் வாழ்க்கையை அணுகமுடியும் என்ற உண்மையை எடுத்துக் கூறியவர் திருவள்ளுவர். திருக்குறள் ஒரு பொதுமறை.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



# பன்னிரு கை கோலப்பா !

– நாஞ்சில் நாடன்

**கோ**லப்பன் எனும் ஆண்பால் பெயர் தென் மாவட்டங்களில் அதிகம் புழங்கியது ஒரு காலத்தில். கோலம்மை என்பது அதன் எதிர்பால். கோலப்ப அண்ணன், கோலப்ப அத்தான், கோலப்ப மாமா, கோலப்பத் தாத்தா, கோலப்ப பெரியப்பா, கோலப்ப சித்தப்பா என்பன அன்றாட விளி. அன்று கோலப்ப அங்கிள் வரிசை கட்டியிருக்கவில்லை. குறிப்பாக ஒரு சமூகத்தினருள் வழங்கப்பட்ட பெயர். அதைக் கூறப் போனால் சாதி வெறியன் எனும் அடைமொழியை மத்திய மாநில அரசுகள் நமக்கு விருதாகத் தரும். வேறென்ன தமிழ்க்கும்மாயம், கமல தேவ் போன்ற விருதுகளா விண்ணப்பிக்க இயலும்?

கடந்த அறுபது ஆண்டுகளாக அப்பகுதி மக்கள் எவரும் கோலப்பன் அல்லது கோலம்மை எனத் தம்மக்களுக்குப் பெயரிட்டதாக அறிகிலேன். அவர்களுக்கு கோயிஷா அல்லது கோஷண் போதும்.

வேல் கைக்கொண்ட அப்பன் வேலப்பன். கோல் கைக் கொண்ட அப்பன் கோலப்பன். கோல் எனில் காலில் இருந்து தலை மட்டம் உயரமுள்ள கம்பு என்று பொருள் கொள்ளலாம். கம்பு என்றால் அது பிரம்பிலும் ஆகலாம். கல் மூங்கிலும் ஆகலாம். அழிச மரத்தின் கிளைக் கோலும் ஆகலாம். வேறேதோர் மரத்தின் கிளையை வெட்டிச் செதுக்கிச் சீர் செய்ததும் ஆகலாம்.

கோல் என்றால் தண்டும் ஆக இருக்கலாம். கம்பன் அம்புக்குப் பயன்படுத்தும் மாற்றுச் சொற்கள் ஆவம், பகழி, கணை, சரம், கோல் என்பன. கம்பராமாயணத்தில், ஐந்தாவது காண்டமான சுந்தரகாண்டத்தில், சம்புமாலி வதைப்படலத்தில், சில பாடல்களில் போர்க் கருவிகளின் பட்டியல் தருவான் கம்பன். அவற்றுள் ஒரு பாடல் -

***‘தோமரம், உலக்கை, கூர்வாள், சுடர்மழு, குலிசம், தோட்டி***
***தாமரம் தின்ற கூர்வேல், தழல் ஒளிவட்டம், சாபம்,***
***காமர் தண்டு எழுக்கள், காந்தும் கப்பணம், காலபாசம்,***
***மாமரம், வலயம், வெங்கோல் முதலிய வயங்க மாதோ!’***

என்னும் இதில், வெங்கோல் எனில் கொடிய அம்பு என்பது பொருள்.

கோல் எனும் சொல்லுக்கு அம்பு எனும் பொருள் அன்றியும் வேறு பல பொருள்களிலும் கம்பன் பயன்படுத்துவான். அவற்றைப் பட்டியலிடுவேன்.

- துடுப்பு
- திரட்சி
- நீதி தவறாத ஆட்சி
- குதிரைச் சம்மட்டி
- செங்கோல்
- அளவுகோல்
- கம்பு, தடி
- அம்பு
- கோலம்
- குச்சி
- அழகு
- தாம்பு
- ஊன்றுகோல்

என் செயக் கூடும் இன்று? பின்னை நின்று எண்ணுதல் பிழை! எரிக்கச் சொன்னார்கள்! நாம் செவிமடுத்தோமா?

கோலப்பன் எனும் பெயர் எப்பொருளை மூலாதாரமாகக் கொண்டது என்பதை ஆய்வறிஞர்கள் கண்டடைந்து சொல்லட்டும்!

எனது சொந்த வாழ்க்கையில் சில கோலப்பன்கள் குறிப்பிடத் தக்க இடம் வகித்தார்கள். சொந்தக்காரர்களை, ஊர்க்காரர்களை நானிங்கு கூட்டாக்கவில்லை. பள்ளி இறுதியாண்டு, பதினோராம் வகுப்புத் தேறிய பின், புகுமுக வகுப்புக்குக் கல்லூரி போகவேண்டும், ஓராண்டு. நாகர்கோவிலில் செட்டிகுளம் தாண்டி தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியில், B பிரிவில் என் வகுப்புத் தோழன் கோலப்பன். மொழிகள் தமிழ், ஆங்கிலம். பதினோராம் வகுப்புவரை தமிழில் பயின்றவன் என்றாலும் புகுமுக வகுப்பில் பயிற்று மொழி ஆங்கிலம். 1964-65 காலம். கணிதம், பௌதீகம், இரசாயனம், பொருளாதாரம் பாடங்கள், தேர்வுத்தாள்கள். நாங்கள் உயரம் குறைவான ஆறு பேருக்கு, பெண்கள் பகுதியின் முன் டெஸ்க்கில் இருக்கை. தாழக்குடி அணஞ்ச பெருமாள், கலுங்கடி அருமை நாயகம், பறக்கை அசோகன், பூதப்பாண்டி கோலப்பன். ஒன்றாம் வகுப்பு முதலே என் வகுப்புத் தோழனான கிருஷ்ணமூர்த்தி.

பூதப்பாண்டி - தோழர் ப. ஜீவானந்தமும் ஓவியர் வே. ஜீவானந்தமும் பிறந்த ஊர். பூதலிங்கம் ஐ.சி.எஸ். மனைவியும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் மாமியாரும் மூத்த தலைமுறை நவீன எழுத்தாளருமான கிருத்திகா வாழ்க்கைப்பட்ட ஊர். நான் கண்டிராத, ஆனால் குருக்கன்மாரில் ஒருவர் என ஏற்றுக்கொண்ட, தமிழின் மிகச்சிறந்த சிறுகதைப் படைப்பாளுமைகளில் ஒருவரான கிருஷ்ணன் நம்பி வாழ்ந்த ஊர். கர்நாடக இசை மேதை அருணாசல அண்ணாவி பிறந்த ஊர். எமக்குப் பக்கத்து ஊர். எம் தோவாளை தாலுகாவின் அலுவலகம் அமைந்த ஊர். நான் பயின்ற பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத சென்டர் இல்லாமையால் இரண்டு மைல் நடந்துபோய் தேர்வு எழுதிய ஊர். பூதலிங்கசாமியின் உறைவிடம். கிழக்கு எல்லையாகப் பழையாறு எனும் புனித நதி பாயும் ஊர். அந்த ஊரைச் சேர்ந்த கோலப்பன் பட்டப் படிப்பிலும் எனக்கு வகுப்புத் தோழன். பிறகு ஆசிரியப் பயிற்சி பெற்று, வேலை கிடைத்து, பள்ளியொன்றில் தலைமை ஆசிரியராகி, ஓய்வு பெற்று, தற்போது பல் மருத்துவரான தன் மகனுடன் தேவகோட்டையில் வாழ்கிறான். சில மாதங்கள் முன்பு நாகர்கோவிலில் ஒரு கல்யாண வீட்டில் ஏழாம் நீர் சாப்பாட்டுப் பந்தியில் அருகருகே அமர்ந்து உண்டோம்.

இன்னொரு கோலப்பன் பறக்கை ஊர்க்காரர். குறுக்கு வழியில் சுசீந்திரத்தில் இருந்து குளத்தங்கரையோரம் நடந்தால் பறக்கை நெடுந்தெரு ஏறலாம். என் அப்பனைப் பெத்த ஆத்தா வள்ளியம்மை நெடுந்தெருக்காரி. பறக்கையின் நாயகன் மதுசூதனப் பெருமாள். கோலப்பன் நாதசுரம் - தவில் என நிரம்பிய ஆர்வம் உடையவர். விழாக் காலங்களில் சாமி வீதியுலா வரும்போது, மேளக்காரரிடம் இருந்து அவரே தவில் வாங்கி வாசிப்பார். The Hindu எனும் ஆங்கிலத் தினசரியில் நெடுங்காலமாக மூத்த உதவியாசிரியர். அவர் எழுதிய அரசியல் - சமூக - கலை - மொழி - பண்பாடு சார்ந்த நடுப்பக்கக் கட்டுரைகளை நீங்கள் வாசித்திருக்கலாம். தனித்த பார்வை உடையவர். வெடிப்புறப் பேசுகிறவர். அவரை நண்பராகப் பெற்றது என் பேறு.

மூன்றாவது கோலப்பன், எமது தெற்குப் பக்கத்து ஊரான திருப்பதிசாரம். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் திருவண்பரிசாரம் என்று குறிப்பது. நம்மாழ்வாரின் தாயார் பிறந்த ஊர். அங்கே தெற்குத் தெருவில் எம்.எஸ். அண்ணாச்சி வீட்டுக்கு அடுத்த வீடு. குமரித்துறைவன் எனும் புனை பெயரில் எழுதியவர். 1977-ம் ஆண்டில், எனது ‘தலைகீழ் விகிதங்கள்’ நாவல் வெளியான பிறகு, சுந்தர ராமசாமி வீட்டு மொட்டை மாடியில் நடந்த ‘காகங்கள்’ கூட்டத்தில் அறிமுகமானார். எனதெழுத்தின் நிறை குறை சொல்பவர். வழிகாட்டி. அவரை நான் கோலப்ப அண்ணாச்சி என்றழைப்பேன்.

எங்கு வில்லுப்பாட்டு பற்றிப் பேசினாலும் நான் பதினைந்து வயதுப் பிராயத்தில் கேட்ட மூன்று வில்லிசைக் கலைஞரைக் குறிப்பிடுவேன். 2024-ம் ஆண்டு ஜனவரி 31-ம் நாளன்று திருநெல்வேலியில் பொருநை இலக்கியத் திருவிழாவில், ஒரு கருத்தரங்குக்குத் தலைமை ஏற்று உரையாற்றிய போதும் அம்மூவரின் பெயரையும் பட்டியலிட்டேன். ஒருவர் கருங்குளம் நாராயணபிள்ளை, அடுத்தவர் புன்னார்குளம் கோலப்ப பிள்ளை, மூன்றாமவர் தோவாளை சுந்தரம்பிள்ளை. சாதிப் பின்னொட்டுக்களில் நமக்கு ஒவ்வாமை இருக்கலாம். ஆனால் BBC ஆவணங்களில் தோவாளை சுந்தரம்பிள்ளை என்றே இருக்கும்.



வல்லரக்கன் கதை பாடும்போது, முத்தாரம்மன் கோயில் முகப்பில் அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்து வில்லுப்பாட்டுப் பாடுவார். முத்தாரம்மனை வரத்திப் பாடும்போது கோயில் உள் பிரகாரத்தில் அமர்ந்து வில்லடிப்பார், புன்னார்குளம் கோலப்பபிள்ளை. நான் பார்த்தே இராத அப்பாவைப் பெற்ற தாத்தா, வில்லுப்பாட்டுக்காரர் பின்னால் அமர்ந்து முத்தாரம்மன் கதை சொல்லிக் கொடுப்பார் என்று மூத்தோர் உரைக்கக் கேட்டிருக்கிறேன்.

சிறு பிராயத்தில் புன்னார்குளம் கோலப்பபிள்ளை பாடிய வரத்துப் பாட்டும், வில்லடி ஓசையும், குடமும், உடுக்கும், சிங்கியும், முரசும், ஆர்மோனியமும், கட்டைத் தாளமும் இன்றும் நினைவில் உண்டு.

***‘ஏ தேனிருந்து மழை பொழியும்
தென்காசி தானும் விட்டு - தானும் விட்டு
ஏ தாமிரபரணி தான் கடந்து - தான் கடந்து
ஏ பக்கத்திலே வைரவனும் - வைரவனும்
ஏ பாரப்பிள்ளை புலைமாடன் - புலைமாடன்
ஏ வாறாளே முத்தாரம்மன் - முத்தாரம்மன்’***

என்று நீண்ட வரத்துப் பாட்டு என்னால் போம் காலம்வரை மறக்க இயலாது!

இந்தக் கட்டுரைத் தலைப்பான ‘பன்னிரு கை கோலப்பா!’ எனும் சொற்றொடர் கோலப்பனில் நங்கூரம் அடித்து விட்டது. கேட்டுக் கேட்டு மனப்பாடம் ஆகிய பாடல் வரி அது!

***'உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரை யான் பின் செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே!'***

எனும் பாடலில் வரும் சொற்றொடர் 'பன்னிரு கை கோலப்பா!'.

இப்பாடலை எழுதியது யாரென அறியேன். திருமுருகாற்றுப்ப டைப் பாடல் எனத் தவறாகப் பலர் பேசுகிறார்கள். இந்தப் பாடலில் வரும் 'பன்னிரு கை' எனும் பிரயோகம் என்னை யோசிக்க வைத்தது. பன்னிருகை எனில் பன்னிரண்டு கரங் கள். அர்த்தமாகவில்லை என்றால் ஒரு டஜன் கைகள். ஆறு தலை - ஆறு முகம் - பன்னிரு கரங்கள்.

அருணகிரிநாதரின் திருப்புகழில் ஒரு பாடல் -

***'ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானை தன் அணங்கு வாழ்க,
மாறில்லா வள்ளி வாழ்க, வாழ்க சீர் அடியார் எல்லாம்'***

என்பது. ஒரே பாடலில் எட்டு 'வாழ்க'. வெற்பு எனில் மலை. மஞ்ஞை எனில் மயில். யானை தன் அணங்கு எனில் தெய்வ யானை. எல்லாம் சரி! குக்குடம் என்றால் என்ன? அறுபதாண் டுகளாகச் செவிமடுக்கும் இப்பாடலில், குக்குடம் எனில் யாதெனும் கேள்வி இன்றே பிறந்தது! அகராதிகள் துழாவிய போது, குக்குடம் எனில் சேவற்கோழி என்றறிய வியப்பு ஏற்பட் டது. மார்வாடி மொழியிலும் குக்குடா எனில் சேவற்கோழி.

***ஆறிரண்டு பன்னிரண்டு வலிய தோள்கள் வாழ்க!
ஆறுமுகம் வாழ்க!
கிரவுஞ்ச மலையைப் பிளந்த தனித்துவமுடைய வேல் வாழ்க!
சேவல் வாழ்க! செவ்வேள் ஏறி அமரும் மயில் வாழ்க!
தெய்வயானை எனும் பேரெழில் வாழ்க!
மாசுமருவற்ற வள்ளிக்குறத்தி வாழ்க!
சீர்அடியார் எல்லாம் வாழ்க வாழ்கவே!***

என்பது நானெழுதும் உரை.

இங்கும் முருகனுக்குப் பன்னிரு கரங்கள். பத்துத்தலை இரா வணனுக்கு, தசமுகனுக்கு இருபது கைகள். கம்பராமாயணத் தில் கிட்கிந்தா காண்டத்தில், கலன் காண் படலத்தில், சீதையை இராவணன் கவர்ந்து சென்ற செய்தி அறிந்து திகைத்து நிலை குலைந்து நிற்கும் இராமனிடம் கவிக்குலத்து வேந்தன் சுக்கி- ரீவன் தேறுதல் சொல்வதாக ஒரு பாடல் -

***'திருமகள் அனைய அத்தெய்வக் கற்பினாள்
வெருவரச் செய்துன வெய்யவன் புயம்
இருபதும், ஈரைந்து தலையும் நிற்க; உன்
ஒரு கணைக்கு ஆற்றுமோ, உலகம் ஏழுமே?'***

என்பது.

திருமகள் போன்ற அத்தெய்வக் கற்பினாள் சீதையை வெருண்டு போகுமாறு செய்திருக்கும் அக்கொடியவன் புயம் இருபதும் பத்துத் தலையும் இருக்கட்டும்! இராமனது ஓர் அம்புக்கு ஏழு உலகமும் தாங்குமா? - என்பது பொருள்.

வெறொரு பாடலில் இராவணனே வீரவசனம் பேசுவான் - சீதையை விடுவதுண்டோ இருபது திண்தோள் உண்டேல் - என்று.

விநாயகனை, கற்பகத் தரு கணபதியை, ஐங்கரன் என்கி றோம் தும்பிக்கையையும் ஒரு கரம் எனக் கொண்டு. ஐந்து கரத்தவன், ஆனை முகத்தவன். இப்படியே தொடர்ந்து போய் எந்த இறைவன் அல்லது இறைவிக்கு எத்தனை கரங்கள் எனத் தேடிக் கண்டடைந்து அறிந்து ஆனந்தப்படலாம்.

கை எனும் உறுப்புக்கு இந்திச் சொல் ஹாத். கையை உடைய விலங்கு என்பதனால் யானை ஹாத்தி எனப்படும். 'ஹாத்தி மேரே சாத்தி' எனும் இந்தி சினிமா நினைவிருக்க லாம். 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' எனும் சினிமாவும். இரு கண்கள் பன்னிரு கரங்கள் என்பது பொருள்.

கரம் எனும் ஒரு சொல்லின் பொருள்கள் பல. கை, முழம், துதிக்கை, ஓலைக்கொத்தின் திரள், கிரணம், ஒளி, குடி, இறை (கரம் தீர்வை கைச்சாத்து என்பர் பண்டு நாஞ்சில் நாட்டார். வீட்டுக் கரம் கட்ட வேண்டும், கரம் பிரிவு, கரம் பதிவு எனும் சொல்லாட்சிகளும் உண்டு), உஷ்ணம், இடுமருந்து, விலை யேற்றம், கழுதை, நஞ்சு, நூற்றெட்டு உபநிடதங்களில் ஒன்று எனப் பன்னிரு பொருள்கள்.

கை எனும் சொல்லே பெரும் புழக்கத்தில் இருப்பது. கையூட்டு, கைமாற்று, அல்லக்கை, கைச்சாத்து, கைப்புண்ணியம், கைமருந்து, கைநாட்டு, கை ஏர், கைப்பணம், கைக்கடன், கைக்கடிகாரம், கைக்கத்தி, கைக்கரண்டி, கையுறை, கைக்க வசம், கைக்காப்பு, கைகாரன், கைகாரி, கைக்குட்டை, கைக் குடை, கைக்குத்து, கைக்குழந்தை, கைக்குழவி, கைக்குற் றம், கைக்குறி, கைக்கூலி, கைக் கோடாலி, கைக்கோல், கை கட்டி நிற்றல், கை கரத்தல், கை கழுவுதல், கை காட்டி, கை காட்டுதல், கை காட்டு, கை காவல், கை கூசுதல், கைகூடு தல், கை கூப்புதல், கை கொட்டுதல், கை கோர்த்தல், கைங் கரியம், கைலாகவம், கைச்சீட்டு, கைச்சுத்தம், கைச் சுருக் கம், கைச் சூடு, கைச்செலவு, கைச் சேட்டை, கைச்சைகை, கை சலித்தல், கை சளைத்தல், கை செய்தல், கை சேர்தல், கைத்தடி, கைத் தண்டம், கைத் தராசு, கைத்தலம், கைத் தாங்கல், கைத் தாராளம், கைத்தாளம், கைத் தீவட்டி, கைத் துடுக்கு, கைத்துடுப்பு, கைத்துண்டு, கைத்துப்பாக்கி, கைத் தூக்கு, கைத்தூண், கைத் தொண்டு, கைத்தொழில், கை தட் டுதல், கை தப்புதல், கை தவறுதல், கை நழுவுதல், கை தளர் தல், கை தேர்ந்தவன், கை தீண்டுதல், கை துடைத்தல், கை தூக்கிவிடுதல், கை நனைத்தல், கை தொழுதல், கைந்நாகம், கை நீட்டம், கை நடுக்கம், கை நறுக்கு, கை நீளம், கை நுணுக்கம், கை நொடித்தல், கை நோட்டம், கைப்பட்டை, கைப்பட, கைப்படை, கைப்பண்டம், கைப்பணி, கைப் பந்தம், கைப்பழக்கம், கைப்பற்றுதல், கைப் பாகம், கைப் பிசகு, கைப்பிடி, கைப்பிடிச் சுவர், கைப்பிடி மோதிரம், கைவாள், கைப் பொறுப்பு, கை பதறுதல், கை பறிதல், கை பிசைதல், கைப்புகுதல், கை புடைத்தல், கை புனைதல், கை போடுதல், கைம் மடல், கைம்மணி, கை மருந்து, கைம் மறதி, கைம்மாறு, கைமீறுதல், கைம்முதல், கைப்பிள்ளை, கை மதிப்பு, கை மயக்கு, கை மறுத்தல், கை மாயம், கை மாற்றம், கை முழம், கைமுறி, கைமேல், கைமோசம், கையகப்படுத்துதல், கைய டக்கம், கையடித்தல், கை அமர்த்துதல், கை அரிவாள், கைய றுநிலை, கையாடல், கையாள், கையாற்றுதல், கை இருப்பு, கையுறை, கையூக்கம், கையொலி, கையொழிதல், கைவளை, கைவன்மை, கைவாக்கு, கைவாகு, கைவாள், கைவிடுதல், கை விரித்தல், கை விலங்கு, கைவிலை, கை விளக்கு, கைவி னைஞன், கைவீச்சு, கைவேல், கை வைத்தல்... என்ற அம்மே!

அது அவ்வாறெனில், கை எனும் சொல்லுக்கு 26 பொருள் தரு கிறது பேரகராதி. கரம், யானைத் துதிக்கை, கிரணம், செங்கல் முதலியவற்றை எண்ணும் அளவு, அபிநயக் கை, பக்கம், கட்சி, கைமரம், இரயிலின் கை காட்டி, சட்டையின் கை, கைப்பிடி, விசிறிக் காம்பு, சிறகு, படை உறுப்பு, சேனை, இடம், கைப்-பொருள், செய்யத்தக்கது, ஒப்பனை, ஆற்றல், கையளவு, ஆள், சிறுமை, உலக ஒழுக்கம், ஒழுங்கு, தங்கை... என.

பறவை இனத்துக்கு இரு கால்களும் இரு இறக்கைகளும். விலங்கினத்துக்கு நான்கு கால்கள். இருகாலும் இருகரமும் கொண்ட விலங்கினமும் உண்டு, குரங்கினம் போல. மனித குலத்துக்கு இரு கால்கள், இரு கரங்கள். வடபுலத்தில் ஆண் ஒட்டகத்துக்கு குறி வாய்த்த விதம் பற்றிக் கதையொன்று உண்டு. அதை யாமிங்கே விளம்ப மாட்டோம். மனித குலத் துக்கு ஏன் இரண்டு கைகளுடன் படைத்தவன் - கர்த்தா - பரம்பொருள் நிறுத்திக் கொண்டார் என்று வினா எழுகிறது இன்று.

பதினைந்து வயதில், வடசேரி வஞ்சி ஆதித்தன் புதுத்தெரு வில், இரவு பத்தரை மணிக்குமேல், நாவலர் என்றும் நடமா டும் பல்கலைக்கழகம் என்றும் சிறப்பித்துப் பேசப்பட்ட நெடுஞ்செழியன் அரசியல் பேச்சு. அவர் சொற்பொழிவு கேட்க சுவாரசியமாக இருக்கும். ஒரு கூட்டத்தில் சொன்னார் - இர யில் பயணம் செய்வோருக்கு மூன்று கைகள் வேண்டும் கக் கூஸ் போனால், தண்ணீர் வரும் குழாயை அழுத்த இரண்டு, கழுவ ஒன்று - என்று. இன்னும் ஏ.சி. மூன்றடுக்குப் பெட்டியில் சென்னைக்கோ, நாகர்கோவிலுக்கோ, திருவனந்தபுரத்துக்கோ செல்லும்போது கழிவறைக் கதவைச் சாத்தவும் திறக்கவும் மூன்று கைகள் அத்தியாவசியம்.

முதல் மனிதரை எந்த யுகத்தில் இறைவன் படைத்திருந்தா லும், அவனுக்கு இருகரங்கள் போதும் என்று என்ன கணக் கில் தீர்மானித்தானோ? இலஞ்சம் வாங்கும் தலைவனுக்கு, அதிகாரிக்கு இரண்டு கைகள் எப்படிப் போதும்?

இன்றைய மாந்தரின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, சற்றும் Technical know how தெரியாமல் ஆண்டவன் மனித ருக்கு இரண்டு கைகளைக் கொடுத்து விட்டானோ என்று எண்ணத் தோன்றும்.

கடுமையான போக்குவரத்து வேகத்தின்போது மொபைல் ஃபோனில் அழைப்பு வந்தால், யார்தான் என்ன செய்ய இய லும்? ஸ்கூட்டரில், மோட்டார்பைக்கில் வேகமாகப் போகிற வர், சிரமத்துடன் ஒரு கையால் வண்டியை ஓட்டிக் கொண்டே பேச வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. சிலர் கருவியை எடுத்து இடது காதுக்கும் தோள்பட்டைக்கும் இடையில் வைத்து நெரித்துக்கொண்டு, உரையாடியபடியே வண்டியும் ஓட்டுவது எளிமையான காரியமா? மூன்றாவது கையொன்று முதுகிலோ அல்லது மார்பிலோ முளைத்து வந்திருந்தால் எத்தனை உபயோகமாக இருக்கும்? இரண்டு கையாலும் புரோட்டா பிய்க்கும்போது கைபேசியில் அழைப்பு வந்தால் என்ன செய்வார்கள் பாவம்?

அண்மையில் யாரோ சொன்னார்கள் - ஒருவன் மனைவியை மலர்த்திப் போட்டுக் கலவி செய்தபோது, அவள் இரண்டு கைகளாலும் மொபைல் ஃபோன் பற்றி யாருக்கோ வாட்ஸ் ஆப் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தாள் என்று. ஒரு காலத் தில் வார இதழில் மந்திரத் தேவனைத் தேடிக்கொண்டு கிடந் திருப்பாள்.

பல கோடிகள் ஊதியம் பெறும் சினிமா நடிகைகளைப் பார்த் துப் பார்த்து, சிகை திருத்தம் செய்து, காற்றில் மிதக்க விட்டு, மயிர்க்கற்றை இடதுபுறம் முகத்தில் வந்து வேண்டும் என்றே விழுவதை மணித்துளிக்கு எட்டுமுறை ஒதுக்கிப் பின்புறம் தள்ளவேண்டிய ஆகப்பெரிய நிர்ப்பந்தம் இருக்கிறது. இரண்டு கரங்களும் மும்முரமாக வேலையில் இருக்கும் போது, அனாமத்தான இன்னுமொரு கையும் இருந்தால் எத் தனை உபயோகமாக இருக்கும்?

குழந்தையைக் குளிப்பாட்டும்போதும், சப்பாத்திக்கு மாவு பிசையும்போதும், மொபைல் ஃபோன் பேச வசதி இல்லை. மேலும் ஒன்று - அலைபேசியில் பேசிக்கொண்டே எதிரில் நிற்பவ ரிடம் உரையாடத் தோதாக பிடரியில் ஒரு வாய் இருக்கலாம்.

காலம் கடந்து போய் விட்டது. ஆண் ஒட்டகத்தின் கவலையும் அவமானக் குறுகலும்தான் நமக்கும். இதை எழுதிக் கொண் டிருக்கும்போதே அலைபேசியில் எவரோ அழைக்கிறார்கள். சவால் என்ற வடசொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல் எதுவெ னும் ஐயம் எவருக்கோ தோன்றியிருக்கலாம்!

இன்றும் எதுவும் தாமதமாகிவிடவில்லை. இறைவன் எப் போது வேண்டுமானாலும் தீமையை வேரறுக்க வரட்டும்! அல் லது வராமலே போகட்டும்! அதுவரை அவரவர் திருத்தலங்க ளில் பாம்பணையிலோ, பனிமலையிலோ, பங்கய இருக்கை யிலோ ஓய்வெடுக்கட்டும்! ஆனால், அருள் கூர்ந்து, பெரிய மனது பண்ணி, முதுகிலோ மார்பிலோ இன்னொரு கை முளைக்கச் செய்தால் எதிர்காலச் சந்ததியினர் நன்றியுடன் இருப்பார்கள். அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் அதி கப்படியாக இரு கைகள் வழங்கலாம். அவர்கள் தம் இட்ட தெய்வங்களுக்குத் தங்கத்தேர் செய்து தருவார்கள், மணி மண்டபம் கட்டுவார்கள், பொன்னால் மணிமுடி, பாதுகை, ஒட் டியாணம் தோள் வார் செய்து அணிவிப்பார்கள். பன்னிரண்டு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூற்றுத் தொண்ணூற்று மூன்று வடைகளாய் பெரிய வடைமாலை சார்த்தித் தொழு வார்கள்.

***‘கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்***
***கபடு வாராத நட்பும்***
***கன்றாத வளமையும் குன்றாத இளமையும்***
***கழுபிணி இலாத உடலும்***
***சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்***
***தவறாத சந்தானமும்***
***தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்***
***தடைகள் வாராத கொடையும்***
***தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு***
***துன்பமில்லாத வாழ்வும்’***

வழங்கும் அபிராமி அம்மை மனது வைத்தால் ஈதெல்லாம் சாத்தியமில்லாத காரியமா?

பன்னிரு கை கோலப்பா, நீ அதனைப் பொருட்படுத்த வேண் டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்!



nanjilnadan@thaiveedu.com



வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 75
Psychosocial Educational Series - 75
VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE
நாம் உண்பவை - அருந்துபவை எமக்கு
நஞ்சாகுமா? அறிவியல் தடங்கள்
Do We Absorb Poision in our Food and Drinks in Canada?
Scienctific Evidence
06 May 2024 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588
• உணவுப் பாதுகாப்பில் உங்கள் பங்கு
Your Roll in Food Safety.
• தமிழர் உணவுகள்: தீதும் நன்றும்
Tamil Diet -Pros & Cons
Nesananthar Sundararajah
Frontline Government Regulator
B. Sc Food Science (McGill
University, Canada)
Satheesh Kumar
B.Sc., Biological Science; University of
Jaffna, Sri Lanka
M.Sc., Biotechnology; University of
Peradeniya, Sri Lanka
Post Graduate Diploma in Education:
Open University, Sri Lanka
Food Industry specific trainings in Canada.
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!
Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

# ஒப்பியல் நோக்கில் திருக்குறளும் நாலடியாரும்

## நிலையாமை பற்றிய அவற்றின் சிந்தனைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு

– கௌசல்யா சுப்பிரமணியன்

**தோற்றுவாய்:**

தமிழிலுள்ள அறநூல்களில் தலையாயதாகக் கருதப்படுவது திருக்குறள் என்பது பொதுவாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாகும். அதற்கு அடுத்த நிலையில் வைத்துப் பேசப்படும் முக்கிய அறநூல் நாலடியார் ஆகும். (தமிழிலுள்ள அறநூல்களில் தலையாயதாகக் கருதப்படுவது திருக்குறள் என்பதும் அதற்கு அடுத்த நிலையில் வைத்துப் பேசப்படும் முக்கிய அறநூல் நாலடியார் என்பதும் பொது வாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும்) இவ் விரு நூல்களும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாற் பகுப்பு முறையில் அமைந்தவையாகும். இவ் விரு அறநூல்களையும் அருகருகே வைத்து ஒப்புநோக்கும் முயற்சியாகவே எனது இவ் ஆய்வுரை அமையவுள்ளது.

இந்த ஒப்பீட்டிலே கவனத்திற்கு வரும் முக்கிய விடயம் வாழ்க்கை பற்றிய நோக்கிலே இவை இரண்டும் குறிப்பிடத் தக்க வேறுபாடுகள் கொண்டவை என்பதாகும். 'திருக்குறளா னது உலகப்பொதுமறை எனத்தக்க வகையிலே மானுடம் சார்ந்த பொது அறநூலாகத் திகழ்வதாகும். நாலடியாரோ சம ணம் எனப்படும் குறித்த ஒரு மதம்சார் சிந்தனைகளின் தளத் திலிருந்து வாழ்க்கையை நோக்குவதாகும்.' இந்த அடிப்படை வேறுபாட்டைக் 'காரண-காரிய' நிலைகளில் விளக்கியுரைக் கும் செயற்பாடாகவே எனது இந்த ஆய்வு அமைகிறது. இவ் வாறான ஆய்வு முயற்சியிலே இவ்விரு நூல்களும் புலப்ப டுத்தி நிற்கும் 'நிலையாமை' பற்றிய கருத்து நிலைகளே இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

திருக்குறளானது 'நிலையாமை' என்ற தலைப்பிலான ஒரு அதிகாரத்தில் (அதிகாரம்:34) மட்டுமே அப்பொருண்மையை எடுத்துரைக்கிறது. அதாவது 133 அதிகாரங்களைக்கொண்ட அந்நூலில் பத்துக் குறட்பாக்களில் மட்டுமே அப்பொ ருண்மை பேசப்பட்டுள்ளது. ஆனால் 40 அதிகாரங்களைக் கொண்டதான நாலடியார் என்ற ஆக்கத்திலே மேற்படி பொருண்மையானது, 'செல்வம் நிலையாமை', 'இளமை நிலையாமை', 'யாக்கை நிலையாமை' ஆகிய மூன்று அதிகா ரங்களில் 30 வெண்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள மையை நோக்க முடிகின்றது. அதாவது திருக்குறளை விட நாலடியாரிலே விரிந்த நிலையில் இப் பொருண்மை பேசப்பட் டுள்ளதென்பது வெளிப்படையாகவே தெரிவதாகும். இவ்வா றாக, இவ்விரு ஆக்கங்களிலும் நிலையாமை என்ற இப்பொ ருண்மை பற்றிப் பேசுவதில் புலப்படுத்தி நிற்கும் பொதுமை மற்றும் வேறுபாட்டு நிலைமைகளே இங்கு காரண-காரிய நிலைகளில் நோக்கப்படுகின்றன.

இப்பொருண்மை பற்றிப் பேசுவதற்கு முன் இவ்விரு நூல்க ளின் காலம், இயற்றியவர்கள் பெயர்கள், பாடல்களின் யாப்ப மைதி, அவை தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட முறைமை என்ப வற்றை முதற்கண் நோக்குவது அவசியமானதாகிறது.

### இரு நூல்களின் காலம், இயற்றியவர்கள், பாடல்களின் யாப்பமைதி, தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட முறைமைகள்:

பொ.ஆ.பி. 2 - 5-ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத் தில் தொகுக்கப்பட்டனவாக அறியப்படும் பதினெண்கீழ்க்க ணக்கு நூல்களில் அமைந்த 11 அறநூல்களில் இவ்விரு நூல் களும் இடம்பெற்றுள்ளன என்பது பொதுவாக யாவருமறிந்த செய்தியேயாகும்.

திருக்குறள் இரண்டடிகளிலமைந்த பாடல்களையுடையது. முதலடி நான்கு சீர்களும் இரண்டாமடி மூன்று சீர்களுமாய் அமைந்த இப்பாடல் வடிவமானது யாப்பியலிலே 'குறள் வெண்பா' என வழங்கப்படுவதாகும். இந்நூலின் தலைப்பிலே அமைந்ததான 'திரு' என்ற அடைமொழியானது 'உயர்வு' என்ற பொருள் கொண்டதாகும்.

நாலடியார், நாலடிகளிலமைந்த பாடல்களைக் கொண்டதா கும். முதல் மூன்று அடிகளும் நாற்சீர்கள் கொண்டும் நான்கா வது அடி முச்சீர்களுடனும் அமையும் இவ்வடிவமானது யாப் பியலிலே 'வெண்பா' என வழங்கப்படுவதாகும். இந்நூலில் இடம்பெற்றுள்ளதான 'ஆர்' என்ற விகுதியானது 'உயர்வு' என்ற பொருளைத் தந்துநிற்கிறது.

மேற்படி இரு நூல்களின் காலங்கள் மற்றும் அவற்றின் யாப்ப மைதி என்பவற்றை மேலே நோக்கினோம். அடுத்து இந்நூல் கள் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட முறைமைகள் கவனத் திற்கு வருகின்றன.

திருவள்ளுவர் என்பாரால் இயற்றப்பட்டதாக அறியப்படும் திருக்குறளுக்கு பல்வேறு அறிஞர் பெருமக்கள் உரைகள்




எழுதியுள்ளனர். இவர்களுள் முதலாவது உரைகாரராக அறி யப்படுபவர் மணக்குடவர் என்பாராவர், இவருக்குப் பின் வந்த உரைகாரர்களில் ஒருவரான பரிமேலழகர் என்பாரால் எழுதப் பட்ட உரையே பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு, வழக்கிலிருந்து வருகின்றதென்பதும் பொதுவாக அறி யப்பட்ட செய்தியேயாகும்.

நாலடியாரானது பல புலவர்களின் பாடல்களின் தொகுப்பா கும். 'சமண முனிவர்கள் நானூற்றுவரால் பாடப்பட்டு பாண் டிய மன்னனால் தொகுக்கப்பெற்றது.' எனவும் இதற்கு, 'பதும னார் என்னும் சமண சமயப் பெரியாரால் திருக்குறளைப் போன்றே பாலும் இயலும் அதிகாரங்களும் வகுக்கப்பெற்று அரியதோர் உரையும் வரைந்தருளப்பட்டது' எனவும் இந்நூ லின் பதிப்புகள் தெரிவிக்கின்றன.

(பார்க்க: வித்துவான் மி.பொன். இராமநாதன் அவர்களின் முன்னுரை, நாலடியார் தெளிவுரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. 1966.பக்.vi-viii- வித்துவான் மி.பொன். இராமநா- தன் அவர்கள் நாலடியார் பற்றிய மேற்படி ஆய்வுக் குறிப்பு களை திருவாளர்கள் வை.மு. சடகோப ராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் ஆகியோர் எழுதிய நன்னூல் உரைப் பதிப்பின் மூலம் பெற்றுக்கொண்டார் என்ற தகவலும் அவரின் முன்னுரைக் குறிப்பிலே இடம்பெற்றுள்ளது)

இவ்விரு நூல்களும் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட முறைமை கள் மேலே நோக்கப்பட்டன. அடுத்து இவற்றில் கூறப்பட்ட 'நிலையாமை' என்ற கருத்தாக்கம் கவனத்திற்கு வருகின்றன.

மேலே நாம் நோக்கிய இரு நூல்களிலும் அவற்றின் முதற்பா லாகிய அறத்துப்பால் என்ற பகுதியிலே இல்லறவியல், துறவ றவியல் ஆகிய தலைப்புகளிலான இயல் பாகுபாடுகள் அமைந்துள்ளன. (திருக்குறளில் மேலதிகமாக, 'ஊழியல்' என்ற ஒரு இயலும் இடம்பெற்றுளது என்பதும் நாமறிந்த செய் தியேயாகும்.)

மேற்சுட்டியவாறான 'அறத்துப்பால்' என்ற பகுதியிலமைந் துள்ள 'துறவறவியல்' என்ற இயலிலேயே இரு நூல்களும் 'நிலையாமை' என்ற கருத்தாக்கம் பற்றிப் பேசுகின்றன. இது அவற்றுக்கிடையிலான பொதுப்பண்பாகும். அவ்வகையில் இவ்விரு நூல்களிலும் ஒப்புமை காணப்படினும் அவை அதனை அணுகிய முறைமைகளிலேயே வேறுபாடுகளைக் காண்கிறோம்.

### திருக்குறள் கூறும் நிலையாமை:

திருக்குறளில் அமைந்த துறவறவியல் பகுதியானது வைப்பு முறையில் இல்லறவியலுக்கு அடுத்தே அமைந்துள்ளது. இல் லற வாழ்வைச் சுற்றம் சூழச் சிறப்பாக வாழ்ந்து முடித்த பின்பு அமையும் துறவு வாழ்க்கை இங்கு சுட்டப்படுகிறது என் பதே ஆய்வாளர் பலருடைய பொதுவான கருத்தாகும்.

அவ்வகையில், இல்லற வாழ்வைச் சிறப்பாக வாழ்ந்து முடித்த ஒருவருக்கு வீட்டின்பத்திற்கான படிநிலைகளை அறிவுறுத் தும் வகையிலான எடுத்துரைப்புகளின் தொடர்ச்சியாகவே திருக்குறளின் நிலையாமை அதிகாரம் அமைந்துளது என லாம். இதிலே முதலில் நிலையாமை பற்றிய பொது அறிவு றுத்தல் முதலாம் குறளில் இடம்பெறுகிறது. அதாவது 'உலக வாழ்வு நிலையற்றது என்பதான புரிதலே துறவியொருவருக்கு அவசியமானது' என்பது இங்கு சுட்டியுணர்த்தப்படுகின்றது. முதலாம் குறளின் தெளிபொருள் இதுவே. அக்குறள் வருமாறு,

*‘நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை’*

இதனையடுத்துப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச் செய்யும் செல்வம், இளமை, யாக்கை, என்பன நிலையற்றவை என்பது பின்வரும் குறள்கள் மூலம் சுட்டியுணர்த்தப்படுகிறது. இவ்வகையில் பின்வருங் குறள்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடையன.

*‘கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.’*

- குறள்:2

*‘நாளென ஒன்று போற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்’*

- குறள்:4

*‘நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு’*

- குறள்:6

கூத்து பார்க்கும் மக்கள் கூட்டம் கூத்து முடிந்தவுடன் கலைந்து விடுவது போல் நல்லூழால் குவிந்த செல்வமும் நல்வினை முடிய சென்றுவிடும் என செல்வம் நிலையாமை 2-வது குறளால் விளக்கப்படுகிறது.

நாள் என்பது கால வரையறை போலத் தன்னைக்காட்டி இளமை கழிவதைக் காட்டி நிற்கும் வாள் போன்றது என்பதை மெய்யுணர்ந்தார் உணர்வார் என இளமை நிலையாமை 4-வது குறளால் உணர்த்தப்படுகிறது.

நேற்று இருந்தவன் இன்று இல்லை என்று சொல்லும் யாக்கை நிலையாமையை உணர்த்துவது 6-வது குறளாகும்.

துறவு நிலையை மேற்கொள்ளும் ஒருவருக்கு மேற்சுட்டியவையான செல்வம், இளமை, யாக்கை என்பன நிலையற்றன என்பதான உணர்வானது உறுதிபெறும் நிலையிலேயே அவை சார் பற்றுக்களைத் துறத்தலுக்கான வழி புலப்படும்.

துறவறவியலில் நிலையாமைக்கு முன்னுள்ள அதிகாரங்களான அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடா ஒழுக்கம், கொல்லாமை.... முதலியன மேலே சுட்டப்பட்டவை நிலையற்றன என்பதை உறுதி பெறுவதற்கு முன்னரான முயற்சிகளாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடைப்பிடிப்பதாலேயே பற்றுகளைத் துறத்தலுக்கான பக்குவ நிலை ஒருவருக்கு ஏற்படுகிறது.

நிலையாமையை உணர்ந்து தெளியும் போது ஏற்படும் பற்றுகளற்ற துறவு மனப்பான்மையானது துன்பம் நீங்க உதவுவது. இதனை நிலையாமைக்கு அடுத்துவரும் ‘துறவு’ என்ற அதிகாரம் விளக்குகிறது. இத்துறவு நெறியில் நிற்கும் பொழுது மெய்யுணர்தல் ஏற்படும். அதாவது உண்மைப் பொருளை உணரும் நிலை ஏற்படும். இதனைத் துறவுக்கு அடுத்த அதிகாரமான ‘மெய்யுணர்தல்’ விளக்குகிறது. ‘பிறவிக்கு வித்தாகிய அவாவை அறுக்க பிறவி நீங்கும், வீட்டின்பம் கிட்டும்.’ இதனை ‘அவாவறுத்தல்’ என்ற அதிகாரம் விளக்குகிறது. ‘உண்மைப் பொருளை உணர்ந்து ஆசைகளைத் துறத்தல் மூலமே ஒருவர் வீட்டின்பம் பெறலாம்’. இவையே இவ்வதிகாரங்களின் ஊடாக நாம் தெரிந்துகொள்ளும் செய்திகளாகும்.

இவ்வாறான புரிதல்களுக்கு ஏற்ற வகையிலேயே திருக்குறளின் நிலையாமை அதிகாரத்தின் வைப்பு முறையும் அமைந்துள்ளது.

## நாலடியார் கூறும் நிலையாமை:

நாலடியாரை எடுத்துக்கொண்டால் நிலையாமையைக் கூறும் துறவறவியல் பகுதி முதலமைவதோடு அதில் முதல் அமைந்த மூன்று அதிகாரங்களுமே இல்லற வாழ்வை அனுபவித்து வாழ்வதற்குத் துணைபுரியும் செல்வம், இளமை, யாக்கை என்பவை அனைத்துமே நிலையற்றவை எனக் கூறுவனவாகும். இதன்மூலம் அவ்வதிகாரங்கள் இல்லறவாழ்வு மீது வெறுப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்துவதோடு துறவறத்தை நோக்கி எம்மை ஆற்றுப்படுத்தவும் முற்படுகின்றன.

முதல் அதிகாரமான செல்வம் நிலையாமையிலமைந்த முதல் மூன்று பாடல்களும் செல்வம் நிலையற்றது, திடீரென இல்லாது போகும் என்ற அச்ச நிலையை மக்களுக்கு ஏற்படுத்தும் பாடல்களாக அமைந்துள்ளன. இதிலமைந்த மூன்றாவது பாடல் வருமாறு,

*‘யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர் தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள’*

அடுத்தமையும் 4,5,6,7-ஆவது பாடல்கள் கூற்றம் வந்து உன்னைக் கொண்டுபோவான் என்ற அச்சத்தை ஏற்படுத்தி அதற்கு முன்னரே பொருட்களைச் சேர்த்து வைக்காது அறஞ் செய்யத் தூண்டுவனவாக அமைந்தவையாகும். இவற்றிலமைந்த நான்காவது பாடல் வருமாறு,

*‘நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று’*

இறுதி மூன்று பாடல்கள் பணத்தைச் சேர்த்து வைப்பதால் ஒரு பயனும் இல்லை என்பதை உணர்த்துவது. இதிலமைந்த ஒன்பதாவது பாடல் வருமாறு,

*‘உண்ணான்; ஒளிநிறான்; ஓங்கு புகழ்செய்யான்;
துன்னாருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான்; பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்’*

இரண்டாவது அதிகாரமான இளமை நிலையாமையில் முதுமையில் வரும் துன்பங்கள் முதல் மூன்று பாடலாலும் கூறப்படுகிறது. அடுத்து இரு பாடல்கள் பரம்பரையிலுள்ள தாயின் முதுமையைக் கூறுவதன் மூலம் முதுமை பற்றிய அச்சவுணர்வை அடுத்த பரம்பரைக்கு ஏற்படுத்துவதாக அமைகின்றன. இதிலமைந்த நான்காவது பாடல் வருமாறு,

***‘தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா***
***வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா***
***மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்***
***அம்மனைக்கோல் ஆகிய ஞான்று’***

ஆறாவது பாடல் பலியிட நிறுத்தி வைக்கப்படும் ஆடு குழை களையுண்டு மகிழ்தல் போல் இளமையில் மகிழ்ச்சியடை யாதே என எச்சரிக்கிறது. இளம் பெண்ணை திருமணம் செய் தால் அவளும் கூனி உடல் வளைந்து கைத்தடி ஊன்றுவாள் எனக்கூறி பெண்ணாசையைத் துறக்கக் கூறுவது ஏழாவது பாடல். எட்டாவது பாடல் இளமை நிலையாமையைக் கூற ஒன்பதாவது பாடல் அறஞ்செய்யத் தூண்டுவதாயும் பத்தா வது பாடல் பிள்ளையைப் பெறுங்கால் ஏற்படும் வலியினைக் கூறி அச்சம் கொள்ளச்செய்கின்றது. இப்பத்தாவது பாடல் வருமாறு;

***‘ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்***
***தோட்கோப்புக் காலத்தாற் கொண்டும்மின்***
***- பீட்பி துக்கிப்***
***பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்***
***கள்ளம் கடைப்பிடித்தல் நன்று’***

இவற்றோடு ஒத்த நாலடியாரில் அமையும் இளமையைத் துறத்தலைக் கூறும் ‘மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெ னினும்...‘எனத்தொடங்கும் 56-வது பாடல் இல்லறத்தை அறவே விலக்கிட இளமையிலேயே அதாவது திருமணத் திற்கு முன்பேயே துறவு மேற்கொள்ள வலியுறுத்துவதாயமை கிறது.

அடுத்து நாலடியாரிலமைந்த மூன்றாவது அதிகாரமான யாக்கை நிலையாமையிலும் முதற்பாடல் இன்று செல்வச் செழிப்போடு இருந்த மன்னன் நாளையில்லையெனக் கூறுவ தனூடு யாக்கை நிலையாமை கூறப்படுகிறது. 2-வது பாடல் அறஞ்செய்யவும் மூன்றாவது நான்காவது ஐந்தாவது பாடல் கள் பிணத்துக்கு அடிக்கும் பறை பற்றிய வர்ணனையாக இடம்பெறுகின்றன. இவை அச்ச உணர்வை ஏற்படுத்துவன. இதிலமைந்த ஐந்தாவது பாடல் வருமாறு,

***‘கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்***
***பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு***
***- மங்கொண் டீண்(டு)***
***உண்டுண்டுண்’ என்னும் உணர்வினாற் சாற்றுமே***
***டொண்டொண்டொண் என்னும் பறை’***

ஆறாவது பாடல் உயிர் போன பின் பிணத்தின் நிலை வர் ணிக்கப்படுகிறது. 7,8-ஆகிய பாடல்களில் நிலையற்ற உடம்பு கூறப்படுகிறது. 9-வது பாடல் இறப்பு எப்பவும் திடீ ரென வரும் என்ற அச்சவுணர்வை ஊட்டுவதாக அமைந்துள் ளது. அப்பாடல் வருமாறு,

***‘புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி***
***இன்னினியே செய்க அறவினை - இன்னினியே***
***நின்றான்; இருந்தான்; கிடந்தான் தன் கேளலறச்***
***சென்றான் எனப்படுத லால்’***

இறுதிப்பாடல் சொல்லாமலே வந்து செல்லும் இவ்வுடம்பு பற் றியதாகும்.

## ஒப்புநோக்கிலே புலப்படும் செய்திகள்:

திருக்குறள் கூறும் வாழ்க்கைத் தத்துவம், ‘அறமும் ஒழுக்க மும் தழுவிய வாழ்க்கையின் தளத்தில் நின்று உலகியல் இன் பத்தைத் துய்க்க வேண்டும்’ என்பதேயாகும். அவ்வாறான வாழ்விலே ஒருவர், ‘பேராசை கொண்டு உழலாமல் தம்மைத் தாம் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்’ என்பதான குறிக் கோளை மையப்படுத்தியே அந்நூலின் ‘நிலையாமை’ என்ற அதிகாரப் பகுதி அமைந்துள்ளது. ‘வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் பற்றுகளற்ற துறவு நிலைக்கு வருதன் மூலமே ‘மெய்யுணர்தல்’ மற்றும் ‘அவாவறுத்தல்’ ஆகிய உயர் நிலை களை எய்துவது சாத்தியம்’ என்பதே திருக்குறள் உணர்த்தி நிற்கும் செய்தியாகும்.

ஆனால் நாலடியாரில் துறவே முதலில் பேசப்பட்டுள்ளமை மூலம் அது துறவு நெறிக்கான ஒரு ஆற்றுப்படுத்தும் ஆக்க மாகவே அமைந்துள்ளமையை உணர்ந்துகொள்ள முடிகின் றது. அதற்கேற்ற வகையிலேயே - குறிப்பாக, ‘வாழ்க்கைமீது வெறுப்பை உருவாக்கும் நோக்குடனேயே’ - இதிலே ‘நிலை யாமை’ பேசப்பட்டுள்ளது. இதற்கான காரணம் இந்நூலின் ‘சமண சமயச் சார்பே’ என்பது வெளிப்படை.



kawsalya.s@thaiveedu.com





# “வாடா மல்லிகை” ஆகிய பாரதி

– கிருங்கை சேதுபதி

மகாகவி பாரதியின் பத்தாண்டு காலப் புதுவை வாழ்வில், அவருக்கு வாய்த்த சீடர்களும் நண்பர்களும் அநேகர். அதே போல், அவரை உய்வித்த குருநாதர்களும் உளர். அவர்களுள் குள்ளச்சாமி குறித்த பதிவுகளைக் கண்டுவரும் வரிசையில், பாரதியையும் குள்ளச்சாமியையும் ஒருசேரத் தரிசித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வி.எஸ். குஞ்சிதபாதம். இவர் பேராசிரியர் ஸ்வாமிநாத தீக்ஷிதரின் புதல்வர்.

தினந்தோறும் ‘த ஹிந்து’ ஆங்கில நாளிதழைப் படிப்பதற்காக இவர்தம் இல்லத்திற்கு வரும் பாரதியார், தீட்சிதரிடம் அரசியல் குறித்தும், அன்றாடச் செய்திகள் குறித்தும் விவாதிப்பதுண்டு.

‘பாரதியாரின் இந்தப் பழக்கம் அவரை நெருங்கிப் பழகிய சில நண்பர்களுக்கும் அவர் வீட்டாரான மனைவி செல்லம்மாவுக்கும், பெண்கள் தங்கம்மாவுக்கும், பாப்பா (சகுந்தலா)வுக்கும் தெரியும். ஆகையால் அவரைக் காலை நேரங்களில் ஏதேனும் அவசர விஷயமாய்ப் பார்க்க வேண்டுமென்றால் எங்கும் காணாவிடில் ‘பி.ஏ. வாத்தியார் தீக்ஷிதர் வீட்டில் கிடைப்பார்’ என்று எங்கள் வீட்டைத் தேடி வருவதுண்டு’ என்று குறிப்பிடும் குஞ்சிதபாதம், ‘ஒரு நாள், முற்றிலும் நான் எதிர்பாராத ஒருவர் அவரைத் தேடி வந்தார். அவர்தான் பாரதியாருக்குக் குருவான ‘குள்ளச்சாமி’ என்கிறார்.

‘அவரை நானும் மற்ற புதுவையிலிருந்த இளைஞர்களும் ‘மாங்கொட்டை சாமி’ என்று சலுகையுடன் அழைப்பதும் உண்டு. குள்ளச்சாமியைப் பாரதியார் அடிக்கடி தேடிப்போவதும் எங்கும் காணாமல் சலிப்படைந்து திரும்பி வருவதும் எனக்குத் தெரிந்திருந்ததே. ஆனால், பாரதியாரைக் குள்ளச்சாமி தேடி எங்கள் வீட்டிற்கு வந்தது அதுதான் முதல் தடவை. அதற்குப் பின்னும் பாரதியாரைத் தேடிச் சாமியார் வரவில்லை. அதன் காரணம் எனக்குப் பின்னர்தான் விளங்கிற்று’ என்ற பீடிகையுடன் தொடங்குகிறார். அது யாது? அப்போது நிகழ்ந்தது என்ன? என்பதை, ‘புதுவையில் பாரதியார்’ என்னும் நூலில் விளக்கமளிக்கிறார்.

அதில், ‘பாரதியாரைத் தேடிவந்த குள்ளச்சாமி, எங்கள் வீட்டின் வெளிப்புறத்தில் திண்ணையின் பக்கத்தில் நின்றுகொண்டு, வீட்டின் உள்பக்கம் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார். அவர் இப்படித்தான் மௌனியாய்ப் பித்தனைப்போல் நின்றுவிட்டு ஒருவருடனும் பேசாமல் போவது வழக்கம். நான் அவரைக் கவனியாமல் அன்றைய தினம் இருந்ததற்கு ஒரு காரணமும் உண்டு. அதற்குக் காரணம், குள்ளச்சாமி பாரதியாரைத் தேடி வந்த சில நாள்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவமாகும்’ என்று எழுதுகிறார்.

குள்ளச்சாமி குறித்த இருவேறு நிகழ்வுகளை முன்னிறுத்தும் இந்த விளக்கப் பதிவில், பாரதியாரின் தனித்துவத்தைத் தன் அனுபவமாக விளக்கிச் செல்லும் இவர், குள்ளச்சாமியின் தோற்றத்தையும் அவர்தம் சித்தாடலையும் பார்த்த வண்ணமே பதிவிடுகிறார். அவற்றின் நுட்பம் அறியாத வயதில், தான் பெற்ற உபதேசக் குறிப்புகளை நாட்பட்ட பிறகு தெளிந்து தேர்ந்த உணர்வையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். குள்ளச்சாமியின் சித்தாடல் திறத்தையும் அவர் கண்டுணர்ந்து காட்டிய பாரதியாரின் மேதைமையும் புலப்படுத்தியிருக்கிறார்.

இந்தப் பதிவு, இவ்விருவர் திறத்தையும் புலப்படுத்திக் காட்டுவதோடு, பிற்காலத்தில், இதனைக் குஞ்சிதபாதம் உலகிற்கு உணர்த்துவார் என்கிற குள்ளச்சாமியின் நம்பிக்கையையும் காட்டுகிறது.

### குஞ்சிதபாதம் கண்ட குள்ளச்சாமி:

‘குள்ளச்சாமி, பாரதியார் காலத்தில் புதுவையிலிருந்த ஒரு சித்த புருஷர். சித்த விளையாட்டிலேயே ஆழ்ந்த ஆன்மிகத் தத்துவத்தின் உண்மைகளையும் பரஞானத்தையும் போதித்தும், உபதேசம் பண்ணிவிட்டும், நாம் அவைகளைப் புரிந்துகொண்டோமா இல்லையா என்றுகூடக் கவனியாமல் ஓடி விடுவார். அதுவுமல்லாமல் அவர் விளையாட்டாகவே மிக ஆழ்ந்த தத்துவ உண்மைகளை உபதேசிப்பாராகையால் அவர் போதனைகள் மிகநுட்பமாகவும் symbolic ஆகவுமிருக்கும். குள்ளச்சாமியின் குறியீடு (symbolic) கொண்ட போதனைகளை, அதுவும் தமது சித்து விளையாட்டில் வெளிப்படுத்துவதை அறிந்துகொள்ள மிகவும் ஆன்மிகப் பக்குவம

டைந்திருக்கும் ஒருவரால்தான் இயலும். அவருக்குத் தங்க இடமோ, சொந்த மடமோ எதுவுமே இல்லை. அங்கிங்கெனாத படி புதுவையில் வெள்ளைக்காரர் பகுதியிலும் மற்ற எல்லா இடங்களிலும் சர்வவியாபியாகக் காணலாம். சில சமயங்க ளில் எங்குமே கட்புலனுக்குக் கிட்டமாட்டார், அந்த சித்த புரு ஷர். முழங்கால்வரை ஒரு கந்தையைச் சுற்றித் திரிவார். அது அவரது இரும்புக் குண்டுபோல் கட்டுமாறாத உடலைப் போதிய அளவு மூடவும் செய்யாது. துணியில்லாத ‘அவதூ தர்’ என்றுகூடச் சொல்லலாம். சுமார் 4 அடி உயரம்தான் இருப்பார். குள்ளச்சாமியின் தலை காரணமாக, மாங்கொட் டைச்சாமி!’ என்னும் பெயரும் பிரசித்தியாயிற்று. அவரைப் பார்த்தால் நாற்பது வயது என்று சொல்லலாம். ஆனால், இரண்டு தலைமுறையாகப் புதுவையில் அந்தச் சாமியாரைப் பார்த்தவரும் பழகியவருமுண்டு. அவர்களிடம் அவர் வய தைப் பற்றிக் கேட்டதில் ஓர் அறுபது ஆண்டுகள் முன்புகூட நாற்பது வயதளவென்று மதிக்கக்கூடிய தேகத்தோடு விளங் கினார் என்பர். எப்போதாவது யார் வீட்டிற்காவது போய் வெளிப்புறத்தில் கையேந்தி நிற்பார். குறிப்பறிந்து அன்பர் அளிக்கும் அன்னத்தை மூன்று கவளம் கையிலிடச் சொல் லிப் புசிப்பார்.’

இவ்வாறு பலரும் சொல்லியவாறே தான் பார்த்த குள்ளச்சாமி யின் தோற்றத்தைச் சித்திரித்துக் காட்டும் இவர், கூடவே, பார தியார் தன் குருநாதர் குறித்துக் கூறிய தொடர்களையும் பின் வருமாறு பயன் கொள்கிறார்.

‘சிறியரொடும் தெருவிலே நாய்களோடும் விளையாட்டாய், தேவனைப்போல் விழித்து பாவனையிற் பித்தனைப்போல் எப் பொழுதும் புன்முறுவலுடன் தெருவிலேயே திரிந்து கொண்டி ருப்பார்’ என்று அவரைச் சித்திரித்துப் பாடியிருக்கிறார் பாரதி யார்.

மேலும், ‘தீராத விளையாட்டுப் பிள்ளை’ என்று கண்ணனைக் குறிப்பிடும் பாரதியார் பாடலின் வரிகளில், கண்ண பரமாத்மா வாகக் குள்ளச்சாமியையும் கொண்டுணர்த்திக் காட்டுகிறார். அந்தத் திருவிளையாடலை அவரே சுவைபட விவரிக்கவும் செய்கிறார்.

## குள்ளச்சாமியின் சித்து விளையாட்டு:

‘ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணி சமயம் எங்கள் வீட்டின் வெளிப்புறத்தில் திண்ணையைப் பிடித்துக்கொண்டு குள்ளச்- சாமி நின்றார். கதவைத் தாளிடப் போனபோது நான் அவ ரைத் தற்செயலாய்ப் பார்த்தேன். ‘என்ன ?’ என்று கேட்டேன். அவர் கையால் சைகை செய்து, என்னைக் கிட்டே வருமாறு அழைத்தார். அருகில் போனதும் முழங்கால் மூடித் தாம் கட் டியிருந்த துணியை நீக்கி அடித்தொடையில் இருந்த ஒரு புண்ணைக் காட்டினார். அது சுமார் நாலு அங்குல நீளமும் ஆழமுமாயிருந்தது.

அந்தக் குழிப்புண்ணிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டு நான் திடுக்கிட்டு, மனம் வருந்தி, ‘ஐயோ! என்னவாயிற்று ? எப் படியாயிற்று ? மருந்து போட்டுக் கட்ட வேண்டுமே’ என்று கேட் டேன்.

‘நாய் பிடுங்கிவிட்டது. ஒரு பிளாஸ்திரி போடேன்’ என்றார். நானும் விரைந்து உள்ளே போய், ஒரு பெரிய துண்டு பிளாஸ் திரியைத் தயார் செய்து கொண்டுவந்து புண்ணில் இடப் போனேன். அவர் அதற்குச் சம்மதிக்காமல் என் கையை ஒரு தட்டுத் தட்டிவிட்டு மின்னல் வேகமாய்த் தெருவில் குதித்து ஓடிவிட்டார். அவரைப் பின்தொடருவதென்பது முடியாத காரி யம் என்று எனக்குத் தெரியும். கண்ணிமைக்குமுன் தெருக் கோடியில் போய்விட்டார். சித்த புருஷராயிற்றே.

ஓட்டத்திலும் சித்தியிலும் நம்மால் அவருடன் போட்டியிட முடி யுமா என்ன ? நானும் ஏமாந்தவனாய் பிளாஸ்திரியை எடுத் துக்கொண்டு வீட்டிற்குள் போய்விட்டேன்.

இதற்கு மறுநாள் குள்ளச்சாமி தெருவில் போய்க்கொண்டிருந் தார். நான் அவரை மெல்லப் பின்தொடர்ந்து வழிமறித்து, ‘என்ன சாமி, நேற்று என்னை பிளாஸ்திரியைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு ஏமாற்றிவிட்டாயே’ என்றேன். அதற்கு நேரிடை யாகப் பதில் வரவில்லை. ஆனால், கேட்டவுடன் முழங்கால் துணியை விலக்கினார். முன்தினம் தோன்றிய புண்ணின் அடையாளமே இல்லை. அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நான், ‘இது என்ன ஜாலவித்தை செய்கிறாய்! இது என்ன ஏமாற்றம் ?’ என்று கேட்டேன். ‘உலகமே ஏமாற்றந்தானே’ என்று ஒரே வாக்கியத்தில் ஆழ்ந்த வேதாந்த மாயா தத்து வத்தை எனக்குப் பதிலாகச் சொல்லிவிட்டுச் சிட்டுக்குருவி போல் ஒரு நொடியில் பறந்து போய்விட்டார். இதிலடங்கிய பரமஞான உண்மையும் உபதேசமும் எனக்கு நாளாக நாளாக விளங்கி வருகிறது.’

இது இவருக்கு மட்டும் கிட்டிய அற்புத அனுபவம்.

## உண்மைவழி தந்த உபதேசம்:

பாரதியாருக்குப் பரிதி காட்டிக் குட்டிச்சுவரோடு கிணற்றை யும் காட்டி, அதன்வழி வேதாந்த மரத்தில் ஒரு வேரை உணர்த்திக் காட்டிய குள்ளச்சாமி, குஞ்சிதபாதத்துக்கு, மாயா தத்துவத்தின் நுட்பத்தை, நாய்க் காயத்தின் வழியே எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இப்பதிவின்படி பார்த்தால், அவரை நாய் கடித்ததும் உண்மை. காயம் ஏற்பட்டதும் உண்மை. தன்னுடலைக் காய கல்பம் செய்துவிட்ட அவருக்கு, அதன் சுவடே இல்லாமல் அழித்துவிடவும் தெரிந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியாத வயதில் குஞ்சிதபாதம் இதனைக் கண்டி ருக்கிறார். அதனால், இதனை ‘ஏமாற்றுவித்தை’ என்று புரிந்து கொண்டு அவ்வாறே குறிப்பிடவும் செய்கிறார். அப்போது புரிந்துகொள்ள முடியாத அப் பரமஞான உண்மையை, உப தேசத்தைப் பின்னரே உணர்ந்து இப்பதிவில் குறிப்பிட்டிருக் கிறார் என்பதும் புரிகிறது.

***காயமே இது பொய்யடா - வெறும்***
***காற்றடைத்த பையடா***

என்ற பொதுவான உபதேசத்துக்கும் மேலான விளக்கத்தை இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. உடலைக் கடந்து



உள்ளே கவனம் புகுகிறபோது விளைகிற ஞானத்தையும், அதன் விளைவாக, பெறுகிற ஆன்ம அனுபவத்தையும் இந்தக் குறிப்புரை சுட்டிக் காட்டுகிறது.

## மலர் கொண்டு காட்டிய பாரதியின் மகிமைத்துவம்:

இந்த 'ஏமாற்று வித்தை' சம்பவம் நிகழ்ந்த ஒரு வாரத்திற்குப் பிறகு குள்ளச்சாமி, தாமாகவே எங்கள் வீட்டிற்குப் பாரதியாரைத் தேடிவந்தார். அப்போது இந்தச் சம்பவமும் அதனால் ஏற்பட்ட ஏமாற்றமும் என் இளைய மனதை விட்டகலவில்லை. 'இந்தப் பித்துக்குளி சாமியிடம், நமக்கென்ன' என்று அசட்டையாக, அக்கறையில்லாதவனாக அவரைக் கவனித்தும் கவனியாதது போலிருந்தேன். குள்ளச்சாமியோ பிடிவாதச் சாமி, நாம் அக்கறையின்றி இருந்தால் வலிய தம்மிடம் வரச் சொல்லும். நாமே அக்கறையுடன் கிட்ட நெருங்கினால் பிடித்

துத் தள்ளும். என்னே! அவர் சித்து விளையாட்டு.

சாமி என்னை விடவில்லை. தம் கையிலிருந்த ஒரு பொருளைச் சுட்டிக்காட்டி, என்னைத் தம்மிடம் வரும்படி அழைத்தார். நானும் அவர் காட்டுவது, நாய் பிடுங்கிய புண்ணில்லை என்று நிச்சயம் செய்துகொண்டு மெல்லத் தயங்கினவனாய்க் குள்ளச்சாமியை நெருங்கினேன். அவர் சுட்டிக்காட்டிய பொருளைப் பார்த்தேன். அது ஒரு வாடாமல்லிகை புஷ்பம். வாடா மல்லிகை மலரை என் முன் நீட்டி, 'இவர் இருக்கிறாரா ?' என்றார் குள்ளச்சாமி. மீண்டும் சித்தர்க்கே இயல்பான அந்தக் குறியீட்டுப் (symbolic) பேச்சு எனக்கு அர்த்தமாகவில்லை. 'யார் அது ?' என்று கேட்டேன். சிரித்துக்கொண்டே 'பாரதி' என்று பதிலளித்தார். நான் பாரதியார் எங்கள் வீட்டினுள் இருக்கிறாரா, இல்லையா என்று பதிலளிப்பதற்கு முன் வழக்கம்போல் குதித்து ஓடிவிட்டார்.'

என்கிறார் குஞ்சிதபாதம். இது இவர் வாழ்வில் குள்ளச்சாமி நிகழ்த்திக் காட்டிய இரண்டாவது அனுபவம்.

ஒன்றோடொன்று தொடர்பில்லாததாக இந்த நிகழ்வுகள் இருந்தாலும், இவற்றின் பின்னணியில் வாடாமல்லிகை ஒரு சிறப்புக் குறியீடாக வருகிறது. மருத்துவம் குணமுடைய அம்மலர், சித்தரின் காயத்திற்கு மருந்தாகி இருக்கலாம்.

ஒரு கோப்பை தயிர் அல்லது பாலில், வாடாமல்லி விழுதினை எடுத்து, நன்றாகக் குழைத்து, உடலில் மேற்பூச்சாக பயன்படுத்தினால் தோல் சுருக்கங்களைப் போக்கலாம் அது போல், ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு தேங்காய் எண்ணெய் எடுத்து, அதனுடன் சிறிதளவு வாடாமல்லி பூக்களின் அரைத்த விழுதைச் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சி வைத்துத் தினந்தோறும் குளிப்பதற்கு முன்பு தோலில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளித்துவந்தால், தோல் சுருக்கம் மறையும். முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் நீங்கும். மேலும், இத்தைலம், தலைமுடிக்கு நல்ல மருந்தாவதோடு, ரத்த ஓட்டத்தையும் சீர் செய்யும் என்கிறது சித்த மருத்துவக் குறிப்பு. எனவே, நாய்க்கடியால் ஏற்பட்ட காயத்திற்கு மருந்தாக, வாடாமல்லிகையைக் குள்ளச்சாமி ஒருவேளை பயன்படுத்தி இருக்கலாமோ ? என்று ஊகிக்கத் தோன்றுகிறது. அல்லது வேறு மருத்துவத் தேவை கருதி, அம்மலரைத் தன் கையில் வைத்திருந்தாரோ என்னவோ ?

இரண்டும் இல்லாத நிலையில், அந்தக் கணத்தில் தன் சித்து விளையாடலாக, வாடாமல்லிகையை வரவழைத்திருந்தாரோ என்னவோ ? யாருக்குத் தெரியும்.

இந்த நிலையில், குள்ளச்சாமி, எதற்காகப் பாரதியாரைத் தேடி வந்தார் என்பது தெரியவில்லை. அப்போது பாரதியார் அந்த வீட்டில் இருந்தாரா என்பதையும் சொல்லவில்லை.

ஆயினும், இதன் மூலம் நாம் அறிய வருவது, முந்தைய ப.கோதண்டராமன் பதிவில், 'தங்கமான பாரதி', குஞ்சிதபாதம் பதிவில், 'வாடாமல்லிகை'யாக இருக்கிறார் என்பது.

## வாடா மல்லிகை ஆகிய பாரதி:

வாடாமல்லி என்பது ஒரு வகை மலர். பொதுவாக, அரும்பாகி, மொட்டாகி மலரும் எந்தப் பூவும் ஒரு கட்டத்தில் வாடி வதங்கி உதிர்ந்துவிடும். ஆனால், கோம்பிரினா குளோபோசா என்னும் தாவரப் பெயர் பெற்ற இம்மலரோ, எப்போதும் மலர்ந்ததுபோல், வாடாது விளங்கும். காரணம் கருதிப் பெயர் பெற்ற இம்மலர், வறண்ட நிலப்பரப்பிலும், வளரக்கூடிய செடித் தாவரத்தின் செல்வக் குழந்தை. பாரதியின் வாழ்வும் அப்படிப்பட்டது தானே. வறுமையும் சூழலும் நெருப்பாய் வாட்டியபோதும், சுடச் சுடரும் பொன்போல் ஒளிர்ந்த தவ வாழ்க்கை, குள்ளச்சாமி போன்றோரின் கூட்டாசியினால், மேலும் மெருகேறி, வாடாமல்லிகையாக வளம்பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு மலருக்கும் அதன் ஆன்மிகத் தன்மை கருதிச் சிறப்புப் பெயர் சூட்டிய ஸ்ரீ அரவிந்த அன்னை, வாடாமல்லிகைக்கு வழங்கிய பெயர், 'மரணமிலாப் பெருவாழ்வு.' அந்த நிலை எய்தியதாகத் தானே, பாரதி அறுபத்தாறு நூலில் பாடியிருக்கிறார். எனவே, வாடாமல்லிகை என்ற குறியீட்டுப் பொருள் பாரதிக்கு மிகவும் பொருத்தம்.

## நிறைவாக...

அதிகம் பேசுகிற பழக்கம் இல்லாத குள்ளச்சாமி, குறிப்புப் பொருள் காட்டி, உணர்த்திய இரு உண்மைகள் இப்பதிவில் துலக்கமாகின்றன.

- 'உலகமே ஏமாற்றந்தானே' என்கிற வேதாந்த மாய தத்துவத்தை விளக்கியது.
- கையில் வாடாமல்லிகையை வைத்திருந்து அது பாரதி என்று குறிப்புப் பொருள் காட்டியது.

பின்னதன் விளக்கமாக, குஞ்சிதபாதம் இப்படி எழுதி முடிக்கிறார்.

'தம் சீடரான பாரதியார் வருங்காலத்தில் அடையப்போகும் புகழையும், ஆன்மிகச் சாதனையில் முன்னேறி அவர் என்றும் அழியா அமரர் பதம் எய்தப்போவதையும் சொல்லாமல் உணர்த்தினார் நம் மஹாகவியின்மேல் உயிருக்குயிராயிருந்த அவர் குருவான குள்ளச்சாமி. பாரதீயம் பரவி, பாரதியார் புகழ் வானையளவி நிற்கும் இக்காலத்தில் அவர் குருவான குள்ளச்சாமி தம் ஆசியுடனும் அளவிலா அன்புடனும் தீர்க்கதரிசனத்துடன் பாரதிக்கு அன்றே சூட்டிய பெயர் எவ்வளவு பொருத்தமென்று நினைக்க நினைக்க என் மனம் எல்லையிலா மகிழ்ச்சியடைகிறது.'

உண்மைதானே.



sethupathi@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

**- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா**

சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியாக் காண்டத்தின் நான்காவது படலமாகிய நகர் நீங்கு படலத்தின் ஒரு பகுதியைக் கம்பரின் கவிநயத்தின் சிறப்போடு சுவைத்தோம். அதன் தொடர்ச்சியாக நகர் நீங்கு படலத்தின் பிற்பகுதியில் நிகழ்கின்றவற்றைக் கம்பரின் கவி வரிகளின் நயத்தோடு மேலும் சுவைப்போம். வாருங்கள்.

இராமனின் முடிசூட்டு விழா தடைப்பட்ட செய்தியறிந்து அயோத்தி நகர் முழுவதும் அழுது புலம்புகிறது. கூனியும் கைகேயியும் மாத்திரமே அந்நகரில் வருந்தாதவர்கள். இராமன் அரசாட்சியிழந்து காடு செல்லப் போகும் செய்தியறிந்து, அவன் தம்பி இலக்குமணன் பெருஞ்சினங் கொண்டு அண்ணன் இராமன் முடிசூடுவதை யார் தடை செய்தாலும் தொலைத்து விடுகிறேன் என்று போர்க்கோலம் கொண்டு தனது வில்லில் நாணை ஏற்றியபோது எழுந்த ஒலியைக் கேட்ட இராமன் அவனிடம் வருகிறான்.

***'மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்ற***
***பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கை யானை***
***என்னத்த வென்னீ இறையேனு முனிந்தி லாதாய்***
***சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேது வென்றான்.'***

- கம்ப. அயோத்தி. 423

மின்னலைப் போன்று நெருப்பாக எரிகின்ற சீற்றத்தைத் தோற்றுவித்துக் கொண்டு நிற்கும் பொன்போன்ற மேனியையும் புயல் போன்ற வலிய கைகளையும் உடையவனாகிய தனது தம்பியை நோக்கி, ஒருநொடி கூடச் சினங் கொள்ளாதவனாகிய நீ போர்க்கோலம் கொண்டு வில் ஏந்துதற்குக் காரணம் என்ன என்று இராமன் கேட்கிறான். ஒருவனுக்குச் சினம் ஏற்படும் போது அது மின்னலைப் போன்று தோன்றி விரைவிலேயே தணிந்துவிடும் என்பதைக் கம்பர் 'மின்னொத்த சீற்றக் கனல் விட்டு விளங்க நின்ற' என்ற சொற்றொடரை இங்கே வைத்துள்ள சிறப்பைப் பார்க்கிறோம்.

உனக்கு முடி சூட்டுவதென்று மன்னன் கூறிய வார்த்தையைச் சிதைத்தவர்கள் தேவர்களேயாயினும் பஞ்சை எரிக்கின்ற தீயைப்போல அழிக்கத் துணிந்தேன் என்கிறான் இலக்குமணன். தான் முடி சூடாது கானகம் செல்வது என்பது எவரினதும் குற்றமல்ல என்று இராமன் இலக்குமணனுக்கு விளக்கிக் கூறி அவனை அமைதிப்படுத்துகிறான்.

***'நதியின் பிழையன்று நறம்புனல் இன்மை யற்றே***
***பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்***
***மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த***
***விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்'***

- கம்ப. அயோத்தி. 431

எப்போதும் நீர் இருக்கக்கூடிய ஆற்றிலே நீர் வற்றிப் போவது அந்த நதி செய்த குற்றமில்லை. வான்மழை பொய்த்த குற்றமேயாகும். ஒருபோதும் என்னைப் பிரிவதற்கு மனமில்லாத தந்தை இப்போது பிரியும்படியானது அவர் செய்த குற்றமில்லை. வரத்தைப் பெற்று இப்போது என்னைக் காட்டுக்குச் செல்லப் பணித்தது இதுவரை நம்மைப் போற்றி வளர்த்தவளாகிய எமது சிற்றன்னையின் அறிவினது குற்றமுமல்ல. அவளது மகனாகிய பரதனது பிழையுமல்ல. இளையவனே! இது விதியின் பிழையாகும். இதற்கு நீயேன் சினங் கொள்கிறாய். இது விதியினால் ஏற்பட்டதேயன்றி எவரினதும் குற்றமில்லை என்று இலக்குமணனை இராமன் அமைதிப்படுத்துவது போல் விதிக் கோட்பாட்டைக் கம்பர் இச்செய்யுளில் வெளிப்படுத்தியிருப்பது தெரிகிறது. கம்பரின் இந்தச் செய்யுள் வரிகளையும் பொருளையும் ஒரு திரைப்படப் பாடலில் கவிஞர் கண்ணதாசன் அப்படியே எடுத்தாண்டு இருக்கின்றார். 'நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் உண்டு, ஒன்று மனச்சாட்சி' எனத் தொடங்கும் பாடலில் 'நதி வெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றமில்லை, விதி செய்த குற்றமன்றி வேறுயாதம்மா' என்னும் கவிஞர் கண்ணதாசனின் வரிகள் கம்பரின் வரிகளல்லவா ? இவ்வாறு, கம்பரின் பல கவிதைப் பொருண்மைகளையும், செய்யுள் வரிகளையும் தனது பாடல்களில் கையாண்டிருப்பதைக் கவிஞர் கண்ணதாசன் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டிருக்கின்றார் என்பதையும் நாம் அறிவோம்.

இராமன் இலக்குமணனை அமைதியாக்கக் கூறிய சொற்களைக் கேட்ட இலக்குமணன் இவ்வாறு மறுமொழி கூறுகிறான்.

*‘உதிக்கும் உலையுள் உறுதீயென ஊதை பொங்கக்
கொதிக்கும் மனமெங்ஙனம் ஆற்றுவென் கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்வா னவர்க்கும் வலீஇதாம்
விதிக்கும் விதியாகுமென் விற்றொழில் காண்டி யென்றான்.’*

- கம்ப. அயோத்தி. 432

பெரிய உலைக்களத்துக்குள்ளே பொருந்திய தீயைப்போல மிகுந்த வெப்பத்தோடு மூச்சுக் காற்று வெளிவரவும், ‘கொதிக்கின்ற மனத்தை எப்படித் தணிப்பேன். நீ முடி சூடுவதற்கு இடையூறு செய்தவளாகிய கைகேயின் அறிவுக்கும் அறிவூட்டுவதாய் மும்மூர்த்திகளின் வலிமைக்கும் அடங்காத வலிமையுடைய எனது வில் நீ சொல்லும் விதிக்கும் விதியாகும். இதைக்காண்பாயாக’ என்று சூளுரைக்கின்றான்.

ஊழ்வினையால் நேர்ந்ததற்கு நீ சினம் கொள்வது தகாது என இராமன் கூறியதைக் கேட்ட இலக்குமணன் மிகுந்த சீற்றத்துடன், ‘உனக்குத் தீங்கிழைத்த கைகேயியின் எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு மும்மூர்த்திகளே வந்தாலும் அவர்களையும் தோற்கடித்து அவளது சிற்றறிவுக்கும் அறிவூட்டுவேன். நீ கூறிய விதிக்கும் விதியாகும் என் வில்’ என்று விதியினும் வலியதாய்ச் செய்யும் செயல் அமையும் என்று இலக்குமணன் வாயிலாகக் கம்பர் வெளிப்படுத்துகிறார். விதிக் கோட்பாட்டை முன்னைய செய்யுளில் வலியுறுத்திய கம்பர், உறுதியான செயற்பாடு ஊழையும் வெல்லும் என்பதைச் சொல்ல, ‘விதிக்கும் விதியாகும் என் விற்தெழில்’ என்று இச்செய்யுளில் பதிவிடுகிறார். ‘ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர்.’ என்னும் வள்ளுவனின் வாக்கைக் கம்பர் இங்கே வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

இராமன் பல அறிவுரைகளைக் கூறி இலக்குமணனின் சினத்தை ஒருவாறு தணிக்கிறான்.

*‘நன்சொற் கடந்தாண்டு எனைநாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தென்றால்
என்சொற் கடந்தால் உனக்கு யாதுள தீனமென்றான்
தென்சொற் கடந்தான் வடசொற் கலைக் கெல்லை தேர்ந்தான்.’*

- கம்ப. அயோத்தி. 438

தென்பரதக் கண்டத்தில் வழங்கும் மொழியாகிய தமிழ் மொழிக் கடலைத் தாண்டியவனும், அதாவது தமிழை முற்றுணர்ந்தவனும், வடமொழியிலுள்ள கலைகள் யாவையும் முற்றறிந்தவனாகிய இராமன் இலக்குமணனை நோக்கி, ‘நற்சொற்களைக் கூறி என்னைப் பாதுகாத்து இந்நாள்வரை வளர்த்து வந்த தந்தையினுடைய சொல்லை மீறி நான் அரசாட்சி புரிவது எனக்குத் தக்கதன்று. ஆனால் எனது சொல்லை மீறுவதால் உனக்கு என்ன இழுக்கு ஏற்படும்’ என்கிறான்.

இச்செய்யுளிலே தொன்மை, இனிமை, மகிமை எனப் பல தன்மைகளிலும் தமிழ் மொழியாம் தென்மொழியும், வடமொழியும் ஒப்பானவை என்பதைக் கம்பர் பதிவிடுகிறார். இவ்விரு மொழிகளையும் முற்றறிந்தவன் இராமன் என்பதாத், ‘தென் சொற் கடந்தான் வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்’ எனக் கம்பர் கூறுகிறார். இராமன் தென் மொழியாகிய தமிழ்க் கடலையும் கடந்தவன் எனக் குறிப்பிடுவதிலிருந்து கம்பரின் தமிழ்ப் பற்று இங்கே வெளிப்படுவதைக் காண்கிறோம். இச் செய்யுளில் ‘கடந்து’ என்னும் சொல்லைக் கம்பர் முற்றறிந்தது என்னும் பொருளிலும், மீறுவது என்னும் பொருளிலும் வெவ்வேறு பொருள்படக் கூடியதாகச் சொற்பொருட் பின்வரு நிலையணி பொருந்த அமைத்துள்ள சிறப்பையும் அறியலாம்.

இராமனின் அறிவுரையால் சினந் தணிந்த இலக்குமணனுடன் இராமன் இலக்குமணனின் தாயாகிய சுமத்திரை இருக்குமிடம் செல்கிறான். இராமன் காடு செல்வதையறிந்து அவள் வருந்துகிறாள். அவனைக் காடு செல்லாதிருக்குமாறு அவள் வேண்டுகிறாள்.

*‘கான்புக் கிடினும் கடல்புக் கிடினும்
வான்புக் கிடினுமெனக் கன்னவை மாண்அயோத்தி
யான்புக்க தொக்கு மெனையார் நலிகிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக் குணர்வுக் குலையற்க வென்றான்.’*

- கம்ப. அயோத்தி. 443

நான் காட்டை அடைந்தாலும், கடலை அடைந்தாலும், ஆரவாரத்தையும், பெருமையையும் உடைய விண்ணுலகை அடைந்தாலும், எனக்கு அவையெல்லாம் மாட்சிமையுடைய அயோத்தியை அடைவதை ஒக்கும். என்னை வருத்துவதற்கு யார் வலிமை கொண்டிருக்கிறார்கள்? உடல் மெலிந்து, உயிர் தளர்ந்து, உணர்வழிந்து வருந்தவேண்டாம்’ எனச் சுமித்திரையை இராமன் வேண்டுகின்றான். இச்செய்யுளிலும் ‘புக்கு’ என்னும் சொல்லைப் புகுவது, அழிவது என்னும் இரு பொருளில் கம்பர் எடுத்தாண்டு சொற்பொருட் பின்வரு நிலையணி என்னும் அணி நயத்தைச் சேர்த்திருப்பதைக் காண்கிறோம்.

கைகேயியின் பணிப்பெண்கள் எடுத்து வந்த மரவுரியை இலக்குமணன் வாங்கிக் கொண்டு இராமனுடன் தானும் காடேகப் போவதாகக் கூறித் தன் தாயிடம் விடை கேட்கிறான். அவள் தன் மகனுக்குச் சில அறிவுரைகள் கூறி அனுப்புகிறாள்.

*‘பின்னும் பகர்வாள் மகனேயிவன் பின்செல் தம்பி
என்னும் படியன் றடியாரினில் ஏவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன் வந்திடின் வாவதன்றேல்
முன்னம் முடியென்றனள் வார்விழி சோர நின்றாள்.’*

- கம்ப. அயோத்தி. 449

சுமித்திரை இலக்குமணனுக்கு உறுதி மொழிகளைக் கூறுபவளாய் அவனை நோக்கி, ‘மகனே! இராமனுடன் அவன் பின்னே போ. அப்படிப் போகும்போது பார்ப்பவர்களுக்கு இராமனின் தம்பி எனும்படி அல்லாமல் அவனது அடியாரைப் போல் அவனது கட்டளைகளைச் செய்பவனாகப் போ. இராமன் அயோத்திக்கு மீண்டும் திரும்பிவந்தால் அவனுடன் கூட வா. இல்லையேல் அவனுக்கு முன்னமே உன் உயிரைத் துறந்து விடு’ என்று விழிகளில் கண்ணீர் சோர நின்று வழியனுப்புகி



றாள். ‘மன்னுந் நகர்க்கே யிவன் வந்திடில் வா அதின்றேல் முன்னம் முடி’ என்று தன் மகனுக்குக் கட்டளையிடும் ஒரு தாயின் மனோநிலையை ‘வார்விழி சோர நின்றாள்’ என்ற தொடரால் உருக்கமாக வெளிப்படுத்துகின்றார் கம்பர்.

இலக்குமணனைத் தன்னுடன் வரவேண்டாம், தன் பிரிவினால் வருந்தும் தாய் தந்தையருக்குத் துணையாக இரு என இராமன் அவனை வேண்டிக்கொண்டாலும் இராமனின் வேண்டுகோளை மறுத்துத் தானும் அவனுடன் செல்வதாக உறுதியாக நிற்கிறான். இராமனுக்கு மறுத்து அவனைத் தடுக்கமுடியாது போகிறது. இராமன் காடு செல்லத் தயாராகி மரவுரி தரித்துக்கொண்டு தன் மளிகையை நோக்கித் தெருவிலே செல்வதைக் கம்பர் இவ்வாறு கூறுகின்றார்.

***‘நன்னெடு நளிமுடி சூட நன்மணிப்***
***பொன்னெடுந் தேரொடும் பவனி போனவன்***
***துன்னெடுஞ் சீரைகள் சுற்றி மீண்டுமப்***
***பொன்னெடுந் தெருவிடைப் போதன் மேயினான்’***

- கம்ப. அயோத்தி. 485

பெருமையுடைய மணிமுடியைச் சூடிக்கொள்வதற்குச் சிறந்த பொன்மயமான மணிகள் இழைத்த பெரிய தேரின் மீது பவனி போன இராமன், பெரிய மரவுரிகளை ஆடையாக உடுத்திக் கொண்டு அந்த அழகிய வீதியில் செல்வானாயினான் என்கிறார். முடி புனைவதற்காக அத்தெருவிலே தேரிலே உலாப் போன இராமன் இப்போது மரவுரி தரித்தவாறு நடந்து செல்கிறான் என்னும் கம்பனின் பொருள் நயம் மிக்க இச்செய்யுள்

ஒருவருக்கு ஏற்படக்கூடிய எழுச்சியையும் வீழ்ச்சியையும் சிறப்பித்துக் கூறுகிறது. இராமன் அவ்வாறு சென்ற காட்சியைக் கண்டு வருந்திய அயோத்தி நகரை வருணித்துக் கம்பர் 30 செய்யுள்கள் வடித்துள்ளார்.

இராமன் சீதையிருந்த இடத்திற்குச் செல்கின்றான். அங்கே அவனது தாயும், சிற்றன்னையும் அருந்தவ முனிவர்களும், அந்தணர்களும் வந்து சேர்கிறார்கள். தாயார்கள் அவளைத் தழுவி அழுகிறார்கள். அவள் நடந்தது இன்னதென்று உணராது நிகழ்ந்ததை உணர்த்துமாறு இராமனிடம் கேட்கின்றாள்.

*'பொருவில் எம்பி புவிபரப் பான்புகழ்*
*இருவர் ஆணையும் ஏந்தினென் இன்றுபோய்க்*
*கருவி மாமழைக் கற்றடங் கண்டுநான்*
*வருவன் ஈண்டு வருந்தலை நீயென்றான்.'*

- கம்ப. அயோத்தி. 520

ஒப்பற்ற எனது தம்பி பரதன் புவியை ஆள்வான். புகழ்தற்குரிய பெற்றோர் இருவரினதும் கட்டளையையும் தாங்கியவனாகி இன்று போய், உலகியல் நடத்தற்குக் காரணமாகிய மேகங்களுள்ள வனத்தைக் கண்டு மீண்டு வருவேன். நீ வருத்தமடையாது இரு என்கிறான் இராமன். சீதை பெருவருத்தமடையாதிருக்கும் வண்ணம் தான் காட்டுக்குப்போய் உடனே திரும்பி வந்து விடுபவன் போலச் சொல்லியதாக இங்கே கம்பர் கூறியுள்ள நுட்பம் நயம் மிக்கது. தன் கணவன் ஆட்சியிழந்ததையிட்டோ அல்லது காட்டிற்குப் போவதாகச் சொன்னதைப் பற்றியோ சீதை வருத்தமுற்றாளில்லை. 'நீ உடன் வராது வருந்தாது இரு. நான் காட்டுக்கு நீங்குகின்றேன்' என்று அவன் கூறிய சொல்லே அவளை வருத்தும் கொடிய சொல்லாக அவள் காதைச் சுட்டது என்கிறார் கம்பர். அவள் வருந்துவதைக் கண்ட இராமன், 'இரவையும் உருக்கவல்ல சூட்டையும் கரடுமுரடான கற்களையும் கொண்ட காட்டு வழியைச் செம்பஞ்சு ஊட்டிய உனது குளிர்ந்த மென்மையான அடித்தாமரைகள் தாங்கும் வல்லமை உடையனவல்ல என்பதற்காகவே உடன் வராமல் இங்கே இரு என்றேன்' என்கிறான்.

*'பரிவி கந்த மனத்தொடு பற்றிலாது*
*ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்*
*எரியுமென்பது யாண்டைய தீண்டுநின்*
*பிரிவினும் சுடுமோ பெருங் காடென்றாள்.*

- கம்ப. அயோத்தி. 525

'இரக்கம் நீங்கிய மனத்தோடு என்னிடத்தில் விருப்பமில்லாமல் என்னை விட்டு நீங்கிச் செல்வதாக இருக்கிறாய். ஊழிக் காலத்து வெய்யோனும் சுடுவானென்பது உன் பிரிவுத் துயரினால் நேரும் வெப்பத்துக்கு முன்னே எத்தன்மை உடையது. நீ செல்லப் போகின்ற பெரிய காடானது நின் பிரிவுத் துயரைக் காட்டிலும் சுடும் தன்மையதோ ?' என்று சீதை அவனிடம் கேட்கிறாள். 'நின் பிரிவினும் சுடுமோ பெருங் காடென்றாள்' என்னும் கம்பரின் சொற்றொடர் எந்தத் துன்பத்திலும் கணவனை விட்டுப் பிரிய விரும்பாத பெண்களின் உணர்வுக் குறியீடாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். காட்டின் சூட்டை விட உள்ளத்து உணர்வின் சூடு மிகப் பெரியது என்று கூறும் கம்பரின் கவிநயம் போற்றத்தக்கது. 'பெருங்காடின்னா வென்றீராயின் இனியவோ பெரும, தமியேற்கு மனையே' எனப் பிரிவால் ஏற்படும் துயர உணர்வை இதேபோல் வெளிப்படுத்துகின்ற குறுந்தொகைச் செய்யுளையும் இதனுடன் ஒப்பு நோக்கலாம்.

இவ்வாறு கூறிய சீதை தானும் மரவுரி தரித்தவளாக வந்து இராமனின் கையைப் பற்றி நிற்கிறாள். எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேளாது இராமனுடன் காடு செல்வதற்குச் சீதை உறுதியாக நிற்கிறாள். அவளது உறுதியைக் கண்டு மறுக்கவியலாத இராமன் அனைவரையும் வணங்கி விட்டுச் சீதையையும் இலக்குமணனையும் அழைத்துக்கொண்டு விடைபெற்றுச் செல்கிறான்.

*'சீரை சுற்றித் திருமகள் முன்செல்ல*
*மூரி விற்கை இளையவன் பின்செல்லக்*
*காரை யொத்தவன் போம்படி கண்டவவ்*
*வூரை யுற்ற துணர்த்தவும் ஒண்ணுமோ?'*

- கம்ப. அயோத்தி. 533

சீதை மரவுரி உடுத்து முன்னே வரவும் வலிமையான வில்லைத் தாங்கிய கையுடன் இளையவனான இலக்குமணன் பின்னே செல்லவும் கார்மேகத்தையொத்த இராமன் அயோத்தியைவிட்டு போவதைக் கண்ணுற்ற அந்நகரத்தவர் அடைந்த துயரத்தைச் சொல்லவும் முடியுமா என வியந்து கேட்கிறார் கம்பர்.

இவ்வாறு, சொல்நயம், பொருள்நயம், அணிநயம் கூட்டிக் கம்பர் வடித்துள்ள உணர்ச்சி பொங்கும் செய்யுள்களோடு நகர் நீங்கு படலம் முற்றுப் பெறுகிறது. இராமன் காட்டுக்குச் செல்வதைத் தொடர்ந்து அயோத்தியில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை அடுத்து வரும் தைலமாட்டுப் படலத்தில் கம்பரின் கவிநயத்துடன் சுவைப்போம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# தமிழ்வலை - 103


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-103 வினா

### இடமிருந்து வலம்

1 ஏறத்தாழ
4 உக்கிரேன் தலைநகர்
5 சென்னை பல்கலைக்கழக பேரகராதியின் ஆக்கக் குழுத் தலைவர்
7 பழம்பெரும் நகைச்சுவை நடிகர்
8 ஒரு நிறம்
10 நிலம்
12 இலங்கையில் பேர்போன மாதா கோயில் தலம்
13 பொருள்
16 இஸ்லாமிய ஆட்சியாளருக்குரிய ஒரு பதவி
17 ஒரு மரவேலைக் கருவி

### மேலிருந்து கீழ்

1 தமிழ்ப்பாட்டி
2 வெறும் பேச்சு
3 ஒரு பிராணி
6 கவனத்தை ஒருமுகப்படுத்து
7 தொழிலாளி
9 கட
11 நடவடிக்கை
14 உலகியல் வாழ்வினைக் கைவிடுதல்
15 ஒரு விளையாட்டு
16 பாதி

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 102க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 1 வி | பு | லா | ந | ந் | 2 த | ர் | ■ |
| 3 ம | லா | யா | ■ | ■ | ■ | ■ | ரை | ■ | 4 மீ |
| லை | ■ | 5 பா | லை | 6 வ | ன | ம் | ■ | ■ | ர் |
| ய | ■ | ர் | ■ | டு | ■ | ■ | 7 மி | ■ | மி |
| 8 க | ட | ம் | ■ | ■ | ■ | 9 க | ட | வு | ள் |
| ம் | ■ | ■ | 10 ம | ண் | டோ | த | ரி | ■ | ■ |
| ■ | ■ | 11 மௌ | ■ | ■ | ■ | க | ■ | ■ | 12 கே |
| 13 ப | ல் | ல | க் | கு | ■ | ளி | ■ | 14 கா | டு |
| ழ | ■ | வி | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| ம் | ■ | ■ | 15 இ | சை | வு | ■ | 16 பு | ல | வி |

## தமிழ்வலை-102 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சுதர்சன் ஜெயலட்சுமி, யாழ்ப்பாணம்.
தேவாம்பிகை அரவிந்தன், UK.
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ
பற்றிக் ஜோன், மொன்றியால்.
சிவகுமார், ரொறன்ரோ
புஷ்பம் குமாரவேல், ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜக்ஸ், கனடா.
வடிவேலு சரஸ்வதி, மிஸ்ஸிஷாகுவா.
யூட் தேவதாஸ் நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**P. உஷாராணி,**
**மட்டக்களப்பு.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# கௌதமி காத்திருந்தாள்

- சந்திரவதனா



போர் தொடங்கிய பின்தான் கௌதமி எங்கள் வீட்டுக்கு அருகில் குடிவந்தாள். மாம்பழம் போல ஒருவித மஞ்சள் நிறத்தில் மொழுமொழுவென்றிருந்தாள். அவள் சிரித்தால், முத்துக்களை அடுக்கி வைத்தது போன்ற சீரான அழகிய பற்கள் பளிச்சிடும். நினைத்தவுடன் சிரிக்கவும் தேவைப்படும் போதெல்லாம் கண்களைக் குளமாக்கவும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

என்னை விட இரு வயதுகள் குறைந்தவளாக இருந்தாலும் என்னோடு சிரிக்கவும் என்னோடு அழவும் அவளால் முடிந்தது. இன்னும், அம்மா பிள்ளைகளாக படிப்பும் பாட்டும் வேலையும் என்றிருந்த என் தங்கைமாரோடு பேச முடியாத விடயங்களைக் கூட மூன்று வயதுக் குழந்தைக்கு அம்மாவாக இருந்த அவளுடன் என்னால் பேச முடிந்தது. அவளது கணவன் யோகன் சவுதியிலும் எனது கணவர் ஜேர்மனியிலும் இருந்தனர். அந்த நிலமை நாங்கள் உரையாடுவதற்கான பேசுபொருட்களை எங்களுக்கு அள்ளித் தந்து கொண்டிருந்தது.

என்ன ஒரு பாகுபாடு..! அவளுக்கு சவுதியிலிருந்து கணவன் யோகனின் கடிதங்கள் வாரத்துக்கு ஐந்து, ஆறு என்று வரும். சில சமயங்களில் ஒரேநாளில் இரண்டு அல்லது மூன்று கடிதங்களும் வருவதுண்டு. வெள்ளை நீள் சதுரத்தில் நாற்பக்க விளிம்புகளிலும், சிவப்பிலும் நீலத்திலும் வர்ணம் தீட்டப்பட்ட உறைகளை தபாற்காரன் என்னைத் தாண்டிப் போய்த்தான் அவளிடம் கொடுப்பான்.

எங்கள் வீட்டையும் அவள் குடியிருந்த வீட்டையும் ஒரு செம்பருத்தி வேலிதான் பிரித்திருந்தது. நானும் அவளும் அந்த வேலிக்குள்ளால் கதைத்தபடியே, தபாற்காரனுக்காய் காத்திருப்போம். சந்தியில் வரும்போதே தபாற்காரன் தனது துவிச்சக்கர வண்டியின் மணியை ஒருவிதமாக அடிப்பான். அவன் தான் வருகிறான் என்பது எங்களுக்குத் தெரிந்துவிடும். இருவரும் பட படப்போம். கதையை அந்தரத்தில் விட்டுவிட்டு எங்களெங்கள் கேற்றடிக்கு ஓடுவோம். தபாற்காரன் முன்னொழுங்கையில் திரும்பி, அதற்குள் இருக்கும் நான்கைந்து வீடுகளுக்குக் கடிதங்களைக் கொடுத்து விட்டுத்தான் எங்கள் வீட்டுக்கு வருவான். பெரும்பாலான நாட்களில் அவன் எனக்கு ஒன்றுமே தரமாட்டான். அப்படியே, ஒரு முறுவலுடன் என்னைத் தாண்டிப் போய் கௌதமியிடம் கொடுப்பான். எனக்கு அழுகை வரும். அழவும் வெட்கமாக இருக்கும். ஒரு மாதத்துக்கு ஒன்று அல்லது இரண்டு கடிதங்களைத்தான் எனது கணவர் எனக்கு எழுதி அனுப்புவார். கௌதமிக்கோ கொள்ளை கொள்ளையாகக் கடிதங்கள் வரும். அவ்வப்போது சூட்கேஸ் நிறையச் சேலைகள் வரும். குடைகள் வரும். சொக்ளேற்ஸ் வரும். நான் மனசுக்குள் பொருமிக் கண்ணீர் வடிப்பேன்.

கௌதமி அடிக்கடி ரவுணுக்குப் போவாள். யோகன் அனுப்பும் காசோலையை வங்கியில் மாற்றுவதற்கு, சந்தையில் புதிய மரக்கறிகள், மீன் வாங்குவதற்கு என்று... ஏதாவது காரணங்கள் அவளுக்கு இருக்கும். ஒவ்வொரு முறை போகும் போதும் ஒவ்வொரு புதுப் புதுச் சேலையுடுத்து, அதற்குப் பொருத்தமான நிறத்தில் குடையும் பிடித்துக் கொண்டு போய் வருவாள். அவளது செருப்புக் கூட அந்தச் சேலைக்குப் பொருத்தமான நிறத்திலேயே இருக்கும். பெரிதான ஒப்பனை ஒன்றும் அவளுக்குத் தேவையாக இருக்கவில்லை. அவள் பேரழகி!

ரவுணிலிருந்து வந்ததும் சமைப்பாள். அவளது குசினிக்குள்ளிருந்து களஞ்சிய அறைக்குள் போவதற்கு வெளிவிறாந்தைக்கு வந்துதான் போக வேண்டும். அவள் அப்படி அந்த வெளிவிறாந்தையில் நடமாடும் பொழுதுகளில் அவளது வானொலியில் ஒலித்துக் கொண்டிருக்கும் அழகிய இனிய சினிமாப் பாடல்களுக்கேற்ப கைகளை அப்படியும் இப்படியும் அபிநயித்தபடி நடனமாடிக்கொண்டே நகர்வாள். ஓடுவாள். குதிப்பாள். அவளிருந்த வீடும் எங்கள் வீடும் 'டானா' படக் கட்டப்பட்ட வீடுகள். இரண்டு டானாக்களும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருந்தன. நாங்களும் ஒருவரையொருவர் செம்பருத்தி வேலிக்குள்ளால் பார்க்கத் தவறுவதில்லை. எங்கள் வீட்டுப் பெரிய விறாந்தையில் நடப்பதெல்லாம் அங்கு தெரியும். அதே போல் அங்கு நடப்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். அது ஒன்றும் எங்களுக்குத் தொந்தரவாகவும் இருக்கவில்லை.

கௌதமியிடம் நிறைய பாட்டு-ஒலிப்பேழைகள் இருந்தன. ரவுணுக்குப் போகும் பொழுதுகளில் அவள் தனக்குப் பிடித்த சினிமாப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து எழுதிக் கொண்டு போவாள். அவற்றை அங்கு ரவுணுக்குள் இருக்கும் ஓடியோக் கடையில் கொடுத்து ஒலிப்பேழையில் பதிவு செய்வித்துக் கொண்டு வருவாள். அப்படிப் பாடல்களைப் பதிவிப்பது அப்போது அனேகமான எல்லோர் வீடுகளிலும் நடந்து கொண்டு தான் இருந்தது. அதையேதான் அவளும் செய்தாள். ஒரு



நாள் வேலிக்குள்ளால் கதைக்கும் போது "இண்டைக்கு ஒடியோக்கடையிலை சரியான சனம். அங்கை வேலை செய்யிற ஒரு அண்ணா, தான் வீட்டை போகேக்கை அந்த ஒலிப்பேழையை இங்கையே கொண்டு வந்து தந்திட்டுப் போறன் எண்டு சொன்னவர்" என்று சொன்னாள்.

அன்று மாலை ஆறுமணியளவில் அந்த அண்ணா வந்து அவள் வீட்டு வாசலில் துவிச்சக்கர வண்டியின் மணியை அடித்ததையும் அவள் ஓடிச்சென்று அந்த ஒலிப்பேழையை வாங்கியதையும் நான் முன்விறாந்தையில் நின்ற போது கண்டேன். பிறகுதான் அந்த அண்ணாவின் பெயர் இளங்கோ என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அந்த நாளுக்குப் பிறகு அவள் பாடல்களைப் பதிவு செய்யக் கொடுத்து விட்டுக் காத்திருந்து வாங்கி வருவதில்லை. இளங்கோவுக்காகத்தான் காத்திருப்பாள். இளங்கோ, மாலையில் கடையிலிருந்து வீட்டுக்குப் போகும் போது வழியில் இருக்கும் இவள் வீட்டடியில் ஒலிப்பேழையைக் கொண்டு வந்து கொடுப்பான். இவள் 'நன்றி' சொல்லி வாங்குவாள். இளங்கோ 'போட்டு வாறன்' சொல்லிப் போவான்.

நாட்டில் போர் வளர்ந்து கொண்டிருந்தது. எப்போது குண்டு மழை பொழியும்? எப்போது கடலிலிருந்து பீரங்கி முழங்கும்? எப்போது 'ஷெல்' வந்து சிதறும்? என்று தெரியாத பதட்டம் எம்மைச் சூழ்ந்து கொண்டது.

இவைகளிலிருந்து எனது மூன்று பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொண்டு ஜேர்மனிக்கு எனது கணவரிடம் ஓடி விடுவதே எனது இலக்கானது. கடவுச்சீட்டு எடுப்பதற்கான வேலைகள், விசா, ஏஜென்சி, காணிக்கந்தோர், போட்டோக்கொப்பிக் கடை, மொழிபெயர்ப்பு என்று... நான் அலையத் தொடங்கியிருந்தேன்.

'யோகன் வருவான் வருவான்' என்று எதிர்பார்த்த படியே கௌதமி காத்திருந்தாள். அவனும் 'நான் ஆடியில் வருகிறேன். ஆவணியில் வருகிறேன்' என்று இவளைக் கடிதங்க

ளில் ஏமாற்றிக் கொண்டே இருந்தான். வேலை ஒப்பந்தமும் நாட்டுப் பிரச்சனைகளும் அவன் சாட்டுச் சொல்வதற்கான சாதனங்களாக அமைந்தன.

யோகன் ஊர்ப் பெரியவர் ஒருவரின் மகன். கௌதமி ஒரு சாதாரண குடும்பத்துப் பெண். அதனாலோ என்னவோ யோகனதும் கௌதமியினதும் காதலை யோகனது குடும்பத்தினர் ஏற்றுக் கொள்ளவேயில்லை. அவர்களை மொத்தமுமாக எதிர்த்தே இவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். யோகனின் அப்பா தனது செல்வாக்கைக் காட்டத் தவறவில்லை. சினிமாப் படங்களில் வருவது போல ஏதோ தில்லுமுல்லுச் செய்து, யோகனைச் சவுதிக்கு அனுப்பிவிட்டார். அப்போது கௌதமிக்கு 19 வயதுகள் நிரம்பியிருந்தன. இரண்டு மாதங்கள் மட்டுமே அவள் யோகனுடன் வாழ்ந்தாள். அந்த இரண்டு மாதங்களின் சாட்சியமாக கௌதமியின் மகன் பிரணவன் மெதுமெதுவாக வளர்ந்து கொண்டிருந்தான். அவன் தனது அப்பாவைப் புகைப்படங்களில் மட்டுந்தான் பார்த்திருக்கிறான். குரலை யோகன் அவ்வப்போது கதைத்து அனுப்பும் ஒலிப்பேழைகளில் கேட்டிருக்கிறான். கௌதமிக்கு அது பெருங்கவலை.

கௌதமி இருக்கும் அந்த வீடு ஒரு பெரிய வீடு. 1983 யூலைக் கலவரத்தோடு, அந்த வீட்டில் வாழ்ந்தவர்கள் வெளிநாடு, வேற்றூர் என்று சென்று விட்டார்கள். ஒரு வருடத்துக்கும் மேலாகப் பூட்டியிருந்தது. இப்போது கௌதமி வாடகைக்கு வந்திருக்கிறாள். அந்தப் பெரிய வீடு அவளுக்கும் அவளது ஒற்றை மகனுக்கும் பெரிது.

அவளது படுக்கையறைக்குள் ஒரு பெரிய அலுமாரி இருக்கிறது. அதற்குள் ஊருப்பட்ட சேலைகள், அதற்கேற்ப பாவாடைகள், சேலைக்கான மேற்சட்டைகள், ரிபன்கள், புதிதுபுதிதான குடைகள். மறுபக்கத்தில் பத்துக்கும் மேற்பட்ட சூட்கேசுகள். அதற்குள்ளும் சேலைகள், புதுப்புதுத் துணிகள், சட்டைகள், தலைக்கிளிப்புகள்... ஒரு நாளுமே அவள் பாவிக்காத இன்னும் பல. எல்லாமே சவுதியிலிருந்து யோகன் அனுப்பியவைதான். அதே அறைக்குள் ஒரு பெரிய கட்டில்.

இத்தனை சேலைகளும் சட்டைகளும் பணமும் இந்தப் பெரிய வீடும்... ஒரு கணவனுக்கு ஈடாகி விடுமா? யோகன் சவுதிக்குப் போய் ஐந்து வருடங்களாகின்றன. கௌதமி மனசுக்குள் வெந்து கொண்டிருந்தாள். அந்தக் கட்டிலில் படுப்பதையே வெறுத்தாள். 'ஷெல்' வீச்சின் போது சனங்கள் வீட்டை விட்டு ஓடும் போது கௌதமி எங்கும் ஓட மாட்டாள். பிரணவனையும் அணைத்துக் கொண்டு அப்படியே இருப்பாள். ஓடிக்கொண்டிருக்கும் சனங்களில் யாராவது கணவன், தனது மனைவியை சைக்கிள் பாரில் இருத்தி, பிள்ளையையும் ஒரு கையில் தூக்கிக் கொண்டு சைக்கிள் பெடலை முக்கி முக்கி உழக்கிக் கொண்டு போவதைக் கண்டால் போதும். அது பற்றி மீண்டும் மீண்டுமாய் சிலாகித்துச் சொல்லுவாள். அந்தப் பாதுகாப்பு தனக்கு இல்லையே! என அங்கலாய்ப்பாள். ஏங்குவாள். கண்கலங்குவாள்.

அப்போதெல்லாம் இப்போது போல வட்ஸ்அப், வைபர், மெசெஞ்சர், பேஸ்ரைம்... என்று எதுவுமே இருக்கவில்லை. அலைபேசி என்றாலே என்னவென்று தெரியாது. சாதாரணத் தொலைபேசி கூட வீடுகளில் இருக்கவில்லை. கடிதம் ஒன்றே தொலைத் தொடர்புக்கான சாதனமாக இருந்தது. யோகனை ஊருக்கு வந்து விடும்படி கேட்டு அவள் கடிதங்களாக எழுதுவாள். பதில் கடிதங்களுக்காக, தபாற்காரனுக்காய் காத்திருப்பது போலவே காகங்களையும் பார்த்திருப்பாள்.

காகங்களை அவள் நேசித்தாள். வீட்டுத் தாழ்வாரத்திலிருந்து கரையும் காகங்கள் எல்லாம் தனக்கு யோகனின் கடிதங்கள் பற்றிய செய்திகளைச் சொல்கின்றன என்றே அவள் நம்பினாள். சனிக்கிழமைகள் தோறும் சிவன் கோவிலுக்குப் போய், 'தனக்கிருக்கும் சனிதோஷம் நீங்கி, யோகன் விரைவில் வந்து விடவேண்டும்' என்று மன்றாடி, சனிபகவானுக்கு எள்ளுச்சட்டி எரிப்பாள். கௌதமியின் மன்றாட்டங்களுக்கு, சனிபகவான் உட்பட எந்தக் கடவுள்களுமே செவிசாய்க்கவில்லை. அவளது எந்தப் பிரார்த்தனைகளும் பலிக்கவில்லை. யோகனின் பெற்றோர், யோகனை ஊருக்கு வரவிடாது சவுதியிலேயே மறித்து வைத்திருந்தார்கள்.

ஆரம்பத்தில் 'நன்றி', 'போட்டு வாறன்' என்றிருந்த கௌதமி இளங்கோவினது உறவும், தொடர்ந்த காலங்களில் அந்தக் கேற்வாசலில் அவன் துவிச்சக்கர வண்டியில் இருந்த படியே ஒருகாலை நிலத்தில் ஊன்றியபடி நின்று கதைப்பதுவும், இவள் வாய்விட்டுச் சிரிப்பதுவுமாக வளர்ந்து கொண்டிருந்தது. கதைக்கும் நேரமும் ஐந்து நிமிடங்கள், பத்து நிமிடங்களாகி... அரைமணித்தியாலத்துக்கும் மேலாய் நீண்டு கொண்டு போனது. இளங்கோ ஓரிரு தடவைகள் 'தான் தேத்தண்ணி குடிக்க உள்ள வரப்போறன்' என்று அவளைக் கேட்டிருக்கிறான். அதற்கு மட்டும் அவள் ஒரு போதும் சம்மதித்ததில்லை. கேற் வாசலுடன் அவனை அனுப்பி விடுவாள்.

போரும் இன்னுமின்னுமாய் வளர்ந்து கொண்டேயிருந்தது. பெடியள் இயக்கங்களில் இணைந்து கொண்டேயிருந்தார்கள். கிரனைட் பைகளுடன் திரிந்தார்கள். சென்றிக்கு நின்றார்கள். நியாயவிலைக்கடை நடத்தினார்கள். இராணுவம் அடிக்கடி வீடுகளுக்குள் நுழைந்தது. ஆண்களைச் சுட்டு வீழ்த்தியது. அல்லது பெடியளைப் பிடிப்பதாகச் சொல்லி அப்பாவிகளைப் பிடித்துக் கொண்டு சென்றது. பெண்களை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியது. பாடசாலைப் பிள்ளைகள் இடைநடுவில் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். வாழைப்பொத்தி போன்ற 'ஷெல்'கள் வீடுகளை நோக்கி வரத் தொடங்கும் போதெல்லாம் சனங்கள் வீட்டைவிட்டு எங்கோ ஓடிக்கொண்டிருந்தார்கள். அப்படி ஓடிக்கொண்டிருந்தவர்கள் மீது கூட 'ஷெல்'கள் வீழ்ந்தன. உயிர்கள் போயின. அடிக்கடி பெடியளுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல்கள் நடந்தன. தினமும் யாராவது கொல்லப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அன்றும் அப்படித்தான். திடீரென்று தொடங்கியது 'படபட' வென்று வேட்டுச் சத்தம். குண்டுகள் வெடித்தன. ரவுணுக்குள் பெடியளுக்கும் ஆமிக்கும் சண்டை. சனங்கள் கிலி கொண்டு, ரவுணை விட்டு ஓடி வந்து கொண்டிருந்தார்கள். கடைக்காரர்கள் கடைகளைப் பூட்டிக்கொண்டு தத்தம் வீடுகளுக்கு ஓடிக்கொண்டிருந்தார்கள். வெளியில் போன பிள்ளைகளுக்காக, கணவனுக்காக, சகோதரர்களுக்காக... ஒவ்வொரு வீட்டு வாசல்களிலும் சனங்கள் மிகுந்த பதட்டத்துடன் கூடிக் கூடிக் காத்து நின்றார்கள். நாங்களும் காத்திருந்தோம். ஓடி வருபவர்கள் ஆங்காங்கு நின்று ரவுணுக்குள் நடக்கும் சண்டையைப் பற்றி தாம் கண்டவைகளுடன் சேர்த்து கை, கால், மூக்கு, வாய்... எல்லாம் வைத்து காணாதவைகளையும்

சொல்லிக் கொண்டிருந்தார்கள். கடையைப் பூட்டிக்கொண்டு துவிச்சக்கரவண்டியில் ஓடி வந்த இளங்கோவும் தன் வீட்டுக்குப் போகாமல் கௌதமியின் வீட்டு வாசலில் நின்று விட்டான்.

சில மணி நேரச் சண்டையின் பின் 'எல்லாம் ஓய்ந்து விட்டது' என நாம் எண்ணுகையில் இராணுவம், முகாமை விட்டு வெளிக்கிட்டு ஹாட்லிக் கல்லூரி வீதிக்கு வந்து விட்டது. சண்டையின் போது இராணுவத்தரப்பிலும் இருவர் மரணித்து விட்டனர். அந்தக் கோபத்தில், இராணுவக் கவசவாகனத்துள் இருந்த படியே காண்பவரையெல்லாம் தாறுமாறாகச் சுட்டது. சூட்டுச்சத்தங்கள் பீதியைக் கிளப்பின. எல்லோரும் திக்குத் திசை தெரியாமல் சிதறி ஓடினார்கள். மரங்களுக்குப் பின்னால் ஒளித்தார்கள். காணிகளுக்குள் பாய்ந்தார்கள். வெள்ள வாய்க்காலுக்குள் வீழ்ந்து படுத்தார்கள். வீட்டுவாசல்களில் நின்றவர்கள் வீடுகளுக்குள் நுழைந்தார்கள். கௌதமியும், பிரணவனை இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினாள். அவளுக்குப் பின்னால் இளங்கோவும் துவிச்சக்கரவண்டியையும் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினான். யாரும் யாரது அனுமதிக்காகவும் காத்திருக்கவில்லை. எங்கெல்லாம் மறைந்து கொள்ள முடியுமோ அங்கெல்லாம் மறைந்து கொண்டார்கள். உயிர் தப்புவது ஒன்றே ஒவ்வொருவர் குறிக்கோளாகவும் இருந்தது. நாங்களும் எங்கள் வீட்டு முன் கதவுகளைச் சாத்திக் கொண்டு வீட்டுக்குள்ளே ஓடினோம்.

இராணுவம் எந்தக் கணத்திலும் வீட்டுக்குள் நுழையலாம். எல்லோரையும் சுட்டு வீழ்த்தலாம். மனசு நடுங்கியது. பாடசாலைக்குப் போன பிள்ளைகள், வேலைக்குப் போன தங்கைமார், சென்றிக்கு நிற்கும் தம்பி... எல்லோரும் பத்திரமாக வந்து சேர்வார்களா? நெஞ்சு பதறியது. அம்மா செய்வதறியாது திகைத்துப் போய் நின்றா. அப்பாச்சி, லலித் அத்துலத் முதலியை 'அச்சுலக்கை முதலி' என்று சொல்லித் திட்டித் தீர்த்துக்கொண்டிருந்தா.

நான் ஒரு வித உறைநிலையோடு பெரியவிறாந்தை நுனியில் அமர்ந்தேன். கௌதமி அவளது வீட்டு விறாந்தையில் களஞ்சிய அறை வாசலோடு ஒட்டி நின்றாள். அது கொஞ்சம் உட்புறமாக இருந்ததால், கேற் வாசலில் இருந்து பார்த்தால் தெரியாத விதமாக மறைந்து கொள்ள ஏதுவாக இருந்தது. அவளோடு ஒட்டியபடி பிரணவன். அருகில் இளங்கோ.

இராணுவம் எங்கள் வீடுகளைக் கடந்து சென்றது, திகில் நிறைந்த, இறுக்கமான அந்த நிமிடங்கள் தளர்ந்தன. கௌதமி, இளங்கோவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு மெதுவாக நகர்ந்தாள். சட்டென்று இளங்கோ கௌதமியை இழுத்து அணைத்துக் கொண்டான். ஒரு கணம் அவளும் இசைந்தாள் போலிருந்தது. ஒரே ஒரு கணம்தான். தனது இரு கைகளையும் இளங்கோவின் நெஞ்சில் ஊன்றி அவனைப் பலமாகத் தள்ளினாள். அவன் அதை எதிர்பார்க்கவில்லைப் போலும். அணைப்பிலிருந்து விடுபட்டு களஞ்சிய அறைக்கதவோடு பின்பக்கமாய் மோதினான். கௌதமி பிரணவனையும் கூட்டிக் கொண்டு ஓடி, எங்கள் வீட்டுக்கு வந்து விட்டாள்.

அவளது மாம்பழக் கன்னங்கள் சிவந்திருந்தன. கண்கள் கலங்கிக் கசிந்தன. மேனி நடுங்கியது. என் கையை எடுத்துத் தன் நெஞ்சில் வைத்தாள். அது படபடவென அடித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் அவள் எதுவுமே பேசவில்லை. குற்றம் செய்து விட்டவள் போலக் குறுகினாள். திடீரென்று குலுங்கி அழுதாள். சும்மா தொட்டாலே கற்புப்போய் விட்டதாய் கருதும் காலமல்லவா அது? இளங்கோ கட்டியணைத்து விட்டானல்லவா! மாபெரும் தப்பு நடந்து விட்டது போல அவள் தவித்தாள். 'யோகனுக்குத் தெரிந்தால் என்னாகும்' என்று பயந்தாள்.

'உயிருக்கே உத்தரவாதமில்லாத அந்தரமானதொரு வாழ்வைத்தான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது ஒன்றும் உயிர் போகுமளவுக்குப் பெரியவிடயமில்லையே!' என்று சொல்லி அவளை ஆற்றுப்படுத்தக் கூடிய மனப்பக்குவமோ, தேற்றக் கூடிய தைரியமோ அப்போது என்னிடம் இருக்கவில்லை. அந்த நாளுக்குப் பின்னான நாட்கள் மிகவும் பதட்டமான, பயமான நாட்களாகவே இருந்தன. பருத்தித்துறை அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டே இருந்தது. சாவுகளும் வன்புணர்வுகளும் தொடர்ந்து கொண்டேயிருந்தன. மக்களின் இயல்புநிலை வாழ்க்கை முற்றிலுமாக மாறிக் கொண்டிருந்தது. ரவுண் கடைகள் எல்லாம் உள்நோக்கி நகரத் தொடங்கின. சந்தையும் இடம் மாறியது.

கௌதமியும் மாறிப் போனாள். சோகம் அவளைப் பற்றியிருந்தது. குசினிக்கும் களஞ்சிய அறைக்குமான நடமாட்டங்களின் போது ஆடுவது, ஓடுவது, குதிப்பது எல்லாவற்றையும் அவள் மறந்திருந்தாள். ஓடியோக் கடைப்பக்கம் போவதையும் நிறுத்தியிருந்தாள். இளங்கோவும் அதன்பின் அவளிடம் வரவில்லை. அதை அவளால் தாங்க முடியாதிருந்தது. இளங்கோ வரவேண்டும் என்றே அவள் விரும்பினாள். அவன் அப்படி வராதிருப்பது பெரும் இழப்புப் போலவே அவளுக்குத் தோன்றியது. ஒவ்வொரு துவிச்சக்கரவண்டியின் மணிச் சத்தத்துக்கும் நெஞ்சு திக்கிட, இளங்கோவையே அவள் எதிர்பார்த்தாள். இளங்கோவின் அந்த அணைப்புக்காக அவளது மனம் ஏங்கியது. வருவான் என்ற நம்பிக்கையோடு அவள் காத்திருந்தாள்.

நானும் எனது ஜேர்மனியப் பயண அலுவல்கள் சரிவந்து..., ஊரை, உறவுகளை எல்லாம் விட்டு விட்டு எனது பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு கொழும்பு நோக்கிப் பயணமானேன்.

பன்னிரண்டு வருடங்களின் பின் எனது அம்மா யேர்மனிக்கு வந்தா.

"யோகன் ஊருக்கு வந்தானா?" என்று கேட்டேன்.

"வந்தான். ஆனால் கௌதமியிடம் வரவில்லை".

"அப்ப இளங்கோ?"

"அவன் அப்போதே கனடாவுக்குப் போய் விட்டான்" என்றார் அம்மா.



chandravathana@thaiveedu.com

# வேணாம்ப்பா...

**– உஷாதீபன்**

எனக்கு எங்கப்பா மேலே ஒரு சந்தேகம் உண்டு. என்னமோ அவர்ட்ட ஒரு வித்தியாசம் இருக்குன்னு தோணுது. ஆனா அது என்னன்னுதான் என்னால கண்டுபிடிக்க முடில. கண்டுபிடிக்கிறதென்ன... துல்லியமா மனசுக்குத் தெரில. அப்படித் தெரிஞ்சாத்தான, எனக்கு நானே உறுதி செய்துக்கிட்டாத் தானே... நேரடியாக் கேட்க முடியும், அல்லது அம்மாட்டச் சொல்ல முடியும்? யாரையும் அவர் நிமிர்ந்து பார்க்கிறதில்லை. குனிஞ்சமேனிக்கே பேசுறாரு. பதில் சொல்றாரு. அதான் பெரிய சந்தேகம்.

எனக்கே உறுதியில்லாம மொட்டையா அம்மாட்டச் சொன்னா... அப்டியெல்லாம் பேசப்படாது...ன்னு அம்மா நிச்சயமா என்னைக் கண்டிப்பாங்க... ஒருத்தருக்கொருத்தர் வைக்கிற நம்பிக்கைதான் வாழ்க்கை! அதை அநாவசியமா அவங்களுக்கு நடுவுல புகுந்து நான் கெடுத்துடக்கூடாது. அதனாலதான் இவ்வளவு எச்சரிக்கையா இருக்கேன். ஏன்னா என் சந்தேகம் அப்படி... ஒரு வேளை அம்மாவே இதை உணர்ந்து வச்சிருந்தா? நேத்து முளைச்சவன், இவனுக்கென்ன வந்ததுன்னு நினைச்சா? அதான் ஜாக்கிரதையா இருக்கேன். அத்தோட இன்னொண்ணு... நாம்பாட்டுக்கு அநாவசியமா சந்தேகப்பட்டதாகவும் ஆயிடக் கூடாதுதானே... அது அப்பாவுக்குச் செய்ற அவமரியாதை ஆயிடுச்சின்னா? அவசரப்பட வேண்டாம்னு தோணுது.

எங்கம்மா ரொம்ப அழகானவங்க. அஞ்சரை அடி உயரத்துல கச்சிதமா இருப்பாங்க... எந்தப் புடவையைக் கட்டிக்கிட்டாலும் பளிச்சினு இருப்பாங்க... முகத்துல அப்டி ஒரு ஃபேமிலி லுக். நடு வகிடு எடுத்து வாரின தலைல வகிடு ஆரம்பிக்கிற இடத்துல வச்சிருக்கிற குங்குமப் பொட்டு அம்மாவுக்கு அத்தனை எடுப்பா இருக்கும். அங்க அசல் குங்குமத்த வச்சிக்கிடுற அம்மா, நெற்றில ஸ்டிக்கர் பொட்டுதான் அழுத்திப் பாங்க... எப்பயாச்சும் அது கீழ விழுந்திடுச்சின்னு வச்சிக் குங்க... அம்மா முகத்தைப் பார்க்கவே சங்கடமாயிருக்கும். சகிக்காது.

நெத்தில பொட்டு இருக்கா இல்லையான்னு கூடக் கவனிக்க மாட்டியா? நீபாட்டுக்கு இருக்க? சகிக்கல... தாலியறுத்த மாதிரி இருக்கு. முதல்ல பொட்ட வை... என்று ஆக்ரோஷமாக் கத்தியிருக்கேன். அந்த வார்த்த சொல்லக் கூடாதுதான். அப்பா சொன்னாக்கூடப் பொருந்தும். பொறுத்துக்கலாம். ஆனா நா சொல்லக்கூடாது. கோபத்துல வந்திடுதே...! மன்னிச்சிக்கம்மான்னுட்டேன். அழுகை வந்திடுச்சு... சட்டுன்னு மனசு வருந்திடுச்சு. அந்த முறைதான் நான் அப்படிப் பேசினது. அதுக்குப் பிறகு எதையும் கவனிக்க ஆரம்பிச்சேன். வாய் நுனி வரை வந்ததை முழுங்கினேன். எதுவும் பேசறதில்லன்னு முடிவுக்கு வந்தேன். அப்டித்தான் அப்பாவும் என் கவனத்துல வந்தார்.

அம்மாவோட நரைச்ச முடிக்கும் அதுக்கும்... பொட்டு இல்லன்னா... ஏதோ துக்கத்துக்குப் போயிட்டு வந்த மாதிரியிருக்கும். எழவு விழுந்த வீட்ல இருப்பாங்களே அதுபோல... அது என்னவோ... அம்மாவோட அந்தப் பொட்டில்லாத முகத்த என்னால பார்க்கவே முடியறதில்ல... எல்லாப் பொம்பளைகளுக்கும் அப்டியிருக்கிறதில்ல. ஒரு சிலருக்குத்தான் அது சகிக்காது. அதுல அம்மாவும் ஒண்ணு. பொம்பளைங்க பீரியட்ஸ் டயத்துல பொட்டில்லாமப் போறதப் பார்த்திருக்கேன்... அதைப் புரிஞ்சிக்கிறதுக்கு அதுன்னு தெரியும். லைட்டா மஞ்சப் பொட்டு வெளிறி வச்சிருப்பாங்க... அதான் அடையாளம். அன்னைக்குப் பார்த்து நிமிர்ந்து பேசமாட்டாங்க பெரும்பாலும். இதெல்லாம் கூர்ந்து கவனிச்சிருந்தாத்தான் தெரியும். நான் தட்டச்சுப் பள்ளில வேலை பார்க்கைல பொம்பளப் பிள்ளைங்க பயிற்சிக்கு வருவாங்க... டைப் அடிச்சிக்கிட்டு இருக்கைலயே வயித்தப் பிடிச்சிட்டு உட்கார்ந்திடுவாங்க... சில பிள்ளைங்க நான் வர்றேன் சார்னு சொல்லிட்டுக் கிளம்பிடுங்க... எனக்கா புரியாது. எதுக்கு இப்படி தூரம் தூரமா வரணும்... உடனே எந்திரிச்சுப் போகணும்னு கோபம் வரும். பக்கத்துல ரெண்டு மூணு தியேட்டர் உண்டு. டவுனுக்கு வந்து ஸ்கூலுக்கு டிமிக்கி கொடுத்திட்டு படம் பார்க்கப் போகுதுங்களோன்னு நினைப்பேன். கிராமத்துப் பிள்ளைங்களுக்கு எங்க தட்டச்சுப் பள்ளில பாதி ஃபீஸ்தான். கூட்டமான கூட்டம் எகிறிடுச்சு. நாப்பது மிஷின் வச்சிருந்தும் பத்தல. ரெயில் தடதடக்கிறமாதிரி சத்தம் இடைவிடாம வந்திட்டேயிருக்கும். ரோட்டோட போறவங்க... நின்னு ஒரு நிமிஷம் திரும்பிப் பார்த்துட்

டுத்தான் நகருவாங்க. எங்க பிரின்ஸிபால் ரொம்ப இரக்க குணம் படைச்சவரு. கிராமத்துப் பிள்ளைங்கள்லாம் நல்லா படிச்சு வேலைக்குப் போகணும்னு விரும்புறவரு. அதனால தான் அந்தக் கன்செஷன் கொடுத்தாரு... புண்ணியவான்...

லேடீ ஸ்டூடன்ஸ் டயத்துக்குள்ள கிளம்பிட்டாங்கன்னா பேசாம விட்டிடுங்க கோபால்... எதுவும் சொல்லாதீங்க...ன்னு பிரின்ஸிபால் ஜஸ்டின் எங்கிட்ட ஒருநாள் சொன்னாரு... எதுக்கு இப்டி சொல்றாரு? அப்புறம் ஸ்கூல் டிஸிப்ளின் என்னாகுறதுன்னு யோசிச்சிருக்கேன். ரொம்ப நாள் கழிச்சிதான் எனக்குக் காரணம் புரிஞ்சிது. நா ஒரு மரமண்ட... புரிஞ்ச போது அடப் பாவமே..!ன்னு இருந்தது. போயிட்டறேன் சார்...ன்னா... பவ்யமா சரிங்கம்மான்னுடுவேன். அதுகளுக்கு உடம்புல என்ன வாதையோன்னு தோணி மனசு இரக்கப்பட்டடும்.

அந்த டயத்துல அம்மா, என் தங்கச்சிங்கல்லாம் வயித்து வலின்னு துடிச்சதெல்லாம் எனக்கு ஞாபகம் வந்தது. அதென்ன எப்பப் பார்த்தாலும் வயித்து வலி வயித்து வலின்னுட்டு... நான் திங்கிறதத்தான நீயும் திங்கிற... உனக்கு மட்டும் என்ன நோக்காடு...?ன்னு வீட்டுல கத்தியிருக்கேன். அம்மா அப்டி உட்கார்ந்தபோதுதான் பரிதாபம் வந்திச்சு. அந்த டயத்துல அப்பா எது சொன்னாலும் அவரு மேலதான் என் கோபம். இந்த மனுஷன் புரிஞ்சு கத்துறாரா... புரியாம அலர்றாரா ?ன்னு நினைப்பேன்.

அதுக்குள்ளயும் உட்கார்ந்திட்டியா? இப்பத்தான ஆன...! இருபத்தஞ்சு நாள் ஆயிப்போச்சா... இல்ல பத்துப் பதினஞ்சு நாள்லயே வந்திடுதா...? என்ன கண்றாவியோ...? எனக்கு வேல வைக்கணும் உனக்கு... கங்கணம் கட்டிட்டிருக்கே...! நான் கொஞ்சம் சுதந்திரமா இருந்திட்டா உனக்குப் பொறுக்காதே...? போ... போ... போய் கொல்லைல உட்காரு... அது தான் உனக்கு சாஸ்வதமான எடம்... - வாயில் கன்னா பின்னா என்று வரும். எவ்வளவோ புத்தகங்களெல்லாம் படிக்கிறார். அதெல்லாம் இவருக்கு எதுவும் சொல்லித் தருவதில்லையா என்று நினைப்பேன். இல்ல அதெல்லாம் படிச்சிட்டுத்தான் மனசு இப்படி வக்கரிச்சுப் போய்க்கிடக்கா? என்று எண்ணுவேன்.

ஆனால் சமையல் என்று புகுந்துவிட்டால் சின்சியர் ஆகிவிடுவார். ஒரு டைரியில் அம்மா சொல்லியிருப்பவற்றை எழுதி வைத்துக் கொண்டுள்ளார். அதன்படி செய்து செய்து பழகி விட்டார். அப்பா கைபாகம் கச்சிதமாய் இருக்கும். உப்பு, உறைப்பு, புளிப்பு என்று சரிவிகிதம்தான். அதிகபட்சம் ஒரு மணி நேரத்தில் சமையலை முடித்து விடுவார்தான். அதுக்கு முன்தான் தினமும் இந்த ஆர்ப்பாட்டம். கொஞ்சம் திட்டாமத் தான் செய்தா என்ன? தினசரி அம்மாவுக்கான பூஜை அது.

எதுத்த வீட்டு புவனேஸ்வரி அக்கா எப்பயாச்சும் வீட்டுக்கு வரச்சே, ஒரு மாதிரி வாடையடிக்கும். அன்னைக்குன்னு பார்த்து எதையாச்சும் திங்குறதுக்குக் கொண்டு வந்து கொடுப்பாங்க... எனக்கு அத வாங்கவே பிடிக்காது. அம்மா தான் வாங்கி வச்சிக்கிடுவாங்க... அன்பாக் கொண்டு வந்து தர்றத வேண்டாம்னு சொல்லக்கூடாதுப்பா... என்பாள் அம்மா. விசேடங்களுக்கு பண்டம் மாத்திக்கிடுவாங்க... அது அவுங்களுக்குள்ளே... இது யார் வீட்டுது... எதிர் வீடா... எனக்கு வேண்டாம்னுடுவேன் நான்.

பொம்பளைங்களே பாவம்தான். உடல் ரீதியா அவுங்களுக்கு நிறையக் கஷ்டங்கள் இருக்கு. இயற்கையாவே அப்படி அமைஞ்சிருக்கிறதுக்கு நாம என்ன செய்ய முடியும்னு அலட்சியப்படுத்த முடியல. சகிக்க முடியாத விஷயங்கள்ல உள்ளார்ந்து இருக்கிற கஷ்டங்கள உணராத மனுஷன் என்ன ஆளு? அந்தப் பொம்பளைங்க வயித்துலேர்ந்து வந்தவங்க தானே இந்த ஆம்பளைங்க... கொஞ்சமேனும் இரக்கம் வேணாம்? என்னா அதிகாரம்?

எங்கம்மா இப்டியெல்லாம் கிடையாது. படு சுத்தம். ரொம்ப சேஃப்டியா டிரெஸ்ஸிங் பண்ணிக்குவாங்க... அந்த மூணு நாளும் பூஜா ரூம் பக்கம் போகமாட்டாங்க... பால்கனில நின்னமேனிக்கே சூரிய நமஸ்காரம்தான்... வழக்கம்போல அப்பா தான் சமைப்பாரு... ஏதோ அவருக்குத் தெரிஞ்சதை வைப்பாரு... அவர் இஷ்டத்துக்கு வச்சதுதான்... சாப்டதுதான்... ஒரு சாம்பார், ஒரு கறி, மோரு... இதான் அப்பாவோட சமையல். அவரே மாவு கிரைன்டர்ல அரைச்சிடுவாரு... சமயங்கள்ல சப்பாத்தி போடுவாரு, நைட் டிபனா... சப்பாத்தி வட்டமாவே இருக்காது. கோணக் கொக்கர இருக்கும். வயித்துக்குள்ள தான போகுது... பிச்சுப் பிச்சித்தானே திங்கறோம்... போதும் இது... என்பார்.

புவனேஸ்வரி அக்கா அசல் குங்குமத்ததான் நெத்தில பதிச்சிருப்பாங்க... மாரியாத்தா... காளியாத்தா, பகவதி அம்மேங்கிற மாதிரி... நெத்தி பெரிசுன்னா... அதுல பாதி பொட்டுக்கா...? இப்ப பத்து ரூபாக் காசு வருதே... அந்த சைஸ்... இவ்வளவு பெரிய வட்டமா? அதுலென்ன அப்படியொரு பெருமை? இவங்களப் பார்த்தாலே மத்தவங்களுக்கு ஒரு பயம் வரணும்னா? போதாக் குறைக்கு வகிடு நுனில. நெத்திலயும், மூஞ்சிலயும் வழியுற வியர்வை. குங்குமம் மூக்குல கோடா ஒழுகுதே... அதக்கூடத் துடைச்சிக்க மாட்டாங்க? என்ன அழகோ... என்ன ரசனையோ? மூணு பையனப் பெத்தவங்க அவுங்க... ஆனா தளர்ச்சி பார்க்க முடியாது. கிண்ணுன்னு இருப்பாங்க... அம்மாதான் பாவம்... என் ஒருத்தனப் பெத்துட்டு... டொய்ங்ன்னு போயிட்டாங்க... ஆனா லட்சணம் அந்த முகத்துல. லட்சுமி கடாட்சம். அம்மாவத் தவிர வேறே யாருக்கும் வராது.

அம்மாவோட ஸ்டிக்கர் பொட்டு, பழக்கத்துல... அடிக்கடி கீழே விழுந்திடுது. அடுப்படில வியர்க்க வியர்க்க வேலை செஞ்சிட்டு யப்பாடி...ன்னு வந்து உட்கார்றப்போ சேலைத் தலப்பை வச்சு மூஞ்சியையும், கழுத்தையும் அழுந்தத் துடைச்சி விட்டுக்கிறபோது... கவனமில்லாம இது நடந்து போகும். பாத்ரூம்ல குழாய் பூராவும், கண்ணாடிலன்னு பொட்டாப் பதிச்சிருக்கும். அதுல ஒண்ணை எடுத்து நெத்தில வச்சிட்டு வருவாங்க... பழைய பொட்டு அது... நிக்காம உதிர்ந்து போகும். எத்தனவாட்டியானாலும் அம்மாவுக்கு அந்தப்



பிரக்ஞை இருக்கிறதேயில்ல. ஒரு வேளை உடம்ப மீறின அலுப்போ என்னவோ ? நம்ப வீடுதான... நம்ப பையன்தான... நம்ப வீட்டுக்காரர்தான...ங்கிற எண்ணமாக் கூட இருக்கலாம். ஆனா அந்தப் பொட்டில்லாத மொகத்தப் பார்க்கவே முடியற தில்லையே... ?

திடீர்னு நா போயிட்டேன்னு வச்சிக்கோ... அப்புறம் பொட்டு வச்சிக்கிறத மட்டும் விட்டுடாதே...ன்னு அப்பா அடிக்கடி சொல்றதக் கேட்டிருக்கேன்... அப்பாவுக்கே அம்மாவோட பாழ் நெற்றி மேல அப்படியொரு வெறுப்பு... என்னைக்கும் சுமங்கலி மாதிரியே பூவோடும் பொட்டோடும் காட்சியளிக்க ணும்... புரிஞ்சிதா ? நா பித்ருவாயிருந்து கவனிச்சிட்டேயிருப் பேன். தெனமும் பொட்டு பதிச்சிட்டு என் ஃபோட்டோ முன்னாடி வந்து நின்னு எனக்கு முகத்தக் காண்பிக்கணுமாக்கும்...

போதும்... உங்க நாற வாயை வச்சிட்டு கொஞ்சம் சும்மா இருங்க... என்பாள் அம்மா. வாயத் தொறந்தா அபத்தப் பேச் சுதான்... நல்லதாப் பேசுங்களேன்... என்று சொல்வாள். அப்பா பேச்சு மாறவே மாறாது.

அன்னைக்கு என் ஆபீஸ்மேட் வைகுண்டம் வந்தாரே... எங் கிட்ட என்ன சொன்னார் தெரியுமா ? உங்க ஒய்ஃப்கிட்ட ஒரு ஃபேமிலி லுக் இருக்குன்னு பெருமையாச் சொன்னார். அந்த உன்னோட முகம் அவருக்கு ரொம்பப் பிடிச்சிப் போச்சுன்னு

புரிஞ்சிக்கிட்டேன். அவர் கதை தனி. அதச் சொல்ல ஆரம் பிச்சா ஒரு நாளாகும்... ஒரே வீட்டுல மாடில இவரும் கீழ அந் தம்மாவும் இருப்பாங்க... சமையல் முடிச்சு டேபிள்ல எல்லா மும் எடுத்து வச்சிருப்பாங்க... இவரு ரோபோட் மாதிரி வந்து உட்கார்ந்து தின்னுட்டு திரும்ப மாடிக்குப் போயிடுவாரு... ஒருத்தருக்கொருத்தர் அன்றாடம் மூஞ்சியவாவது பார்த்துக் கிறாங்களான்னு கூட எதிராளிக்குத் தெரியாது. விரிவாச் சொல்ல ஆரம்பிச்சா நம்ம வீடு தங்கம்...! அதனாலதான் இத மட்டும் சொன்னேன்... மறந்துடாதே... பொட்டு உனக்கு ரொம்ப ரொம்ப முக்கியமாக்கும்... என்றாவது ஒரு நாள் வெள் ளம் பெருக்கெடுத்ததுபோல் அப்பா நிறையப் பேசி விடுவார். நல்லதும், கெட்டதும் கலந்து கட்டி பிரளயமாய் வெடிக்கும்.

பெரும்பாலும் இதெல்லாம் அலட்டிக்கிட்டதேயில்ல. அவர் பாட்டுக்கு இருக்கிறவர்தான். அம்மாவ அவர் நிமிர்ந்து பார்க் கிறதே அபூர்வம். பிடிக்காத மாதிரியே வளைய வருவாரு... அவுங்க ரெண்டு பேரும் எப்போ சிநேகமா இருப்பாங்கன்னு தேட வேண்டிர்க்கும். தொட்டதுக்கெல்லாம் சண்டதான். அநா வசியமான பேச்சுதான். அன்னைக்கொருநாள் அவர் இப்படி அதிசயமாப் பேசிப்புட்டதுதான் எங்களுக்கெல்லாம் பேரதிச யமாப் போச்சு.

அப்பா தன் மூஞ்சிய ரசிச்சிருக்கார்ங்கிறதும், அவர் ஃப்ரென்ட் வைகுண்டம் ரசிச்சு அப்படிச் சொன்னதும் அம்மாவுக்குப் பெருமை தாங்கலை. அதுக்காக அம்மாவும் அப்பாவும் சமா தானமாயிட்டாங்கன்னு நினைச்சிடாதீங்க...

என்ன சமைச்சிருக்கே... ஒண்ணுத்துலயும் உப்பக் காணோம்... உனக்கு உப்பு வேண்டாம்னா ஊரு உலகத்துல இருக்கிற எவனுக்கும் வேண்டாம்னு அர்த்தமா? ஒரு ரச னையே இல்லாம சமைச்சா இப்டித்தான். எந்நேரமும் ஊர்ல இருக்கிற உங்க அம்மாவையும், அக்காவையும் நினைச்சிட் டேயிருக்கிறது... எப்படா அவுங்ககூடப் பேசுவோம்னு நேரம் பார்த்திட்டே வேல செஞ்சா... எங்கேயிருந்து ருசி வரும்? ருசின்னு ஒரு பேப்பர்ல எழுதிப் பார்த்துக்க வேண்டியதுதான்.

படிய வாரி, கொண்டை முடிஞ்சு, அழகாப் பொட்டு வச்சி தங்க ஃபிரேம் போட்ட கண்ணாடி போட்டு அம்மா செய்தித் தாள் படிக்கிற அழகே தனி. அந்த இங்கிலீஷ் பேப்பர்ல அப் படி என்னதான் இருக்கோ... தலையங்கம், கட்டுரைகள்னு ஒண்ணு விடமாட்டாங்க...! எல்லாம் முடிஞ்சிதுன்னா, சுடுகு போட ஆரம்பிச்சிடுவாங்க. மைன்ட எப்பயும் ஷார்ப்பா வச்சிக் கணுமாம். வேலை செய்ற போது அம்மாட்ட இருக்கிற அலுப் பும் சலிப்பும், நியூஸ் பேப்பர் படிக்கிறபோது இருக்கவே இருக்காது. அது என்ன அதிசயமோ?

ஆனா அப்பாட்ட அந்த வேலயே கெடையாது. அவருக்குத் தமிழ் பேப்பர்தான். அதையும் கூட ஒரு புரட்டு. தலைப்புச் செய்தியாப் பார்த்திட்டு தூக்கிப் போட்டுடுவாரு. எங்க பார்த் தாலும் கொல, கொள்ளை, திருட்டு, கற்பழிப்பு, விபத்து, லஞ் சம் அடிதடின்னு... இதுதான் நாட்டு நடப்பா...? அரசாங்கம் எப்படி இயங்குதுன்னு தெரிஞ்சிக்கத்தான பேப்பரு... முக்கால் வாசிப் பேப்பர இதுவே ஆக்ரமிச்சா...? என்ன எழவோ... நாடு போற போக்கே சரியில்ல... என்று அலுத்துக் கொள்வார். புரட் டின அந்தப் பேப்பரை அவர் தூக்கி எறியும் தன்மையில் அது தெரியும். டி.வி. தலைப்புச் செய்திகள் கேட்டவுடன் அணைத்து விடுவார். விரிவான செய்திகளைக் கேட்க, காட்சிகளைப் பார்க்க அவருக்குப் பொறுமை கிடையாது. இவன் சொன்ன தையே அவன் திருப்பிச் சொல்லுவான்... இதுக்கெதுக்குப் பார்க்கணும்? என்பார்.

அப்பா தனியாத்தான் தன் ரூம்ல உட்கார்ந்திருப்பாரு. எதாச் சும் எப்பயும் படிச்சிட்டிருக்கிறதே அவரோட வேல. கண்ட புஸ்தகமெல்லாம் வாங்கி வச்சிருப்பாரு. அத்தனையும் படிக் கிறாரா தெரியாது. வாங்கிக் குமிச்சு, தூசி தட்டுறதும், இறக்கி ஏத்தி திரும்ப அடுக்கிறதும் அடிக்கடி அவர் செய்ற வேல. எப் படிப்பட்ட எழுத்தாளர்கள் புக்ஸ் எல்லாம் வச்சிருக்கேன் தெரியுமா? என்று பெருமையாகக் கூறுவார்.

ஆத்தர்வைஸ் அடுக்கிறேன்... எப்டியோ மாறி மாறிப் போயி டுது... என்று அவரே சொல்லிக் கொள்வார். மண்ட மண் டையா எத்தனையோ புஸ்தகங்கள். ஆனா அப்பா கைல வச் சிருக்கிறதப் பார்த்தா நூறு இருநூறு பக்க அளவுள்ளதா இருக்கும். அப்பாடா... முடிஞ்சிது... என்று படித்து முடித்து, முடித்த புத்தகங்களுக்கென உள்ள வரிசையில் வச்சிடுவார். மொத்தமே இவ்வளவுதான் படிச்சிருக்கீங்களாப்பா...ன்னா... கோபம் வந்துடும்.

திடீர் திடீர்னு நினைப்பு வர்றப்போ இங்க இருக்கிற எல்லாப் புத்தகங்களையும்தான் அப்பப்போ உருவி எடுத்துப் புரட்டி யிருக்கேன். அதுக்காக தொடவேயில்லைன்னு அர்த்தமா? நினைச்ச நேரம், நினைச்ச புத்தகம் கைக்குக் கிடைக்கணும் னுதானடா வாங்கி வைக்கிறது? அதெல்லாம் தனி ரசனை... உனக்குத் தெரியாது அதோட மகிமை... என்பார். அவங்கல் லாம் என் கூடவே இருக்கிறமாதிரியாக்கும்... என்று பெருமைப் படுவார்.

அப்புறம் செவுத்தப் பார்த்து உட்கார்ந்துக்கிட்டு என்னத் தையோ யோசிச்சிக்கிட்டேயிருப்பாரு. படிச்ச புஸ்தகத்தை அசை போடுறார் போல்ருக்குன்னு நான் நினைச்சுக்குவேன். திடீர்னு கம்ப்யூட்டரத் திறந்து டைப் அடிக்க ஆரம்பிச்சிடு வாரு. பக்கமானா சரசரன்னு ஓடும். அந்த நேரம் அம்மாட்ட ஒரு டீ குடுன்னு கேட்பாரு. கொதிக்கக் கொதிக்கக் குடிக்கி றது அப்பாவோட வழக்கம். எதுக்கு இப்டி தீயை உள்ளே அனுப்புறாருன்னு பார்க்கிறவங்களுக்குத் தோணும். சூடு இம்மி குறையக் கூடாது. குறைஞ்சா காட்டுக் கத்து கத்து வாரு. ஒரே மூச்சுல நினைச்சதை அடிச்சு முடிச்சி சேகரிச் சுட்டு, சட்டுன்னு கம்ப்யூட்டர ஆஃப் பண்ணிடுவாரு. அப்புறம் அடிச்சதையெல்லாம் அசை போடுவாரு. இப்டியே ஒரு நாள் ஓடிடும். வெளில போவாரு, வருவாரு... கம்ப்யூட்டரத் திறந்து, திருத்திக்கிட்டேயிருப்பாரு... சில சமயம் ம்க்கும்... வேண் டாம்னு தனக்குத்தானே சொல்லிக்கிட்டு, எழுதின மொத்தத் தையும் டிலீட் பண்ணிடுவாரு...?

எதுக்கு இப்டி மாங்கு மாங்குனு உட்கார்ந்து கையொடிய டைப் அடிக்கணும், பிறகு அழிக்கணும்? வச்சாக் குடுமி, அடிச்சா மொட்டைன்னு என்னத்துக்கு இப்டிப் பிராணனை விடணும்? அதுக்கு எனக்காச்சும் ஏதாச்சும் உதவி பண்ண லாம்ல...? என்று அம்மா புலம்புவாள்.

கம்பியூட்டர்ல உட்கார்ந்தாச்சா... போச்சு... காய்கறி நறுக்கித் தருவீங்கன்னு பார்த்தேன். இன்னைக்கு அவ்வளவுதானான்னு அம்மா குறை பட்டுக்குவாங்க... அதெல்லாம் அப்பாவ யாரும் எதுவும் சொல்லவும் முடியாது. எதுக்கும் இழுக்கவும் முடியாது. அவருக்கா இஷ்டம் இருந்தாத்தான். அம்மா சொல்லி அவர் சரின்னு செய்திருக்கிறதவிட, முறுக்கிட்டுப் போனதுதான் ஜாஸ்தி. இதால ஒண்ணும் ஆகாதுன்னு அம்மா ஒருமைல அலுத்துகிறது இருக்கே... சிரிப்புத்தான் வரும். அப் பாவும் அப்போ லேசாச் சிரிச்சிக்கத்தான் செய்வாரு. சொன் னாச் சொல்லிட்டுப் போறா... அவளுக்கு அந்தச் சுதந்திரம் கூட இல்லையா என்னன்னு அப்பா இருக்கிறதாத் தோணும். அம்மா கோபப்பட்டு அப்பா ஒதுக்கிட்டுப் போனதுதான் ஜாஸ்தி. ஒரு வேளை அதுவே அவுங்க ரெண்டு பேரையும் நெருக்கமா வச்சிருக்கோ என்னவோ ?

அவர்பாட்டுக்கு தானுண்டு, தன் டைப் வேல உண்டு, தன் புஸ்தகங்கள் உண்டுன்னு இருக்கிற ஆள்தான். ஆனா சமீ பமா அவர்ட்ட என்னவோ ஒரு வித்தியாசம் இருக்கிறதா தோணுதே...? அதை எப்படிக் கண்டு பிடிக்கிறது ?ன்னு என் மனசுல ஓடிக்கிட்டேயிருக்கு. தப்புச் செய்றவன அவன் முகமே காட்டிக் கொடுத்திடும். ஒரு சிறு அசைவு போதும்... கண்ணு காமிச்சிடும் எதையும். அப்பாவோட பளீர் கண்ணு ஏன் இப்போல்லாம் சுருங்கிக் கிடக்குது ? உடல் ரீதியா அவ ருக்கு என்ன பிரச்னை ? என்ன நோவு ? அப்படி எதுவும் இருக் குமோ ? பணம், செலவுன்னு நினைச்சிக்கிட்டு வாதையை அனுபவிச்சிக்கிட்டு, தனக்குத்தானே மனசுக்குள்ள புழுங்கிக் கிட்டுக் கிடக்கிறாரோ ?

தெனமும் எங்க வீட்டு வாசல் வழியா ஒருத்தர் போவாரு. குனிஞ்ச தல நிமிராம... வச்ச அடி தப்பாம... எந்தக் காரியத் துக்குன்னு சென்றாலும் எங்க தெரு வழியாத்தான் போவாரு. தெருக்காரங்களுக்கெல்லாம் அவரத் தெரியும். அப்டியொரு ஒல்லியான, நாலு முழ வேட்டி கட்டின, தலை வழுக்கை ஆசாமி, தினசரி போறார், வர்றார்ங்கிற அளவிலே அதுக்கு மேலே அவரைப்பத்தித் தெரிஞ்சிக்கணும்னு யாரும் அக் கறை காட்டினதில்லை. அந்தத் தெரு வழியே நடந்து நடந்து பாதச் சுவடுகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட நேர் வரிசையில் தடம் பதிச்சுக் கிடந்திச்சு எங்க தெருவுல. அந்தச் சுவடுகள்ல அவரோட மன அழுத்தம் தெரியும். யோசனை விரியும். காலம் இப்டியே போயிடுச்சேங்கிற இயலாமை நிற்கும். அதிசயமா அவர் தலை திரும்புறதும், எங்கப்பாவைப் பார்க்கிறதும், ஒரு சின்னப் புன்னகை உதட்டோரத்துல தெறிக்கிறதும் பேசா நட்பு ரெண்டு பேருக்கும் இடைல மலர்ந்திருக்கோன்னு நினைக்க வைக்கும்.

அப்பாவே அமைதியான ஆள்தானே ? தனிமையை அதிகம் விரும்புறவர்தானே ? தனிமைல தனக்குத்தானே பேசிட்டிருக் கிறவர்தானே ? நாள் முழுக்க ஒரு ரூமுக்குள்ள கதவ அடைச் சிட்டு இருன்னா அப்பாவால சர்வ சாதாரணமா இருந்திட முடி யும்தான். யார்ட்டயும் பேசணும், சிரிக்கணும், விசாரிக்க ணும்னு அப்பாவுக்கு எப்பவும் எந்த விஷயமும் இருந்ததில்ல தான். அபூர்வமா வீட்டுக்கு யாரும் வந்துட்டாலும்... வாங்க... உட்காருங்கன்னு சொல்றதோட அவரோட வரவேற்பு முடிஞ்சு போயிடும். அதுக்கு மேலான உபசரிப்பெல்லாம் அம்மாதான். வந்தவங்களும் அந்தாளு ஒரு அப்புண்டுன்னு கேர் பண்ணா மப் புறப்பட்டுப் போயிடுவாங்க... அதப்பத்தி அப்பாவும் அலட்டிக்க மாட்டாருன்னு வைங்க...

எனக்குத் தெரிய பொதுவா சதா புத்தகம் படிச்சிட்டிருக்கிற வங்களே இப்படித்தான்னு சொல்லுவேன். அவுங்களுக்கு சமத்தா பேச வராது. கச்சிதமா உபசரிக்கத் தெரியாது. யார்ட் டப் பேசினாலும் படிச்ச புத்தகத்தப் பத்திச் சொல்லலா மான்னு யோசிப்பாங்க... அல்லது அவுங்க ஏதேனும் படிச்ச தப் பத்தி சொல்வாங்களான்னு எதிர்பார்ப்பாங்க... ரெண்டும் இல்லன்னா இது வேலைக்காகாதுன்னு ஆளக் கிளப்பிவிடப் பார்ப்பாங்க... பேச்சச் சுருக்கிட்டா ஆள் கிளம்பிடும்ல... அந்த உத்திதான்! அப்பாவ ஒரு முசுடுன்னு கூடச் சொல்ல லாம்தான். பார்த்தீங்களா... தெருவுல போற ஒருத்தரப் பத்திச் சொல்ல ஆரம்பிச்சு எங்கப்பாவுக்குள்ள புகுந்துட்டேன்... இவங்கள மாதிரிச் சில பேர் ஊர் உலகத்துல எப்பவும் இருக் கத்தான செய்றாங்க...

நீண்டு கிடக்குற நேர் தெருவில் நெடுகப் போயி ஒரு காலியிட வளைவிலான பொட்டல் வெளியைக் கடந்து பேருந்து நிலை யத்தை எட்டுவாரு அந்த ஆளு. அந்தப் பொட்டல் வெளியின் தனிமையையும், சூன்யத்தையும், படர்ந்து உள்வாங்கிக் கிட்டே நடப்பார் போல. சிற்சில சமயங்களில் தன்னை யாரோ பின்தொடருவது போல் தனக்குத்தானே உணர்ந்து வேக வேகமாய் நடக்க முனைவாரு. ஒரு பயத்தோடயே கடந்தா லும் வழிய மாத்துனதில்ல. நானே அந்த வழி ஓரொரு சமயம் அவர் பின்னாடி போயிருக்கேன். அவர்தான் எனக்குப் பாது காப்பு மாதிரி. நட்ட நடுப் பொட்டல்ல, எரியிற வெயில்ல ஜடமா நிப்பார். எதுக்கு இங்க நிக்கிறாருன்னா கேட்க முடி யும் ? ஏதேனும் பித்துப் பிடிச்சிடுச்சான்னு பார்க்கிறவங்களுக் குத் தோணும். பிளாட் போட்டிருக்கிற குத்துக் கல்லுல உட் கார்ந்து கெடப்பாரு... வானத்தப் பார்த்தமேனிக்கே வாய் என் னத்தையோ முனகிட்டே கிடக்கும். ஏதேனும் மந்திரம் சொல் வாரோ ? அல்லது பாட்டுப் படிப்பாரோ ? அப்பா ரூம்ல ஏகாங் கியாக் கிடக்கார். இவர் இந்தப் பொட்ட வெளிலன்னு... நினைச்சுக்குவேன் நான்.

அப்பல்லாம் எங்கூர்ல வீட்டுக்கு வீடு பால் ஊத்தும் பெண்டு களுக்கு பிரசவம் பார்க்கும் மருதாயி ஞாபகம் வரும் எனக்கு. வெத்தல, பாக்கு, பழம் ரெண்டு ரூபாக் காசுக்குப் பிரசவம் பார்த்த புண்ணியவதி அவங்க. கடைசி வரை அந்தம்மா வாழ்க்கை ஒத்தையா இருந்தே கழிஞ்சு போச்சு. எங்க ஊர் தெரு மக்களோட மக்களா இருந்தே மறைஞ்சு போனாலும் எவ்வளவு அர்த்தம் பொதிஞ்ச வாழ்க்கைன்னு எனக்குத் தோணிக்கிட்டேயிருக்கும்.

அத மாதிரி எதுவும் அர்த்தம் பொருத்தமேயில்லையேன்னு தோணும். இவரு வாழ்க்கை வீணாத்தான் கழிஞ்சிடுமோன்னு நினைக்கிறேன். எதோ ஒரு துறைல கொஞ்ச காலம் வேல பார்த்திருப்பார் போல... அந்தப் பென்ஷன் காசு வருது அவ ருக்கு. அத அவர் தங்கியிருக்கிற தன்னோட தங்கை வீட்ல கொடுத்திட்டு நாட்கள ஓட்டிக்கிட்டிருக்கார்னு கேள்விப்பட் டேன். நாலு தங்கச்சிக உண்டாம் அவருக்கு. ஒவ்வொருத் தர்ட்டயும் மும்மூணு மாசம் நாலு மாசம்னு இருப்பார் போல... அங்கங்க இருக்கைல அந்தந்த மாசக் காச அவுங்ககிட்டக் கொடுத்திடுவாராம். அவரு தின்னு தீர்க்குறத விட பணம் அதிகமா வர்றதால யாரும் அவர எதுவும் சொல்றதில்ல. இதெல்லாம் கேள்விப்பட்டதுதான். பராபரியாக் காதுக்கு வந் தவை.

சமயங்கள்ல தன்னோட தங்கச்சியைக் கூட்டிட்டு அபூர்வமா அவர் நடந்து போறதப் பார்க்கலாம். அப்பயும், நேரம் காலம் பார்க்காம அந்தப் பொட்டல் வழியாத்தான் போவாரு, வருவாரு... அத ஒரு நா சாயங்காலம் மேல இருட்டுற நேரம் கூட்டிட்டுப் போகைல ஏதோ சலங்கச் சத்தம் கேட்குதுன்னு அது பயந்து போயி... நாலஞ்சு நாள் காய்ச்சல்ல கெடந்து மீண்டுச்சுன்னு ஒரு கத சொன்னாங்க... ஆனாலும் இன்னைவரைக்கும் அந்த ரூட்ட அவர் மாத்துனதில்ல. எந்தப் பிசாசு தன்னப் பிடிக்கப் போவுதுன்னு நினைச்சிட்டார் போல. அது எப்டியிருக்குன்னு பார்ப்போம்னும் கூட நினைச்சிருக்கலாம்.

பேய் இருக்கோ இல்லையோ... பயமிருக்கு நமக்கெல்லாம். அவருக்கு அதுவும் இல்லன்னுதான் சொல்லணும்...

தெரு வழியாவே போங்க... அந்தப் பொட்டல் வெளில ஏன் கடக்குறீங்க? காக்காயும், நாயும், பூனையும் அடிச்சிக்கிட்டு இருக்கிற அந்த வழி சீண்ட்ரம் பிடிச்ச எடமாச்சே... பாம்பு பல்லி ஓடுமேங்க... ஏன் அப்டிப் போறீங்க...?ன்னு யார் யாரோ எத்தனையோ தடவை சொல்லுறத நானே கேட்டிருக்கேன். கொக்குக்கு ஒண்ணே மதின்னு அவரு அப்டித்தான் இன்னைவரைக்கும் போயிட்டிருக்காரு... தானே ஒரு பேய்தானேன்னு நினைச்சுக்குவாரோ என்னவோ?

அப்பா எப்படி அவர ஃப்ரெண்ட் பிடிச்சாரு? அதான் என் கேள்வி?

என்னவோ கொஞ்சம் அப்பாட்ட வித்தியாசமாத் தோணுதேன்னு சொன்னனே... அது இதுதானா? அவருக்காக அப்பா துணை போறாரா அல்லது இவருக்குமே நோங்கிருச்சா? இந்த வயசுல எதுக்கு இப்படி? அந்தத் தனியா அலைஞ்சிக்கிட்டிருந்த மனுஷனுக்கு... ஆங்... இப்பத்தான் ஞாபகம் வருது. அந்தாள் பேரு சிகாமணி... சிகாமணி.., ஞானசிகாமணி. அம்மாட்டக் கூட அப்பா என்னவோ சொல்லிட்டிருந்த போது இந்தப் பேரு அடிபட்டுச்சே... அவுரு பேருக்கேத்தமாதிரி அந்தாளுக்கு இப்பத்தான் ஞானம் வந்திருக்கு போல் ருக்கு! இனி திரிகால ஞானியாயிடுவாரோ? சிரிப்புத்தான் வருது... காலம்போன கடைசில... இதென்ன கண்றாவி? புத்தி இப்டியா கெட்டுப் போகணும்? இந்தச் சந்தேகத்த உறுதி செய்தாகணுமே! அப்பாவையும் சேர்த்து பலிகடா ஆக்குறானோ இந்த ஆளு? சரியான அமுக்குளிப் பய... எவன் அமைதியா... அப்பாவி மாதிரி இருக்கானோ அவனெல்லாம் நம்பக் கூடாது போலிருக்கே? அவன் மனசுலதான் எல்லாத் தப்பும் ஓடும் போலிருக்கே?

அமைதியாகித் திகைத்தேன் நான். கூர்ந்து அந்த இடத்தைக் கவனிக்க ஆரம்பித்தேன். நான் நின்ற இடம் இருளில் மூழ்கிக் கிடக்க, எவரும் அறிவதற்கில்லை. அந்த நாள் இரவும் அந்த இடமும் எனக்குப் புதிசு. அது அந்தப் பொட்டல் முடிந்து ஒரு மேடு தாண்டி சந்திற்குள் நுழையும் குறுகிய வீதி. வீதி கூட இல்லை... முடுக்கு. இரு பக்கங்களும் தள்ளித் தள்ளி மினுக்கென்று மங்கலாக அழுது வழிந்து கொண்டிருந்த வீதிக் கம்பங்கள். வெளிச்சம் என்று ஒன்று வருகிறதா என்ன? பல்பைச் சுற்றி கொசுக்களின் பெருங் கூட்டம் மொய்த்தது. வண்டுகளின் ரீங்காரம். குப்பை மேடு எதுவும் உள்ளதோ? இந்தப் பாழ்வெளியில் எதற்கு இந்தக் கட்டடம்? பூட் பங்களா போல்?.

அந்த வாசலில் ஆட்டோக்கள் சர்ரு... சர்ரு... என்று வந்து நிற்பதும், பெண்கள் இறங்கி உள்ளே கணத்தில் ஓடி மறைந்து இருளோடு இருளாக ஒன்றுவதும் உடனே எதிர்த் திசையில் வண்டிகள் சட்டென மறைவதும்... அந்தப் பகுதி எதையோ உணர்த்திக் கொண்டேயிருக்கிறதே! அது சரி, ஏன் முன் விளக்குப் போடாமல் வருகிறார்கள்? எரியலையா அல்லது எரியவிடலையா? எங்க சவாரியே இத வச்சித்தான் என்பது போல் வருவதும் போவதுமாய்... மின்னல் தோன்றி மறையும் லாவகம்...! யாரும் எதையும் சுற்றி முற்றி நோக்குவதேயில்லை. எல்லாமும் நிழலுருவ அசைவுகள்.

இத்தனை நாள் என் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத இந்த ஈசான மூலை இப்போது மட்டும் ஏன் ஈர்க்கிறது? இருளில் நன்றாய் என்னை மறைத்துக் கொள்கிறேன். போக்குவரத்து அதிகமில்லாத அப்பகுதியில் அந்தக் கணம் மயான அமைதி. திடீரென்று ஒரு ஐந்து நிமிஷத்திற்கு கொஞ்சம் சத்தம்... பரபரப்பு. பிறகு வழக்கமான அமைதி. இப்படியே மாறி மாறி ஏதோ மர்மப் பிரதேசம் போல. அங்கேதான் நிற்கின்றன அந்த இரண்டு உருவங்கள். எதற்காக? எதோ பேச்சுச் சத்தம் கேட்கிறதே... அந்தாள் அவர்களிடம் என்னவோ கேட்கிறான்?

என்னா சாரே... ஆள் வேணுமா? சைலன்டா நின்னா எப்டி? தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா...

உள்ளே போறீங்களா? அவன் கேட்டு முடிக்கவில்லை. சுற்று முற்றும் பார்த்துவிட்டு சட்டென்று நுழைந்து விடுகிறார்அவர். அட... அப்பாவும் கூடவே போகிறாரே?

அங்க என்ன அப்படி அதிசயம்? யாராச்சும் தெரிஞ்சவங்க வீடோ? அந்த ஆள் என்னமோ கேட்டானே? அதுக்கு என்ன அர்த்தம்?

பைசா... இருக்கா... சாரே...? பணம்... பணம்... துட்டு... விரலைச் சுண்டி ராகமாய்க் கேட்கிறான் வாயில்காரன். அவர் கோலம் அவனை அப்படிக் கேட்க வைத்ததோ?

யாரப் பார்த்து என்ன கேட்கிற? திமிரா? இந்தா பிடி... பாக்கெட்டுக்குள்ளிருந்து எடுத்து அவன் கையில் திணிக்கிறார். வாங்க போவோம்... அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே பாய்கிறார்.

உடம்பு நடுங்க அந்தக் காட்சியைப் பார்க்கிறேன். அசைவில்லை என்னிடம். மீண்டும் அந்த வாசலில் இருள். வராண்டா லைட் அணைகிறது. மீண்டும் இருள். என்னவோ புரிந்த மாதிரி...?!

அப்பா...! வேணாம்ப்பா...! என் வாய் என்னையறியாமல் பதற்றத்தோடு முணுமுணுக்கிறது.



ushadeepan@thaiveedu.com

# வாழ்வுரிமை !

– மா. சித்திவினாயகம்

கிளிநொச்சியில் சுட்டெரிக்கும் வெய்யில். விலங்குப் பண்ணையின் விலங்குகள் கொடூரப் புழுக்கத்தில் தவித்தன... பண்ணையாட்கள் பண்ணை விலங்குகளை, வெட்டிக்கிடந்த பக்கத்து வயல் காணிகளுக்குள் மேய விட்டிருந்தார்கள். விலங்குகளற்ற பண்ணை நிசப்தமாயிருந்தது.

பண்ணை முதலாளி ஸ்ரெவ்வனி கொழும்பு சென்றிருந்தாள். புதிய மரபணு மாற்றிய பசுக்களை, விலங்குகளை, பண்ணைகளில் வேலைசெய்கின்ற ரோபோக்களைக் காட்சிப்படுத்தும் சீனாவின் மாபெரும் கண்காட்சி கொழும்பில் கடந்த சிலவாரங்களாக நடந்து கொண்டிருக்கின்றது. குறைந்த செலவில் மிருகநலன்களைப் பேணும் வசதிகளைப் பெற, இனி வேலையாட்களைவிட ரோபோக்கள்தான் சிறப்பு என்று மனதிற்குள் முணுமுணுத்தபடி கண்காட்சிக்குள் உற்சாகமாக நடந்து கொண்டிருந்தாள் முதலாளி ஸ்ரெவ்வனி. இந்த உலகம் இனித் தொழில்நுட்பங்களுக்கானதுதான்.

மேய்ச்சலுக்காகப் பக்கத்து வயலில் இறங்கிய பண்ணை விலங்குகளுக்கு நன்றாகவே தெரியும் தங்களை அடக்க இந்த மனிதர்கள் எந்த எல்லைக்கும் போவார்களென... அதைத் தான் காலமாகிய பன்றித் தலைவர் காலங்காலமாகப் பண்ணை அடிமை விலங்குகளுக்குப் போதித்தும் வந்தார். சாகும் போது கடவுள் தான் இந்தப் பாழ்பட்ட பூமியையும், எம் விலங்குகளையும் இனிக் காப்பாற்ற வேண்டுமெனக் கூறியபடியே செத்தவர் அவர். இந்த மனிதர்களைப் போலவே நீங்களும் அறிவை வளர்த்துக் கொள்ளாவிட்டால் உங்கள் பேரழிவை யாராலும் தடுக்கமுடியாதென்கிற பன்றித் தலைவரின் வாசகத்தைப் பல விலங்குகளும் இன்றைக்கு மறந்துபோகும் நிலையிலிருந்தன. வயிற்றிற்கு உணவும், தாகத்திற்கு தண்ணீரும் இருக்குமிடமே சொர்க்கம். இதைவிட எமக்கேன் உரிமையெனக் கேட்பனவாக பல அடிமை விலங்குகள் பேசத் தலைப்பட்டன. புதிதாகப் பிறந்த விலங்குகள் எதையும் அறியாதன போலப் பாசாங்கு காட்டின.

ஆனால் புரட்சிகரப் பன்றித் தலைவனோடு வளர்ந்த அமாயாவெனும் நாயோ மனிதர்களைப் போலத் தம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று தீவிரமாக வாசிப்பை மேற்கொண்டிருந்தது. அதற்காக அமாயா நாய் எப்போதும் புத்தகமும், வாயுமாக அலைந்து கொண்டிருந்தது. இப்போது அது தன் வாயில் யாரோ எறிந்த குமுதத்தைக் கவ்வி வைத்திருந்தது.

'கற்க கற்கண்டு, குமுதம், விகடன், கற்றபின் விற்க அரை விலைக்கு' என்றபடி புத்தகங்களை விற்றோ அல்லது அவைகளைக் குப்பையிலோ எறிகிறவர்கள் இந்த மனிதர்கள். அவர்கள் எதையும் உபயோகித்துவிட்டு தமக்கு அவை உபயோகமற்றவை என்று உணர்கிற பொழுதில் எறிந்து விடுகிற கொடூர குணம் கொண்டவர்கள். இவர்கள் ஆயிரம் தான் இனம், சாதி, மதம், மொழி, உறவென்று பெரிதாகப் பேசிப் பிதற்றி நாளும் நல்லவர்கள் போல நடித்தாலும் அவர்களுக்குள் எவர் பணம் உள்ளவரோ அவரே கனவான். அவர் காலடியையே அனைவரும் நக்குவார்கள். பணமற்றவர் அங்கு கண்ணிருந்தும் கபோதி. அதுதான் அவர்களது மகா ஞானமும், மகா தர்மமும்.

இந்த மனிதரை எண்ணினால்... அமாயா நாயின் மூக்கில் சினம் கொப்பளித்தது.

இன்றைக்கு இந்த மனிதர்கள் மிருகங்களை குளோனிங் முறையில் உண்டாக்கிப் பரீட்சித்தலை, AI விபச்சாரத்தை, ரோபோக்களின் வியாபாரத்தைத் தொழில்நுட்ப மேம்பாடு என்று எழுதித் தள்ளுகின்றார்கள். என்ன மனிதர்கள் இவர்கள். அறம், நேர்மை, நீதி என்றெல்லாம் பேசியபடியே அனைத்து அநீதிகளுக்கும் பிதாமகர்களாக இருப்பவர்கள் இந்த மனிதர்கள் தான்... நாய் குமுறியது.

நாயின் கோபத்தைப் பார்த்து... 'அத்துணை கோபப்பட அதில் என்ன உண்டு? உனக்கென்ன அதில் பிரச்சினை' யென்றது மணி கட்டிய வெள்ளாடு.

அமாயா அழுதது... நானும் அவ்வாறு தான் உருவாக்கப்பட்ட நாய்... லாப்ரடர் இனமென்று பெயர்கொண்ட என் இனம் ஆதியில் இங்கில்லை. மனிதர்கள் தான் வெவ்வேறு நாய் மரப



ணுக் கலந்து எம்மினத்தை உருவாக்கினார்கள்.

இப்போ சீனாவில் குளோனிங் முறையில் வலிமையான நாய் களை உருவாக்குகின்றார்கள். இதே தொழில்நுட்பத்தால் பலமான படை வீரர்களை உருவாக்குவோம் என்று மார்தட்டு கின்றார்கள் அவர்கள். பூமியின் இயல்பான இயற்கையைத் தின்று மென்று கொல்கின்ற அவர்களின் இன்றைய அபத்த அறிவு, ஏழாம் அறிவாம். எமக்கு ஐந்தறிவாம். அவர்கள் பெரு மிதப்படுகின்றார்கள். நாய் கண்ணீர் விட்டது.

குளோனிங் தொழில்நுட்ப மரபணு மாற்றத்தின் மூலம் அதிக பலம் வாய்ந்த சூப்பர் மேன்களை உலகில் உருவாக்க ஆதிக்க அரசுகள் போட்டி போட்ட வண்ணமுள்ளன. செயற்கை அறிதிறன் (Artificial intelligence) சாட் ஜிபிரி (Chat GPT), மற்றும் ரெப்ளிகா போன்ற தொழில்நுட்பங்கள் வாழும் குருத் துகளை முளையிலேயே சிந்திக்க விடாது அழித்தொழிக்கிற

அபாயங்களென்றது அமாயா.

வெளியே வயலில் பெரு ஆரவாரமாய் இருந்தது. நெல் வெட்டி முடிந்த பின் அந்த வயலின் ஈழப்பனை அம்மனுக்குப் பொங்கல். மனிதர்கள் ஓட்டமும் நடையுமாகப் பொங்கலுக்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்தார்கள். பலன் தரும் பனைக்குப் பல பெயருண்டு. ஆண் பனை, பெண் பனை, கூந் தப் பனை, தாளிப் பனை, குமுதிப் பனை, ஈழப் பனை, குடைப் பனை, இளம் பனை, கூறைப் பனை, இடுக்குப் பனை, குண் டுப் பனை, அலாம் பனை, கொண்டைப் பனை, ஏரிலைப் பனை, ஏசறுப் பனை, காட்டுப் பனை என்றெல்லாம் அழைக் கப்படுகிற, அதில் ஒரு பனைதான் ஈழப் பனை. இந்தப் பனை யின் வட்டுகள் பிரிந்து இரண்டுதலைப் பனையாக அது இருந் தது.

***'தினைத்துணை நன்றி செயினும்***
***பனைத்துணையாக் கொள்வர் பயன்தெரிவார்'***

என்கின்ற வள்ளுவத்திற்கும், இந்தப் பனைக்கும் சேர்த்தே இன்றைய புக்கை என்றான் வயற்காரச் சோமன். அவன் பால பண்டிதன். சங்கப் பாடல் அத்தனையும் அத்துப்படி.

புறநானூற்றில் 'குடுமிக் கோமாற் கண்டு நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே' என்று பாடல் உண்டு அதில் புற்கை எனக் குறிப்பிடுவது எங்களின்ரை பொங்கல் புக்கையைத் தான் என்றான் சோமன். பக்கத்தில் நின்றவர்களுக்குத் தலை சுற்றி யது.

நீங்கள் எடுத்ததெற்கெல்லாம் சங்கத் தமிழை உடனே இழுப் பியள்...

புக்கை என்பது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமேயுள்ள சொல்... எங்களின் முக்கிய உணவு அது. புக்கை புனிதத்திற்குரிய தல்ல... பிரியாணி போல சர்க்கரைப் புக்கை, கோழிப் புக்கை, பாற்புக்கை, சுறாப்புக்கை என்றெல்லாம் பலவகையுண்டல் லவா ? என்றான் முற்போக்குத் தாடிவைத்த இளையவன் ஒரு வன் இடக்குமடக்காக... அதிலும் நீங்கள் சொல்கிற சங்கப் பாடலின் புற்கை என்பது கஞ்சியை அல்லவா குறிக்கும் என் றான் அவன்.

சோமன் அதற்குப் பதில் சொல்வதற்குள் கஞ்சியும், புக்கை யும் ஒன்றென்றான் முத்தன்.

புக்கை என்றால் 'குண்டி' என்றான் அருவி வெட்டுக்கு வந்தி ருந்த சிங்களவன். பக்கத்தே கேட்டுக்கொண்டிருந்த ராமன் சிங்களவனுக்கு அடிக்க ஓடினான்.

எங்கே... இந்தப் பொங்கல் இனக் கலவரத்தில் வந்து முடி யுமோ என்றெண்ணிய சோமன், எல்லோரையும் காலில விழாக்குறையாக விழுந்து, குழைந்து சமாதானமாக்கினான்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த விலங்குப் பண்ணை விலங் குகள் விழுந்து விழுந்து சிரித்தன.

உலகத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் அழிக்க இரசா யனம், தொழில்நுட்பம், அணு, ரோபோக்கள், மரபணு மாற்ற மென்று ஆதிக்கவாதிகள் ஒருபுறமும், அந்தக் கொடூரத்தை எதிர்க்க வக்கற்றுப் புக்கைக்கு அடிபிடியாகிற அலப்பறை கள் ஒருபுறமுமாய், எத்துணை அநீதியால் சூழ்ந்திருக்கிறது இவ்வுலகு!

ஜெராக்ஸ்(Xerox) இயந்திரங்களில் ஆவணங்களை நகலெ டுக்கப் பழகிய இந்த மனிதப் பதர்கள், அந்த உத்தியில் உயி ரினங்களையே நகலெடுக்கும் அபத்தத்தை குளோனிங் என்று பெயரிட்டு மகிழ்கின்றார்கள். இந்தத் தொழில்நுட்பத் தின் மூலம் 1977 பிப்ரவரி 22 அன்று பிறந்த உயிரினம் தான் எம் இனத்துச் செம்மறியாடான டாலி. இந்தக் 'கேட்'டை முதன் முதலில் எம்மைக் கேட்காமலேயே எம்மீது பரீட்சித்தவர்கள் இந்த அயோக்கியர்கள். நாங்கள் மாமிசம் புசியோம், மரக்கறி உண்பவர்கள். இவர்கள் ஆராய்ச்சிக் கூடங்களில் எம்மை அறுத்துத் தொலைப்பது எவ்வகைப் புனித ஆசாரம் என்று கேட்பதற்கு ஆளில்லாப் பூமியிது.

இந்தக் குளோனிங் ஆராய்ச்சி மனிதகுலத்தின் மகத்தான முன்னேற்றமாம்.., உலகில் அழிந்துவரும் இனங்களைக் கூட இனிமேல் இந்தக் குளோனிங் மூலம் காப்பாற்றிவிடலாம்' என் கின்றனர் அவர்களில் சிலர். 'இது இயற்கைக்கு எதிரானது, மனிதரையும் குளோனிங் செய்தால் மனித இனத்திற்கே அது ஆபத்தாக முடியும்' என்று வாதிடுகின்றார்கள் சிலர்.. உலக நாடுகளின் முக்கிய அறிவியல் ஆராய்ச்சி மையங்கள் அனைத்துமே மனிதரில் குளோனிங் செய்வதற்கு இன்றைக் குத் தடைவிதித்துள்ளதாகப் பசாங்கு செய்த போதும், அறிவி யல் ஆராய்ச்சிகளுக்காக விலங்குகளில் குளோனிங் செய் வதை, அது தொடர்பான ஆராய்ச்சிகளைத் தொடர்ச்சியாக அனுமதித்தே வருகின்றன.

ஒருவர் அன்பில் ஒருவர் மகிழ்ந்து, உனக்கு நானிருக்கின் றேன் என்ற வார்த்தைக்காக ஏங்குகின்ற இந்த உலகில், அனைவரும் தனித்த தீவுகளாக உழல்கின்றார்கள். ஒருவரை ஒருவர் ஏமாற்றி விடுவார் என்கின்ற பேரச்சம் மனிதரை மனித ரோடு நெருங்கவிடுவதில்லை. இந்த அச்சம் தருகின்ற சூழ லைத் தமக்காக்கி அன்பும் கனிவும் கொண்டதாக ரோபேட்டு களும், ஏஐ தொழில்நுட்பங்களும் தாமே அன்பு செலுத்தவும், ஆடையவிழ்த்துப் புணரவும், கூடவிருந்து மகிழவும் மனித ரோடு இயந்திரங்கள் கூட்டுறவாகின்றன. அவர்கள் இத்தகு தொழில்நுட்பக் கருவிகளை, கணினிகளை நம்புகிறார்கள்.

இன்றைய சூழலில், அமைதியாகக் காது கொடுத்து அடுத்த வர் பிரச்சினைகளைத் துன்பங்களைக் கேட்கும் இதயங்கள் குறைந்துவிட்டது. அதனால் இயந்திரங்களோடாவது இரண்ட றக் கலப்போம் என்கின்ற எடுப்பார் கைப் பிள்ளையாக மாறி யுள்ளது இன்றைய மனோநலம் குன்றிய மானிடச் சமூகம். முன்பெல்லாம் தலையெழுத்தை நம்பிய மனிதர், இன்று அல் காரிதம் எழுதியுள்ள செயற்கை நுண்ணறிவைத் துணை யாக்கி வேகமாக நகரத் தொடங்கியுள்ளனர். உயிரற்ற அதன் அசைவை இரசிக்கின்றனர். பலான படங்களைப் பார்க்கின்ற னர். பரிதாபத்திற்குரிய அதன் பாலியல் அடிமையாகி மன நோயாளியாக மாறுகின்றார்.

போதாக் குறைக்கு மிருகங்களான எங்களைக் கூட வன்புணர்ந்த கொடூரமானவர்கள் இவர்கள். அவர்களின் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் வன்புணர்வுக் கொடுமைகளைப் பற்றி நாள்தோறும் பேசிப் போர்க்கொடி தூக்குகின்றார்கள். அதே உலகில் தான் மனிதர்களால் எம் விலங்குகளுக்கும் பாலியல் கொடுமைகள் இழைக்கப்படுகிறது என்பதை அவர்கள் பேசுவதில்லை. அதற்காகப் போராடுவதுமில்லை.

இந்தோனேசியா நாட்டில் உராங்குட்டான் குரங்கைப் பாலியல் தொழிலில் அடிமையாக வைத்திருந்த அதிர்ச்சிச் செய்தியைப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தோனேசியாவின் கலிமன்டான் பகுதிக் கிராமமொன்றில் உராங்குட்டான் குரங்கை 6 வருடங்களாகக் கட்டிவைத்துப் பாலியல் தொழிலில் அடிமையாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். அதேபோல ஹரியானா மாநிலம் மேவார் பகுதியில் கருவுற்றிருந்த ஆட்டுடன் கேடுகெட்ட மனிதர்கள் பாலியல் உறவு கொண்டதும், அதையடுத்து அந்த ஆடு இறந்துபோனதும் பெரும் துயரச் செய்தி, மும்பையில் மால்வாணிப் பகுதியில் ஆண் நாய் ஒன்றை நான்கு பேர் சேர்ந்து கொடூரமாகக் கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்துள்ளனர். மூன்று நாட்கள் தொடர் சிகிச்சையில் அதிக வலியுடன் இருந்த அந்த நாய் நவம்பர் 2018-ல் இறந்துபோனது.

விலங்குகளுடன் செக்ஸ் வைத்துக் கொள்வதை ஆங்கிலத்தில் பீஸ்டியாலிடி (Beastiality) என்று கூறுகின்றனர். மிருகத்துடன் புணர்ச்சி என்பது மிகவும் கொடூரமான நடத்தையாகச் சொல்லிக் கொள்கின்றார்கள்.

இந்தியா, இலங்கையில் அதற்கெனத் தண்டனைச் சட்டப் பிரிவுகளும், மிருகவதைச் சட்டமும் இருந்தும் எந்த நீதியும் விலங்குகளுக்கில்லை. மிருகங்களுடன் பாலியல் ரீதியாக உறவு கொள்பவர்கள் 'சாடிஸ்ட்' (கொடூர மனப்போக்குக் கொண்டவர்கள்). இது முற்றிலும் மனம் மற்றும் மூளை சம்பந்தப்பட்ட விஷயம் என்கிற அறிவியலாளர்களும், அரசுகளும் பாலியல் இச்சைப் படங்களால் பல பில்லியன் டாலர்களை வருவாயாகப் பெறுகின்ற சுயநலப் பேய்களாக உள்ளனர். உலகின் பெருநகரத் தெருக்களில் திருவிழாக் கொண்டாட்டங்களைப் போல முறைகேட்டுப் போதையும், பாலியல் கொடூரமும் அரச அங்கீகாரத்துடன் நடந்தவண்ணம்தான் உள்ளது. தர்மம் காக்கும் சந்தர்ப்பவாத நீதவான்கள் அவற்றைக் கண்டு கொள்வதில்லை.

மிருகங்களை மனிதர் புணர்வதற்கான காரணத்தைக் கேட்டால், மனிதர்கள் வாழும் சூழலே பல நேரங்களில் இது போன்ற விஷயங்களுக்கு அடிப்படையாக இருக்கிறதாம். குடும்பங்களில், பாலியல் தொடர்பான விஷயங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதற்குப் பல்வேறு தடைகள் இருக்கின்றனவாம். பாலியல் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான சூழ்நிலைகளும் பெரும்பாலும் அமைவதில்லையாம். இதுபோன்ற நேரங்களில் மனிதர்களின் பாலியல் உணர்வுகளுக்குப் பலியாவது விலங்குகள் தானாம். மனிதர்களை வன்புணராமல் விலங்கோடு போவது பரவாயில்லை தானே என்று சர்வ சாதாரணமாகச் சமாதானம் சொல்லிக் கடந்து விடுகின்றார்கள்.

அவர்களைப் போல நாமும் சிந்தித்தால் ஒருவகையில் மனிதர்கள் இன்று ஏஐ-யுடனும், ரோபோக்களுடனும் உறவாடுவது, விலங்குகளான எங்களை இதிலிருந்து தப்ப வைக்கும் என்று நாம் நிம்மதியாகப் பெருமூச்சு விடலாம் என்றது, கோபத்தோடு அமாயா.

பெரும்பாலானவர்களுக்கு ஏஐ-யுடன் உறவாடுவது, அன்பைப் பரிமாறிக் கொள்வது, தட்டச்சு செய்து செய்திகளைப் பரிமாறிக்கொள்வது ஆறுதலாக இருக்கிறது. மனிதர்களின் அன்புக்கு ஏங்கும் பலவீனத்தை அறிந்து இணையப் பெருவலையில் ஷியோபாஜஸ், ரெப்ளிகா, ஏஐ கனவுக் கன்னிகள் எனப் பலவகைப் பிசாசுகளை உலவ விட்டிருக்கின்றார்கள்.

ரெப்ளிகா என்பது மெய்நிகரில் உலவும் உலகப் பேரழகிகளை, பேரழகன்களைக் காதல் செய்யக் கண் சிமிட்டும் நேரத்திற்குள் உருவாக்கி விடுகிறது. தனிமையில் உள்ளவர்களுக்கான துணைக்காகவே அதனை உருவாக்கினார்கள்.

இனிக் காமுகர்கள் அவற்றைப் புணர்ந்து தலையால் அழியட்டும். அல்காரிதம் மூலம் அன்பாக உரையாடும் இத்தகு ஏஐ சாட்பாட்டை யாருமே வேண்டாம் எனத் தடுக்கவில்லை. அந்த அன்பும், ஆறுதலும் மனிதகுலத்திற்குத் தேவையாம்...

மைக்ரோசாஃப்ட் உருவாக்கிய மற்றுமொரு கனவுக்கன்னி ஷியோபோஜஸ் என்பது பதினெட்டு வயது கொண்ட இளம் பெண் ஏஐ. அது ஏராளமான சீனர்களை இழுத்து வசீகரித்தது. மனிதர்களின் பதற்றம், பிடிஎஸ்டி, மனச்சோர்வு ஆகியவற்றைத் தடுக்கவென நம்பிக்கையான உறவாக இருக்க உருவான இத்தகு ஏஐகள் காலப்போக்கில் மனிதர்களின் தீராத வேட்கையாக எரியும் காமவேட்கையைத் தீர்க்கின்ற கேவலமான நிலைக்கு மனிதரைத் தள்ளிவருகிறது. தான் கண்டு பிடித்த கருவியாலேயே அழிந்து போவார் இந்தக் கேடுகெட்ட மனிதர் என்றது, நாய்.

***பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன்***
***கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்***
***மண் மீதுள்ள மக்கள், பறவைகள்***
***விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்***
***யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே***
***இன்பமுற் றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே***
***செய்தல் வேண்டும், தேவ தேவா!***

என்கின்ற பாரதியின் கனவுலகம் இங்கு வருமா ? எப்போ ?

மிருகங்கள் அங்கலாய்த்தன.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



# அழகியடி நீ எனக்கு

**– அ. கந்தசாமி**

குணரெத்தினத்தினுடைய அன்றாட வாழ்வின் ஒவ்வொரு சுவட்டிற்கும் தனித்தனிக் கால அட்டவணை உண்டு. ஒரு நிகழ்வில் மிஞ்சும் மணித்துளிகளை வேறு சம்பவங்களுக்கு ஒதுக்கலாம் அல்லது போத்தல் 'பியரோடு' பொரித்த 'வயிற் லெகோன்' கால்களை சுவைத்து மல்லாக்காகப்படுத்து, எழுப்பும் குறட்டையொலியில் புதுப்புது ஸ்வரங்களை ஸ்தா பிக்கலாம் என்ற பேராசை எதுவுமே அவருக்கில்லை.

அவரது தலைப்பெயர் குணரெத்தினம். முழுப்பெயரைச் சொல்லி யாரும் அழைப்பதில்லை. பெற்றுப் பெயர் வைத்த தாயாரே ரெத்தினத்தைச் சுன்னத்செய்து குணம் என்றே அழைக்கத் தொடங்கினார். பிறந்த சில மாதங்களில் 'தகப்ப னைத் தின்னி' என்று மகுடம் குணத்துக்குச் சூட்டப்பட்டது.

இந்த இடத்தில் ஒரு பின்னூட்டலைத் தள்ளிப்போட இய லாது.

'தமிழ் ஈழத்தில் தமிழுக்கு ஆபத்து' என்று அரசியல்வாதிகள் மேடைகளிலும் புறம்போக்குத் திண்ணைகளிலும் கூவித்தி ரிந்த காலம் அது.

இரண்டு காதுகளிலும் பஞ்சை வைத்துக்கொண்டு 'எங்க ளுக்கு ஒண்டுமே கேக்கேல்லை, கொஞ்சம் பிலத்துப் பேசுங் கோவன்' எண்டு சிங்களவன் சிரித்தான். 'சரி யாழ்ப்பாணத் திலை இருந்து பேசினானா பண்ணைக் காத்திலை கரைஞ்சு போகுது, சனியன்கள் அவங்களுக்குக் கிட்டவாப்போய் கத்து வம்' எண்டு கோல்பேஸ் கடற்கரை மணலில் கூட்டமாக் குந்தி னார்கள். 'கடலை திண்டதுமாச்சு, கடலைக் கண்டதுமாய்ச்சு, இந்து சமுத்திரக் காற்றை வாங்கியதுமாய்ச்சு, இடைக்கிடை 'தமிழர் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குண முண்டு' என்று அமுதக்குரலைக் கேட்டதுமாச்சு' என இளைப் பாறிய போராட்ட வீரர்களின் நிம்மதியை நிர்மூலமாக்க, இரா ஜரெத்தின என்ற சிங்கபாகு கடற்கரை மணல் துள்ளத் துடிக்க நடந்து வந்தான். அவனைத் தொடர்ந்து சிங்களக் காடையர் கூட்டம் தடி, தண்டுகளோடு 'அப்பே சிங்கள' கோஷத்தோடு ஆக்ரோசமாக வந்தார்கள். பின்னர் நடந்த அனர்த்தங்கள் இலங்கைச் சரித்திரத்தில் பெத்தவர், வளர்த் தவர் பாக்கமுடியாப் பக்கங்கள்.

எங்கள் கதைநாயகனின் தகப்பனார் பெயர் குலரெத்தினம். அந்தப் பெயரை ஒட்டியே ஆசை ஆசையாய் வைத்த பெயர் தான் குணரெத்தினம். முழுப்பெயரைச் சொல்லி இவனைக் கூப்பிடும் போது கணவனின் நினைவு நெஞ்சைத் திருக, ரெத் தினம் இயல்பில் காணாமல் போய் 'குணம்' மட்டுமே நிலைத் தது.

இந்தக் காலகட்டத்தில்த்தான் சிங்களவர்களின் பசுமைப் பகு திகளில் தென்றலாய்த் தவழ்ந்த அரசியல் தமிழர்கள் வாழும் செம்பாட்டு மணலில் சகாராப் புயலாய் சுழன்றடித்தது.

இன்றும் போல் தமிழ்ப் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்குப் படிப்பும் பல்கலைகழகப் பட்டமுமே அன்றும் முன்னிலை வகித்தன. கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் உருப்படியான ஒரு வேலை கிடைப்பது டயனோசர் கொம்பு. கொழும்பிலை போய் குறைந்தபட்சம் கிளார்க் வேலையிலாவது சேரலாம் என்றால் அம்பத்தெட்டுக் கலவரத்தோடு, பல கடைகளைத் திண்டுக்கல் பூட்டுப்போட்டு இழுத்து மூடிவிட்டிருந்தார்கள். தப்பியோட எண்ணும் பாதைகளில் நெருஞ்சியும் காரையும் அடர்ந்து விளைந்து கிடந்தன.

இந்த உத்தரிப்புகள் தாளாமல் யாழ்ப்பாணியள் தாலியை, வாளியை விற்றெண்டாலும் கொழும்பு, பேராதெனியப் பல்க லைக்கழகத்திற்குப் பாதைகள் வெட்டத் தொடங்கினர்.

வீதிக்கு ஒரு 'ரியூட்டரி'-யும் வீட்டுக்கு வீடு 'ரியூசன்' வாத்திக ளுமாகப் படிப்பு, படிப்பு, மேலும் படிப்பு, மேலும் மேலும்....

பல்கலைகழக விரிவுரை மண்டபங்களில் பொலிஸ் குறோப் அடிச்ச எங்கடைய தலையள் தெட்டந்தெட்டமாய்த் தென்பட் டனர்.

பொறுக்குமோ நெஞ்சம் ?

'அப்பே ஆண்டுவ' ரியூட்டரியளா நடத்திறியள் ? வைக்கிறம் சகலத்துக்கும் வெடி.

'தரப்படுத்தல்' அமுலுக்கு வந்தது.

இது தமிழர்களுக்கு ஒன்றும் புதியதல்ல. 'பருவங்கள் மாறுவ துபோல காலத்திற்குக் காலம் தகநாயக்க, பிலிப் குணவர்த்- தன, சிறில்மத்தியூ, பதியூதீன் மொகமத் போன்ற இன்ன பல

இனவெறியர்களும் செய்யாததையா இவங்கள் பூணாரம் பண்ணி கிழிக்கப்போறாங்கள்? நாங்கள் பார்க்காததா? வரட்டும் பார்ப்போம்' என எதிர்கொள்ளக் காத்திருந்தது தமிழ்ச் சமூகம்.

ஐந்து தலையோடு ஆடிப்பார்த்த நாகம் ஆறாவது தலையை ஒட்டிக்கொண்டு உச்சா காட்டத் தொடங்கியது.

இன்று ஒடுக்குமுறைக்கு ஒரு புதிய பெயர்.

அவங்கள், முப்பத்தைந்து நாற்பது புள்ளிகள் எடுத்தால் போதும். பல்கலைக்கழகப் படிக்கட்டுகளுக்குப் பாவாடை போட்டு வரவேற்பு வளையம் வைக்காத குறை. நாங்கள் எண்பதுக்குமேல் எத்தனை புள்ளிகள் எடுத்தாலும், தலைகீழாய் நின்று உப்புத்தண்ணி உறிஞ்சினாலும் '.... தெமிழு' தான்.

யாழ்ப்பாணத்தைக் குறிவைத்துத்துத்தான் இந்தத் தாலியறுத்த தரப்படுத்தல். வசதி குறைந்த வன்னிப் பகுதி, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களில் தரப்படுத்தல் இல்லை. அவை பின்தங்கிய மாவட்டங்களாயின.

தமிழன் வெட்டியோட யோசித்தான்.

பொம்பிளையளுக்குச் சராசரியா நீண்ட ஆயுள். பல வீடுகளிலும் ஒரு அப்பம்மாவோ, அம்மம்மாவோ நிமிர்ந்தோ, கூனியோ, கூப்பிட்டு ஐந்து பத்து நிமிடத்தின்பின், 'கூப்பிட்டனியோ பிள்ளை' என்று வரும்.

எப்பவாவது அதுகள் சமைக்கிற நாளுகளிலை அதிசயமா வீட்டுக்காரர்களுக்கு நேரத்தோடை பசியெடுக்கும். சாப்பிடக் கடைக்கு ஓடுற இளசுகள் கூட ரெண்டு கோப்பை வெள்ளைச் சோறு கேட்டு வாங்கித் தின்னும். இவையளையும் சமைகிற சட்டுமுட்டுச் சாமானுகளோடும் சோதனை எழுதிற பொடி, பெட்டையள் சில மாதங்கள் இடம்பெயர்வர். இலுப்பங்கொட்டையளைச் சேர்த்து உச்சான் விளையாடிப் பின் அதையும் வித்துக் காசு பண்றவன் நம்மாள்.

பேரன் பேத்திகளோடு அப்பம்மாக்கள் 'தரப்படுத்தல்' அறிமுகப்படாத ஊர்களுக்குப் பயணப்பட்டனர்.

எவ்வளவு தரம்தான் கவ்வாத்துப் பண்றது? வேரை எங்கை மறைச்சிருக்கிறானோ வெட்டவெட்ட முழைச்சு வாறான், முன்னையவிட வேகமாய்... என்று, அப்போதைய கல்வி அமைச்சர் பதியூதீன் அமிர்தாஞ்சன் தைலத்தைப் போத்தல் போத்தலா வாங்கி நெற்றி முழுக்கப் பூசியதில் முன்வழுக்கை விழுந்ததுதான் மிச்சம்.

தரப்படுத்தலுக்கு எதிரான பொதுசனங்களின் ஆதரவு அள்ளுகொள் அளவையும் தாண்டியது. அதைப் பாசனத்திற்குப் பயனாக்க வேண்டாமோ. கள்ளப் பிரக்கிராசிமாருக்கு மூக்கெல்லாம் முத்து முத்தாய் வேர்வை.

நாடாளுமன்ற நாற்காலிக் கனவுகளில் கறுப்புக் கோட்டணிந்த எங்கடை அப்புகாத்துகள் முனியப்ப கோயிலை மறைத்து முற்றவெளியை நிறைத்தார்கள். பேச்சாளர்கள் பண்ணைக் கடலோசையை மட்டுப்படுத்தி இரைந்தார்கள். தரப்படுத்தலை மறந்தார்கள் அல்லது மறைத்தார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சர்வரோக நிவாரணியாக எங்கடை கட்சிக்கே உங்கள் பொன்னான வாக்குகள். இரண்டு பக்க ஒலிபெருக்கிகளும் சொற்கள், கமாக்கள், அரைப்புள்ளிகள், இடைவெளிகள், சில திருக்குறள் வரிகள். பாவப்பட்ட மக்களை திரிகையில் சொருகித் திருகி எடுத்தன.

வடிதட்டில் ஆட்டி எடுத்தால் வலையில் தூசு தும்பு கூட மிஞ்சாது. பத்தாம் வகுப்பில் கூடக் காலடி படாத பொடிசுகள் அடுக்குமொழியை மென்று விழுங்குவதைப் பார்த்த யாழ்ப்பாணி, திறந்தவாயை வீடு போய்ச் சேரும்வரை மூடவில்லை. மட்டக்களப்பார் இயல்பிலேயே நல்ல சனங்கள். சோலிசுறட்டுக்குப் போகா இயல்பினர். சுருட்டுக் குடிப்பாரைக் கைவிரல்களில் எண்ணிப் போடலாம்... அவைய நிம்மதியா இருக்க விடலாமோ?

அவர்களையும் இழுத்துப் பறிக்குள் சொருகிக் கொண்டார்கள். பல்வகை அணிகளும் தோன்றின. அவைகளை வழிநடத்த பல்லாயிரம் தத்துவங்கள்.

மாதங்கள் வருடங்களுக்குள் குழுக்களின் எண்ணிக்கையும் கேத்திரகணித வரிசையில் நீண்டன. முதலில் கூட்டங்கள், பிரசாரங்கள், இதற்குள் இடதுசாரிகள் வசமிருந்து இன்று இல்லாமல் போன ஒன்றிரண்டு தொகுதிகளையும் பூதகண்ணாடி பிடிச்சுத் தேடத் தொடங்கினார்கள்.

'இனப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை எல்லாம் சும்மா ஜுஜிப்பி. எங்கடை தாச்சியிலை எப்பன் சிங்களத்தை, எள்ளுப் போலை தமிழை, தூக்கலா ஆங்கிலத்தையும் கைபிடி வர்க்கப் பிரச்சினை கடுகையும் தூவித் துளாவி எடுத்தா தமிழனும், சிங்களவனும் ஒரே போர்வைக்குளைப் பொத்திக் கொண்டு படுத்திருவானுகள்' என்று மார்க்சீயம் பேசினார்கள்.

குழுக்கள் பலவும் தனித்தனியாகக் கூடி யோசித்தார்கள். வழக்கம் போல ஒருவரையொருவர் முறைத்துக் கொண்டு இரண்டு கையளையும் காற்சடைப் பொக்கற்றுகளிலை திணித்துச் சுண்டிய முகங்களோடு வெளிவாசலைத் தாண்டினார்கள்.

மறந்தும் இந்த நாயளோடை கைகுலுக்கப்படாது.

திடீரென என்ன துர்க்கனவு கண்டார்களோ?

பொறுத்தது போதும், பொங்கினதும் காணும். தூக்கடா துவக்குகளை.

குண்டுகள் சரமாரியாய்க் காற்றைக் கிழித்தன.

இவர்கள் நினைத்ததென்னமோ எதிரியைச் சுடுவதாகத்தான். செத்து விழுந்தவர்களுள் இருநூறு விழுக்காடு தமிழரே.

'நல்ல தருணமெடா நழுவ விடுவமோ?' என்று சிங்களவன், பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டுமெனப் பின்னடிக்குத் தேவையான போர் ஆயுதங்களைத் தேடி உலகநாடுகளிடத்தில் மடியை விரித்தான். அமெரிக்க மாமாவை, ஆப்பிளைத் தோல்சீவிச் சிறு துண்டங்களாக்கித் 'துண்ணு நைனா' என்று குசினிவரை கூப்பிட்டாயிற்று.

ஆமையும், அமெரிக்கனும் புகுந்த வீடுவாசல் உருப்பட்டதா



கத் தரவுகள் உண்டா?

சமயங்களும், சன்மார்க்கமும் ஆயிரம் பேசினாலும் உயிர் என்ற வஸ்த்து உடல் நழுவினால் திரும்பி வருமா? போனது போனதுதான்.

புத்தன் துன்பத்தைத் தொலைக்கத் துறவு பூண்டான். இலையான்களென உயிரை மொய்க்கும் ஈயச் சன்னங்களிடமிருந்து தப்ப, உயிரை ஈரக் குலைக்குள் ஒளித்தபடி குணத்தார் கனடாவில் கால்வைத்தார்.

ஒருவேலைதான் என்றில்லை. இரவு, பகலென்றும் இல்லை. கனடாவில் எந்த வேலையும் நிரந்தரமில்லை. ஒருநாளை இருபத்திநான்கு மணிகளாகப் பகுத்தது பச்சை மானிடத் துரோ

கம். ஒரு பத்து மணித்தியாலத்தைக் கூட்டி வைத்தால் உன்ரை பெண்சாதி கொண்டந்த சீதனத்திலையா குறையப் போகுது?

கையிலை சிக்கிய ஒவ்வொரு செக்கன் துளியையும் டொலர்கள் ஆக்கினார்.

எப்போதாவது நடைப்பயிற்சிக்காகக் கொண்டோவிற்கு மிக அருகாக இருக்கும் 'மெல்லிக்கன்' பூங்காவிற்குப் போவதுண்டு. அடர்ந்த மரங்கள். ஆகாயம் அப்பப்போ தெரியும். எத்தனை முறைகள் சுற்றினாலும் வியர்வை தெரியாது. முக்கியமாக றோட்டை ரெண்டு பக்கமும் பார்த்து ஓடித் தாண்டினால் தான் 'கோப்பி ரைம்' கோப்பிக்கடை தெரியும். அந்தக் கோப்பியின் சுகந்தம் குணத்தாரைச் சுண்டியிழுக்கும்.

அண்ணர் அதற்குச் சம்பூரண அடிமை. பின்னாளில் வரப்போகும் மாரடைப்பு, தேடும் பல காரணிகளில் தலையாயது இது. காலம் தாழ்த்திய வைத்தியர்களின் அனுமானம் யாருக்கு வேணும்?

சாவு என்பது எடுத்து வைக்கும் காலடிகளோடு ஒட்டிக் கொண்டே காலைத் தொடர்வதுதான். அதை விடுங்கோ.

பூங்காவில்தான் 'ப்ரியா'-வை முதன்முதலில் சந்தித்தார்.

அவர் போன நேர்கோட்டுப் பயணம் பொல்காவளையில் கோச்சி மாறுவது போல் இங்குதான் கிளை பிரிந்தது.

சனஞ் சந்தடியளை முடிந்தவரை விலத்தி ஒதுங்குவது அல்லது ஒதுக்குவது இவரது 'மானரிஷம்' அதாகப்பட்டது அவரதியல்பு.

கோப்பிக் கடையில் மனிதவாடை குறைந்த ஒரு மூலைக் கதிரையில், ஆவி பறக்கும் கோப்பியை வலக்கையிலும், கைக்கடங்காக் 'குறசோன்' ஒன்றை மறுகையிலுமாக ஏந்தியவாறு மோனநிலையில் குந்தியிருந்த ஒரு பெண்பிறவி மீது அவர் பார்வைபட்டது வெறும் தற்செயல்தான். பூங்காவுக்குள் அடிக்கடி கண்ட முகம்தான். தமிழ்ப் பெண்ணாக இருக்க வாய்ப்புகள் அதிகம்.

விதி தனக்குள் ஒரு குமட்டுச் சிரிப்புச் சிரித்தது.

குணத்தார் தனிமேசை ஒன்றைத் தேடி ஆசறுதியாகக் கதிரையில் சாய்ந்தபோது மீண்டும் அந்தப் பெண் கண்களில் இடறினாள்.

உறைந்துபோன அதே மோனநிலை. ஆவி அடங்கிய கோப்பியும் குறசோனும் அந்தரத்தில் நின்றன. உறைந்த காட்சியில் ஓர் ஆறாம் வித்தியாசம் அகப்பட்டது. அவள் மோன மௌனத்தில் விழிகள் துளிகளை உதிர்த்தன.

பெண் அழுதால் பேயும் இரங்கும். பெண்கள் வாசனையே அறியாத எங்கள் குணத்தாரும் மனிதர்தானே. இரங்கினார். அவள் அருகில் செல்லலாமா? வேண்டாமா? மனம் தடுமாறியது. என்ன வந்துவிடப் போகின்றது? அவள் மேசையில் சென்றமர்ந்தார். அவள் நிமிர்ந்தாள். தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். குணத்தாரின் தன்னிச்சையான இடைபுகலை அவள் நிராகரிக்கவில்லை என்பது தெரிந்தது. பேச்சுக் கொடுத்தார். தன் பெயர் ப்ரியா என்றாள். அவள் பெயரின் தொடக்கம், 'பி...' 'ப்...' என்று தெரியாமல்... குழப்பித் தெளிந்தார். ப்ரியா தான்.

குணத்தாரின் பேச்சிலிருந்த கனிவும் அவள் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்த துயரமும் அவளை அனைத்தையும் கொட்டச் செய்தது. குணத்தாரின் மடியில் அனைத்தையும் கொட்டினாள்.

போரால் துரத்தப்பட்டவர்களுள் அவளும் ஒருத்தி. ஊரிலிருந்த எல்லாச் சொத்துகளையும் அண்டா குண்டா உட்பட வித்துக் காசாக்கி ஏஜென்சிக்கு வாய்க்கரிசி போட்டுத்தான் கனடாவிற்குள் காலடி வைத்திருக்கிறாள்.

யாரோ தூரத்துச் சொந்தக்காரர் வீட்டில் ஒரு குச்சறையில் குடித்தனம். வெளியே விசாரித்திருந்தால் அவர்களுக்குக் கொடுக்கும் வாடகைக்கு அடக்கமாய் ஒரு சின்ன அப்பார்மென்டே எடுத்திருக்கலாம். அவள் அவர்களை நம்பினாள். சொந்தக்காரர் ஏமாற்றமாட்டினம்.

ஆனால் இப்ப வெளியேற வேணும்... இன்னும் ஒரு கிழமை இடைவெளியில் வேறை இடம் தேட வேணும். அவையின்ரை நெருங்கின சொந்தகாரப் பெட்டை ஒருத்திக்கு அவசரமா இடம் தேவையாம். அவளுக்கு அறையக் குடுத்தா ஆறுமாத முற்பணமும் கூடுதல் வாடகையும் கிடைக்கும்.

அவை நல்ல சனம்... பாவங்கள்... என்ன காசுக் கஸ்டமோ?

இப்போதும் அவர்களை நம்பினாள். பாவம் பெட்டை.

'இருக்க இடமொன்று தேட வேணும். இருந்தால் சொல்லுங்கோ' என்றாள்.

குணத்தாரிடம் தன்னைப் பகிர்ந்துகொண்டதில் அவளுக்குப் பாரம் சற்றுக் குறைந்திருக்கலாம்.

அன்றைய சந்திப்பு அத்தோடு நிறைவுக்கு வந்தது. அதன் பின்னால் சில தடவைகள் பூங்காவிலும் கோப்பிக் கடையிலும் சந்தித்துக் கொண்டார்கள். பெரிதும் ஆழமில்லாத சந்திப்புகள்தான்.

குணத்தார் கடும் உழைப்பாளி. அவருடைய வங்கியின் கையிருப்போ வகைதொகையின்றி ஏணியில் தொத்திக் கொண்டு தொங்குமளவுக்குப் பெருக்கம். நல்லநேரம் வருமானவரியினர் கண்களில் இன்னும் படவில்லை. அந்தப்பணத்தில் கொஞ்சத்தை ஒதுக்கி இந்தக் கட்டடத்திலேயே இன்னுமொரு 'கொண்டோ'-வை வாங்கவேண்டும் என்பது அவர் விருப்பம். அதையும் அவர் பெயரில்தானே வாங்கித் துலையவேண்டும். யாரிடமும் அளாவி விழுந்து பழகுபவரும் இல்லை. பினாமிகள் என்று நம்புவதற்கும் யாருமில்லை. ஒருத்தரையும் நம்பேலாது என்பதை நம்புவார். 'எங்கடை ஆக்கள் தோலிருக்கச் சுளை விழுங்கியள்' என்பது குணத்தார் கணிப்பு.

ஒரு நாள் இரவு முழுக்க நித்திரை வராமல் தலைகணியைப் பினைஞ்சு கொண்டிருந்தவர் மறுநாளே அருகிலிருந்த கொண்டோ அப்பார்ட்மென்ட் ஒன்று விலைக்குவர, பெருந்

தொகையை முன்பணமாகக் கட்டி, அதை வாங்கினார். நல்ல மனிசர் யாரும் அகப்பட்டால் வாடகைக்கு விடலாம் என்பது அவர் எண்ணம்.

இப்போதுதான் ஒரு கல்யாணம் செய்திருக்கலாமோ? என்ற நினைவு முருங்கையில் நூலில் தொங்கும் மசுக்குட்டியாய்ச் சுணைத்தது. காலங்கடந்த பின்பனி நிலவு.

அவர் 'கல்யாணமே செய்வதில்லை' எனக் கங்கணங் கட்டி, மலையேறி மாலை போட்டு, கறுப்புத்துணியால் கோவணமும் காட்டியவரல்ல.

ஒரு பெண்ணைக் கண்ணின் கருவிழியாகக் காதலித்தவர் தான். அது இளமை முறுக்கேறியிருந்த காலம். எங்கடை இனஞ்சனம் கூடி நிண்டு கும்மியடிச்ச நல்ல காரியங்கள் எத்தினை விழுக்காடு உருப்பட்டிருக்கு? எங்க கை விரல்களிலை எண்ணிச் சொல்லுங்கோ பாப்பம்?

இவரைக் காதலிச்ச பெண் அம்சமானவள். பெண்களுக்கு இருக்கவேண்டியவை யாவும் அவளுக்கும் இருந்தது. அதுவும் சற்றுத் தூக்கலாகவே.

முதல் வேலையாக ஒரு கிங்சைஸ் டபுள் பெட். சமையலறைக்கு வேண்டிய லொட்டு லோசுக்குகள் எல்லாம் சரியாகவே போய்க்கொண்டிருந்தது.

நீயா நானாவுக்கு அண்ணாவும் ரெடி.

தெரிஞ்ச நாலஞ்சு சொந்தங்களுக்குத் தேவையில்லாமல் சொல்லப்போக... விளைஞ்சது வினை. உறவினர்கள் கிண்டிக்கிளறி உழப்பிப் பெண்ணின் மூலவேரைக் கண்டறிந்தார்கள்.

'தம்பி நீ நல்லா விசாரிச்சனியோ? விசர்பொடியா. அவள் வேறை சாதி எல்லோ'. எங்கடை சாதி சனம் உன்ரை வீட்டிலை கை நனைக்குமோ?

ஊரிலை இந்தமாதிரிக் கதையள் அனுமார்ரை வாலிலை சுத்திய நெய்ப்பந்தம் மாதிரி சுத்திச் சுழன்று எரியும். எரிந்தது.

இதோட, கல்யாணக் கனவும் சுடலைக்குப் போய்விட்டது.

அந்தப் பெட்டையின் உறவுகள், தங்கடை சொந்தத்திலை யாருக்கோ அவளைப் பிடிச்சுக் குடுக்க, அதுவும் மூக்கைச் சிந்திக்கொண்டுபோய் குட்டிகளை ஈனத்தொடங்கியது.

இதிலை மனிதர்களுக்கும் ஆடு, மாடுகளுக்கும் பாரிய வேறுபாடுகள் இல்லை பாருங்கோ.

இவருக்கு முதற் காதல் குலைந்தபின், தாம்பத்திய நினைவே தரைதட்டிப் போயிற்று. அதுவும் பாதாளம் வரையில்லை... அதற்குக் கீழேயும்.

இதன்பின் பெண்களின் நினைவு கொசுவின் கணியத்திலும் வந்ததில்லை. ஓயோடி உழைக்கணும்... எம்.ஜீ.ஆர் நினைவுக்கு வருகிறாரா? வரட்டும் நல்ல மனிசர்.

இடையில் சில வாரங்கள் கடந்தன. அதே கோப்பிக்கடைக்கு முன்னால் பிரியா நின்றிருந்தாள். அவள் காலடியில் ஒரு பெரிய பை. அவள் கறுத்து மெலிந்து ஒல்லியாய்த் தெரிந்தாள். முன்பும் அவள் சிவப்பியல்ல. பொது நிறத்திலும் ரெண்டு விரலிடை குறைய என்றுதான் கூறவேண்டும். முருங்கைக்காய் போல் நெடுத்தவளாய்த் தெரிந்தாள்.

'என்ன பிள்ளை நல்லா வாடிப்போனாய். ஏதும் சுகயீனமோ?'

கட்டிபட்ட கசப்புச் சிரிப்பொன்று பதிலாக உலர்ந்தது... தயங்கினாள். கீழ் உதட்டைக் கடித்தாள். பேசுவதற்குப் பொருத்தமான வார்த்தைகளைத் தேடுவது போல் தெரிந்தது. பெண்கள் பொதுவாவே முன்புத்திக்காரர்கள்.

'முதல்லை உங்களை என்ன முறை சொல்லிக் கூப்பிட? உங்கடை அனுமதியோடை அங்கிள் எண்டு சொல்லவா?'

'பெரிய சொந்தங்களே இல்லாதவனம்மா நான். உனக்குப் பிரியமான எந்த முறையையாவது சொல்லிக் கூப்பிடன்டி'.

'தாங்ஸ் அங்கிள். உடம்பு மெலிஞ்சா சுகயீனமா இருக்க வேணும் எண்டில்லை, மனயீனமாயும் இருக்கலாம்தானே'.

இவருக்குப் புரியவில்லை. இது என்ன புதுச்சொல்லு? 'பேப்பெட்டை மனவருத்தம் எண்டு சொல்லிப்போட்டு போவன்' எதுவுமே பேசாது அவளது காய்ந்துபோன கண்களைப் பார்த்தார்.

'அப்பிடி என்னம்மா உனக்குக் குறை?'

'என்ன அங்கிள்? குறைகளின்ரை மொத்தத் தொகுப்புத் தானே உங்களுக்கு முன்னாலை கைகால் முளைச்சு வந்து நிக்குது.'

அவளைப் பாதாதிகேசமும் பார்த்தார். அவள் வலக்காலடியில் கொழுத்த பன்றிக் குட்டிபோல் கிடந்த பையையும் பார்த்தார்.

பாவப்பட்ட பெட்டை. என்னாலை முடிஞ்சதை உதவவேணும். ஒரு தீர்மானத்தோடு நிமிர்ந்தார்.

'தெரியேல்லையா அங்கிள்? தெருவுக்கு வந்தாச்சு. கைக்கும் வாய்க்குமான வாழ்க்கை. எத்தினை மாசத்துக்குத்தான் வாடகை குடுக்காமல் குடியிருக்க விடுவினம்?'

எதுவுமே நடக்காததுபோல் இவளால் எப்படிக் கலகலவென நகைக்க முடிகிறது. துன்பத்தின் சிரிப்பிலும் ஒரு அழகு இருக்கு.

'இதை ஏன் என்னட்டை முன்னமே சொல்லேல்லை? விசர்ப் பெட்டை...'

'அது ஒண்டுதான் இன்னும் பிடிக்காத குறை. நீங்கள் ஒருத்தர் தான் என்னோடை கொஞ்சம் கரிசனையா இருக்கிறியள். அதையும் பழுதாக்கவா' மார்போடு சேர்த்துக் கட்டிய கைகளுடன் உலர்ந்த புன்னகையைச் சிந்தினாள்.

என்ன பதிலைச் சொல்ல ? மௌன இடைவெளிகளில் அவள் தனக்கான பதிலைக் காணக்கூடும்.

பூட்டிக் கிடக்கும் கொண்டோவில் இவள் வசிப்பதற்கான எல் லாமே, அரிசி முதற்கொண்டு உண்டு. போகேக்கை கொஞ் சக் காய் கறிகளையும், கோழியோ, ஆடோ ஒரு மச்சத்தையும் வாங்கிக்கொண்டு போனா... இப்போதைக்குச் சரி.

குணத்தார் அருகிருந்த வீதியருகே சென்றார். அவ்வழியே வந்த டாக்சி ஒன்றை மறித்தார்.

அவள் காலடியில் சரிந்து கிடந்த 'கிட்பாக்'கைத் தூக்க முயன்றார். அசைக்க முடியவில்லை. செம பாரம். வைத்து விட்டு, 'இதை எப்பிடித் தனியாளாகக் காவுறாய்... ஒருகை பிடி பிள்ளை'.

அவள் ஒரு பக்கமும் இவர் மறுபக்கமுமாகத் தூக்கினார்கள். அவள் பக்கம் உயர்ந்தும் இவர் கை தாழ்ந்தும் இருக்க வல துகை தசை நார்கள் இழுபாட்டு எல்லையின் மில்லிமீற்றர் அலகுக்குள் தள்ளாடின. இதையெல்லாம் வெளிக்காட்டக் கூடாது. பையை டாக்சியில் ஏற்றினார்.

'என்ன உங்கடை கொண்டோவுக்குக் கூட்டிட்டுப் போறி யளோ ?'

டாக்சி முன் சீற்றிலிருந்து சடாரெனத் திரும்பியது இதுவரை யில் கருணையோடு கதைத்த முகமில்லை.

'என்ரை கொண்டோவுக்குளை எந்தப் பொம்பிளையின்ரை கால் தூசும் பட்டதில்லை. இனிமேலும் படாது.'

அவரது அதிர்ந்த குரலில் அரண்டுபோன ஓட்டுநர் வேகத் தைக் குறைத்து பக்கத்தில் இவரையும் பின் கண்ணாடியில் அவளையும் பார்த்து மிலாந்தினார்.

அவள் மௌனித்திருந்தாள்.

டாக்சியை நிறுத்தச்சொல்லி இறங்கி விடலாமா, சுயமரி யாதை சுண்டிப் பார்த்தது. இந்தக்கணமே இறங்கிவிடலாம் இறங்கி... ?

'தமிழ்க்கடை ஒண்டுக்குப் போயிற்று கொண்டோவுக்குப் போவோம்' என்றபடி டாக்சிக்கு வழிகாட்டினார் குணத்தார்.

வீட்டைத் திறந்து பைகளை வைத்தபோது, குணத்தாரை வியர்வை நனைத்திருந்தது. அருகேயிருந்த துண்டால் வேர்வை துளிர்த்த முகத்தையும் முன்தலையையும் கழுத்தை யும் பிடரியையும் ஒற்றிக்கொண்டார்.

'இது நான் கிட்டடியிலைதான் வாங்கினது. இங்கை நீ எவ்வ ளவு நாளைக்கு வேணுமெண்டாலும் தங்கலாம். தூசு தும்பு இல்லாமல் துப்பரவா இருக்கவேணும். வாடகை ஏதும் தரத் தேவையில்லை. பக்கத்திலைதான் என்ர அப்பார்மென்ட். எனக்கு ரெண்டு நேரச் சாப்பாடு சமைச்சுத் தரவேணும். உன்ரை செலவுகளுக்கு மாதாமாதம் காசு தருவன். இதுக் குள்ளை ஒரு நல்ல வேலையைத் தேடிக்கொண்டாயெண் டால் நல்லது. எந்தநேரமும் நீ வெளிக்கிடுறதுக்குக் கதவுகள் திறந்தேயிருக்கும். இண்டைக்கு மத்தியானச் சாப்பாடு சமைக்கத் தேவையில்லை. ஓடர் பண்றன்.'

அவள் பதிலுக்குக் காத்திராமல் குணத்தார் வெளியேபோய் கதவைச் சாத்துகின்ற ஓசை கேட்டது.

ப்ரியா சோபாவில் குந்திக்கொண்டு யோசனையில் ஆழ்ந் தாள். இது மனிதனா, இல்லை புறோகிராம் செய்யப்பட்ட ரோபோட்டா ?

மனதுக்குள் பயம் மட்டத்தேள் போல ஊரத் துவங்கியது.

நல்லவரா ? அல்லாதவரா ? இதுவரை இவர் எனக்குச் செய்த தெல்லாம் நன்மைதானே.

பெண்களோடு பழக வாறவன் முகமூடியோடைதானே வாறான். முதலிலை ஓர் அசிங்கமான இளிப்பு. சகிக்கமுடியாத சிகரட், கறை படிந்த பற்கள்.

பச்சையாச் சொன்னா எங்களின் ஆடை மறைக்கும் மூன்று அங்கங்களில்தான் அவங்களுக்கு அதீத அக்கறை.

கன்னிகழியா அவளின் உடலைப் பங்குபோட, அருப்புத் துருப்பாக் கிடைத்த வேலைகளில் ஒருமாசச் சம்பளத்தைக் கூட வாங்கவிடாமல் உதிரச் சுவையோடு எத்தனை, எத் தனை ஓநாய்கள் துரத்தி வந்தன.

அவளை அண்மித்த ஆண்கள் தந்த பாலியல் ஆக்கினை கள், நீர் மேல் பாசியாய் நினைவில் மிதந்தன.

அந்தப் பாவியளோடை பார்க்கேக்கை இவர் எவ்வளவு நல்ல மனிசர். என்ரை கஸ்ரங்களைச் சொல்லேக்கை அவற்ரை முகத்திலை பனித்திரையாக் கவிகின்ற சோகம். அது போலி யாய் இருக்க வாய்ப்பில்லை.

அவரைப் பார்த்தால் பெண்களிட்டை போகம் தேடும் மனிசர் மாதிரித் தெரியேல்லை, அவர் வாழ்க்கையில் பட்டபாடுகள், சந்தித்த ஏமாற்றங்கள், சதுராடிய துரோகங்கள் யாவுமே அவர் மனசைக் கட்டிபட வைச்சிருக்கவேணும் என்ற முடி வுக்கு வந்தவள், பெருமூச்சோடு சோபாவில் சாய்ந்து சிறிது கண்ணயர்ந்தாள்.

மெல்லிய குறட்டையின் பின்னணியில் பல கனவுகள் முளை கொண்டன. ஒரு கனவு மட்டும் நினைவைத் தொடுமளவுக்கு நீண்டது. தாயின் மடியில் முந்தானையை விலக்கி முலை தேடும் குழந்தையாக இவள். முலைகள் அரும்பியிராத பரு வம். கனவுத் தொடர்ச்சியில் நிமிர்ந்து பார்க்கின்றாள். தலை குணத்தார் மடியில் இருக்கின்றது.

யாரோ விரல்மொழியால் வெளிக்கதவைத் தட்டும் முதல் ஓசையில் கனவு உடைந்து நொறுங்கியது. மறு ஓசையில் விழிப்பு வர, எழுந்து கதவைத் திறந்தாள். ஆளரவமில்லை. கீழே கதவோரத்தில் ஒரு பார்சல் கிடந்தது.

சிரிப்பதா அழுவதா ? ஒரு நிமிஷம் நிண்டு கையிலை தந்தி ருக்கலாம்தானே. ஏன் இந்தக் கள்ளன் பொலிஸ் விளை யாட்டு.

நானென்ன பேயா பிசாசா? இனிக் காணும்போது நேராவே கேக்கவேணும்.

என்ன செய்வார்? முழுசிப் பாப்பார். அவர் முகத்தை ஏன் பார்க்கவேணும்? முகட்டைப் பாப்பம், நிலத்தைப் பாப்பம்.

அதற்குப் பிறகு அவரைப் பல தடவை நேராகக் கண்ட போதும் அவள் எதையும் கேட்கவில்லை. அடிக்கடி காய்க றிப் பொருட்கள் வாங்கக் கடைகளுக்கு ஒன்றாகச் செல்வார் கள். வழியில் மௌன விரதம்தான். செருமல் கூட இருக்காது. நல்லகாலம் மனிசர் கல்யாணம் கட்டேல்ல. ஒரு பொம்பிளை தப்பிச்சுது.

ப்ரியா சமைத்த உணவை அவர் அப்பார்மென்ட் கதவில் கொழுவிவிடுவாள் அவ்வளவுதான். அவரைக் காண்பது கூட மிகக் குறைவு.

ஒருநாள் கைபேசி கணகணத்தது. அவளை அழைப்பதற்குக் குறிப்பிட்டுச் சொல்ல எவருமில்லை. குணத்தாராக இருக்க லாம். அவர்தான் கதைத்தார். ஆனால் அவருடைய இயல் பான குரலில்லை. கிணற்றுக்குள் இருந்து கதைப்பதுபோல் கேட்டது.

'ப்ரியா ஒருக்கா வாரீயா... மூச்சுவிடக் கொஞ்சம் கஸ்டமா இருக்கு.'

இன்று வரை அவர் வாழும் இடத்தை எட்டியும் பார்த்தவ ளல்ல. அது ஒரு சமணமடம் போன்றிருக்கும் என்பது அவள் நினைவு. பெண்களின் காற்தடமோ, நிழலோ, பெண்வாச னையோ அண்டாத பிரதேசம் அது.

என்னை அங்கு எப்படி அனுமதிப்பார்? தயக்கத்தோடு கத வைத் தொட்டபோது பிணைச்சலோசை இன்றிக் கதவு திறந் தது. உள்ளே அடி வைத்தாள். கோயிலுக்குள் அடி வைத்தது போன்ற பிரக்ஞை.

ஒரு பௌத்த ஆலயத்துள் நுழைந்தது போல் தாமரை, அல்லி மலர்களின் நறுமணமும் ஜவ்வாதுப் பத்தியின் நறும ணமும் அங்கு சூழ்ந்திருந்தது.

முன் ஹாலுக்குள் நின்றபடி, பதட்டத்தோடு உடைந்துபோன குரலைச் செருமிச் சரிசெய்துகொண்டு, 'அங்கிள்... அங்கிள்... ப்ரியா வந்திருக்கிறன் எங்கை இருக்கிறியள்?' என்றாள்.

அதற்குப் பதிலாக அறை ஒன்றிலிருந்து ஒரு சன்னமான அனுக்கம்.

குரல்வந்த திசை நோக்கிச் சென்று, அரவமின்றி எட்டிப் பார்க்க அறையின் அரைவாசியை நிறைத்திருந்த ரெட்டை கிங்சைஸ் மெத்தையில் சாய்ந்த நிலையில் படுத்திருந்தார் குணத்தார்.

தளர்ந்திருந்த பற்றீக் சாரம், ஆம்கட் பெனியன், போத்திய துவாய். குலைப்பனில் உதறும் உடல். கைகால்கள் தன் உணர்வுகளுக்கு ஒத்துழைக்காமல் நடுக்குவதைத் தடுக்கும் நினைப்பில் இருகை விரல்களையும் ஒன்றாகப் பிணைத்து நெஞ்சோடு அழுத்திப் பிடித்தபோதிலும் நிலைமை அவர் கட் டுக்குள் இல்லை.

ப்ரியாவுக்குள் பூத்த தாய்மைச் சுரப்பிகள் கண்ணீராகக் கரையுடைத்தன.

சிரமத்தோடு நிமிர்ந்து நடுங்கும் வலக்கரத்தால் மெத்தை யைத் தட்டி அவளை அமரும்படி சமிக்கை செய்தார். அவரை பார்த்ததும் இவளது கைகால்களும் குளிர்ந்து மரக்கத் தொடங்கின.

நல்ல மனிசர். இவருக்கேன் இந்நிலை? மனம் தெய்வங்க ளைத் தேடத்தொடங்கியது.

'அங்கிள் உங்களுக்கு ஒண்டுமில்லை. நான் எமேஜன்சிக்குக் கோல் பண்ணுறன். அங்கைதான் 'கண்ணா'வும் வேலை செய் யிறா.'

'பயப்பிடாதை... எனக்கொண்டுமில்லை. முதலிலை இப்பிடிக் குந்து...'

இப்படித்தான் சொல்ல நினைத்தார். எழுத்துக் கூட்டினார். ஓசை எழவில்லை.

'ஐயோ... இது இவற்றை முடிவாகவே போயிருமோ?' பேதை மனம் பதை பதைத்தது.

அதையும் தாண்டி ஓர் உணர்வு... 'இல்லை... இல்லை. இது முடிவல்ல. இது தொடக்கம்' என்றது.

தன் சேலையைச் சீர்செய்தபடி அவர் பக்கமாகத் திரும்பி அவரைத் தோளில் பிடித்து நிமிர்த்தி இருத்த முயன்றாள். இருவருமே ஒன்றாகச் சரிந்தனர். இப்போது படுக்கையை விட்டு அவரைத் தள்ளி விடாமல் எழமுடியா நிலை.

'கடவுளே என்ன செய்ய? இதை ஆரும் பார்த்தால் என்ன நினைப்பினம்?'

குணத்தாரின் உடல், படுக்கையில் தங்காமல் வலிப்பு வந்தது போல் இழுத்துக்கொள்ள ஆரம்பித்தது. இவளுக்குப் பிடிமா னம் ஏதுமில்லை, அவர் உடலைத் தவிர. அவளுக்கு வேறு வழியேதும் தென்படவில்லை. எங்கிருந்து அந்தப் பலம் வந் ததோ..? அவரை அழுங்கைப்போல் இழுத்து அணைத்துக் கொண்டாள். அவர் மூச்சை இழுத்துவிடக் கடுமையாகச் சிர மப்பட்டார்.

அந்த அணைப்பின் சில கணங்களின் பின்னர், அவருக்குச் சேட இழுப்பு அதிகரிக்கத் தொடங்கியது. ப்ரியா பதறினாள். அது வாழ்வின் அந்திமத்தில் கடைசி மூச்சை உள்ளிழுக்கும் அபூர்வப் பொழுது... வாழ்வில் இதுவரை அனுபவிக்காத மணம்தரு மலர்கள் புணர்ந்து பிறந்த சுகந்தம் அவரை அள்ளி அணைத்ததை உணர்வுகள் முதலும் கடைசியுமாய் உணர்ந்தன.



kandasamy.a@thaiveedu.com

# பாண்
# கெற்றாட் திருப்பிக் கதைக்கிறாள்

## இரண்டு கதைகள்

– மார்கரெட் அற்வூட்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

ஒரு பாண் துண்டைக் கற்பனை செய்யுங்கள். நீங்கள் கற்பனை செய்யத் தேவையில்லை, அது உங்கள் சமையலறையிலேயே இருக்கிறது. ஒரு பிளாஸ்ரிக் பையில், பாண் வெட்டும் கத்திக்குப் பக்கத்தில். பாண் கத்தி பழையது. அதை நீங்கள் ஓர் ஏலத்தில் வாங்கினீர்கள். அதன் மரக் கைப்பிடியில் பாண் என்ற சொல் செதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பையைத் திறந்து, சுற்றி இருக்கும் தாளை இழுத்து விட்டு, ஒரு துண்டை வெட்டி எடுங்கள். அதன்மேல் வெண்ணெயை முதலில் பூசுங்கள். பிறகு வேர்க்கடலை வெண்ணெயைப் பூசுங்கள். பிறகு தேனைப் பூசுங்கள். அதன் மேல் மற்றத் துண்டுப் பாணை வையுங்கள். சிலதுளி தேன் உங்கள் விரல்களில் வழியும். அதை நக்குங்கள். பாணைச் சாப்பிட ஒரு நிமிடம் செல்லும். இந்தப் பாணின் நிறம் பழுப்பு. வெள்ளைப் பாணும் இருக்கிறது. குளிரூட்டும் பெட்டிக்குள். நீங்கள் வாங்கிய பாணில் கரைத் துண்டும் இருக்கிறது. நிரம்பிய வயிறு போல. அது பூஞ்சை பிடித்துக் கொண்டிருக்கிறது. எப்போதாவது பாணை நீங்களே செய்வீர்கள். உங்கள் கையால் அதைச் செய்யும்போது உங்களுக்கு அது திருப்தியாக இருக்கிறது என்று நினைப்பீர்கள்.

இப்போது, பஞ்சத்தைப் பற்றி கற்பனை செய்து பாருங்கள். ஒரு துண்டுப் பாணையும் கற்பனை செய்யுங்கள். அவை இரண்டும் இருப்பது உண்மை. ஆனால் உங்கள் அறையில் ஒன்றுடன் மட்டுமே நீங்கள் இருக்கிறீர்கள். இன்னொரு அறையில் நீங்கள் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். அங்கே தான் உங்கள் மனம் இருக்கிறது. இப்பொழுது ஒரு மெலிந்த மெத்தையில் சூடான அறையில் படுத்திருக்கிறீர்கள். சுவர்கள் காய்ந்த களிமண்ணால் செய்யப்பட்டவை. உங்கள் இளைய சகோதரி உங்கள் அறையில் உங்களுடன் இருக்கிறாள். அவள் பசியுடன் இருக்கிறாள். அவளுடைய வயிறு உப்பியிருக்கிறது. அவள் கண்களில் ஈக்கள் மொய்த்துள்ளன. உங்கள் கையால் அவற்றைக் கலைத்து விடுகிறீர்கள். கையில் ஒரு துணித் துண்டும் வைத்திருக்கிறீர்கள். அது ஊத்தை. அத்துடன் ஈரம். அதனால் அவள் உதடுகளையும் நெற்றியையும் ஒத்தி எடுக்கிறீர்கள். அந்த ஒரு துண்டுப் பாணைத்தான் நீங்கள் நாட்கணக்காகச் சேமித்து வைத்திருந்தீர்கள். அவளைப் போலவே உங்களுக்கும் பசி. ஆனால் அவளைப் போல நீங்கள் அத்தனை பலவீனமாக இல்லை. அப்படி எத்தனை காலத்திற்கு இது நடக்கப் போகிறது? எப்போ ஒருத்தர் பாண் கொண்டு வருவார்? வெளியே போய் தின்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு எண்ணுகிறீர்கள். ஆனால் வெளியே வீதிகள் எல்லாம் பிச்சையெடுப்பவர்களும் சடலங்களும் தான் கிடக்கின்றன.

உங்களிடமுள்ள பாணை நீங்கள் உங்கள் சகோதரியுடன் சேர்ந்து சாப்பிடப் போகிறீர்களா அல்லது முழுப் பாணையும் உங்கள் சகோதரிக்கே கொடுக்கப் போகிறீர்களா? அல்லது அந்தப் பாண் முழுவதையும் நீங்களே தின்னப் போகிறீர்களா? ஏனென்றால் உங்களுக்கு உயிருடன் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் பலமானவள். அதைப் பற்றித் தீர்மானிக்க உங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?

இப்பொழுது ஒரு சிறைச்சாலையைக் கற்பனை செய்து பாருங்கள். உங்களுக்குச் சொல்லாத இன்னும் ஒன்று அங்கே இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். அது உங்களுக்குத் தெரியும் என்று சிறைச்சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களுக்கும் தெரியும். கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காதவர்களுக்கும் தெரியும். நீங்கள் உங்கள் முப்பது, நாற்பது, நூறு நண்பர்களுக்கும், தோழர்களுக்கும் அதைச் சொன்னால் அவர்களைப் பிடிப்பார்கள், கொலை செய்யப்படுவார்கள். நீங்கள் அவர்களுக்குச் சொல்ல மறுத்தால் இன்றிரவுதான் உங்களுக்குக் கடைசி இரவு. அவர்கள் எப்போதுமே இரவைத்தான் தெரிவு செய்வார்கள். எனினும் நீங்கள் இரவைப் பற்றிச் சிந்திப்பதில்லை. ஆனால் உங்களுக்கு அவர்கள் தந்த பாண் துண்டைப் பற்றி யோசிப்பீர்கள். அப்படி யோசிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? அந்தப் பாண் துண்டு பழுப்பு நிறம். அதோடு அது புதிது. அது உங்க


ஜீவா

ளுக்கு மரப்பலகைத் தரையில் விழும் சூரிய ஒளியை நினைவுபடுத்தும். ஒருமுறை உங்கள் வீட்டிலிருந்த மஞ்சள் கிண்ணத்தை நினைவூட்டும். அந்தக் கிண்ணத்தில் அப்பிள்களும் பேரிக்கைக்காய்களும் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கிண்ணம் ஒரு மேசையின் மீது வைக்கப்பட்டிருந்தது. அதுவும் உங்களுக்கு நினைவிலிருக்கும். பசி அல்லது நோ அல்ல உங்களைக் கொல்வது. மஞ்சள் கிண்ணம் இல்லாமலிருப்பது தான் உங்களைக் கொல்கிறது. அந்தக் கிண்ணத்தை இந்த நேரத்தில் உங்கள் கையில் பிடித்து வைத்திருக்க முடிந்தால் எதையும் உங்களால் தாங்க முடியும். அதை நீங்களே உங்களுக்குச் சொல்லிக் கொள்ளுங்கள். உங்களுக்கு அளித்த பாண் ஒரு நாசகாரத்தனம், துரோகம். அது வாழ்வல்ல.

இன்னுமொரு காட்சியைக் கற்பனை செய்யுங்கள். முன்னொரு காலத்தில் இரண்டு சகோதரிகள் இருந்தார்கள். ஒருத்தி பணக்காரி. அவளுக்குக் குழந்தைகள் இல்லை. மற்றவளுக்கு ஐந்து குழந்தைகள். ஆனால் அவள் ஒரு விதவை. அவள் மிகவும் ஏழை. அவளிடம் உணவே எஞ்சியிருக்கவில்லை. அதனால் அவள் தன் சகோதரியிடம் சென்று பசிக்குக் கொஞ்சப் பாண் கேட்டாள். 'என்னுடைய குழந்தைகள் செத்துக் கொண்டிருக்கின்றன' என்றாள். பணக்கார சகோதரி, 'எனக்கே போதியளவு பாணில்லை' என்று சொல்லி அவளை அவ்விடத்திலிருந்து கலைத்து விட்டாள். பிறகு பணக்காரச் சகோதரியின் கணவன் வீட்டுக்கு வந்து தனக்கு ஒரு பாண் துண்டை வெட்டினான். முதலாவது துண்டை வெட்டியபோது அதிலிருந்து சிகப்பு இரத்தம் சீறிப் பாய்ந்தது.

அது என்னவென்று அனைவருக்கும் தெரியும். இதுவொரு பாரம்பரிய ஜேர்மன் தேவதைக் கதை.

பாண் துண்டைப் பற்றிய கதை உங்களுக்காக நான் செய்த கற்பனை. அது சமையலறை மேசைக்கு ஓரடிக்கு மேலே மிதந்து கொண்டிருந்தது. சாதாரணமான மேசை தான் அது. அதில் எந்தவிதப் பொறிக் கதவுகளும் இல்லை. நீல நிற உண்கலத் துடைப்புத் துண்டொன்றும் பாணுக்குப் பக்கத்தில் மிதந்து கொண்டிருந்தது. பாணுடன் எந்தவித நூலும் துடைப்புத் துண்டுடன் தொடுத்திருக்கவில்லை. சீலிங்குடனோ கூடத் தொடுத்திருக்கவில்லை. மேசையுடனும் தொடுத்திருக்கவில்லை. கையை விட்டு மேலேயும் கீழேயும் தடவிப் பார்த்து அதை நிரூபித்தார்கள். ஆனால் நீங்கள் பாணைத் தொடவில்லை. தொடுவதற்கு எது உங்களை தடுத்தது? பாண் உண்மையில் இருக்கிறதா, சும்மா அதுவொரு பிரமையா, உன்னை நான் ஏமாற்றப் பார்த்தேனா என்று பார்ப்பதற்கு நீங்கள் நினைக்கவில்லை. அங்கே பாண் இருந்தது என்பதை நீங்கள் கண்ணால் கண்டீர்கள். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. அதை உங்களால் மணந்தும் கூடப் பார்க்க முடிந்திருக்கும். அது நுரைமம் போல மணத்தது. அதோடு அது ஓரளவு திண்மமாகவும் இருந்தது. உங்கள் மேற்கைகளைப் போல. ஆனால் அதை நீங்கள் நம்புவீர்களா? அதை நீங்கள் உண்பீர்களா? அதை அறிய நீங்கள் விரும்பவில்லை, அதை எண்ணிப் பாருங்கள்.



மாக்ரெற் அற்வுட், நவம்பர் 18, 1939-இல் ஒட்டாவா, கனடாவில் பிறந்தார். கவிஞர், நாவலாசிரியர், இலக்கிய விமர்சகர், சூழலியல் செயற்பாட்டாளர், கட்டுரையாளர் என்று எல்லாவிதமான இலக்கிய வகைமைகளிலும் எழுதி ஆங்கிலம் பேசும் இலக்கிய உலகில் மிகவும் புகழ்பெற்றார். 1961-இலிருந்து 18 கவிதை நூல்கள், 11 அபுனைவுகள், 9 குறும்புனைவுகள், 11 குழந்தைகளுக்கான நூல்கள், 2 கிராபிக் நாவல்கள் எழுதியிருக்கிறார். அவருக்கு இருமுறை புக்கர் பரிசு, ஆர்தர் சி கிளாக் பரிசு, கனடிய ஆளுநர் விருது, ஃபிரான்ஸ் காஃப்கா பரிசு, PEN அமெரிக்க நடுவம் அளித்த வாழ்நாள் சாதனையாளர் பரிசு போன்ற பரிசுகளும் விருதுகளும் கிடைத்துள்ளன. அவருடைய புனைவுகளைத் தழுவிச் சில திரைப்படங்களும் தொலைக்காட்சிப் படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. அவருடைய குறிப்பிடத்தக்க புனைவுகள். Surfacing, The u;andmaid's Tale, Cat's Eye, Alias Grave, The Blind Assassin, Oryx and Crake and The Testaments.

இவரின் தந்தை ஒரு பூச்சியியலாளர். அவர் காடுகளில் பூச்சிகளைத் தேடியலைந்து ஆய்வு செய்தவர். அதனால் இவரின் இளமைக் காலம் வட குவெபெக் வனங்களில் கழிந்தது. பதினாறு வயதிலேயே அவர் தொழில்முறை எழுத்தாளராக வர வேண்டும் என்று விரும்பினார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இளம்கலைப் பட்டமும் மச்சுரெற்சிலுள்ள றாட்கிளிஃவ் பல்கலையில் முதுகலைப் பட்டமும் பெற்றார். அமெரிக்க எழுத்தாளரான ஜிம் போக் என்பவரைத் திருமணம் செய்து விவாகரத்தானவர். பின் கிறேம் கிப்சன் என்ற நாவலாசிரியருடன் கூடி வாழ்ந்தவர். அவருக்கு ஒரு மகள் உள்ளார்.

பாலினம், அடையாளம், மதம், தொன்மை, மொழியின் ஆற்றல், சூழலியல் ஆகியவை அவரின் படைப்புகளில் அதிகம் கையாளப்பட்டவை. தொன்மம், தேவதைக் கதைகளில் இளம் வயதிலிருந்தே ஆர்வம் கொண்டவர். அவற்றின் பாத்திரங்களைத் தன்னோக்கில் பார்த்தவர்.

மேல்வரும் முதல் கதை குறியீட்டுத் தன்மை கொண்டது. 'பிதாவே எங்கள் அன்றாட உணவை எங்களுக்குத் தாரும்' என்ற பிரார்த்தனையுடனும் அதைத் தொடர்புறுத்தலாம். இரண்டாவது கதை ஹம்லெற்றின் மனைவி கெற்றூட் மகனுடன் உரையாடுவது போல அமைந்துள்ளது. இரண்டுமே தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டவை.

# கெற்றூட் திருப்பிக் கதைக்கிறாள்

உன்னை ஹம்லெற் என்று அழைப்பது தவறு என்று நான் எப்பொழுதும் நினைப்பதுண்டு. அதாவது, ஒரு சிறுவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் எப்படியானதாக இருக்க வேணும்? அது உன்னுடைய அப்பாவின் எண்ணமாகத்தான் இருக்க வேணும். அப்படி அவருடைய பெயரில் தான் அழைக்க வேண்டும் என்பது அவரின் எண்ணம். அது அவரின் சுயநலம். பள்ளியில் படிக்கும் மற்றக் குழந்தைகள் அதற்காக உன்னை உயிர்போக மட்டும் கேலி செய்திருப்பார்கள். பட்டப் பெயர்கள் சூட்டியிருப்பார்கள்! பன்றி இறைச்சியைப் பற்றிய மோசமான பகடிகளைச் சொல்லியிருப்பார்கள்.

நான் உன்னை ஜோர்ச் என்றுதான் அழைக்க விரும்புகிறேன்.

நான் என்னுடைய கைகளைப் பிணையவில்லை. என் நகப் பூச்சைக் காய வைத்துக் கொண்டிருக்கிறேன்.

கண்ணே, நீ என் முகம் பார்க்கும் கண்ணாடியுடன் விளையாடாதே. அது நீ உடைக்கும் மூன்றாவது கண்ணாடியாக இருக்கப் போகிறது.

ஓம், நான் அந்தப் படங்களைப் பார்த்திருக்கிறேன். மிக்க நன்றி. உன்னுடைய அப்பா குளோடியசிலும் பார்க்க அழகானவர். உயர்ந்த நெற்றியும், அழகாக வளைந்த மூக்கும் உடையவர். அத்துடன் சீருடையில் பெரிதும் எடுப்பாகவும் இருப்பார். ஆனால் அழகு மட்டும் போதுமானதல்ல. சிறப்பாக ஓர் ஆணுக்கு. இறந்தவர்களைப் பற்றி அப்படிக் கூடாமல் கதைப்பது எனக்கு அழகில்லை. ஆனால் உன்னுடைய அப்பாவைப் பற்றி நான் சுட்டிக் காட்டும் நேரம் வந்துள்ளது. அதாவது உன் அப்பாவைப் பற்றி வேடிக்கையாகப் பேசுவது சரியல்ல. அவர் ஓர் உயர்ந்த குடிமகன். உண்மை. ஆனால் குளோடியசோ இடைக்கிடை மது அருந்த விரும்புவார். நல்ல உணவை விரும்புவார். சிரித்து மகிழ்ச்சியாக இருக்கவும் விரும்புவார். நான் சொல்வது உனக்குப் புரியுமென்று நினைக்கிறேன். உன் தற்தூய்மையுணர்வு என்ற உன் கொள்கையால் நீ அதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.

கண்ணே, இன்னொன்று. உன் சிறிய தந்தையை ஊதிப் பெருத்த அரசர் என்று பகடி பண்ணாதே. அவர் சிறிது மொத்தமானவர்தான். அப்படிச் சொல்வது அவருடைய உணர்ச்சிகளைப் புண்படுத்திவிடும்.

எதன் துர்மணம் வீசும் வியர்வை அது? என்னுடைய படுக்கையில் நிச்சயமாக எண்ணெய்ப் பிசுபிசுப்பில்லை. அது என்னவாக இருந்தாலும்! உண்மையில் அதுவொரு மோசமான பன்றித் தொட்டிதான்! அது உன் பிரச்சினையில்லை. ஆனால், கிழமைக்கு இரண்டு தரம் படுக்கை விரிப்புகளை நான் மாற்றுகிறேன். நீ செய்வதிலும் பார்க்க அது அதிகம். விற்றின்பேர்க்கிலுள்ள மாணவர்களின் சேரியான பன்றித்தொட்டியை வைத்து மதிப்பிட்டுப் பார்த்தால் அது உனக்குப் புரியும். நான் உன்னை அந்த இடத்திற்கு வந்து இனிமேல் பார்க்கவே மாட்டேன். வருகிறேன் என்பதை உனக்கு முன் எச்சரிக்கை செய்யாமல் வரமாட்டேன்! உன் சலவைக்குப் போடும் உடுப்புகளை நீ வீட்டுக்குக் கொண்டு வரும்போது எப்படிப் பார்த்தாலும் அவை அதிகமில்லை என்பதைப் பார்த்திருக்கிறேன்! கறுத்த காலுறைகள் முடிந்து விட்டன என்பதனால் மட்டும் அவற்றைக் கொண்டு வருகிறாய்.

நான் உனக்கு ஒன்று சொல்கிறேன், எல்லோருக்கும் வியர்வை வரும். உனக்கு அது விரைவில் தெரிய வரும். உண்மையான தோழியென்றால் ஒருத்தி உனக்குப் பல உதவிகள் செய்வாள். அந்த வெளிறிய பசையொட்டிய முகம் கொண்ட அந்தப் பெண்ணைப் போலல்ல. அவளுடைய பெயர் என்ன? என்னைத் தொடாதே என்று சொல்லும் இறுக்கமான மார்புக் கச்சையணிந்த அவள். வான் கோழியை உள்ளே வைத்துத் தூக்கிக் கட்டிய அவள் போலல்ல. என்னைக் கேட்டால் அந்தச் சிறுமியில் ஏதோ ஒரு குறை இருக்கிறது என்றுதான் சொல்லுவேன். ஆளுமைக் குறைபாடுள்ளவள். ஒரு சிறிய அதிர்ச்சியும் அவள் மனதை நிலைகுலைய வைத்துவிடும்.

அவளை விட்டு விட்டு யதார்த்தமான ஒரு பெண்ணைத் தேடு. வைக்கோல் போரில் அவளுடன் உருண்டு களித்து விளையாடு. அதன் பிறகு பன்றித்தொட்டி பற்றி என்னுடன் பேசு.

இல்லை கண்ணா, எனக்கு உன்னுடன் கோபமில்லை. ஆனால் சிலவேளைகளில் நீ ஒரு திமிர் பிடித்தவன் என்று நான் உனக்குச் சொல்லத்தான் வேண்டும். உன் அப்பாவைப் போல. அதை உன் அப்பா தசைப் பிரச்சினை என்று சொல்லுவார். அது நாய்ப் பீ என்று நீ நினைக்கிறாய். இளம் வயதில் இருப்பவனிடம் அது இருப்பதை மன்னிக்கலாம். அவர்கள் எப்பொழுதுமே சகிப்புத்தன்மையற்றவர்கள். ஆனால் அவன் வயதில் இருப்பவனுடன் வாழ்வதும் மிகவும் கஷ்டம். அதைச் சொல்லத் தேவையில்லை.

நீ ஒரு தனிப் பிள்ளையாகப் பிறக்காமல் இருந்திருந்தால் எங்கள் இருவருக்கும் நல்லதாக இருந்திருக்கும். அதற்கு நீ யாருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று நீ உணர்ந்திருப்பாய். நான் எதையெல்லாம் சகித்துக் கொண்டேன் என்பது உனக்குப் புரிந்திருக்காது. ஒவ்வொரு முறையும் அதைக் கண்டும் காணாதது போல இருந்திருக்கிறேன். ஆனால் அது என்னை மிகவும் வேதனைப்படுத்தியும் உள்ளது.

ஓ! என்ன நினைக்கிறாய்? உன் தந்தையைக் குளோடியஸ் கொன்றான் என்றா? சரி. இரவுணவு மேசையில் அவரை நீ மிகவும் அவமதித்தாய் என்பதில் வியப்பேதுமில்லை.


எனக்கு அது தெரிந்திருந்தால் உன்னை நான் உடனடியாகத் திருத்தியிருப்பேன்.

அது குளோடியஸ் இல்லை, கண்ணா.
கொன்றது நான் தான்.



mahalingam.k@thaiveedu.com






# தாய்வீடு இதழ்! அறிமுகமும் கருத்துப் பகிர்வும்

**வி. மைக்கல் கொலின்**








மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்திய பௌர்ணமிக் கலை இலக்கிய நிகழ்வின் 52-ஆவது தொடரில், 'யாவரும் பேசலாம்' என்ற தலைப்பில் தாய்வீடு இதழ் தொடர்பான அறிமுகமும் கருத்துப் பகிர்வும் மார்ச் இரண்டாம் நாள் மட்டக்களப்புப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. சந்திர-சேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பின் கலை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் பலர் தமது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.

காலை 10:00 மணியளவில் மங்கல விளக்கேற்ற லுடன் ஆரம்பமான நிகழ்வின் வரவேற்புரையையும் தொடக்கவுரையையும் 'மகுடம்' வி. மைக்கல் கொலின் அவர்கள் ஆற்றினார். அவர் தனதுரையில், தாய்வீடு இதழுக்கும் தனக்குமான ஒரு தசாப்தத் துக்கு மேற்பட்ட உறவு பற்றியும், 2014-இல் தாய்வீடு நடத்திய சிறுகதைப் போட்டியின் நடுவர்களைத் தேர்வு செய்து, அதன் முடிவுகள் வெளிவர உதவியது தொடக்கம், தாய்வீடு பரிசுக் கதைகளைத் தொகுத்து, 'மயான தேசம்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டு, இதே மண்டபத்தில் பரிசளிப்பு விழாவினையும் 'மயான தேசம்' நூல் வெளியீட்டு விழாவினையும் நடத் தியதுடன், அந்நிகழ்வில் தாய் வீட்டின் முன்னைய இதழ்களின் கண்காட்சியினையும் நடத்திப் பார்வை யாளர்களுக்குத் தாய் வீடு இதழினை இலவசமாக வழங்கியதையும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் சி. சந்திரசேகரம் அவர்கள் தனது தலை மையுரையில், கடந்த 17 ஆண்டு காலமாக தொடர்ச் சியாகத் தாய் வீடு இதழ் வெளிவந்து ஈழத்து எழுத்தா ளர்களுக்கும் புலம்பெயர் படைப்பாளிகளுக்குமி டையில் ஓர் உறவுப்பாலமாகச் செயற்படுவதனையும் குறிப்பிட்டார். தாய்வீட்டின் கட்டுரைகள் கலை, இலக்கிய, சமூக ரீதியில் வெளிபடுத்திவரும் தாக்கம்











குறைத்து மதிப்பிடமுடியாதது என்றார். குறிப்பாகக் காஸாப் படுகொலைகள் தொடர்பாகத் தாய்வீடு தனது கண்டனத்தைத் தெரிவித்துப் பல கட்டு ரைகளை வெளியிட்டதையும், கடந்த மூன்று ஆண்டு களுக்கு மேலாகத் தாய்வீடு தனது படைப்புகளைக் குரல் வடிவிலும் வெளியிடுவது வாசிக்க முடியாத பலருக்கு குறித்த படைப்புகள் சென்றடைவதற்கு உதவியாக இருக்கின்றமையுயும் குறிப்பிட்டார்.

தாய்வீடு தொடர்பான கருத்துரையாற்றிய ஜிப்ரி ஹசன் அவர்கள், தாய்வீடு இதழுக்கும் தனக்குமான உறவு பற்றிக் குறிப்பிட்டதோடு, தனது கட்டுரைகள் தாய்வீட்டில் தொடர்ச்சியாக வெளியாவது குறித்தும், அதன் ஆசிரியர் தொடர்ச்சியாகத் தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு கட்டுரைகளையும் படைப்புகளையும் பெற்றுக்கொள்கின்றமை குறித்தும் குறிப்பிட்ட அவர், பக்க வடிவமைப்பில் தாய்வீடு சிறந்த ஒரு Lay out model-ஐப் பின்பற்றுவதால், குறித்த கட்டுரைகளை உடன் வாசிக்கத் தூண்டு வதாக அமைவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துரை ஆற்றிய எழுத்தாளர் ச. மணி-சேகரன் அவர்கள், தாய்வீடு இதழ் மலையக மக்க ளுக்கும் மலையக இலக்கிய முயற்சிகளுக்கும் அளித்திடும் முக்கியத்துவத்தைப் போல் வேறு எந்த இதழும் இதுவரை அளிக்கவில்லை. 'மலையகம் 200' தொடர்பாக, தாய்வீடு சிறந்ததொரு வரலாற்றுப் பதிவைச் செய்துள்ளது. தொடர்ச்சியாக மலையகப் படைப்பாளிகளின் படைப்புகள் தாய்வீட்டில் வருவதன் காரணமாக மலையகத்தில் இலக்கிய விழிப்புணர் வும் அரசியல் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கனடாவிலி ருந்து கலந்து சிறப்பித்த தாய்வீடு இதழின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு. பொன்னையா விவேகானந்தன், 'தாய்வீடு இதழின் அறிமுக நிகழ்வில் அதிக எண் ணிக்கையான இலக்கியப் படைப்பாளிகளையும் ஆர் வலர்களையும் காண்பது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது' என்று தனதுரையைத் தொடங்கினார். தாய்வீடு தனியே ஓர் இதழாக மட்டுமல்லாமல் ஒரு வெளியீட்டு நிறுவனமாகவும் செயற்படுகின்றதாகவும், தாய்வீட்டில் தொடர்ச்சியாக எழுதும் படைப்பாளிகளின் கட்டுரை களை நூலாக வெளியிட்டு வருவதாகவும், தாய் வீட்டில் தொடர்ச்சியாக ஓர் ஆண்டு படைப்புகள் வழங்குபவர்களுக்கு ஆண்டு முடிவில் சிறு சன்மா னம் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார்.


















தற்போது யாழ்ப்பாணம், மலையகம், மட்டக்களப்பு எனத் தாய்வீட்டின் அறிமுக நிகழ்வுகள் நடைபெறுகின்றது. ஈழமண்ணில் இருந்து தாய்வீட்டிற்கு அதிகமான படைப்புகள் வருகின்றன. ஏற்கனவே கிழக்குப் பிரதேசத்தில் இருந்து பல படைப்பாளிகள் தாய் வீட்டில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றனர். அதனை மேலும் விரிவுபடுத்தி இன்னும் இன்னும் பலர் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து தாய்வீட்டுக்கு ஆக்கங்கள் எழுத வேண்டும் எனவும் தனது கோரிக்கையை முன் வைத்தார்.



அவரைத் தொடர்ந்து படைப்பாளிகள் சார்பாகப் பலர் தமது கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். அதில் கவிதாயினி நிலாந்தி சசிகுமார் தனக்கும் தாய்வீடு இதழுக்குமுள்ள அறிமுகம் தொடர்பாகவும் தனது எழுத்துகளுக்குத் தாய்வீடு களம் தந்தது தொடர்பாகவும் தனது நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

ஓவியர் றளிம் அவர்கள் தனது பேச்சில், தாய்வீடு இதழ் வடிவமைப்பு ரீதியாக அழகாக இல்லை. வாசிப்பதற்குச் சிரமப்பட வேண்டியுள்ளது. எனவே, அதன் தளக்கோளத்தை முற்றாக மாற்ற வேண்டும் என்று தனது கருத்தைத் தெரிவித்தார்.

நிகழ்வுக்கு வந்த அனைவருக்கும் தாய்வீடு இதழ்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

நிறைவில், ஊடகவியலாளர் திரு. எல். தேவஅதிரன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.










Mega Financial Group
ANNUAL AWARD CEREMONY 2024
Markham Convention Centre
9th March 2024
President & C.E.O.
Raj Nadarajah
Director
Abiramie Shanmuganathan
MEGA TOP WINNERS
Gold Winner
Poonam Batth
Silver Winner
Sharmila Neleishkumar
Bronze Winner
Vasanthakumaran Markandu
RESP Gold Winner
Santhila Ravichandran
MEGA TOP 10 PRODUCERS
Industrial Alliance CPB Award Winners
Alma Soliman
Baby Noldith Claudio
Brinaja Indrakumar
Ferdinand Forte
Heartie Abellanosa
Jayasutha Arulananthan
Jennifer Fernandez
Kalaivany Jeganmohan
Marites Garcia
Murugiah Gandhiram
Pelinus Antony
Poonam Batth
Ranjeet Josol
Rajeswaran Rajathurai
Ravichandranesan Ponnudurai
Sajeevan Andrew George
Santhan Nadarajah
Sharmila Neleishkumar
Stalin Dominic
Supramaniam Ravi
Vasanthakumaran Markandu
Wilson John
Rookie Awards
Kandiah Ananthamoorthy
Stalin Dominic



Mega Financial Group
ANNUAL AWARD CEREMONY 2024
Top Producer Industrial Alliance
Poonam Batth
Top Producer Orange Benefit Fund
Kalaivany Jeganmohan
Top Producer UV Insurance
Rajeswaran Rajathurai
Top Producer Investment
Mayooran Thurairajah
Top Producer Investment
Pelinus Antony
2nd Top Producer Industrial Alliance
Vasanthakumaran Markandu
2nd Top Producer UV Insurance
Philip Antony
UV Insurance CPB Award Winners
Heartie Abellanosa
Jayasutha Arulananthan
Kalaivany Jeganmohan
Kandiah Ananthamoorthy
Kavukattu Jose
Pelinus Antony
Philip Antony
Poonam Batth
Rajeswaran Rajathurai
Roy Wignarajah
Sajeevan Andrew George
Sharmila Neleishkumar
Industrial Alliance BDB Award Winners
Vasanthakumaran Markandu
Pelinus Antony
Poonam Batth
Sharmila Neleishkumar
Agent of the Month
Mattes Garcia
High Achiever
Poonam Batth
Other Award Winners
Dominican Trip Winners
Staff



# 'மாறுதல்கள்' நூல் வெளியீடும் தெளிவத்தை ஜோசப் நினைவேந்தலும்


தொகுப்பு
**கே.பொன்னுத்துரை**

படங்கள்
**எஸ்.சுரேந்திரன்**






















எழுத்தாளர் 'சாகித்யரத்ன' தெளிவத்தை ஜோசப் அவர்கள், 'தாய்வீடு' இதழில் தொடர் புதினமாக எழுதிவந்த 'மாறுதல்கள்' தாய்வீடு பதிப்பகத்தினால் நூலுருப்பெற்று, அதன் வெளியீட்டு விழா பாக்யா பதிப்பகத்தின் ஏற்பாட்டில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஏப்பிரல் 07, 2024 அன்று நடைபெற்றது.

'ஞானம்' கலை இலக்கிய இதழில் 'தெளிவத்தை ஜோசப் நேர்காணல்' எனத் தொடர் பதிவுகளைச் செய்தவரும், தெளிவத்தை ஜோசப் பவளவிழா 'ஞானம்' சிறப்பிதழ் வெளியிட்டவருமான 'சாகித்யரத்ன' தி. ஞானசேகரன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

தெளிவத்தை ஜோசப் அவர்களின் மறைவுக்குப் பின்னதாக இலங்கையில் எந்தப் பாகத்திலும் இதுவரையில் எந்த ஒரு நினைவேந்தல் நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்காத நிலையில், இந்த நிகழ்வு அவரது நினைவேந்தல் நிகழ்வாகவும் இடம்பெற்றது. அவரது புதல்வர்களான ரமேஷ் ஜோசப், ரவீந்திரன் ஜோசப், மருமகன் புஷ்பராஜ், மூத்த எழுத்தாளர் அன்னலட்சுமி ராஜதுரை, ஞானம் ஆசிரியர் குழுமத்தைச் சேர்ந்த திரு. திருமதி. ஞானசேகரன் ஆகியோர் ஒளி ஏற்ற, சபையோரினது ஒரு நிமிட மௌன அஞ்சிலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஊடகவியலாளர் கே. பொன்னுத்துரை வரவேற்புரை வழங்கினார். தெளிவத்தை ஜோசப்பின் பல்வேறு இலக்கியப் பணிகளையும் நினைவுபடுத்தி ஒரு நினைவேந்தல் உரையாகச் சாகித்யரத்ன தி. ஞானசேகரனின் தலைமையுரை அமையப்பெற்றது. நிகழ்ச்சித் தலைவரிடமிருந்து முதல் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்ள, தெளிவத்தை குடும்பத்தாரும் நூல் வெளியீட்டு நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து தனது ஆவணச்சேகரிப்பில் தொண்ணூறு சதவீதத்துக்கு மேலானவற்றைக் கொழும்புத் தமிழச்சங்கத்தின் நூலகத்துக்குக் கொடுத்த தெளிவத்தை ஜோசப் அவர்களின் அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து, 'மாறுதல்கள்' நூல் பிரதி கொழும்புத் தமிழச்சங்க நூலகத்துக்கு, அதன் துணைத் தலைவரிடத்தில், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் மல்லியப்புசந்தி திலகர் வழங்கி வைத்தார். மேலதிகமாக, தமிழகத்திலிருந்து வருகை தந்த எழுத்தாளர் எஸ். இஸட். ஜெயசிங் தனது 'இந்திய இலங்கை அசியல் சமூகப் பார்வைகள்', தெளிவத்தை ஜோசப்பின் சகோதரர் குடந்தை பரிபூரணம் எழுதிய 'எடுக்கவோ கோர்க்கவோ' உள்ளிட்ட நான்கு நூல்களைத் தமிழ்ச்சங்க நூலகத்துக்கு வழங்கி வைத்ததுடன், தெளிவத்தையாரை நினைவு கூர்ந்து சில கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார்.










தெளிவத்தை ஜோசப் அவர்களை நினைவுகூர்வதில் இலங்கையைவிட கனடாவும் தமிழகமும் முந்திக்கொண்டன எனக் கூறி, கனடாவில் 'காலம்' மற்றும் 'தாய்வீடு' இணைந்து ஒழுங்கு செய்த 'குறிஞ்சி நிலத் தலைவன் - தெளிவத்தை ஜோசப்' நினைவேந்தல் நிகழ்வையும் அதில் உரையாற்றிய தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் நாறும்பூநாதனின் உரையையும், திருச்சியிலே தமிழகன் ஒழுங்கு செய்த இரண்டு நினைவேந்தல் நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்து சென்றார். இதன்போது தமிழகத்தில் வாழும் எழுத்தாளரும் ஆய்வாளருமான மு.சி. கந்தையாவின் மலையக ஆய்வுப் பணிகளைப் பாராட்டித் 'தெளிவத்தை ஜோசப் விருது' கோவையில் இடம்பெற்ற 'மலையகம் 200' மாநாட்டில் வழங்கிவைக்கப்பட்டமையையும், நாறும்பூநாதனின் 'பொருநை முதல் நயாகரா வரை' பயணக் குறிப்பு நூலில், கனடாவில் நடத்திய தெளிவத்தை நினைவேந்தல் நிகழ்வு குறித்த ஓர் அத்தியாயமே எழுதியிருப்பதையும் மல்லியப்புசந்தி திலகர் நினைவு கூர்ந்தார்.

'மாறுதல்கள்' நூலின் வெளியீட்டுரையை அதன் தயாரிப்புப் பணிகளில் பெரும் பங்கு வகித்த சுப்பையா கமலதாசன் வழங்கி வைத்ததோடு தாய்வீடு இதழில் 'ஆழத்து முத்துகள்' தொடர் பத்தியில் தெளிவத்தையார் எழுதிய கட்டுரைகளும் நூலுருப் பெறவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். இதன்போது தெளிவத்தை ஜோசப் தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிய 'இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்', 'ஞானம்' நேர்காணல் தொடர், வீரகேசரியில் எழுதிய இலக்கியத் தகவல்கள், துயர் பகிர்வு, தெளிவத்தை ஜோசப் பல்வேறு நூல்களுக்கு எழுதிய முன்னுரைகள், அணிந்துரைகள் அனைத்தும் நூலுருப் பெற வேண்டும் என்ற வலியுறுத்தலும் செய்யப்பட்டது.

நூலின் நயவுரையை வசந்தி தயாபரன் வழங்கினார். இசையின் நுணுக்கங்களைப்போல தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துகளில் காணப்படும் நுணுக்கமான பக்கங்களையும் இந்தக் கதை இடம்பெறும் காலத்தைத் தெளிவத்தை தெரிவு செய்துகொண்டுள்ள விதம் பற்றியும் அழகாக எடுத்துரைத்தார். அவரைத் தொடர்ந்து கருத்துரை வழங்கிய கவிஞர் அல் அஸ்மத் தெளிவத்தையுடனான தனது அனுபவங்களைச் சுவைபடப் பகிர்ந்துகொண்டதுடன் நூல் வடிவமைப்பினைப் பாராட்டியதுடன் நூல் அச்சுக் கோர்ப்பிலும், நூல் கோர்ப்பிலும் ஏற்பட்டிருக்கக் கூடிய சிற்சில தவறுகளையும் சுட்டிக்காட்டி அடுத்துவரும் பதிப்புகளில் அவை சரிசெய்யப்படுதல் வேண்டும் என்பதையும் கூறினார். அதனை ஏற்றுக்கொண்டு ஏற்புரை வழங்கிய பாக்யாப் பதிப்பக நிறுவனர் மல்லியப்பு சந்தி திலகர், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியவாறே பல்வேறு தகவல்களையும் பகிர்ந்துகொண்டார். தெளிவத்தை ஜோசப்பின் பேரன் ஆத்தீப் நன்றியுரை வழங்க, வருகை தந்த அனைவருக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்குதலுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.









உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

**We've Moved**
**Our New Address**

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272








BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?






பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com





BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
➤ 1st & 2nd Mortgages
➤ Refinance, Renewal & Switches
➤ Equity Line of Credits
Commercial Mortgages
➤ 1st & 2nd Mortgages
➤ Refinance, Renewal & Switches
➤ Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust | Scotiabank | FIRST NATIONAL | radius financial
RFA | EQUITABLE BANK | HOME TRUST | RMG | MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்



















## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
**info@vela4homes.com**
**www.vela4homes.com**

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace CO
$2100 Rebate Available Now
call us 416-414-2280
AATEK
HEATING & COOLING
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280


Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E, Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
21
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544
AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner